மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள

(பாகம் - 2)

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்

(பாகம் - 2)

வெளியீடு :

தமிழ்க்கனி பதிப்பகம்

சென்னை - 600 004

விற்பனை உரிமை :

பூம்புகார் பதிப்பகம்

127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)

சென்னை - 600 108.

முதல் பதிப்பு : மே, 2008

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 025.

G00240S

894.811S
TAM

விலை ரூ. 330/-

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப்பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது

நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான ''திருக்குவளை'' உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை ''குளித்தலை தொகுதி''யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத்தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான் அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் - அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் - அதன் காரணமாக மனித நேயம் - நாகரிகம் - பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின்

பெயரால் ''அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி''யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று என் இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.

மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக்கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.

இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில் எப்படியெல்லாம் வானத்தில் அலையும்

மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங் களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,

22/4/2007

பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப் பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத்தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவியங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம் மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்''

பொன்விழா கொண்டாடப்படும் இந்தக் குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள்

களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது உரைகள்

தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள்மீது உரைகள்

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது உரைகள்

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்" சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

பொருளடக்கம்

உரை எண்.	தேதி	பொருள்	பக்கம்
36.	25.03.1975	இறுதித் துணை மதிப்பீடு விவாதம்	17
37.	04.04.1975	தாழ்த்தப்பட்டோர் நலத் துறை மானியம்	23
38.	08.04.1975	ஆளுநர், அமைச்சர்கள் மானியம்	30
39.	04.11.1975	துணை மானியக் கோரிக்கை	56
40.	25.08.1977	நிதி ஒதுக்கீடு மசோதா	74
41.	29.08.1977	துணை மானியக் கோரிக்கை	96
42.	29.07.1980	பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியம்	106
43.	09.03.1982	மதுவிலக்கு, விற்பனை வரி மானியம்	116
44.	30.03.1982	நிதி நிலை ஒதுக்கீடு மானியம்	136
45.	18.04.1986	வீட்டு வசதித் துறை மானியம்	171
46.	28.04.1986	சமுதாய நலத் திட்டங்கள் மானியம்	194
47.	10.05.1986	நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவு	222
48.	05.05.1989	நிதி ஒதுக்கீடு சட்ட முன் முடிவு	239
49.	07.05.1990	நிதி ஒதுக்கீடு சட்ட முன் முடிவு	265
50.	22.08.1990	துணை மானியக் கோரிக்கை	288
51.	23.08.1990	நிதி ஒதுக்கீடு மசோதா	301
52.	06.08.1996	பொது விற்பனை வரி மானியம்	306

53.	28.08.1996	நிதி ஒதுக்கீடு மசோதா	340
54.	30.08.1996	துணை மானியக் கோரிக்கை	363
55.	25.03.1997	துணை மானியக் கோரிக்கை	373
56.	28.04.1997	நிதி ஒதுக்கீடு மசோதா	388
57.	17.10.1997	துணை மதிப்பீடுகள்	415
58.	28.05.1998	நிதி ஒதுக்கீடு மசோதா	436
59.	14.05.1999	நிதி ஒதுக்கச் சட்ட முன் முடிவு	459
60.	16.05.2000	தாழ்த்தப்பட்டோர் நல மானியம்	494
61.	17.05.2000	நிதி ஒதுக்கச் சட்ட முன் முடிவு	505
62.	13.11.2000	முதல் துணை மதிப்பீடு	521

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்

இறுதித் துணை மதிப்பீடு விவாதம்

உரை : 36 **நாள் : 25.03.1975**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவையின்கண் வைக்கப்பட்ட இறுதித் துணை மதிப்பீடுகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தந்துள்ள கருத்துக்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

துணை மானியக் கோரிக்கையில் உள்நுழைந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் சில விவரங்களை இங்கே எடுத்துக்கூறினார்கள். அதிலே அவர்கள், அரசின்பால் ஒரு விளக்கம் கோரினார்கள். வறட்சிப் பணிகளுக்கு 21 கோடியே 29 இலட்சம் ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறீர்களே, இது எப்படி திடீரென்று வந்தது. ஏற்கெனவே அறிவித்ததற்கு மாறாக இருக்கிறதே என்று குறிப்பிட்டார்கள். இதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதித் துணை மதிப்பீட்டின் தொடக்க உரையிலேயே நான் குறிப்பிட்டுள்ளதைப் போல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவிட ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 8 கோடியே 56 இலட்சம் ரூபாய் ஆகும். குடிநீர் வடிகால் வாரியத்திற்காக 2 கோடி ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அஃதன்னியில் சுமார் 1 கோடி ரூபாய் நகராட்சிகளுக்கு இந்த வறட்சிப் பணிகளுக்காக அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, 11 கோடி 56 இலட்சம் ரூபாய்.

மொத்தம் உள்ள 21 கோடி 29 இலட்சம் ரூபாயில் மிச்சம் 9 கோடி 73 இலட்சம் ரூபாய் நமது திட்டச் செலவுகளில் இருந்து மாற்றியமைத்துச் செலவு செய்வதாகும். இதுவும் ஏற்கனவே அவையில் அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆக, இந்த 11 கோடி 56 இலட்சம் ரூபாயையும், நம்முடைய திட்டச் செலவில் இருந்து மாற்றியமைத்துச் செலவிடுகிற 9 கோடி 73 இலட்சம் ரூபாயையும் கூட்டிப்பார்த்தால் 21 கோடி 29 இலட்சம் ரூபாய் கணக்குச் சரியாக வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் முதலில் குறிப்பிட்ட 11 கோடி 56 இலட்சம் ரூபாய் வறட்சிப் பணிகளுக்காக நடப்பு ஆண்டில் நாம் செலவு செய்திருக்கும் செலவை மத்திய அரசு ஒப்புக் கொண்டு 11 கோடி 56 இலட்சத்திற்குப் பதிலாக 7 கோடி 50 இலட்சம் ரூபாய்தான் தந்திருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வேன். அடிக்கடி கூறுவதைப் போல் அந்த 7 கோடி 50 இலட்சத்திலும் கடன் 70 சதவிகிதம். மானியம் 30 சதவிகிதம் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுவது பொருத்தமுடையதாகும்.

திரு. தங்கமணி அவர்கள் மற்றொரு காரணம் சொன்னார்கள். இந்தச் சம்பள அகவிலைப்படியில் 300 ரூபாய்க்குக் கீழே உள்ளவர்களுக்கு 36 சதவிகிதம்; 300 ரூபாய்க்கு மேல் உள்ளவர்களுக்கு 27 சதவிகிதம் என்று மாநில அரசு நிர்ணயித்திருக்கிறது; இது மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அது சரியல்ல என்பதுதான் எனக்குக் கிடைத்துள்ள தகவல். மத்திய அரசிலும் 300 ரூபாய்க்குக் கீழ் உள்ளவர்களுக்கு 36 சதவிகிதமும், 300-க்கு மேல் ஊதியம் பெறுகிறவர்களுக்கு 27 சதவிகிதமும் என்றுதான் இருப்பதாக நினைவு. மேற்கொண்டு தங்கமணி அவர்களுக்குத் தகவல் கிடைத்து அளிப்பார்களானால் நான் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இல்லாவிட்டால் நான் சொல்லுவது சரி என்று அவர்கள் திருத்திக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

பத்து கோடி ரூபாய் எதிர்பாராச் செலவு நிதியைப் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டு அதை 20 கோடி ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

எதிர்பாராச் செலவு நிதி என்பது. சட்டமன்றத்தினுடைய அனுமதி பெறுவதற்கு முன்பு செய்யவேண்டிய செலவுகளைச் செய்வதற்காக உள்ள நிதியாகும். ஆனால், இதிலே செய்யப் படுகிற ஒவ்வொரு செலவும் சட்டமன்றம் முடிவு செய்துள்ள விதிகளின்படி அடுத்து வருகிற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் சட்டப் பேரவையின் ஒப்புதலுக்காகத் துணை மானியங்களின் பகுதிகளாகக் கொண்டுவரப்படும் என்பதையும் நான் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவசியமான வளர்ச்சிப்பணிகளுக்காக, மிக முக்கியமான தேவைப் பணிகளுக்காக உடனுக்குடன் நமக்குத் தொகை தேவைப்படும் போது இந்த எதிர்பாராச் செலவு நிதியிலிருந்துதான் நாம் பணத்தை அதற்கு ஒதுக்கீடு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தாலேதான் இப்படி 10 கோடி ரூபாயை நாம் 20 கோடி ரூபாயாக உயர்த்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் திரு. தங்கமணி அவர்களுக்குக் கூறிக் கொள்ளுகிறேன்.

நண்பர் வகாப் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் ஒரு கோடி ரூபாய் மாத்திரந்தான் கூட்டுறவுச்சங்கங்களுக்கு கொள்முதலுக்காக, உணவு தானியங்களை வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது; அது போதுமானது அல்ல என்று குறிப்பிட்டார்கள். நாம் நேரடியாகக் கொடுத்துள்ள தொகை ஒரு கோடி ரூபாய். ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக கூட்டுறவுச் சங்கத்தினர் ரிசர்வ் வங்கியிடமிருந்து 10 கோடி ரூபாய் பணம் பெற்றுக்கொள்ள, பணிகளைத் தொடர்ந்து நடத்த வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, தேவைப்பட்டால் அதை உயர்த்துவதற்கும் அரசு தயாராக இருக்கிறது என்பதையும் நண்பர் வகாப் அவர்களுடைய சந்தேகத்திற்கு நான் விளக்கமாக அளிக்கிறேன்.

இந்த விவாதத்தைத் தொடங்கிய நம்முடைய நண்பர் சீனிவாசன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டமே கவனிப்பா ரற்றுக் கிடக்கிறது என்று சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வாதாடுவதற்கு நான் எந்தக் குறையும் சொல்ல மாட்டேன். ஆனால், இன்றைக்கு இந்த வறட்சி நிவாரண

பணிகளில் கூட இராமநாபுரம் மாவட்டத்திற்கு அதிக தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த மாநிலத்திலேயே எல்லா மாவட்டங்களையும்விட அது அதிகமாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதையும் கருத்தில் கொண்டு இதுவரையில் 150 இலட்சம் ரூபாய் - நடப்பு ஆண்டில் 1974-75ம் ஆண்டில் 150 இலட்சம் ரூபாய் அங்கே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வேன்.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பல கண்மாய்கள் சிறப்புத் திட்டங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டு - திருப்பத்தூர் கண்மாய்; இராமநாதபுரம் கண்மாய்; இராசசிங்க மங்கலம் கண்மாய் போன்ற பெரிய கண்மாய்கள் எல்லாம் நீண்ட நெடுங்காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த சூழ்நிலை மாற்றப்பட்டு அந்தப் பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் என்னென்ன பகுதிகளில் வேலைகள் நடைபெற வில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிப்பார் களானால் அவைகளைக் கருத்தில் கொண்டு இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும் என்பதையும் நான் இங்கே கூறிக் கொள்வேன்.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வறட்சி நிவாரண நிதிபற்றிக் குறிப்பிட்டார்கள். யாருடைய கையிலாவது பணத்தைக் கொடுத்தால் அது ஒழுங்காக முதலமைச்சர் கைக்கு வந்து சேருமா என்றெல்லாம் கேட்டார்கள். நேற்றுக்கூட 10 ரூபாய் கொடுத்தார்கள் என்று காட்டினார்கள். என்னிடத்தில் கொடுப்பதாகச் சொன்னார்கள். . . .

(திருமதி சத்தியவாணிமுத்து ஒரு கவரை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள்.)

திரு. கே.டி.கே. தங்கமணி : சட்டமன்றத்தில் சாமான்களைக் கொடுக்க விதிமுறைகள் இருக்கின்றனவா? அப்படி விதிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் இப்படிச் செய்தால் எக்ஸ்சேஞ் ஆப் கூட்ஸ் என்று ஆகிவிடாதா? இந்த மாதிரி முறை சரிதானா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இதை நான் அவ்வளவு வலியுறுத்திப் பெற்றுக்கொண்டதற்குக் காரணம் அம்மையார் அவர்கள் நாங்கள் வறட்சி நிதிக் கொடுக்க மாட்டோம். யாரையும் கொடுக்கவும் சொல்ல மாட்டோம் என்று சொன்னார்கள். அவர்களே வாங்கிக்கொண்டு வந்ததற்கு நன்றி தெரிவிப்பதற்காகத்தான் அவ்வளவு வலியுறுத்திப் பெற்றுக் கொண்டேன். (குறுக்கீடு).

ஒவ்வொரு நிதிக்கும் கணக்குகள் வைக்கப்பட்டிருக் கின்றன. பல்வேறு இடங்களில் வழங்கப்பட்ட, பொதுக் கூட்டங்களில் வழங்கப்பட்ட தொகை எல்லாம் முறையாகக் கணக்கு வைக்கப்படுமா என்றார்கள். இன்னும் சொல்லப் போனால் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளித் திட்டம், சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் இப்படி எல்லாத் திட்டங்களும் இப்போது பட்ஜெட் கணக்கில் வருவதை, துணை மானியக் கோரிக்கையில் அந்தக் கணக்குகள் வைக்கப்பட்டு இந்தப் பேரவையின் அனுமதி பெற அந்தக் கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருப்பதை நன்றாக அறிவோம். அதற்கான ஆடிட்டுகள் இருக்கின்றன. அறிக்கை களில் கூட, நான் விடுத்துள்ள, அறிக்கைகளில் சட்டப் பேரவையில் கூறியதைச் சொல்லியிருக்கிறேன். ''யாரும் வலியுறுத்தி நிதிகளைப் பெறக்கூடாது. அப்படி ஏதேனும்; குறைபாடுகள் வந்தால் எனக்கு அறிவிக்க வேண்டும். அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.'' என்று கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அவர்கள் சொன்னார்கள் - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ற முறையில் அறிக்கை விடுகிறார்கள் என்று. அந்த அறிக்கையில் கூட - யாரும் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தனியாக வசூலில் ஈடுபடக்கூடாது என்று நான் கேட்டுக்கொண்டிருக் கிறேன். பொதுக்கூட்டங்களில் உண்டியல் எடுத்து அதன்மூலம் கிடைக்கிற தொகையைப் பொதுக்கூட்ட மேடையில் எண்ணி அதைப் பொதுமக்களிடத்தில் அறிவித்து, அதனை இந்த முகவரிக்கு அனுப்பவேண்டும். ''டிராப்ட்'' எடுத்தோ, ரொக்கமாகவோ எப்படி அனுப்பினாலும் அரசு சார்பில் செயல்படுகிற, நிதி இலாகா சார்பில் செயல்படுகிற

''முதலமைச்சர், தமிழ்நாடு வறட்சி நிவாரண நிதி'' என்ற தலைப்பில் இந்த இலாகாவுக்கு நேரடியாக அனுப்ப வேண்டுமென்று தெரிவித்தேன். அதிலே எந்த தவறும் விளைய இடம் இல்லை. ஏதாவது தவறுகள் விளைந்தால் உடனடியாகச் சுட்டிக்காட்டப்படுமானால் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்வேன்.

பிற்பட்டோர் நலத்துறை விடுதி ஒன்றில் நடைபெற்ற சம்பவம் குறித்து நண்பர் சீனிவாசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி விசாரித்த அளவில் 22, 23 ஆகிய தேதிகளில் தியாக-ராயநகர் விடுதியில் இருக்கின்ற மாணவர்களுக்கும், சமையல் காரர்களுக்கும், பணியாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டு அதன் காரணமாக மாணவர்கள் சமையல்காரர்களையும், பணியாளர்களையும் அடித்தார்கள் என்ற புகார் எழுந்து அதன் தொடர்பாக அந்த விடுதியில் இருந்த குழல் விளக்குகள், நாற்காலிகள், மேஜைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வன்முறைச் செயல்களுக்குப் பயந்து பல மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேறிவிட்டார்கள்.

24-3-1975 அன்று அவர்கள் வெளியேறிய பிறகு விடுதியிலுள்ள 100 பேர்களில் 20 பேர்கள் மாத்திரம் விடுதியில் தங்கியிருக்கிறார்கள் என்றும் இதுதான் விடுதியில் நடந்த விவகாரம் என்றும் மேற்கொண்டு என்ன நடைபெற்றது என்பவைகளை நிச்சயமாக விசாரித்துத் தக்க நடவடிக்கைகளை அரசின் சார்பில் எடுப்பேன் என்று உறுப்பினர் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்தத் துணை மானியத்தைத் துணையாகக் கொண்டு அவரவர்கள் தொகுதிக்குச் செய்யப்படவேண்டிய பல்வேறு காரியங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ளவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு, இந்த அளவிற்கு உரையாற்றிய கருத்துக்களை வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை மானியம்

உரை : 37 **நாள் : 04.04.1975**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் பேசிய எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர்கள் என்னைப்பற்றி குறிப்பிட்டிருக்கின்ற காரணத்தினால், அதில் நான் துரோகி நம்பர் 1 என்ற வகையில் ஒரு பட்டத்தை சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் மிக அன்போடு எனக்குச் சூட்டினார்கள். ஆகவே, எனக்கு தாங்கள் ஒரு பத்து நிமிடம் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலை எப்படி இருந்தது கடந்த 75 ஆண்டுகளுக்கு முன்பு என்பதற்கு ஒரு நாடக விளம்பரந்தான் என்னுடைய கைக்கு தரப்பட்டது. 1899 மார்ச் மாதம் 21-ந் தேதி செவ்வாய்க்கிழமை நம்முடைய சென்னை இந்து விநோத சபா, இப்போது இருக்கின்ற வால்டாக்ஸ் தியேட்டர் அருகாமையில் அபிராமி சுந்தரி சரித்திரம் என்ற நாடகம் நடைபெற்று இருக்கிறது. அதில் கதைகளெல்லாம் விளக்கப்பட்டு எவ்வளவு டிக்கெட் என்கின்ற விளம்பரம் வெளியிடப்பட்டு, கடைசியாக குறிப்பிடும்போது, 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு பாய்க்கு அரை டிக்கெட் 2 அணா, பந்தலுக்குள் சண்டை சச்சரவு செய்பவர்கள் சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்கள் கொண்டுவருபவர்கள் போலீசாரிடம் ஒப்புவிக்கப்படும். அதோடு முடியவில்லை. பஞ்சமர்களுக்கு இடமில்லை. ஒரு நாடக தியேட்டரில் 1899 வரையில் தாழ்த்தப்பட்ட மக்கள் நாடகம் பார்ப்பதற்கு வருவதற்குகூட அனுமதியில்லை என்கின்ற ஒரு பயங்கரமான சூழ்நிலை இந்த சென்னை மாநகரத்தில் ஒரு நாடக விளம்பரம்

வெளியிடப்பட்டு நாடகம் நடைபெற்றிருக்கிறது. பஞ்சமர்கள் என்ற பெயரில் மிக பயங்கரமாக பட்டம் சூட்டி அழைக்கப்பட்ட நம்முடைய அருமை ஆதி திராவிட பழங்குடி மக்கள், தாழ்த்தப் பட்ட மக்கள், நாடகங்கள்கூட பார்க்க முடியாத அளவுக்கு தடுக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, அவர்களுடைய சமுதாய அந்தஸ்து உயர்வதற்காக சொல்கூட மாற்றப்பட வேண்டும். அவர்களைப்பற்றிச் சொல்லப்படுகிற சொல்கூட மாற்றப்பட வேண்டும் என்ற புரட்சியை தன்மான இயக்கம், தென்னிந்திய நல உரிமைச் சங்கம், இவைகளுக்கு முதல் காரணமாக இருந்த டாக்டர் நடேசனார் போன்றவர்கள் அந்தக் காலத்திலேயே ஒரு அமைதியான புரட்சியைத் தொடங்கி யிருக்கிறார்கள். 1910-ஆம் ஆண்டிற்கு முன் ஆதி திராவிடர் என்ற சொல்லே வழக்கத்தில் இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை பெறுவதற்காக 1892 ஆம் ஆண்டு ஒரு சபை அமைக்கப்பட்டது. அந்தச் சபையினுடைய பெயரைச் சொல்ல நான் வருத்தப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன்; மிகுந்த மனப்புழுக்கத்தோடு சொல்கிறேன். 1892இல் அமைக்கப்பட்ட அந்தச் சபையின் பெயர் ''பறையர் மகாஜன சபா'' என்பதாகும்.

1918ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முன்னோடிகளில் ஒருவரால் தொடங்கப்பட்ட ''திராவிட மகா சங்கம்'' என்ற ஒரு சங்கத்தின் சார்பில், அன்றைய அரசுக்கு ஒரு மகஜரைத் தந்து, அதன்மூலம் 'பறையர் மகாஜன சபா' என்று அழைக்கப்பட்டிருக்கிற சொற்றொடரைச் சுட்டிக்காட்டி, 'பறையர்கள்' என்ற சொல்லுக்குப் பதிலாக, வரலாற்று ரீதியான 'ஆதி திராவிடர்கள்' என்ற சொல் அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற அமைதியான புரட்சியை தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தினர் அன்றைக்கே நடத்தினார்கள்.

அதற்குப் பிறகு 1920ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத்தில் - திராவிட இயக்க நிறுவனர்களில் ஒருவரான டாக்டர் பி. நடேசன் 'பஞ்சமர்' என்று குறிக்கப்பட்டு

வந்த பெயர், 'ஆதி திராவிடர்' என்று மாற்றப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை ஆதரிப்பதற்காக ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தையும் கூட்டினார்கள்.

அதற்குப் பிறகு 1922ஆம் ஆண்டு மாநில சட்ட மன்றத்தில் 'பஞ்சமர்' 'பறையர்' என்ற சொற்களுக்குப் பதிலாக 'ஆதி திராவிடர்' என்ற சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அரசு ஆணை எண் - ஜி.ஓ. 817 என்கின்ற வகையில் 25-3-1922 அன்றைக்கு - அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

1920இல் நீதிக்கட்சி விடுத்த வேண்டுகோளுக்கிணங்க - 1921-22 ஆம் ஆண்டு சென்சஸ் எடுக்கும்போது நாட்டிலி ருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய பெயரை 'ஆதி திராவிடர்' என்றே பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டு - நீதிக்கட்சி வேண்டுகோள்விடுத்து - அதன்படியே பதிவுசெய்து கொண்டனர். இது நீதிக் கட்சியின் வரலாறு.

ஆனால் இன்று யார் யாரோ, இன்று நாங்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதிகள் என்று பிரதிநிதித்துவம் கொண்டாடுகிறார்களே - வாதாடுகிறார்களே - அதற்காக இந்தப் பழைய வரலாற்றைச் சொல்கிறேன்.

நீதிக்கட்சி வேண்டுகோள் விடுத்து - அதன்படி பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் சென்சஸில் தங்கள் பெயரைக் குறிப்பிடுகிறபோது 'ஆதி திராவிடர்' என்றே தங்களைப் பதிவுசெய்து கொண்டார்கள். இப்படி வளர்த்த ஒரு அமைதியான புரட்சிதான் இன்றையதினம் தமிழகத்திலும், வேறு மாநிலங்களிலும் இருக்கிற அரசியல்வாதிகள், மற்றும் அனைவரும் பாராட்டத்தக்க அளவுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக் காகவும், பின்தங்கிய மக்களுக்காகவும் பாடுபட்டு வருகிற அரசாக நமது அரசு விளங்கி வருகிறது.

பின்தங்கிய மக்களுக்காகத்தான் மிக அதிகமாகச் செய்யப்படுகிறது என்று இங்கே திருமதி சத்தியவாணிமுத்து அவர்களால் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லப்படுகிற வாதம் முறையானதுமல்ல; சரியானதுமல்ல; நியாயமானதும் அல்ல.

தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 4½ கோடி மக்களில், 2½ கோடி மக்கள் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; 80 லட்சம் பேர் ஆதிதிராவிட மக்கள் - தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அந்தக் கணக்கின் அடிப்படையில்தான் இன்றைக்குச் சலுகைகள் செய்யப்படுகின்றன.

அதிலும் பின்தங்கிய மக்கள் சமுதாயம் கேட்பாரற்றுக் கிடந்த நிலையிலே - காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது திருமதி அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள் அடிக்கடி - இந்த அவையிலேயே பின்தங்கிய மக்களுக்காக தனி இலாக்கா வேண்டுமென்று கேட்டுவந்த கோரிக்கை - இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் உருவாகியது. அதுபற்றி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களே பாராட்டிப் பேசியிருக் கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

பின்தங்கிய மக்களுக்கு உள்ள அதே விகிதங்கள் 80 லட்சம் மக்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென்று கேட்பது சரியானது அல்ல. ஆனால் ஒன்று சொல்வேன், பின்தங்கிய மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைவிட அதிகமான பணம்தான் - நிதி ஒதுக்கீடுதான் - தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

இந்த நிதி ஒதுக்கீடு அந்நிதியில் ஆண்டுக்காண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்காக மாத்திரம் 1974-75 இல் நான்கு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப் பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்வேன்.

''எவ்வளவு வீடு கட்டினீர்கள்? எவ்வளவு வீடு கட்டினீர்கள்?'' என்று கேட்கிறார்கள். ஒரு லட்சம் வீடு கட்டுவதற்கு இவ்வளவு செலவானால் பத்து லட்சம் வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு ஆகும்? என்று கேட்கிறார்கள். நல்ல கேள்விதான்.

ஆனால் இந்தியா 1947இல் விடுதலை பெற்றதும் - தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாதாடினார்களே - பேசினார்களே அவர்கள் - 1947இல் ஓராண்டு காலத்தில் மட்டும் விடுதலை விழாவிற்காக செலவிட்டதுபோக - மீதியுள்ள ஆண்டுகளில் - இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டித் தருவது என்று ஆரம்பித்திருந்தால் இந்த இருபதாண்டு காலத்திற்குள் இன்றைக்கு தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தேவைப்படுகிற ஏறத்தாழ பத்து லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும். ஆனால், கடந்த ஓராண்டு காலமாகத்தான் இந்த முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டு ஆண்டுகளில் ஒரு லட்சம் வீடுகள் கட்டுவது என்று திட்டமிட்டிருக்கிறோம்.

முதல் கட்டமாக பத்தாயிரம் வீடுகளை கட்டுவது என்று திட்டமிட்டிருக்கிறோம். பத்தாயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்றால் முதலில் 17 ஆயிரம் வீடுகளைக் கட்ட ஆரம்பித்தால்தான் அது பத்தாயிரத்தில் வந்துநிற்கும் என்று அறிவித்து வேலைகள் நடந்து வருகின்றன.

மாவட்ட வாரியாக கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் எவ்வளவு என்று கேட்டவர்களுக்கு விடையாகத் தர விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1,100 வீடுகள் என்று இலக்கு வைத்து, அங்கே 1,182 வீடுகள் கட்டத் தொடங்கப் பெற்று, இதுவரையில் 694 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக் கின்றன.

வடஆற்காடு மாவட்டத்தில் 1,000 வீடுகள் என்று இலக்கு வைத்து, 1,827 வீடுகள் கட்டத் தொடங்கப்பெற்று, 784 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தென்னாற்காடு மாவட்டத்தில் 1,100 வீடுகள் என்று இலக்கு வைத்து, 1,379 வீடுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொள்ளப் பட்டு, 1,001வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

தஞ்சை மாவட்டத்தில் இலக்கு 1,100 வீடுகள்; எடுத்துக் கொள்ளப்பட்டவை 2,697. முடிக்கப்பட்ட வீடுகள் 1,100.

திருச்சி மாவட்டத்தில் இலக்கு 1,000 வீடுகள். எடுத்துக் கொள்ளப்பட்டவை 3,058. முடிக்கப்பட்ட வீடுகள் 2,038.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இலக்கு 300. எடுத்துக் கொள்ளப்பட்டவை 560. முடிக்கப்பட்டவை 460.

மதுரையில் இலக்கு 800. எடுத்துக்கொள்ளப்பட்டவை 998; முடிக்கப்பட்டவை 882.

இராமநாதபுரத்தில் இலக்கு 700; எடுத்துக்கொள்ளப் பட்டவை 743; முடிக்கப்பட்டவை 580.

நெல்லை மாவட்டத்தில் இலக்கு 800; எடுத்துக் கொள்ளப்பட்டவை 767; முடிக்கப்பட்டவை 618.

குமரி மாவட்டத்தில் இலக்கு 100; எடுத்துக்கொள்ளப் பட்டவை 133, முடிக்கப்பட்டவை 133.

கோவை மாவட்டத்தில் இலக்கு 900. எடுத்துக் கொள்ளப்பட்டவை 1,859, முடிக்கப்பட்டவை 638.

சேலம் மாவட்டத்தில் இலக்கு 600; எடுத்துக் கொள்ளப்பட்டவை 1,772, முடிக்கப்பட்டவை 1,487.

தர்மபுரி மாவட்டத்தில் இலக்கு 200; எடுத்துக்கொள்ளப் பட்டவை 387, முடிக்கப்பட்டவை 360.

நீலகிரி மாவட்டத்தில் இலக்கு 200; எடுத்துக்கொள்ளப் பட்டவை 400, முடிக்கப்பட்டவை 225.

ஆக, இதுவரையில் பதினோராயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்து லட்சம் வீடுகளை கட்டி முடிக்க - இன்றைக்கு இருக்கிற பண மதிப்பீட்டின்படி 350 கோடி ரூபாய் தேவைப்படும்.

இந்த 350 கோடி ரூபாயையும் ஒரேயடியாக ஒதுக்கி 10 லட்சம் வீடுகளையும் கட்டி முடிப்பதற்கு இந்த அரசின் நிதி ஆதாரம் இடம் கொடுக்குமா என்பதை எல்லோரும் எண்ணிப்

பார்க்க வேண்டும். ஆகவேதான் இதனைப் படிப்படியாகச் செய்யவேண்டுமென்று திட்டமிட்டு பணியாற்றி வருகிறோம்.

மழை பொழியும்போதுகூட உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் பொழிவதில்லை. சென்னையில் பெய்கிற மழை - சிலநேரங்களில் மயிலாப்பூரில் பெய்யும் - கோடம்பாக்கத்தில் மழை இருக்காது. அண்ணா சாலையில் மழை பெய்யும் - நேதாஜி சாலையில் மழை இருக்காது. மழையே ஏக காலத்தில் எல்லா இடத்திலும் பெய்கிறது இல்லை என்கிற நிலையில் - எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் 10 லட்சம் வீடுகளையும் கட்டிக்கொடுத்துவிட முடியும் என்று நினைப்பது முடியாத காரியம். ஆக ஓராண்டு காலத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட இந்தக் கொள்கைப்படி பத்தாயிரம் வீடுகள் முடிவுற்று, இந்த மாதத்திற்குள் பதினைந்தாயிரம் வீடுகள் முடிந்து, இரண்டு ஆண்டுகளுக்குள் நிச்சயமாக ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடுக்கிற இந்தக் காரியங்களை எல்லாம் செய்வதற்காக எனக்கு உரிய பட்டம் துரோகி என்றால் - வருங்காலத்தில் அகராதி மாற்றப்படுமே தவிர சத்தியவாணி அம்மையார் சொன்ன பொருள் நிச்சயமாக இருக்காது. அகராதியில் அப்போது துரோகி என்றால் - அரிசனங்களுக்காகப் பாடு பட்டவன்; துரோகி என்றால் - குடியிருப்பு மனைச் சட்டத்தை உருவாக்கி இரண்டு லட்சம் அரிசனங்களுக்கு குடியிருக்க மனையைச் சொந்தமாக்கியவன்; துரோகி என்றால் ஏழு லட்சம் அரிசனங்களுக்கு வீட்டுமனை நிலப்பட்டா கொடுத்தவன் என்கிற வகையில் அகராதியில் பொருள் மாறுமே தவிர, அம்மையார் பட்டத்தை அந்தப் பொருளில் யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

ஆளுநர், அமைச்சர்கள் மானியம்

உரை : 38 நாள் : 08.04.1975

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சற்றொப்ப 120 கோடி ரூபாய்க்கு பல்வேறு தலைப்புகளில் ஆளுநர், அமைச்சர்கள், மதுவிலக்கு, வறட்சி நிவாரணம் - இப்படிப்பட்ட வகைகளில் ஒதுக்கப்படுகின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள சில கருத்துக்களுக்கு என்னுடைய விளக்கங்களை வைத்திட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் அமைச்சர்கள் மாவட்டங்களில் அதிக அளவில் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற முறையீட்டை அவருடைய உரையின்மீது இங்கே எடுத்துச்சொன்னார்கள்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அமைச்சர்கள் தலைமைச் செயலகத்தில் அதிக நாட்கள் இருந்திடவேண்டும்; பொது மக்களுடைய முறையீடுகளைப் பெற்று பரிசீலிக்கவும், ஆவன செய்யவும் அதுவே உகந்த வழி என்று குறிப்பிட்டார்கள்.

அமைச்சர்களைப் பொறுத்து நான் கடந்த ஆண்டிலேயே சில விவரங்களைத் தந்திருக்கிறேன்.

அவர்கள் 1974-75 இல் தலைமைச் செயலகத்தில் - சென்னையில் இருந்த நாட்களைப் பார்த்தால் - என்னைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் 1974-75 இல் சென்னையில் 299 நாட்கள் இருந்திருக்கிறேன்.

கல்வி - சுற்றுலாத்துறை அமைச்சர் - நாவலர் அவர்கள் 266 நாட்கள் சென்னையில் - தலைநகரில் தங்கியிருந்திருக்கிறார்கள்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் 304 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் திரு. என்.வி.என். அவர்கள் 322 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் தலைநகரத்தில் 280 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

உணவு - கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் 261 நாட்கள் தங்கியிருந்திருக்கிறார்கள்.

தொழில்துறை அமைச்சர் திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 233 நாட்கள் சென்னையிலே, தலைநகரத்திலே இருந்திருக்கிறார்கள்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் 316 நாட்கள் சென்னையிலே இருந்திருக்கிறார்கள்.

வருவாய்த்துறை அமைச்சர் - திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 140 நாட்கள் சென்னையில் இருந்திருக்கிறார்கள்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் 180 நாட்கள் சென்னையிலே இருந்திருக்கிறார்கள்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் 235 நாட்கள் சென்னையில் தங்கி இருந்திருக்கிறார்கள் - இது ஆச்சரியமான விஷயம்.

சமூகநலத்துறை அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை 251 நாட்கள் சென்னையில் இருந்திருக்கிறார்கள்.

வணிக வரித்துறை அமைச்சர் திரு. ஓ.பி. இராமன் அவர்கள் 274 நாட்கள் தலைநகரில் தங்கி இருந்திருக்கிறார்கள்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் 212 நாட்கள் தங்கியிருந்திருக்கிறார்கள்.

அறநிலையத்துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் 222 நாட்கள் தங்கியிருந்திருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. இரா சாங்கம் அவர்கள் 215 நாட்கள் தலைநகரில் தங்கி இருந்திருக்கிறார்கள்.

ஆகவே, அமைச்சர்கள் தலைநகரத்திலே தங்குவதில்லை, அவர்கள் வெளியூர்களிலேயே சுற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற, பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துவைத்த வாதம் அவ்வளவு பொருத்தமுடையதாக இல்லையென்பதற்காகத்தான் நான் இதை எடுத்துக்கூறினேன்.

தொடக்கத்திலேயே, நம்முடைய காங்கிரஸ் கட்சியி னுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் தேர்தலைப் பற்றி. . . .

திருமதி த.ந. அனந்தநாயகி : அமைச்சர்கள் தலைநகரத்திலே இருக்கிறார்களே தவிர, தலைமைச் செயலகத்திற்கு வருவதில்லையென்பதுதான் முக்கியமான குற்றச்சாட்டு.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் இல்லத்திலேயே வந்து பார்க்கின்ற அளவுக்கு உரிமை படைத்தவர்கள், ஆகவே, அந்தக் கவலை தேவையில்லை.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் தேர்தல்களைக் குறித்துச் சொன்னார்கள். அவசர அவசரமாக வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. அதன் காரணமாக வாக்காளர்களைப் பதிவு செய்வதிலே சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். ஏன் இவ்வளவு அவசரமாக இந்தக் காரியங்களைச் செய்யவேண்டுமென்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள்.

இது மாநில அரசினுடைய செயல் அல்லவென்பதையும் மாநில அரசிற்கு மத்தியிலே இருக்கிற தலைமைத் தேர்தல் ஆணைக்குழு பிறப்பிக்கின்ற கட்டளைகளை நிறைவேற்றுகின்ற வகையிலேதான் நாம் நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் நான் கூற விரும்புகிறேன்.

ஆனாலும் அதன் காரணமாக வாக்காளர்களுடைய தொகை குறைந்துவிட்டதாக நாம் எண்ணிவிடக்கூடாது. 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும், எல்லா மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்களுடைய எண்ணிக்கை 2,30,64,858 ஆகும். இப்பொழுது, 42,67,214 வாக்காளர்கள் கூடுதலாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, 1975-ம் ஆண்டு வாக்காளர் கணக்கெடுப்பின்படி 2,73,32,072 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது 18½ சதவிகிதத்திற்கு மேலாக 1971-லே இருந்ததைவிட அதிகமான தொகையென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே மாநில அரசு எந்தவிதமான அவசரத்தையும் காட்டிட விரும்பவில்லை. மாநில அரசின் சார்பில் நம்முடைய மாநில அளவிலே இருக்கிற தலைமை ஆணையாளர் அவர்கள் ஒரு குறிப்பினை மத்திய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தார்கள். எந்த வகையிலே என்றால், 2-12-1974-லிருந்து 26-12-1974 வரையில் ஏறத்தாழ 4 வாரங்கள் enumeration என்கின்ற வகையிலேயும் அதற்குப் பிறகு preliminary publication என்கின்ற வகையில் 14-7-1975 என்கின்ற தேதியையும் குறிப்பிட்டு last date for receipt of claims and objections அதற்கென்று 13-8-1975 என்கின்ற தேதியைக் குறிப்பிட்டு disposal of claims and objections என்பதற்கு 25-8-1975 என்கின்ற தேதியைக் குறிப்பிட்டு printing of final list of amendments என்பதற்கு 25-9-1975 என்கின்ற தேதியைக் குறிப்பிட்டு final publication என்பதற்கு 1-10-1975, அதாவது அக்டோபர் 1975 வரையிலே - இவ்வளவு தாராளமாகக் காலத்தை ஒதுக்கி, மத்தியத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு நம்முடைய தேர்தல் ஆணையாளர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இப்படி இருக்கலாம் என்கின்ற கருத்தினை எடுத்துரைத்தார். ஆனால், நமக்குள்ள குறிப்பின்படி

The Election Commission has agreed for an intensive revision with modification in the programme to finally publish the electoral rolls by 30th June 1975 instead of 1st October 1975 as suggested by us.

என்ற அளவில் நாம் 1-10-1975-லே அதை முடிவாக அறிவிக்கலாம், நல்ல நீண்ட இடைவெளி, வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும், வருகின்ற ஆட்சேபணைக் குறிப்புக்களைப் பற்றி பரிசீலிப்பதற்கும், இறுதியாக வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவதற்கும் நீண்டகாலத்தை ஒதுக்கலாம் என்று சொன்னதற்கு மாறாக, மத்தியிலேயிருக்கிற ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவு 30-6-1975-ஓடு, சூன் மாதத்தோடு, சூன் 30ம் தேதியோடு அதை முடித்தாகிவிடவேண்டுமென்கிற அளவிலே அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அதை நடை முறைப்படுத்தலாம் என்று எண்ணிய நேரத்தில், 28-12-1974-ம் தேதியன்று ஒரு டெலக்ஸ் மெஸேஜ் இங்கேயுள்ள தேர்தல் ஆணையாளருக்கு வந்தது. அந்த டெலக்ஸ் மெஸேஜிலே வந்த குறிப்பு :

The Commission has decided that a revision of electoral rolls during 1975 should be in accordance with the crash programme as was done during 1969-70.

என்ற அளவிலே, மத்திய தேர்தல் ஆணைக்குழு ஒரு டெலக்ஸ் செய்தியை அனுப்பியது. அந்தச் செய்தியின்படி அவர்கள் வகுத்த தேதிகளின்படி 1975-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ம் நாளோடு இதனுடைய வாக்காளர் பட்டியலுடைய இறுதி வடிவம் வெளியிடப்பட்டாக வேண்டும். நாம் முதலிலே எழுதி அனுப்பியது அக்டோபர் மாதம் வரையிலும் என்று. அவர்கள் ஒத்துக்கொண்டது சூன் மாதத்திற்குள்ளே முடித்து விடுங்கள் என்று. பிறகு 1974-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28-ம் தேதியிலே அவர்கள் அவசரமாக அனுப்பிய டெலக்ஸ் மெஸேஜ் மூலம் பிப்ரவரி மாதத்திற்குள்ளாக நீங்கள் இதை முடித்துவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த வகையிலே பணிகள் தீவிரமாக நடைபெற்று, வாக்காளர்கள் பதிவு முடிவுற்று, அவர்கள் சொன்னபடி பிப்ரவரி திங்களுக்குள் எல்லா வேலைகளையும் நாம் முடித்து அனுப்பி வைத்திருக்கிறோம். ஆகவே, மாநில அரசின்மீது எந்தக் குறைபாட்டையும் சொல்வதற்கில்லையென்பதையும் இங்கேயிருக்கிற தேர்தல் ஆணையாளர் மத்தியத் தேர்தல் ஆணைக் குழுவின்படி நடக்க

வேண்டியவர் என்பதையும் பொன்னப்ப நாடார் அவர்கள் குற்றச்சாட்டுக்கு நான் பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தேர்தல் எப்பொழுது நடத்த வேண்டுமென்று ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? திடீர்த் தேர்தலுக்கு நாங்களெல்லாம் தயார்படுத்திக் கொள்ளலாமா என்பதை முதலமைச்சரவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : உங்களுடைய நிலையிலேதான் நாங்களும் இருக்கிறோம். எங்களுக்கு எந்தத் தகவலும் அதைப்பற்றி இல்லை.

அடுத்து, இந்த அவையிலே முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்சினை இந்த மக்கள் மீது, மதுவிலக்குப்பற்றி போட்ட . . . .

திரு. கே.டி.கே. தங்கமணி : நமது மாநிலத்தைப் பொறுத்தவரையிலே எப்பொழுது தேர்தல் நடக்கும் என்பதைப் பற்றி சொல்ல முடியும் அல்லவா? சாதாரணமாக இருந்தால் 1976-லே நடக்கும். அதற்கு முன்பு நடத்துவதற்காக ஏதாவது அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பொதுத் தேர்தல் என்பது டெல்லியிலே இருக்கிற மத்திய தேர்தல் ஆணைக் குழு தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். மேலிடத்திலிருப்பவர்கள் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். நான் அவ்வளவுதான் சூசகமாகச் சொல்லமுடியும். ஆகவே, என்னை விட திரு. தங்கமணிக்குத்தான் இந்த இரகசியம் நன்றாகப் புரிந்திருக்க முடியும், இப்பொழுதுள்ள சூழ்நிலையின்படி. ஆகவே, அவர் என் வாயிலேயிருந்து வரவழைப்பதென்றால் அதிலே தோல்விதான் ஏற்படும். ஏனென்றால், சொல்வதற்கு என்னிடத்திலே தகவல் இல்லை. ஆகவே, தங்கமணி அவர்கள் என்னிடம் இரகசியமாகச் சொன்னால்கூடப் பரவாயில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : ஒருவேளை பொதுத் தேர்தல் நடந்தால், அவர்கள் கலைத்தால் நீங்களும் சட்ட சபையைக் கலைத்துவிட்டு நடத்துவீர்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அப்படி ஒன்று நடக்கும்போது பார்ப்போம் கலைப்பதா, கலைப்பதில்லையா வென்பதை.

தலைவரவர்களே, மதுவிலக்கைப் பற்றி பல உறுப்பினர்களும் நல்ல பல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கு மறுபடியும் நடைமுறைப் படுத்தப்படுவதை நம்முடைய முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே பேசிய நண்பர் வகாப் அவர்களும், ஏன் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து பேசியவர்களும், பாராட்டிவிட்டு அதே நேரத்திலே குற்றங்கள் நிறைய நடைபெறுகின்றன, அவைகளைக் கண்டுபிடிப்பதிலே மதுவிலக்குக்கென அமைந்துள்ள சிறப்புக் காவல்துறையினர் தங்களுடைய கடமையை மேலும் செம்மையாகச் செய்யவேண்டுமென்றெல்லாம் குறிப்பிட் டார்கள். நான் அந்தத் தலைப்பிலும் சில விவரங்களை அவைக்குச் சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன்.

மதுவிலக்கு மறுபடியும் அமுல்படுத்தப்பட்ட 1974-ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1975-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற மதுவிலக்குக் குற்றங்கள் 2,03,256 ஆகும்.

இதில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக 22,910 பேர்.

சாராயம் வைத்திருந்ததற்காக 80,977 பேர்.

குடி போதையில் இருந்ததற்காக 77,673 பேர்.

இந்த 5, 6 மாதங்களில் இந்தக் குற்றங்களுக்காக சிறைக்கு அனுப்பப்பட்டவர்களுடைய எண்ணிக்கை 21,202. அதிலே, சேலத்திலே மாத்திரம் 10,504 பேர்கள் ஆகும்.

அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 77,160 பேர்கள், அபராதமும் சிறைத் தண்டனையும் பெற்றவர்கள் 33,176 பேர்கள்.

இந்த அபராதத்தின் மூலமாக மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கிற தொகை 52 லட்சம் ரூபாய் ஆகும், இந்த

ஐந்தாறு மாதங்களில் அபராதத் தொகையின் மூலமாக வந்த வருவாய் 52 லட்சம் ரூபாய் ஆகும்.

மதுவிலக்கின் காரணமாக மரம் ஏறுகின்ற தொழிலாளர் களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிட்டது என்பதை பொன்னப்ப நாடார் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்கு 40 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தைத் தயாரித்து அதிலே 25% மாநில அரசும் 75 சதவீதத்தை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் ஏற்று இன்றைக்கு அந்தத் தொழிலாளர்களுக்கான கருவிகள், சாதனங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அதன்படி அந்தப் பயன்பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 20,293 பேர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு அளிக்கப் பட்டுள்ள நிதியுதவித் தொகை இதுவரையில் 40,58,600 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவர்களை கைவிட்டுவிடவில்லை.

மதுவிலக்குக் கொள்கை வெற்றிபெறவேண்டுமானால் நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னது போலவும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் காந்தி யடிகளுடைய இந்தக் கொள்கை இந்தியா முழுமையும் நிறைவேற்றப்படவேண்டுமென்று சொன்ன அந்த அடிப் படையிலேயும் இது அகில இந்திய அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாக ஆகி எல்லா மாநிலங் களிலும் செயல்படுத்தப்பட்டால்தான் அது தமிழ்நாடு மாநில அளவிலேயும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட முடியும் என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்காக மது விலக்குக் குற்றவாளிகள் பிடிக்கப்படாது விடப்படுவார்கள், பிடிக்கப் படாது விடப்படுகிறார்கள் என்பது அல்ல. தீவிர நடவடிக்கை களை மதுவிலக்குக் காவல்துறை பிரிவினர் எடுத்ததன் விளைவாகத்தான் இவ்வளவு குற்றங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இவ்வளவு குற்றங்கள் என்று சொல்கிற நேரத்திலே, ஏ, அப்பா! 6 மாதங்களிலே இவ்வளவா! என்று எண்ணத் தோன்றும். இந்த 6 மாத காலத்திலே இதுவரையிலும் பிடிபடாத குற்றங்களும் பிடிபடுகின்றன என்பதை இந்த

விவரங்களிலிருந்து காவல்துறையைப் பாராட்டியும் எடுத்துக் கொள்ளலாம். 1967-68-ம் ஆண்டில் 2,11,987 பேர்கள் ஒரு ஆண்டுக் காலத்திலே சிறைச்சாலையிலே மதுவிலக்கு சம்பந்தமான குற்றங்களில் பிடிபட்டவர்கள் இருந்தார்கள். இந்தக் குற்றங்களிலே பிடிக்கப்பட்டவர்கள் 1968-69-ம் ஆண்டில் 2,70,962 பேர்களும் 1969-70-ம் ஆண்டில் 3,25,810 பேர்களும், 1970-71ஆம் ஆண்டில் 3,46,699 பேர்களும் என்ற அளவிற்கு இந்தத் தொகை வளர்ந்து கொண்டே வந்தது, சாராயம் காய்ச்சுதல், சாராயம் வைத்திருத்தல், குடிபோதையில் இருத்தல் என்ற வகையிலே.

இன்னொரு விவரத்தையும் சொல்லியாக வேண்டும். டி.எல். 1, டி.எல். 2 இவைகளுக்கு ஏன் இங்கேயே தொழிற்சாலைகள் தர வேண்டுமென்று எல்லாம்கூட எடுத்துச் சொன்னார்கள்; டி.எல். 1, டி.எல். 2 என்பது இப்படிப்பட்ட லைசென்ஸ்களைப் பெறுவது இந்த அரசு வந்தபிறகு உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல.

1966-67 ஆம் ஆண்டிலே 94 பேர்களுக்கு இந்த லைசென்ஸ்கள் வழங்கப்பட்டிருந்தன. 1971-72 ஆம் ஆண்டில் 93 பேர்கள்; 1972-73 ஆம் ஆண்டில் 90 பேர்கள் அதிகமாக அல்ல - 94 பேர்கள். இப்போது 90 பேர்கள்தான் லைசென்ஸ் தாரர்களாக இருக்கிறார்கள்.

இதிலே கவனிக்கத்தக்க அம்சம் என்னவென்றால் 1966-67ஆம் ஆண்டிலே 94 பேர்களாக இருந்தபோது அவர்கள் டி.எல். 1 என்ற அந்த லைசென்ஸ் அடிப்படையிலே வாங்கிக் கொண்ட லிட்டர் 21,87,835 பெற்றார்கள். மதுவிலக்கு அமுலில் இருந்தபோது 21,87,000 லிட்டரைத்தான் அவர்கள் தங்கள் லைசென்ஸ் அடிப்படையிலே பெற்றார்கள்.

பிறகு, 1971-72ஆம் ஆண்டிலே நாம் மதுவிலக்கை ஒத்திவைத்த நேரத்திலே 8,56,409 லிட்டரைத்தான் பெற்றுக் கொண்டார்கள். 1972-73 ஆம் ஆண்டில் 6,91,000 லிட்டரைத் தான் பெற்றுக்கொண்டார்கள். இப்போது மீண்டும் மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துவிட்ட காரணத்தினாலே பழைய 21

லட்சத்திற்கு நிச்சயமாக அவர்கள் செல்வார்கள். இது இன்றைக்கு இருக்கிற நிலைமை.

அதைப்போலவே, டி.எல். 2. இதைப் பார்த்தாலும் 1966-67 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்திலே இந்த உரிமங்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 430; இன்றைக்கு அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை 356தான். அதிகப்படியாகப் பெற்றார்கள் என்ற எண்ணிக்கை அல்ல, முன்பு 430 ஆக இருந்த எண்ணிக்கை இன்றைக்கு 356 ஆகக் குறைந்து இருக்கிறது.

மதுவிலக்கு அமலில் இருந்த 1969-70 ஆம் ஆண்டிலே 47,12,389 லிட்டரைப் பெற்றார்கள். மதுவிலக்கு ஒத்தி வைக்கப்பட்ட பிறகு 1971-72 ஆம் ஆண்டில் 20,98,000 லிட்டராக அது குறைந்தது.

ஆக, இந்த டி.எல். 1, டி.எல். 2 உரினமதாரர்கள் இதைத் தவறான வகையிலே பயன்படுத்துகிறார்கள் என்ற செய்திகள் அரசுக்கும், இந்தத் துறையினுடைய காவல் அதிகாரிகளுக்கும், அடிக்கடி வந்ததன் காரணமாக நம்முடைய ரெவின்யூ போர்டின் சார்பில் 27-3-1975 அன்று தவறாகப் பயன்படுத்துகின்ற உரிமதாரர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு அரசு ஆணை, ஆணை எண் 98 என்பதின்கீழ் 27-3-1975-லே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல அம்சங்கள் பல்வேறு வகையிலே எப்படி எப்படி கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும் ஒன்றை மாத்திரம் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

It may be made compulsory that the spirit obtained by all categories of D.L. series licenses is brought into account and only after verification by the Range Officer concerned or a Revenue Official not lower in rank than a Deputy Tashildar, is allowed to be sold. என்கின்ற வகையிலே இவைகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட, தவறாக நடந்தால் உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இன்றைக்கு போர்டு ஆப் ரெவின்யூ தந்த கருத்துக்களை ஏற்று, அரசு ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மேலும் அனைவருக்கும் இதிலே அக்கறை இருக்கிறது. மதுவிலக்கை நடைமுறைப்படுத்துகின்ற இந்த நேரத்தில் இதை வெற்றிகரமாக நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பொது வாழ்க்கையிலே அக்கறை கொண்டவர்கள் சமுதாய மேம்பாட்டிலே அக்கறை கொண்டவர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓய்வூதியங்களைப் பற்றி இங்கே பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச்சொன்னார்கள். இந்த ஓய்வூதியத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு எவ்வளவு சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 1960 ஆம் ஆண்டிலே ஓய்வூதியங்கள் சட்டப்படி 25 ஆண்டுக்காலம் ஒரு அரசுப் பணியாளர் பணிபுரிந்திருந்தால் சராசரி ஊதியத்திலே 30/80 என்ற விகிதத்திலேதான் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. அதனை 1972ஆம் ஆண்டு இந்த அரசு மாற்றியமைத்து 30/80 என்ற விகிதத்தை அதிகப்படுத்தி 33/80 என்ற விகிதத்தைக் கொண்டுவந்து இருக்கிறோம்.

அதைப்போலவே கிராஜூட்டி, பணிக்கொடைக்கு அதிகபட்சம் பதினைந்து மாத ஊதியம் என்று இருந்ததை பதினாறரை மாத ஊதியம் என்ற அளவில் உயர்த்தியிருக்கிறோம்.

அகவிலைப்படி போதாது என்று பொன்னப்ப நாடார் இங்கே ரொம்ப ஆதங்கப்பட்டுக்கொண்டார். அவர்களுடைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் எந்தவிதமான அகவிலைப்படியும் ஓய்வுபெற்ற அலுவலர்களுக்குத் தரப்படவில்லை. 1972 ஆம் ஆண்டுதான் அவர்களுக்கு அகவிலைப்படி, மற்ற அரசு ஊழியர்களுக்கெல்லாம் தந்தபோது ஐந்து ரூபாய் தரப்பட்டது. பிறகு 1972 இல் அது பத்து ரூபாயாக உயர்த்தப்பட்டது. மீண்டும் 1-10-1973 முதல் 15 ரூபாயாக ஆக்கப்பட்டது. மீண்டும் 1-10-1974 இல் அதுவும் 20 ரூபாயாக உயர்த்தப்பட்டு தரப்பட்டு வருகிறது. இப்போது 1-2-1975 முதல் இந்த அகவிலைப்படி 28 ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்தப் பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல சராசரி ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு 12 மாதம் என்று இருந்ததை, பத்து மாதம் என்று குறைத்துக் கணக்கிடுவதால் அவர்களுக்கு இப்போது ஆதாயம் அதிகமாகக் கிடைக்கிறது.

பணிசெய்யும் காலத்தில் ஏற்படும் இடையீடுகள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு ஓய்வூதியப் பணிக்காலம் கணக்கிடுவதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓய்வூதியம் பெற வயது வரும் நாளில் குறிப்பிட்ட நாளைக் கணக்கிடாமல் அந்த மாதக் கடைசிநாளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக, ஒருவர் அந்த மாதத்தில் இரண்டாம் தேதி ஓய்வுபெறுகிறார் என்றால் அந்த இரண்டாம் தேதி வரை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் அந்த மாதம் கடைசி வரையில் அவரை வேலையில் இருக்க அனுமதித்து அதற்குச் சம்பளமும் தரப்பட்டு அந்தத் தேதி வரையில் கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

நிலையான பதவி வகித்த எவரும் 1-10-1969 முதல் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர் ஆவார்.

குறைந்த அளவு ஓய்வூதியம் எப்படி இருந்தது என்றால் 1-3-1970 முதல் மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் என்று இருந்தது. பிறகு 1-4-1972 முதல் அதை 40 ரூபாய் ஆக்கினோம். இப்போது அதை 1-4-1973 முதல் 50 ரூபாயாக உயர்த்தி யிருக்கிறோம். ஓய்வூதியத்திற்கு இருந்துவந்த மேல்வரம்பு 1,800 ரூபாய் என்பதை நாம் நீக்கி விட்டோம்.

மிக மிக முக்கியமாக, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மருத்துவச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அண்மையிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓய்வு பெறுபவர்கள் ஓய்வு பெற்ற இடத்திலிருந்து சொந்த ஊருக்குப் போகிறபோது பயணப்படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது.

ஓய்வூதியம் விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நல்லதொரு கருத்தை திரு. பொன்னப்ப நாடார்

அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே உள்ள சிக்கல்கள் தவிர்க்கப்பட்டு அது விரைவாகக் கிடைப்பதற்கு பண விடைத்தாள் (மணி ஆர்டர்) மூலம்கூட இன்றைக்கு அனுப்பப் படுகிறது. இருந்தாலும் அந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் பற்றி ஒப்புதல் கிடைப்பதற்கான சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளைப் போக்கி கூடிய விரைவில் இது கிடைப்பதற்கு அரசு தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இன்றைக்கும் பென்ஷன்தாரர்கள் நியாயமான குறைகளைச் சொல்கிறார்கள். நீங்கள் half the D.A. என்று மற்றவர்களுக்குக் கொடுக்கும் டி.எ.யில் பாதியைத்தான் தருகிறீர்கள், அதை ஏன் முழுதுமாகத் தரக்கூடாது? இன்னொரு விஷயம், பத்தாண்டு களுக்கு முன் கம்யூட் செய்திருந்தால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு பென்ஷன் முழுவதும் தர முயற்சிப்பதாக வாக்குறுதி அளிக்கப் பட்டிருக்கிறது. அந்த வாக்குறுதி என்னவாகும் என்றும் அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, முதியோர் களுக்கு உதவித் தொகை வழங்குகிறோம். ஒருவர் செத்தால்தான் மற்றவரை லிஸ்டில் சேர்க்கிறார்கள். மேலும் 20 ரூபாய் என்று கொடுப்பது மிகவும் குறைவு. அது உயர்த்தப்படுமா என்பதற்கு முதலமைச்சரவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் சொன்னதும், நண்பர் சுப்பையா அவர்கள் சொன்னதும் ஏற்றவகையில், உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

விடுதலை வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும், இந்தி எதிர்ப்பு வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும், எல்லைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது விடுதலை வீரர்களுக்கு, 1967-68 ஆம் ஆண்டிலே 11 இலட்சம் ரூபாய் ஆண்டுக்கு வழங்கப் பட்டதற்கு மாறாக 1974-75 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் விடுதலை வீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 7,996 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள். இன்னும்

முடிவுறாத நிலையில் உள்ள விண்ணப்பங்கள் 978தான் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அதைப்போலவே இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு ஓய்வூதியம் தருவதில் இருக்கும் சங்கடங்களைப்பற்றிச் சொன்னார்கள். அவைகள் டெல்லியிலுள்ள தலைமையிடத்தில் சரிபார்க்கப்பட வேண்டியிருக்கிறது. வருமானம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்து விவரம் சேகரிக்கப்பட வேண்டியிருக்கிறது. சிறைத்தண்டனை பற்றி சிறை மேற்பார்வையாளர்களிடமிருந்து தகுதிச் சான்றிதழ் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த ரிக்கார்டுகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டு இதனால் தடங்கல் இருக்கிறது. அவைகளையும் போக்குவதற்குத் துரிதமாக ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டுமென்று, நான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தாமிரப் பட்டயம் வழங்குவதைப் பொறுத்தவரையில் மத்திய அரசு சார்பாக வழங்கப்பட்டது. நம்முடைய மாநில வீரர்கள் 2,356 பேர்களுக்குத்தான் கிடைத்தது, அவர்கள் நிர்ணயித்த விதிமுறைகளின்படி. எனவே, தமிழகத்திலே இருக்கின்ற இந்திய நாட்டின் விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசு வழங்காவிட்டாலும் மாநில அரசு தமிழக அரசின் சார்பில் வழங்க முடிவுசெய்து விடுதலை வீரர் பட்டயத்தை மேலும் 5,175 பேர்களுக்கு வழங்கியிருக்கிறது.

இந்தி எதிர்ப்பு வீரர்கள் சம்பந்தமாக இதுவரையிலே 629 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே போராட்டத்திலே ஈடுபட்ட எல்லைப்போராட்ட வீரர்களும், திருத்தணி எல்லைப்போராட்ட வீரர்களும், அடங்குவார்கள். மேலும் வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப் படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் சொன்னார்கள், கன்னியாகுமரி மாவட்டத்திலே, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களைப் பற்றிய குறிப்புகள் சிறைச்சாலைத் தகவல்களில் எதுவுமே கிடைக்கவில்லை என்று வேதனையோடு அவர் தெரிவித்தார். நான்கூட வேதனையோடு சொல்லிக்கொள்ளுவேன், 1965ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடைய தொகை பல

லட்சக்கணக்கிலே இருக்கும் என்பதை அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த பெருமதிப்பிற்குரிய திரு. பக்தவத்சலம் அவர்களேகூட அறிவித்திருக்கிறார்கள், ஆனால், அப்பொழுது இரண்டு மூன்று மாதங்கள் சிறைச்சாலையிலே இருந்தவர்களை யெல்லாம் கூட - சொல்லவே எனக்கு நாக் கூசுகிறது - அப்படிச் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்று எந்தப் பதிவும்கூடச் செய்யாமல் அவர்கள் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு 2, 3 மாத காலம் சிறையிலே வைக்கப்பட்டு பிறகு விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் இன்றைக்குக் கண்டுபிடித்து அவர்களின் மனுக்களை ஆராய்ந்து வருகிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கும் எல்லைப் போராட்ட வீரர்களுக்கு உள்ள அதே கதைதான் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இந்த மனுக்களை ஆராய்ந்து வழங்குவதில் சிரமம் இருக்கிறது. இருந்தாலும் அந்தச் சிரமங்களைப் பாராமல், இதில் சரியானவை என்று கருதப்படுகிற அந்த விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அதற்கு ஆவன செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வறட்சி நிவாரண நிதி பற்றி. . .

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, காங்கிரஸ் தியாகிகளுக்கு ஜெயிலிலேயிருந்து கொடுக்கும் அத்தாட்சி இல்லாவிட்டால் அவர்களிடமிருந்து தலைவர் யாராவது சர்ட்டிபிகேட் கொடுத்தால் போதும் என்று சொன்னதைப்போல இந்தி எதிர்ப்பு தியாகிகளுக்கும் அந்த சான்றிதழ் வாங்குவதில் கடினமாக இருக்கிறது. பலருக்குக் கிடைக்கவில்லை. எனவே, அவர்களுடன் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ சான்றிதழ்கள் கொடுத்தால் அவைகளை ஏற்றுக் கொள்ளும் வகையில் முதலமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, முன்பே நான் சொல்லியிருக்கிறேன். இதில் இலட்சக்கணக்கான மாணவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மாணவர் களின் ''கேரியர்'' ஸ்பாயிலாகி இருக்கிறது. பலபேர் பட்டம்கூட வாங்க முடியவில்லை. அவர்கள் ஒவ்வொருவரையும் தேடிக் கண்டுபிடிப்பதுகூடச் சிரமம். அப்படிப்பட்டவர்கள் அணுகும் பொழுது மானியம் கொடுக்காவிட்டாலும் அவர்களுக்கு

அரசாங்க உத்தியோகம் கொடுப்பதிலேயாவது சலுகை காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டம் பல கட்டங்களில் நடந்திருக்கிறது. 1952-ல் கூட இந்த இரயில்வே ஸ்டேஷன்களிலே உள்ள எழுத்துக்களை அழித்து இரண்டு மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள். இராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில்கூட பலபேர் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்ளப்படுமா? அது சம்பந்தமாக என்ன கூறுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, 1938 ஆம் ஆண்டிலே, இராஜாஜி அவர்கள் கட்டாய இந்தியை புகுத்திய காலத்திலேயிருந்து கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டதைப் போலவும், நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் கேட்டதைப் போலவும், இலட்சக்கணக்கான மாணவர்கள் பாழ்படுத்தப்பட்டார்கள், பாழ்பட்டார்கள், பலர் சிறைச்சாலையிலே இருந்ததற்கான அத்தாட்சிகள் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல முன்னாள் அமைச்சர்கள் அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அல்லது குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் நற்சான்று வழங்கினால் வழங்கப்படுமா என்று கேட்கப்பட்டது. அப்படி வழங்கப்படும் நற்சான்றுகளையும் மீண்டும் ஒரு பரிசீலனை செய்துதான் நாமும் அவைகளை ஏற்றுக் கொள்கிறோமே அல்லாமல் எல்லா நற்சான்றுகளையும் ஏற்றுக் கொள்வது என்றால், பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் பாடு ரொம்ப ஆபத்தாகிவிடும். அமைச்சர்கள் அல்லது கட்சியின் தலைவர்கள் இவர்களெல்லாம் மிகுந்த பிரச்சினைக்கு ஆளாகி விடுவார்கள். அப்படியே வழங்கினாலும்கூட அவைகளையும் பரிசீலித்துத்தான் அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டி யிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளைப்பற்றி ஏறத்தாழ 20 கோடி ரூபாய் அதற்காக இந்த ஆண்டு திட்டமில்லாத செலவாக வறட்சிப் பணிகளுக்கு மட்டும் செலவிடுவது என்று ஒதுக்கப்பட்டிருப் பதால் அதுபற்றிப் பல கருத்துக்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இதிலே நண்பர் திரு. ஆலடி அருணா அவர்கள் பேசும் பொழுது தேசிய நிதி என்று ஏற்படுத்தினால், அது இயற்கையின் சீற்றத்தால் இந்தியாவிலே எங்கே கஷ்டம் ஏற்பட்டாலும் அந்த தேசிய நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளலாம் என்ற வகையிலே கூறப்பட்ட மத்திய அரசின் யோசனையை ஆந்திரா, அசாம், குஜராத், ஹரியானா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, மேகாலயா, நாகலாந்து, ஒரிசா, தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் எதிர்த்ததைக் குறிப்பிட்டார்கள். இவ்வளவு மாநிலங்களும் எதிர்த்ததற்குக் காரணம் என்னவென்றால், ஏதோ நமக்கு தேசிய உணர்வு இல்லை என்று வேண்டுமானால் யாராவது தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தவறான பிரச்சாரம் செய்பவர்கள் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் இவ்வளவு மாநிலங்களும் சேர்ந்து எதிர்த்ததற்குக் காரணம், ஒவ்வொரு மாநிலமும் எந்த அடிப்படையில் இதற்கு நிதியைச் செலுத்த வேண்டுமென்பதிலும் அதை மத்திய அரசு தரும் மானியங்களில் சரிக்கட்டுவதா அல்லது மாநில அரசுகள் தனியாக இதற்காக நிதி செலுத்துவதா என்பதிலும் முடிவு செய்வது கடினமாகிவிடும் என்பதால்தான் நம்முடைய மாநிலம் கருத்து தெரிவித்தது. இதே வகையிலேதான் மற்ற மாநிலங்களும் கருத்தை அறிவித்தனவே தவிர ஏதோ தேசிய நிதி, துயர் தணிப்புக்காக ஒதுக்கப்படுவதை தேவை இல்லை என்ற அளவில் நாம் கூறவில்லை. இப்படிப் பட்ட சங்கடங்கள் ஏற்படும் என்றுதான் எல்லா மாநிலங்களும் கட்டுப்பாடாக அதனால் வரும் சங்கடங்களைக் கூறி தேவையில்லை என்று கூறினார்கள்.

ஆறாவது நிதி ஆணைக் குழுவின் வறட்சி நிதி பற்றிய கொள்கைக்கு ஏற்கெனவே இந்த அரசு ஒத்துக்கொண்டதாகக் கூறினார்கள்.

ஆறாவது நிதி ஆணைக் குழு இவைகளையெல்லாம் மாநில அரசுகளைக் கலந்து முடிவு எடுப்பதில்லை. தாங்கள் எடுத்த கருத்துக்களை அறிவிக்கிறார்கள். அந்தக் கருத்துக் களுக்கு மாறான கருத்துக்களை நாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வருகிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? வறட்சி நிதி கொடுத்தால் அதைத் திட்டத் தொகையில் கழித்துக் கொள்ள வேண்டுமென்பது ஆறாவது நிதிக் குழுவின் யோசனை ஆகும். அது இயலாதது. ஒரு வகையில் கொடுத்துவிட்டு ஒரு வகையில் அதைக் கழித்துக் கொள்வதால் திட்டங்கள் தேக்கப் பட்டுவிடும். திட்டங்களைச் செயல்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகும். ஆகவே, வறட்சி நிவாரண நிதியை அப்படிக் கழித்துக் கொள்ளக்கூடாது என்று நம்முடைய அரசு சார்பாக வாதிட்டு வருகிறது.

ஏதோ நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டியதை இழந்து விடுவதா என்றெல்லாம் சொன்னார்கள் - ஆலடி அருணா அவர்கள் கொஞ்சம் வேகமாகக் கேட்டார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிற நேரத்திலேகூட நல்ல வேளையாக சுப்பிரமணியத்தின் போக்கைக் கண்டித்துவிட்டு, இருந்தாலும் நம்முடைய அரசு மத்திய சர்க்காரிடத்திலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எடுத்துச்சொன்னார்கள். அவர்கள் சுப்பிரமணியத்தின் அந்தப் பேச்சு கண்டிக்கத்தக்கது என்று கூறியபோது அந்த உள்ள உணர்வு, அவருக்கு இருக்கிற மனசாட்சியை நான் அறிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1969-70 முதல் 1972-73 வரை இயற்கையின் சீற்றங்களால் ஏற்பட்ட சங்கடங்களைத் தீர்க்க மத்திய அரசு எந்த வகையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் உதவி இருக்கிறது என்று எண்ணிப்பார்க்கின்ற நேரத்தில் ஒரு முறை திரு. அருணாவே இந்த மன்றத்தில் பேசியதாக எனக்கு நினைவு. 1969-ல் இருந்து 1972-73 வரை கொடுக்கப்பட்ட உதவித் தொகை -

மராட்டியத்திற்கு மாத்திரம் 1969-73 வரை 108.43 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள் துயர் தணிப்புக்காக.

ராஜஸ்தானுக்கு 91.01 கோடி ரூபாய்;

ஆந்திரத்திற்கு 82.43 கோடி ரூபாய்;

மேற்கு வங்கத்திற்கு 52.84 கோடி ரூபாய்;

குஜராத்திற்கு 43.64 கோடி ரூபாய்;

பீகாருக்கு 37.50 கோடி ரூபாய்;

தமிழ் நாட்டிற்கு 17.76 கோடி ரூபாய் 1969-73 வரை வழங்கியிருக்கிறார்கள்.

அங்கே எல்லாம் அதிகமாக வழங்கினார்கள், இங்கே குறைவாக வழங்கினார்கள் என்ற சர்ச்சைக்குக்கூட இடம் அளிக்காமல் - ஆனால் வழங்கப்படுகிற தொகையை நீங்கள் திட்டத்தில் கழித்துக்கொள்கிறீர்களே, அது சரியல்ல என்பதுதான் நம்முடைய அரசின் வாதம். இங்கிருக்கும் மற்றக் கட்சிக்காரர்கள் வாதமும் கூட அந்த வகையில்தான் அமைந்திருக்கிறது.

மற்ற மாநில அரசுகள் ஒரே கட்சியின் கீழ் உள்ள அரசுகளாக இருப்பதால் அவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தங்கள் கருத்துக்களை நிதிக் குழுவிடத்திலும், திட்டக் குழுவிடத்திலும் நம்மைப் போல வெளிப்படையாக அறிவிக்கா விட்டாலும், அவர்களுக்கு இருக்கும் சங்கடங்களை மற்ற மாநில முதலமைச்சர்களுடன் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

ஏதோ சுப்பிரமணியம் அவர்கள் இங்கு வந்து பேசிய பிறகு அவர் நிதியமைச்சராக அங்கு இருக்கும் வரை பணம் தேவையில்லை, வாங்க மாட்டோம் என்று நாம் அறிவித்துவிட்டு அதற்குப் பிறகு இன்னொரு நிபந்தனை விதித்தேன். நான் பின்வாங்கிவிட்டேன் என்றெல்லாம் கருத்துப்பட இங்கே பேசப்பட்டது. சுப்பிரமணியம் அவர்கள் கணக்குப் பார்த்துத்தான் தரப்படும் என்று தியாகராய நகர் கூட்டத்தில் அறிவித்தார். அதற்குப் பிறகு நாம் வறட்சி நிவாரண நிதி திரட்ட ஆரம்பித்ததும் அவரும், அவரைச் சார்ந்திருக்கும் கட்சியினர், அவர்களுடைய தோழமைக் கட்சியினர் எல்லாம் வறட்சி

நிவாரண நிதி தரமுடியாது, தருவதைத் தடுப்போம் என்ற அளவில் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவரே அவருடைய ஒரு மாத ஊதியத்தை தமிழக அரசு திரட்டுகிற வறட்சி நிதிக்கு தந்தார். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டேன். அதற்குப் பிறகு அவரே தமிழ் நாட்டில் உள்ள பல பகுதிகளுக்குச் சென்று வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். பணிகள் செம்மையாக நடைபெறுகின்றன என்ற பாராட்டுதலை யும் அறிவித்துவிட்டு டில்லிப் பட்டணத்திற்குத் திரும்பச் சென்றார்.

ஆலடி அருணா குறிப்பிட்டதுபோல் இன்னும் அடுத்த ஒதுக்கீட்டுக்கான மதிப்பீட்டைத் தமிழக அரசு அனுப்பி வைக்கவில்லை என்று சுப்பிரமணியம் குறிப்பிட்டதாகக் கூறினார். உண்மைதான், அனுப்பி வைக்கவில்லை.

கவர்னர்கள் மாநாட்டில்கூட கவர்னர் அவர்கள் நமது கருத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள். நாம் எடுத்திருக்கும் நிலை வறட்சிக்காகத் தரப்படுகிற பணம் திட்டத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படக் கூடாது என்பதாகும். இது ஏதோ சுப்பிரமணியம் பிரச்சினைக்குப் பிறகு எடுத்த முடிவு என்று யாரும் கருதத் தேவையில்லை.

1975-76-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை இந்த மன்றத்தில் மார்ச் திங்கள் முதல் நாள் இந்த அவையில் படிக்கப்பட்டபோதே 7ஆம் பக்கத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அதில்,

‘‘.....துயர் தணிப்புப் பணிகளுக்காக மத்திய அரசிடம் நாம் கோரும் உதவி, கூடுதல் நிதி வசதியாகவே அமைய வேண்டும். மத்திய அரசிடம் நாம் கேட்கும் தொகை, வரும் ஆண்டுகளில் மத்திய அரசு தரும் இயல்பான திட்ட நிதி உதவியை முன்னதாகவே தருவது என்று அமைந்து, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டு விட்டால், நமக்குப் பயன் ஏதும் இராது. வெறும் கணக்கு வழக்காக ஏட்டளவில் இல்லாமல், உண்மையான நிதி உதவி, மத்திய அரசிடமிருந்து நமக்கு கிட்ட வேண்டுமென்பதே நமது கருத்து’’ என்று சொல்லியிருக்கிறேன்.

இந்தக் கருத்தைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லி வருகிறோம். இப்போதும் சொல்கிறோம். கவர்னர் பெருமான் டில்லிக்குச் சென்றபோது விவாதித்த நேரத்தில் ஆளுநர் அவர்களிடத்தில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதைக் கழித்துக் கொள்வது என்றால் ஐந்தாவது திட்ட காலத்தில் இதைக் கழித்துக்கொள்ள வேண்டாம். ஆறாவது திட்டக் காலத்தில் வேண்டுமானால் கழித்துக்கொள்வது பற்றி பிறகு முடிவு எடுக்கலாம் என்று கூறினேன். அந்தக் கருத்தை வலியுறுத்த வேண்டும் என்று என்னுடைய கருத்தை ஆளுநர் அவர்களிடத்தில் எடுத்துச்சொன்னேன். அவர்கள் அங்கு அதைப் பிரதிபலித்திருப்பதாகக்கூட பத்திரிகையில் கண்டிருக் கிறோம்.

ஏனென்றால், இது 1975-ம் ஆண்டு, 1976-ம் ஆண்டு நாங்களே தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சர்க்காருக்கு வரலாம், அல்லது காங்கிரஸ் கட்சியே தேர்ந்தெடுக்கப்பட்டு சர்க்காருக்கு வரலாம் அல்லது இப்போதே யார் யார் எந்தெந்த அமைச்சர்கள் என்று அறுதியிட்டுக்கொண்டு மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற வேறு சில கட்சிகளும் இங்கே அமைச்சர வைக்கு - இந்த அரசுக்கு வரலாம். அப்படி வருகிற நேரத்தில் நாங்கள் அந்தப் புதிய அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு தொல்லையை ஏற்படுத்திவிட்டுப்போக எண்ணவில்லை, நினைக்கவில்லை.

ஏனென்றால், இப்போது, 20 கோடி, 25 கோடி ரூபாய் தந்துவிட்டு அடுத்த ஆண்டு இந்த அரசுக்கு ஒதுக்கப்படுகிற திட்டத் தொகையில் மத்திய அரசு உதவித் தொகையில் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் தருவதிலே ஐந்நூறு கோடி ரூபாயை அடுத்த ஆண்டே கழித்துக் கொள்வது என்றால் அடுத்த ஆண்டு - 1976-77-ம் ஆண்டுத் திட்டம் மிக மிகச் சங்கடத்திற்கு ஆளாகும். அப்போது அமைகிற புதிய சர்க்கார் அந்த வேதனையைச் சந்திக்க வேண்டிய துன்பகரமான ஒரு சூழ்நிலைக்கு ஆளாகும். இவைகளை எல்லாம் மனதில் வைத்துத்தான் நாம் சொல்லுகிறோம். இதற்குப் பிறகாவது எட்மண்ட் போன்றவர்கள், நியாயமாகத்தான்

வாதிடுகிறார்கள் இப்போதுள்ள அரசினர் என்று கருதுவார்கள் என்று எண்ணுகிறேன்.

வறட்சி நிவாரணத்திற்காக என்ற தலைப்பில் கொடுத்துவிட்டு பிறகு திட்டத் தொகையில் கழித்துக்கொண்டால் விளம்பரத்திற்கு தெரியும் மத்திய சர்க்கார் வறட்சிக்காக இத்தனை கோடி ரூபாய் தமிழகத்திற்குத் தந்தது என்பது. ஆனால் உண்மையான நிலை என்ன? உண்மை நிலை திட்டங்களில் அந்தந்த தொகை கழித்துக்கொள்ளப்பட்டு அரசு சங்கடத்திற்கு ஆளாக நேரிடும். ஆகவேதான் நான் விதித்திருக்கும் நிபந்தனை கூட அல்ல இன்றைக்கு வைத்திருக்கும் கோரிக்கை இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கழித்துக்கொள்ளாமல் பிறகு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கழித்துக் கொள்வதைப் பற்றி யோசிக்கலாம் என்ற வகையில் கருத்துகள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது - டில்லி சர்க்காருக்கு. மற்ற மாநில அரசுகளும் இதே கருத்தைக் கொண்டிருக்கும் என்றாலும் அவர்கள் வெளிப்படையாக அறிவிப்பார்களா இல்லையா என்பது வேறு விஷயம். இந்தியத் திருநாட்டில் தமிழக மாநிலத்தில் இருக்கும் இந்த அரசு மற்ற மாநிலங்கள் சார்பாக வாதிடுவதை மற்ற மாநில அரசுகள் நிச்சயமாக மனமார வெளியே சொல்ல அச்சம் இருந்தாலும்கூட பாராட்டுவார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு வறட்சி நிதிக்காக மத்திய அரசு கொடுத்த தொகை உள்ளபடியே பல மடங்கு அதிகமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் இந்த முறையின் மூலம் திட்டத் தொகையில் சேர்ப்பது மூலமே பாரபட்சம் இல்லாமல் பின்னால் திட்டத்திற்குப் போராடி பஞ்ச நிவாரணத்திற்கும் சேர்த்துக் கேட்கலாம் அல்லவா? மகாராஷ்டிராவுக்கு அவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள், பஞ்ச நிவாரணம் என்ற பெயரில் சலுகையாகக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொன்ன அந்தக் கணக்கு விவரங்கள் எல்லாம் ஆறாவது நிதிக் குழுவுக்கு

முந்தியவை. இப்போது சொல்லப்பட்ட விவரங்கள் ஆறாவது நிதிக் குழுவால் வந்திருக்கிற விளைவுகள்.

திரு. ஆலடி அருணா : மத்திய சர்க்கார் திட்ட ஒதுக்கீடு பணத்தில் இருந்து பிடித்துக்கொள்ள வேண்டுமென்று வந்ததற்குக் காரணமே மத்திய சர்க்கார் பிற மாநிலங்களுக்கு அரசியல் அடிப்படையில் அதிகமான அளவுக்கு செலவழிக்கும் அளவுக்கு நடந்துகொண்ட காரணத்தால்தான். முறையாக, கட்டுப்பாடாக கொடுக்கவேண்டுமென்ற முறையில்தான் இப்படி ஒரு முறையைக் கொண்டுவரவேண்டுமென்று நிதி ஆணைக் குழு கொண்டுவந்திருக்கிறது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பரவாயில்லை, நண்பர் அருணா அவர்கள் மத்திய சர்க்கார் இந்த நிதியை எல்லாம் அரசியல் அடிப்படையில்தான் வழங்குகிறது என்று ஆறாவது நிதிக்குழு சுட்டிக்காட்டியிருப்பதை எடுத்துக் காட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் அரசியல் அடிப்படையில்தான் இதையெல்லாம் செய்கிறது. அரசியல் அடிப்படையில் திட்டத் தொகையில் கழித்துக் கொள்வதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதைக் கேட்டுச் செய்யலாம்.

திரு. ஆலடி அருணா : கடந்த காலத்தில் அப்படி நடந்தது மத்திய சர்க்கார். மற்ற மாநிலங்கள் அதைத் தவிர்க்க இந்த முறை ஓரளவு நல்ல முறை கூட. இப்போது அவர்கள் 30 சதவிகிதம் மானியமாகத் தருகிறார்கள், அதனால் அதிகப் பணம் கிடைக்குமே, அதை ஏன் இழக்க வேண்டும் என்றுதான் நண்பர் சீனிவாசன் கேட்கிறார்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : இப்போது 20 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு அடுத்த ஆண்டுத் திட்டத்திலே 5 கோடி ரூபாய் கழித்துக் கொள்ளலாம் என்று வந்தால் நமக்கு அடுத்த ஆண்டுத் திட்டத்திற்கு சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் 40 கோடி என்று கணக்கிட்டு அதிலே 5 கோடி கழித்து 35 கோடி தான் சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் கிடைக்கும்.

பிறகு நாம் ரிசோர்ஸஸ்-ஐ பெருக்கவேண்டியிருக்கும். இப்படிப்பட்ட சங்கடங்கள் பொருளாதார ரீதியில் எல்லா மாநிலங்களாலும் இன்றைக்கு எடுத்துவைக்கப்பட்டிருக்கிற சங்கடங்களாகும். ஏதோ மத்திய அரசுக்காக வாதாடுவதற்காக நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக்கொடுக்க முனைவது நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மத்திய அரசு செய்தது தவறாக இருந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்து கண்டிக்கிறோம். மத்திய அரசு வறட்சிப் பணிகள் என்ற பெயரால் மற்ற மாநிலங்களுக்குக் கூடுதல் தொகை ஒரு காலத்தில் அந்த தொகையை எதிர்காலத்திலும் தரக்கூடும். அதைத் தடுப்பதற்கு இது ஒரு செக் பாயின்ட்டாக இருக்கலாம் அல்லவா? அதை இப்போது பயன்படுத்திக் கொள்ளலாம். பின்னால் எப்போதாவது கூடுதல் பணம் வேண்டுமென்றால் போய்க் கேட்கலாமே.

திருமதி த.ந. அனந்தநாயகி : மற்ற மாநிலங்கள் பஞ்சப் பிரதேசங்கள் - எங்கெங்கு பஞ்சம் வருகிறது என்று அவைகளை பஞ்சப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியிருக்கி றார்கள். நீங்கள் அப்படி பிரகடனப்படுத்தினோம் என்று சொல்கிறீர்களா? சில சில காரியங்களைத்தான் செய்திருக் கிறோம். மகாராஷ்டிராவில் அவர்கள் அவ்வளவு பணம் வாங்கியிருக் கிறார்கள் என்றால் -

You do not declare the entire district as a famine area. The entire Maharashtra has been declared as a famine stricken State.

அவர்கள் அப்படிப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள், நீங்கள் அப்படி பிரகடனப்படுத்தவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே நோட்டிபை செய்த விவரங்களைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் இருப்பது சரியல்ல. எங்கெங்கு வறட்சி இருக்கிறதோ அந்தப் பகுதிகள் அனைத்தும்

வறட்சிப் பகுதிகள் என்று நோட்டிபை செய்யப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) 130 அல்ல 11,000 க்கு மேற்பட்ட கிராமங்கள்.

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : 76,000 கிராமங்களில் 51,000க்கு மேற்பட்ட கிராமங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

Thirumathi T. N. Anandanayaki: The Hon. Chief Minister says 11,000 villages. The Revenue Minister says 51,000 villages. . . .

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் : தமிழ்நாடு பூராவும், மொத்தமாக உள்ள 76,000 கிராமங்களில் 51,000 கிராமங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆலடி அருணா : இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

"The expenditure which stood at Rs. 151.87 crores in 1969-70 rose to an all Time peak of Rs. 318 crores in 1972-73"

இந்த அளவிற்கு வறட்சிப் பணிகள் என்ற பெயரால் பிற மாநிலங்கள் வாங்கியிருக்கின்றன. நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவில்லை. ஆகவே, மத்திய அரசு செய்த தவறை அல்லது தவறான வழியைக் கண்டிக்கும் நேரத்தில் இப்போது கிடைப்பதை வாங்கிக் கொண்டு பின்னால் வேண்டுமென்றால் பணத்திற்கு எழுதலாம். இப்போது மானியம் 30% கிடைப்பதை நாம் பெற்றுக்கொள்ளாமல் இருப்பது சர்க்கார் தவறு.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொன்னது ரெவின்யூ வில்லேஜ்களைப் பற்றிச் சொன்னேன். அதில் ஒன்றும் குழப்பம் இல்லை. அவர்கள் சொல்கிறார்கள், ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது? ஏன் வாங்கிக்கொள்ளக்கூடாது என்றால், மறுபடியும் அரசியல் காரணத்திற்குத்தான் அவர்கள் இன்றைக்குப் பயன்படுத்துகிறார்கள். வறட்சி நிவாரணத்திற்கு இவ்வளவு பணம் தந்தோம் என்று அறிவித்துவிட்டு திட்டத்

தொகையில் ரகசியமாகக் கழித்துக்கொள்கிறார்கள். அதற்காகத் தான் வேண்டாம் என்று சொல்கிறோம். திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளக்கூடாது, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சி நிவாரணச் செலவுகள் நடைபெற வேண்டும் என்பது நம் கொள்கை. அது சுப்பிரமணியம் விவகாரத்திற்குப் பிறகு வகுத்த கொள்கை அல்ல. மார்ச் 1-ம் தேதி நம் வரவுச் செலவுத் திட்டத்தில் இந்தக் கொள்கையை வகுத்திருக்கிறோம். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இன்றைக்கும் நின்று கொண்டிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டுமானால் வேறு கொள்கை இருக்கலாம். அவர்களுக்கு, எப்படியும் பணம் தந்தால் போதும், அந்தப் பணத்தை வாங்கிச் செலவழிக்கலாம், திட்டம் தொலைந்தாலும் பரவாயில்லை என்று எண்ணுவார்களேயானால் அதை நாம் ஆவலோடு எடுத்துக்கொள்ள முடியாது.

நமக்கிருக்கிற ஆவல் எல்லாம் திட்டப்பணிகள் நடைபெற வேண்டும். இன்றைக்கு திட்டத்தொகையில் சேராத அளவிற்கு இயற்கையின் சீற்றத்தால் திடீரென்று வந்துவிட்ட இந்த வறட்சி நிவாரணப்பணிகள் நிறைவேற வேண்டும். அதற்குத் தனியாக பணம் வேண்டும் என்பதுதான் நம் கருத்தாகும். அந்தக் கருத்தைத்தான் இன்றைக்கு மத்திய அரசிடம் நாம் வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசு அந்தக் கருத்தை ஒருவேளை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்று கருதுகிறேன்.

அதற்கிடையில் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாத அளவிற்கு தடங்கலாக உறுப்பினர்களின் வாதங்கள் இருத்த லாகாது என்று இங்கு எடுத்துக் கூறி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக்கொண்டு, சில சில தனிப்பட்ட குறைபாடுகள் இவைகளைப் பற்றியெல்லாம் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டன, அவைகளை எல்லாம் அதிகாரிகள் கவனித்து ஒழுங்கு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று கூறிக்கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

துணை மானியக் கோரிக்கை

உரை : 39 **நாள் : 04.11.1975**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : துணை மானியக் கோரிக்கையிலே சுமார் 45 கோடி ரூபாய்க்கு இந்த மன்றத்தின் ஒப்புதல் கேட்டு, அதிலே 10 கோடி ரூபாய் எதிர்பாராதச் செலவுகளுக்காக என்ற வகையில் ஒதுக்கப் படுவது போக 35.55 கோடிக்கான விவரங்கள் இந்த மதிப்பீட்டு அறிக்கையிலே விரிவாக எடுத்துவைக்கப்பட்டு, அதற்குரிய மானிய ஒதுக்கீடுகளிலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த 35 கோடிக்கான செலவுகளைப் பார்த்தால் இதிலே மிக முக்கியமாக வறட்சியின் காரணமாய் பஞ்சாயத்துக்களில் இருந்து இவ்வாண்டு வசூலிக்கப்படக்கூடிய லோகல் செஸ், லோகல் சர்சார்ஜ் ஆகியவைகள் வறட்சியின் காரணமாகத் தள்ளுபடி செய்தது. பஞ்சாயத்து நிதியைப் பெரிதும் பாதித்தது என்பதை அடிப்படையாகக் கொண்டு அந்தப் பஞ்சாயத்துக் களுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

வறட்சிக் காலத்திலே ஏற்கெனவே திட்டத்திலே ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமான செலவுக்கு 2 கோடியே 13 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

வறட்சியை ஒட்டி, ஏழை விவசாயிகளுக்கு ஏற்கெனவே தரப்பட்டு, இடையிலே தரப்படாமல் ரத்து செய்யப்பட்ட ஒரு திட்டம் தக்காவிக் கடன் வழங்குகிற திட்டம். அதிலும் வறட்சியை ஒட்டி ஏழை விவசாயிகளுக்காக 3 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறோம்.

அரிசன வீட்டு வசதி வாரியத்தில் வேலைத் திட்டங்களைத் துரிதப்படுத்தி டிசம்பர் மாத இறுதிக்குள் 30,000 வீடுகள் கட்டி முடிக்க மொத்தமாக 30,000 வீடுகள் கட்ட 13

கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்றாலும் மேலும் ஆகிவிடும் என்று ஒதுக்கீடு 8.25 கோடி ரூபாய் அரிசன வீட்டு வசதி வாரியத்திற்காக ஒதுக்கியிருக்கிறோம்.

தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணிகளை வாங்கி வழங்க துணை மானியத்தில் 1.5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். பத்து சதவிகிதம் ரிபேட்டை 20 சதவிகிதமாக உயர்த்த கூடுதலான நிதி ஒதுக்கீடு ஒரு கோடி ரூபாய் வரையில் தரலாம் என்று திட்டமிட்டோம் ; எழுபது லட்சம் ரூபாய் வரை அதற்கு நாம் ஒதுக்கியிருக்கிறோம்.

கூட்டுறவு நூற்பாலைகளில் பங்குத் தொகையை அதிகப்படுத்திய செலவுக்கு 87 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1975-76-ம் நிதியாண்டுத் திட்டத்தில் குடிசை மாற்று வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட 1.70 கோடி ரூபாய்க்கு மேல் துணை மானியத்தில் அதிக ஒதுக்கீடு 1.75 கோடி ரூபாய்.

ஏற்கெனவே, குடிசை மாற்று வாரியத்திற்குக் கொடுக்கப்பட்ட கடனை மானியமாக மாற்றிய வகையில் இந்தத் துணை மதிப்பீட்டில் மட்டும் 62 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் போக்குவரத்து நிதிக்கழகத்தின் முதலீட்டுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சமூக நலத் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு 1.23 கோடி ரூபாய்.

தஞ்சையில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவ 15 லட்சம் ரூபாய் நிதி.

கூட்டுறவுத் துறைக்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 22 லட்சம் ரூபாய்.

பூம்புகாரில் மீனவர்களுக்கு வீடு கட்ட நிதி 65 லட்சம் ரூபாய்.

மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்காக மேலும் நிதி ஒதுக்கீடு 80 லட்சம் ரூபாய்.

சென்னை நகர குடிதண்ணீர்த் திட்டத்திற்காக 126 லட்சம் ரூபாய்.

மதுரை மாநகராட்சிக்கு அரசு நிதி 12 லட்சம் ரூபாய்.

அகதிகள் மறுவாழ்வுக்கு 33 லட்சம் ரூபாய்.

இப்படி, மிக முக்கியமான பணிகளுக்காக, வறட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட ஏழை எளிய விவசாயிகளுக்காக, மக்கள் நலத் திட்டங்களுக்காக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகிற உறையுள் அமைத்துத் தருகிற பணி பல ஆண்டுக் காலமாக நினைத்துக்கூடப் பார்க்கப் படாமல் இருந்து, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதற்கான திட்டம் தீட்டப்பட்டு, வீட்டு வசதி வாரியம் அரிசனங்களுக்காகத் தனியாக அமைக்கப்பட்டு, அந்த நல்ல காரியத்திற்காக எல்லாம் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதிலே, நம்முடைய நண்பர் ஆலடி அருணா பேசுகிற நேரத்தில் ''நீங்கள் மத்திய நிதியமைச்சரிடத்தில், பணத்திற்கு கணக்குக் கேட்ட காரணத்தால் நிதி தேவையில்லை என்று கூறிவிட்டு, மறுபடியும் 'சாமியே சரணம் ஐயப்பா' என்று அவர்களிடம் சென்று மண்டியிட்டு பணம் கேட்கிறீர்களே நியாயமா?'' என்று கேட்டார்கள்.

இதே மன்றத்தில் அப்படி ஒரு அறிவிப்பை நான் வெளியிட்டபோது மன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசுகின்ற நேரத்தில் 'அறவே நாம் வறட்சி நிவாரண நிதி தேவையில்லை என்று கூறிவிடக்கூடாது; நம்முடைய மாநிலத்தின் தேவையை உத்தேசித்து முதலமைச்சர் தன்னுடைய கருத்தை மாற்றிக் கொண்டு வறட்சி நிவாரண நிதியை கேட்கவேண்டும்' என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். நான் அப்போதும் மத்திய அரசு தருகின்ற வறட்சி நிவாரணத் தொகையைத் திட்டத்

தொகைகளில் கழித்துக் கொள்ளக் கூடாது. அப்படித் திட்டத் தொகையில் கழித்துக் கொண்டால் வறட்சி நிவாரணப் பணி என்ற பெயரால் திட்டங்கள் நிறைவேற முடியாத ஒரு இக்கட்டான நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டு விடும். ஆகவே, திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளாமல் கொடுத்தால் நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்'', என்று சொன்னேன். அதைத்தான் இன்றளவும் வலியுறுத்தி வருகிறேன். அண்மையில் டெல்லியில் பிரதமரைச் சந்தித்த போதும் இதைத்தான் சொன்னேன். சென்னைக்கு வந்த போதும் பிரதமரிடத்தில் இதைத்தான் சொன்னேன். நிதியமைச்சரைச் சந்தித்த போதும் இதைத்தான் சொன்னேன். திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளாமல் நீங்கள் வறட்சி நிவாரணப் பணிகளுக்குத் தொகை தரவேண்டுமென்று கேட்டேன். ஆனால் அண்மையில் அவர்கள் அப்படி எதுவும் வறட்சி நிவாரணத்திற்குத் தர இயலாது என்று கூறிவிட்டார்கள்.

கொடுத்த தொகை 7 கோடி ரூபாய். இந்த 7 கோடி ரூபாயிலே, அடிக்கடி நான் சுட்டிக்காட்டியது போல் 70 சதவிகிதம் கடன்; 30 சதவிகிதம்தான் மானியம் ஆகும். நமக்கு வறட்சிப் பணிகளுக்காக ஆகியிருக்கும் மொத்தச் செலவு 58.8 கோடி ரூபாய் ஆகும். இதிலே 1974-75ல் திட்டத்திற்கு அப்பாற்பட்ட சிறப்புச் செலவாக 8.8 கோடி ரூபாய் ; திட்டச் செலவாக 10 கோடி ரூபாய். ஆக 18.8 கோடி ரூபாய் 1974-75-ல் செலவழிக்கப்பட்டது.

1975-76-ல் பணிகளுக்காக 15.8 கோடி ரூபாய்; தக்காவிக் கடனுக்காக 3 கோடி ரூபாய் ; டீசல் சப்சிடி-இயந்திரங்களுக்காக மானியமாக உதவி 1.2 கோடி ரூபாய். ஆக, 28.8 கோடி ரூபாய் 1974 முதல் 1975-76 வரை திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக ஆகியிருக்கிறது. திட்டச் செலவாக 1975-76-ல் 20 கோடி ரூபாய். ஆக மொத்தம் 30 கோடி. இரண்டையும் கூட்டினால் 58.8 கோடி ரூபாய் ஆகும்.

இந்த 58.8 கோடி ரூபாய் அன்னியில்தான் வறட்சி காரணமாக பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு, அவர்கள் சில வரிகளை வசூலிக்க வேண்டாம்; செஸ்களை வசூலிக்க

வேண்டாம் என்று நாம் கூறியதற்கேற்ப அவர்களுடைய இழப்பை ஈடுகட்ட இவைகளுக்கு மேலாக 5 கோடி ரூபாய் பஞ்சாயத்துக்களுக்காக, பஞ்சாயத்து யூனியன்களுக்காக இந்த அரசு ஒதுக்கியிருப்பதை மறந்துவிடக் கூடாது.

நில வரி, வஜா, கடன் ஒத்தி வைப்பு ஆகிய வகையில் 10 கோடி ரூபாய் மேலும் இந்த அரசுக்குச் செலவாகியிருக்கிறது. நகரங்களில் குடிதண்ணீர் வசதித் திட்டங்களை ஏற்பாடு செய்து தர சுமார் 3 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. நீங்கள் திட்டச் செலவுகளைத்தானே செய்தீர்கள் 30 கோடி ரூபாயில் என்ற வாதத்தை நண்பர் அருணா அவர்கள் இங்கே எழுப்பினார்கள். திட்டச் செலவு என்றாலும்கூட திட்டமிடப்பட்ட இனங்களில் இருந்து திசை திருப்பிவிடப்பட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அந்தச் செலவுகள் செய்யப் பட்டிருக்கின்றன. இது ஒரு கட்டம்.

அடுத்த கட்டம், திட்டச் செலவு என்றால் அதற்கென்று ஒரு காலவரையறை வகுத்து, இப்போது தொடங்கி இப்போது முடிக்க வேண்டுமென்று இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட காலவரையறை வைக்காமல் இந்த வறட்சிக் காலத்திலேயே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செலவழிக்கப்பட வேண்டுமென்று விரைவுபடுத்தி நாம் செலவு செய்திருக்கிறோம். இந்த முறையில்தான் திட்ட ஒதுக்கீட்டில், இருந்து 1974-75-ல் 10 கோடி ரூபாயும், 1975-76-ல் 20 கோடி ரூபாயும் நாம் வறட்சிப் பணிகளுக்காகச் செலவிட்டிருக்கிறோம்.

இந்தச் செலவினங்களை எல்லாம் நாம் சுட்டிக்காட்டித்தான் நம்முடைய நிதிநிலையை உணர்ந்து மத்திய அரசு உதவிட வேண்டுமென்று கேட்டோம். வறட்சிப் பணிகளுக்காக மாத்திரமல்ல. மதுவிலக்கின் காரணமாக இந்தியாவிலே பெரும் இழப்பிற்கு ஆளாகியிருக்கிற மாநிலங்கள் இரண்டு. ஒன்று குஜராத், மற்றொன்று நமது தமிழ்நாடு மாநிலம். இந்த மாநிலங்களுக்கு பிரதமர் அண்மையில் அறிவித்த 12 அம்சத் திட்டத்தோடு

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 025
894.8115
TAM
G00405

இன்னொரு அம்சத்தையும் சேர்த்து மதுவிலக்கை நடைமுறைப்படுத்துகிற மாநில அரசுகளுக்கு நஷ்டஈடு தரப்படும் என்று வகுப்பார்களேயானால் மற்ற மாநிலங்களையும் அது ஊக்கப்படுத்துவதாக அமையும் என்று நான் கேட்டுக்கொண்டேன்.

அதுபற்றி ஒரு அமைச்சரவைக் கூட்டம் டெல்லியில் நடைபெற இருக்கிறது என்று அறிந்தவுடன் டெலக்ஸ் மூலமாக பிரதமர் அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். தொடர்ந்து கடிதம் அனுப்பினேன். ஆனால் வந்திருக்கிற செய்தி மதுவிலக்கிற்காக நஷ்டஈடு எதுவும் அதை அமல்படுத்துகிற மாநிலங்களுக்குத் தருவதற்கில்லை என்ற அளவிலே செய்தி வந்திருக்கிறது நமக்கு. அது மிக மிக வருந்தத்தக்க செய்தியாகும். ஏறத்தாழ 58 அல்லது 59 கோடி ரூபாய் மதுவிலக்கு காரணமாக நாம் இழப்புக்கு ஆளானோம். குதிரைப் பந்தயத்தை ஒழித்ததன் மூலமாகவும் பரிசுச் சீட்டை நாம் அறவே நிறுத்தியதன் மூலமும் ஓர் ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு நாம் இழப்பிற்கு ஆளாகியிருக்கிறோம்.

ஆகவேதான், இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு, காந்தி அடிகளுடைய கொள்கைகளைப் பின்பற்றி நடத்துகிற இந்த அரசுக்கு உற்சாகம் அளிக்கிற வகையில் மத்திய அரசு நிதி உதவி தரவேண்டும் என்று நாம் கேட்டோம். இப்படிக் கேட்பது, அருணா அவர்களுடைய மொழிப்படி, 'சாமியே சரணம் ஐயப்பா' என்றிருக்கலாம். நினைத்ததுதான் நினைத்தார். தமிழ் நாட்டுக் கடவுளை நினைக்கக் கூடாதா? இப்போதெல்லாம் அருணா அவர்கள் மலையாளக் கடவுளைத்தான் நினைக்கிறார். திருத்தணியில் இருக்கிற முருகனைப் பற்றி நினைக்கக் கூடாதா?

திரு.கே.டி.கே. தங்கமணி : இந்த பரிசுச் சீட்டு ஒழிப்பதைப் பற்றிச் சொன்னார்கள். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் அந்த மாதிரி பரிசுச்சீட்டு ஒழிப்பைப் பற்றி எந்தவிதமான அறிவிப்பும் இல்லை. அப்படியிருக்கிறபோது இப்போது இடைக்காலத்தில் பரிசுச் சீட்டுக்களை ஒழித்தார்கள். அந்தமாதிரி பரிசுச்சீட்டு அப்படி அவர்களுக்கு என்ன

பாதகமான ஒரு விஷயம்? பரிசுச் சீட்டு மற்ற மாநிலங்களில் எல்லாம் நடந்து வருகிறது. அந்தப் பரிசுச் சீட்டால் ஏற்படும் அபாயம் என்ன? ஏற்கெனவே நமக்கு பரிசுச் சீட்டு சம்பந்தமாக இந்தப் பரிசுச் சீட்டில் இருந்து கிடைக்கக்கூடிய பணம் எப்படி எப்படியெல்லாம் செலவழிக்கப்படுகிறது என்று இந்த மன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

The decision was unilateral. We would like to know the basis of the decision regarding 'parisu seetu'

Dr. H.V.Hande : In addition to what the Hon. Member Thiru. K.T.K.Tangamani has said, let me stress one point. Yesterday I remember to have read in some paper, that as a result of the steps taken by this Government. The financial position of the State is not very sound. As a result of the steps taken to abolish the sale of raffle tickets, introduction of prohibition, etc., the Government is losing a lot of income. May I know whether the Government had thought of any alternative steps to make good the financial loss or there is basis for the fear expressed in the papers that the position, the financial position of the State is not sound. Will the Hon. Chief Minister take the House into confidence and give a proper clarification regarding this point.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பத்திரிகைகள் விரும்புவதைப் போல் அவ்வளவு மோசமான நிலையில் தமிழ் நாட்டின் நிதி நிலை இல்லை. ஆனால் நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. நிதிப்பற்றாக்குறை என்பதற்கும் பயங்கரமான நிதி நெருக்கடி என்பதற்கும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. நமது இந்த நிதிப் பற்றாக்குறையைச் சரிக்கட்டு வதற்கு நம்முடைய திட்டங்கள், வளர்ச்சித் திட்டங்கள் இவை எல்லாம் ஒழுங்குற நடைபெறுவதற்கு, தீவிரமாக நடைபெறு வதற்கு, இன்னும் சொல்லப்போனால் பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கிற இருபது அம்சத் திட்டத்தை மேலும் முனைப்பாக நாம் தமிழகத்தில் நிறைவேற்றுவதற்கு பணம் தேவை என்று கூறுகிறோம். அதற்கு வேறு எந்த ஆதாரங்களை

கையாளப் போகிறீர்கள் என்று நண்பர் ஹாண்டே அவர்கள் கேட்டார்கள். இப்போதைய இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட நிச்சயமாக வரி போடுகின்ற உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்தில் நண்பர் ஹாண்டே அவர்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் தேர்தலை எதிர்பார்க்கும் நேரத்தில் இப்படி ஏதாவது முதல் அமைச்சர் அவர்கள் சிக்கிக்கொள்ள மாட்டாரா என்று நினைத்து நண்பர் ஹாண்டே அவர்கள், ஏதாவது வரிகளைப் போடுவார்களா என்று மறைமுகமாகக் கேட்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி : நாளை அர்பன் லான்ட் டாக்ஸ் வரப்போகிறது. ஆளை கொல்லு கொல்லு என்று கொல்லப் போகிறீர்கள். வரி போடாதது மாதிரிச் சொல்கிறீர்கள். வரி போட நாளைக்கு பில் வரப்போகிறது.

டாக்டர் எச்.வி.ஹாண்டே : தலைவர் அவர்களே, இப்போதைய நிலைமையைச் சரிக்கட்ட வரி போடுவதாக உத்தேசம் இல்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிறகு என்ன செய்யப் போகிறார்களோ? வரி போட மாட்டேன் என்று சொன்னதற்காக, அந்த வார்த்தையை அவர்கள் காப்பாற்றிக் கொண்டால் அவர்களுக்கு தாங்க்ஸ்.

(திரு.எஸ்.வடிவேல் எழுந்தார்)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பதில் சொன்ன பிறகு நீங்கள் சொல்லுங்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள். ''நாளையதினம் அர்பன் லான்ட் டாக்ஸ் பில் வரப்போகிறது. ஆளைக் கொல்லு கொல்லு என்று கொல்லப்போகிறீர்கள்'' என்று சொன்னார்கள். இப்படி பணக்காரர்களுக்காக, முற்போக்குக் கட்சியைச் சார்ந்த அம்மையார் அவர்கள் இந்த அளவிற்கு அவர்கள் துன்பத்தையும் துயரத்தையும் தெரிவித்துக் கொண்டதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருமதி. த.ந. அனந்தநாயகி : நாளையதினம் நான் கூறுகிறேன், யார் பாதிக்கப்பட இருக்கிறார்கள் என்று.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், 30,000 வீடுகள் கட்டிக் கொடுக்க போவதாக, துணை மானிய அறிக்கையில் சொன்னார்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்தை நாம் ஒரு மணிக்குள் முடித்து விடவேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : சொல்லி முடித்துவிடுகிறேன். சீக்கிரமாகச் சொல்லிவிடுகிறேன். கடந்த ஐந்தாண்டுக் காலமாக- ஐந்து ஆண்டுகள் முடியப் போகின்றன- என் தொகுதியில் ஒரு வீடு கூட கட்டவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் முதல் பட்ஜெட்டுக்குப் பதில் அளிக்கும்போது சொன்னார்கள், திரு.வடிவேல், திட்டங்களை எழுதிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்களிடமும் கொடுத்தாகி விட்டது. ஹரிஜன நலத்துறைக்கும் எழுதிக் கொடுத்தாகி விட்டது. ஒரு வீடு கூட கட்டவில்லை. என் தொகுதி பாராமுகமாக இருக்கிறது. அதற்கு ஏதாவது பதில்....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கம்யூனிஸ்ட் கட்சி என்பதற்காக கட்டப்படாமல் இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு திரு. வடிவேல் அவர்கள் சென்று பார்ப்பார் களேயானால் கம்யூனிஸ்ட் விவசாயத் தொழிலாளர்கள் பலபேர்கள் குடியிருக்கிற வீடுகள் ஹரிஜன வீட்டுவசதி வாரியத்தினால் கட்டித் தரப்பட்ட வீடுகள். அவர்களது தொகுதியைப் பொறுத்தவரையில், முதல் கட்டமாகக் கட்டப்படும் 30,000 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டவுடன் அடுத்த கட்டத்தில்தான் அவர்களது தொகுதியை இணைத்துக் கொள்ள முடியும் என்பதை நான் திரு.வடிவேல் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி : பரிசுச் சீட்டுப் பற்றி கேட்டேனே?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பரிசுச்சீட்டுப் பற்றி ஏற்கெனவே நம் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருந்தபோதே அதை ஒழித்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். நாள் அதிகமானாலும்கூட டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன சில நல்ல நியாயங்களை உணர்ந்து மேலும், அதற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களும் கேட்டுக்கொண்டதன் காரணமாக- குஜராத்தில் இந்த மூன்று தீமைகள் இல்லை என்று சொன்னார்கள். அங்கே மது இல்லை, மது விலக்குத் திட்டம் இருக்கிறது. குதிரைப் பந்தயம் இல்லை. பரிசுச் சீட்டும் இல்லை. அதேபோல் அந்த மூன்று தீமைகளையும் இங்கே ஒழித்து விடவேண்டும் என்று இராஜாஜி நினைவாலயத்தைத் திறந்து வைக்க வந்த திரு.ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். நல்ல காரியங்களை யார் கேட்டுக் கொண்டாலும் உடனடியாக அதே மேடையில் ஏற்றுக்கொண்டு அறிவிப்பது இந்த அரசாங்கத்திற்கு வழக்கம் என்பதை மாண்புமிகு கே.டி.கே. தங்கமணி அவர்கள் உணருவார்கள். அந்த வகையில் தான் அதை உடனடியாக அறிவித்துவிட்டு இன்று செயல்படுத்துகிறோம்.

Dr.H.V.Hande: The Hon. Chief Minister said that he had paid heed to my advice. But I may point out to him that he had paid heed to my adivce too late in the day.

திரு.ஏ.சுப்பிரமணியம்: பாயின்ட் ஆப் ஆர்டர். முதல் அமைச்சர் அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரமா என்ன?

திரு.ஏ.சுப்பிரமணியம்: முதல் அமைச்சர் அவர்கள், டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருந்தபோது விடுத்த வேண்டுகோளை அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த பிறகு ஏற்றுக் கொள்கிறார்கள். அப்போது அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்ததை முதல் அமைச்சர் அவர்கள் வரவேற்கிறார்களா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நீங்கள் வரவேற்காமல் இருக்கலாம், நான் வரவேற்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சுதந்திராக் கட்சியில் இருந்தபோது அவர் விடுத்த வேண்டுகோளை இப்போது ஏன் நிறைவேற்றுகிறேன் என்றால் அவர் தலைவர் இராஜாஜிக்கு நினைவாலயம் திறக்கிற நேரத்தில் அதை திரு.ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஞாபகப்படுத்தினார். நம் ஹாண்டேயின் தலைவர், உண்மையான தலைவர் இராஜாஜிதான் இன்றைக்கும். அந்த இராஜாஜி அவர்களுடைய நினைவாலயம் திறந்து வைக்கப்படும் நேரத்தில் ஹாண்டே அவர்கள் சொன்னதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த உறுதிமொழியை அளித்து பரிசுச் சீட்டு அகற்றப்பட்டது.

அடுத்து நண்பர் ஜேம்ஸ் அவர்கள் நேசமணி பாலம் இன்னும் கட்டி முடிவடையவில்லை என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். அந்தப் பாலத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றபோதே யாருடைய வேண்டுகோளும் இல்லாமல் நம்முடைய பொன்னப்ப நாடார், ஜேம்ஸ், மற்றவர்களையும் வைத்துக்கொண்டு நான்தான் சொன்னேன். இந்தப் பாலத்திற்கு நேசமணியின் பெயர் வைக்கப்படும் என்று. அதற்கு நன்றி எல்லாம் கூட தெரிவித்துக்கொண்டார்கள். அந்த வேலை இன்னும் முடிவடையாமல் இருக்கக் காரணம் நாம் தந்த மதிப்பீட்டின்படி டென்டர் யாரும் கோரவில்லை. அதன் காரணமாக தாமதமாயிற்று. இப்போது அந்த வேலைக்கு மறுபடியும் டென்டர் விடவேண்டிய நிலை ஏற்பட்டு இப்போது வேலைகள் தொடங்குகிற தருவாயில் இருக்கின்றன என்பதை நண்பர் ஜேம்ஸ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு குறைபாட்டைப் பற்றியும் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக பலருக்கு அந்த ஓய்வூதியம் தரப்படவில்லை, மாதாந்திர மானியம் தரப்படவில்லை என்று சொன்னார்கள். எல்லைப் போராட்டத்தில் கலந்து கொண்ட 51 பேர்கள் இப்போது

ஓய்வூதியம் பெறுகிறார்கள். அரசாங்கப் பரிசீலனையில் உள்ள மனுக்களின் எண்ணிக்கை 56. அந்தப் பரிசீலனை முடிவுற்றதும் அவர்களுக்கும் வழங்கப்படும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்காக கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 28 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இரண்டு பேர்கள் மனுக்கள் அரசாங்கப் பரிசீலனையில் இருக்கின்றன. தியாகிகள் பென்ஷன் 37 பேர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கப்படுகிறது. இதிலே 6 பேர் இறந்து விட்டார்கள், இப்போது பென்ஷன் 31 பேர்தான் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மேலும், இறந்த இரண்டு தியாகிகளின் மனைவிகளுக்கு தியாகிகள் பென்ஷன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதன் விவரம் தேவையானால் மொத்தம் 1,376 பேர்களுக்கு இதுவரையில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்களுக்கு ஓய்வூதியம் தரப்பட்டு இருக்கிறது என்பதனையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள பெரிதும் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய நண்பர் அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜப்பார் அவர்கள் ஏதோ அவர்கள் தொகுதி கேட்பாரற்றுப் போய்விட்டது என்று எல்லாம் சொன்னார்கள். சொல்லிக்கொண்டே வந்தவர் நொய்யல் திட்டம் பற்றியும் அவரே சொல்லி, அதற்கு இந்த அரசு ஏற்கெனவே ஒப்புதல் வழங்கியிருப்பதையும் குறிப்பிட்டார். அவரே பேசும்போது சொன்னார், இதிலே இருக்கும் இடைஞ்சல் என்ன என்ன என்றும். கர்நாடக மாநிலத்தோடு காவேரி பற்றியப் பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கிற காரணத்தில் உள்ள இடர்ப்பாடுகளை அவரே விளக்கினார். நான் உறுதியாகச் சொல்கிறேன். இந்த இடர்ப்பாடுகள் நீங்கிய பிறகு நிச்சயமாக

நொய்யல் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை நான் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் முத்துசாமி அவர்கள் பேசும்போது பெரியகுளம் அருகில் கம்பம் பள்ளத்தாக்கில் வெங்கடாஜல புரம் கால்வாய் திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தினார்கள். இந்தக் கால்வாய்த் திட்டத்திற்கு பி.டி.ராஜன் அவர்கள் நீண்ட காலமாக கோரிக்கை எழுப்பி வந்தார்கள். இப்போது தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தொகுதி மக்களும் அந்தக் கோரிக்கையை தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள். அவர்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை வெற்றி பெற்றது என்பதற்கு அடையாளமாக ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் புதிய பாசனத்திற்கு வரக்கூடிய அந்தத் திட்டத்திற்கு 35 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு அதைத் தொடங்கி வைப்பதற்கு இந்த அரசு இரண்டு நாளைக்கு முன்பு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன், அந்தத் திட்டத்தை நீண்ட காலமாகக் கோரி வந்த பி.டி.ராஜன் அவர்கள் பெயரால் 'பி.டி.ராஜன் வாய்க்கால் திட்டம்' என்று அழைக்கப்படும் என்பதையும் நான் இங்கே கூறிக் கொள்கிறேன்.

போனஸ் பற்றியும், அதனால் இன்று இடர்ப்பாட்டிற்கு ஆளாகி இருக்கின்ற தொழிலாளர்கள் பற்றியும் நம்முடைய ஜேம்ஸ் அவர்களும், மற்றவர்களும் இங்கே சுட்டிக் காட்டினார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், தொழிலாளர்கள் நன்மையில் எவ்வளவு அக்கறைகொண்டு இருக்கிறது என்பதையும் சில ஆலைகள் மூடப்பட்டோ அல்லது வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டோ தொழிலாளர்கள் கஷ்டப்படும் நேரத்தில் இந்தியாவிலேயே இந்த அரசு ஒன்றுதான் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரண நிதியை லட்சக்கணக்கில் வழங்கிய அரசு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா அவர்களுடைய காலத்தில் கோவை மில் தொழிலாளர்களுக்கு 1 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையை அவர்களுடைய நிவாரணத்திற்கு வழங்கினார்கள்.

அண்ணா அவர்களுக்குப் பிறகு இந்த அரசு கிட்டத்தட்ட ஐந்து லட்ச ரூபாய் - கோவையிலுள்ள ஆலைத் தொழிலாளர்களின் நிவாரணத்திற்காக - வேலை நிறுத்தத்தின் போதும், கதவடைப்பின் போதும்- வழங்கியிருப்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அண்மையில் கூட நம்முடைய சுப்பிரமணியம் மற்றும், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லாம் நான் கோவை சென்ற போது என்னிடத்தில் 'மது நூற்பாலை' என்ற நூற்பாலை மூடப்படுகின்ற நிலையில் இருப்பதை எடுத்துச் சொன்னார்கள். அங்கே இருக்கும் 400 தொழிலாளர்கள் தீபாவளி நேரத்தில்கூட தங்களுடைய வீடுகளில் மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை என்று சொன்னார்கள். அதையெல்லாம் கேட்டுக்கொண்டு நான் சென்னைக்கு வந்த பிறகு 80,000 ரூபாயை ஆள் ஒன்றுக்கு ரூ. 200 வீதம் தீபாவளி நேரத்தில் கடனாக வழங்க, இந்த அரசாங்கத்தின் சார்பில் உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்களுக்கு ரூ.80,000 வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.ஏ.சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். இந்த ரூ.80,000 வழங்கப்பட்டதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஏறத்தாழ 2½ லட்சம் ரூபாய் மதிப்புள்ள நூலை அரசாங்கத்தின் பேரில் ரூமில் போட்டு, சீல் வைத்து, அதை அந்த மானேஜ்மெண்டார் பிளட்ஜ் செய்து, அடமானம் வைத்த பிறகுதான் அந்தப் பணம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. மேலும் அந்த நூலை அவர்களே விற்று அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு கட்டவேண்டுமென்ற நிபந்தனை பேரில்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : கடனாகக் கொடுக்கும்போது பெரிய முதலாளிகளிடத்தில் இந்தப் பிடிப்புகூட வைத்துக்கொள்ளாமல் எப்படித்தான் கொடுப்பது? அந்த முதலாளி அந்தத் தொழிலாளர்களுக்கு இதைத் தரவேண்டும். அப்படியிருக்கும்போது ஆற்றில் போட்டாலும்

அளந்து போடு என்று சொல்வார்கள். அதனால்தான் அளந்து போடப்பட்டு இருக்கிறது.

திரு.ஜே.ஜேம்ஸ்: தலைவரவர்களே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசைப் பொறுத்தவரையில் போனஸ் சம்பந்தமாக தொழிலாளர்களுக்கு எல்லாம் செய்து கொண்டு இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போதெல்லாம் பல முதலாளிகள் இரண்டு கணக்குகள் வைத்து இருப்பதன் காரணமாக பாலன்ஸ் ஷீட்டில் நஷ்டத்தில் ஓடுவதாகக் கணக்குக் காட்டுகிறார்கள். ஆகவே தான் இந்த 4½ சதவிகிதம் போனஸ்தான் அவர்கள் கொடுக்க முடியும் என்று தருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அவர்களுடைய கணக்குகளை நேர்மையாக கொடுக்காததுதான். அவர்களுடைய கணக்குகளைப் பரிசீலனை செய்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதை அரசாங்கம் ஆராய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : 'இந்த போனஸ் பிரச்சினை அவசரச் சட்டத்தால், நெருக்கடி நிலையால் நமக்குக் கிடைத்த ஒரு நல்ல பரிசு. ஜனநாயகத்திற்குக் கிடைத்த அடி' என்று திரு.கே.டி.கே.தங்கமணி அவர்கள் சொன்னார்கள். மிகப் பொருத்தமான வார்த்தைகள். அதிலே நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொல்லிய பிரச்சினை இருக்குமானால் அரசு ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, 'தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு என்ன செய்தது? என்ன செய்தது? என்ற கேள்வியை அடிக்கடி இங்கே கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் இந்தக் கேள்வியை ஒவ்வொரு உரை நிகழ்த்துகிற நேரத்திலும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். 1972-73- ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக செய்யப்பட்ட மொத்த செலவு ரூ. 7.59 கோடி; 1973-74-ல் 10.15 கோடி ரூபாய்; 1974-75ல் 12.89 கோடி

ரூபாய்; 1975-76க்கு 18.88 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு செலவு செய்தது.

இதிலே 1972-73ல் 7 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி 39 லட்சம் ரூபாய்.

1973-74-ல் 10 கோடியே 15 லட்சம் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி ரூ.66 லட்சம்.

1974-75-ல் 12 கோடியே 89 லட்சம் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி ரூ.52 லட்சம்.

1975-76-க்கு 18 கோடியே 88 லட்சம் செலவழித்தோம் என்றால் மத்திய அரசின் உதவி ரூ.50 லட்சம்.

ஏதோ தாழ்த்தப்பட்டவர்களை மறந்துவிட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத்தான் அள்ளி அள்ளிக் கொடுக்கிறது இந்த அரசு என்ற குற்றச்சாட்டிற்கு நான் சொல்ல விரும்புவது எல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1972-73-ல் ரூ. 4.97 கோடி; 1973-74-ல் 5.37 கோடி ரூபாய்; 1974-75-ல் 5.68 கோடி ரூபாய்; 1975-76-ல் 5.81 கோடி ரூபாய் என்ற வகையிலே தான் நாம் உதவிகளைச் செய்து வருகிறோம்.

இந்தத் துணை மதிப்பீட்டின் 6-வது பக்கத்திலே, நான் இந்த மன்றத்திலே இந்த அறிக்கை வைக்கும் போது, குறிப்பிட்டது, ‘‘தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் எல்லாச் சலுகைகளையும் (எல்லாச் சலுகைகளையும் என்றால், ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிற சலுகைகளையும் சேர்த்து மீதமுள்ள எல்லாச் சலுகைகளும்) கிறித்துவ மதத்திற்கு ஏற்கெனவே மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நீட்டிப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளுதல், அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கிறித்துவ மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்டவர்கள்,

பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இணையாகக் கருதப்படுவர். அவர்களுடைய சந்ததியினர் அந்தச் சலுகைகளுக்கு அருகதையற்றவர்கள் என்று இதுவரை இருந்து வந்த நிலைமையை மாற்றி, அவர்களுடைய சந்ததிகளும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவர் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சலுகைக்காகத் தேவைப்படும் நிதி இதுவரையில் அரிசன நல மானியத்தில் ஒதுக்கியுள்ள தொகைக்குக் கூடுதலாக மேலும் ஒதுக்கப்படும்'' என்ற கருத்தை நான் இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன்.

அதன்படி இந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்லவேண்டுமானால் கல்வி நிலையங்களில் ஒதுக்கப்படும் சலுகைகளும், அரசுத் துறையிலே வேலை வாய்ப்புத் தருவதும் ஒரு தலைமுறையினருக்கு மட்டுமே தரப்பட்டு இருந்தது. 1974-ம் ஆண்டு ஆணையின்படி, அதாவது இந்த இரண்டு சலுகைகளும் கிறித்துவ மதத்தில் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர் களுக்கு, அவர்களை பிற்படுத்தப்பட்டவர்கள் என்று கருதி பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதத்தில் சேர்த்து அளிக்கப்பட்டது. ஆனால் 1975-ம் ஆண்டு அரசு ஆணையின்படி இந்த இரண்டு சலுகைகளும் எல்லா தலைமுறைகளுக்கும் அவர்களுக்கு பிற்படுத்தப் பட்டவர்களுக்கு உள்ள விகிதாசாரத்தில் தரப்படுகிறது. 1974-ஆம் ஆண்டு அரசாணையில் As regards the other concessions, they are eligible irrespective of generations. என்று இருக்கிறது. குடியிருப்புக்கு நிலம் தருதல், விவசாயிகளுக்கு நிலம் கொடுத்தல், குடியிருப்புகளுக்குப் பாதை அமைத்தல், குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குதல் ஆகியவை மாத்திரம்தான் இருந்தன. ஏனைய பொருளாதார சலுகைகள் தர முடியவில்லை. காரணம், அந்தச் சலுகைகள் மத்திய அரசு திட்டத்தின் கீழ் Centrally assisted schemes செயல்பட்டு வந்தன.

ஆனால் 1975-ம் ஆண்டு அரசு ஆணையின்படி அந்தச் சலுகைகளையும் கிறித்துவ மதத்திற்கு மாறியுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவது என்று முடிவு

செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய நிதியை மாநில அரசே அளிக்கும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. 1975-ம் ஆண்டு அரசாணையின்படி கிடைக்கும் புதிய சலுகைகள் :-

1. Special coaching schemes for I.A.S. and I.P.S. examinations.

2. Construction and allotment of houses.

3. Financial assistance of Milk Supply Co-operative Societies.

4. Financial assistance by way of loan and subsidy to purchase agricultural implements, plough bulls, sinking of irrigation wells.

5. Assistance for cottage industries like basket-making, hand-pounding of rice, etc.

6. Subsidy to technically trained personnel.

7. Petty trade loans.

என்று இந்த 7 சலுகைகளும் எல்லா அரிசனங்களுக்கும் தரப்படுவது போல் கிறித்துவ மதத்திற்கு மாறியுள்ள அரிசனங்களுக்கும் தருவது என்று இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ஏதோ நாங்கள் எல்லாம் தவறாகச் சொல்கிறோம், அம்மையார் அவர்கள் தான் உண்மையாகப் பேசுகிறார்கள், என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது தான் உண்மையான விவரம்.....

நிதி ஒதுக்கீடு மசோதா

உரை : 40 **நாள்: 25.08.1977**

கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே நிதிநிலை அறிக்கையினை வைத்து, அதன் தொடர்பாக விவாதங்கள் நடைபெற்று அதற்குப் பிறகு ஒவ்வொரு மானியத்தின் மீதும் உறுப்பினர்கள் விவாதித்து இன்று நிதி ஒதுக்கீடு செய்கின்ற இந்த நிலையில் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சரவர்கள், அவர்களே இங்கு பதில் உரையிலே கூறியதைப் போல, இந்தத் துறைக்கு அவர்கள் புதியவர் என்றாலும் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளுகின்ற அளவுக்கு அவையிலே உள்ளவர்கள் தனக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இயன்ற வரையில் எதிர்க்கட்சி அளவிலேயிருந்து எந்த அளவுக்கு ஒத்துழைப்புத் தர முடியுமோ, அந்த அளவுக்கு இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் எங்களால் இயன்ற ஒத்துழைப்பினை வாதங்களில் நாங்கள் நல்கி இருக்கிறோம் என்பதை அனைவரும் நன்கு அறிவீர்கள்.

நிதித்துறைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் எனக்கு நீண்ட நாள் நண்பர் என்பதும் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருப்பதில் நான் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன் என்பதும் நிதிநிலை அறிக்கை பற்றி குறிப்பிட்டபொழுது நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

நான் நிதிநிலை அறிக்கையில் பல விவரங்களை எடுத்துப் பேசிய பொழுது பதிலளித்த நேரத்தில் அவர்கள் அரசியலைக் கலந்து சற்று உருக்கமாக அதே நேரத்தில் உணர்ச்சியாக

உரையாற்றினார்கள் என்றாலும், எதிர்க்கட்சியினிடத்தில் அவர்கள் வைத்திருக்கின்ற மதிப்புக் கிஞ்சித்தும் குறையவில்லை என்பதையும் எடுத்துக்காட்டினார்கள். அந்த வகையில் நான் அவரை மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய நிதிநிலை எப்படி இருக்கிறது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். இந்த மாமன்றத்தில் அமைச்சர் பெருமக்கள் பல உறுப்பினர்கள் எழுப்புகிற பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கிற நேரத்தில் செய்யப்படும், அல்லது பரிசீலிக்கப்படும். நிச்சயமாக வழங்கப்படும் என்றெல்லாம் சொல்லும்பொழுதும், ஆயிரம் நியாயவிலைக் கடைகள், காவல்துறைக்கு 10 ஆயிரம் நியமனங்கள் என்றெல்லாம் இங்கே வாக்குறுதிகள் வாரி வாரி வழங்கப்படுகிற நேரத்திலும் முன்னாள் நிதியமைச்சராக இருந்தவன் என்கிற முறையில் எனக்குச் சில நேரங்களில் தூக்கிவாரிப் போடுவதுண்டு, ஏனென்றால் வழங்கப்படுகின்ற இவ்வளவு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தமிழகத்தினுடைய நிதிநிலை போதுமானதாக இருக்கிறதா என்பதுதான். இதைச் சொல்லுகிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் ஆறுதல் அடைகிறார்களோ இல்லையோ, நிதித்துறையை இன்றைக்கு கவனித்து வருகிற அதிகாரிகள் ஓரளவுக்குப் பெருமூச்சு விடுவார்கள் என்றுகூட நான் கருதுகிறேன்.

ஏனென்றால் நிதி ஆதாரத்தைப் பொறுத்தவரையில் மாநில அரசுகள் பெரும்பாலும் மத்திய அரசை நம்பித் தீரவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. அதைத்தான் ஒருமுறை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டேன். அதை வேறு மொழியில் நிதிநிலை அறிக்கையில் நம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

நான் குறிப்பிட்டது, வரம் கொடுக்கும் தெய்வமாக மத்திய அரசும், தவம் கிடக்கும் பக்தனாக மாநில அரசும் இருக்கிறவரையில் நிதி ஆதாரங்களில் நாம் ஒரு முழுமைத் தன்மையை அடைய முடியாது என்பதாகும். அதைத்தான் நிதியமைச்சர் அவர்கள் உரையில் வேறு மொழியில்

குறிப்பிடும்போது வழங்குகிற இடத்தில் மத்திய அரசும், வாங்குகிற இடத்தில் மாநில அரசும் இருக்கிறது என்பதை மிகுந்த வேதனையோடு எடுத்துச்சொன்னார்கள்.

மாநில அரசுகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல அதிகாரங்களில் நிதி ஆதாரங்களைச் சேர்த்து, இன்னும் சொல்லப் போனால் அதற்குப் பொருத்தமான பெயரேகூட நிதியமைச்சர் மனோகரன் என்று அமைந்திருக்கிறது. சரித்திரப் புகழ் பெற்ற மனோகரன் கதையில்கூட மனோகரன் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருக்கிற காட்சியினைக் காண்கிறோம். அதைப்போலத்தான் மனோகரன் என்ற பெயருடைய நிதியமைச்சர் அவர்களும், மத்திய அரசு அதனுடைய அதிகாரங்கள் நிதி ஆதாரங்களை பிடித்து இழுத்தால் ஆடுகிற சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலை மனோகரன் வடிவத்தில் காட்சியாக ஆகிறது. நான் அந்த விலங்குகள் அறுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் ஏதோ மாநிலத்திற்கு விடுதலை கேட்கிறேன் என்று யாரும் எண்ணாமல் சுயாட்சிதான் கேட்கிறேன் என்ற வகையில் இந்த விலங்குகள் அறுபட வேண்டுமென்றால், மாநில சுயாட்சி பெற்றால் மனோகரன் விடுபடுவார். மனோகரன் விடுபடுவார் என்றால் நம் மாநில நிதி ஆதாரங்கள் நல்ல முறையில் வளம் பொருந்தியதாக இருக்கும் என்ற பொருளில் அதைக் குறிப்பிடுகிறேன்.

இந்த அவையில் கடந்த 30,32 நாட்களாக நாம் இங்கே கூடி பல்வேறு விஷயங்களை காரசாரமாகவும், சில நேரங்களில் கனிவாகவும், சில நேரங்களில் சூடாகவும், சில நேரங்களில் சுவையாகவும், சில நேரங்களில் நாராசம் கொடுக்கிற அளவிற்கும், சில நேரங்களில் நகைச்சுவை பொங்குகிற அளவிற்கும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டிருந்திருக்கிறோம். அவை கலைந்து நாமெல்லாம் செல்கிற நேரத்தில் இந்த விவாதங்கள் எல்லாம் நாட்டு மக்களுக்காக, நாட்டினுடைய எதிர்கால நன்மைக்காக நாம் இங்கே நடத்தினோம் என்ற உணர்வோடு பிரிந்து செல்லுவோமேயல்லாமல் ஏதோ பழிவாங்குகிற உணர்ச்சியோடு, விரோதத்தை வஞ்சத்தைத் தீர்த்துக்

கொள்ளுகிற நிலையில் நாம் இந்தப் பணியினை ஆற்றவில்லை என்கிற எண்ணத்தோடுதான் திரும்புவோம். அப்படி நாம் திரும்பிச் சென்று மக்களிடத்தில் பணிகளை ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தச் சட்டமன்றத் தொடரில் சில முக்கியமான நிகழ்ச்சிகள் இந்த மாமன்றத்தில் நடைபெற்றிருக்கின்றன. தியாகச் சுடர், பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய திருவுருவப் படத்தை இந்தியாவினுடைய குடியரசுத் தலைவர் மேதகு சஞ்சீவி ரெட்டி அவர்கள் திறந்து வைத்த நிகழ்ச்சி இந்த மாமன்றத்தினுடைய வரலாற்றில் ஒரு பொன்னேடாகும்.

அதைப்போலவே, நேற்றைய தினம் இலங்கையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய தமிழ் இன மக்களுக்காக, அவர்களுடைய உயிரைப் பாதுகாக்க, மானத்தைப் பாதுகாக்க, அவர்களுடைய உடமைகளைப் பாதுகாக்க, அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க, உலகத்திலே எந்த மூலையிலே இருக்கின்ற தமிழனும் நிச்சயமாக முன்வருவான் என்பதற்கு எடுத்துக்காட்டாக, இந்த தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதும் வரலாற்றிலே இடம் பெறத்தக்க ஒன்றாகும். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே நாங்கள் எல்லாம் இங்கே இருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும்கூட, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற நண்பர்களும், ஆளுங்கட்சியில் அவையின் முன்னவராக இருப்பவரும், எங்களுடைய பெயரை அடிக்கடி இங்கே எடுத்துச் சொல்வதன் மூலம் நாங்களும் கலந்துகொண்ட உணர்வை அவர்கள் ஏற்படுத்தியதற்காக நான் அவையினுடைய முன்னவருக்கும், எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நமக்குள் ஆயிரம் இருந்தாலும், ஒரு பொதுப் பிரச்சினையில் நாம் மோதிக் கொள்ளக்கூடாது என்கின்ற வகையிலேதான் நாங்கள் பேரணி நடத்தி இலங்கைத் தமிழர்களைக் காப்போம் என்று சொன்னோம்.

பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றி இலங்கைத் தமிழர்களைக் காப்போம் என்று இங்கே இருந்தவர்கள் நேற்றைய தினம் முழங்கியிருக்கிறார்கள். ஆக இருவருடைய

நோக்கமும் ஒன்றுதான் என்கின்ற வகையிலே, அந்த நோக்கத் தினைப் புரிந்துகொண்டு மத்திய அரசு செயல்பட வேண்டும். இலங்கையிலே இருக்கிற அரசும் நம்முடைய உணர்வினைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொள்ளுவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன்.

நான் கேள்விப்பட்ட வரையில் நாளை அல்லது நாளை மறுநாள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட டில்லிக்குச் செல்வதாக அறிகிறேன். அப்படி டெல்லி மாநகரத்திற்கு அவர்கள் செல்லுகின்ற நேரத்திலே, இலங்கைத் தமிழர்களுடைய இன்னல்களை, அங்கே தொடர்புடைய அமைச்சரிடத்திலும், பிரதமரிடத்திலும் எடுத்துச்சொல்லி, உடனடியாகச் சொல்லி, காலம் தாழ்த்தாமல், காலம் தாழ்த்துகின்ற ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு தமிழ் உயிர் இலங்கைத் தரணியில் பிரிகிறது என்பதை எண்ணி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்வார் என்று நம்புகிறேன். கேட்டுக்கொள்ள வேண்டும் என்று நான் என்னுடைய வேண்டுகோளைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இங்கே வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் இந்தத் தமிழ்நாட்டினுடைய வரவு-செலவு திட்டத்தைப் பற்றிப் போடப்படுகின்ற கணக்கில் வருமானக் கணக்கில் 633.24 கோடி ரூபாய் வரவாகவும், 663.40 கோடி ரூபாய் செலவாகவும், ஆக ஏறத்தாழ 30 கோடி ரூபாய் வருமானக் கணக்கிலே பற்றாக்குறையாகவும், மொத்தக் கணக்கில் சுமார் 24 கோடி ரூபாய் பற்றாக்குறையாகவும் உள்ள ஒரு வரவு-செலவுத் திட்டத்திற்கான மானியக் கோரிக்கைகள் அனைத்தும் விவாதிக்கப்பட்டு சில மானியக் கோரிக்கைகள் நேரமில்லாத காரணத்தால், விவாதிக்கப்படுகின்ற நிலையிலிருந்து அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்திற்கு இணங்க விடுபட்டு, அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளன. புதிய ஆட்சி முதல் தடவையாக நடத்துகின்ற சட்டப்பேரவை நிகழ்ச்சியில் எல்லா மானியக் கோரிக்கைகளும் சுமுகமாக நிறைவேற்ற வேண்டும் என்ற வகையிலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் எங்களுக்கு

இருந்தாலும்கூட, பல திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்று எண்ணினாலும் கூட, வெட்டுத் தீர்மானங்கள் மூலமாக சிலவற்றைச் சுட்டிக் காட்ட வேண்டும். சுட்டிக்காட்டுவதற்கு இடமுண்டு என்று இருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இந்தப் புதிய ஆட்சி நடத்துகின்ற முதல் சட்டமன்ற தொடர்கூட்டத்தில் நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக நடத்துகின்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் ஓட்டு எடுப்புக்கள்கூட கூடாது என்ற வகையிலேதான் நாங்கள் அதற்கெல்லாம் இடம் தராமல் சுமுகமாக மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம்.

ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தப் பெருந்தொகை எந்தளவிற்குச் செலவழிக்கப்பட வேண்டும், எப்படி முறையாகச் செலவழிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசிய அனைத்துக் கட்சியினுடைய தலைவர்களும் உறுப்பினர்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் அடுத்த தடவை சில தவறுகள் நடைபெறக்கூடாது, சில குறைகள் இருந்திடக்கூடாது என்பதற்காக நான் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசாங்க நிர்வாகத்தில் சிக்கனம் என்பது சொல்லப்படுகிற ஒன்றாக மாத்திரமல்லாமல் செய்யப்படுகிற ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்பதை நாம் அனைவரும் ஒத்துக்கொள்கிறோம். அந்த வகையில் 1975-76ம் ஆண்டு, 1976-77ம் ஆண்டு இந்த இரண்டு ஆண்டுகளை ஒப்பிட்டு ஒரே ஒரு சான்றினை மாத்திரம் இங்கே எடுத்துவைக்க விரும்புகிறேன். வேளாண்மைத் துறைக்கான கோரிக்கை பற்றிய குறிப்புரையில், 1977-78ம் ஆண்டுக்கான குறிப்புரையில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே 1975-76ம் ஆண்டில் சர்க்கரை ஆலைக்கு சாலை அபிவிருத்தித் திட்டத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை என்ற மொத்தக் கணக்கைச் சொல்லும்போது ரூ. 70,22,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது.

1976-77ம் ஆண்டில் 75 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இது அதைவிட அதிகம்தானே செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று பெருமையடையலாம். ஆனால் 1975-76ஆம் ஆண்டில் ரூ.70,22,000 செலவழிக்கப்பட்டபோது புதிதாகப் போடப்பட்ட சாலைகளினுடைய கிலோமீட்டர் நீளம் 68.02. ஆனால் 76-77 ல் ரூ.75 லட்சம் செலவழிக்கப்பட்டபோது புதிதாகப் போடப்பட்ட சாலைகளின் நீளம் 31.51 கிலோமீட்டர். 75-76ல் 70 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டபோது கப்பி போடப்பட்ட சாலைகளினுடைய மொத்த நீளம் 78.26 கிலோமீட்டர். 1976-77ல் 72.26 கிலோமீட்டர்தான். 75-76-ல் 70 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டபோது தார் போடப்பட்டது 65.60 கிலோமீட்டர். 76-77ல் 68.64. 1975-76ல் அந்த 70 லட்சம் ரூபாய் கணக்கில் 158 மதகுகள். ஆனால் 76-77ல் 85 மதகுகள்தான். பாலங்கள் 13. 76-77ல் 16. தாழ்வான பாலங்கள் 75-76-ல் 6; 76-77ல் 5.

ஆகவே 75-76ல் 70 லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டிருக்கிற பணிக்கும். 76-77ம் ஆண்டு 75 லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்ட பணிகளுக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்த்தால் 76-77ல் இந்த ஆட்சி அல்ல, ஆளுநர் ஆட்சியில். சிக்கனம் எல்லாம் கடைப்பிடிக்கப்படும் என்றெல்லாம் சொல்லப்பட்ட ஆட்சியில் சிக்கனம் கடைப்பிடிக்கப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற் காகத்தான் இதைச் சொன்னேனே அல்லாமல் வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் பல தவறுகள் இங்கே வைக்கப்பட்ட மானியக் கோரிக்கைகளில் மாண்புமிகு உறுப்பினர்களால் அடிக்கடி எடுத்துக்காட்டப்பட்டன. இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் பெரும்பாலும் தமிழ் மாத்திரம் தெரிந்தவர்கள். ஆங்கில அறிவு இல்லாதவர்கள். ஆங்கில அறிவு இல்லை என்பதற்காக வெட்கப்படத் தேவை இல்லை. தமிழ் மாத்திரம் படித்தவர்கள் புரிந்துகொள்கிற அளவிற்கு மானியக் கோரிக்கைகளைப் படித்து தெளிவு பெறமுடியாமல் பல்வேறு தவறுகள் அச்சடிக்கப்பட்ட புத்தகங்களின் மூலமாக நமக்கு

வழங்கப்பட்டன. அடுத்து வருகிற சூழ்நிலைகளில் அந்தத் தவறுகள் எல்லாம் நீக்கப்படவேண்டும் என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பால்பண்ணை வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையின்போது ஏற்பட்ட ஏட்டில் 1974-75 முதல் 1976-77 வரை, 1977-78 ஆம் ஆண்டிற்கான அங்கீகாரம் பெற்ற நிதி ஒதுக்கீடு பற்றியவை விவரம் பின்வருமாறு என்கின்ற தலைப்பில் தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகத்திற்கு நிதி உதவி, பால் கொள்முதல் திட்டம் என்பதில் 1975-76ல் எந்தச் செலவும் இல்லை. அரசுப் பால் பண்ணைக்கு சாதனங்கள் வாங்குதலும் கட்டிடங்கள் கட்டுதலும் என்பதிலும் 1975-76ல் எந்தச் செலவும் இல்லை. கால்நடை மருத்துவ ஊர்திப் பிரிவு நிறுவுதல், அதிலும் 1975-76-ல் எந்தச் செலவும் இல்லை.

அடுத்ததாக, சென்னையிலுள்ள அரசு பால் பண்ணையை விரிவுபடுத்தல் என்பதில் 1.61 லட்சம் என்றும், மதுரை பால் பண்ணையை விரிவுபடுத்தல் என்பதில் 1.15 லட்சமும், பால் பண்ணைப் பணியாளர்களுக்குப் பயிற்சி என்பதில் 0.16 லட்சமும், தொழில்நுட்ப வசதித் திட்டம் என்பதில் எதுவுமில்லை. உலக உணவுத் திட்டம் என்பதில் 0.03 லட்சம் என்றும், துறை அளவிலான குளிர வைக்கும் நிலையம் என்பதில் 2.09 என்றும் எடுக்கப்பட்டு, இத்தனையும் கூட்டிப்பார்த்தால், 5.04 என்று வருகிறது. ஆனால் கணக்கில் சமர்த்தர்கள் இதனை, அதாவது 5.04 என்பதற்குப் பதிலாக 2.95 லட்சம் என்று கூட்டிப் போட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கணக்குகள் அவையில் வைக்கப்படுகின்ற கணக்குகள், ஆங்கிலத்தில் சரியாக இருக்கிறது என்று சொன்னால் அது சரியான பதில் அல்ல, தமிழிலும் சரியாக வைக்க வேண்டும். ஆங்கிலத்திலும் சரியாக இருக்க வேண்டும், இவற்றை யெல்லாம் அவையில் வைப்பதற்கு முன்னால் ஒரு தடவை தமிழிலும் சரியான கணக்கு ஆங்கிலத்திலும், சரியான கணக்கு என்ற நிலையில், இந்தத் துறையில் மட்டுமல்ல, வேறு துறைகளிலும் உள்ள மானியக் கோரிக்கைகளை பொறுப்பேற் கின்ற அமைச்சர்கள் மானியக் கோரிக்கையை இங்கே கொண்டு

வருவதற்கு முன் ஒரு தடவை பார்வையிட்டு, இதுபோல் இருக்கின்ற தவறுகளை எல்லாம் திருத்தி அவையில் வைப்பார் களேயானால் அவையிலுள்ளவர்கள் இதுபோன்ற குழப்பம் அடையாமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்குக் காலையில்கூட விவாதிக்கப்பட்ட பிரச்சினை. இங்கே பேசிய மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்களே இதைப்பற்றி கோடிட்டுக் காட்டினார்கள். பஸ் தொழிலாளர்கள் சில கோரிக்கைகளுக்காக, மதுரையில் நடைபெறுகின்ற வேலை நிறுத்தம் பல்வேறு இடங்களுக்கும் பரவக்கூடிய அச்சம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றி அமைச்சர் அவர்கள் மதுரை பஸ் தொழிலாளர்களின் பிரதிநிதிகளோடு பேசுவதாக இருந்தது. அதில் என்ன முடிவு ஏற்பட்டது என்று தெரியவில்லை. அது நல்ல முடிவாக ஏற்பட்டு, நாட்டு மக்களுக்கு போக்குவரத்து சாதனங்களில் எந்தவித இடையூறும் ஏற்படாத அளவில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

பத்திரிகைகளைப்பற்றி போலீஸ் மானியத்தில் பேசிய நண்பர்கள் கூறினார்கள். மற்ற பல மானியங்கள் மீதும் பேசிய நேரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில், நெருக்கடி காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு பல பத்திரிகைகள் பறிமுதல் செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது. நெருக்கடி காலத்தில் நெருக்கடியை எதிர்த்த சில பத்திரிகைகளுக்கு முன் தணிக்கையும் கடுமையான சென்ஸாரும் இருந்தது. நெருக்கடியை ஆதரித்த பத்திரிகைகள் எதை வேண்டுமானாலும் எழுதலாம் என்று அன்றைய தினம் இருந்தது. இன்னும் சொல்ல வேண்டுமானால், நெருக்கடி காலத்தில் சில குறிப்பிட்ட ஆளும் கட்சியைச் சார்ந்த பத்திரிகைகள் என்று பார்க்காமல், திராவிட முன்னேற்றக் கழக சார்புள்ள ஏடுகள் தடுக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டன. அன்றைக்குத் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை அடிப்படையாக வைத்து தலையங்கங்கள் எழுதிய காரணத்திற்காகவும், அதற்காக

மாநாடு நடத்தவேண்டும் வாரீர், வாரீர் என்று அழைப்பு விடுத்த பத்திரிகைகள், இவைகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன.

குறிப்பாக இரண்டு மூன்று பத்திரிகைகள் என்னென்ன செய்திகளையெல்லாமோ வெளியிட்டன. திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் வீட்டில் 25 லட்சம் ரூபாய் கறுப்புப்பணம் எடுக்கப்பட்டது. 'இந்தப்பணம் கருணாநிதியினுடைய பணம்' என்று நெருக்கடி காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு முன் தணிக்கை எதுவும் இல்லாமல் வெளியிட்டார்கள். உண்மைக்கு மாறான செய்தியை வெளியிட்டார்கள் என்ற காரணத்திற்காக அது பறிமுதல் செய்யவேண்டிய சூழ்நிலைக்கு ஆளாயிற்று. அந்தப் பத்திரிகை தடுக்கப்பட்டுவிடவில்லை.

முக்கியமாக 'அலை ஓசை' பத்திரிகை பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அலை ஓசைக்கு புத்தகங்கள் அச்சிடுவதற்கு என்கின்ற நிபந்தனையோடுதான் டி.ஐ.ஐ.ஸி. கடன் வழங்கியது. மற்றும் அலை ஓசை அச்சிடுவதற்கு உரிமை இல்லை என்றும் சொன்னார்கள். எப்படிப்பட்ட நிபந்தனையோடு கடன் வழங்கப்பட்டது என்றால் அவர்களுக்கு டி.ஐ.ஐ.ஸி. கடிதம் போட்டிருக்கிறது.

When it is proposed to commence printing of the newspaper Alai Osai in the new press may please be indicated. என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்ட பிறகு, அலை ஓசை பத்திரிகை நிறுவனத்திலிருந்து பதில் எழுதினார்கள். இப்படி அவர்கள் பதில் எழுதிய பிறகு, மீண்டும் டி.ஐ.ஐ.ஸி.யிடமிருந்து அவர்களுக்குக் கடிதம் வருகிறது. அந்தக் கடிதத்தில்கூட, Please let us know you propose commencing printing of news paper Alai Osai in the new press. என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர்கள் எழுதிய பதிலில் In reply I wish to state that we have already given details in letter dated 19th April 1976. As already stated, the project in regard to erection of machinery has already been completed if we have started printing on and from January 1976.

என்று எழுதியிருக்கிறார்கள். எனவே, அலை ஓசை பத்திரிகை இதிலே அச்சடிக்கக்கூடாது என்று நிபந்தனை இருந்ததாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். ஒன்பது லட்சம் ரூபாய் பாக்கிக்காகத்தான் இப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஒன்பது லட்சம் ரூபாய் இல்லை.

"To recover a sum of Rs. 1,46,375.39." 1,46,375.39 பைசாவிற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இது மாத்திரமல்ல. மாதம் ஒன்றுக்கு 3,000 ரூபாய் கொடுங்கள் என்றும், அதற்குப் பிறகு அப்படிப்பட்ட உத்தரவு கலெக்டர் போடப்படவில்லை என்றும், முதல் அமைச்சர் அவர்கள் அவையிலே அறிவித்தார்கள். அதுகூட அவர்களுக்குத் தவறான தகவலாகத்தான் தரப்பட்டிருக்கிறது. திரு. நாகராஜன் தாசில்தார், எழும்பூர், மானேஜிங் டைரக்டர், டி.ஐ.ஐ.சி க்கு கடிதம் எழுதியிருக்கிறார். அதிலும் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்.

The defaulter has been directed to pay a sum of Rs. 3,000 per mensem with effect from 20th April 1977.

என்று அந்த மாதத்திலிருந்து கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் ஒன்பது லட்சம் இல்லை. ஒரு லட்சத்து 46 ஆயிரம் ரூபாய் அளவுதான்.

இதிலிருந்து பார்த்தால், கிட்டத்தட்ட 1965 ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி டெக்ஸ்டைல்ஸ், ஆரணி, கொடுக்கவேண்டிய பாக்கி ரூ. 16,72,900. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? சதர்ன் ஸ்விச்கீர் லிமிடெட், திரு. எச்.சி.காமத் 1965 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்க வேண்டிய பாக்கி ரூ. 38,58,600 இதைப்போல் 29 லட்சம், 18 லட்சம், 25 லட்சம், 27 லட்சம் போன்று கிட்டத்தட்ட ஐம்பது நிறுவனங்களில் அவர்கள் பணம்பாக்கி கொடுக்கவேண்டிய நிலையிருக்கிறது. ஆனால் ஒரு பத்திரிகை அறவே மூடப்படுகின்ற அளவுக்கு, அந்த அச்சகம் சீல் வைக்கப்பட்டது, உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும் என்பதையும் முதல் அமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் கொடுத்த தகவலின்

பேரால் அவர்கள் இப்படி கூறியிருக்கக் கூடும் என்பதையும் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைய தினம் அறநிலையத் துறையைப் பற்றி இங்கே விவாதிக்கப்பட்டது. ஆனால் விதிமுறைகள் இடம் தராத காரணத்தினால் அதற்கு நீண்டநேரம் எடுத்துக்கொண்டு அற நிலையத் துறையைப் பற்றிபேச இயலவில்லை. இன்னும் சொல்லப்போனால், பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் நாங்கள் பேரணியில் கலந்து கொண்டு இங்கே சற்றுத் தாமதமாக வந்த காரணத்தினால், அந்த விவாதத்திலே பங்குகொள்ள இயலாமல் போய்விட்டது.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரை இந்த அவையில் அதற்கு ஒரு தனி அமைச்சரே இருந்து, அதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அறநிலையத் துறை பலவகை. அதாவது மிசலேனியஸ் வகையில் சேர்க்கப்பட்ட ஒன்றாக இருந்தது. இந்த பல்வகை, மிசலேனியசிலிருந்து அறநிலையத் துறையை கழக ஆட்சியில் பிரித்து மீண்டும் அதைத் தனித் துறையாக ஆக்கி, அதற்காக தனி அமைச்சர் ஒருவரை நியமித்து, அதிலே தனிக் கவனம் செலுத்தப்பட்டது.

இந்த அறநிலையத் துறையிலே கழக ஆட்சியின்போது, ஏதோ பெரிய கேடுபாடுகள் நடைபெற்றுவிட்டதென்றெல்லாம் சொல்லப்பட்டது. கழக ஆட்சிக்கு முன்பேகூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராவதற்கு முன்பேகூட, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தால், ஆலயங்களை இடித்து விடுவார்கள், அபிஷேகங்கள் நின்று விடும். ஆராதனைகள் எல்லாம் போய்விடும், ஆறு கால பூசை நின்றுவிடும், தேர் இழுக்கப்படமாட்டாது என்றெல்லாம் எத்தனையோ பிரச்சாரங்கள் நடைபெற்றன. ஆனால் அவைகளுக்கு எல்லாம் மாறாக கழக ஆட்சியில் அறநிலையத் துறை நேற்றையத் தினம் முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், நாட்டுமக்களின் மனதைப் பண்படுத்துகின்ற அளவில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மக்கள் உள்ளம் பண்படுகின்ற அளவிலேதான் இருந்ததே தவிர, புண்படுகின்ற நிலை

இருக்கக்கூடாது என்ற நோக்கத்தோடு அறநிலையத்துறையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு கவனம் செலுத்தியிருக்கிறது.

நான் ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லவேண்டுமென்றால் அறநிலையங்களின் எண்ணிக்கை 1967ஆம் ஆண்டு வரையில் 9,000 ஆக இருந்தது. மற்ற அறநிலையங்கள் கண்டுபிடிக்க முடியாமல் அல்லது செயல்படாமலே இருந்தன. 1967 ஆம் ஆண்டு 9,000 ஆக இருந்த அறநிலையங்கள் 1975-76 ஆம் ஆண்டில் 20,246 என்ற அளவுக்கு விரிவடைந்தது.

1967 ஆம் ஆண்டில் அறநிலையங்கள் மூலம் கிடைத்த வருமானம் 3 கோடி ரூபாய் ஆக இருந்தது. 1975-76 ஆம் ஆண்டில் அது 12 கோடி ரூபாயாக உயர்ந்தது.

திருப்பணி செய்ய, பழுது பார்க்க அறநிலையங்களில் செலவு செய்தது 1967 ஆம் ஆண்டில் ஒரு லட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்ற அளவுக்கு இருந்தது. 1975-76 ஆம் ஆண்டில் 15 லட்சம் ரூபாய் அறநிலையங்களுக்காக அரசின் சார்பில் நிதி உதவி அளிக்கப்பட்டது.

1967 முதல் 1975 முடிய எட்டு ஆண்டுக் காலத்தில் திருப்பணிகள் செய்யப்பட்ட, குடமுழுக்குகள், கும்பாபிஷேகங்கள் செய்யப்பட்ட கோயில்களின் மொத்த எண்ணிக்கை 4,215 என்று சொன்னால் யாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரை நாஸ்திகர்கள் என்று நிச்சயமாகச் சொல்லமாட்டார்கள். 4,215 கோயில்களுக்குக் குடமுழுக்கு நடைபெற்றது. அதற்கு 16 கோடி ரூபாய் ஆலயங்களின் சார்பாக ஆங்காங்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஒன்றைச் சொன்னால் பூரிப்பாகவும் இருக்கும். பாராட்டக்கூடிய ஒன்றாகவும் இருக்கும். தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு அரசின் சார்பில்-தனியாருடைய ஆதிக்கத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஆலயங்கள் மாத்திரம், தனியார் ஆதிக்கத்தில் ஒளிந்து கொண்டிருந்த அறநிலையங்களின் எண்ணிக்கை மாத்திரம், கண்ணுக்கு எட்டாமல் பதுங்கியிருந்து ஆண்டவனை ஏமாற்றிவிட்டு தனியார் கையில் இருந்த அறநிலையங்கள் 1-3-1975 வரை 41,306 அறநிலையங்கள் தனியாரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

அப்படிப்பட்ட அறநிலையங்களுக்குச் சொந்தமாக இருந்த ஏக்கர் நிலங்கள் எவ்வளவு என்றால் 2,01,343 ஏக்கர். எவ்வளவோ தனியார் அறநிலையங்கள் அந்தத் துறைக்கு வராமல் தனியாரே அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். 41,306 அறநிலையங்களின் சார்பாக இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கராவை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்படிக் கண்டுபிடிக்கப்பட்டு அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டவை 1975 ஆம் ஆண்டில் 41,306ல் 25,000 அறநிலையங்களை துறையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தோம். அதுமாத்திரமல்ல. நான் குறிப்பிட்ட இரண்டு லட்சம் ஏக்கரில் கண்டுபிடித்த தனியார் அறநிலையங்களைத் துறையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்ததன் மூலம் கொண்டுவரப்பட்ட நிலம் 65,000 ஏக்கர் நிலமாகும். அந்த அளவுக்கு அறநிலையத் துறையில் பெரும் சீர்திருத்தங்களை நாங்கள் செய்தோம்.

பல தனியார்கள் எந்த அளவுக்கு ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள் என்று சொன்னால் வேடிக்கையாகக்கூட இருக்கும். தஞ்சை மாவட்டத்தில் திருச்சிற்றம்பலம் என்ற ஊரில் ஒரு அறநிலையம்-பரம்பரை அறநிலைய தர்மகர்த்தா என்ற பெயரால் இருந்த ஒருவர் தன்னுடைய குழந்தைக்கு அந்தக் கோயில் அம்மன் பெயரை வைத்து நிலத்தை எல்லாம் தன் குழந்தை பெயரில் மாற்றி விட்டார். கேட்டால் அந்த அம்மன் பெயரும், குழந்தையின் பெயரும் ஒன்றாக இருக்க அவரால் திறமையாக ஏமாற்ற முடிந்தது. அதையும் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து கழக ஆட்சியில் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதற்குப் பிறகு அதனுடைய நிலைமை என்ன என்று தெரியாது.

இவைகளைச் சொல்லக் காரணம் அறநிலையத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஏற்கெனவே இருந்த பல்வேறு குறைபாடுகள் நிறைவு செய்யப்பட்டு அறநிலையத்தினுடைய வருமானம் அதிகரிக்கப்பட்டு, ஆலயங்களுக்குச் செய்யப்பட வேண்டிய பூஜை, நெய்வேத்தியங்கள் அவைகளுக்கு எந்தெந்த வகையில்

விழாக்கள் நடைபெற வேண்டுமோ அத்தனையும் ஒழுங்குற செய்யப்பட்டன என்பதற்காகத்தான் இந்த விவரத்தை அளித்தேனேயல்லாமல் வேறல்ல.

கழக ஆட்சியில் ஒரு புரட்சிகரமான சட்டத்தை இந்த அவையில் கொண்டு வந்தோம். அதுதான், அனைவரும், தகுதி படைத்த அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம். சுருக்கமாகச் சொன்னால் அரிசனங்களும் அர்ச்சகராகலாம் என்ற அளவுக்கு சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று சொன்னோம். தகுதி படைத்தோர் யாராக இருந்தாலும் குறிப்பிட்ட சாதியார்தான் அர்ச்சகராகலாம் என்ற நிலை மாற்றப்பட்டு அர்ச்சனை செய்ய ஆகம விதிகளின்படி யார் யார் தகுதி படைத்திருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற சட்டத்தை இங்கே கொண்டுவந்தோம். அதைச் சில மடாதிபதிகளும் சில சனாதனிகளும் எதிர்த்து உச்ச நீதிமன்றம் வரையிலும் சென்று அந்தச்சட்டம் முடக்கப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு இந்த அவையிலே, அரசியல் சட்டத்தைத் திருத்தினால்தான் இங்கே நாம் நிறைவேற்றிய சட்டம் எழுந்து நடமாடமுடியும் என்று கருதி, ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

சில பேர்கள் கேட்டார்கள், ஏன் அரிசனங்கள் அர்ச்சகர்கள் ஆகவேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது என்று. அரிசனங்கள் மாத்திரமல்ல. குறிப்பாக ஒரு அரிசன சகோதரன் கலெக்டராக முடியும். ஐ.ஏ.எஸ். அதிகாரியாக முடியும். அமைச்சராக முடியும், பிரதமராகலாம், ஜனாதிபதியாகலாம், ஆனால் ஆலயங்களிலே ஆண்டவனுக்கு அருகிலே இருந்து பணிபுரியும் அர்ச்சகராக ஆகமுடியாது என்றால் இதைவிடச் சமுதாய இழிவு வேறு எதுவும் இருக்கமுடியாது என்ற அளவிலே அந்தச் சட்டத்தைக் கழக அரசு கொண்டு வந்தது.

ஆனால் அந்தச் சட்டம் உச்ச நீதிமன்றத்தால் முடக்கப்பட்டு விட்டது. அரசியல் சட்டம் திருத்தப்படுமானால்தான் முடக்கப்பட்ட அந்தச் சட்டம் எழுந்து நடமாட முடியும், அந்த வகையிலேதான் ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்திலே எல்லாக் கட்சிகளும் ஏகோபித்த மனதாக

நிறைவேற்றினோம். டெல்லிக்கு அனுப்பினோம், டெல்லியோடு தொடர்புகொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சர் பெருமக்கள், ஆளுங்கட்சியினர் வேண்டிய நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலயங்களிலே பணிபுரிகின்ற ஊழியர்கள் கழக ஆட்சிக் காலத்திலே நிரந்தரம் செய்யப்பட்டனர். ஆனால் அந்த ஊழியர்களுக்கு ஏற்ற ஊதியம் தர பல ஆலயங்கள் இன்னமும் மறுத்து வருகின்றன. அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதாரணமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களை, ஆலயங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களை எல்லாம் நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நேற்று இங்கே வைக்கப்பட்ட மானியக் கோரிக்கையில் ரூ. 10,000 வருமானம் உள்ள கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் இனிமேல் பிராவிடன்ட் பண்ட் இப்படிப்பட்ட சலுகைகள் அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது குறித்து இந்த அறிவிப்பு இப்போது போடப்பட்டாலும் 24-2-1975 நாளன்று கழக ஆட்சிக் காலத்திலேயே ஆண்டொன்றுக்கு 1 லட்சம் ரூபாய் வருவாய் உள்ள கோயில்களின் பணியாளர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டு வந்த வைப்பு நிதித்திட்டம் இப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் 10,000 ரூபாய் வருமானம் உள்ள கோயில்களில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கும் உண்டு என்று ஆணையிடப்பட்டது. ஆனால் 1975ஆம் ஆண்டு இடையிலே ஆளுநர் ஆட்சியிலே அதுவும் தடைப்பட்டிருந்தது. இது இப்போது மீண்டும் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்களுக்கு இருக்கிற குடும்பப்பாதுகாப்புத் திட்டம் 10 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ள ஆலயங்களில் பணிபுரியும் ஆலய ஊழியர்களுக்கும், விரிவாக்கி இருந்தோம். அதுவும் ஆளுநர் ஆட்சியிலே நிறுத்தப்பட்டிருந்தது, அதையும் கவனித்து ஏற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றுத் தரப்பட்ட இந்த மானியக் கோரிக்கையில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். அறநிலையத் துறையினுடைய விளம்பரங்கள் கட்சி ஏடுகளுக்கு இதுவரையிலும் தரப்பட்டன என்கின்ற ஒரு களங்கம், என்கின்ற ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு பல அறநிலையத்துறை விளம்பரங்கள் இந்த அறிக்கையிலே தரப்படுவதற்கு மாறாகப் பல ஏடுகளிலே தரப்பட்டிருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், ''அண்ணா'' அது கட்சி ஏடுதான். அண்ணா பத்திரிகையில் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில் விளம்பரம் வந்திருக்கிறது. 21-7-1977 ஆம் தேதி மித்திரனுக்கும், 22-7-1977 அண்ணா பத்திரிகைக்கும், 23-7-1977 தென்னகத்திற்கும் தரப்பட்டிருக்கின்றன. கட்சி ஏடுகளுக்கு அறநிலையத்துறை விளம்பரங்கள் தரப்பட்டன என்ற குற்றச்சாட்டுகளைக் குறிப்பிட்டுவிட்டு, அதற்கு மாறாக நடை பெற்றிருக்கிற நிகழ்ச்சிகள் இவைகள் என்பதை எடுத்துக் காட்டுவது என்னுடைய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி கோயில் விளம்பரம் இரண்டாவது முறையாக 3-8-1977 மக்கள் குரலுக்கும் 4-8-77 ''அண்ணா'', ''தென்னகம்'' ஆகிய ஏடுகளுக்கும் மீண்டும் தரப்பட்டிருக்கின்றன. இப்படி இரண்டு மூன்று முறை அறநிலையத்துறை விளம்பரங்கள் கட்சி ஏடுகளுக்குத் தரப்படுகின்றன என்று குறிப்பிட்டுவிட்டு ஏதோ குறிப்பிட்ட கட்சி பத்திரிகைகளுக்கு விளம்பரம் தருவது என்பது ஏற்கனவே உள்ள குறைபாடுகளைத் துடைக்கிறோம் என்று சொல்கிற அரசுக்கு அழகாக இருக்காது என்பதைக் கூறுவது என்னுடைய கடமையாகும்.

இந்த அவைக்கு மிகுந்த வருத்தத்தோடு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையிலே நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் ஆனாலும் சரி, கவர்னர் உரையின்மீதான விவாதம் ஆனாலும் சரி, ஏதோ கழக ஆட்சியிலே ஊழல், ஊழல், ஊழல் என்று சொல்லப்பட்டது. ஊழல் புரிந்தவர்கள் தண்டிக்கப்படுவதில் எங்களுக்குக்

கவலை கிடையாது. ஆனால் யார் பேசினாலும் இதை எடுத்து உச்சரிக்காவிட்டால் அவர்களுடைய பேச்சு நிறைவுபெறாது என்ற முறையிலே எடுத்துச்சொன்னார்கள்.

நான் நிதிநிலை அறிக்கையிலும், கவர்னர் உரையிலும் பேசுகின்ற நேரத்திலும்கூட மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய முதலமைச்சரவர்களிடத்திலே ஒன்றைச் சொன்னேன். யார் யாரை ஊழல் பேர்வழிகள் என்று நீங்கள் குற்றஞ்சாட்டினீர்களோ அவர்களெல்லாம் தாம் ஊழல் பேர்வழிகள் அல்ல என்ற பட்டத்தைப் பெற வேண்டுமேயானால் அங்கே போய்விட வேண்டுமென்ற அளவிற்கு இங்கிருந்து அங்குப் பலபேர் வந்து உங்களுடைய நிழலிலே நின்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள் என்று அன்றைக்கே அவர்களிடத்தில் சொன்னேன். இந்த மன்றத்திலே உடைமையாக இருக்கிற Memoranda presented to the President of India.

குடியரசுத்தலைவருக்குத் தரப்பட்ட மகஜரில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களெல்லாம் இன்றைக்கு எங்கே இருக்கிறார்கள்? நம்முடைய இன்றைய முதலமைச்சர் அன்றைய தினம் ஜனாதிபதியிடத்தில், பிரதமரிடத்தில் தந்துள்ள மகஜரில் என்னென்ன கூறப்பட்டிருக்கிறது? மதுரை முத்து,

He is the mayor of Madurai and President of Tamilar Padai. In a public meeting under the presidentship of the Chief Minister he shouted at the time of Farmers' Agitation that he will cut the legs of Thiru. M.Kalyanasundaram M.P to pieces.

என்று அவர் சொன்னதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மாத்திரம் அல்ல, எஸ். முருகானந்தம்.

Thiru S. Muruganandam has issued a statement on 23rd October 1972 exposing all the scandals. Neither the parties concerned nor the Ministers have come out with any statement refuting the allegations. The people of Madurai have risen in revolt against Goonda King and are demanding enquiry immediately.

குண்டர்களுடைய அரசன் என்ற அளவிற்குக் குற்றஞ் சாட்டப்பட்ட மதுரையின் முன்னாள் மேயர் இன்றைய தினம் தி.மு. கழகத்தில் இல்லை.

முன்னாள் குடிசைமாற்று வாரியத்தின் தலைவர் அரங் கண்ணல் அவர்கள் இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை. அவர்கள் விசாரணையிலிருந்து விடுபட்டுப் போய்விட்டார்கள். அரங்கண்ணலைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது?

A full enquiry into the assets of Thiru Arangannal's family will reveal huge concealment of wealth and more starting crimes committed by him.

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதைப்போலவேதான்.

Thiru Nedunchezhian was approached by capitalists of the village and he acceded to the request and retranferred the administration of the school back to them. It is widely spoken by the public that one diamond necklace had been presented in appreciation of this gesture. Who received the necklace and what for are matters of serious enquiry.

என்று மதிப்பிற்குரிய நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைப் பற்றியும் அப்பொழுது புகார் தரப்பட்டது. இன்று அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை. மக்கள் தி.மு. கழகத்தில் இருக்கிற காரணத்தால் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி விடுவோம் என்று உறுதி அளித்த காரணத்தினால், விசாரணையிலிருந்து அவர்களெல்லாம் தப்பிவிட்டார்கள். அப்பாவிகளாக இருக்கிற, நாங்கள்தான் சிக்கிக்கொண்டிருக்கிறோம்.

அது மாத்திரமல்ல, இன்றைக்கு எம்.எல்.சியாக இருக்கின்ற சத்தியவாணிமுத்து அம்மையாரைப் பற்றி என்ன சொல்லப் பட்டது?

Award of tender first to who ever only after receipt of graft consideration and tender application only next, is but a shameful daily practice of the corrupt Minister.

அன்றாடம் இலஞ்சம் வாங்குகின்ற ஒரே அமைச்சர் சத்தியவாணிமுத்து என்று அடுக்கடுக்கான வார்த்தைகளால் அன்றைக்கு வர்ணிக்கப்பட்ட சத்தியவாணிமுத்து அம்மையார் தி.மு.க.வில் இருந்தால் விசாரணை வரலாம் என்பதற்காக அவர்கள் வேறு கட்சிக்குச் சென்று விட்டார்கள். இன்றைக்கு அகில இந்திய அண்ணா தி.மு.க கழகத்தின் உறுப்பினராக, எம்.எல்.சியாக இருக்கிறார்கள்.

அவர்களெல்லாம் கூட 4 ஆம் தேதி, இன்னும் சிலபேர் 4 ஆம் தேதி கமிட்டிக் கூட்டம் போட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்துவிடப்போகிறார்கள் என்றெல்லாம்கூட கேள்விப்பட்டேன்.

நேற்றுகூடச் சொன்னேன். பண்ருட்டி இராமச்சந்திரன் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பஸ் முதலாளிகளிடம் வசூல் செய்தார் என்று ஒரு சாட்சி சொல்லியதைச் சொன்னபோது உடனே அவர் மறுத்தார். ''நானும் மறுத்திருக்கிறேன். வீர பாண்டி ஆறுமுகமும் மறுத்திருக்கிறார்'' என்று சொன்னார். மறுத்தார். மறுத்த எங்களையெல்லாம் விட்டு விட்டார்களா? எங்களையெல்லாம்தான் கேட்டார்கள் இல்லை என்றோம். விட்டு விட்டார்களா? என்ன செய்வது? திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறோம். விடவில்லை. இங்கேயிருந்து போய் விட்டால் விட்டு விடுகிறார்கள். அதுதான் வேடிக்கை. இங்கே இருக்கிறவரையில் அவர்களெல்லாம் பாவிகள், இங்கேயிருந்து வேறு கட்சிக்குப் போய்விட்டால் புனிதர்களாக, புண்ணியவான்களாக ஆகி விடுகிறார்கள். அப்படிப்பட்ட புனிதர்களாக புண்ணியவான்களாக, இங்கேயிருந்து சென்றதும் அவர்களை ஆக்குவதற்காக தெளிக்கக்கூடிய கங்கா ஜலம் எங்கேயிருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது மாத்திரம் எனக்குத் தெரியவில்லை.

அதைப்போலவே, மக்கள் தி.மு.கவின் மிக முக்கியமான பிரமுகர் இராஜாராம் அவர்களைப் பற்றி, சேலத்தில் முன்னாள் அமைச்சர் இராஜாராம் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட நேரத்தில் அருமை நண்பர் ஜே.பி.ஆர் மிசா கைதிகளை விடுவிக்க இராஜாராம் ஒரு லட்சம் லஞ்சம் பெற்றார் என்று

பகிரங்கமாக அறிவித்தார். அங்கே நம்முடைய புரட்சித் தலைவர், நம்முடைய முதலமைச்சர், பேசும்பொழுது குறிப்பிட்டது அண்ணா ஏட்டில் வந்திருக்கிறது. ''இங்கே பேசிய ஜே.பி.ஆர் இராஜாராம் மீது ஒரு புகார் கூறினார். இராஜாராம் அமைச்சராக இருந்தபோது மிசா கைதிகளை விடுவிக்க ஒரு லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றதாக கூறிய புகார் உண்மையில் நடைபெற்றுள்ளதா என்பதைப்பற்றி அறிந்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.''

''இவ்வாறு புரட்சித் தலைவர் கூறினார் என்று அண்ணா ஏட்டிலேயே வந்திருக்கிறது. மறுநாள் இராசாராம் ஒரு பெரிய சவாலே விட்டார். ''நான் எம்.ஜி.ஆர். மீது வழக்குப்போடப் போகிறேன்.'' மன்னித்துக்கொள்ள வேண்டும், எம்.ஜி.ஆர் என்று சொன்னதற்காக-முதலமைச்சர் அப்பொழுது முதலமைச்சராக இல்லை. அப்பொழுது சவாலே விட்டார். அவர் சொன்ன சவாலை அப்படியே சொல்கிறேன். ஒரு லட்சம் வாங்கினேன் என்ற குற்றச்சாட்டை நிரூபித்தால் நான் தேர்தலில் இருந்து விலகிக்கொள்கிறேன். நிரூபிக்காவிட்டால், குறைந்தபட்சம் எம்.ஜி.ஆர். பகிரங்கமாக மன்னிப்பாவது கேட்பாரா?'' என்று அன்றைக்கே இராசாராம் சவால் விட்டார். உடனே ஜேப்பியார் சும்மா இருக்கவில்லை. மக்கள் குரல் பத்திரிகையில் எதிர்சவால் விட்டார். ''கைதியை விடுவிக்க இராசாராம் ரூ. 1 இலட்சம் வாங்கியது உண்மை. பொய் என்றால் வழக்குப் போடுங்கள்'' என்று சவால் விட்டார் ஜேப்பியார். புரட்சித் தலைவர் கலந்து கொண்ட கூட்டத்திலேயே ஜேப்பியார் அந்த எதிர்சவாலை விட்டார்.

ஆக, இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இன்றைக்கு எப்படி புனிதர்களாகி விடுகிறார்கள்? அந்த வித்தையைத்தான் எங்களுக்கு எப்படியாவது சொல்லிக்கொடுங்கள். இங்கேயிருந்து மாறி அங்கே போய்விட்டால் எப்படி நல்லவர்களாகி விடுகிறார்கள்? இங்கேயிருக்கிறவரை எப்படி பொல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. எனவே, தி.மு. கழகத்தில் இருந்தால் அவர்கள் ஊழல் பேர்வழி, வேறு இடத்திற்குப் போய்விட்டால் அவர்கள்

உத்தமர்களாக ஆகிவிடுகிறார்கள்? அந்தக் கொள்கையை நிச்சயமாக நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்பதாண்டுக் காலம் தமிழகத்திலே ஆட்சிபுரிந்து தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்திருக்கிற அளப்பரிய சாதனைகளை மறைக்க, களங்கம் உண்டாக்க அதுமாத்திரம் அல்ல, நெருக்கடி நிலையை எதிர்த்தோம் என்கின்ற ஒரே ஒரு காரணத்திற்காக 1972ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட மகஜரை, எங்களுடைய தலையிலே என்றைக்கும் தொங்குகின்ற வாளாக, அதைத் தொங்க விட்டுக்கொண்டிருந்த இந்திராகாந்தி அம்மையார் 1972ஆம் ஆண்டிலிருந்து வாளாக வைத்திருந்து, நெருக்கடி நிலைமையை எதிர்த்த காரணத்திற்காக 1976இல் விசாரணைக் கமிஷனுக்கு அனுப்பிவிட்டார்கள்.

அதற்குப் பிறகு மனு கொடுத்தவர்களை குறுக்கு விசாரணைக்கு ஆளாக்குங்கள். நாங்கள் கலந்துகொள்கிறோம் என்று சொன்னோம். குறுக்கு விசாரணைக்கு அனுமதி யில்லையென்று மறுக்கப்பட்ட காரணத்தால், நாங்கள் கமிஷன் விசாரணையில் கலந்துகொள்ளமாட்டோம் என்று விலகி விட்டோம். இப்படியெல்லாம் சாட்சிகள் தயாரிக்கப்பட்டன என்ற விவரங்களைப் பேச்சின் முதலிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் மனதிலே வைத்து, நல்லாட்சி மலர்வதற்காக, நல்லாட்சி இங்கே நடைபெறுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரையிலும் எந்தவகையிலும் இடையூறாக இருக்காது, எல்லா வகையிலும் ஒத்துழைப்பு தரும்.

அதே நேரத்திலே, தொடக்கத்திலே குறிப்பிட்டதைப் போல் நிதி ஆதாரங்களைப் பெற மத்திய அரசிலே இருந்து தரப்படுகிற எந்த இடைஞ்சல்களானாலும் அதற்கு இந்த அரசு எடுக்கின்ற எல்லாவிதமான முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு தரும் என்று எடுத்துக்கூறி, இந்த அளவிலே அமர்கிறேன்.

துணை மானியக் கோரிக்கை

உரை : 41 **நாள்:29-08-1977**

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த விவாதம் தொடங்குவதற்கு முன் ஒரு சில ஐயப்பாடுகளுக்கு நான் விளக்கம் பெற விரும்புகிறேன். ஏனென்றால் இந்த ஐயப்பாடு ஒரு வகையிலே ஒழுங்குப் பிரச்சினையாகக்கூட ஆகிறது. இன்னொரு வகையிலே அவை திசை திருப்பப்பட்டது என்ற உரிமைப் பிரச்சினைக்குகூட இடம் தருகிறது. என்றாலும் நான் அதை ஒழுங்குப் பிரச்சினையாக உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டுவராமல் ஒரு விளக்கம் கிடைக்க வேண்டுமென்ற வகையில், அவை முன்னவர் அவைக்கு மாத்திர மல்ல, இந்த அவையின் மூலம் நாட்டுக்கும், வியாபாரி களுக்கும் பொதுமக்களுக்கும் ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தங்கள் மூலமாக அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த மன்றத்தில் வைத்த வரவு-செலவு திட்டத்தில்-தமிழ் 36ஆம் பக்கத்தில் - ஆண்டுக்கு ஒரு லட்சத்துக்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டு வரப்படும் என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார். ஆங்கிலத்தில் 31 ஆம் பக்கத்தில்,

"A summary assessment procedure will be introduced for small dealers whose turnover is less than Rs. 1 lakh...."

என்று ஆங்கில பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது புதிதாக ஒன்றை அறிவிப்பது போல நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்று, அதை அறிவிக்கின்ற நேரத்திலே இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கரவொலி மூலமாக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்குத் தரப்பட்டிருக்கின்ற இந்த சட்டமுன்வடி

வினை நோக்குகின்ற நேரத்தில், இதிலே புதிதாக என்ன கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அந்த சந்தேகத்தின் காரணமாகத்தான் 4-8-77 சட்டப் பேரவையின் நிகழ்ச்சியின் போது மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார். நிதிநிலை அறிக்கையில் ஆண்டுக்கு ஒரு லட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறுவணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வணிகர்களுக்கு இருக்கிற சந்தேகம், இப்போது 50,000 ரூபாய்வரை டர்னோவர் இருந்தால் விற்பனை வரி விலக்கு இருக்கிறது. அதாவது கழக அரசு காலத்தில் அளிக்கப்பட்ட வரி விலக்கு.

இப்போது 50 ஆயிரம் ரூபாய் 1 லட்சத்திற்கு உயர்த்தப் போகிறீர்களா அல்லது கம்பவுண்டிங் சிஸ்டப்படி ''டர்ன் ஓவர்'' எவ்வளவு இருந்தாலும் வரி போடுகிற முறையைக் கொண்டு வரப்போகிறீர்களா? கம்பவுண்டிங் முறையில் வியாபாரி களுக்கு மிகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். ஆகவேதான் 50 ஆயிரம் ரூபாய் வரையில் வரியில்லை என்று இருப்பதை ஒரு லட்சம் வரைக்கும் வரியில்லை என்று உயர்த்தப்போகிறீர்களா? என்று கேட்டார். அப்போது நிதியமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் இதே வாசகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, மன்னிக்க வேண்டும் ''50 ஆயிரம் ரூபாய்தான் ஒரு லட்சமல்ல. ஆகவே உங்களுக்கு அந்தச் சந்தேகம் வரவேண்டிய அவசியம் இல்லை'' என்று 4-8-77 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தினை வெளியிட்டிருக்கிறார். மறுநாள் அவர் இல்லை. அவைக்கு நிதியமைச்சரவர்கள் வரவில்லை. பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தை மீண்டும் இந்த அவையிலே தந்தார். பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தந்த விளக்கத்திலே சொன்ன வாசகம், ''மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். 50 ஆயிரம் ரூபாய் வரையில் டர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு இன்றைக்கே விலக்கு இருக்கிறது. அது அப்படியே தொடருகிறது. 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஒரு லட்சம் வரையில் டர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு வரி விதிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஒட்டு மொத்தக் கணக்கின்படி கம்பவுண்டிங் கொண்டு வருகிறோம்.'' என்று பொதுப்பணித்துறை அமைச்சர் இங்கே

குறிப்பிட்டார். நான் அப்போது ஒரு விளக்கத்தைக் கோரினேன். நான் கேட்ட விளக்கம் ''இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஒரு லட்சத்திற்கும் குறைவாக உள்ள வணிகர்களுக்கு இந்த முறை கொண்டுவரப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறது. 1 லட்சத்திற்குக் குறைவாக விற்பனை செய்கிறவர்கள் என்றால் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்கிற வணிகர்களும் அதில் அடங்குவார்கள். நிதிநிலை அறிக்கை குறிப்பிடுவதற்கும், நிதியமைச்சர் அவர்கள் பதிலுக்கும் உள்ள முரண்பாட்டினை நான் சுட்டிக்காட்டுகிறேன்'' என்று சொன்னேன்.

அப்போது பொதுப்பணித்துறை அமைச்சர் விளக்கம் அளிக்கின்ற முறையிலே ஒரு பதிலை அளித்தார். அவர் அளித்த பதில் ''ரூபாய் 50 ஆயிரத்திற்கு வரவு-செலவு செய்கிற வியாபாரிகளுக்கு ஏற்கெனவே விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அது ஏற்கெனவே அமுலில் இருந்து வருகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஆளுங்கட்சி வரிசையில் இருக்கின்றபோது அவரால் அளிக்கப்பட்ட வரி விலக்கு இது என்பது அவருக்கே நன்றாகத் தெரியும்'' என்றார்கள். ''அது இப்போதும் தொடருகிறது. இந்த அரசும் அதனையே அவர்களுக்கு அளித்து வருகிறது. புதிதாக ஒன்றுமில்லை'' என்றார்கள். ஆனால் 50 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் வரையில் வியாபாரம் செய்கின்ற வணிகர்களுக்கு கம்பவுண்டிங் சிஸ்டம் என்று சொல்லப்படுகிறது'' என்றார்.

ஆகவே, 50 ஆயிரம் ரூபாய் வரையில் வரவு-செலவு செய்கின்ற வணிகர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சலுகை, விலக்கு தொடருகிறது என்று சொல்லப்பட்டது, அவர் குறிப்பிட்டுக் காட்டியதற்கு மகிழ்ச்சி. இது புதிதாகச் செய்யப் படவில்லை. ஏற்கெனவே இருந்து வருவதுதான் தொடருகிறது. அது மேலும் நிலைநாட்டப்படுகிறது என்பதை வலியுறுத்துகிற வகையிலேதான் பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்த விளக்கத்திலே, இந்த அரசு புதிதாக அளித்திருக்கிற சலுகை 50 ஆயிரத்திலே இருந்து ஒரு லட்சம் வரையில் வரவு-செலவு செய்கின்ற வணிகர்களுக்கு கம்பவுண்டிங் சிஸ்டம் கொண்டு வரப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

ஆனால் இங்கே வைக்கப்பட்டிருக்கிற இந்தத் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கான 77-ம் ஆண்டு விற்பனை வரித் திருத்த மசோதாவின் இணைப்பைப் பார்த்தால் அதிலே குறிப்பிட்டுள்ள பிரிவுகளில் இப்படிச் சொல்வதற்கு இடமில்லை. இணக்கம் செய்யப்பட்டு கம்பவுண்டிங் சிஸ்டத்தில் வரி என்று சொல்லவில்லை.

இப்போது 3-வது பிரிவைச் சேர்ந்த உப பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஒரு வணிகரோ அல்லது மொத்த வியாபாரியோ ரூபாய் 50 ஆயிரத்துக்குக் குறையாமல் ஆனால் 1 லட்சத்திற்கு மேற்படாமல் வாணிபம் செய்தால் அவர் கீழ்க்கண்ட வகையிலே வரி செலுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கழக அரசு இருந்தபோதும் இது இருந்திருக்கிறது. அது ஏதோ புதியதான சலுகை என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு இணக்கம் செய்யப்பட்ட முறையிலே வரி என்று சொல்லவில்லை.

7-வது பிரிவில் (எ) (1) உட்பிரிவில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் ஒரு தற்காலிக வணிகர் அல்லது வியாபார இடத்தில் தங்கி இராத வணிகர் ஒருவரது முகவர் நீங்கலாக என்ற சொற்கள் புதிதாகச் சேர்க்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

ஒரு வணிகர் அல்லது வியாபார இடத்தில் தங்கி இராத வணிகர் ஒருவரது முகவர் நீங்கலாக, வணிகர்கள் ரூ.50 ஆயிரத்திற்குக் குறையாமல், ஒரு லட்சத்திற்கு மேற்படாமல் வாணிபம் செய்தால், அந்த வணிகர் இந்த உப பிரிவின் கீழ் வரி செலுத்துவது என்றால் கீழ்க்கண்ட வகைகளிலே வரி செலுத்தலாம் என்று இருக்கிறது.

எனவே, இதில் புதிதாக அறிவிக்கப்பட்ட சலுகை அல்ல. ஆனால் நிதிநிலை அறிக்கையில் புதிதாக அறிவிக்கப்பட்ட சலுகை என்பதுபோல் வாசகம் அமைக்கப்பட்டு இந்த அவை திசை திருப்பப்படுகிறது என்பதை நான் குறைபாடாகச் சொல்கிறேன், குற்றச்சாட்டாகக்கூட சொல்ல விரும்பவில்லை. புதிய அரசின் மீது அவ்வளவு அவசரத்தில் குற்றச்சாட்டு கூற விரும்பவில்லை. ஆகவே குறைபாடாகச் சொல்கிறேன். அதை வலியுறுத்துகிற வகையில் பொதுப்பணித்துறை அமைச்சர்

அவர்கள் ரூ. 50,000 வரை ஏற்கெனவே இருந்த எக்ஸ்ம்ஷன் உண்டு. ரூ. 50,000 மேல் லட்சம் வரை கம்பவுண்டிங், இது இப்போது அரசு அளிக்கிற புதுச் சலுகை என்று கூறினார்கள். அல்ல, நிச்சயமாக அல்ல. அது ஏற்கனவே இருக்கிற சலுகைதான். எனவே புதிதாக தற்காலிக வணிகர் அல்லது வியாபார இடத்தில் தங்கி இராத வணிகரது - முகவர் நீங்கலாக' என்று இந்த ப்ராக்கட்டிற்குள்ளே இருக்கிற வாசகத்தைத் தவிர அதிலுள்ள ஜீவ ஓட்டத்தில், மைய இழையில் எந்தவிதமான மாறுதலும் செய்யப்படவில்லை. அப்படி மாறுதல் செய்யப் படாத ஒன்றை மாறுதல் செய்திருப்பதுபோல் புதிதாக ரூ. 50,000 லிருந்து ரூ. 1,00,000 வரை கம்பவுண்டிங் ஸிஸ்டம் கொண்டுவரப்பட்டிருப்பதைப் போல் நிதிநிலை அறிக்கையில் அறிவித்து அவை திசைதிருப்பப்பட்டிருக்கிறது. பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் மேலும் வலியுறுத்தி இது ஒரு புதிய சலுகை என்று கூறுவதும் அவையைத் திசைதிருப்பக்கூடிய ஒரு காரியமாகும் என்று எடுத்துச்சொல்லி இதற்கு நிதி அமைச்சர் அவர்கள் இப்போதில்லாவிட்டாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலந்து பேசி இன்றைய இந்த விவரத்தின் முடிவுரையின்போது பதிலளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதைத்தான் தாங்கள் வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கவில்லை என்பது என்னுடைய முறையீடு. குற்றச்சாட்டு என்று நான் சொல்ல விரும்பவில்லை- முறையீடு. அதை அறிவிக்காமல், என்ன அறிவித்தீர்கள் என்றால், லட்ச ரூபாய்க்கு குறைவாக வியாபாரம் செய்கிற சிறு வியாபாரிகளுக்கு 'கம்பௌண்டிங்' என்று சொன்னீர்கள். அது மாத்திரமல்ல. ஆங்கிலத்தில் நிதிநிலை அறிக்கையில் உள்ள விஷயத்தைப் படித்துக் காட்டினீர்கள்.

"A summary assessment procedure will be introduced for small dealers whose turnover is less than rupees one lakh."

என்று படித்துக் காட்டினீர்கள். ஆனால் அதுவே இங்கே தரப்பட்டிருக்கின்ற

"Annexue to Tamil Nadu General Sales Tax (Amendment) Bill 1977"

அதில் அப்படி போடவில்லை Payment of taxes at compounded rate என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவேதான் நான் இந்த முறையீட்டைச் சொல்லி, நீங்கள் விளக்கிட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்படவில்லை. தவறாக நடந்துவிட்டது என்று சொல்வதில் தவறில்லை. தவறுகளை ஒத்துக்கொள்வதில் ஏதும் தவறில்லை. பத்திரிகைக்காரர்களும் போடமாட்டார்கள். நிதியமைச்சர் தவறுக்காக வருந்தினார்கள் என்று போட மாட்டார்கள். ஏனென்றால் பத்திரிகைக்காரர்கள் உங்களுக்குச் சாதகமாக இருக்கின்ற நிலையில், நீங்கள் அதற்காக நாணப்படாமல், தவறை ஒத்துக்கொள்வதில் தவறில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தவறை ஒத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக-நான் செய்யாத தவறை ஒத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் இவ்வளவு தூரத்திற்குப் போய் பேசுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னைக் காப்பாற்ற பத்திரிக்கைக் காரர்களை துணைக்கு அழைக்கிறார். சபையையும் துணைக்கு அழைக்கிறார். நான் இன்னமும் சொல்கிறேன்-நிதிநிலை அறிக்கையில் ஏற்பட்டது மொழிபெயர்ப்பு குழப்பமே தவிர வேறில்லை. நிச்சயமாகச் சொல்கிறேன், சிறு வணிகர்கள் ''காஷுவல் டிரேடர்களை'' இதிலிருந்து விடுவிக்கவும், அதே நேரத்தில் வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற ''நான் -ரெசிடென்ஷியல் டிரேடர்'' இதுவரை பெற்றிருந்த அந்த வாய்ப்பை அகற்றுவதற்கும்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே தவிர, அவர்கள் கருதுகின்றபடி நிலைமைகள் இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆண்டொன்றுக்கு ஒரு லட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வியாபாரிகளுக்கு ஒட்டுமொத்த கணிப்புக் கொண்டுவரப்படும் என்று இருக்கிறது. அதிலே என்ன மொழி பெயர்ப்புத் தவறு. இதை நாங்கள் சொல்வதற்குக் காரணம் இது நம்முடைய நிதிநிலை அறிக்கைக்கு உண்மையிலே மாறான அறிவிப்பு. என்னுடைய வாதமெல்லாம் இது உண்மைக்கு

மாறான அறிவிப்பு. ஏற்கெனவே அந்த முறை இருக்கிறது. ஒரு லட்சத்திற்குக் குறைவாக உள்ள வணிகர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வருகிறவர்களுக்கு கம்பவுண்டிங் முறை இருக்கிறது. இப்போது கம்பவுண்டிங் செய்யப் போகிறீர்களா, எதைச் செய்யப் போகிறீர்கள்? மொழிபெயர்ப்பிலே தவறு என்று சொல்வது சரியல்ல. உண்மைக்கு மாறான தகவல் தரப்படுகிறது என்பதுதான் என்னுடைய வாதம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: உண்மைக்கு மாறான தகவல் தரப்படவில்லை. இன்னும் என்னாலே அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தயவு செய்து நீங்கள் ஏதோ ஒரு பிரச்சினையைக் கிளறிக்கொண்டிருக்கிறோம் என்று கருதிக் கொண்டு இருக்கிறீர்கள். அப்படி ஒன்றும் இல்லை. இதிலே இருக்கிற மைய உணர்வு என்று கருதுவது இப்போது கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மூலம் 50 ஆயிரத்திற்கு மேல் வியாபாரம் செய்கின்றவர்களுக்கு முன்பு ''எக்சம்ஷன்'' கொடுக்கப்பட்டு வந்தது. நானும் பேசும்போது சொன்னேன். நம்முடைய ராமச்சந்திரன் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள் இங்கே. இப்போது கொண்டு வரப்படும் தீர்மானத்தை இங்கே வந்து ''காஷூவலாக'' வியாபாரம் செய்கிறவர்கள் வரி கொடுக்காமல் ஏய்ப்பதைத் தடுப்பதற்காக கொண்டு வரப்படுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: நான் அறிந்த வரையில் அந்த நிதிநிலை அறிக்கையில் எந்த வகையிலும் தவறாக மொழி பெயர்க்கப்படவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இன்றைக்குக் கொண்டு வந்த திருத்தம் நான் சொல்கிறேன், ஏற்கெனவே இருந்த மசோதாவிற்கும், இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்தத்திற்கும் இடையில் நாம் சேர்த்திருப்பது ''நான் ரெசிடென்ஷியல் டூலர்'' ''காஷூவல் டூலர்'' இவர்கள் இங்கே வருவார்கள், வியாபாரம் செய்வார்கள், தப்பித்துக்கொண்டு போவார்கள். அவர்கள் இப்படித் தப்பித்துக் கொள்வதற்கு அதிலே இடம் இருக்கின்றது. ஆனால் நியாயமாக நடந்து கொள்கிற நமது வியாபாரிகள் அதிகமாக வரி கொடுக்க

வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே, அவர்கள் அதிலே இருந்து. . .

கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரிப்பதற்கு இல்லை யென்பதை எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் 1976-77 ஆம் ஆண்டில் வைக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அன்றைய மத்திய நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் டெல்லி நாடாளுமன்றத்தில் அறிவித்த புதிய வரிகளுக்கு இன்று ஏதோ சலுகை என்ற விதத்தில் மீண்டும் விவசாயிகளை பயமுறுத்துகின்ற அளவிற்கு தலைதூக்கியிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்த நிதிநிலை அறிக்கையிலே அதனை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1976-77 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முதல் இரண்டாம் வகைப்பாசன ஆதாரங்களில் பாசனக் கட்டணங்கள் அதிகப்படுத்தப் படுவதையும் வணிகப் பயிர்கள் மீது தனித் தீர்வை விதிக்கப் படுவதையும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள்'' என்று குறிப்பிட்டுவிட்டு, ''30-6-1977 அன்று முடிவுற்ற பசலி ஆண்டில் இந்த வரி வசூல் தள்ளிவைக்கப்பட்டது'' என்பதையும் சுட்டிக்காட்டி ''தள்ளிவைக்கப்பட்ட கட்டணங்கள் இனி வசூல் செய்யப்படமாட்டாது என இப்போது தீர்மானித்துள்ளோம்'' என்ற மகிழ்ச்சியான சேதியையும் அறிக்கையைப் படிக்கின்ற நேரத்தில் அறிவித்தார்கள்.

இந்த மூன்று வகை வாசகங்களையும் பார்க்கிற நேரத்தில் மூன்று நிலைகள் உருவாகின்றன. ஒன்று 1976-77ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசு இல்லாத காரணத்தால், அவர்களுக்காக வாதாடக்கூடிய ஒரு மாநிலச் சட்டமன்றம் இல்லாத காரணத்தால் இந்த வரிவிதிப்பு அன்றைய தினம் அறிமுகப் படுத்தப்பட்டது என்ற நிலை. இரண்டாவது, இதனை

விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கிக்கொள்ளத் தயாராக இல்லை என்பது அறிவிக்கப்பட்டபோது நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியது போல் நல்லவேளையாக நாடாளுமன்றத் தேர்தல் குறுக்கிட்ட காரணத்தால் அது தள்ளிவைக்கப்பட்டது. அந்த வரிகளைத் தள்ளிவைக்கின்ற நிலையில், தள்ளிவைக்கப்பட்டது. இனிமேல் வசூலிக்கப்படமாட்டாது என்ற மகிழ்ச்சிகரமான அறிவிப்பை முதன் முதலில் பொறுப்பேற்றுக்கொண்ட அரசு இந்த மகிழ்ச்சிகரமான அறிவிப்பையாவது மக்களுக்குத் தர வேண்டுமென்ற அளவில் அதைச் செய்தது.

இந்த மூன்றாவது அறிவிப்பைப் பார்க்கிற நேரத்தில் இந்தக் கட்டணங்கள் வசூல் செய்யப்படமாட்டாது என்று நிதியமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்ட பிறகு இப்போது மீண்டும் 12 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக, 10 ரூபாயிலிருந்து 8 ரூபாயாகக் குறைக்கிறோம் என்று இரண்டு வகையான பாசனத்தீர்வைகள் பற்றிக் குறிப்பிடுவது, ஏதோ வரியைக் குறைப்பதாக ஆகாது; 10 ரூபாய் புதிதாக, 8 ரூபாய் புதிதாக வரி போடுகிறோம் என்று பொருளே தவிர-இது வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏமாறுகிறவர்களாக இருந்தால் பாகுமொழியால் ஏமாற்றப் பயன்படலாம். விவசாயிகளிடம்-பார்த்தீர்களா, உங்களுக்குப் 10 ரூபாயை 8 ரூபாயாகக் குறைத்துவிட்டோம் 12 ரூபாயைப் 10 ரூபாயாகக் குறைத்துவிட்டோம்'' என்று இதழ் ஓரத்தில் சர்க்கரை தடவுவது போன்ற நிகழ்ச்சியாக இருக்கலாமே தவிர, குடியரசுத் தலைவர் ஆட்சியில் போடப்பட்ட, வசூலிக்கக்கூடாது என்று தள்ளி வைக்கப்பட்ட நிலுவையை நாங்கள் வசூலிக்கப் போவதில்லை; அறவே நீக்கிவிட்டோம். தீர்மானித்து விட்டோம் என்று அறிவிக்கப்பட்ட பிறகு 12 ரூபாயைப் 10 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். 10 ரூபாயை 8 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம் என்பது 'குறைத்திருக்கிறோம்' என்ற வாசகத்தின் மூலமாக இனிப்பான சேதியாகத் தெரிவிக்கலாமே தவிர, உண்மை நிலை அதுவல்ல. விவசாயிகள் 10 ரூபாய் வரி கட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்; விவசாயிகள் 8 ரூபாய் வரி கட்ட வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதிலே உள்ள நியாயங்களை நாம் உணர்ந்தாக வேண்டும். இது இன்றைக்கு ஒரு மசோதா மூலமாக நிறை வேற்றப்பட்டு இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டு, அதைப்போலவே வணிகப்பயிர் மீதான தனித்தீர்வை 1976-ஆம் ஆண்டு சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதியமைச்சராக இருந்த நேரத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றபோது அதுவும் கொண்டுவரப்பட்டது.

நண்பர் மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதுபோல் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் இப்படிப்பட்ட பயிர்களுக்கெல்லாம் வரி போடப்பட்டிருக்கிறது. அந்த வரியும் குறைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டு, அந்த வரி பற்றிய குறிப்பிலேயே இதை ஒரு மசோதாவாகக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லாமல், நோடிபிகேஷன் வாயிலாக வரிக் குறைப்பைச் செய்யலாம் என்று சொல்லப்பட்டது.

இவை எல்லாம் வரி குறைப்பா? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இந்த வரிகள் இருந்திருந்து இப்போதுள்ள ஆட்சி குறைக்கிறது என்றால் பொருந்தி எடுத்துக்கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்கும். இடைக்காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு, சிறிது காலம் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் அதிலிருந்து 2 ரூபாய், 3 ரூபாய் அளவுக்குக் குறைத்து புதிய வரி போடுகிறோம் என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். இதை நிச்சயமாகக் கைவிட வேண்டுமென்று சுட்டிக்காட்ட ஒரே காரணம்-எந்த சி. சுப்பிரமணியம் இந்த வரியைக்கொண்டு வந்தாரோ அந்தக் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. மாரிமுத்து அவர்களே கைவிட வேண்டுமென்று அறிவித்துவிட்டதால், இன்றைக்கு நாங்கள் புதிதாகச் சொல்லி நீங்கள் கைவிட வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.



பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமானியம்

உரை : 42 **நாள் : 29.07.1980**

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே பிற்பட்டோர் நலத்துறை நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கோரியுள்ள இந்த மானியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதைப்போல பல ஆண்டுக் காலம் இந்தப் பிற்படுத்தப்பட்டோர் மக்கள் நலனும் அரிசன மக்கள் நலனும் ஒரே அமைச்சரால் கவனிக்கப்பட்டு, அப்படி கவனிக்கப்பட்ட காரணத்தால் இருசாராருடைய நலனும் செம்மையாக கவனிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாக வில்லை என்பதை உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமர்ந்த பிறகு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் அரிசன நலத்துறையையும் பிற்பட்டோர் நலத்துறையையும் தனித்தனியாக இயங்க வைக்கவேண்டும் என்ற ஒரு முனைப் பான முடிவு மேற்கொள்ளப்பட்டது. அதுவரையிலே அரிசன நலத்துறையைக் கவனித்து வந்த அமைச்சரவர்கள்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலத்துறையையும் கவனித்து வந்தார்கள். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்காலத்திலேகூட இந்த மாமன்றத்தில் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் பலர் இந்த இரண்டு துறைகளும் ஒழுங்காக இயங்கவேண்டு மென்றால் இவை தனித்தனி துறைகளாக பிரிக்கப்பட்டு அதற் கென தனித்தனிச் செயலாளர்கள், இன்னும் சொல்லப்போனால் தனித்தனியான அமைச்சர்களுடைய பொறுப்பிலே விடப்பட வேண்டும் என்ற கருத்தை எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்கிற அந்தக் கடமையை நிறைவேற்றி இந்த மாமன்றத்திலே இருந்த உறுப்பினர்களிடத்திலே நான் சில கருத்துக்களைச் சொன்னபோது அப்போதே குறிப்பிட்டேன்

என்னுடைய ஆட்சிக்காலத்திலே அதாவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் வாதாடவும், போராடவும் நாம் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில் முன்னேறிய அல்லது முற்படுத்தப்பட்ட மக்களுடைய உரிமைகளும் அவர்கள் இதுவரையிலே அனுபவித்து வருகின்ற சலுகைகளும் பாதிக்கப்படாமலும் பார்த்துக் கொள்வோம் என்ற அந்த உறுதிமொழியினை இந்த அவையிலே அறிவித்து விட்டுதான் நான் 1969-ஆம் ஆண்டு முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு, பின்தங்கிய மக்களுக் காக நலக் குழு ஒன்றினை திரு. சட்டநாதன் அவர்களுடைய தலைமையில் உருவாக்கி, அவருடைய பரிந்துரையை அரசின் சார்பிலே பரிசீலித்து, பரிந்துரைகள் முழுவதையும் ஏற்கமுடியா விட்டாலும், எந்த வரையறைக்குள்ளே பரிந்துரைகள் அமைய வேண்டும் என்று கேட்கப்பட்டதோ, அந்த வரையறைக்குள் தரப்பட்ட பரிந்துரைகளை கழக அரசு அன்றைக்கு ஏற்றுக் கொண்டு, அவைகளை நிறைவேற்ற முற்பட்டது. அப்படி முற்பட்டதன் காரணமாகத்தான், இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிற கொள்கை விளக்க அறிக்கை ஏட்டில் 7,60, 68,000 ரூபாய் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக செலவழிக்கப் பட வேண்டிய தொகை என்று குறிப்பிடப்பெற்றிருக்கிறது. எதிலிருந்து 1967-68 ல் இருந்து 1,61,40,000 ஆக இருந்த தொகை 1980-81-ல் 7,60,68,000 ஆக எட்டியிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்.

இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் ஆறு கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்தது என்பதையும், ஆக அது இப்போது 7 கோடியாக உயர்வதற்கு அடித்தளம் அமைத்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதையும், நம் முடைய நிதியமைச்சரும் அன்றைக்கு பொறுப்பிலிருந்த அந்த அமைச்சரவையிலேதான் இத்தகைய முடிவுகள் மேற்கொள்ளப் பட்டு, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்காக அதிக தொகை ஒதுக்கீடு செய்கிற நற்செயல் நடைபெற்றது என்பதையும் நான் இங்கே நினைவூட்டுவதில் தவறு இல்லை என்று கருதுகிறேன்.

நான் காலையிலேயே காவல்துறை மானியத்தில் பேசுகிற போதே குறிப்பிட்டேன். நம்முடைய தமிழகத்தில் பிற்படுத்தப்

பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்களே, இவர்கள்தான் இந்துக்களுக்கும், அரிசனங்களுக்கும் மோதல் என்கிற செய்திகளை நாட்டு மக்களுக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். ஜாதி பிரிவுகளை, ஜாதி உணர்வுகளை, வருணாசிரம உணர்வுகளை உருவாக்கிவிட்ட உயர்ந்த சாதிக்காரர்கள் இன்று தாழ்த்தப்பட்டவர்களோடு மோதிக்கொள்வது இல்லை. ஆனால், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட அல்லது அரிசன மக்களுக்கும் மத்தியிலேதான் பல்வேறு நிகழ்ச்சிகளை நாம் தமிழகத்தில் அங்கிங்கு எனாதபடி எங்கெங்கும் கண்டுகொண்டிருக்கிறோம். அதை சட்டத்தினால் மாத்திரம், காவல்துறையினுடைய கண்காணிப்பினால் மாத்திரம், அல்லது முன் எச்சரிக்கை நடவடிக்கைகளால் மாத்திரம் தீர்த்துவிட முடியுமா என்றால், முடியாது. அதற்கான அணுகுமுறைகளை நாம் புதிய சிந்தனையோடு நிச்சயமாக உருவாக்கியாக வேண்டும். அதற்கான பிரச்சாரத்தை செய்ய முற்பட வேண்டும்.

''நீயே பிற்படுத்தப்பட்டவன், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நீ, உன்னினும் பிற்படுத்தப்பட்டவர்களாக கருதிக்கொண்டிருக்கும் மக்களிடையே வம்புக்கு செல்லக் கூடாது, அதே போல் தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களிடையே அமளிகள் உருவாவதும் முறை தானா?'' என்கிற இந்தப் பிரச்சாரத்தை அரசின் சார்பில் அரசு உதவியோடு இந்த மன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு செய்தால்தான் சட்டத்தைவிட காவல் துறையைவிட, முன் கூட்டியே எடுக்கப்படுகிற நடவடிக்கையைவிட, அல்லது நிகழ்ச்சிகள் நடந்து முடிந்த பிறகு காவல் துறையினர் அதன் மீது போடுகிற வழக்குகளைவிட, அது மேலானதாக, சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தினை எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் இப்பொழுது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையேதான் எங்கு பார்த்தாலும் மோதல்கள் நடைபெறுகின்றன. இடுகாட்டுக்கு செல்கிற பாதையில் பிரச்சினையானாலும் சரி, தெருவுக்குள் அவர்கள் நுழைந்துவிட்டார்கள் என்ற சச்சரவு ஆனாலும் சரி, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களிடையேதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எனவே வருணாசிரம தர்மத்திலே துளி அளவேனும் நம்பிக்கை இல்லாத நாம். நாம் என்று ஆளும் கட்சியையும் சேர்த்துக்கொள்வது இவ்விஷயத்தில் தவறு இல்லை என்று கருதுகிறேன். ஆனால் இவற்றில் யாருக்கேனும் மாறுபட்ட கருத்து இருக்குமேயானால் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தந்தை பெரியாருடைய, பேரறிஞர் அண்ணாவினுடைய வழியில் வந்தவர்கள், வர்ணாசிரம தர்மத்தை, நாட்டில் நிலைநாட்டக் கூடாது என்கிற எண்ணத்திலே வேறுபட முடியாது. வர்ணாசிரம தர்மம் என்கிற நச்சு விதையை விதைத்தவர்கள். ஏதோ சில சாஸ்திர சம்பிரதாயங்களையும் உருவாக்கி விட்டார்கள். அதற்கு தங்களை பலி கொடுத்துவிட்ட மக்கள் இன்னமும் தங்களுக்குள்ளாகவே அமளியில் ஈடுபட்டு மேலும் மேலும் தாழ்ந்து தாழ்ந்து போய்க்கொண்டே இருக்கிறார்கள். எனவே அந்த சமுதாயத்தை முதலிலே அவர்கள் நல்லபடியாக வாழ விடுவதைக் காட்டிலும், அமைதியாக வாழவிட வேண்டும் என்பதிலே நாம் அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும். அந்த வகையிலே தான் இந்த மானியக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களை மிக முக்கியமாக எடுத்துக்கூறுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இங்கே தரப்பட்டிருக்கிற பட்டியல்களில் 1966-67ம் ஆண்டில் குற்றமரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் மாணவர்களுக்கு ரூ. 13.71 லட்சம் செலவழிக்கப்பட்டு 24,745 மாணவர்கள் உயர்பள்ளிப் படிப்பும், 1,619 மாணவர்கள் கல்லூரிப் படிப்பும் பெற்றார்கள் என்ற பட்டியல் இங்கே தரப்பட்டிருக்கிறது. 1974-75ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உயர்பள்ளிப் படிப்பு படித்தவர்கள் எண்ணிக்கை 60,661 என்று வளர்ந்திருப்பதையும் அதற்காக செலவு செய்யப்பட்ட தொகை 35.66 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருப்பதை நமது நிதி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பே நமக்கு எடுத்துக்காட்டுகிறது. அதே குறிப்பில் 1978-79ஆம் ஆண்டு கணக்கைப் பார்த்தால் 31 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்து விடுகிறது. 1976-77ஆம் ஆண்டு கணக்கைப் பார்த்தால்கூட 60,000 மாணவர் எண்ணிக்கை 57,000ஆகக் குறைகிறது. 35.66 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்ட

தொகை 33.65 லட்சம் ரூபாயாக 1976-77ல் குறைந்துவிடத் தொடங்குகிறது.

அதேபோல் பிற்பட்ட வகுப்பினர் 1966-67ல் உயர் பள்ளிப் படிப்பு படித்த மாணவர்களின் எண்ணிக்கை 10,306. கல்லூரிப் படிப்பு பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 21,099. அவர்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 82.90 லட்சம் ரூபாய். 1966-67ல் செலவழிக்கப்பட்டதற்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று தனி அமைப்பு, தனி நிர்வாகம், தனி அமைச்சர் இவைகள் எல்லாம் உருவாக்கப்பட்ட பிறகு 1975-76ல் 10,356 லிருந்து உயர்நிலைப் பள்ளிப் படிப்பு மாணவர்கள், 90,620 என்றும் கல்லூரிப்படிப்பு பெற்றவர்கள் 21,000-ல் இருந்து 71,433 என்று உயர்ந்தும் 82 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதற்கு மாறாக 317 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதும் நீங்கள் வைத்திருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பே காட்டுகிறது.

ஆனால் இன்றைக்கு 1976-77-ல் அது குறையத் தொடங்கி 295 லட்சமாகி, இப்போது 264 லட்சம் ரூபாய் என்ற அளவிற்குக் குறைந்திருக்கிறது. 1977-78, 1978-79ல் ஓரளவு குறைந்ததற்குக் காரணம் காட்டினாலும் 1976-77 ல் 317 லட்சம் என்றிருந்தது 295 லட்சமாக ஏன் குறைந்தது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவே பிற்பட்டோர் நலனில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய அக்கறை போதுமான அளவு எடுத்துக்கொள்ளப்பட வில்லையோ என்பதைத்தான் இது காட்டுகிறது.

அதேபோல் பிற்பட்ட மாணவர்களுக்கான விடுதிகள் 1966-67ல் 11ஆக இருந்தது. இன்று 261 விடுதிகளாக மாறி யிருக்கிறது என்றாலும் நமது நண்பர் திரு. ஆண்டித்தேவர் அவர்கள் எடுத்துக்காட்டியதுபோல் குற்ற மரபினர் பட்டியலி லிருந்தும் நீக்கப்பட்ட இனத்தவருக்கு அம்மாணவர்கள் எண்ணிக்கை 1966-67ல் 3,619 என்றிருந்தது. இன்றைக்கு 5,369 என்றிருக்கிறதேயல்லாமல் பெருமளவு அது உயர்ந்துவிட

வில்லை.அதேபோல் பிற்பட்ட மாணவர்களின் விடுதிகளில் மாணவர் எண்ணிக்கை 1967-ல் 979 என்றிருந்தது 1975-76 ல் 12,060 என்று உயர்ந்து 1978-79ல் 14,565 ஆக உயர்ந்து 1979-80-ல் 15,538 ஆக உயர்ந்திருந்தாலும் அது போதுமான அளவிற்கு விகிதாசார உயர்வு அல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட மக்கள் பிரச்சினை இந்த கொள்கை விளக்க அறிக்கையில் இடம் பெறவில்லை என்றாலும் அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டியது இந்த அரசுக்குரிய கடமை என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பட்டோர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இடம் ஒதுக்கப் படுவது, ஏற்கெனவே தமிழகத்தில் குறிப்பாக நீதிக்கட்சிக் காலத்தில் விவாதிக்கப்பட்டு திரு. முத்தையா முதலியார் அவர்கள் பொறுப்பில் இருந்த காலத்தில் கம்யூனல் ஜீ.ஓ. அறிமுகப்படுத்தப்பட்டு அந்த கம்யூனல் ஜீ.ஓ. அரசிய லமைப்புச் சட்டம் உருவான பிறகு அந்த அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு யார் யார் ஒத்துழைத்தார்களோ அவர்களே தமிழ்நாட்டிற்கு திரும்பி கம்யூனல் ஜீ.ஓ.கூடாது என்று நீதிமன்றத்திற்குச் சென்று உயர்நீதிமன்றத்தில் அவர்கள் வெற்றி பெற்று, இப்படி வெற்றி பெற்ற போது சட்டமன்றத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள்கூட அன்றிருந்த காங்கிரஸ் அரசைப் பார்த்து-அப்போது இணைந்திருந்த மாநிலங்கள் மதராஸ் ப்ராவின்ஸ் என்றளவில் இருந்த அந்தக் காலக்கட்டத்தில் இங்கிருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட கம்யூனல் ஜீ.ஓ. ஹைகோர்ட்டில் அடிபட்டுப் போய்விட்டது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பேராபத்து விளைவிக்கக் கூடிய ஒன்றாகும் என்று கூறினார்கள்.

எனவே, கம்யூனல் ஜீ.ஓ.வை காப்பாற்றக்கூடிய பொறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அன்றைக்கு இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்து வாதாடி, அன்றைக்கு இருந்த அரசு உயர்நீதிமன்றம் அளித்த பாதகமான தீர்ப்பை எதிர்த்து, உச்சநீதிமன்றத்திற்குச் சென்று, உச்சநீதிமன்றமும் பாதகமான தீர்ப்பை அளித்த பிறகு, தந்தை

பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நேரடியாக இல்லாவிட்டாலும், தங்க ளுடைய கருத்தை, அரசியல் செல்வாக்கால் எடுத்துச்சொல்லக் கூடிய வகையிலே இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மிக மிக முக்கியமானது என்பதை அறிந்தார்கள். ஏனென்றால், கரை ஏற்றப்படவேண்டிய மக்கள், இன்றைக்கு பாதாளத்திலே உள்ள பிற்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமைந்து இருக்கிறது. இந்த கம்யூனல் ஜீ.ஓ. வில் கை வைக்கப்பட்டு, அழிக்கப்படுமானால், இவர்கள் காலாகாலத்திற்கு தலைதூக்க முடியாது என்பதை உணர்ந்து போராட்டத்திலே பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் அன்றைக்கு ஈடுபட்டார்கள். தமிழகத்தின் கொந்தளிப்பை அன்றைக்கு இந்தியாவினுடைய பிரதமராக இருந்த பண்டித நேரு பெருமான் அவர்களுக்கு எடுத்துக்காட்டி, நேரு அவர்கள் அரசியல் சட்டத்திலே முதல் தடவையாக கொண்டுவந்த முதல் திருத்தமே, இந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சாதகமாக கொண்டுவந்த திருத்தம்தான். இந்த திருத்தத்தின்படி, எஜுகேஷனலி அண்டு சோஷியலி பேக்வர்ட் என்று அந்த வார்த்தைகள் இடம்பெற்று, கல்வித் துறையிலும், சமுதாயத் துறையிலும் பின்தங்கிய மக்கள் என்ற அடிப்படையிலே திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இந்தத் திருத்தத்திற்குச் சாதகமாக அப்போது இருந்த அரசு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்வதற்காக தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 சதவிகிதம் அதாவது கல்லூரிகளிலோ அல்லது வேலை வாய்ப்புகளிலோ 100 இடங்கள் இருந்தால், அதிலே 16 இடங்கள் அரிசன மக்களுக்கு என்றும், 25 இடங்கள் பின் தங்கிய நிலையிலுள்ள பிற்பட்ட மக்களுக்கு என்றும், மீதமுள்ள 59 இடங்கள் ஓபன் காம்படிஷன் என்ற முறையில் அதிலே எல்லோரும் போட்டியிடக்கூடிய முறையிலே, அதாவது பிற்ப்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், மற்றவர்களும், போட்டியிடலாம் என்ற அளவில் அரிசனங் களுக்கு 16 சதவீதம், பின்தங்கிய மக்களுக்கு 25 சதவீதம், ஓபன் காம்படிஷன் அதாவது எல்லோரும் போட்டியிடுகின்ற அளவிற்கு 59 சதவீதம் என்றும் செய்யப்பட்டது. அதற்குப்

பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, தங்களையும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சிறு சிறு பிரிவினர் வேண்டுகோள் விடுத்த முறையில், அவர்களையும் சேர்க்கப்பட வேண்டு மென்ற முறையிலே, பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் சதவிகிதத்தை உயர்த்தவேண்டுமென்று கருதி, சட்டநாதன் சிபாரிசையும் மனதிலே வைத்துக்கொண்டு, கழக ஆட்சியில் அரிசனங்களுக்கு இருந்த 16 சதவிகிதத்தை 18 சதவிகிதமாக உயர்த்தினோம் அதேபோல், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 25 சதவிகிதம் என்றிருந்ததை 31 சதவிகிதமாக உயர்த்தினோம். ஓபன் காம்படிஷன் 51 சதவிகிதம் என்று நிர்ணயித்து அறிவித்தோம். அது நடைமுறையிலே செம்மையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.

கடந்த ஆண்டு அண்ணா தி.மு.க ஆட்சியில் திடீரென்று ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போடுவதுபோல், 9,000 வருமான வரம்பு கட்டப்பட்டு, ''எக்னாமிகலி பேக்வர்ட்'' என்று, அதாவது பொருளாதாரத்திலே பலவீனமாக இருக்கின்றவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோராக கருதப்படவேண்டுமென்ற முறையிலே இந்த வருமான வரம்பைக் கொண்டுவந்தார்கள். ஏற்கெனவே இருந்த 31 சதவிகித இடஒதுக்கீட்டில், இந்த 9,000 ரூபாய்க்குக் கீழே வருமானம் வரக்கூடியவர்கள்தான் இடம் பெறுவார்கள். மற்றவர்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்டவர்களாக கருதப்பட மாட்டார்கள் என்றும், அவர்கள் ஏற்கெனவே ஒதுக்கப் பட்டிருக்கிற இந்த 51 சதவிகித இடஒதுக்கீட்டிலேதான் போட்டியிட வேண்டுமென்றும், அந்த அடிப்படையிலே ஒரு உத்தரவு வந்தது. அதை எதிர்த்து நாடெங்கும் கட்சி சார்பற்ற முறையிலே எல்லோரும் வாதாடினார்கள், போராடினார்கள், திராவிடர் கழகம் போராட்டம் நடத்தியது. திராவிட முன்னேற்றக் கழகம் மாநாடுகளைக் கூட்டி, தீர்மானங்களைப் போட்டது. போராட்டம் நடத்துவதற்கும் முன் வந்தது. அந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எடுத்து வைத்த கருத்தை நான் நம்முடைய நிதி அமைச்சர் அவர் களுக்கு, பிற்பட்டோர் நலனைக் கவனிக்கின்ற நிதி அமைச்சர் அவர்களுக்கு இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியோடு இந்த மானியத்தைப் பற்றிய விவாதம் மேலும் சிறிது நேரம் நீடிக்கும்.

கலைஞர் மு.கருணாநிதி: பொருளாதாரத்துறையில் பலகீனப்பட்டிருக்கின்ற மக்களுக்குச் சலுகைகளை அல்லது இட ஒதுக்கீடுகளைச் செய்யவேண்டுமென்பதிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த விதமான கருத்து மாறுபாடும் இல்லை. எனவேதான் கழகத்தின் சார்பில் அன்றைக்கே மிகத் தெளிவாக எடுத்துவைக்கப்பட்டது. 31 சதவிகிதம் பின் தங்கிய மக்களுக்கு அப்படியே இருக்கட்டும். அதிலே கை வைக்காதீர்கள். 18 சதவிகிதம் அரிசன மக்களுக்கு அப்படியே இருக்கட்டும். அதிலும் கை வைக்காதீர்கள். ஓப்பன் காம்படிஷன் எல்லோரும் போட்டியிடக்கூடிய 51 சதவிகிதம் இருக்கிறதே அந்த 51 சதவிகிதத்தில் 10 சதவிகிதம் அல்லது 15 சதவிகிதம் தேவைப்பட்டால் 20 சதவிகிதம்கூட 'எகானாமிகலி பாக்வர்டு-பொருளாதாரத் துறையில் பலகீனமாக இருக்கக்கூடிய மக்களுக்கு, அவர்கள் முற்பட்ட மக்களாக இருந்தாலும், பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, மக்களாக இருந்தாலும்- வெளிப் படையாகச் சொல்ல வேண்டுமென்றால், பிராமணர் களாக இருந்தாலும், முதலியார்கள், செட்டியார்கள், பிள்ளை மார்களாக இருந்தாலும் பொருளாதாரத்தில் பலகீனமாக உள்ளவர்களுக்கு அந்த 51 சதவிகிதத்தில் 10 அல்லது 15 அல்லது 20 சதவிகிதம் தனியாக ஒதுக்கிக்கொடுத்துவிடுங்கள் என்ற கருத்து கழகத்தின் சார்பில் வைக்கப்பட்டது. நாடு கொந்தளிப்புக்கு ஆளாகியி ருக்கிறது என்பதை உணர்ந்த பிறகு, இன்னும் சொல்லப் போனால் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள், ஒன்பதாயிரம் ரூபாய் வருமான வரம்பு சரிதான் என்று வாதிட்ட நிதியமைச்சர் நாவலர் போன்றவர்களும் மற்றவர்களும் இணக்கம் தெரிவித்து எடுத்து வைக்கப்பட்ட கோரிக்கையைக் கவனிக்க முன்வந்தார்கள்.

அப்படியே 'ஸ்டேடஸ்கோ' வை விட்டுவிட்டார்களா என்றால் இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொன்ன கருத்தையாவது ஏற்றுக்கொண்டு 51 சதவிகிதத்தில் பொருளாதாரத்தில் பலகீனமாக இருக்கின்ற முற்பட்டோரும்

பலன் அனுபவிக்கத்தக்க அளவு 51 சதவிகிதத்தில் 10 அல்லது 15 அல்லது 20 சதவிகிதம் பொருளாதாரத்தில் பலகீனமாக உள்ளவர்களுக்கு ஒதுக்கினார்களா என்றால் அதுவும் இல்லை. 31 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வருமான வரம்பைக் கொண்டு வந்த அண்ணா தி.மு.க. ஆட்சியாளர்கள் 31 சதவிகிதந்தானே கேட்கிறீர்கள், மறுபடியும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி 50 சதவிகிதம் என்று தாராளமாக பிற்பட்ட மக்களுக்கு என்று தந்தார்கள்.

நான் கேட்பதெல்லாம் நீங்கள் வாதிட்டீர்களே, முதலமைச்சரிலிருந்து இந்த அமைச்சரவையில் இருக்கும் அத்தனை அமைச்சர்களும், பொதுச்செயலாளர் நாவலர் அவர்களும் வாதிட்டு வந்தீர்களே, பொருளாதாரத்தில் பலகீனப்பட்ட முற்பட்ட மக்கள் என்னாவது என்று கேட்டீர்களே-திடீரென்று உங்கள் உத்தரவை வாபஸ் பெற்றுக்கொண்டு அறிவிப்புச் செய்தீர்கள். பொருளாதாரத்தில் பலகீனப்பட்ட பிற்பட்டமக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது முற்பட்ட மக்கள் என்ன ஆவார்கள்? அதை மறந்து விட்டீர்களே, என்ன செய்யப் போகிறீர்கள்? அவர்கள் அப்படியே திரிசங்கு சொர்க்கத்தில் நிற்கப் போகிறார்களா? பிற்பட்டோர் நல அமைச்சர் அவர்கள் முற்பட்ட மக்கள் நலனையும் கவனிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள். முற்பட்டோரில் குறிப்பாக பொருளாதாரத்தில் பலகீனமாக இருக்கும் பகுதியினர் பலன் பெற என்ன நடவடிக்கை?

நாங்கள் போராடினோம், ஆத்திரப்பட்டு, கோபப்பட்டு 31 சதவிகிதம் கேட்கிறீர்களா, இந்தா, 50 சதவிகிதம் பிடியுங்கள் என்று கூறி விட்டீர்கள்! இது எல்லா மக்களையும் திருப்திப்படுத்துமா என்று எண்ணிப்பார்த்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு அமைகிறேன்,

மதுவிலக்கு, விற்பனைவரி மானியம்

உரை : 43 **நாள்: 09.03.1982**

கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே! மதுவிலக்கு, விற்பனை வரி ஆகிய தலைப்புகளில் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்புகள் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனை வரியைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு 620 கோடி ரூபாய் கிடைக்கும் என்று வரவு-செலவுத் திட்டத் திலே நிதி அமைச்சர் அவர்கள் கோடிட்டுக் காட்டி இருக் கிறார்கள். விற்பனை வரி என்ற ஒன்றை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கொண்டு வந்ததற்குக் காரணமே மதுவிலக்கினால் ஏற்படுகின்ற கலால் வருமான இழப்பை ஈடுகட்ட வேண்டுமென்ற நோக்கம்தான். ஆனால் இப்போது மதுவிலக்கையும் ஏறத்தாழ, ஏன் முழுமை யாகவே ரத்து செய்துவிட்டு, அதன் மூலமாக 100 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்றும் அறிவித்துவிட்டு, சுமார் 38 கோடி ரூபாய்க்கு, நேற்றைய தினம் விலக்களிக்கப்பட்ட பட்டு நூல்வரியைத் தவிர, மற்ற வரிகள் அனைத்தையும் உயர்த்தி, நிதி நிலை அறிக்கையிலே இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

இதிலே பலமுனை வரி 4 சதவீதம் என்பதை 5 சதவீதம் என்று உயர்த்தி இருப்பதால் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் கிடைக்கும் என்று நான் கூறியதை நிதி அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் மறுத்து, 12 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இந்தப் பலமுனை வரி 4 சதவீதம் 5 சதவீதமாக உயர்ந்து இருப்பதன் மூலம் கிடைக்கும் என்ற அறிவிப்பைக் கூறியிருக் கிறார்கள். எப்படியும் திருத்த மதிப்பீடு அடுத்த நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்படும்போது வியாபாரிகள் மூலமாக நான் அறிந்த இந்த 60 கோடி ரூபாய் சரியானதா அல்லது

அதிகாரிகள் மூலம் நிதி அமைச்சர் அவர்கள் அறிந்து கொண் டிருக்கிற 12 கோடி ரூபாய்தான் சரியானதா என்பது விளங் கிடும்.

அவர்களுடைய கூற்றுப்படியே பார்த்தாலும் 620 கோடி ரூபாய் விற்பனை வரி மூலமாக கிடைக்கின்ற இந்தப் பட் ஜெட்டில் ஒரு 12 கோடி ரூபாய், அவர்களுடைய கணக்குப்படி, இந்தப் பலமுனை விற்பனை வரியை உயர்த்துவதன் மூலம் பெறுகின்ற முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டுமா என்ற கேள்வியை நான் எழுப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஒரு சதவீத வரியின் மூலம் எந்தெந்தப் பொருட் களினுடைய விலை உயரும், எந்தெந்தப் பொருட்களுக்கு வரி உயரும் என்றால் புளி, மஞ்சள், மிளகாய், தனியா என்று சொல்லப்படுகிற மல்லி, வெல்லம், சீரகம், பூண்டு, கடுகு, சீயக்காய், குங்குமம், கற்பூரம், குண்டூசி, பொம்மை இது போன்ற பொருட்களுடைய விலைகளை உயர்த்துவதற்கும், அவைகளுக்கான வரிகளை உயர்த்துவதற்கும் வழி ஏற்பட்டிருக்கின்றது. எனவே இந்த 12 கோடி ரூபாயை 620 கோடி ரூபாய் விற்பனை வரியாகக் கிடைக்கும் என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் இந்தக் குறைந்த அளவு வருகின்ற இந்தத் தொகையைக்கூட விட்டுக்கொடுக்க அரசு முன்வராதது வருந்தத்தக்கது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டுகிறேன்.

நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்து இருக்கக்கூடிய அறிக்கையில் மது விலக்கைப் பற்றி திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்கின்ற வாசகம் குறித்து அனேகமாக எல்லாக் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இந்த அரசு மதுவிலக்கு கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கை கொண்டு இருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு மது விலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவிக்கிறது என்று அமைச்சரவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது இந்த ஆண்டின் தலைசிறந்த நகைச்சுவை என்று நம்முடைய நண்பர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய அம்பிகாபதி அவர்களும் இதைப் போன்றே

வேடிக்கையான ஒரு விளக்கம் இருக்கவே முடியாது என்று குறிப்பிட்டார்கள். மற்றும் பல கட்சியினுடைய தலைவர்களும் இது ஒரு முரண்பாடான வாசகம் என்றும் செயலுக்கும் இந்த வாசகத்துக்கும் எள்ளளவு பொருத்தமும் கிடையாது என்பதை இங்கே எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப்போல 9,541 கள் கடைகள் திறக்கப்பட்டு 5,067 சாராயக் கடைகள் திறக்கப்பட்டு 208 பிராந்தி, ஒயின் ஷாப்கள் திறக்கப்பட்டு ஒவ்வொரு சாராயக் கடைக்காரரும் 4 கிளைக்கடைகளைத் திறந்து கொள்ளலாம் என்று அனுமதியை யும் அளித்துவிட்டு இவைகள் அனைத்திற்கும் பிறகு நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்று சொல்வது ஒருவனுடைய இரண்டு கால்களையும் வெட்டி விட்டு, ''ஆஹா'' எவ்வளவு அருமையாக நடக்கிறார் பார்'' என்று சொல்வதைப் போலவும், ஒரு பெண் அவளுடைய அருமை கணவனைக் கொலை செய்துவிட்டு அவளைப் பார்த்து ''இவளைப் போல் சுமங்கலி கிடையாது'' என்று கூறுவதைப் போலவும், நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் கிட்டத்தட்ட 15,16 ஆயிரம் கடைகள் மதுக்கடைகள், சாராயகள், கடைகள், அன்னிய மது வகையறாகடைகள் அத்தனையையும் திறந்துவிட்டு அதற்குப் பிறகு கிளைக் கடைகளையும் திறக்கலாம் என்று அனுமதித்துவிட்டு நாங்கள் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருக்கிறோம். திட்ட வட்டமாக இருக்கிறோம், அதிலே எந்தத் தயக்கமும் கிடையாது. அந்தச் சட்டத்தை ரத்து செய்வதே இல்லை என்று கூறுவது மிகுந்த வேடிக்கையான, வேதனையான, விசித்திரமான வாதமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கிடையிலே மற்றொரு விசித்திரம். கடந்த சில வாரங்களுக்கு முன்பு மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய 104-வது பிறந்த நாள் விழா சென்னை மாநகரத்திலே நடை பெற்றபோது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதிலே கலந்து கொண்டு ஒரு அறிவிப்பு செய்தார்கள். அவர்களுடைய கட்சி ஏட்டிலேயே அந்த அறிவிப்பு பெருந் தலைப்போடு வெளியாகி இருக்கின்றது. இந்த ஆண்டு பட்ஜெட்டின்போது மதுவை அருந்தக்கூடாது என்பதைச் செயல்படுத்த திட்டம் கொண்டுவர

இருக்கிறோம்'' என்று அவர் குறிப்பிட்டார். 100 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது என்ற புள்ளி விவரத்தையும் தந்து விட்டு, 15,000க்கு மேற்பட்ட கடைகளையும் திறந்துவிட்டு மூன்று, நான்கு கட்டங்களில் இந்த வியாபாரம் எப்படி நடத்தப் படலாம் என்பதற்கான வழி வகைகளையும் செய்துவிட்டு முதலமைச்சர், ராஜாஜி விழாவின் போது -சில வாரங்களுக்கு முன்பு பேசுகிற நேரத்தில் ''இந்த ஆண்டு பட்ஜெட்டிலே மது அருந்தக் கூடாது என்பதை செயல்படுத்தத் திட்டம் கொண்டுவர இருக்கிறோம்'' என்று அறிவித்தது வேடிக்கையா, வினோதமா என்பது எனக்குப் புரியவில்லை. அவர்களுடைய அறிவிப்பை நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியக் கூறுகள் அல்லது அதற்கான வழி வகைகள் அல்லது அதற்கான திட்டங்கள் ஏதாவது நிதியமைச்சருடைய நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றிருக்கிறதா என்று எல்லாப் பக்கங்களையும் புரட்டிப் பார்த்துவிட்டேன். எங்கும் அந்த அறிவிப்பினுடைய சாயல் கூடத் தென்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

25 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் மது அருந்தலாம் என்று இந்தச் சர்க்கார் அறிவித்து ஒரு அருமையான ஆணை யைப் பிறப்பித்திருக்கிறது என்று ஆளும் கட்சியை சார்ந்த வர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டினார்கள். ஆனால், 25 வயதுக்குக் குறைந்தவர்கள், ஏன் 14 வயது 16 வயது நிறைந்த சிறார்கள் கூட மதுக்கடைகளிலே மது அருந்துகிற காட்சியை, புகைப்படங்களாக ஆக்கி தமிழ்நாட்டில் உள்ள சில கட்சி சார்பற்ற ஏடுகள் வெளியிட்ட செய்தியை யாவரும் அறிந்திருக் கிறோம்.

மற்றொன்று அமைச்சருடைய குறிப்பிலே காணப்படு கிறது. பொது இடங்களிலே குடிப்பதற்கு அனுமதியில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சென்னையிலும் சரி, மற்ற நகரங்களிலேயும் சரி எல்லா உணவு விடுதிகளிலேயும், ஓட்டல்களிலேயும், பொதுவாக அமர்ந்து சாப்பிடுகிற இடங்களிலேயெல்லாம் மது வகையறாக்கள் பரிமாறப்படுகிறது அல்லது மதுப்புட்டிகளை வைத்துக் கொண்டே பலரும் உண்டு, அருந்துகிற காட்சியை நேரிடையாக

பார்க்க முடிகிறது. ஆனால் ஏட்டளவில் எழுத்தளவில் பொது இடங்களில் குடிப்பதற்கு அனுமதியில்லை என்ற வாசகங்கள் ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது.

பெர்மிட் பெற்றவர்கள் மட்டும்தான் மது அருந்தலாம் அவர்களுக்கு மட்டும்தான் மது அருந்த அனுமதி கொடுக்கிறோம். அதுதான் நாங்கள் மதுவிலக்கை, மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யவில்லை என்பதற்கு அடையாளம் என்ற வாதத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பல இடங்களிலே எடுத்துப் பேசி வருகிறார்கள். ஆனால், அவருடைய கணக்குப்படியே சாராயம் குடிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள பெர்மிட்டுகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து எழுபத் தாறாயிரத்து முன்னூற்று இருபது. அவர் தந்துள்ள கணக்குப்படி சாராயக் கடைகளுடைய எண்ணிக்கை ஐயாயிரத்து அறுபத்தி ஏழு (5,067). இங்கேதான் நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண் டும். ஒரு கடையில் ஒரு நாளைக்கு 200 பேர்கள் அல்லது 500 பேர்கள் குடிக்கிறார்கள் என்றாலும்- இந்த 200, 500 கூட வேண்டாம்- குறைவாகவே மதிப்பிட்டுச் சொல்கிறேன். ஒரு சாராயக் கடையில் 300 பேர்கள் வந்து குடிக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டாலும், ஏறத்தாழ 15 இலட்சம் பேர்கள் குடிக்கிறார்கள். ஆனால், அமைச்சருடைய புள்ளி விவரப்படி தரப்பட்டிருக்கிற மொத்த பெர்மிட்டுக்கள் 2,76,320 தான். மீதம் உள்ள 13 இலட்சம் பேர்கள், பெர்மிட் வாங்காமலேயே குடிக் கிறார்கள் என்பதை நான் முழு கணக்கையும் பார்த்து அல்ல தோராயமாகக் கணக்கு வைத்தே என்னால் எடுத்துக்காட்ட முடிகிறது.

எனவே, இந்த நேரத்திலே நாங்கள் 2 இலட்சம் பேர் களுக்கு பெர்மிட் வழங்கியிருக்கிறோம். ஆனால், பல இலட்சம் பேர்கள் பெர்மிட் இல்லாமல் குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலை நாட்டிலே உருவாகிக்கொண்டிருக்கும்போது, நாங்கள் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்யவில்லை. மது விலக்குக் கொள்கையிலிருந்து இந்த அரசு மாறவில்லை என்று கூறுவது முன்னுக்குப் பின் முரணான செய்தி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மது சாராயக் கடைகளுக்கு விற்பனைக்கு உரிமங்கள் வழங்குவதற்கு இந்த அரசு முடிவு எடுத்தது. அமைச்சர் குறிப்பிடுகிறார், ''மொத்தம் உள்ள 16 மாவட்டங் களில் 13 மாவட்டங்களுக்கு வியாபாரிகள் நியமிக்கப்பட் டிருப்பதாகவும், எஞ்சிய 3 மாவட்டங்களில் 2 மாவட்டங்களில் உயர்நீதிமன்ற தடை ஆணையின் காரணமாகவும் (ஸ்டேயின் காரணமாகவும்); ஒரு மாவட்டத்திலே தகுந்த நபர் கிடைக்காத தாலும், விற்பனையாளர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை'' என்று அமைச்சர் அவர்கள் இங்கே அச்சிட்டுத் தந்துள்ள கொள்கை விளக்கக்குறிப்பு அறிக்கையிலே 4ஆவது பக்கத் திலே, 12ஆவது பாராவிலே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அப்படிப்பட்ட ஸ்டே எதுவும் உயர்நீதி மன்றத்திலே, இந்த அவையிலே விவாதிக்கப்படுகிற நேரத்திலே இருக்கிறதா என்றால், இல்லை. எனவே, ஒரு தவறான திசைக்கு இந்த மன்றத்தில் உள்ளவர்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்புகிறாரோ என்ற ஐயப்பாடு எனக்கு எழுவதற்கு நியாயம் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அறிவார்கள்.

தடை காரணமாக நிறுத்தப்பட்டதாகச் சொன்ன இரண்டு மாவட்டங்களில் ஒன்று நெல்லை மாவட்டம், மற்றொன்று பெரியார் மாவட்டம். பெரியார் மாவட்டத்தைப் பற்றித்தான் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். வேடியப்பனோ அல்லது வாடியப்பனோ பெயர் சரியாகத் தெரியவில்லை. உரிமம் கிடைக்காத காரணத்தால், வாடியிருந்த தின் காரணமாக, வாடியப்பன் என்று பெயர் பெற்றாரோ என்னவோ தெரியாது. அவர் வேடியப்பனாக இருந்தாலும் சரி, அவர் உரிமம் பெறுவதற்கு தகுதியானவர் என்கிற சான்றை 14-7-1981 ஆம் தேதி மது விலக்குக் கமிஷனர், அவருக்கு அந்த உரிமத்தை வழங்கலாம் என்று முடிவு செய்த கருத்தை அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், அரசாங்கம் அந்த மனுவை நிராகரித்து விடுகிறது. காரணம், அந்த வேடியப்பன் அல்லது வாடியப்பன் ஒரு லேவாதேவிக்காரர் என்ற காரணம் காட்டி. உடனடியாக அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் செல்கிறார். உயர்நீதிமன்ற

நீதிபதி மாண்புமிகு சத்தியதேவ் அவர்கள் 1982 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 10ஆம் நாள் அளித்த தீர்ப்பில் அரசு ஆணையை தள்ளுபடி செய்து சனவரி 30 ஆம் தேதிக்குள் அவருக்கு மது விற்பனை உரிமத்தை வழங்கிவிட்டு உடனடி யாக உயர்நீதிமன்றத்திற்கு தகவல் கொடுக்கவேண்டும் என்று அரசுக்கு ஆணை பிறப்பிப்பதை போல் ஒரு தீர்ப்பை வழங்கு கிறார். இதில் உயர்நீதிமன்றத் தடை எங்கே இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அதற்குப் பிறகு புள் பெஞ்சுக்கு அரசாங்கச் சார்பில் இந்த வழக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. புள் பெஞ்ச் இடைக்கால தடையைக் கொடுத்துவிட்டு மறுபடியும் புள் பெஞ்ச் விசாரணையில் நீதிபதி திரு. கோகுல கிருஷ்ணன் அவர்களும் மற்றவர்களும் விசாரித்து அவர் களுக்கு உரிமம் கொடுக்காமல் இருப்பது தவறு. அவருக்கு அந்த உரிமத்தைத் தர வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் புள் பெஞ்ச் அப்படிப்பட்டதொரு தீர்ப்பை வழங்குகிறார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு இதை எடுத்துக்கொண்டு உச்சநீதி மன்றத்திற்குச் செல்கிறது. சத்தியதேவ் அவர்களிடத்தில் இந்த வழக்கு வந்த நேரத்தில் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஆணையைக் காட்டி, அரசாங்க ஆணையை வெவ்வேறு ஆணையைக் காட்டியதற்கு திரு. சத்தியதேவ் அவர்கள் கண்டனம் தெரிவிக்கிற அளவிற்கு நீங்கள் நீதமன்றத்தினுடைய நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்று அரசாங்கத்தை கண்டிக்கிற அளவிற்கு சத்தியதேவ் அவர்கள் ஒரு கருத்துரை வழங்குகிற நிலை ஏற்பட்டு பிறகு புள் பெஞ்சிலும் இந்த வாடியப்பன் அவர்களுக்குத்தான் வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டு சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிற நேரத்தில், அப்பீலுக்கு இந்த அரசு போன நேரத்தில் அவர்கள் அதை ஏற்க முடியாது என்றும், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே சரியானது என்றும், கூறிவிட்ட பிறகு இன்று நீங்கள் இந்த மன்றத்தில் வைக்கிற அறிக்கையில் உயர்நீதிமன்றத் தடையாணையின் காரணமாக நாங்கள் இந்த மாவட்டத்திலே ஒருவரை நியமிக்க வில்லை என்று கூறியிருப்பது எப்படி பொருத்தமாகும் என்று தான் நான் அமைச்சர் அவர்களைக் கேட்கக் கடமைப் பட்டுள்ளேன்.

உச்சநீதிமன்றத்திலே தீர்ப்பு அளிக்கப்படுகிறது வாடியப்பனுக்குக் கொடுங்கள் என்று, உச்சநீதிமன்ற தீர்ப்பை இந்த அரசு எந்தெந்த வகையில் தனக்கு சாதகமாக அல்லது பாதகமாக பயன்படுத்திக்கொள்கிறது என்பதற்கு ஒரு உதாரணம், நான் நிதிநிலை அறிக்கையில் பேசுகிற நேரத்தில் குறிப்பிட்டேன். ஸ்டீல் ரீரோலில் மில்ஸ் வரிகளை ரெட்ராஸ் பெக்டீவ் எபெக்ட் கொடுத்து ஆறாண்டுக் காலம் 1976 முதல் 1982ஆம் ஆண்டு வரை ரெட்ராஸ்பெக்டீவ் எபெக்ட் கொடுத்து அந்த வரியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்ட போது வழக்கு நடைபெற்று உயர்நீதிமன்றத்தில் அந்தத் தொழில் அதிபர்களுக்குச் சாதகமாக தீர்ப்பு கிடைத்து அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசாங்கம் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று உச்சநீதிமன்றம் அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு அளிக்கிறது. ''அவர்கள் அந்த வரியை செலுத்தித்தான் தீர வேண்டும்'' ''ஸ்டீல்ரீரோலிங் மில்ஸ் அதிபர்கள் வரியை செலுத்தித்தான் தீர வேண்டும்'' என்று அரசாங்கத்திற்குச் சாதகமாக தீர்ப்பு அளிக்கிறது. அந்தத் தீர்ப்பை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளாமல் அந்தத் தீர்ப்பை ஒருபுறம் தள்ளிவிட்டு அதிபர்களுடைய கோரிக்கையை ஏற்று கிட்டத்தட்ட நேற்று நிதி அமைச்சர் அவர்கள் மூன்று அல்லது நான்கு கோடி என்றார்கள், நான் கேள்விப்பட்டவரை ஏழிலிருந்து எட்டு கோடி வரை வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது. ஏன் செய்யப்பட்டது. அதில் மறைந்திருக்கிற மர்மங்கள் என்னென்ன, இவைகளைப் பற்றி யெல்லாம் நான் இப்போது கூற விரும்பவில்லை; அதற்குரிய காலம் வருகிற நேரத்தில் அதைப்பற்றியெல்லாம் நிச்சயமாக ஆதாரங்களோடு நான் சொல்ல முடியும். ஏன் இதை நான் இங்கே எடுத்துக்காட்டுகிறேன் என்றால் நீதிமன்றத்தினுடைய நேரங்கள் வீணாக்கப்பட்டன. அதிலும் குறிப்பாக, இந்த மது விலக்கைத் தளர்த்திய விவகாரத்தில், பலருக்கு லைசன்ஸ் தரப்பட்ட விவகாரத்தில் நீதிமன்றத்தின் நேரத்தை அரசாங்கச் சார்பில் எந்தளவிற்கு பாழடித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதற்காகத்தான் நான் இவைகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஐ.எம்.எப்.எல் என்று அழைக்கப்பட்ட இந்தியன் மேட் பாரின் லிக்கர் என்று அழைக்கப்பட்டு இப்போது ஐ.எம்.

எப்.எஸ். இந்தியன் மேட் பாரின் ஸ்பிரிட் என்று வழங்குகிற ஐ.எம்.எப்.எஸ் என்ற மதுவகைகளுக்கு 14 பேர்களுக்கு உரிமம் கொடுத்துள்ளார்கள். அதில், சென்னைக்கு, சுப்பராம ரெட்டி; மதுரைக்கு கிருஷ்ணமோகன் (அவர்கள் யார் தெரியுமா? சுப்பராம ரெட்டியின் மைத்துனர்); வட ஆற்காடுக்கு கோபால கிருஷ்ணய்யா (அவர் யார் தெரியுமா? சுப்பராமரெட்டியி னுடைய மானேஜர் தர்மபுரிக்கு பி. ஸ்ரீதர் பிரசாத் ரெட்டி (அவர் யார் தெரியுமா? சுப்பராம ரெட்டியின் பினாமி). சுப்பராம ரெட்டி க்ரூப்பிலுள்ள இந்த நான்கு பேர்களுக்கு சென்னை, மதுரை, வட ஆற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு, ஐ.எம்.எப்.எல். உரிமங்கள் அளிக்கப்பட்டன.

செங்கற்பட்டு எம். விநாயகம், கோவை டி.எம்.யூசுப், திருச்சி சுப்பையா செட்டியார், நீலகிரி கிருஷ்ணமூர்த்தி, தஞ்சை உஸ்மான் அலி; தென் ஆற்காடு ராமநாத் வேலை; இந்த 6 பேர்களும் கோடேஸ் குரூப்பைச் சேர்ந்தவர்கள்; இந்த கோடைசின் பினாமி. இந்த 6 பேர்களுக்கும் தரப்படுகிறது. இதிலே வேடிக்கை தஞ்சையிலே அந்தோணி ராஜ் என்பவரும் உஸ்மான் அலி என்பவரும் மனு செய்திருக்கிறார்கள். இந்த இருவரும் ஐ.எம்.எப்.எல் வேண்டுமென்று மனு செய்து கொள்ளுகிறார்கள். அவர்களைப் பற்றி அதிகாரிகள் என்ன எழுதுகிறார்கள், கமிஷனர் கலெக்டர் எழுதிய கருத்து என்ன? அந்தோணிராஜைப் பற்றி எழுதுகிறார்கள்.

"His application is in order. The collector has reported that the applicant is dealing in Mopeds, Scooters, Matadar etc., and that he was a licensee for wholesale made foreign Liquor, during 1973-74 and that he is suitable for issue of wholesale licence."

என்று அவரைப் பற்றி எழுதப்படுகிறது.

உஸ்மான் அலியைப் பற்றி என்ன எழுதப்படுகிறது?

""The application is in order except for the fact that Thiru Gopalakrishnan has not signed the application. The collector has reported that A. Usman Ali is the owner of Thanga Vilas Tobacco, which is a reputed firm in Thanjavur district. He proposes to locate the depot at Door No. 54, Bakthakudi Agraharam, Kumbakonam Town. He has categorically stated that he proposes to run wholesale business only in his name and not

in partnership with Gopalakrishna who has not signed the application and who has not appeared for my enquiry.

இதிலே யாருக்குத் தரப்படுகிறது? ஒருவரைப் பற்றி செம்மையாக எழுதப்பட்டிருக்கிறது. அந்தோணிராஜைப்பற்றி 73 முதல் 74 வரை இப்படிப்பட்ட வியாபாரத்திலே ஈடுபட்ட வர் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், யாருக்கு உரிமம் தரப்படுகிறது? திரு. அந்தோணி ராஜ்.

is doing business in Scooters and Matadars, etc. and it may not be possible for him to pay full attention to the wholeslae liquour business. I therefore reject the application on the ground that he is not a suitable person for the grant of privilege.

அதாவது ஸ்கூட்டர் வியாபாரம் செய்கின்ற காரணத் தினால், இந்த வியாபாரத்திலே அவர் போதிய கவனம் செலுத்த முடியாது. எனவே, அவருடைய மனுவை நாங்கள் மறுக்கிறோம் என்று மறுத்துவிட்டு, உஸ்மான் அலிக்குத் தருகிறார்கள். இந்த உஸ்மான் அலி யார்? கோடேஸ் குரூப்பைச் சேர்ந்தவர். இந்த கோடேஸ் குரூப்பைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உரிமத்தைத் தருகிறார்கள். இதிலே, அந்தோணி ராஜுவிற்கு சொந்தக் கட்டிடம் இருக்கிறது? உஸ்மான் அலிக்கு வாடகைக் கட்டிடம். ஆனால், உஸ்மான் அலி அவரைவிட எந்த வகையிலே சிறந்தவர் என்று சொல்லப்படுவதற்குக் காரணம், அந்தோணி ராஜ் ஸ்கூட்டர் வியாபாரம் செய்து கொண்டிருப்பவர்; எனவே, அவருக்குத் தர இயலாது. ஆகவேதான் நாங்கள் இந்த உஸ்மான் அலிக்குத் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். உஸ்மான் அலியும், கோபாலகிருஷ்ணாவும் சேர்ந்து விண்ணப்பம் கொடுக்கிறார்கள். ஆனால், மனுவிலே கையெழுத்துப் போட்டாலும், போடாவிட்டாலும் பரவாயில்லை என்று அந்த உரிமம் தரப்படுகின்றது. அப்படி உரிமம் தரப்படுவதற்குக் காரணம், அந்தோணி ராஜ் ஸ்கூட்டர் வியாபாரம் செய்கிறார் என்று சொல்லப்படுகிறது. ஆனால், உஸ்மான் அலி தங்க பஸ்பம் புகையிலை வியாபாரம் செய்பவர் என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸ்கூட்டர் வியாபாரம் செய்தால் அவருக்கு லைசென்ஸ் கொடுக்கக்கூடாது; தங்க பஸ்பம் புகையிலை வியாபாரம்

செய்தால் கொடுக்கலாம் என்று எந்த உத்தரவிலே, எந்த விதிமுறையிலே இந்த அரசு இப்படிப்பட்ட உரிமத்தை வழங்கினார்கள் என்பதை நான் அறிந்துகொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். உஸ்மான் அலிக்கு உரிமம் வழங்குவதற்கான தகுதியெல்லாம் அவர் கோடேஸ் கம்பெனியின் பினாமி என்ற ஒன்றைத் தவிர, வேறு என்ன தகுதி இருக்கிறது? அது மாத்திர மல்ல. கமிஷனர் தன்னுடைய ஆணையிலே குறிப்பிடுகிறார்:

"The Government have accorded their prior approval for the grant of privilege in favour of A. Usman Ali" அதாவது சர்க்கார் ஏற்கெனவே உரிமம் தர வேண்டுமென்று தீர்மானித்து விடுகின்ற காரணத்தினால், பிரையர் அப்ரூவல், ஒப்புதல் அளித்துவிட்டக் காரணத்தினால் தரப்படுகின்றது என்று கூறி,

"The Government have accorded their prior approval for the grant of privilege in favour of A. Usman Ali" என்று கூறப்படுகிறது.

அதே போல், வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்த வியாபாரம் இந்த ஐ.எம்.எப்.எஸ்.இல் வேண்டுமென்று கோரி 7 பேர்கள் மனு செய்கிறார்கள்.

அந்த ஏழு பேரிலே கோபாலகிருஷ்ணய்யா என்பவருக்கு இந்த உரிமம் அளிக்கப்படுகிறது. இந்த வியாபாரத்திலே முன் அனுபவமுள்ள பார்த்தசாரதி முதலியார் என்பவருக்கு அளிக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் தெரியுமா? பார்த்தசாரதி முதலியார் வயது 71; 71 வயதாகிவிட்ட காரணத்தாலே அவருடைய மனு நிராகரிக்கப்படுகிறது. 71 வயது ஆகிவிட்ட காரணத்தாலே மனு நிராகரிக்கப்படுகிறது என்று கூறி கோபாலகிருஷ்ணய்யாவிற்கு தருகிறார்கள். இந்த கோபாலகிருஷ்ணய்யாவிற்கு பேங்கிலே செக்யூரிட்டி கட்டுவது, டெபாசிட் கட்டுவது யார் என்றால், ஆந்திராவிலே உள்ள சுப்பராம ரெட்டிதான். ஏறத்தாழ மூன்று இலட்சம் ரூபாயை பாங்கிலே அவருக்கு டெபாசிட்டாகக் கட்டுகிறார். ஆக கோபாலகிருஷ்ணய்யாவிற்கு அனுமதி கிடைக்கிறது. 71 வயது ஆன காரணத்தாலே பார்த்தசாரதி முதலியார் அவர்களின் மனு நிராகரிக்கப்படுகிறது. வயது வரம்பு பார்த்துத்தான் இந்த தொழிலிலே ஈடுபடவேண்டுமென்று ஏற்கெனவே விதிமுறைகள்

வகுத்திருக்கிறீர்களா? அந்த விதிமுறைகளுக்கு மாறாக 71 வயது ஆனவர் மனு செய்த காரணத்தால் அவருக்கு தர முடியாமல் போய்விட்டது என்று கூறலாமா? இதற் கெல்லாம் எனக்கு விளக்கம் தேவை.

மதுரை மாவட்டத்திலே இந்த மனு வகைகள் ஐ.எம். எப்.எஸ் மொத்த வியாபாரத்திற்கு பதின்மூன்று பேர்கள் மனு செய்தார்கள். அதிலே கிருஷ்ணமோகன் என்பவருக்கு அளிக்கப்பட்டது. அவர் சுப்பராம ரெட்டியின் மைத்துனர். சென்னையிலே மொத்த வியாபார லைசென்ஸ் பெற்றிருக் கிறாரே சுப்பராம ரெட்டி அவருக்கு மைத்துனர். அவருக்குத் தகுதி என்ன? அவர் கேட்ட அதே உரிமத்தை ராமசாமி என்ப வரும் கேட்டார். இந்த இரண்டு பேர்களுடைய தகுதியையும் பற்றி அதிகாரி என்ன எழுதுகிறார்? கமிஷனர் என்ன எழுதுகிறார். முதலில் ராமசாமியைப் பற்றி தெரிவிக்கிறார்.

"His application is in order. The District Revenue Officer has reported that the applicant is financially sound and is capable for investing sufficient money and is suitable for the grant of licence. He has added that the building selected in Door Nos: 107-108, Melaperumal Maistry Street, Madurai, belongs to the applicant and has got a number of separate rooms with sufficient storage...

என்று குறிப்பிட்டு ராமசாமியைப் பற்றி எழுதியிருக்கிற குறிப்பிலே வரைகிற கமிஷனர் கிருஷ்ணமோகனைப் பற்றியும் சொல்கிறார்.

"His application is in order. The District Revenue Officer has reported that the applicant is from Andhra State and he is a resident of Madras that he hails from a respectable family and has got capacity to invest sufficiant funds and that he has produced a certificate from the I.O.B Mylapore to show that he has a bank balance of Rs. 6 lakhs.

இதிலே ராமசாமியினுடைய மனு நிராகரிக்கப்படுகிறது. கிருஷ்ணமோகனுடைய மனு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இதற்கு என்ன காரணம்? அதிகாரி எழுதுகிறார் காரணத்தை, இவருக்கு ஏன் தந்தேன் என்பதை எழுதுகிறார். எவ்வளவு

விசித்திரமான காரணம் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

The sites and buildings selected by both the applicants-Ramaswamy and Krishna Mohan-are reported to be quite suitable, when Krishna Mohan appeared before me for enquiry, Ramaswamy has simply deputed his General Manager to appear before me on his behalf to give his statement."

இதிலே கிருஷ்ணமோகன் நேராக வந்து ஆஜர் ஆனாராம். இராமசாமி தன்னுடைய ஜெனரல் மேனேஜரை அனுப்பினாராம். அவர் சும்மா அனுப்பவில்லை. பவர் ஆப் அட்டர்னி கொடுத்து அனுப்பியிருக்கிறார். கமிஷனர் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால்-

"In the circumstanses, I consider that Thiru Krishna Mohan is a more suitable person for the grant of the privilege of supply of bottled liquour by wholesale. I accordingly reject the application of Thiru K. Ramaswamy."

கமிஷனருடைய ஆணையிலே இன்னொன்றையும் குறிப் பிடத் தவறவில்லை. அவருடைய ஆணை ஏழாவது பாராவிலே...

"In the G.O. 16th cited, the Government have accorded their prior approval for the grant of privilege in favour of Thiru B. Krishna Mohan."

இதிலே சர்க்கார் தன்னுடைய முன் ஒப்புதலை கிருஷ்ண மோகனுக்கே அளித்து இருக்கிற காரணத்தால் இந்த உரிமை அவருக்கு அளிக்கப்படுகிறது என்று சர்க்காரைக் காட்டி கமிஷனர் தப்பித்துக்கொள்கிற அந்தப் பணி இதிலேயும் நடை பெற்றிருக்கிறது. அடுத்து சென்னைக்கு மொத்த வியாபாரம் செய்ய 29 பேர் மனு போட்டிருக்கிறார்கள். பெரிய பெரிய கம்பெனிகள் எல்லாம் மனு போட்டிருக்கிறார்கள். நான் எல்லா வற்றையும் விளக்க நேரம் இல்லாத காரணத்தால் ஒன்று இரண்டினை மட்டும் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். அதிலே சுப்பராம ரெட்டி ஒருவர், மிகப்பெரிய கம்பெனிகளில் ஒன்றான ஸ்பென்சர் கம்பெனி ஒன்று. சென்னையிலே இருக்கின்ற ஸ்பென்சர் கம்பெனியும் ஆந்திரா

விலே இருக்கின்ற சுப்பராமி ரெட்டியும் ஐ.எம்.எப்.எஸ். மொத்த வியாபாரத்திற்காக சென்னை மாவட்டத்திற்கு மனுப்போட்டால் சாதாரண மனிதன்கூட என்ன கருதுவான். ஸ்பென்சர் கம்பெனிக்குத்தான் கிடைக்கும் என்றுதான் கருதுவான். ஆனால் கிடைத்தது யாருக்கு? சுப்பராம ரெட்டிக்குத்தான் கிடைத்தது. ஸ்பென்சர் கம்பெனிக்குக் கிடைக்கவில்லை? என்ன காரணம் சொல்கிறார்கள் தெரியுமா? ஸ்பென்சர் கம்பெனியைப்பற்றிச் சொல்கிறார்கள்.

The application is in order. As the applicant Company is already engaged in business in various fields.

அது ஒரு பெரிய குற்றமாம். பல துறைகளிலே வியா பாரம் செய்கிற கம்பெனியாம் ஸ்பென்சர்.

I Consider that the privilege of wholesale supply of I.M.F.S in the Madras Corporation limits should not also be given them as it would mean concentration of buisness activities company alone the exclusion of others. I therefore reject the application of this company on the ground that they are not suitable for the grant of privilege under Rule 6A of the I.M.F.S. Rules 1981.

சுமார் 60 அல்லது 70 ஆண்டுக்காலமாக இந்த ஐ.எம். எப்.எஸ் போன்ற வியாபாரங்களிலே ஈடுபட்டிருக்கின்ற ஸ்பென்சர் கம்பெனிக்கு நிராகரிக்கப்பட்டு ஆந்திராவிலே இருக்கின்ற சுப்பராமரெட்டிக்கு சென்னையில் தரப்படுகிறது. அப்படித் தரப்படுகிற நேரத்திலே சுப்பராம ரெட்டி எப்படி யெல்லாம் வர்ணிக்கப்படுகிறார், அவருடைய சிறப்புகள் என்ன, அவருடைய மகிமைகள் என்ன, அவருடைய மாண்புகள் என்ன இவைகளை எல்லாம் பற்றி அதிகாரி எழுதுகிறார்.

"His application is in order. The applicant has proposed to locate the wholesale depot in the building at door No. 9-B. Village Road, Nungambakkam. The Collector has reported that this is a pucca building with two floors and vacant site and that there are several rooms with sufficient space available. The total plinth area of the building is about 3,000 sq.ft. The owner of the building has given the consent for the location of a wholsale depot in the building by the applicant. I am satisfied that the applicant Thriu N.Subburama Reddi, Madras

is a suitable persons for the grant of licence and the site and building selected by him for the location of the wholesale depot are suitable and that application is made bonafide on behalf of the applicant."

இப்படி இடத்தைப் பற்றி வர்ணனை. ஆனால் அப்படிப் பட்ட ஒரு இடம் அவர் பெயரில் உண்டா என்றால் இல்லை. திரு. அம்பிகாபதி குறிப்பிட்டாரே மாயா பஜார் என்று, அந்த மாயா பஜார் இந்த சுப்பராமரெட்டி விஷயத்தில் நடை பெற்றிருக்கிறது. இவ்வளவு அறைகள் கொண்டது. இவ்வளவு, பக்கா பில்டிங், இவ்வளவு பிளிந்த் ஏரியாவைக் கொண்டு, மூவாயிரம் சதுர அடிகள் கொண்டு என்றெல்லாம் அதிகாரியால் வர்ணித்துக் கூறப்பட்ட தொகுத்துக் கூறப்பட்ட சுப்பராம ரெட்டியால் காட்டப்பட்ட அந்த இடம் அவருக்கு உரியதா அல்லது வாடகைதாரராகவாவது அவர் அங்கே உரிமை படைத்ததா என்றால் இல்லை. ஏதோ ஒரு இடத்தைக் காட்டி இந்த இடம்தான் என்று சொல்லி அதை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டு எவ்வளவு பெரியவர்ணனை இராமாயணம் போல் எழுதி அவர் தகுதியானவர் என்று குறிப்பிட்ட பிறகு பார்த்தால் அவருக்கு அப்படிப்பட்ட ஒரு இடமே இல்லையென்று தெரி கிறது. என்ன செய்து இருக்க வேண்டும்? நீ இல்லாத இடத்தைக் காட்டி உரிமம் கேட்கிற பொல்லாத மனிதன், ஆகவே உனக்குத் தரமுடியாது என்று தடுத்தார்களா என்றால் தடுக்கவில்லை. என்ன செய்தார்கள்?

அவசரம் அவசரமாக ஒரு புதிய ஆணையையே பிறப்பிக் கிறார்கள். புதிய ஜி.ஓ. பிறப்பிக்கப்படுகிறது. என்ன ஜி.ஓ. தெரியுமா? 29-8-81 இல் சுப்பராம ரெட்டி சொன்ன இடம் இல்லை என்பது தெளிவாகிறது. தேதியை கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும், 29-8-81 இல் சுப்பராமரெட்டி குறிப்பிட்ட இடம் நுங்கம்பாக்கத்தில் அவருக்கு சொந்தமானது இல்லை. அவர் வாடகை தருகிற இடமும் இல்லை என்று தெளிவாகிறது. தெரிந்த பிறகு எப்படியும் சுப்பராம ரெட்டிக்குக் கொடுத்துத் தான் தீர வேண்டுமென்று அப்படி ஒரு கட்டு, இக்கட்டு. எனவே அந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக 19-9-81 அன்று அடுத்த மாதம் ஒரு புதிய ஜி.ஓ. போடப்படுகிறது. என்ன ஜி.ஓ. தெரியுமா?

If at any time after the issue of the licence, the site and bulidings specified and the licence ceased to be available to the Licensee due to reasons beyond his control, the commissioner may with the prior approval of the Government.....

எல்லாம் அந்த பிரையர் அப்ரூவல் தான்.

Permit the licence to change over to any other site and building approved as suitable by the Commissioner.

இப்படியொரு புது ஜி.ஓ. வே. போடப்பட்டு லைசென்ஸ் தாரர் லைசென்ஸ் பெற்ற பிறகு இடம் இல்லை என்றால் அவர் களுக்கு, மறுபடியும் ஒரு இடத்தை அவர்கள் காட்டுவதற்கும், அந்த இடத்தை ஒத்துக் கொள்வதற்கும் சர்க்காருடைய முன் ஒப்புதலோடு கமிஷனர் அதற்கு இணக்கம் தெரிவிக்கிறார் என்கின்ற வகையிலே ஒரு புது உத்தரவு, ஒரு ஜி. ஓ.வே போடப்படுகின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இன்னொரு வேடிக்கை. அங்கு மது மொத்த வியாபார ஐ.எம்.எஃப்.எஸ். வியாபாரம் செய்ய நான்கு பேர்கள் மனுச்செய்தார்கள். அதிலே ஒருவர் லட்சுமணப் பெருமாள். அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது. கேட்டதற்கு அவர் துணி வியாபாரம் செய்கிறார். துணி வியாபாரம் செய்கின்ற காரணத்தினால் அவருடைய மனு நிராகரிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. அவர் நீதிமன்றத்திற்குச் சென்றார். நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால், நீதிமன்றத்திலே லட்சுமணப் பெருமாளுடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, 3-3-1982 ஆம் தேதிக்குள் லட்சுமணப் பெருமாளுக்கு இந்த அரசு லைசென்ஸைக் கொடுத்துவிட்டு, கொடுத்தோம் இல்லையா என்பது 5-3-1982 ஆம் தேதிக்குள் நீதிமன்றத்திற்குக் கூற வேண்டுமென்று நீதிபதி உத்தரவு பிறப்பிக்கிறார். ஆக, துணி வியாபாரம் செய்கின்ற ஒரு காரணத்தைக் காட்டியது தவறு என்று லட்சுமணப்பெருமாளுக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே நடத்த நீதிபதி அவருக்கு உரிமை அளிக்கலாம், துணி வியாபாரம் செய்தாலும் வேறு வியாபாரம் செய்தாலும் அதுபற்றிக் கவலையில்லை என்று தீர்ப்பு வழங்கி யிருக்கிறார். ஆனால் மற்ற வியாபாரங்கள் செய்கிறார்கள் என்று

தஞ்சையிலே ஒருவரையும் மதுரையிலே ஒருவரையும், சென்னையிலே ஒருவரையும் காரணம் காட்டி இந்த அரசு முன் ஒப்புதலோடு அதிகாரிகள் மனுக்களை மறுத்திருப்பது நியாயம் தானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். இதையெல்லாம் யாருக்குச் சலுகை செய்ய? எதற்காக? என்ன மர்மம் அடங்கி யிருக்கின்ற காரணத்தால் இப்படிப்பட்ட காரியங்கள் அத்துமீறி நடைபெற்றிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நான் கடைசியாக ஒன்றைச் சொல்லுகிறேன். பத்துப் பேருக்கு சாராயக் கலவை, அதைப் போலவே சாராயத்தைப் புட்டியிலே அடைக்கின்ற தொழிற்சாலை, பிளெண்டிங் பாட்டிலிங் பேக்டரி வழங்கப்பட்டிருக்கின்றது தமிழ்நாட்டில். இந்தப் பத்து தொழிற்சாலைகளிலும் 5-2-1982 ஆம் தேதி யன்று வருமான வரித்துறையினர் புகுந்து சோதனையிட்டிருக் கிறார்கள். அவர்கள் சோதனையிட்டு வெளியிட்ட விவரங் களை நான் இங்கே சொல்வது மிகச் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். நம்முடைய அமைச்சரவர்கள் பினாமி என்றாலே ரொம்ப அலர்ஜி உடையவர். பினாமி நிலங்களை யாரும் வைத்திருக்கக்கூடாது; பினாமி வீடுகள் இருக்கக்கூடாது. பினாமிகளை ஒழித்துக்கட்டுவது என்னுடைய பிரதான கொள்கை என்று முரசறைகின்றவர் நம்முடைய அமைச்சர் எஸ்.டி.எஸ். அவர்கள். ஆனால் நான் அவருக்கு நினைவு படுத்துகிறேன். இந்த 5-2-1982 அன்று வருமானம்வரித் துறையினர் பத்து பேக்டரிகளில் அதாவது பிளேண்டிங் பாட்டிலிங் பேக்டரிகளில் புகுந்து சோதனை நடத்தி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். எவ்வளவு பெரிய கொடுமை தமிழ்நாட்டிலே நடைபெறுகிறது என்று தமிழ்நாட்டிலே பிறந்துள்ள தமிழ்ப்பெருங்குடி மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதற்காக மிகுந்த வேதனையோடு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சாவூரில், வி. ராமானுஜம் என்பவருக்கு இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த பேக்டரி வருமான வரி இலாகாவால் சோதனையிடப்பட்டிருக்கிறது. சோதனையிடப் பட்டதும் வருமான வரி இலாக்கா ராமானுஜத்தினுடைய பேக்டரியைப்பற்றிச் சொல்லியிருக்கின்ற விவரங்களை

அவர்களுடைய முகவரிகளும் அந்த இராமானுஜத்திற்குத் தெரியாதாம்.

There has been an initial total capital contribution of Rs. 2.00 lakhs and the total investment is arount Rs. 15.00 lakhs as per the details given below. The licence fees and security deposit-Rs.2.5. lakhs, Machinery Rs. 10.00 lakhs, Addition of factory buildings Rs. 2.5 lakhs, Total Rs. 15.00 lakhs. this unit has been functioning since 15th july 1981.

இங்கேதான் கவனிக்க வேண்டும்.

For manufacturing arrack, one litre of rectified spirit supplied to the assessee at the rate of Rs. 2.50 per litre is mixed with 1.37 litres of potable water.

அதாவது, ஒரு லிட்டர் ரெக்டிஃபைட் ஸ்பிரிட்டை 1.37 லிட்டர் தண்ணீரோடு கலக்க வேண்டும். இந்த 1 லிட்டர் ரெக்டிஃபைட் ஸ்பிரிட்டினுடைய விலை ரூ. 2.50 காசு.

The capacity of each bottle is 750 ml.

750 மில்லி, ஒவ்வொரு பாட்டிலும்

and the permitted sale price of one 750 Ml. bottle of arrack is Rs. 7.39

ரூ. 7.39 காசு.

and the cost to the assessee per bottle works out to nearly Rs. 6.39

ரூ. 6.39 காசு.

and the average profit per bottle works out to Rs. 1.

It is seen that in October 1981 itself the assessee was supplied with 3 lakhs of liters of rectified spirit and on the basis of the figures given earlier in the report this would have been mixed with 4.11 lakhs of litres of potable water and 7.11 lakhs litres of arrack would have been manufactured and filled in 9.48 lakhs bottles, each containing 750 ML. Therefore in October 1981 itself a profit of Rs. 9.48 laks would have been made by this Unit.

அக்டோபர் மாதத்திலே, மாத்திரம், இந்த இராமானுஜத்தினுடைய கம்பெனிக்கு ஒரே மாதத்தில் வருகிற இலாபம் ரூ. 9.48 இலட்சம். அந்த ரூ. 1 கணக்கின்படி. இன்னும் ரூ. 2 அல்லது ரூ. 3 என்று கணக்கை வைத்துக்கொண்டால், ரூ. 27 இலட்சம் இலாபம் வருகிறது. வருமானவரித் துறையினுடைய கணக்கின்படியே வைத்துக்கொண்டால்கூட ஆண்டு ஒன்றுக்கு ரூ. 108 இலட்சம், கிட்டத்தட்ட ரூ. 1 கோடி 8 இலட்சம் இலாபம் வருகிறது.

This confirms the information that fabulous profit are made by these blending Units. It is clear that the registered licensee Ramanujam is only a benamidar for a group of influential persons hailing from Kerala. Most of the employees running this unit are only Keralities. The Accountant is one E.K.Thomas. This Unit has account in the branch of South Indian Bank Limited, Thanjavur. The source for the capital contribution, the real owner of this blending Unit, etc, require further investigation. The seized accounts and other papers are under scrutiny.

என்று வருமான வரி இலாகா அதிகாரி கையெழுத்திட்டு இந்த அறிக்கையை மேலதிகாரிக்கு அனுப்பி இருக்கிறார்.

இதற்கான ஆதாரம் கேட்டால், அந்த ஆதாரத்தைத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். இதிலே இருந்து என்ன தெரிகிறது. பினாமிதாரர்களுக்கு நாங்கள் எதுவுமே கொடுக்க வில்லை என்று சொல்லுகிறீர்கள். தமிழகத்திலே கோவை, சேலம், மதுரை, இராமநாதபுரம், சென்னை இந்த இடங்களிலே கூட வேறு மாநிலத்தவர் வந்து தொழில் நடத்துவது இயற்கை. இவ்வளவு மாவட்டங்களையும் தாண்டி, தஞ்சாவூரிலே ராமானுஜம் என்ற ஒரு ஆளைப் பிடித்து, அந்த ராமானுஜத்தினுடைய மறைவில் கேரளத்தைச் சேர்ந்தவர்கள்- வருமானவரி இலாகா சொல்கிறது. நான் சொல்லவில்லை- கேரளத்தைச் சேர்ந்தவர்கள், 2 பர்சன்ட் மாத்திரமே பார்ட்னர்ஷிப் வைத்திருக்கின்ற ஒரு ராமானுஜத்தினுடைய பேரால் தொழிற்சாலையை நடத்து கிறார்கள். இப்படிப்பட்ட தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 10 இலட்சம் ரூபாய் லாபம் கொடுக்கின்றது. கிட்டத்தட்ட வருடத் திற்கு 1 கோடி 1½ கோடி ரூபாய் லாபம் பெறுகின்ற தொழிற் சாலை. இவைகளை ஏன் அரசாங்கம் தேசிய உடமையாக ஆக்கி

நடத்தக் கூடாது? என்ன காரணம்? ஏன் அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு ஏற்படவில்லை.

பொதுவாகப் பார்த்தால் தமிழர்களுடைய பேரால், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுடைய பேரால், இங்கே லைசன்சுகள், உரிமங்கள் வழங்கப்பட்டிருந்தாலும்கூட, ஆந்திராவிலே இருக்கின்ற சுப்பராம ரெட்டி குரூப், அந்தக் குரூப்பின் பேரால் ஒரு 7,8 பேர்; அதுபோலவே போத்தன் ஜோசப் அல்லது நெல்லிப்புழா ஜோஸ் பேரால் கேரளாவில் இருந்து ஒரு 7,8 நிறுவனங்கள், அதைப்போலவே கர்நாடகாவில் இருக்கின்ற கோடேஸ், அதன் பேரால் ஒரு 7,8 நிறுவனங்கள், ஆக நாம் அன்றைக்குக் கேட்ட திராவிட நாடு 'புல்பில்' ஆகிவிட்டது. ஆந்திராவிலே இருந்து ஒரு குரூப், கேரளாவிலே இருந்து ஒரு குரூப், கர்நாடகத்திலே இருந்து ஒரு குரூப், தமிழன் தலையிலே கையை வைத்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். யார் யாரோ அவர்களுடைய வீட்டிலே பை நிரப்பிக் கொள்ள தமிழன் தன் தலையிலே கை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாத்திரம் எடுத்துக் கூறி விடைபெறுகிறேன்.

நிதிநிலை ஒதுக்கீடு மானியம்

உரை : 44 **நாள்: 30.03.1982**

கலைஞர் மு. கருணாநிதி : பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே! நிதி நிலை ஒதுக்கீடு மானியத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் சில கருத்துக்களை எடுத்துவைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு''

என்ற குறள் மொழிக்கு ஒப்ப, ஒரு அரசு நடைபெறவேண்டு மென்றாலும் கூட, இயற்றல், ஈட்டல் இவைகளில் காட்டப் படுகின்ற அக்கறை, காத்தலும், காத்த வகுத்தலிலும் இந்த அரசின் சார்பில் காட்டப்படவில்லை என்ற ஒரு குறைபாட்டை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இந்த அவையில் நிதி ஒதுக்கக் கணக்கு, அப்ரோப்ரி யேஷன் அக்கவுண்ட்ஸ் என்ற தலைப்பில் 1978-79ஆம் ஆண்டிற்கான கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்குகளில் 58 மானியக் கோரிக்கைகளில், அந்த ஆண்டு இந்த மன்றத்திலே பெருவாரியான அல்லது ஏகோபித்த வாக்கு களைப் பெற்று, அரசின் பல்வேறு செலவினங்களுக்காக என்று ஒதுக்கப்பட்ட தொகையில், 7 மானியங்களைத் தவிர மற்ற 51 மானியங்களில் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட வில்லை. செலவழிக்கப்படாமலேயே வீணாகி இருக்கிறது. செலவழிக்கின்ற அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்று வதிலே வேகமில்லை என்பதற்கான உதாரணங்களை Government of Tamil Nadu என்று அச்சிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பிலே வைக்கப்பட்டுள்ள இந்த Appropriation Accounts என்கின்ற நிதி ஒதுக்கக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நான் இந்த 51 இனங்களையும், இங்கேஎடுத்துச் சொல்ல விரும்பாவிட்டாலும், ஒன்றிரண்டு மிக முக்கியமான இனங்களில் எவ்வளவு பெருந்தொகை செலவழிக்கப்படாமற் போயிருக்கிறது. எங்களிடத்தில், இந்த மன்ற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று, நிறைவேற்றப்பட்ட மானியங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவது என்னுடைய பெருங்கடமையாகும்.

போலீசைப் பொறுத்தவரையில், 35 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்ட தொகையில், 33 கோடி ரூபாய் செல வழிக்கப்பட்டு, ரூபாய் 1.49 கோடி செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது. கல்வி என்ற தலைப்பில், 187 கோடி ரூபாய் என்று இங்கே வாக்குகளைப் பெற்று, நிறைவேற்றப்பட்ட அந்த மானியத் தொகையில் 185 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, ரூபாய் 1.69 கோடி செலவழிக்கப்படாமலேயே இருக்கிறது. மருத்துவம் என்ற தலைப்பில் 50 கோடி ரூபாய் இந்த அவையின் ஒப்புதல் பெற்று, ஒதுக்கப்பட்ட தொகையில் 48 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு, சுமார் 1.60 கோடி செலவழிக்கப்படாமலேயே இருக்கிறது. பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பில் ரூபாய் 42 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. வேளாண்மை என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்ட தொகையில், ரூபாய் 92 இலட்சம் செலவு செய்யப்பட வில்லை. கால்நடை பராமரிப்பு என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்ட தொகையில், ஏறத்தாழ ரூபாய் 28 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. காதி என்ற தலைப்பிலே, ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபாய் 31 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. சமூகநலம் என்ற தலைப்பில் வாக்களிக்கப்பட்ட தொகையில் ரூபாய் 28 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் நலன் என்ற தலைப்பில், ரூபாய் 11 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. பிற்பட்டோர் நலன் என்ற தலைப்பில் ரூபாய் 69 இலட்சம் செலவு செய்யப்படவில்லை. வீட்டு வசதி என்ற தலைப்பில் ரூபாய் 1.16 கோடி செலவு செய்யப் படவில்லை. மொத்தத்தில், இந்த இனங்களை எடுத்துப் பார்த்தால் ரூபாய் 1,317 கோடி டோடல் கிராண்டு'' இந்த அவையில் பல்வேறு மானியங்களின் சார்பில், இந்த அரசின் சார்பில் ஒப்புதல் பெற்றுக்கொண்டு, ரூபாய் 1,176 கோடி

செலவு செய்து, ரூபாய் 143 கோடி மிச்சப்பட்டது என்று சொல்ல முடியாது, திட்டங்கள் விரைவாக நடைபெறாத காரணத்தால், செலவழிக்கப்படாமல் போய்விட்டது. இது 1978-79 ஆண்டுக் கணக்கு. இந்த அவையிலே வைக்கப் பட்டுள்ள கணக்கில் இருந்து நான் தருகிற புள்ளி விவரங்கள்.

அதைப்போலவே, 1979-80 ஆண்டு இந்த நிதி ஒதுக்க கணக்கின்படி, ''ஆப்ரோப்பிரியேஷன் அக்கவுண்ட்ஸ் கவர்ன் மென்ட் ஆப் தமிழ்நாடு, வெளியிடப்பட்டுள்ள இந்த விளக்கக் குறிப்பிலே கூட இதுபோன்ற பரிதாபகரமான நிலை இன்னும் சில முக்கியமான மானியங்களிலே அதிகமாகச் செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்- தலைமை)

குறிப்பாக, போலீஸ் மானியத்தில் 40 கோடியே 29 இலட்சம் ரூபாய் இங்கே வாக்குகள் பெறப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட தொகையில் 36 கோடியே 84 இலட்சம் செலவழிக்கப்பட்டு, 3½ கோடி ரூபாய் போலீஸ் மானியத்தில் நீங்கள் பெற்றுக்கொண்ட தொகையில் செலவு செய்யப்படவில்லை. ''எஜுகேஷன் டிபார்ட்மென்ட்'' மானியத் திலே 12 கோடியே, 89 இலட்சம்; சுமார் 13 கோடி ரூபாய்; செலவழிக்கப்படவில்லை. கல்வித்துறையில் 12 கோடியே 89 இலட்சம் ரூபாய் அதாவது ஏறத்தாழ 13 கோடி ரூபாய் செலவு செய்யப்படவில்லை. மெடிக்கல் என்பதை எடுத்துக் கொண்டால் சுமார் 4 கோடி ரூபாய் செலவு செய்யப்பட வில்லை. பப்ளிக் ஹெல்த். சுமார் 9 கோடி ரூபாய் செலவிடப் படவில்லை. அக்ரிகல்ச்சர்- சுமார் 6½ கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. பிஷரீஸ்- 32 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. அனிமல் ஹஸ்பண்டரி- 1¼ கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. கோவாப்பரேஷன்-75 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இண்டஸ்ட்ரீஸ்- ஒரு கோடியே 83 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. ஹேண்ட்லூம்ஸ் அண்ட் டெக்ஸ்டைல்ஸ், 61 இலட்சம் செலவழிக்கப்படவில்லை. கம்யூனிட்டி டெவலப்மென்ட்- சமுதாய திட்டம், 9 கோடியே 21 லட்சம் ரூபாய் செலவழிக்கப்

படவில்லை. சோஷியல் வெல்பேர் எனப்படுகிற சமூக நலம், 86 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. வெல்பேர் ஆப் ஷெட்யூல்ட் காஸ்ட் அன்ட் டிரைப்ஸ் எக்ஸ்ட்ரா, அதிலே 4 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை. இந்த அவையினுடைய வாக்குகளைப் பெற்று, ஒப்புதல் பெறப்பட்டு ஒதுக்கப்பட்ட தொகையில், எப்படி மற்றவைகளுக்கு எல்லாம் மானியமாக ஒதுக்கினீர்களோ, அதைப்போல வெல்பேர் ஆப் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ் அண்ட் டிரைப்ஸ், அதாவது அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 4 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்படவில்லை.

வெல்பேர் ஆப் தி பேக்வாட் கிளாஷ் எக்ஸ்ட்ரா, அதிலே ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை. ரோட்ஸ் அன்ட் பிரிட்ஜஸ், 94 இலட்சம் செலவழிக்கப்படவில்லை. இதிலேயும் மொத்தத்திலே பார்த்தால் டோட்டல் கிராண்ட் 1,482 கோடியிலே 1,335 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்டு இருக்கிறது. 147 கோடி ரூபாய் செல வழிக்கப்படவில்லை என்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். இந்த அரசு திட்டங்களை அந்தந்தத் துறைகளின் மூலமாக நிறைவேற்றுவதிலே எவ்வளவு தயக்கத்தோடு செயல்படுகிறது, எந்த அளவுக்கு ஆமை வேகத்திலே செயல்படுகிறது, டிரைவ் இல்லை என்பதற்கு எவ்வளவு செலவழிக்கப்படாமல் போயிருக்கிறது என்பதே போதுமான சான்றாகும் என்று நான் கருதுகிறேன்.

ஒரு குறைபாட்டை நேற்றைய தினம் இங்கே உரை யாற்றிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு.ரமணி அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள், நேற்று இந்த அவையிலே விவாதிக்கப்பட்ட மானியங்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் அதற்காக ஒதுக்கப்படுகிற மானியம் 20 கோடியே 55 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய்; மாநிலச் சட்டமன்றம், 1 கோடியே 24 இலட்சம் ரூபாய்; தேர்தல்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், 30 கோடி ரூபாய்; பல்வகைச் செலவு, 90 கோடி ரூபாய்; பல்வகை மூலதனச் செலவு-16 கோடி ரூபாய்; மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்

பணங்களும், 365 கோடி என்ற முறையிலே மொத்தம் 525 கோடியே 39 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய்க்கு நேற்றைய தினம் கிட்டத்தட்ட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே வைத்த நிதிநிலை அறிக்கையிலே கேட்கப்படுகிற 1,500 கோடி ரூபாயில் மூன்றில் ஒரு பங்கு, 525 கோடி ரூபாய்க்கான மானியங்களைப் பற்றி இங்கே பேச நமக்கெல் லாம் கிடைத்த நேரம் ஒன்றிலிருந்து ஒன்றரை மணி நேரம்தான்.

காரணம் அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் எடுக்கிற முடிவுகளின்படி மானியங்கள் உரிய நேரத்திலே நிறைவேற்ற முடியாமல் பதிலுரைகள் நீண்டு விடுகிற காரணத்தினாலும், அது தவிர்க்க முடியாத காரணங்களாக இருந்தாலும் இருக்கலாம் அல்லது வேறு எந்த காரணங்களாக இருந்தாலும் இருக்கலாம், அவைகளால் நேற்று மாத்திரம் 500 கோடி ரூபாய்க்குள்ள பெரிய மானியப் பட்டியலைக் குறித்து, இந்த அவையிலே விளக்கமாக யாரும் பேச முடியாமல் அவரவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே தாங்கள் பணியாற்றுவதற்குத் தேவையானவைகளை மாத்திரம் பேசக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

நீண்ட பதிலுரையாக இங்கே அளிக்கிற காரணத்தாலே எடுத்துச்சொல்லப்பட்ட எல்லாம் முக்கியமான பிரச்சினை களுக்கும் பதிலாவது சொல்லப்பட்டுவிட்டதா என்றால், இல்லை; இதைச் சொன்னால் இன்னமும் இரண்டு மணி நேரம் எங்களுக்குத் தேவை என்று ஆட்சித் தரப்பிலே சொன்னாலும் சொல்லப்படும். நேற்றைய தினம் பதிலளித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல்துறை மானியத்தில் பதில் அளித்த வர்கள் நான் எடுத்துச்சொன்ன குற்றச்சாட்டுக்கள் சிலவற்றைப் பற்றிக் கோடிட்டுக்கூட காட்டாமல் அவர்கள் தங்களுடைய 4½ மணி நேர உரையை முடித்தது எனக்கு உள்ளபடியே வருத்தத்தைத் தரக்கூடியதாகும்.

ஆம்னி பஸ் ஊழலைப் பற்றி இந்த அவையிலே எடுத்துச் சொன்னேன். இன்று மாத்திரம் அல்ல. கடந்த ஆண்டு காவல் துறை மானியத்திலே பேசிய காங்கிரஸ் கட்சியைத் சேர்ந்த அருமை நண்பர் சுந்தரராஜன் அவர்கள் எடுத்துச்

சொல்லி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று கேட்டார். அதிலே சம்பந்தப்பட்டவர்கள் போலீஸ் அதிகாரிகள், போக்குவரத்துத் துறையைச் சார்ந்தவர்கள், ஆளும் கட்சி தரப்பிலே கூட சிலபேர் சம்பந்தம் என்கிற அளவிற்கு நிலைமைகள் எல்லாம் முற்றி 261 பேர்கள் ஈடுபட்டு, ஒரு பெரிய கோடிக்கணக்கான ரூபாய் ஊழல் நடைபெற்று, அரசுக்கு வர வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் இழந்து விடுகிற ஒரு பெரிய ஊழலில், 106 காவல்துறை அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக 1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ஆம் நாளிலே அறிவிக்கப்பட்டதே, அது என்னவாயிற்று, என்று சென்ற ஆண்டு நண்பர் சுந்தரராஜன் அவர்கள் கேட்டபோது முதலமைச்சர் சொன்னார்: ''அந்த ஊழியர்களின் மீது விசாரணை நடக்கிறது. நடவடிக்கை கைவிடப்படவில்லை. தகுந்த முறையிலே நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு இருந்தவர்கள் அனுசரித்த ரெட்- டேப் முறை, சட்டமுறை ஆகியவற்றால்தான் தாமதமே தவிர, தவறு செய்ததாகக் கூறப்படுபவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது'' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் காவல்துறை மானியத்திலே பேசுகிறபோது கூட கேட்டேன். சுந்தரராஜன் அவர்களுக்கு அளித்த பதிலில் இப்படிச் சொல்லியிருக்கிறீர்களே, என்ன நடவடிக்கை என்று கேட்டேன். அதுபற்றி எந்த பதிலையும் முதலமைச்சர் தராதது வருந்தத் தக்கது. நிதிநிலை அறிக்கை பொது விவாதத்தில் பேசியபோது நான் ஒரு பிரச்சினையை எழுப்பினேன்.

போக்குவரத்துக்கழகத்திற்கு, குறிப்பாகப் பல்லவன் போக்குவரத்துக்கழகத்திற்கு, உலக வங்கியினுடைய உதவியோடு வாங்குகிற பஸ் சேசிஸ் குறைந்த அளவிற்கு டெண்டர் கொடுத்திருக்கிற டாடா என்ஜினியரிங் நிறுவனத்திற்கு நீங்கள் அந்த டெண்டர்படி அவர்களிடத்திலே சேசிசை வாங்காமல், ஏன் அசோக் லேலண்ட் நிறுவனத்தினிடத்திலே வாங்கினீர்கள் என்று கேட்டேன். கேட்டது மாத்திரமல்ல; விவரங்களையும் சொன்னேன். அசோக் லேலண்டு நிறுவனம் அந்த சேசிஸ்க்கு 7 கோடியே 44 இலட்சத்து 14 ஆயிரத்து 480 ரூபாய் என்று

டெண்டர் போட்டது. ஆனால் டாடா நிறுவனம் 6 கோடியே 60 இலட்சத்து 4 ஆயிரத்து 62 என்று டெண்டர் போட்டது. குறைந்த டெண்டர், ஏற்கெனவே வாங்கி அனுபவப்பட்டிருக்கிற கம்பெனி, ஏற்கெனவே அமைக்கப்பட்ட குழு அசோக் லேலண்டைவிட டாடாதான் சிறந்தது என்று நற்சான்றிதழ் தந்திருக்கிற அந்த கம்பெனிக்குத் தராமல், 7 கோடியே 44 இலட்சம் கொடுத்து, ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்கு மேலே அதிகம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்டபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே சொன்னார்கள்: ''இந்த அரசாங்கம் உதிரி பாகங்கள், பராமரிப்புச் செலவுகள் இவைகளையும் கணக்கிட்டு அந்தக் கணக்குகளையும் சேர்த்துக்கொண்டு பார்த்தபோது அசோக் லேலண்ட், டாடாவை விட ஒரு கோடி குறைவாக இருக்கிறது'' என்று சொன்னார்கள். நான் நிதியமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், டெண்டர் போட்டது உதிரிபாகங்களுக்கும் சேர்த்தா அல்லது பராமரிப்புச் செலவுகளுக்கும் சேர்த்தா டெண்டர் போடப்பட்டது? டெண்டர் போடப்பட்டது சேசிஸ் ஒன்லி. சேசிஸ் வாங்குவதற்கு மட்டும்தான் டெண்டர் போடப்பட்டது. அசோக் லேலண்ட் ஒரு தொகையை குறிப்பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்ட தொகையிலே டாட்டாவினுடையது ஒரு கோடி அளவிற்குக் குறைவாக இருந்தது. ஆனால் நீங்கள் ஆறு கோடியை விட்டுவிட்டு, 7 கோடி ரூபாய்க்கு அசோக் லேலண்ட் இடத்திலே சேசிஸ், அடிச்சட்டங்களைப் பொறுத்த வரையில் வாங்கியது தவறு என்பதை இன்னமும் இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலே பெரும்புகழ்பெற்று வருகிற சிமெண்ட் ஊழல். நம்முடைய தமிழ் மாநிலத்திலும் பரவலாக நடை பெற்றுள்ள வரலாற்றை, இந்த அவையிலே எடுத்துவைப்பது என்னுடைய கடமையாகும். எந்த அளவிற்கு சிமெண்ட் வழங்குவதிலே முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. சிமெண்ட்டுக்கு கன்ட்ரோல் உள்ள காலக்கட்டத்தில், இப்பொழுது அது தளர்த்தப்பட்டிருந்தாலுங்கூட. அந்தக் கால கட்டத்திலே நடைபெற்றிருக்கிற சில சம்பவங்களை நான்

நிதியமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவருவது முறையாகும்.

சென்னையில் பட்டாபிராம் என்ற இடத்திலே உள்ள இன்ப்ரட் ஜான் என்ற ஒருவர் தனக்கு ஒரு வீடு கட்ட வேண்டுமென்பதற்காக, 5-2-1981 அன்று சிமெண்ட் கேட்டு விண்ணப்பம் செய்தார் ஏப்ரல் 1981இலே முதல் கோட்டா பெற்று வேலையைத் தொடங்குகிறார். இரண்டாவது கோட்டாவுக்கு ஜீலை மாதம் விண்ணப்பம் போடுகிறார். ஸ்ரீபெரும்புதூர் தாசில்தார் 2-7-1981இலே கையெழுத்திட்டு, 15-7-1981க்குள் சிமெண்ட் வாங்கிக்கொள் என்று தாசில்தார் கையொப்பம் இட்டு ஆர்டர் போடுகிறார். ஆனால், தாலுகா அலுவலகத்திலே இருக்கிறவர்கள் அதை எப்பொழுது டெஸ்பாச் செய்கிறார்கள்? 30-7-1981ல் டெஸ்பாச் செய்கிறார்கள் 15-7-1981க்குள்ளே வாங்கிக்கொள்ள வேண்டிய சிமெண்டு 30-7-1981ஆம் தேதி அங்குள்ள குமாஸ்தாக்களால் டெஸ்ட் செய்யப்படுகிறது. அவர் அந்த பர்மிட்டை எடுத்துக்கொண்டு தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிடங்கு, நாசரேத்பேட்டையில் பதிவு செய்வதற்காகச் சென்று, கேட்கும்போது 15ஆம் தேதியே முடிவடைந்துவிட்ட காரணத்தால், மீண்டும் உத்தரவு இருந்தால் தான் பதிவுசெய்ய இயலும் என்று அங்கிருந்த அசிஸ்டெண்ட் குவாலிட்டி இன்ஸ்பெக்டர் தெரிவித்து விடுகிறார். மறுபடியும் 10-8-1981 அன்று தாசில்தாரிடம் சென்று கோர அவர் 25-8-1981 வரை அனுமதி அளிக்க அன்றைய தினமே நாசரேத் பேட்டைக்குவந்து, அவர் பதிவு செய்து கொள்கிறார். பதிவு செய்த 7 மாதங்களுக்குப் பிறகு 8-3-1982 அன்று நாசரேத்பேட்டையிலிருந்து ஒரு கடிதம் வருகிறது. அதாவது, 10.03.1982 காலை 10 மணிக்குள் பர்மிட், பணத்தோடு வர வேண்டுமென்றும், கோவூர் கிடங்கில் சிமெண்ட் மூட்டை ரூ.32.50 விலையில் வழங்கப்படும் என்றும், அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உடனே இவரும், இவரைப் போலவே, கஷ்டப்படுகின்ற 20 பேர்களும் சேர்ந்து நாசரேத் பேட்டைக்குப் போய் அசிஸ்டென்ட் குவாலிட்டி இன்ஸ் பெக்டரைச் சந்திக்கிறார்கள். அவர் சொல்கிறார், 8-3-1982ல் எங்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அந்தத் தந்தியின்படி

சிமென்ட் விற்பனையை மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கவும் என்று இருக்கிறது என்று சொல்லி, அவர்களுக்குத் தர மறுத்து விடுகிறார். நாங்கள் வரவில்லையென்றால் பதிவு ரத்தாகிவிடும்; வந்ததற்கு அடையாளமாக, நாங்கள் வந்தது பற்றி எங்களுடைய பர்மிட்டில் எழுதிக்கொடுத்து விடுங்கள் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அவர் எழுதிக் கொடுக்க முடியாது என்று மறுத்திருக்கிறார். பிறகு இவர்கள் ஒரு ஆர்ப்பாட்டம் செய்த பிறகு, இவர்களுடைய கார்டுகளை, கடிதங்களை வாங்கி, அதிலே ஏதோ எழுதித் தன்னுடைய மேஜை டிராயரிலே வைத்துப் பூட்டுகின்ற நேரத்தில், அப்படி பூட்டக்கூடாது என்று சொல்லி, வற்புறுத்தி அந்தக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு திரும்புகிறார்கள். திரும்பியவர்கள், காஞ்சிபுரம் வந்து அங்குள்ள சிவில் சப்ளை பிராந்திய மானேஜரைச் சந்திக்கச் சென்றார்கள். அவர்கள் இல்லாததால், சம்பந்தப்பட்ட சூப்பரின்டென்டன்டைச் சந்தித்து, விவரங்களைக் கேட்கிறார்கள். அதற்கு அவர் சொல்கிறார் 8ஆம் தேதி சிமென்ட் விநியோகிக்காதே என்று தந்தி கொடுத்தது உண்மைதான். ஆனால், அந்தத் தந்தியைத் தொடர்ந்து 9ஆம் தேதி இன்னொரு தந்தி கொடுத்திருக் கிறோம். அதில் சிமெண்ட் விற்பனையை ரூ.6.22 காசு அதிகப் படுத்தி விற்கலாம் என்று மாற்றி அவருக்கு மறு உத்தரவு தந்தி அனுப்பியிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, எப்படி 8ஆம் தேதி தந்தியைக் காட்டி திருப்பி அனுப்பினார். எனவே, மீண்டும் அங்கே சென்று விசாரியுங்கள் என்று சொன்ன பொழுது இவர்கள் எங்களைப் பொய் சொல்லி ஏமாற்றினீர்கள் என்று கேட்டுள்ளார்கள். அப்படிக் கேட்டவர்களைப் பயமுறுத்தி கிடங்கிலே வேலை செய்த ஆட்களைக் கொண்டு, அவர்களை அடிக்கின்ற அளவுக்குத் துன்புறுத்திய காரணத்தால், அவர்கள் உயிருக்கே பயந்து போய்த்திரும்பிவந்து நடந்த விவரங்கள் அத்தனையையும் மாவட்ட ஆட்சித்தலைவர், தாசில்தார், பிராந்திய மானேஜர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் எல்லாருக்கும் எழுதியும் கூட, இதுவரையில் நடவடிக்கையும் இல்லை. அவர்களுக்குச் சிமெண்டும் கிடைக்கவில்லை. இது ஒரு சாதாரண குடிமகன் தனக்கு ஒரு வீடு கட்ட வேண்டுமென்பதற்காக சிமெண்ட் வாங்குவதற்கு எடுக்கப்பட்ட

முயற்சியினுடைய விளைவு எங்கே போய் முடிந்திருக்கிறது என்பதற்கு உதாரணமாகும்.

அதுமாத்திரமல்ல, இங்கே மற்றொரு அவையிலேகூட மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் சில ஆதாரங்களைக் காட்டி, அந்த ஆதாரங்களுடைய அசல்களை எல்லாம் அமைச்சர்களிடத்திலே ஒப்படைத்திருக்கிறார்கள். சென்னையிலே நந்தனம், கோபாலபுரம் ஆகிய இந்த இடங்களிலே உள்ள, இந்தக் கிளைகளில் நடைபெறுகின்ற அக்கிரமங்கள் எப்படி நடைபெறுகிறது என்றால், எந்த அளவுக்கு அவர்கள் இந்த அக்கிரமங்களை மிகச் சிறப்பாக அவர்கள் நடத்தி இருக்கிறார்கள் என்றால், யாரோ ஒருவரிட மிருந்து ஒரு பெயர்.

அந்தப் பெயர் எந்தப் பெயராகவும் இருக்கலாம். அவர் களிடமிருந்து எனக்கு இவ்வளவு மூட்டை சிமெண்ட் வேண்டு மென்று ஒரு மனுவை எழுதி வாங்கிக் கொள்வது. அப்படி எழுதி வாங்கிக்கொண்ட பிறகு அந்தப் பெயருக்கு உரிய வருக்கு ஆர்டரை அனுப்புவது, உங்களுக்கு பர்மிட் கொடுத்து விட்டோம் நீங்கள் இந்தத் தேதியிலே வந்து வாங்கிக் கொள்ளுங்கள்.

"Please take delivery of cement Stocks within 7 Days' என்று அதிலே கையெழுத்திட்டு அந்த அதிகாரி அனுப்புவது. அந்தக் கடிதம் செல்லும். எங்கே செல்லும்? யாருடைய பெயரால் இவர்கள் போலியாகத் தயாரித்து மனுக் கொடுக்கச் சொன்னார்களோ, அவர்களுடைய பெயருக்கு அந்தக் கடிதம் செல்லும். தபால்காரர் தேடி அலைவார். சென்னை முழுவதும் அலைவார். அலைந்துவிட்டு குறிப்பிட்ட விலாசத்தில் குறிப் பிட்ட தெருவிலும் இல்லை; இன்னும் சொல்லப்போனால் குறிப்பிட்ட வீடே அந்தத் தெருவில் இல்லை என்று திரும்பி, அந்த ஆபீசுக்கே அதை அனுப்பி வைப்பார். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட பிறகு, இவர்கள் அந்தக் கடிதத்தைப் பயன்படுத்திக் கொண்டு, இவர்களே தாங்கள்தான் அந்த ஆள் என்று போலிக் கையெழுத்திட்டு, ஒதுக்கப்பட்ட சிமெண்டை வாங்கியிருக்கிறார்கள்.

இதைத் திருவரங்கம் என்கின்ற ஒருவர், நந்தனம், கோபாலபுரம் ஆகிய அந்தப் பிராஞ்சுகளிலே வேலைப் பார்க்கின்ற திருவரங்கம் என்கின்ற ஒருவர், இந்த ஊழலுக்கு மூலகாரணமாக இருந்திருக்கிறார். அந்தத் திருவரங்கத்திற்கு ஆளுங்கட்சியிலே உள்ளவர்களிலே சிலபேர் வேண்டியவர் களாகவும் இருக்கிறார்கள். இதைப்பற்றி இன்னொரு அவையிலே பதில் சொல்கின்ற நேரத்திலே கூட அமைச்சர் திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது, இது 'கோபாலபுரத்தில் நடந்த தவறு' 'கோபாலபுரத்தில் நடந்த தவறு' என்று அழுத்தி அழுத்திச் சொன்னார்கள். கோபாலபுரத்தில் நடந்த தவறுதான். கோபாலபுரத்திலே கருணாநிதி மாத்திரம் குடியிருக்கவில்லை என்பதும், இந்தச் சங்கத்திற்கு இந்த சிமெண்ட் விநியோகிக் கின்ற இடத்திற்குப் பக்கத்திலே யார் யார் குடியிருக்கிறார்கள் என்பதும் அமைச்சருக்குத் தெரியாத விவகாரங்கள் அல்ல.

எனவே, இதை விசாரித்த நேரத்திலே இந்தத் திருவரங் கம், மற்றவர்கள் மூலமாக நடைபெற்றிருக்கும் ஊழல், இப்படிக் கார்டு எழுதி, எழுதப்பட்ட கார்டு தபால்காரர்களால் திரும்ப அனுப்பப்பட்டு, அந்தக் கார்டுகளிலே உள்ள பெயர்களுக்கு இவர்களே சிமெண்ட் பர்மிட்டைத் தயாரித்து, அவர்களே அந்தச் சிமெண்ட்டைக் கள்ள மார்க்கெட்டிலே விற்றுப் பணம் சம்பாதித்திருக்கிறார்கள். அப்படிக் கொள்ளையடிக்கப்பட்ட சிமெண்ட் மூட்டைகள் மாத்திரம் 45,000 மூட்டைகள் என்றும், ஏறத்தாழ 25 இலட்சம் அல்லது 30 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை இதிலே கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. ஒரு உத்தரவு இந்த சிமெண்ட் விநியோகம் பற்றி அதிகாரிகளால் போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவில் பர்மிட் உள்ளவர்களுக்குச் சிமெண்ட் தரும்பொழுது வெளிநாட்டு சிமெண்டும், உள்நாட்டு சிமெண்டும் அவர்கள் கேட்பார்களேயானால், அப்படிக் கேட்கும்பொழுது கண்டிப்பாக எந்தவிதமான டிஸ்க்ரிமினேஷனும் இல்லாமல் பர்மிட்டை வைத்துக்கொண்டு கேட்பவர்களுக்கு 50 சதவிகிதம் வெளிநாட்டு சிமெண்டும் 50 சதவீதம் உள்நாட்டு சிமெண்டும்

தர வேண்டும் என்று திட்டவட்டமாக அதிகாரிகள் அறிவித் திருக்கிறார்கள்.

ஆனால் அதற்கு மாறாகக் சோகன்லால் மிலாசந்த், அவருடைய சிமெண்ட் பர்மிட் எண் 9972/150 என்பவருக்கு வெளிநாட்டு சிமெண்ட 130 மூட்டைகளும், உள்நாட்டு சிமெண்ட் 20 மூட்டைகளும் தரப்பட்டிருக்கிறது. உத்தரவு என்ன? 50 சதவீதம், 50 சதவிகிதம்தான் தர வேண்டும். உள்நாட்டு சிமெண்ட் 50 சதவிகிதம், வெளிநாட்டு சிமெண்ட் 50 சதவிகிதம் என்று தர வேண்டும். ஆனால் சோகன்லால் மிலாசந்த் அல்லவா? எனவே அவருக்கு 130 மூட்டை வெளிநாட்டு சிமெண்டும் 20 மூட்டை உள்நாட்டு சிமெண்டும் தரப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, திருமதி எஸ்.வள்ளி,பர்மிட் 9966/150 அவர்களுக்கு வெளிநாட்டு சிமெண்ட் 130 மூட்டையும், உள்நாட்டு சிமெண்ட் 20 மூட்டையும் தரப்பட்டிருக்கிறது.

அஜீஸ் 9960/100, வெளிநாட்டு சிமெண்ட் 100 மூட்டை தரப்பட்டிருக்கிறது. உள்நாட்டு சிமெண்ட் தரப்படவே இல்லை.

இன்னும் பலபேருக்கு இப்படிப்பட்ட முறைகேடாக, உத்தரவுக்கு மாறாகத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்வளவு பெரிய தவறு செய்த அந்த அதிகாரியை, எந்த அளவிற்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கினார்கள் என்றால், எந்த நடவடிக் கையும் எடுக்காமல், ஒரு கண்டனம், ஒரு சென்ஷியூர், நீ செய்தது தவறு என்ற அந்த அளவிற்கு ஒரு அதிகாரி மீது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரியின் ஆணை பகிரங்கமாக மீறப்பட்டு 50 சதவிகிதம் வெளிநாட்டு சிமெண்டும், 50 சதவிகிதம் உள்நாட்டு சிமெண்டும் தருவதற்கு மாறாக, இவ்வளவு பெரும் தவறு இழைத்திருக்கிற அதிகாரிக் குத் தண்டனை வெறும் கண்டனம்தான், வெறும் சென்ஷியூர் தான். காரணம் பெரிய தண்டனை கொடுத்தால், பின்னால் இருப்பவர்கள் மாட்டிக்கொள்வார்கள். பின்னால் இருப்பவர்கள் மாட்டிக்கொண்டால், அரசாங்கத்திற்குப் புதிதாக அபகீர்த்தி வரும். ஏனென்றால் பழைய அபகீர்த்திகள் இருக்கின்ற காரணத்தினால், புதிதாக அபகீர்த்தி வரும் என்று சொல்லுகிறேன்.

எனவேதான் ஒரு 'லீனியண்ட்' வியூ எடுத்தார்களே தவிர, ஒரு சீரியஸ் வியூ எடுத்து இந்த நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவில்லை.

அதுமாத்திரம் அல்ல. நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் ஒரு தாசில்தார். பத்திரிகையிலே செய்தி வெளிவந்தது. அவர் கலெக்டர் அலுவலகம், தாசில்தார் அலுவலகம் இவைகளில் சிமெண்ட் விநியோகிப்பதற்குப் பதிலாக ஒரு கல்யாண மண்டபத்தை ஏற்பாடு செய்துகொண்டு, அங்கே அந்த கல்யாண மண்டபத்திலே இருந்து சிமெண்ட் விநியோகம் செய்து, பெரும் கொள்ளை அடித்தார். அப்படிப் பெரும் கொள்ளை அடித்த அந்த அதிகாரிக்கு என்ன தண்டனை தெரியுமா? அவர் கைது செய்யப்பட்டாரா- அவர் என்ன சதாசிவமா கைதுசெய்யப்பட, அவர் என்ன சண்முகநாதனா கைது செய்யப்பட, அவர் கைது செய்யப்படவில்லை: அதற்கு மாறாக இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது அல்லாமல் வேறு எந்த நடவடிக்கையும் அவர் மீது எடுக்கவில்லை. இலாகாவிலே இலாகா பூர்வமாக சாதாரண நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஒரு கல்யாண மண்டபத்தை சிமெண்ட் விநியோகம் செய்யும் இடமாக மாற்றிக்கொண்ட ஒரு அதிகாரியின் மீது.

அது மாத்திரமல்ல, இந்தத் தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு சாதாரண குடிமகன், அவர் பெயர் வரதன், அவருக்குத் திரிவே இன்டஸ்ட்ரீஸ் என்கின்ற ஒரு சிறுதொழில். அந்தத் சிறு தொழிலுக்குத் தொழிற்சாலை கட்ட சிமெண்ட் கேட்டு, அதுவும் ஒன்றும் அதிகமாகக் கேட்கவில்லை, 15 டன்தான் கேட்டு விண்ணப்பம் போடுகிறார். அவருக்கு 12-6-1981அன்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் 7½ டன் சிமெண்ட் ஒதுக்குகிறார். அதற்குப் பிறகு அவர் தொழிற்சாலையைப் பாதி கட்டிவிட்டு மீதி 7½ டன் கேட்கும்பொழுது சிமெண்ட் கொடுக்க இந்த அரசு முன்வரவில்லை. அதே நேரத்தில் பெரிய முதலாளிகள், வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், பார்சன் போன்ற கட்டிட நிறுவனத்திற்குச் சென்னையில் மாத்திரம் சுமார் 700 வீடுகளும் 250 கடைகளும் கட்டுவதற்குச் சிமெண்ட் கொடுக்கப்

பட்டிருக்கிறது. வரதனுக்குப் பாவம் 15 டன் சிமெண்ட் கொடுக்கவில்லை. ஒரு சாதாரண தொழிற்சாலை யைக் கட்ட, ஆனால், பார்சனைப் போன்ற வட மாநிலத்தைச் சேர்ந்த அந்த நிறுவனத்திற்கு 700 வீடுகள் 250 கடைகள் கட்ட சிமெண்ட் அளிக்கப்பட்டிருக்கிறது; அந்தக் கட்டிடங்களைக் கட்டி முடிக்க, சிமெண்ட் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டிலே ஒரு சாதாரண குடிமகன் ஜான் வின்ப்ரெட் அலையாய் அலைகிறார். நாசரேத்துக்கும், கோவூருக்கும், காஞ்சிபுரத்துக்கும் ஆனால் கிடைக்கவில்லை. அதேபோல, வரதன் ஒரு சிறு தொழிற்சாலையைக் கட்டுவதற்கு 15 டன்னுக்கு அலைகிறான். 7½ டன் கிடைத்தது. 7½ டன் கிடைத்த பாடில்லை. ஆனால், பார்சன் போன்றவர்களுக்குக் கிடைக்கிறது.

பார்சன் மாத்திரமல்ல, இன்னமும் உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நிறைய இருக்கிறது. சிவராஜ் என்பவருக்கு 407/82 என்ற பர்மிட்டின்படி 2,000 மூட்டை சிமெண்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 22-2-1982 அன்று பில் 515766 எண்ணின்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போலத்தான் கோபிசந்த் அன்ட்ர்ஸ்-அவர்களுக்கு 103/82 என்ற பர்மிட்டின்படி 20-2-1982 அன்று பில் 515702 எண்ணின்படி 2,000 மூட்டை சிமெண்ட் தரப்பட்டிருக்கிறது. அதே நிறுவனத்திற்கு மீண்டும் பர்மிட் நெம்பர் 225/82-ன் படி 2,000 மூட்டை சிமெண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், இப்படி ஆயிரக்கணக்கான மூட்டைகள், இலட்சக்கணக்கான மூட்டைகள் பெரும் பணக்காரர்களுக்கு, மாட மாளிகை, கூட கோபுரங்கள் கட்டுவதற்குத் தருகின்ற இந்த அரசு, ஏழை, எளியவர்கள், வீடு கட்ட ஒரு சிறு தொழிற்சாலை கட்டுவதற்குக் கோருகின்ற 15டன், 20 டன் அல்லது 100 மூட்டை, 200 மூட்டை சிமெண்ட் தரமுடியாத அளவிற்கு ஏன் இவ்வளவு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. யாரோ ஒரு எஸ்.பி.யைப் போட்டு விசாரிக்கச் சொல்லிஇருக்கிறோம்; என்று கூட அரசின் சார்பிலே பதில் அளிக்கப்படலாம். ஆனால், நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாநிலம் தழுவிய அளவில், இந்தச் சிமெண்ட் ஊழல் பல இடங்களில் நடைபெற்றிருக்கிற காரணத்தால், மாநிலம் தழுவிய அளவிலே

இதற்கு ஒரு பெரிய விசாரணை தேவை என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், காத்த வகுத்தலும், காத்தலை ஒழுங்காகக் காத்தலும் வகுத்தலின் அவசியம் என்பதைத் திருக்குறளின் அடிப்படையிலே நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அவையிலே நான் மற்ற மானியங்களிலே பேசுகிற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டேன். அரசினுடைய முறை கேடுகள், அதே நேரத்தில், தமிழ்நாட்டில் தொழில் செய்ய முடியாத அளவுக்கு மற்ற மாநிலத்தவரின் ஆதிக்கம், இவைகளைப் பற்றி நான் இந்த அவையிலே குறிப்பிட்டேன். அதனை, வருவாய்த் துறை, மதுவிலக்குத் துறை மானியங்கள் விவாதிக்கப்பட்டபோது நான் குறிப்பிட்டேன், அப்போது சொன்னேன்; சாராயக் கலவைத் தொழிற்சாலை, அதாவது பிளன்டிங் அன்ட் பாட்டிலிங் இவைகள் தஞ்சை மாவட்டத் திலே மட்டும் அல்ல, இன்னும் பல மாவட்டங்களிலே பினாமிகளின் பெயரால் யார் யாரோ ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே மாத்திரம் 2 சதவிகிதம் மூலதனமாகப் போட்டுள்ள ராமானுஜம் என்கிற பங்குதாரரை, 2 சதவிகிதம் மூலதனம் போட்ட அவர்களைப் பினாமியாகப் பயன்படுத்தி மற்ற பங்குதாரர்கள் அனைவரும் கேரளத்தைச் சேர்ந்த பெரிய முதலாளிகள், அல்லது சீமான்கள், அல்லது கோமான்கள், அல்லது பெரிய ஆலை அதிபர்கள். அவர்கள் ராமானுஜத்தைப் பினாமியாக வைத்துக்கொண்டு, தஞ்சை மாவட்டத்திலே பிளன்டிங், பாட்டிலிங் தொழிற் சாலையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டத்திலே, வைகை பாட்டிலிங் கம்பெனி அதிலே 15 பேர்கள் பங்குதாரர்கள். அதிலே 5 சதவீதம் மூல தனத்தைப் போட்டவருக்குத்தான் லைசென்ஸ், பினாமி அவர். அதாவது 15 ஆயிரம் ரூபாய் மட்டுமே மூலதனம், 15 ஆயிரம் மூலதனம் போட்ட பினாமி ஒருவருக்கு வைகை பாட்லிங் கம்பெனியில் லைசென்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சராசரி மாத லாபம் மாத்திரம் அந்தக் கம்பெனிக்கு 5 லட்சம் ரூபாய் என்று விசாரணையிலேயிருந்து தெரிய வந்திருக்கிறது. ஆனால், 15 ஆயிரம் ரூபாய் மூலதனம் போட்டதற்குப் பின்னாலே,

அவரைப் பினாமியாக ஆக்கி, பெரிய முதலைகள் எல்லாம் அந்த 5 லட்ச ரூபாயைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலே அசோசியேட்டட் பாட்லர்ஸ். சென்னையைச் சேர்ந்த புருசோத்தமன் என்பவர் நிர்வாகத்திலே இருந்தாலும் கூட, அவரது பங்குத் தொகை, 13 பர்சன்ட்தான். மற்றவர்களுடைய பங்குத்தொகை 87 பர்சன்ட்; அந்த 87 பர்சன்ட் பங்குத்தொகை போட்டவர்கள் யார் யார் என்றால், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்ல. அத்தனை பேரும் கேரளத்தைச் சேர்ந்தவர்கள். சேலத்தில் ஏற்காடு பிளன்டிங் அன்ட் பாட்டிலிங் யூனிட். அங்கே அந்த யூனிட் கேரளத்தைச் சேர்ந்த குழுவால் நடத்தப்படுகிறது. கே.டி.குருவில்லா என்பவர் 30 சதவீதம் அதிலே பங்குதாரர். 34 லட்சம் ரூபாய் மொத்த முதலீடு. அதில் வருமானவரி இலாகா சோதனையிட்டபோது அவர்களுக்குக் கிடைத்த கணக்கில் அவர்கள் சொல்கிறார்கள்; அந்த ஆலையினுடைய யூனிட்டினுடைய முதலீடு 34 லட்ச ரூபாய், இது கேரளத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுகிறது. 34 லட்ச ரூபாய் முதலீடு கணக்கிலே காட்டப்பட்டிருக்கிறது. 15 லட்ச ரூபாய் நன்கொடை, என்றும் அதிலே கணக்கு காட்டப்படுகிறது. எந்த நன்கொடையோ, யாருக்குத் தரப்பட்டதோ, என்ன வகையோ, எனக்குத் தெரியாது. வருமானவரி இலாகா அப்படிப்பட்ட ஒரு குறிப்பைத் தந்திருக்கிறது.

மதுரையில் மேகநாத் ஏஜென்சிஸ், அதன் லைசென்ஸ் தாரர் 5 சதவீதம் மாத்திரமே மூலதனமாக வழங்கியுள்ளார். மீதி 95 சதவீதத்திற்கும் பங்குதாரர்கள் யார் என்றால் கேரளத்தைச் சேர்ந்த எம்.எஸ்.விஸ்வாம்பரம் குடும்பத்தினர். அவர்கள்தான் பங்குதாரர்கள். 5 சதவீதம் மேகநாத் ஏஜென்சியில் 'லைசென்ஸ் பெற்றவர்களுக்கு 5 சதவீதம் மூலதனம் இருக்கிறது. மீதமுள்ள 95 சதவீதமும் கேரளத்தைச் சேர்ந்த விஸ்வாம்பரம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான் பங்கு தாரர்கள்.

அதுபோலவே, செங்கற்பட்டு மாவட்டத்திலே, த்ரீ ஸ்டார் பாட்டிலிங் கம்பெனி. அந்த 3 ஸ்டார் பாட்டிலிங் கம்பெனியில் தொழில் முன்அனுபவம் இல்லாதவர்கள் பெயரிலே

லைசென்ஸ். தமிழகத்திலே இந்தச் செங்கல்பட்டு யூனிட்டும், நான் முதலிலே சொன்னேனே, அந்த மதுரை யூனிட்டும், இரண்டுக்கும் சேர்ந்து கேரளத்தைச் சேர்ந்த விஸ்வாம்பரம் குடும்பத்தினர்தான் முதலாளிகள். அவர்கள்தான் பினாமியாக வைத்து, அதையும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

திருச்சியில் யூனிவர்சல் பிளன்டிங் யூனிட், வருமானவரி இலாகாவினர் எழுதிய குறிப்பில் இருப்பதாக அறிகிறேன்.

like other units, this is also controlled by a group of keralites.

லைசென்ஸ்தாரருக்கு முன் அனுபவம் கிடையாது என்றும் குறிப்பு எழுதப்படுகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தனியார் இன்டஸ்ட்ரீஸ் அதுவும்.

This unit is actually run by some keralites.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அப்ரோ பிரியேசன் பில் முடிந்து 1 மணி நேர விவாதம் வேறு வைத்து இருக்கிறேன். இப்போது நீங்கள் குறிப்பிடுவது எல்லாம் ஏற்கனவே பேசி இருக்கிறீர்கள். நீங்கள் பேசுங்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை.

கலைஞர் மு.கருணாநிதி: 1 மணி நேர விவாதம் வேண்டுமானால் நாளைக்கு வைத்துக்கொள்ளுங்கள். நானும் பேசி இருக்கிறேன். உங்களுக்கும் தெரியும். இருந்தாலும் கூட மக்களுக்குத் தெரிய வேண்டும் (குறுக்கீடு) அவர்கள் மக்களுக் கெல்லாம் தெரியும் என்கிறார்கள். அப்படித் தெரிந்திருந்தால் நல்லதுதான். இன்னும் தெரியவைக்க வேண்டும்; நீங்களும் நானும் சேர்ந்து; ஏன் என்றால் ஒரு தமிழனுக்குக்கூட இங்கே வேலை இல்லை. இவைகள் எல்லாம் கேரளத்தைச் சேர்ந்தவர் களுடைய ஆதிக்கத்திலே, சாராய தொழிற்சாலை ஓடிக்கொண் டிருக்கிறது, அதனால்தான் சொல்கிறேன்.

Dhania industries; This unit is actually run by keralites.

சதானந்தம் என்பவருடைய பெயரால் பினாமியாக ஒரு லட்சம் ரூபாய் முதலீடு என்று சொல்கிறார்கள். அந்த ஒரு

இலட்சம் ரூபாய் முதலீடும் கூட பொய்த் தகவல். அதுகூட போடவில்லை என்று தெரிகிறது என்ற அளவுக்கு இந்த சதானந்தமும் கேரளாவிலே உள்ள எலைட் குரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீசுக்கும் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ளவர் என்ற அளவுக்கு இந்த சாராயக் கலவைத் தொழிற்சாலை உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

நான் இன்னும் இரண்டு முக்கிய பிரச்சனைகளைப் பற்றி மாத்திரம் இங்கே சொல்ல விரும்புகிறேன். கப்பல் வாங்கிய பிரச்சனை குறித்து எனது நண்பர் விஜயராகவன் அவர்கள்கூட ஒன்றைச் சொன்னார்கள். பல்கேரியா பால்டிகா கப்பலைப் பற்றி; இங்கே சில குறிப்புகளை எடுத்துவைத்த நேரத்தில் சுப்ரீம் கோர்ட்டினுடைய நீதிபதியை வைத்து விசாரிப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்து, பிறகு அன்றைக்கு இருந்த மத்திய அரசிலே உள்ளவர்கள் அதற்கு வாய்ப்பு இல்லை என்று கடிதம் எழுதி, அதுபற்றி மீண்டும் முயற்சி எடுக்காமல் விடப்பட்டு, இப்போது புதிதாக மூன்று கப்பல்கள் 10 கோடி ரூபாய்க்கு வாங்குவது என்கின்ற ஒரு முனைப்பான முயற்சி எடுக்கப்பட்டு, அது குறித்து இந்த அவையிலே நம்முடைய பேராசிரியர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், மற்றவர்களும் எழுப்பிய சில வினாக்களுக்குச் சில சந்தேகங்களுக்குப் பதில் அளிக்கின்ற நேரத்தில் நம்முடையப் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; முதலமைச்சர் அவர்கள் விரும்பியபடி குளோபல் டென்டர் விட்டதாகவும், மேற்கு ஜெர்மனி, பல்கேரியா, யூக்கஸ்லோவேக்கியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கப்பல்கள் பற்றிய விவரங்கள் பரிசீலனை செய்யப்பட்டதாகவும், அதில், மேற்கு ஜெர்மன் கப்பல்கள்தான் சிறந்தவை என்று நிபுணர் குழு தீர்மானித்ததாகவும் சொன்னார்கள். மேற்கு ஜெர்மன் கப்பல் விலை 33.33 கோடி ரூபாய். மத்திய அரசுதான் தமிழக அரசு கப்பல் வாங்குவதற்குத் தடையாக இருப்பது போலவும், தமிழக அரசு ஜப்பான் நாட்டிலிருந்தும், கொரியாவிலிருந்தும் விவரங்களைக் கேட்கும்படி மத்திய அரசு கூறியிருப்பதாகவும், சில பத்திரிகைகளிலே செய்திகள் வந்தன. ஆனால், அமைச்சர் சட்டப்பேரவையில் விளக்கம்

அளித்தபோது, கப்பல் வாங்குவது குறித்து மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடு கிடையாது என்று விளக்கம் அளித்தார்கள்.

மாநிலங்கள் அவையில் 19-3-82 அன்று இந்தப்பொருள் பற்றி முரசொலி மாறன், வை.கோபால்சாமி, மற்றும் சில உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போது இந்தத் துறையினுடைய அமைச்சர் வீரேந்திர பட்டீல் அவர்கள் கூறிய பதிலை, இந்த அவை சற்றுக் கவனிப்பது நலம் என்று கருதுகிறேன். கோபால்சாமி கேட்கிறார். தமிழக அரசின் பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் ஜெர்மனியிலிருந்து 3 கப்பல்கள் வாங்குவது பற்றிய ஒப்பந்தத்திற்கு மத்திய கப்பல் வளர்ச்சி நிதிக்குழு ஒப்புதல் தரவில்லையா என்று கேட்கிறார்.

அதற்கு வீரேந்திர பட்டீல் தருகின்ற பதில், இல்லை பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் வேண்டுகோளின்படி கப்பல் விலை பற்றிக் கூடுதல் விவரம் கிடைக்கும் வரை அந்தத் திட்டம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

கோபால்சாமி, 4-3-82 அன்று தமிழக சட்டமன்றத்தில் அமைச்சரவர்கள் ஜெர்மன் கப்பல் விலை பற்றிக் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார். ஆனால் தமிழக அரசே அதை ஒத்திவைக்க பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். எனவே எப்போது தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதினார்கள்?

வீரேந்திர பட்டீல், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 3 கப்பல்களை மேற்கு ஜெர்மனியிலிருந்து 33.33 கோடி ரூபாய் வீதம் வாங்குவதற்கு விரும்பியது. எஸ்.பி.எஃப்.சி. அதையும் சொல்லவில்லை. மறுக்கவில்லை. ஆனால் கப்பல்கள் விலைபற்றி அவர்களுக்குச் சில சந்தேகங்கள் எழுந்தன. ஏனென்றால் டைரக்டர் ஜெனரல் அவர்களுக்கும், எஸ்.டி.எஃப்.சி-க்கும் மார்க்கெட்டில் உள்ள கப்பல் விலை என்ன என்பது தெரியும். சவுத் இந்தியா ஷிப்பிங் கார்ப்ப ரேஷன் தெற்குக் கொரியாவிலிருந்து 4 கப்பல்களை வாங்கி யிருக்கிறது; அதன் அளவு 38,300 டி.டபிள்யூ.டி. அவர்கள் 22 கோடி ரூபாய் வீதம் அதை வாங்கி இருக்கிறார்கள்.

பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் 38,000 டி.டபிள்யூ.டி. அளவுள்ள கப்பலை 3.3 கோடி ரூபாய்க்கு வாங்க விரும்புகிறார்கள். அதாவது 10 கோடி ரூபாய் அதிகமாக ஜெர்மன் கப்பல் கம்பெனிக்குத் தர விரும்புகிறார்கள். எனவே, இயற்கையாகவே எஸ்.டி.எஃப்.சி.மேற்கு ஜெர்மன் குறிப்பிட்டுள்ள விலை அதிகம் என்று கருதியது. சில தகவல்களைப் பெற விரும்பியது, அந்தத் தகவலைக் கேட்கும்போது, நீங்கள் ஏன் மற்ற கப்பல் நிறுவனங்களை, ஜப்பான், கொரியா போன்ற நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு கேட்கக்கூடாது? அப்போது ஜெர்மன் கப்பல் விலை அதிகம் என்பது சுலபமாகப் புரியுமே என்று கூறியது.

பிறகு, 27-2-83 அன்று பூம்புகார் கார்ப்பரேஷன் வேறு ஒரு கடிதம் அதாவது ஜப்பான், கொரியா கப்பல் தலங்களைத் தொடர்பு கொண்டு அவர்களுடைய விலை பற்றிய விவரங் களைக் கேட்பதாகத் தெரிவித்து எழுதி விட்டார்கள். அது பற்றிய விவரங்களோடு பின்னால் வருவதாகத் தெரிவித்து சென்றவர்கள் இன்னும் வரவில்லை. வந்த பிறகு அது பற்றிக் கவனிக்கப்படும். இது அமைச்சர் பதில்.

கோபால்சாமி மீண்டும் கேட்கிறார். ''தமிழக அரசு தூத்துக் குடிக்குக் கரி கொண்டு வருவதற்கு அவசியமாகக் கப்பல் வாங்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறது. அதிலே எனக்கு வேறுபாடு இல்லை. ஆனால் தமிழக அரசு ஏன் மறுபடியும் குலோபில் டெண்டர் கேட்காமல் ஜப்பான், கொரியாவிலிருந்து மட்டும் விலை விவரங்களைக் கேட்க வேண்டும்?''

அதற்குத் திரு.வீரேந்திர பாட்டில் அவர்கள் சொல்கிறார் மாநில அரசு விவகாரத்தில் ஷிப்பிங் டெவலப்மெண்ட் கமிஷன் ஓரளவிற்குத்தான் கருத்துக்களைச் சொல்ல இயலும், மேலும் ஜெர்மனிக்குத்தர முடிவு செய்வதற்கு முன்பு, இங்கிலாந்தில் இருந்தும் அவர்கள் டென்டர் கோரி இருந்தார்கள். இங்கிலாந்து, அவர்கள் அளித்துள்ள கப்பல் விலை 24 கோடி ரூபாய் அளவிற்கும், யூகோஸ்லாவியா 23.40 கோடி ரூபாய் அளவிற்கும் பல்கேரியா 22 கோடி ரூபாய் அளவிற்கும் விலை தெரிவித்திட தமிழக அரசு இதையெல்லாம் மறுத்து

விட்டு, மேற்கு ஜெர்மனியைத் தேர்ந்தெடுத்தார்கள். அதனால் தான் மற்றவைகளையும் கேட்கும்படி ஆலோசனை கோரப் பட்டது. அவர் இந்த 3 மனுக்களையும் மறுத்துவிட்டு, மேற்கு ஜெர்மன் அதிக விலை தெரிவித்திருந்தும், மேற்கு ஜெர்மனி தெரிவித்து இருந்த விலையை ஏற்றுக்கொண்டார்கள். பிறகு இந்த யோசனையைக் கூறிய பிறகு, புதிய திட்டங்களோடு வருவதாகக் கூறிப் போய் இருக்கிறார்கள்.''

பிறகு, திரு. முரசொலி மாறன் கேட்கிறார்: ''அமைச்சரவை அவர்கள் மேற்கு ஜெர்மனி கப்பல் மற்றதைவிட அதிக விலை என்று கூறினார்கள். தமிழக அரசு ஒரு குழு அமைத்துத்தான் இந்த முடிவை எடுத்து இருக்கிறார்கள். கரி கொண்டு வருவதாக டன்னுக்கு ஜெர்மன் கப்பலுக்கு 12 ரூபாய் இங்கிலாந்து கப்பலுக்கு 135 ரூபாய், பூகோஸ்லாவியா 143 ரூபாய் என்றும் பல்கேரியா 145 ரூபாய் என்றும், அந்தக் குழு முடிவு செய்ததின் பேரில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது என்று தமிழக அமைச்சர் கூறியிருக்கிறாரே. எனவே இதில் உண்மையான விவரம் என்ன?''

''அதற்கு திரு.வீரேந்திர பாட்டில் கூறுகிறார்: ''உறுப்பினர் கருத்துப்படி பூம்புகார் கார்ப்பரேஷன் ஒரு குழு போட்டு இருப்பதாகத் தெரிகிறதே. அவர்கள் எப்படிப்பட்ட நிபுணர் என்று எனக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய அரசு நம்முடைய நிபுணர்கள் இருக்கிறார்கள்'' என்று பதில் சொல்கிறார்.

உடனே, திரு. பில்லுமோடி கேட்கிறார் ''அவர்கள் எப்படிப்பட்ட நிபுணர்கள்?''

அதற்கு திரு.வீரேந்திர பாட்டில் பதில் சொல்கிறார்: ''பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் நிபுணர்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுத்த கப்பல் பற்றி நம்பிக்கையும், தைரியமும் இருக்கு மானால் அவர்கள் நம்முடைய டைரக்டர் ஜெனரல் இடம் வந்த அதிகாரிகளிடத்தில் விவாதித்து, ஒப்புக் கொள்ளச் செய்து இருக்கலாம். நான் இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஏனென்றால் அந்தத் திட்டம் அமைச்சரவைக்கு இன்னும் வர வில்லை; இன்னும் எஸ்.டி.எப்.சி.யிடத்தில்தான் இருக்கிறது. அவர் மேல்விவரங்களுக்காகக் காத்து இருக்கிறார்கள்.''

இப்படிப்பட்ட முறையில் அவர்கள் பதில்சொல்லியிருக் கிறார்கள். எனவே, இதிலே மேற்கு ஜெர்மன் கப்பலை வாங்கு வது உங்களுடைய நோக்கம், அதுதான் தரத்தில் உயர்ந்தது என்று அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். அதை வாங்குவதுதான் சரியானது என்பதை விவாதிக்க எஸ்.டி.எப்.சி. யிடம் சென்று வந்த நிபுணர்களோ, அரசின் சார்பிலோ யாரும் இதுவரையில் கலந்து உரையாடவில்லை; இடையில் இது அதிக விலை அல்லவா என்று எஸ்.டி.எப்.சி. பின், அதைவிட ஜப்பான், கொரியா கப்பலை வாங்கலாம் என்று யோசனை ஏற்பட்டு, அதற்காக இங்கே இருந்து பறந்து கொரியாவிற்கும் பறந்து இருக்கும் செய்திகள் எல்லாம், நமக்கு வந்து கொண்டு இருக்கின்றன. இவைகளை எல்லாம் இந்த அரசுக்கு நல்ல பெயர் உண்டாக்கக் கூடியவைகள்தானா என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சில விளக்கங்களைச் சொல்லியிருக்கிறார்கள். கப்பல் வருதைப் பற்றி ஒரு கேள்விக்குத்தான் பதில் தருகின்ற விதத்திலும், என்னுடைய மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலும் பேசுகின்ற நேரத்திலும், அதைப்பற்றிக் கொஞ்சம் விளக்கவே பதில், உறுப்பினர்கள் கேட்ட கேள்வி களுக்கு, நான் சொல்லியிருக்கிறேன். இப்போது கூட கொஞ்சம் அதை விளக்கமாகச் சொல்வது கடமை என்று கருதுகிறேன்.

நாம் கப்பல் வாங்க வேண்டும் என்று முடிவு எடுத்தோம். இந்த முடிவை எடுத்த நாம், ஏற்கெனவே சொல்லியதைப் போல, 26 நாடுகளில் உள்ள 113 கப்பல் தளங்களுக்குக் கடிதம் எழுதினோம். அது போன்று குளோபல் டென்டர் கேட்டு,

பிறகு பத்திரிகையில் விளம்பரம் கொடுத்து இருக்கிறோம். நீங்களும் கலந்துகொள்ள வேண்டும் என்று கடிதம் எழுதினோம். கலந்து கொண்டவர்கள் நிறைய பேர் இல்லை, கலந்து கொண்டவர்கள், 4 கப்பல் தளத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் விலைப் பட்டியலைக் கொடுத்து இருந்தார்கள்.

அதிலே ஜெர்மன் கப்பல், கொரியா கப்பல் இவைகளை யெல்லாம் பார்த்துவிட்டுப் பார்க்கிறபோது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லியதைப் போல, ரூ.123 ஒரு டன்னுக்குச் செலவாகும் என்று ஜெர்மனி கப்பலுக்குக் கணக்குக் கொடுத்து இருந்தார்கள்; நம்முடைய நிபுணர்கள் குழு இதிலே பல்கேரியா கப்பல் 22 கோடி ரூபாய் விலை என்றும், அதிலே கொண்டுவர 145 ரூபாய் ஒரு டன்னுக்கு ஆகும் என்றும் கொடுத்து இருந்தார் எங்களுக்கு எவ்வளவு கணக்கு அதை நாம் அப்படியே எஸ்.டி.எப்.சி.அனுப்பினோம். எஸ்.டி.எப்.சி.யில் பார்த்து விட்டு, இந்தக் கப்பலை நாம் ஒப்பிட்டதைப் பற்றி அவர்கள் எந்தக் குறையும் சொல்ல வில்லை. இந்த 4 கப்பலை ஒப்பிட்டுக் காட்டி, இது விலை குறைவு. இதற்கு விலை அதிகமாக இருக்கிறது, இதிலே கொண்டு வருவதற்கு என்ன செலவாகும் என்று கணக்குக் காட்டி இருப்பதைப் பற்றி அவர்கள் குறை சொல்லவில்லை. அவர்கள் சொல்லிய கருத்து எல்லாம், இங்கே வந்து இருக்கும் கப்பலுக்கு நீங்கள் என்ன தேவையைக் கருதி, எந்தப் பணிக்காக அதை வாங்குவதற்குக் கருதியிருந்தோமோ, அந்தத் தேவைக்கு வெளியிலே விலை குறைவாகக் கப்பல் கிடைக்கும் என்று நாங்கள் கருதுகிறோம், எனவே இங்கே வந்து இருப்பவர்களை விட, நீங்கள் உங்களுடைய தேவைக்கு ஏற்ப இருக்கும் கப்பல்களை விலை குறைவாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கை, எங்களுக்கு இருக்கிற அனுபவத்தால், இருக்கிறது என்பதாக நீங்கள், கொரியாவிலிருந்து ஜப்பானிலிருந்து கேட்க வேண்டும்; அதிலும் குறிப்பாக ஜப்பானில் இரண்டு பெரிய கப்பல் தளம் இருக்கிறது. அங்கேயெல்லாம் கேட்க வேண்டும் என்று கடிதம் கொடுத்து இருக்கிறார்கள். அதைக்கூட வைத்து மீண்டும் எழுதியிருக்கிறோம். மேலும் அமைச்சரவைக்கு அந்தக் கோப்புப் போகாத காரணத்தால் அங்கே முழு விவரங்கள் இல்லாமல் இருந்து இருக்கும். அதனால்தான் அமைச்சர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள்.

இங்கே கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதலில் நாம் குளோபல் சென்டர் கால்பார் செய்து அதிலே 4 பேர்கள் கலந்து கொண்டு வந்தபோது எஸ்.டி.எப்.சி. என்ன கருத்தைச்

சொல்லியதோ, அந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து மன்றத்திலே கேட்டார்கள். எப்படிக் குறைந்த விலையிலே கப்பல் கிடைக்கும்போது நீங்கள் அதிக விலையிலே வாங்குகிறீர்கள் என்று. நான் அப்போதே விளக்கம் சொன்னேன். குளோபிங் டென்டருக்குள்ளே அவர்கள் வரவில்லை என்று விளக்கிச் சொன்ன பிறகு, அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அப்போது குளோபில் டென்டரில் நீங்கள் கால்பார் செய்திருந்தால் கூட என்ன விலையிலே வெளியிலே இருக்கிறது என்று ஏன் கேட்கக் கூடாது என்று கூட கேட்டார்கள். இன்றையதினம் வந்திருக்கிற நிலைமை நீங்கள் குளோபில் டென்டர்தான் கால்பார் செய்ய வேண்டும். வெளியிலே தனியார்களிடம் கேட்கக் கூடாது என்று சொல்கிறார்கள். எஸ்.டி.எப்.சி சொல்லி, அந்த அடிப்படையிலே நாம் கேட்டு, அந்த விளக்கத்தை அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறோம். எனவே தவறு நடக்கும் நேரத்தில், நீங்கள் அதை சுட்டிக்காட்டுவதற்கும் அல்லது தலையிட்டு நிறுத்துவதற்கும் வாய்ப்பு இருக்கிறபோது, சந்தோஷப்படுவதற்கான வாய்ப்பு இதிலே எதுவும் இல்லை என்று கருதுகிறேன்.

திரு.கே.எஸ்.ஜி.ஹாஜாசெரீப்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே! அமைச்சரவர்கள் இப்போது சொல்லும்போது ஒரு டன்னுக்கு 123 ரூபாய்தான் அடக்கமாக வருகிறது என்று சொல்கிறார்கள், அது எனக்குச் சரியாகத் தெரியவில்லை. டன் ஒன்றுக்கு 160 அல்லது 170-க்கு ஆகும் என்றுதான் நான் தீர்மானமாக, எனக்கு நன்றாகத் தெரியும் என்ற வகையில் கருதுகிறேன். இந்த 123 ரூபாயை எப்படி அவர்கள் கணக்கிட்டார்கள் என்ற ஆதாரத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா? அதைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே! நான் ஏற்கெனவே ஒரு வினாவிற்குப் பதில் சொல்லும்போது விளக்கமாக இந்தக் கருத்துக்களைச் சொன்னேன். தற்போது அந்தக் குறிப்புக்கள் என்னிடத்திலே இல்லை என்றாலும், என்னுடைய ஞாபகத்திலிருந்து எதையாவது சொல்லி அது நாளைய தினம் தவறாகப் போகுமேயானால் தவறான

கருத்தைச் சொல்லிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கூட வரும். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில் நிபுணர் குழு கொடுத்திருக்கிறார்கள். அது அந்தக் கப்பலினுடைய தலைமையையும், அமைப்பையும் பொறுத்திருக்கிறது. உங்களுக்குத் தெரியாதது அல்ல. அதிலே நீங்கள் அனுபவம் பெற்றவர்கள். கப்பலினுடைய அமைப்பைப் பொறுத்து அதிலே கொள்ளளவு எவ்வளவு, எவ்வளவு அளவிற்கு எவ்வளவு ஏற்றலாம் என்பதைப் பொறுத்துத்தான் கணக்கிட்டுச் சொல்கிறார்களே தவிர, வேறு அல்ல. நிலக்கரி ஒரு டன்னுக்கு எவ்வளவு ஆகும் என்று கணக்கிடுகிறோம். அந்த வகையிலே ஜெர்மன் கப்பல் குறைந்த வாடகை என்று நிபுணர் குழுவினர் கணக்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு.கே.எஸ்.ஜி.ஹாஜா செரீப்: மாண்புமிகு தலைவர் அவர்களே! அமைச்சர் அவர்கள் ஹாலடியா போர்டிலேயிருந்து கொண்டுவரமுடியும் என்று அவர்கள் அடித்துக் கூறுகிறார்கள். ஹாலடியா போர்ட்டினுடைய ஆழம் 27 அடிக்கு மேல் கிடையவே கிடையாது. அவர் 38 அடி கப்பல் வாங்கினால் அந்த 10 அடி, 11 அடி வித்தியாசம் எங்கே லோட் பண்ணப் போகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அப்படி லோட் பண்ணினாதான் 160 ரூபாய்க்குக் கிட்டத்தட்ட முடியும் இல்லையென்றால் 200 ரூபாய்க்கு மேலே போகும்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: தலைவர் அவர்களே அந்த ஆழத்தை எல்லாம் கணக்கிட்டுத்தான் அந்தக் குழு நம்மிடத்திலே கொடுத்திருக்கின்றது. நானாகச் சொல்லவில்லை; அந்தக் குழுதான் அந்த ஆழங்களை எல்லாம் கணக்கிட்டுக் கொடுத்திருக்கிறார்கள்.

கலைஞர் மு.கருணாநிதி: மேற்கு ஜெர்மனி கப்பல் உள்ள படியே தரம் வாய்ந்ததாக இருக்கிறது என்ற நம்பிக்கையும் தைரியமும் அந்த நிபுணர்களுக்கு இருந்திருக்குமேயானால், அவர்கள் ஏன் இங்கே வந்து எஸ்.டி.எப்.சி.யிடம் கலந்துபேசி, எங்களை ஏன் கன்வின்ஸ் செய்திருக்கக்கூடாது என வீரேந்திர பாட்டில் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர் விலை அதிகம் அல்லவா என்று கேட்ட உடனேயே, அவர்கள் கன்வின்ஸ் செய்வதற்குப் பதிலாக, ஜெர்மென் கப்பலை விற்றுவிட்டு,

நாங்கள் ஜப்பான் கொரியா கப்பலை வாங்கப்போகிறோம் என்று ஏன் சொல்ல வேண்டும்? நான் கேள்விப்படுகின்ற வகையிலே ஜெர்மன் கப்பலுக்குக் கொடுக்கற கமிஷன் அல்லது 1 சதவீதம் கமிஷன் என்றும், இப்போது கொரியன் கப்பலுக்கு கொடுக்கக்கூடிய கமிஷன் 5 சதவீதம் என்றும், இதற்குப் பேரம் பேச இந்த அரசுக்கு மிக நெருங்கிய நண்பர் ஒருவர், இப்போது கொரியா நாட்டிலே சுற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், நான் தகவல் கேள்விப்படுகிறேன். அவையெல்லாம் இந்த அரசுக்கு நல்லது அல்ல, இவைகளை எல்லாம் அறவே தடுத்து நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான், நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் சொல்கிறேனே தவிர வேறு அல்ல. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: தலைவர் அவர்களே! நம்முடைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினுடைய எம்.டி. அவர்கள் அங்கே சென்று, அந்தக் கருத்துக்களை எடுத்துச்சொன்னார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன். இது போல தவறுகள் நடந்து விட்டதாக நினைக்கக்கூடாது என்பதற் காகத்தான் தனித்தனியாகப் பேசாமல் குளோபல் டென்டர் விட்டோம். அந்தக் குளோபல் டென்டரிலே கலந்து கொண்ட வர்களை மட்டும் நாம் ஒப்பிட்டு, எந்தெந்த விலைக்கு கொடுத் திருக்கிறார்கள், எந்தெந்த கப்பலைப் பயன்படுத்தினால் எந்தெந்த விலையிலே கொண்டுவந்து சேர்க்க முடியும் என்ற கணக்கைக் கொடுத்தோம். அதிலே அவர்கள் எந்தவித குற்றச் சாட்டையும் நம்மீது சுமத்தவில்லை. அதிலே குற்றம் சொல்லி யிருந்தால் அல்லவா அதில் நாங்கள் செய்தது சரிதானா என்று அவர்களைச் சமாதானம் செய்ய முடியும்; அவர்கள் சொல்லியது எல்லாம், இதிலே கலந்து கொண்ட 4 கப்பல் களைத் தவிர வெளியிலே உள்ள கப்பல் தளங்களில், இந்த டென்டரிலே கலந்து கொள்ளாதவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இன்னும் குறைந்த விலையிலே கொடுப்பதற்குத் தயாராக இருப்பார்கள். இன்றைய தினம் சூழ்நிலை அப்படி யிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, கேட்காம லேயே சமாதானம் செய்ய வாய்ப்பில்லை. இந்த 4 கப்பல் களுக்குள்ளே விலை அதிகம் அல்லது குறைவு என்று கருத்து

வேறுபாடு வந்திருக்குமேயானால், நாங்கள் எங்களுடைய நிலைமைகளை விளக்கியிருப்போம். அவர்களே வராத ஒரு கப்பலைப் பற்றி சொல்கின்றபோது நாங்கள் எப்படிச் சமாதானப்படுத்த முடியும்? அவர்களே சொல்லமாட்டார்கள் அந்தந்த இடத்திலே கேளுங்கள் என்று, அந்த விலைப் பட்டியலைக் கேட்டு, அவர்களிடத்திலே போய் மீண்டும் எழுதியிருக்கிறோம்.

கலைஞர் மு.கருணாநிதி: தலைவரவர்களே! நான் சொல்வது எல்லாம் ஜெர்மன் கப்பலைப் பொறுத்தவரையிலே முதலிலே பேசி முடிக்கப்பட்டு, அங்கே உள்ள குழுவிற்கு அனுப்பப்பட்டு, அவர்கள் அதிக விலை என்று தமிழக அரசின் சார்பாக அவர்களுக்குக் கடிதமோ அல்லது செய்தியோ அனுப்பப்படுகின்ற, வீரேந்திர பாட்டீல் மாநிலங்களவையிலே கேட்டது எல்லாம், ஜெர்மன் கப்பலே சிறந்தது என்று தமிழக அரசு வாதாடுவது உண்மையானால் அதையே மெய்ப்பிக்கின்ற அளவுக்கு எங்களிடத்திலே வந்து வாதாடி, எங்களை ஏன் கன்வின்ஸ் செய்திருக்கக்கூடாது என்றுதான் அவர் கேட் டிருக்கிறார். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஜெர்மன் கம்பெனிக்காரர் தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டார் என்ற செய்திகள் எல்லாம் உண்மையல்ல என்று யாரும் மறுக்க முடியாது. எனவேதான் நான் மிக ஆழத்திற்கு இந்தக் கருத்தை எடுத்துக் கொண்டுசெல்ல விரும்பாமல் உடனடியாக மறுபடியும் ஒரு குளோபல் டென்டர் போடாமல் கொரியா, அல்லது ஜப்பான் கப்பல்களுக்கு உடனடியாகத் தாவுவது நல்லதல்ல. அதன் காரணமாக அரசுக்குக் கெட்ட பெயர் வரும்..... (குறுக்கீடு) .... மேலும் ஒரு கெட்ட பெயரைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டாம் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: தலைவரவர்களே! நான் மீண்டும் மீண்டும் விளக்கமாகச் சொல்கிறேன். குளோபல் டென்டரிலே யார் யார் கலந்துகொண்டார்களோ அவர் களுடைய விலைப்பட்டியலை வைத்து, அதாவது இந்தக் கப்பலிலே நாம் அங்கே இருந்து நிலக்கரியைக் கொண்டு வருகின்றபோது என்ன வாடகை, என்ன செலவாகும் என்பதை

எல்லாம் நாம் கணக்குப்பார்த்து, அந்த அடிப்படையிலே நாம் எஸ்.டி.எப்.சி,யினிடத்திலே கொண்டுபோய் கொடுக்கின்ற போது, அவர்கள் அதன்மீது குற்றம் சொல்லவில்லை. இந்த நான்கு கப்பல்களை மட்டும் பார்த்தால் ஜெர்மன் கப்பல்களைப் பற்றி நாம் போட்டிருக்கின்ற கணக்கை அவர்கள் குறை சொல்லவில்லை. ஆனால் அவர்கள் சொல்லியது எல்லாம் ''இங்கே கலந்துகொண்டது நான்கு கப்பல் தளங்கள்தான். இங்கே கலந்துகொள்ளாத கப்பல் தளங்கள் இருக்கின்றன. அங்கே குறைவான விலையில் கிடைக்கின்றது; ஆகவே, அப்படி இருக்கும்போது, ஏன் வீணாக நீங்கள் அதிகமான விலைக்கு வாங்கவேண்டும். எனவே, மீண்டும் நீங்கள் அந்த இடத்திலே கேட்டுப்பாருங்கள், அந்த விலைப்பட்டியலை வாங்கி அதற்குப் பின்னாலே விவாதிப்போம்'' என்று சொல்லி, அவர்கள் கடிதமே கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் நாம் கேட்டிருக்கிறோம், நான் ஏற்கெனவே சொன்னேன், இந்த நான்கு கப்பல்களுக்கு இடையில் நாம் செய்ததில் தவறு வந்திருக்குமேயானால் அவர்கள் நம்மைச் சுட்டிக்காட்ட முடியும். இதில் அவர்கள் தவறு சொல்லி இருந்தால் அவர்களை நாம் சமாதானப்படுத்து வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள முடியும். இதிலே அவர்கள் குற்றமே சொல்லவில்லை. இதிலே கலந்து கொள்ளாதவர்கள் குறைந்த விலையிலே கொடுப்பதற்கு இருப்பதாக எங்களுக்குத் தெரிய வருகின்றது, எங்களுடைய அனுபவம் அப்படிச் சொல்கிறது, எனவே, அவர்களிடத்திலே நீங்கள் கேளுங்கள் என்று சொல்லி, ஜப்பானிலே உள்ள இரண்டு பெரிய கப்பல் தளத்திலேயும் கொரியாவிலே உள்ள ஒரு பெரிய கப்பல் தளத்திலேயும், கேளுங்கள் என்று கடிதத்தையும் கொடுத்திருக் கிறார்கள். அதற்குப் பின்னாலே நாம் இதைக் கேட்டிருக்கிறோம், அப்படிக் கேட்டு அதையும் நாமாக முடிவு எடுப்பதில்லை, எஸ்.டி.எஃப்.சி.யிலே இதைக் கொண்டுபோய் வைக்க இருக்கிறோம். இந்தக் குறிப்புகளை எல்லாம் கொண்டுபோய் வைக்க இருக்கிறோம். மீண்டும் அவர்கள் பரிசீலனை செய்து சொல்வார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சொல்லிய அந்த அடிப்படையிலே பார்த்தால்கூட இன்றைய தினம் அவர்கள் சொல்லியதாகச் சொல்கிறார்கள்; அவர்கள்

அப்படிச் சொல்லவில்லை, ஜெர்மன் கப்பல் விலை அதிகம், அதை ஏன் வாங்கவில்லை என்று அப்படி ஒரு நம்பிக்கை எஸ்.டி.எஃப்.சி.யின் மீது அவர்களுக்கு இருக்குமேயானால், மீண்டும் நாம் இதைக்கொண்டுபோய் வைத்தது தவறு இருந்தால் சுட்டிக்காட்டுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது.

குளோபல் டென்டர் மூலமாக முதலிலே ஆரம்பித்து அதிலே நான்கு கப்பல்களைப் பொறுக்கி எடுத்து, ஜெர்மன் கப்பல் உயர்ந்தது என்று கூறிவிட்டு, மறுபடியும் மத்தியிலே உள்ள குழு எடுத்துரைத்த பிறகு, மறுபடியும் குளோபல் டென்டருக்குப் போகாமல், நெகோஷியேஷன் என்ற முறையிலே கொரியா அல்லது ஜப்பான் கப்பல்களோடு நெகோஷியேஷன் செய்வது நல்லதல்ல, என்ற அந்தக் கருத்தைத்தான் எடுத்துச்சொல்கிறேன். அதை நாங்கள் மறுக்கிறோம் என்ற கருத்தைத்தான் எடுத்துச்சொல்கிறோம்.

மத்திய அரசின் அனுமதியில்லாமல் வாங்க முடியாது என்ற கருத்து, முழுவதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஆனால் நான் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, மீண்டும் குளோபல் டென்டரை நீங்கள் விரும்புகிறீர்களா அல்லது நெகோஷியேஷன் முறையில் கொரியா மற்றும் ஜப்பானோடு நெகோஷியேஷன் மெதேடில் கப்பல் வாங்க விரும்புகிறீர்களா என்பதுதான்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: நெகோஷியேஷன் என்பதே மாறிப்போய்விட்டது. இப்போது நெகோஷியேஷன் இல்லை. கால்பார் செய்யப்பட்டது வேர்ல்யிட் டென்டர். அந்த அறிக்கையை எஸ்.டி.எப்.சி.யிடம் எடுத்துவைத்துவிட்டோம். இப்போது அவர்கள் நம்மிடம் சொல்லியிருப்பது, இந்த மூன்று கப்பல் தளங்களிடம் கேளுங்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். கேட்டு வரக்கூடிய விலைப்பட்டியலை அவர்கள் முன் வைத்து விடுகிறோம். அவர்கள் முடிவு எடுக்கட்டும்.

கலைஞர் மு.கருணாநிதி: மறுபடியும் அவர்கள் ஒரு விலைப்பட்டியல் தர வேண்டும் என்று குறிப்பிட்டு ஜப்பான்,

கொரியா ஆவணங்களிடம் கேட்பது, அதை எச்.டி.எப்.ஸி. சொன்னாலும் குறையாக எனக்குத் தெரியவில்லை. நான் கூறுவதெல்லாம் அந்த குளோபல் டென்டர் போடப்பட்டு, அந்த குளோபல் டென்டர் ஒரு முடிவு எடுக்கப்படாத சூழ்நிலையில், ஒரு மாறுதல் வேண்டும், வேறு கப்பல்கள்தான் வாங்க வேண்டும் என்ற முடிவிற்கு அரசு வந்துவிடுமானால், மறுபடியும் ஒரு குளோபல் டென்டர் போட்டு, அதிலே வருகிற வர்களை வைத்துக்கொண்டு மறுபடியும் அந்தப் பேரத்தை முடிப்பது நல்லது என்பதைத்தவிர, வேறு அல்ல என்பதை மீண்டும் என் முடிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சு.முத்துசாமி: மைய அரசு அதை ஏற்றுக் கொண்டு நீங்கள் மீண்டும் க்ளோபல் டென்டர் கால்பார் செய் யுங்கள் என்று சொன்னால் எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் இந்த மூன்று இடங் களில் கேட்டுக் கொடுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைக் கேட்டு அவர்கள் அனுமதியைக் கேட்க இருக்கிறோம். அந்த வேலை முடிந்துவிட்டது.

கலைஞர் மு.கருணாநிதி: குளோபல் டென்டர்தான் வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பாக நீங்கள் கடிதம் எழுத வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இத்துடன் இதை விட்டுவிடலாம் என்று கருதுகிறேன்.

நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒன்று வெளியாகியிருக் கிறது. அதனுடைய பூர்வீகத்தை மாத்திரம் சொல்லிவிட்டு, அந்தத் தீர்ப்பை நான் ஞாபகப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். சேலத்தில் கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் முனுசாமி செட்டி என்கிற ஒருவர் 6-2-1956 முதல் 5-2-1976 வரை இருபது ஆண்டுகளுக்கு மைனிங், சுரங்கக் குத்தகை எடுத்திருக்கிறார்கள். அது 5-2-1976- ஓடு அந்தக் குத்தகை முடிந்துவிடுகிற காரணத்தால், ரென்யூவல், குத்தகை ஒப்பந்தத் தைப் புதுப்பிக்க வேண்டும் என்று அவர்கள் அரசுக்கு மனு செய்தார்கள். ஆனால் அந்த மனுவின்படி, அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவில்லை. புதுப்பிக்கப்படாத காரணத்தால் காத்திருந்த முனுசாமி செட்டி 4-11-1976ல் கிட்டத்தட்ட ஒரு

ஆண்டுக்குப் பிறகு, மத்திய அரசினிடம் அது குறித்து முறையிட்டிருக்கிறார்கள். இருபது ஆண்டுக் காலம் இந்த மைனிங் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதை ரென்யூ செய்துதரவேண்டுமென்று, கேட்கிறார்கள். மாநில அரசிட மிருந்து எந்தவிதமான பதிலும் இல்லை, எனவே மைய அரசு தலையிட வேண்டுமென்று மைய அரசுக்கு முறையீடு செய்கிறார். மத்திய அரசு மாநில அரசுக்கு ஒரு டைரக்ஷன், ஒரு தாக்கீது அனுப்புகிறது. 100 நாட்களுக்குள் இந்தப் பிரச்சினையை நீங்கள் தீர்த்துவைத்து, ஆணை இடுங்கள் என மத்திய அரசு தாக்கீது அனுப்புகிறது. மாநில அரசு ஒப்பந்தத் தைப் புதுப்பிக்காமல் மறுத்துவிடுகிறது. முனுசாமி செட்டி மீண்டும் மத்திய அரசை நாடுகிறார். 12-8-1980இல் மத்திய அரசு அரசின் ஆணையை ரத்து செய்துவிட்டு முனுசாமி செட்டிக்கு அந்தக் குத்தகையைத்தரவேண்டும் என்று மத்திய அரசு மாநில மாநில அரசுக்குத் தாக்கீது அனுப்புகிறது.

12-2-1982 அன்று மத்திய அரசு மாநில அரசின் ஆணையை ரத்து செய்து, முனுசாமி செட்டிக்குக் கொடுக்க வேண்டும் என்று தாக்கீது அனுப்புகிறது. அதை மாநில அரசு கிடப்பிலே போடுகிறது. முனுசாமி செட்டி சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார். சுப்ரீம் கோர்ட் அவரைப் பார்த்து, நீங்கள் இங்கு வரத்தேவை இல்லை, ஹைகோர்ட்டுக்குப் போங்கள் என்று ஹைகோர்ட்டுக்குத் திருப்பி அனுப்புகிறார்கள். ஹைகோர்ட்டு 26-11-1982இல் ஒரு தீர்ப்பு வழங்குகிறது. முனுசாமி செட்டிக்குக் குத்தகை காலத்தை நீட்டித்து, இரண்டு மாத காலத்திற்குள் மாநில அரசு ஆணை பிறப்பிக்க வேண்டு மென்று 26-11-1981இல் ஹைகோர்ட் தீர்ப்பளிக்கிறது. இரண்டு மாத காலத்திற்குள் குத்தகையை நீட்டித்து உத்தரவிடுங்கள் என்று மாநில அரசுக்கு ஹைகோர்ட்டு தீர்ப்பளித்துள்ளது. ஆனால் இரண்டுமாத காலமாகியும், மாநில அரசு ஆணையைப் பிறப்பிக்கவில்லை. அப்படிப் பிறப்பிக்காத காரணத்தினால், முனுசாமி செட்டி! கன்ட்டெம்ட் ஆப் கோர்ட்' மனுவைத் தாக்கல் செய்கிறார், ஹைகோர்ட்டில் அரசு அந்த மனுவை, அவர் தாக்கல் செய்தபிறகு, வாதாடும்போது நாங்கள் ஏற்கெனவே உத்தரவு போட்டுவிட்டோம் என்று அரசின் சார்பாக வாதாடப்படுகிறது. ஆனால் என்ன உத்தரவு

போடப்பட்டது? எப்போது போடப்பட்டது? ஹைகோர்ட் சொன்ன அந்த இரண்டு மாதங்களுக்குள் போடவில்லை. 25-2-82 அதாவது கோர்ட் சொன்னதற்கு மாறாக, இரண்டு மாதங்களுக்கு மாறாக, மூன்றாவது மாதத்தில், அதுவும் ஒரு வருஷத்திற்கு மாத்திரம் நீட்டிப்புக் கொடுத்துப் போடப் படுகிறது. உடனடியாக அந்த முனுசாமி செட்டி, கன்டெம்ட் ஆப் கோர்ட் பெட்டிஷனைப் போட்டவுடன், அதைப்பற்றி விசாரித்த நீதிபதி அவர்கள், என்ன தீர்ப்பை வழங்கியிருக் கிறார்? நீதிபதி இராமானுஜம், தன்னுடைய தீர்ப்பில் விளக்க மாகச் சொல்லுகிறார்:

The petitioner who is a citizen of this country has been driven from pillar to post by the tenacious attitude taken by the respondent.

ரெஸ்பான்டென்ட் என்றால் யார்? இந்த அரசு: ஸ்டேட் கவர்ன்மென்ட்தான். தொழில்துறைச் செயலாளர் அல்ல. அந்த அரசின் சார்பில் அங்கே கோர்ட்டுக்குச் செல்கிறார். ரெஸ்பான்டென்ட் என்று நீதிபதி சொன்ன இந்தத் தீர்ப்பு, ஸ்டேட் கவர்ன்மென்ட்தான் என்பதைக் குறிப்பிடுகிறது. என்ன சொல்லுகிறார்- The petitioner who is a citizen of this country has driven from pillar to post by the tenacious attitude taken by the respondent.

மூலைக்கு மூலை அலைக்கழிக்கப்பட்டார். எப்படிப்பட்ட முரட்டுத்தனமான பிடிவாதத்தினால், இந்த அரசாங்கத்தி னுடைய முரட்டுத்தனமான பிடிவாதத்தால், அந்த பெட்டிஷனர் முனுசாமி செட்டி, மூலைக்கு மூலை அலைக்கழிக்கப்பட்டிருக் கிறார். Has not only disobeyed the statute.

சட்டத்தை இந்த அரசு மீறியது மாத்திரமல்ல.

But also disobeyed the directions of the central Government & Revisional authority prescribed by the same statute.

சட்டத்தை மீறியது மாத்திரமல்ல, மத்திய சர்க்காருடைய தாக்கீதுகளையும் ரிவிஷனல் அதாரிட்டி பிரஸ்கிரைப் பண்ணிய அந்தச் சட்ட விதிமுறைகளைக்கூட இந்த அரசு புறக்கணித்து விட்டது. In addition, the respondent, the state Government has disobeyed the orders of the court.

கோர்ட்டினுடைய உத்தரவையும் இந்த அரசு மீறியிருக்கிறது. இன்னும் சொல்கிறார் நீதிபதி, The attitude of respondent seemed to be that whatever happened, the petitioner should not be granted the lease sought by him.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அரசாங்கத்தினுடைய போக்கு எப்படி இருந்தது என்றால், என்ன நடந்தாலும், சர்க்கார் அவருக்கு அந்த உரிமையைத் தருவதில்லை என்ற அளவிலேயே இந்த அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. The attitude of the respondent is thus dictatorial rather than democratic இந்த அரசாங்கத்தினுடைய தன்மை ஜனநாயகத்திற்கு மாறான சர்வாதிகாரத்தனம் கொண்டதாக அமைந்திருக்கிறது. The conduct of the respondent has thrown to the winds, and rule of law.

சட்டத்தினுடைய ஆட்சி இந்த அரசாங்கத்தால் காற்றிலே பறக்கவிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நீதிபதி சொல்கிறார். அந்தப் போக்கு எப்படிப்பட்டது என்றால் நீதிபதி சொல்கிறார். It could only be characterised as destruction of one of the but principles in the administration of justice. அது மாத்திர மல்ல.

Therefore, the court is inclined to take a very serious view of the action of the respondent

நீதிபதி ஒருமுறை தீர்ப்பு அளித்த பிறகும், அரசு நடந்து கொண்டது பற்றி, நீதிபதியே கண்டித்துக் கூறுகிற நேரத்திலே,

The conduct of the respondent is clearly wilful and not mere casual, accidental or unintentional but contempt by a Government people who looked upon the courts with awe and reverence.

அதாவது ஒரு அரசாங்கமே ஒரு கோர்ட்டினுடைய உத்தரவை எந்த அளவுக்குப் புறக்கணித்து அலட்சியப் படுத்தியது.

Contempt of Court.

வருகிற அளவுக்கு நடந்துகொள்வார்களானால் நாட்டிலே இருக்கின்ற சாதாரண மனிதன் நீதிமன்றத்தைப் பார்த்து

அச்சுறவும், அதே நேரத்தில் புனிதமான இடம் என்ற தன்மையி லிருந்து, எந்த அளவுக்கு விலகிப்போய்விடுவான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

The conduct of the respondent has clearly undermind the dignity and the authority of the court and the order passed by the Respondent granting renewal of the lease for a period of one year lowers down the Court in the estimation of the general public .The order shows the scant respect for the Court of Justice.

20 ஆண்டுக்கால குத்தகை ஒப்பந்தத்திற்குப் பதிலாக 2 மாத காலத்திற்கும் உத்தரவு போடாமல், கோர்ட்டை மீறி 3 மாத காலம் கழித்து உத்தரவு போட்டு, அதுவும் ஒரு வருடத்திற்கு என்று போட்டிருப்பது எதைக் காட்டுகிறது என்றார்.

The order shows scant respect for the Court of Justice.

இந்தக் கோர்ட்டிற்கு கடுகினும் குறைந்த அற்பத்தனமான மரியாதையை வைத்திருப்பதைத்தான் காட்டுகிறது என்று குறிப்பிடுகிறார்.

If such conduct is overlooked it will result in the entire public losing confidence in the court and its utility.

அரசின் இந்த அலட்சியப்போக்கைப் பார்த்தால் நாட்டிலே பொதுவான மக்கள் அத்தனை பேரும் நீதிமன்றத் திலே உள்ள நம்பிக்கையை இழந்துவிடுவார்கள்.

when the contempt is of such a grave character it but proper that cap in the interests of justice the contemner should be punished in spite of a formal apology without proper compliance.

எனவே இந்த அரசாங்கத்தை மன்னிப்புக் கோரக்கூட விட்டுவிடக் கூடாது, தண்டித்தே தீர வேண்டும் என்று சொல்லி விட்டு.

In this view of the matter the Respondent held guilty of contempt of disobedience of the order of court dated 26th November 1981 and a consequential fine of Rs.2000 is imposed on the Respondent. The contempt petition is allowed accordingly with a cost of Rs.200

இரண்டாயிரம் ரூபாய் அபராதம் இந்த அரசாங்கத்தின் மீது போடப்பட்டிருக்கிறது. ஒரு செயலாளர் மீதல்ல, செயலாளரை நீதிமன்றத்திலே நிறுத்திய ரெஸ்பான்டன்ட்-ஸ்டேட் கவர்ன்மென்ட் - அரசாங்கத்தின் மீது 2 ஆயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டிய நிலைக்கு, அரசு ஆளாக்கப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் அபராதம் விதிக்கிற நேரத்தில், இந்த அரசைப்பற்றி நீதிபதி கூறியிருக்கின்ற வாசகங்கள் எவ்வளவு வேதனையானவை; எந்த அளவுக்கு இந்த அரசு கண்டிக்கத்தக்க அரசு என்பதையெல்லாம், நாம் மறுத்துவிடுவதற்கு இல்லை. எனவேதான் நான் சொல்கிறேன்; ஏன் இவ்வளவு தடங்கல்கள்? இந்தத் தடங்கல்களுக்கு எல்லாம் இரண்டு அமைச்சர்கள் காரணம். நான் சொல்கிறேன். ஒரு அமைச்சர் என்ன கேட்டார், என்ன தரவில்லை. என்ன தராத காரணத்தினால் கோர்ட்டினுடைய ஆர்டர்களையெல்லாம்கூட மீறி ஒரு அமைச்சர், லோக்கல் அமைச்சர் பாடுபட்டார் என்பதும் அதற்கு உதவியாக தொழிலமைச்சர் இருந்தார் என்பதும் என்னுடைய குற்றச்சாட்டு. எனவே, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அடிப்படையாக வைத்து இரண்டு அமைச்சர்களும் ராஜினாமா செய்வதுதான் முறை என்று கூறி விடைபெறுகின்றேன் வணக்கம்.

வீட்டுவசதித் துறை மானியம்

உரை : 45 **நாள்: 18.04.1986**

கலைஞர் மு. கருணாநிதி: அன்பார்ந்த தலைவர் அவர்களே! வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக்குறிப்பு மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த மாமன்றத்தில் எடுத்துவைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நிதி நிலை அறிக்கையின் மீது விவாதம் நடந்தபோது நான் அதிலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்த நேரத்தில், சில புள்ளி விவரங்கள்! நிதியமைச்சர் படித்த நிதிநிலை அறிக்கைக்கும், பட்ஜெட் மெமோரண்டம் என்று சொல்லப்படுகிற நிதிநிலைக் குறிப்புக்கும் முரண்பாடாக அமைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினேன். அவற்றில் பலவற்றை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

1987 ஜனவரி முதல் மதுவிலக்கு அமல்படுத்தப்படுகிற காரணத்தால் 60 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்கிற மாண்புமிகு நிதிஅமைச்சரின் அறிக்கைக்கு மாறாக (பட்ஜெட் மெமோரண்டம்) நிதி நிலை அறிக்கையில் 30 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று இருக்கின்ற வேறுபாட்டை மீண்டும் சுட்டிக்காட்டியபோது, அந்தக் குறைபாடு எப்படி ஏற்பட்ட தென்பதைப் பிறகு தெரிவிக்கிறேன் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதைப்போலவே, இந்த அவையிலே இன்று வைக்கப் பட்டிருக்கின்ற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலும் தொடக்கத்திலேயே ஒரு குழப்பம் சுட்டிக்காட்டப்பட வேண்டிய சூழ்நிலையிலே இருக்கிறது. இதன் மூன்றாம் பக்கத்தில் ‘‘1986-87ஆம் நிதியாண்டில் மொத்தம் 16,400 வீடுகள் மனைகள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்காகும்

மொத்தச் செலவு ரூ.3742.50 இலட்சம். அரசின் நிதி உதவி ரூ.1,567.50 இலட்சமாகும்.'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் கீழ் இதே பக்கத்தில், ''பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (தன்னிறைவு வீட்டு மனைகள் திட்டத்தின் கீழ்) 7,200 குடியிருப்புகளுக்கு 700 இலட்சம் ரூபாய், அதாவது 7 கோடி ரூபாய் - என்றும், குடிசைப்பகுதி மாற்றுத்திட்டத்திற்கு 96 குடியிருப்புகளுக்கு 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்றும், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு 1,300 வீடுகளுக்கு 300 இலட்சம் ரூபாய், அதாவது 3 கோடி ரூபாய், என்றும், நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு 5,016 குடியிருப்பு களுக்கு 1,875.00 இலட்சம் அதாவது 18 கோடியே 75 இலட்சம் ரூபாய் என்றும், அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டத்திற்கு 2,788 குடியிருப்புகளுக்கு 8 கோடி ரூபாய் என்றும் ஆக மொத்தம் 16,400 குடியிருப்புகளுக்கு 1986-87 ஆம் ஆண்டு ஒதுக்கீடு 37 கோடியே 42 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கு அரசு நிதி உதவி 15 கோடியே 67 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு மூன்றாம் பக்கத்தில் இருக்கிறது. ஆனால் ஐந்தாம் பக்கத்தில் முதல் பாராவிலேயே, ''1986-87 ஆம் ஆண்டில் 5,016 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற் காகும் செலவு ரூ.3742.50 இலட்சம் என்று குறிப்பிடப்பட் டிருக்கிறது. இந்த 5,016 வீடுகள் எந்தப் பிரிவு வீடுகள் என்று பார்த்தால், நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படுகின்ற வீடுகளாகும். இதற்கு மூன்றாம் பக்கத்திலே தரப்பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்திலே இதன்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு 18 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், ஐந்தாம் பக்கத்தில் 37 கோடியே 42 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக நூறு ரூபாய், இருநூறு ரூபாய் வித்தியாசமில்லை. கோடிக்கணக்கான ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. 18 கோடி ரூபாய் வித்தியாசப்படக்கூடியதை அமைச்சர் அவர்களும், கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு, எப்படி அவர் அதை, அவைமுன் வைத்தார் என்பது மிகவும் வியப்புக்குரிய செய்தியாக இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு

அமைச்சர் அவர்கள், அதிகாரிகளிடம் விளக்கம் பெற்று, இங்கே கூறுவார் என்று நான் நம்புகிறேன். கோடிக்கணக்கான ரூபாய் வித்தியாசம் வரக்கூடிய அளவுக்கு, முரண்பாடுகள் வருவது நல்லதல்ல. மூன்றாம் பக்கத்தில் ஒரு குறிப்பு, ஐந்தாம் பக்கத்தில் ஒரு குறிப்பு என்று செய்தி வருவதும் நல்லதல்ல. இது உறுப்பினர்களைக் குழப்பக்கூடிய ஒன்றாகும் என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முக்கியமான குடிசைமாற்றுவாரியத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப் பிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். நல்லவேளையாக 1971ஆம் ஆண்டிலே துவங்கப்பட்ட குடிசைப்பகுதி மாற்று வாரியம் என்பதை மறவாமல் குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெயர் 'நல்லசாமி' என்கிற காரணத்தால், நல்ல முறையிலே நடந்துகொண்டிருக்கிறார். 1971ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு குறிப்பிட்டுவிட்டு அதன் பின்னால், ''1984-85 ஆம் ஆண்டுவரை சென்னை மாநகரிலும், ஈரோட்டிலும் ரூ. 4,196 இலட்சம் செலவில் 45,980 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன'' என்கிற குறிப்பை மாண்புமிகு அமைச்சர் தந்திருக்கின்றார்.

1984-85 வரை 45,980 குடியிருப்புகள் என்கின்ற கணக்கை 1971 ஆம் ஆண்டில் தொடங்கி அதுவரை இருக் கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. 1974-75, 1975க்குப் பிறகு, சில மாதங்கள், ஆக மொத்தம் 4 அல்லது 5 ஆண்டு களில் இந்தக் குடிசைப் பகுதிகளில் குடிசைமாற்று வாரியத்தின் சார்பாகவும், கோவை, சேலம் போன்ற இடங்களிலுள்ள வீட்டு வசதி வாரியங்களின் சார்பாகவும் குடிசைமாற்றுவாரிய வீடுகள் கட்டப்பட்ட வகையில், ஏறத்தாழ 20 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆக, இது 5 ஆண்டுகளுக்கு என்று எடுத்துக்கொண்டால் கூட, இந்த 5 ஆண்டுகளில் 20 ஆயிரம் வீடுகள் என்றால் ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் வீடுகள், குடியிருப்புகள் குடிசைமாற்றுவாரியத்தாலே அவர்களுக்குக் கட்டித்தரப்பட்டிருக்கின்றன. ஆக, ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் வீடுகள் கழக ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த ஆட்சி, கலைக்கப்பட்ட பிறகு 1976 முதற்கொண்டு என்று

எடுத்துக்கொண்டாலும் அல்லது 1977ஆம் ஆண்டு இந்த அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அந்தக் காலக்கட்டத்தை எடுத்துக்கொண்டாலும், சற்றொப்ப 9 ஆண்டுக் காலம் ஆகிறது. இந்த 9 ஆண்டுகளில் ஏற்கெனவே கட்டப்பட்ட ஆண்டு ஒன்றுக்கு 4 ஆயிரம் வீடுகள் என்கின்ற அந்த விகிதப்படியாவது பார்த்தால், 36 ஆயிரம் வீடுகள் கட்டப் பட்டிருக்கவேண்டும். ஆனால், அமைச்சர் தந்துள்ள புள்ளி விவரப்படி 26 ஆயிரம் வீடுகள்தான் கட்டப்பட்டிருக்கின்றன. கழக ஆட்சியில் அப்போது அரசுக்கு இருந்த வருமானம், அப்போதிருந்த நிதிநிலை அறிக்கைப்படி 500 கோடி ரூபாய் என்பதும், அதற்குப் பிறகு அது ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி என்று வளர்ந்து, மூவாயிரம் கோடியாக, இப்போது ஆகியிருப்பதையும், கருத்தில்கொண்டு பார்க்கும் நேரத்தில், இந்த வளர்ச்சி, குடிசைமாற்றுவாரியப் பகுதியைப் பொறுத்த வரையில், அந்த மக்களுக்குக் கட்டித்தரப்படுகின்ற குடியிருப்பு மனைகளைப் பொறுத்தவரையில், உயரவில்லை என்பதை நான் குறையாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், இந்த அரசின் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்று இப்படி 9 ஆண்டுக் காலத்தில் 26 ஆயிரம் வீடுகள்தான் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகள் கட்ட முடியும் என்கிறபோது 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகளை எப்படிக் கட்ட இருக்கிறார்கள் என்பதை எண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை. இந்தச் சந்தேகத்தை இதே மன்றத்திலே நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற நேரத்திலே நான் குறிப்பிட்ட போது, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்கின்ற திருக்குறளை எடுத்துக்காட்டி, ''இந்தத் திட்டம் உடனடியாக நிறைவேற்ற முடியாத ஒன்று; இதை அறிவிக்காமலேயேகூட இருந்திருக்கலாம்; அறிவித்துவிட்டோம்; ஆனாலும், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்'' என்றுதான் நாவலர் அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். அதே நாளில் அந்த அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் இந்த வீடுகள் கட்டித்தரப்படும்; இந்த இலக்கு நிறைவேற்றப்படும் என்று உறுதிமொழி அளித்தது பத்திரிகைகளிலே வெளிவந்தது. அதற்குப் பிறகு முதலமைச்சர்

அவர்கள் இந்தப் புத்தாண்டுச் செய்தியை வெளியிட்ட போதுகூட, மிகத் தெளிவாக முதலமைச்சரின் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையில் தாழ்த்தப்பட்ட மற்றும் நலிந்த பிரிவினர்களுக்கு 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள், இதுபோல நீண்டகால மறுமலர்ச்சித் திட்டங்களை அரசு அறிவித்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டுவிட்டு, இருப்பினும் தமிழக மக்களின் நலனுக்காக இந்த அரசு தீட்டும் திட்டங்களை மலிவுபடுத்தி, அதன் வாயிலாக அதன் வளர்ச்சியைத் தடை செய்வோர், தங்களுடைய பாதையிலிருந்து மாறவில்லை என்பதை உணர்கிறேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். பாதையிலிருந்து மாறவில்லை என்று யாரைக் குறிப்பிட்டார் என்பது பிரச்சினையல்ல என்றாலும்கூட, இதே அளவிலே 3 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகக் கூடிய ஒரு மாபெரும் திட்டத்திற்கு 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களே, அது போதுமா என்று நான் கேட்ட நேரத்தில், நாவலர் அவர்கள் ‘‘அது போதாதுதான்; என்னுடைய நிலையை உணருகிறேன்; பாம்பின் கால் பாம்பு அறியும் என்பதைப்போல, அவர் உண்மையை உணர்ந்து பேசுகிறார். எனவே, இந்த 3 ஆண்டுக்காலத்தில் 30 லட்சம் வீடுகளைக் கட்ட முடியாது’’ என்று நாவலர் அவர்கள் இதே அவையிலே குறிப்பிட்டார். ஆனால், கவர்னர் அவர்களுடைய அறிவிப்பில் 3 ஆண்டுக் காலத்தில் 10 லட்சம் வீடுகள் என்றுதான் தெரிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த உள்ளாட்சிமன்றத் தேர்தலையொட்டி வெளியிடப்பட்ட விளம்பரங்களில் 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் என்று அறிவிக்கப்பட்டது. இப்போது நிதிநிலை அறிக்கையில் இதற்கு ஏற்ப பல்வேறு நிறுவனங்களிலிருந்து கடன்வசதி, பணவசதி இவைகளை யெல்லாம் பெற்று, இந்த வீடுகள் கட்டித்தர முயற்சி மேற்கொள்ளப்படுமென்று சொல்லி, இந்த விவகாரத்தை மெல்ல மெல்லக் கரைத்து, இதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமென்று நாவலர் அவர்கள் அன்று அறிவித் தார்கள். ஆனால், இப்போது அவர்கள் அறிவித்த அந்தப் பாதையிலிருந்து விலகி நமது முதலமைச்சர் அவர்கள் தமது புத்தாண்டுச் செய்தியில் ‘‘30 லட்சம் வீடுகள் 3 ஆண்டுகளில் கட்டித் தரப்படும்’’ என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது

என்பதை உறுதி செய்திருக்கிறார்கள். நான் முன்பே அதைப் பேசிவிட்ட காரணத்தால், தொடர்ந்து பேச விரும்ப வில்லை. நான் குறிப்பிட விரும்புவதெல்லாம் 9 ஆண்டுக் காலத்தில் கழக ஆட்சியில் கட்டித் தரப்பட்டதைப்போல், ஆண்டு ஒன்றுக்கு 4000 வீடுகள் என்று கட்டித் தந்திருந்தாலும், 36,000 வீடுகளை குடிசைமாற்றுவாரியத்தின் சார்பாகக் கட்டிக் கொடுத்திருக்க முடியும் என்று இருக்கும்போது, அந்த இலக்கைக் கூட எட்டாமல், 26,000 வீடுகள் மட்டுமே கட்டப் பட்டிருக்கின்றன. எப்படி 30 லட்சம் வீடுகளை 3 ஆண்டுகளில் கட்டித் தரப்போகிறது என்ற விளக்கத்தைத்தான், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலமாக மீண்டும் பெற விரும்புகிறேன்.

குடிசைமாற்றுவாரிய வீடுகளுக்கு வாடகைப்பற்றி நமது அமைச்சர் அவர்களின் கொள்கைக் குறிப்பில் ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள். அதாவது இந்தக் குடியிருப்புகளுக்கு ரூ.20 வாடகை வசூலிக்கப்படும் என்று அந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. 10ஆம் பக்கத்தில் ''இத்திட்டத்தின் கீழ் குடிசைப்பகுதிகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு அவைகளில் குடியிருக்கும் குடிசைவாசிகளுக்கென்று குடி யிருப்புகள் கட்டப்படுகின்றன. இக்குடியிருப்புகள் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தற்போதுள்ள மிகக் குறைந்த வாடகை ரூ.20 ஆகும்'' என்று அமைச்சர் அவர்களாலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, கழக ஆட்சியில் இந்த வீடுகள் கட்டப்பட்டபோது, ரூ.10 என்றிருந்த வாடகைதான் இப்போது ரூ.20 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது.

பொதுத் தேர்தலின்போது, நான் சென்னையில் பேசிய கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டபோது. ''கழகத்திடம் நீங்கள் ஆட்சி அமைக்கும் பொறுப்பை ஒப்படைப்பீர்களானால், சென்னை குடிசைமாற்றுவாரியக் குடியிருப்புகளில் வாழ்கிற மக்கள், அதே வீட்டில்தாம் வாழ்வோம் என்று உறுதி அளிப்பார்களானால், அவர்களுக்கு வாடகை இல்லாமலேயே அந்த வீடுகள் தரப்படும்'' என்ற அறிவிப்பைத் தந்தேன். அடுத்த நாளே 'தினத்தந்தி' பத்திரிகையின் மூலமாக குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக ஒரு மிகப்பெரிய விளம்பரம்

வெளியிடப்பட்டது. அந்த விளம்பரத்தில் ''குடிசைமாற்று வாரியக் குடியிருப்புவாசிகளே, கருணாநிதி ஆசை காட்டு கிறார், அதிலேகூட கருணாநிதி என்பதற்கு ''ணா'' போடாமல் ''கருநாநிதி'' என்று தன்னகர ''நா'' போட்டு, அதன் உள்ளர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியாது, என்று சொல்லி விளம்பரம் வந்தது. அந்த விளம்பரம் தனிப்பட்டவரால் வெளியிடப் பட்டிருந்தால், நான் அதைப்பற்றிக் கவலைப்பட மாட்டேன். குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் சார்பில் அந்த விளம்பரம் வெளியிடப்பட்டது. குடிசை மாற்று வாரியம் என்பது அரசாங்கத்தோடு தொடர்புகொண்ட வாரியம் என்பதால்தான், நான் அதை இங்கே குறிப்பிடுகிறேன். அந்த விளம்பரத்தில் சொல்லப்பட்டது இதுதான். ''குடிசைவாசிகளே, கருநாநிதியின் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள். இப்போதே புரட்சித் தலைவர் அரசு, வாடகை வாங்குவதில்லை. ஆனால் கலைஞர் கருணாநிதி 'இருக்கிற வீடுகளில் குடிசைவாசிகள் அவர்களே குடியிருக்கச் சம்மதித்தால் வாடகை இல்லாமல் சொந்த மாக்குவேன்' என்று சொல்வதை, குடிசைவாசிகளே, நம்பி ஏமாறாதீர்கள்'' என்று குடிசை மாற்று வாரியத்தின் தலைவர் அன்றைக்கு ஒரு பெரிய விளம்பரத்தைக் கொடுத்தார். அது எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. அந்த விளம்பரத்தைத் தினத்தந்தியும் வெளியிட்டது. 'கருநாநிதி ' என்று போட்டிருக்கிறதே என்றுகூட அந்தப் பத்திரிகை யோசிக்கவில்லை. அதை அப்படியே பத்திரிகையில் போடாவிட்டால் என்ன தண்டனையோ என்ற பயத்தின் காரணமாக அவர்களும் அந்த விளம்பரத்தை அப்படியே வெளியிட்டார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தேர்தல் நேரத்திலே அப்படி ஒரு அறிவிப்பு. அதாவது ஏற்கெனவே, வாடகை வாங்குவதில்லை என்று அறிவித்துவிட்டு, இப்போது கொள்கை விளக்கக் குறிப்பில் 20 ரூபாய் வாடகை என்று குறிப்பிட்டிருப்பது ஏறுமாறாக, முரண்பாடாக இருக்கிறதா அல்லவா என்றுதான் கேட்கிறேனே தவிர வேறு அல்ல.

மீனவர்கள் மெரினா கடற்கரையிலிருந்து வேறு இடத் திற்குச் செல்ல வேண்டும் என்கிற ஒரு நிலை எடுக்கப்பட்டு, அதன் காரணமாகச் சில அமளி துமளிகள் எல்லாம் ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாகத்தான் அவர்கள் குடிசைப் பகுதி மாற்று

வாரிய வீடுகளில், அதாவது அவர்கள் குடியிருக்கும் நொச்சிக் குப்பம், நடுக்குப்பம் போன்ற இப்படிப்பட்ட குப்பங்களில் உள்ள மீனவர்களின் வீடுகளில், குடிசைமாற்றுவாரிய அதிகாரிகள் வாடகை வாங்கச் சென்ற காரணத்தால், குழப்பம் ஏற்பட்டது என்பதையும், அது உச்சநீதிமன்றம் வரை சென்றதையும் யாரும் மறந்து விடுவதற்கில்லை. ஆகவே, தேர்தல் நேரத்தில் எதையாவது சொல்வது என்பது சரியல்ல என்பதையும் இப்படிப்பட்ட தவறான தகவல்களை வீட்டு வசதி வாரியமானாலும் சரி, குடிசை மாற்று வாரியமானாலும் சரி, தரக்கூடாது என்பதற்காகத்தான் இதையெல்லாம் சுட்டிக் காட்டுகிறேனே தவிர வேறு அல்ல.

மற்றொன்று, நேரத்தின் அருமை கருதி நீண்ட நேரம் பேசுவதாக இல்லை. இருந்தாலும் நம்முடைய அமைச்சர் பெருமக்களிடமும் இந்த அவையிலேயும் நியாயத்தைக் கேட்க சில குறிப்புகளை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு.மாணிக்கம், அவர்களுடைய சொந்தவீட்டுப் பிரச்சினையில் இரண்டேமுக்கால் ஆண்டுக்காலம் தாமதமாயிற்று என்பதையும், வேறு ஒருவருக்குச் சுலபமாகக் கிடைத்தது என்பதையும் இங்கே சுட்டிக்காட்டினார். நான் பேசுவது சொந்த வீட்டுப் பிரச்சினை அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறக்கட்டளையின் சார்பில் சென்னையில் அண்ணா சாலையில் உருவாகி வருகின்ற அண்ணா அறிவாலயம் குறித்த பிரச்சினை. இந்த அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அறக்கட்டளையின் பெயரில் ஒரு அனாதை இல்லத்தைத் தொடங்குவது என்றும், நூலகம் ஒன்றைத் துவங்கி நடத்துவது என்றும், கண்ணொளி முகாம் ஒன்றை நடத்துவது என்றும், திருமண மண்டபம் ஒன்று கட்டுவது என்றும், அலுவலகம் கட்டுவது என்றும் திட்டமிட்டு முறைப்படி, சென்னை மாநகராட்சி மன்றத்திடமும், எம்.எம்.டி.ஏ.விடமும் தேவையான வரைபடங்கள் மற்றும் விவரங்கள் எல்லாம் இணைத்து மனுச்செய்து கட்டிடம் கட்ட அனுமதி, எல்லாவிதமான ஆய்விற்குப் பிறகு 11-8-1980இல் பெறப்பட்டது. அப்படி அனுமதி வழங்கப்பட்ட பிறகு, அந்தப் பணிகளைத் தொடங்கிட திராவிட முன்னேற்றக் கழக

அறக்கட்டளை டெண்டர் கோரி, அந்த டெண்டரின் பேரில் முடிவு எடுக்கப்பட்டது. அப்படி முடிவு எடுக்கப்பட்டாலும்கூட, அதற்கான செலவுக்காக இந்திய வங்கியில் கடன் வாங்க வேண்டுமென்று, அவர்களிடத்திலே அது குறித்துப் பேசி, 50 இலட்சம் ரூபாய் கடன் தருவதாக இந்தியன் வங்கி ஒப்புக்கொண்டு, தொடக்கத் தொகையாக இதுவரை 25 இலட்சம் ரூபாய் தந்து, அங்கே கட்டடம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே இந்தக் கட்டட வேலைகளை விரைவாக முடிக்க இயலாமல், நாங்கள் வங்கியோடு கடிதப் போக்குவரத்து நடத்தி, அவர்கள் பணம் சாங்ஷன் செய்வதற்குக் காலம் கடந்துவிட்டதாலும், மேலும் சிமெண்ட் பற்றாக்குறை, சென்னையிலே உள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு, மின்வெட்டு போன்ற காரணங்களால் கட்டடப் பணிகள் விரைவாக முடிவுராமல் சுணக்கம் ஏற்பட்டது. அப்போது கட்டடப் பணியில் மாடிக்கட்டிடங்கள் எழுப்புவதற்காகப் பக்கத்திலேயே அதற்குரிய பொருள்கள் கருவிகள் ஆகியவைகளையெல்லாம் வைக்க சாதாரண ஷெட் ஒன்றும் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு இந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது 28-10-1985 அன்று எம்.எம்.டி.ஏ. அலுவலகத்திலேயிருந்து சில அதிகாரிகள் அறிவாலயக் கட்டடத்தை வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு 30-10-1985 தேதியிட்ட கடிதத்தில் கட்டடங்கள் கட்ட முதலில் அனுமதி வழங்கும்போது குறிப்பிட்ட கால அளவு முடிந்து விட்டது என்றும் மேலும் கட்டடப் பணியைத் தொடர்வது குற்றம் என்றும், எனவே உடனடியாக அந்தப் பணிகளை நிறுத்த வேண்டும் என்றும், அப்படி நிறுத்தியது குறித்து, ஒரு வார காலத்திற்குள்ளே தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், அப்படித் தெரிவிக்கத் தவறினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எம்.எம்.டி.ஏ. மெம்பர் செக்ரட்டரி எங்களுக்கு எழுதியிருந்தார்.

அலுவலகக் கட்டடத்திற்குப் பக்கத்திலேயே சிறிய ஒரு ஷெட் கட்டும் பணியையும் உடனடியாக நிறுத்த வேண்டு மென்று, அதே தேதியிட்ட மற்றொரு கடிதம் எம்.எம்.டி.ஏ. விலிருந்து எங்களுக்கு வந்தது. 30ஆம் தேதி கடிதம் எங்களுக்கு 31ஆம் தேதி கிடைத்தது. 2-11-1985 அன்றே எங்களுடைய

அறக்கட்டளையின் சார்பில் மெம்பர் செக்ரட்டரி அவர்களுக்குப் பதில் எழுதினோம். அதில் -

"We are taking steps to apply for revalidation of the permits. We are also in receipt of your notice No. RT2/1394/85, dated 30th October 1985 in respect of construction of temporary storage shed in the rear. We are taking steps to include this also in our plan for necessary permits."

அதாவது, அனுமதியைப் புதுப்பிக்க நாங்கள் முயற்சி களை மேற்கொள்வதாகவும், ஷெட் கட்ட அனுமதி பெற முயற்சி எடுப்பதாகவும், எங்கள் பதில் கடிதத்தில் நாங்கள் குறிப்பிட்டோம். 5-11-1985 தேதியிட்டு உடனடியாக எம்.எம்.டி.ஏ. விலிருந்து அவசரப் பதில் கடிதம் கிடைத்தது. எங்களுக்கு எழுதிய அந்தக் கடிதத்தில் கட்டடப் பணிகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், அப்படி நிறுத்தியது குறித்து 12-11-1985க்குள் பதில் கிடைக்காவிட்டால் 'பீனல் ஆக்ஷன்' மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்திருந்தார்கள். அந்த ஐந்தாம் தேதி கடிதத்திற்கு ஏழாம் தேதியே பதில் எழுதினோம்.

"We confirm having stopped the construction. Our plan for renewal is being submitted separately."

நாங்கள் கட்டட வேலையை நிறுத்திவிட்டோம். அதற் குள்ளே நிறுத்திவிட்ட பணியைப் புதுப்பிப்பதற்காக விண்ணப் பத்தை உங்களுக்கு அனுப்பி முறைப்படி புதுப்பித்துக் கொள் கிறோம் என்ற பதிலை எழுதினோம். நாங்கள் பதில் எழுதிய நேரத்தில் சில விவரங்களைக் குறிப்பிட்டோம். அண்ணா அறிவாலயம் கட்டப்படுவதற்காக, 1980 ஆம் ஆண்டு முறைப்படி சென்னை மாநகராட்சி, எம்.எம்.டி.ஏ. ஆகியோரிட மிருந்து தேவையான அனுமதி, ஒப்புதல் எல்லாம் பெற்று வேலை தொடங்கப்பட்டிருக்கிறது என்றும், ஆனால் 1980 ஆம் ஆண்டு முதல் 1983 வரை இருந்த தண்ணீர் பஞ்சம், வறட்சி, சிமெண்ட் பற்றாக்குறை காரணமாகப் பணிகள் துரிதமாக நடைபெறவில்லை என்றும், அதன் காரணமாகக் குறிப்பிட்ட காலக்கெடுவான 10-8-1983-க்குள் கட்டடங்கள் முற்றுப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டுவிட்டு, அனுமதியையும் ஒப்புதலையும் புதுப்பித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு எம்.எம்.டி.ஏ.வின் உத்தரவின்படி கட்டட

வேலைகளை உடனடியாக நிறுத்தி விடுவதாகவும், அதன் காரணமாக ஏராளமான தொகை நஷ்டம் ஏற்படுகிறது என்றும், அந்தக் கடிதத்தில் விண்ணப்பித்துக் கொண்டோம். விண்ணப்பித்துக் கொண்ட தேதி 7-11-1985 இதற்கு எந்தப் பதிலும் இல்லாமல் போகவே, 3-12-1985இல் அறக்கட்டளை சார்பில் மீண்டும் எம்.எம்.டி.ஏ-வுக்கு நினைவுபடுத்தி ஒரு கடிதம் எழுதினோம். அந்தக் கடிதத்தில்

"We have submitted our application for re-validation of building permit along with the necessary Lawns and we have Inter alia requested for permission to proceed with the construction, as the suspension of work is resulting in great loss to us. We request you to expedite the re-validation of the permit and in the meantime to permit us to proceed with the work as there is no deviation from the original approved plan."

அதாவது, முதலிலே அனுமதித்த வரைபடிவத்திலே யிருந்து மாறுபாடாக நாங்கள் எதுவும் செய்யவில்லை என்றும், பணி தாமதம் ஆவதால் நஷ்டம் ஏற்படுகிறது என்றும், எனவே, விரைவுபடுத்தி அனுமதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம், இந்த இரண்டு கடிதங்களுக்கும் 19-12-1985இல் எம்.எம்.டி.ஏ. விலிருந்து பதில் கிடைத்தது.

"Building Permit application received with the reference cited for construction of Kalyana Mandapam and Anathai Illam has been examined and permission for the same is refused for the following reasons:

The proposal violates D.C.R. 19-B relationg to space to be left on both sides. 10 percent open space is not left for recreational use requirement."

அதாவது 1980ஆம் ஆண்டிலே கட்டடம் கட்டுவதற்கான வரைபடங்கள் மற்ற எல்லாவற்றையும் துருவித் துருவிப் பார்த்து அனுமதிக்கப் பெற்ற கட்டிடத்திற்கு, இப்போது திடீரென்று அனுமதி மறுக்கப்பட்டதற்குச் சொல்லப்பட்ட காரணங்கள் 'கட்டடத்தின் இருபக்கங்களிலும் 6 மீட்டர் இடைவெளி, அதற்குப் பதிலாக 3 மீட்டர் இடைவெளிதான் இருக்கிறது அடுத்து 10 சதவீதம் இடம் திறந்தவெளிக்கு ஒதுக்க வேண்டும்.

10 சதவிகிதம், அதாவது 80 கிரவுண்ட் என்றால் 8 கிரவுண்ட் இடத்தை திறந்தவெளித் தேவைக்காக ஒதுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள். மேலும் அந்தக் கடிதத்திலே பின்குறிப்பு என்று போட்டு, மனுதாரர் தேவைப்பட்டால், இந்த மறுப்பை எதிர்த்து அரசாங்கத்திற்கு இரண்டு மாதங்களுக்குள் மேல் முறையீடு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார்கள். உடனடியாக நாங்கள், அவர்கள் குறிப்பிட்ட தவறுகள் களையப்படுவதற்கும் 6 மீட்டர் அளவுக்கு இடம் ஒதுக்குவதாகவும், கண் சிகிச்சை முகாமுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தைத் திறந்தவெளித் தேவைக்காக ஒதுக்குவதாகவும் தெரிவித்து பதில் எழுதினோம். அதற்குப் பிறகாவது அனுமதி கிடைக்கும் என்று நினைத்தோம். 7-1-1986இல் எம்.எம்.டி.ஏ. கடிதம்தான் மீண்டும் கிடைத்தது. அந்தக் கடிதத்திலே என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால், கட்டிடப் பணியை மேற்பார்வையிட ஒரு ஆர்க்கிடெக்ட் நியமிக்கப்பெறவேண்டும் என்றும் 3 மாதங்களுக்கு ஒருமுறை பணிகள் முன்னேற்றம் குறித்துத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும், மரம் நடவேண்டும் என்றும், பணி முற்றுப் பெற்றவுடன் தெரிவிக்க வேண்டும் என்றும் சில நிபந்தனைகள், அந்த நிபந்தனைகளின் கடைசி நிபந்தனையாகத் திறந்தவெளித் தேவைக்காக ஒதுக்கப்படுகின்ற இடங்களைச் சென்னை மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு ரிஜிஸ்டர்ட் கிப்ட் டீட் மூலமாகப் பதிவு செய்து ஒப்படைப்பதோடு 10 நாட்களுக்குள் ரூ.50,200 கட்ட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்கள். இதற்குப்பிறகுதான் கட்டட அனுமதி வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. அந்தக் கடிதத்திற்கு 9-1-1986இல் எழுதிய கடிதத்தில் எம்.எம்.டி.ஏ. நிபந்தனைகளை எல்லாம் ஏற்றுக்கொள்வதாகவும், ரூபாய் 50,200 க்குக் காசோலை அனுப்ப உடன்படுவதாகவும், ஆர்கிட்டெக்ட் நியமித்து அவர்களுடைய ஒப்புதல் கடிதத்தையும் இணைத்திருப்ப தாகவும் தெரிவித்துவிட்டு, 1980 ஆம் ஆண்டு முறைப்படி இதற்கான அனுமதி பெற்றது குறித்துத் தெரிவித்துவிட்டு, எங்களுடைய அறக்கட்டளை விண்ணப்பத் தின் பேரில் அரசாங்கம் எங்களுக்கு அனுமதி வழங்கியிருக் கின்றது என்றும், அப்போது திறந்தவெளி இடத்தை விட வேண்டுமென்ற ஒரு பிரச்சினை எழவில்லை என்றும், இருந்தாலும் எம்.எம்.டி.ஏ.

கருத்துப்படி திறந்தவெளிக்கான இடம் பொதுமக்கள் உபயோகத்திற்காக அறிஞர் அண்ணா பூங்கா என்ற பெயரில் ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறது என்றும், இருந்தாலும் அறக்கட்டளையின் நல்ல நோக்கத்தைக் கருதி இந்தத் திறந்தவெளியை நிர்வகிக்கும் பொறுப்பை டிரஸ்டே, அறக்கட்டளையே எடுத்துக்கொள்ளும் என்ற அளவில் மாநகராட்சிக்கு தானம் செய்யவேண்டுமென்ற நிபந்தனையை வலியுறுத்தாமல் விரைவில் அனுமதி வழங்க வேண்டுமென்றும், அந்தக் கடிதத்தில் கேட்டுக்கொண்டோம். இந்தக் கட்டிடத்திற்கு எம்.எம்.டி.ஏ.விடம் முறையிடுவதைவிட அரசாங்கத்திடமே முறையிடலாம் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டபோது, அரசாங்கத்திற்கு நேரடியாக 10-1-1986 அன்று எல்லா விவரங்களையும் தெரிவித்து, அரசுக்கு உள்ள அதிகாரத்தின்கீழ் புதுப்பிப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை எல்லாம் மன்னித்து, கட்டடப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றிட உரிய ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அதன் நகல் முறைப்படி எம்.எம்.டி.ஏக்கும் 10-1-1986இல் அனுப்பப் பட்டது. இதற்குப் பிறகு நாங்கள் அரசாங்கத்திற்கும் கடிதம் அனுப்பினால் மாத்திரம் போதாது என்று, நம்முடைய நண்பர் திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களும், சென்னை மாவட்டச் செயலாளர் டி.ஆர். பாலு அவர்களும் வீட்டு வசதி வாரியத் திற்கும், எம்.எம்.டி.ஏக்கும் பொறுப்பேற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சரவர்களைப் பலமுறை நேரில் சந்தித்துக் கேட்ட போதெல்லாம், அவர்கள் விரைவில் அது குறித்து முடிவு செய்கிறேன், முடிவு செய்கிறேன் என்று பதில் அளித்தார்கள். ஆனால், எந்த முடிவும் வரவில்லை. இதுபற்றி எனக்கு ஒரு ஆதங்கம் ஏற்பட்டு, நம்முடைய நண்பர் திரு.மாணிக்கம் அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ''நீங்கள் அரசாங்கத்திற்கு எழுதி விட்டீர்கள், எம்.எம்.டி.ஏ.க்குத் தெரிவிக்க வேண்டியதெல்லாம் தெரிவித்து விட்டீர்கள். காலதாமதத்திற்கு மன்னிப்பும் கேட்டு விட்டீர்கள். அதற்காக அபராதத் தொகை 50,000 ரூபாய் கட்டுவதாகவும் சொல்லிவிட்டீர்கள். திறந்தவெளிப் பகுதி விட்டு, அண்ணா பூங்கா என்று பெயர் வைப்பதற்குச் சம்மதித்துவிட்டீர்கள், அதை மாநகராட்சிக்கு 'கிப்ட்' ஆகத்

தருவதில்தான் வேறுபாடு, எனவே, நீங்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினால், அவர்கள் நிச்சயமாகக் கவனித்து ஆவன செய்வார்கள் என்று கருதுகிறேன், ஆகவே, அந்த வாய்ப்பையும் ஏன் தவறவிட வேண்டும்'' என்ற யோசனையை நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொன்னவுடன் நான் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 5-3-1986இல் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், ''அன்புள்ள முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். சென்னை திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை அண்ணா அறிவாலயக் கட்டடம் எழுப்ப 11-8-1980இல் எம்.எம்.டி.ஏ வில் அன்றிருந்த சட்டவிதி முறைப்படி எல்லா நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. அதற்கேற்ப கட்டிட நிர்மானப்பணிகள் தொடங்கி, வேலைகள் தொடங்கியுள்ள நிலையில், மேலும் காலநீட்டிப்புக்கான அனுமதியைப் புதுப்பிக்க வேண்டுமென்று எம்.எம்.டி.ஏ. மூலம் தாக்கீது அனுப்பப்பட்டது. அதன்படி கட்டட வேலைகளை உடனடியாக நிறுத்திவிட்டு, அதனால் இழப்புக்கு ஆளானாலும், முறைப்படி புதுப்பித்து விண்ணப்பம் 7-11-1985இல் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பத்திற்கு எம்.எம்.டி.ஏ. இசைவு தெரிவிக்கும் நிலையில், அதற்குரிய நிபந்தனைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தும்கூட, புதிதாகக் கொண்டு வந்த விதிமுறைகளை எம்.எம்.டி.ஏ. சுட்டிக்காட்டி, 8 கிரவுண்ட் அளவுக்கு நிலத்தை மாநகராட்சிக்கு இனாமாக ஒதுக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதித்து, பதில் அனுப்பியுள்ளார்கள். இது குறித்து அரசுக்கு 10-1-1986இல் கடிதம் எழுதியுள்ளேன். இதுவரை எந்தப் பதிலும் இல்லை. புதிய விதி முறைகளைக் காட்டி, 8 கிரவுண்ட் இனாமாகக் கேட்டு, அண்ணா பெயரால் அறிவாலயம் உருவாக்கும் முயற்சிக்கு முறைகேடாக ஏற்படுத்தப்படும் தடைக்கு, முதலமைச்சரவர்களே, தாங்கள் தலையிட்டு, உடன் ஒப்புதல் வழங்கிட ஆவன செய்ய வேண்டுகிறேன்'' என்று என் கையெழுத்திட்டு முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். எனக்கு உடனடியாக அவர்களிடமிருந்து பதில் வந்தது. அதில் ''அன்பார்ந்த டாக்டர்

கருணாநிதி அவர்களுக்கு, தங்களுடைய 5-3-1986 நாளிட்ட கடிதம் கிடைக்கப்பெற்றேன். கடிதத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரிந்துகொண்டேன். கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வேண்டுகோளைக் கனிவோடு பரிசீலனை செய்து, ஆவன செய்கிறேன்'' என்று முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டு கடிதம் அனுப்பினார். இந்தக் கடிதத்திற்குப் பிறகு, எப்படியும் இன்னும் இரண்டொரு நாட்களில் அனுமதி கிடைத்துவிடுமென்று நான் நம்பியிருந்தேன். ஆனால், கிடைக்கவில்லை. எனவே, மீண்டும் 19-3-1986இல் மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், ''அன்புள்ள முதல்அமைச்சர் அவர்களுக்கு, வணக்கம், சென்னை அண்ணா சாலை திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் அண்ணா அறிவாலயம் சம்பந்தமாக...

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தலைவரவர்களே! மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முக்கியமான கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களிடத்தில் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். நீண்டநாட்கள் இந்தச் சட்டமன்ற அனுபவம் பெற்றவர் என்பதால் கேட்கிறேன். சட்டமன்றத்திலே சொந்த விவரங்களைப் பேசக்கூடாது என்பது நியதி. அவர்கள் ஒரு குறிப்புச் சொல்லலாம், ஆனால் தொடர்ந்து, அவருக்கும் அரசாங்கத்திற்கும் ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சி பற்றி கால் மணி நேரம், அரை மணிநேரம் பேசுவது மரபல்ல. இந்த நிகழ்ச்சி அவருக்கும், அரசுக்குமிடையே ஏற்பட்டிருக்கிற ஒரு காரியம் பற்றியதாகும். அதைத் தொடர்ந்து பேசுவது முறையா, அது அவையின் மரபுக்கு ஒப்புதல் உள்ளதா என்பது குறித்துத் தாங்கள் தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே! இது கட்சியி னுடைய அறக்கட்டளை. தனிப்பட்ட முறையில் கருணா நிதிக்குச் சொந்தமான அறக்கட்டளை அல்ல. இது கட்சியினுடைய அறக்கட்டளை. இதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய அறக்கட்டளைக்கும் பொருந்தும், இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், இன்னொரு அறக்கட்டளை

விஷயத்தில் எப்படித் தவறு நடந்திருக்கிறது என்று நான் சுட்டிக் காட்டப் போகிறேன், இந்த அரசு மீது குற்றம் சாட்ட, எங்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதியையும், இன்னொரு அறக்கட்டளைக்கு, வேறு ஒரு அறக்கட்டளைக்கு எவ்வாறு இந்த விதிகளை எல்லாம் மீறி காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்று ஒப்பிட்டுக்காட்டத்தான் இதைத் தொடங்குகிறேன். ஆகவே, அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் சற்றுப் பொறுமையாக இருந்தால் அதையும் புரிந்து கொள்ளலாம்.

நான் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், சென்னை அண்ணாசாலையில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் அண்ணா அறிவாலயக் கட்டடம் சம்பந்தமாக எம்.எம்.டி.ஏ. புதிய விதிகளைக் காட்டி கட்டடம் கட்டுவதை நிறுத்துமாறு தாக்கீது அனுப்பியுள்ளதால், அண்ணா அறிவாலயக் கட்டடம் கட்டுவது கடந்த 4 மாதங்களாகத் தாமதப்பட்டுப் பெரும் இழப்பு ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்டித் தாங்கள் தலையிட்டு உடனடியாக ஆவன செய்து கட்டடப் பணிகள் தொடர்ந்து நடைபெற உதவிடுமாறு கேட்டு 5ஆம் தேதி நான் முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். முதலமைச்சரும் பரிசீலித்து ஆவன செய்வதாக உடன் பதில் எழுதியிருந்தார்கள். ஆனாலும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பலமுறை முதலமைச்சரின் தனிச்செயலாளருடன் தொடர்பு கொண்டும், எந்தப்பதிலும் கிடைக்கவில்லை. எனவே, அதுகுறித்துத் தாங்கள் உடனடியாக கட்டடம் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற ஒப்புதல் வழங்குமாறு முதல்வருக்கு நான் மற்றொரு கடிதம் எழுதியிருந்தேன்.

அதற்கு முதல்வர் அவர்கள் அளித்த பதிலில்:

‘‘அன்பார்ந்த டாக்டர் கருணாநிதி அவர்களுக்கு,

தங்களின் 19-3-1986ஆம் நாள் கடிதம் கிடைக்கப் பெற்றேன். சென்னை அண்ணா சாலையில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை சார்பில் கட்டப்படும் அண்ணா அறிவாலயக் கட்டடம் சம்பந்தாக எம்.எம்.டி.ஏ-யின் சில குறிப்புகளைத் தங்கள் பார்வைக்காக அனுப்பியுள்ளேன்.’’

என்று சொல்லி எம்.எம்.டி.ஏ.யின் கருத்துக்களை, அவர்கள் வைத்த ''நோட்டை'' எனக்கு அனுப்பினார்.அந்த ''நோட்'' குறிப்பில் எம்.எம்.டி.ஏ. என்ன சொல்கிறது என்றால் ''அனுமதி யில்லாமல் கட்டடம் கட்டுவது கண்டறியப்பட்டது அந்த அனுமதியில்லாத கட்டுமானப் பணிக்குத் தனியாக வேலை நிறுத்த அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்புக்களைத் தொடர்ந்து 8-11-1985 அன்று கட்டுமான திட்ட அனுமதி பெறப்பட்டது. இந்த அனுமதி கோரிய மனுக்களுக்கு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட காலத்தைவிட 2 வருடம் 3 மாத காலம் சென்று விட்டதாலும், மேலும் 27-10-1985 புதிய வளர்ச்சிக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட் டிருப்பதாலும், இந்த மனுக்களைப் புதிய விதிகளின்படி பரிசீலிக்க நேரிட்டது. அதன்படி 10 சதவிகித இடம் உள்ளூர் அமைப்பிடம் வெகுமதி பத்திரம் மூலம் ஒப்படைக்க வேண்டும். மனுதாரர் வரைபடத்தில் இந்த 10 சதவிகித இடத்தைக் காண்பிக்கிறார். ஆனால், மாநகராட்சிக்குத் தானமாகத் தர விரும்பவில்லை. இந்த முடிவினால் பாதிக்கப்பட்டு அரசாணை எண் 702, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 29-5-1985ஐ தொடர்ந்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் வழங்கப்பட்ட திட்ட அனுமதி, புதுப்பித்தலுக்கு ஆன காலதாமதத்தைப் பொறுத்துக் கொள்ளுமாறு கோரி அரசுக்குத் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளை மேல் முறையீடு செய்துள்ளது'' என்று அந்த நோட் சொல்லுகிறது. அந்தக் குறிப்பின் கீழே முதலமைச்சர் கையெழுத்துப் போட்டு அப்படியே அனுப்பியிருக்கிறார். நோட்டில் அவர் கையெழுத்துப் போட்டு விட்டதாலேயே அதை ஒப்புக்கொண்டதாக அர்த்தமா? அல்லது அந்தக் குறிப்பை நீயே பார்த்துக்கொள், நான் என்ன செய்வது, இதுதான் செய்ய முடியும் என்று அர்த்தமா, என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எனவே, மீண்டும் அவருக்குக் கடிதம் எழுதினேன்.

''அன்பார்ந்த முதலமைச்சர் அவர்களுக்கு,

19ஆம் தேதி நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளையின் அண்ணா அறிவாலயக் கட்டட இடத்தை மாநகராட்சிக்குத் தானமாகத் தர வேண்டுமென்று

நாங்கள் அனுமதி பெற்ற பிறகு பிறப்பிக்கப்பட்ட புதிய விதிகளை ஏற்றுக்கொள்ள இயலாது. தாங்கள் தலையிட்டுக் கட்டடத்தைக் கட்ட திட்ட அனுமதி புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என்று கேட்டிருந்தேன். அதோடு ''தங்கள் 21ஆம் தேதிக் கடிதத்தின் இணைப்புக் குறிப்புகள் என்னுடைய வேண்டுகோளை திரும்பச் சொல்லும் வகையில் அமைந்திருக்கிறது. என்னுடைய வேண்டு கோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெளிவாக இல்லை. கட்டடம் கட்ட அனுமதியைப் புதுப்பித்துத் தருமாறு ஆவன செய்யுமாறு'' எழுதியிருந்தேன். அதற்கு இதுவரை எந்தப் பதிலும் இல்லை.

பிறகு கழகத்தின் பொதுச்செயலாளரும் அறக்கட்டளை யின் டிரஸ்டிகளில் ஒருவருமான பேராசிரியர் அவர்கள் நிதி யமைச்சரைச் சந்தித்து, அவரிடத்திலும், இந்த விவரங்களை எடுத்துச்சொல்ல, அவர்களும் கவனிப்பதாகக் கூறியிருக் கிறார்கள். ஆனாலும், இதுவரையிலும் எந்த விதமான பதிலும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட இதுவரையில் வாங்கியிருக்கிற 25 லட்சம் ரூபாய் கடனுக்கு நாங்கள் 3 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் வட்டிகட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இன்னும் கட்டடம் கட்டாமல் இருக்கிற ஒவ்வொரு மாதமும் ரூபாய் 31,250 வீதம் வட்டி கட்ட வேண்டிய சூழ்நிலையில் பெரும் இழப்புக்கு ஆளாகி, அண்ணாவின் பேரால் **அண்ணா அறிவாலயம்** என்று உருவாக்கப்படுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அறக்கட்டளையின் காரியங்களை நடைபெற முடியாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன.

என்னுடைய கையில் இப்பொழுது இருப்பது.

"Madras Metropolitan Development Authority-Agenda Notes for the meeting on Tuesday the twenty nineth October 1985 in M.M.D.A Conference Hall 4 p.m."

அதில் நடைபெற்ற ஒரு விஷயம் மிக முக்கியமானது. அண்ணா அறிவாலயத்திற்கு மறுப்பு, பிறகு விதிமுறைகள் என்று சொல்லி மறுப்பு, திராவிட முன்னேற்றக் கழக அறக் கட்டளை என்ற காரணத்தால் இத்தனை கடிதங்கள் எழுதியும், இத்தனை முறையீடுகள் செய்தும், அமைச்சரை நேரில் சந்தித்தும், முதலமைச்சருக்கு நேரில் கடிதம் எழுதியும், பொதுச்

செயலாளர் நிதியமைச்சரைச் சந்தித்த பிறகும், இவ்வளவுக்குப் பிறகும் எம்.எம்.டி.ஏ.யினுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, கட்டடம் கட்டுவதை நிறுத்திவிட்டு, நாங்கள் முறையீடுகளை அனுப்பியிருக்கிறோம். அந்த எம்.எம்.டி.ஏ.வுடைய கூட்டம் 29 அக்டோபர் 1985இல் நடந்த போது இதைப்பற்றிப் பேசுகிறார்கள்.

"Sri Ramachandra Educational and Health Trust, Madras applied for reclassification...."

இது ஸ்ரீ ராமச்சந்திரா மெடிக்கல் டிரஸ்ட். அதுவும் டிரஸ்ட் தான். அந்த டிரஸ்ட் ரீ கிளாசிபிகேஷனுக்காக ஒரு விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். எதற்கு?

".... applied for reclassification from agricultural use zone to institutional use zone, in order to establish a Medical College and Hospital"

அக்ரிகல்ச்சுரல் பகுதியாக இருக்கிற இடங்களை யெல்லாம் ரீ-கிளாசிபிகேஷன் செய்து, இந்த மெடிக்கல் காலேஜ் கட்டுவதற்கு இடத்தைத் தரவேண்டுமென்பதற்கான ஒரு விண்ணப்பம்.

"The reclassification request was examined and the subject was placed before the Technical Committee."

அது விவாதிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, டெக்னிகல் கமிட்டியிடம் விடப்படுகிறது. அந்த டெக்னிகல் கமிட்டி என்ன செய்கிறது தெரியுமா?

"The Committee recommended that the area under reference may be reclassified into institutional use zone excluding...."

இதுதான் முக்கியம்.

"..... excluding the portion remarked for National Highway By-Pass."

நேஷனல் ஹைவேசின் பைபாஸ் ரோட்டை விட்டுவிட்டு அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு அதை ரீ-கிளாசிபிகேஷன் செய்வதற்கு அனுமதிக்கலாம் என்று சொல்லிவிட்டு, ஒரு சீஃப் இன்ஜீனியரின் அறிவிப்பையும் அது சுட்டிக்காட்டுகிறது.

"The Chief Engineer, National Highways has brought to the notice of the Secretary to Government, Transport Department the fact that some buildings are being put up by Sri. Ramachandra Educational and Health Centre, Porur in Survey No. 109, Thandalam village, through which the Madras By-pass road passes. The building under construction has occupied an area of 14 m × 12 m in the land proposed for Madras By-pass road. He has further stated that despite the fact that the representative of the said Trust has been informed of the relevant facts, the buliding has come up to the basement level. In turn, the Secretary to Government, Transport Department, who is a Member of the Authority, has semi-officially urged MMDA that necessary action may please be taken for preventing any building or stucture on Madras By-pass road. Inspection of the area under reference has revealed that construction works like compound wall, sheds, earth-work for other buildings have been commenced. In this regard, the legal position is that prior planning permission under section 48 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 is necessary for the commencement of any commission application for putting up construction."

இந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு எந்தவிதமான பிளானிங் பர்மிஷன் கூட எதுவும் பெறாமல் கூட அவர்கள் அந்தக் கட்டட வேலையை ஆரம்பித்து, அதிலும் பைபாஸ் ரோட்டிலேயே கட்டுகிறார்கள்.

"The constuction under progress in the area under reference, to which the Chief Engineer, National Highways and Secretary, Transport Department have also drawn attention..."

"..... would thus be unauthorised in terms of the provisions of the Tamil Nadu Town and Country Planning Act, 1971, besides interfering with the alignment of the Madras By-pass road approved by the Government of Tamil Nadu and the government of India."

மத்திய அரசாலும் மாநில அரசாலும் ஒப்புக்கொள்ளப் பட்ட பை-பாஸ் ரோடு அது.

"In the light of facts stated in paragraph 4 and paragraph 5 above a stop-work notice under section 56 and 57 read with

section 85 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 has been served on the party calling upon him to stop the construction work forthwith, in MMDA's letter dated 15th October 1985. If the stop-work notice is not complied with, legal proceedings against the unauthorised construction would become unavoidable."

இவ்வளவுக்கும் பிறகு அவர்கள் நிறுத்துகிறார்களா அந்த வேலையை, தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படித் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பவர்களுக்குச் சலுகை. அதைப்பற்றிக் கேள்வி கேட்க முடியாத அளவுக்குத் தனி ராஜ்யமே அங்கே நடக்கிறது. அது மட்டுமல்ல,

"The applicant has not produced documentry evidence for certain Survey No. in Thandalam village, Survey No. 35 in Chetti Agaram village , Survey No. 210 in Vanagaram village, Survey No. 150 of Karambakkam village. But the applicant has informed that the Government have promised to accord sanction for entering upon the land."

அவர்களிடத்திலே எதையும் produce பண்ணவில்லை; எந்த documentsகளும் கொடுக்கப்படவில்லை. இந்த நேரத்தில் அவர்களைச் சொல்கிறார்கள். ''இந்தச் சர்க்கார் எங்களுக்கு promise பண்ணியிருக்கிறது; உறுதி அளித்திருக்கிறது. இந்த நிலத்தையெல்லாம் நீங்கள் ஆக்கிரமித்துக் கொள்ளலாம்'' என்று சொல்லித் தனி இராஜ்ஜியமே நடக்கிறது. அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. குளங்கள், ஏரிகள் ஆகியவற்றைச் சுற்றி வளைத்துப்போட்டு மருத்துவக் கல்லூரி கட்டுகிறார்கள். நான் அதிலே ஆராய்ச்சியில் ஈடுபடவில்லை. ஆனால் இரண்டு trust ஒன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் trust இதற்கு நீங்கள் வழங்குகிற நியாயத்திற்கும், அதே நேரத்திலே நியாயத்திற்குப் புறம்பாக, சட்டத்திற்குப் புறம்பாக, உங்களிடத்திலே எந்தவிதமான முன் அனுமதியும் பெறாமல், கட்டடங்கள் கட்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறதே அதற்கும், இந்த அரசு என்ன பதில் சொல்லப்போகிறதென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு தியேட்டர் திறப்பு விழாவிலே பேசியதைத்தான்

நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர் 15-12-1985 அன்று பேசியிருக்கிறார். ''இந்தத் தியேட்டருக்கு லைசன்ஸ் பெறுவதில் ஏற்பட்ட சங்கடங்களை எடுத்துச் சொன்னார்கள். புதிய திரைப்பட அரங்குகளுக்கு எம்.எம்.டி.ஏ. வில் உள்ள ஒன்றிரண்டு அதிகாரிகளிடம் இந்த லைசன்ஸ் பெறுவதென்பது எமனிடத்தில் சென்று திரும்புவது போலாகி விட்டது. இந்தத் தியேட்டரைக் கட்டியிருப்பவர்கள் இது போன்ற சங்கடத்திலிருந்து முழுமையாக மீளவில்லை'' என்று சொன்னார்கள். இந்தத் திரையரங்குக்கான மின்சாரத்தை மின் வாரியத்தில் இருந்து அவர்கள் பெற்று, இப்போது திரைப்படம் காட்டவில்லை. ஜெனரேட்டரை வைத்துப் படம் காட்டுவதுடன் குளுமை வசதியும் செய்து தருகிறார்கள். ''மக்களுக்கு உதவி செய்வதற்காகவே அதிகாரிகள் இருக்கிறார்கள். மக்களை வாட்டி வதைக்க, கசக்கிப் பிழிய இல்லை என்பதை அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்று மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் ஒரு தியேட்டர் திரைப்பட விழாவிலே கூறியிருக்கின்றார்கள். நான் கேட்பதெல்லாம் இதிலே அதிகாரிகள் தவறு செய்கிறார்களா? அதிகாரிகளிடத்திலே அவ்வாறு தவறுகள் செய்யச் சொல்லப்படுகின்றதா? அல்லது அமைச்சர்களை இந்த அரசு அவ்வாறு செய்யச் சொல்கிறதா என்பவைகளுக்கான விளக்கங்கள் எனக்குத் தேவை.

வீட்டு வசதி வாரியத்தில் இருக்கிற குழப்பங்கள் என்ன என்ன, ஊழல்கள் என்ன என்ன என்பது பற்றிப் பேசியிருக்கின்றேன், இவைபற்றி நம் உயர் நீதிமன்ற நீதிபதி திரு.மோகன் அவர்களே 1980இல் ஒரு தீர்ப்பில் குறிப்பிட்டுக் காட்டிக் கண்டித்திருக்கிறார். ''இந்த அரசாங்கம் வேண்டும் என்றே விண்ணப்பங்கள் போடாத இரண்டு பேருக்கு வீட்டை ஒதுக்கீடு செய்திருக்கிறது; ஆனால், ஒரு தாழ்த்தப்பட்ட, கலப்புத் திருமணம் செய்துகொண்ட ஒரு பெண்ணுக்கு வீடு ஒதுக்கவில்லை, இதிலே அதிகார துஷ்பிரயோகம் நடந்திருக்கிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்போது வீட்டுவசதித் துறை அமைச்சராக வேறு யாராவது இருந்திருக்கலாம். ஆனால், இந்தத் துறையில் இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெறும் போது, ஒரு நல்ல காரியத்திற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அண்ணா அறிவாலய அறக்கட்டளையின் சார்பிலே

கட்டப்படும் கட்டடத்திற்கு, அனுமதியைப் புதுப்பித்துக் கொள்வதற்குச் சில நாட்கள் தவறிவிட்டோம் என்பதற்காக மறுக்கப்படுகிறது. இதைப் பொறுத்துக்கொள்ளுங்கள், மன்னித்துக்கொள்ளுங்கள் என்று கேட்டும்கூட, அதற்கான அபராதத் தொகை ரூ. 50,000 கட்டுகிறோம் என்று தெரிவித்தும் கூட முடியாது என்று சொல்லப்படுகிறது. எட்டு சென்ட் இடத்தை மாநகராட்சிக்கு எழுதிக்கொடு என்று சொல்கிறார்கள். அந்த இடத்தைப் பார்த்தால் எல்லாருக்கும் தெரியும். அந்த இடத்தில் முன்பகுதியில் ஒரு பெட்ரோல் பங்க் இருக்கிறது. அதை அகற்றுவதற்கு மத்திய அரசு உடன்பாடாகவில்லை. அதைத் தவிர வேறெந்த இடத்தை ஒதுக்கினாலும், மாநகராட்சி எடுத்துக் கொள்ள முடியும். எந்தக் கட்டடம் கட்டவேண்டுமென்றாலும், முன்னால் திறந்தவெளி விடுவது வழக்கம். அங்கே திறந்தவெளிப் பூங்காக்கள் இருக்க வேண்டும்; மரங்கள் இருக்க வேண்டும். எனவே, அங்கே அண்ணா பெயரால் பூஞ்சோலை அமைக்க எட்டு செண்ட் இடத்தை ஒதுக்குவதாக நாம் சொல்லி விட்டபிறகும்கூட, ''நீங்கள் அந்த இடத்தை எழுதிக் கொடுங்கள் என்று சொல்கிறார்கள்'' இவ்வாறு வேண்டுமென்றே அதைத் தடுக்க முயலுவது நியாயம்தானா? இங்கே இவ்வாறு செய்துவிட்டு இன்னொரு டிரஸ்ட், ஸ்ரீ இராமச்சந்திரா எஜூகேஷனல் ட்ரஸ்டுக்கு எல்லா விதிகளையும் மீறிப் பாரபட்சம் காட்டுவது நியாயம்தானா என்பதை இந்த அரசு எண்ணிப்பார்த்து முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

சமுதாய நலத் திட்டங்கள் மானியம்

உரை : 46 **நாள்: 28.04.1986**

கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு மேலவை யினுடைய துணைத்தலைவர் அவர்களே! இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள், மாநகராட்சி, நகராட்சி, மன்றநிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்துக்கூற முற்படு கிறேன்.

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் தேவை என்கிற எண்ணம் உதயமான காலகட்டத்தில், 1952 ஆம் ஆண்டு மே திங்கள் சமுதாய வளர்ச்சி ஆணையாளர் மாநாடு புது டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்றபோது இந்தியாவினுடைய பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், ''இந்தியாவை மீண்டும் புத்தாக்கம் செய்யும் பெருங்கடமையை நாம் மேற்கொண்டால், அந்தக் கடமையை ஒருவித தீவிர முறையில்தான் மேற்கொள்ள வேண்டும். வெறும் புத்தகங்களோ, புள்ளி விவரங்களோ, காகிதங்களோ, வழிகாட்டும் குறிப்புகளோ, திட்டமிடுதலோ, அமைப்புகளோ போதவே போதாது.

இவற்றிற்கும் மேலான ஒரு தீவிர செயல்பாடு வேண்டும். சுடர்விட்டு எழும் தீவிரக் கனலோடு ஒரு நாடு முழுவதையும் உன்னத முயற்சியில் ஒருசேரச் செலுத்தும் உயிர்ப்போடுச் செயல்பட வேண்டும். சமுதாய வளர்ச்சித்திட்டங்கள் இந்த வகையில் உதவுமா? ஒருவேளை இந்தத் திட்டங்களைப்பற்றி மிகவும் அதிகமாக எதிர்பார்க்கிறோமோ என்று எனக்கே தோன்றுகிறது. அப்படி அளவுக்கு மீறி உயர்த்துவதும் ஆபத்துதான். ஏனென்றால் ஒன்றினிடமிருந்து அதன் தகுதிக்கு மேல் பலன்களை எதிர்பார்த்தால், விளையும் பலன் நேர் எதிரிடையாகவே போகும், இந்தியாவைப்போல் உன்னதமான

குறிக்கோளைக் கொண்ட நாடு வேறு எதுவுமில்லை என்றே நான் கருதுகிறேன். இப்படிச் சொல்வதால் மற்ற நாடுகளை நாம் அவமதிப்பதாக எண்ண வேண்டாம். இதே சமயத்தில் நாம் மற்றொன்றையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். குறிக்கோள்களுக்கும் செயலுக்குமிடையே நிலவும் இடைவெளி இந்தியாவில் இருப்பதைப்போல் வேறு எந்த நாட்டிலும் பெரிதாக இருப்பதில்லை. எனவே, பெரிய பெரிய இலட்சியப் பேச்சுகளைப் பேசிவிட்டு, செயல்படும்போது, நாம் பேச்சின் சாயலைக்கூட எட்ட முடியாது போவது மிகவும் ஆபத்தானது'' என்ற கருத்தைப் பண்டித நேரு அவர்கள் சமுதாய வளர்ச்சி ஆணையாளர் மாநாட்டில் 1952ஆம் ஆண்டில் வெளியிட்டார்கள்.

''நோக்கங்கள், குறிக்கோள்கள், செயல்படுத்தப்பட வேண்டும்'' என்று சீரிய உணர்வோடு நேரு அவர்கள் வெளியிட்ட கருத்தாகும் இது.

நேரு அவர்கள் 1952இல் வெளியிட்ட இந்தக் கருத்தை 1944ஆம் ஆண்டு, தந்தை பெரியார் அவர்கள், ஈரோட்டில் 31-10-1944 அன்று நடந்த ஈரோடு கிராம அதிகாரிகள் மாநாட்டில் உரையாற்றும்போது சொன்னார்கள்:-

''பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி, அதில் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, பார்க், சினிமா, டிராமா, தமாஷா அறை, (அது தந்தை பெரியார் அவர் களுடைய வார்த்தைகள்) வாசக சாலை, புத்தக சாலை, ரேடியோ நிலையம், நல்ல ரோடு, கால அளவோடு போக்குவரத்துள்ள பஸ் ஸ்டாண்ட், போலீஸ் ஸ்டேஷன், நன்றாய்ப் படித்த ஒரு நிதியமைச்சர், சகல சாமான்கள் கிடைக்கத்தக்க கடைகள், சுற்றுலா காணத்தக்க சாலைகள் பற்பல அமைத்து,ஊர்கள் சுற்றிச் சுற்றி வரும் காரியங்கள் செய்ய வேண்டும்.

நகரத்தார்களுக்குத்தான் கிராமத்தார்கள் வாழ்கிறார்கள், வாழ வேண்டும் என்று சொல்லப்படுவதை அடியோடு மாற்ற வேண்டும். அதோடு கூடவே இந்த இடங்களில் அவற்றுக்குத் தக்கபடி இயந்திரத்தால் செய்யப்படும் சிறு தொழிற்சாலைகளை நிறுவி, வேறு ஊரில் புகாதபடி பிழைப்பை ஏற்படுத்த வேண்டும், கிராமத்தான், பட்டிக்காட்டான், குப்பைக் காட்டான்

என்ற பெயர்கள் ஒரு மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்? அதுவும் பாடுபட்டு உழைக்கும் மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்? ஆதலால் இப்பிரச்சினைகள் இல்லாமல் செய்யப்படும் காரியங்கள் நடைபெறவேண்டும்.

மேல்நாடுகளில் பெரும்பாலான கிராமங்கள் நான் விரும்புகிறபடி இருக்கின்றன. அதாவது தார் ரோடு, குழாய்த் தண்ணீர், பஸ் சர்வீஸ், பள்ளிக்கூடம், விளையாட்டு மண்டபம், தொழிற்சாலை ஆகியவை இல்லாத கிராமங்கள் மேல்நாடு களில் காண்பது மிகவும் அதிசயமானது. ரஷ்யாவில் மாத்திரம் சில இடங்களில் கிராமங்கள் காணப்படுகின்றன. அதுவும் இதற்குள் நகரமாக ஆகியிருக்கும்'' என்று 1944இல் சொல்லி யிருக்கிறார்.

''மற்றபடி ஐரோப்பாவில் கிராமங்கள் இல்லவே இல்லை. நகரத்தார் நல்வாழ்வு வாழ்வதற்காகவே கிராமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற முறையில் கிராமங்கள் அங்கு இல்லை. அங்கு ஏதாவது ஒன்று இரண்டு இருந்தபோதிலும் இங்கு இருக்கக்கூடாது என்று நான் சொல்வேன்'' என்று நகரங்கள், கிராமங்கள் என்று வேறுபாடு இல்லாத அளவிற்கு நகர்ப்புறத்திலே உருவாகின்ற வளர்ச்சிகள், திட்டங்கள், ஆகியவைகள் கிராமப்புறத்திற்கும் எட்டிட வேண்டுமென்ற சீரிய கருத்தை 1944ஆம் ஆண்டிலேயே தந்தை பெரியார் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு, 1952ஆம் ஆண்டு இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டபோது, பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தையும் நான் ஏற்கெனவே இங்கே சுட்டிக்காட்டி யிருக்கிறேன்.

ஆனால், நான் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்பு கிறேன். இந்தப் பத்தாண்டுக் காலத்தில் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட மக்கள் பிரநிதிகள்; ஒன்றியங்களிலும் நகர்ப் புறங்களிலும் பொறுப்பேற்று நிர்வாகங்களை நடத்துகின்ற வாய்ப்புப் பெறாத காரணத்தால், நகரங்களே கூட கிராமங்களை விட மோசமான சூழ்நிலையில் சீரழிந்திருக்கின்றன என்பதற்கு ஏராளமான தகவல்கள் நம்மிடம் இருக்கின்றன.

நான் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். 1985-86ஆம் ஆண்டில் இந்த மாமன்றத்தில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்புக் கிடைக்குமானால், அதைப்பெற்று அவர் தன் கையில் வைத்துக் கொள்வாரேயானால், அவர்களுக்கு நான் சில விவரங்களைச் சொல்லமுடியும் என்று கருதுகிறேன். இதோ என் கையில் இருப்பது 1985-86 ஆம் ஆண்டுக்கான நகராட்சி நிர்வாகமும், மாநகராட்சிகளும் என்பதற்கான கொள்கை விளக்கக் குறிப்பாகும். 1985-86 ஆம் ஆண்டுக்கும், இப்போது வைக்கப்பட்டுள்ள 1986-87 ஆம் ஆண்டுக்கும் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புக்கும் இடையிலே இந்தத் துறையிலே ஏதாவது வளர்ச்சிகள், உயர்வுகள் ஏற்பட்டிருக் கின்றனவா என்று பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், நம்முடைய அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகத்திலே தன்னுடைய இளமைக் காலத்திலேயே பொறுப் பேற்றுத் திறம்பட நடத்தியவர் என்று புகழ்பெற்றவர். கடந்த ஆண்டு வைத்த கொள்கை விளக்கக் குறிப்பும், இந்த ஆண்டு வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளும் அதிகாரி களால் எப்படித் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே உள்ள இந்தத் தவறுகள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்களுக்கு எப்படிப் படாமல் போய்விட்டன என்பதுதான் எனக்கு மிகமிக விந்தையாக இருக்கின்றது. இதிலே 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பில், 41ஆம் பக்கத்தில், பொதுக் கழிப்பிடங்கள் என்ற தலைப்பில், ஒரு பாரகிராப்:

‘‘பீஹார் மாநிலத்தில் பாட்னா நகரத்தில் ஒரு புதிய மாதிரி அமைப்பில் பொதுக்கழிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய அமைப்பில் கழிப்பிடத்தைச் சுத்தம் செய்ய மிகக் குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும். அத்தகைய புதிய அமைப்புக் கழிப்பிடங்களைச் சென்னையிலும் அமைக்க அரசுக்கு எழுதப்பட்டு, கீழ்க்காணும் எட்டு இடங்களில் புதிய அமைப்புக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1. லோன் சதுக்கம்.
2. கிருஷ்ண பிள்ளை தெரு, பெரம்பூர்.
3. பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்.
4. வ.உ.சி. சாலை.
5. ஜி.என்.சாலை.
6. கிரியப்பா சாலை.
7. கனால் சாலை
8. மைலாப்பூர் குளம் அருகில்.

இந்தக் கழிப்பிடங்கள் 1985-86ஆம் ஆண்டில் கட்டப்பெறும்.''

இவ்வாறு கடந்த ஆண்டு கொள்கைக் குறிப்பில் 41ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு அதே தலைப்பில் 15 ஆம் பக்கத்தைப் படித்தால், ஒரு வரிகூட மாற்றம் இல்லாமல் அப்படியே எடுத்து அச்சில் கொடுத்திருக்கிறார்கள்.

''பீகார் மாநிலத்திலுள்ள பாட்னா நகரில் புதிய வடிவமைப்புடன்கூடிய பொதுக்கழிப்பிடங்கள் கட்டப் பட்டுள்ளன. இந்த வடிவமைப்பின்படி மிகக்குறைந்த அளவு நீரே தேவைப்படுகின்றது.''-போன புத்தகத்தில் தண்ணீர் என்று இருந்தது. இதிலே 'நீரே' தேவைப்படுகிறது என்று இருக்கிறது-'' மாநகராட்சியின் பரிந்துரைக்கிணங்க பின்வரும் 8 இடங்களில் இத்தகைய பொதுக்கழிப்பிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவையாவன:

1. லோன் சதுக்கம்.
2. கிருஷ்ணபிள்ளை தெரு பெரம்பூர்
3. பிராட்வே வெளியூர் பேருந்து நிலையம்
4. வ.உ.சி. சாலை
5. ஜி.என். சாலை
6. கிரியப்பா சாலை

7. கால்வாய்ச்சாலை

8. மைலாப்பூர் குளம் அருகில்''

இது 1986-87இல் கட்டப்படும் என்று அறிவித்து கொள்கைக் குறிப்பில் அனுமதி வழங்கியுள்ளது. அப்படியே ஏறத்தாழக்கூட அல்ல, அசலாக அதுவும் இதுவுமாக ஒன்றாகவே இருக்கின்றது. இதிலே மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து, துப்பரவு. இந்த 1985-86 கொள்கைக் குறிப்பில் துப்புரவு என்ற தலைப்பில் ஒரு வாசகம். ''துப்புரவுப் பணிகளுக்கு 896 மாட்டு வண்டிகளும், 138 லாரிகளும் ஈடுபடுத்தப்படுகின்றன. 6685 துப்புரவு ஊழியர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ளுகின்றார்கள்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 896 குப்பை வண்டிகள் குப்பைகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. 174 லாரிகள் குப்பை கொட்டும் இடங்களில் இக்குப்பையைக் கொண்டுபோய் கொட்டும் பணியிலே ஈடுபட்டுள்ளன. 36 லாரிகள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், துப்புரவுப் பணி யாளர்கள் அதே 6685 பேர்கள்தான். 36 லாரிகள் அதிகமாக இருக்கும்போது, துப்புரவுப் பணியாளர்கள் 36-ஐ 3 ஆல் பெருக்கினால் 100 பேராவது அதிகமாக ஆக்கவேண்டியிருக்க மாட்டார்களா? அதே 6685 பேர்கள்தான் இருக்கின்றார்கள். அதற்கு விளக்கம் தெரிய வேண்டும்.

அதற்கு அடுத்து 1985-86 கொள்கைக் குறிப்பில் விளக்குகளைப்பற்றி 4ஆம் பக்கத்தில், 1985-86 ஆம் ஆண்டில் தெருவிளக்குகள் அமைத்தல், சோடியம் ஆவி விளக்குகள் அமைத்துக் கொம்புகள் புதைத்தல், அதற்கு 281 லட்சம் 1985-86இல் என்று ஒதுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கீழ்க்காணும் சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் ஆயிரம் விளக்குகள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது:-

சாந்தோம் நெடுஞ்சாலை, சர்தார் படேல் சாலை, ராஜ் பவன் சாலை, 2 மற்றும் 3 ஆவின்யூ, அண்ணாநகர், எருக்கஞ் சேரி நெடுஞ்சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பல்லவன் சாலை, சூரிய நாராயணா சாலை மற்றும் மேடவாக்கம் குளம் சாலை, 658 தெரு விளக்குகள் 48 குடிசைப் பகுதிகளில்

அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகராட்சியில் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 1150 விளக்குகள் அமைக்கப்படும்'' இது கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு.

இப்போது இந்த ஆண்டு, ''1986-87இல் வரவு செலவுத் திட்டத்தில் தெருவிளக்கு, சோடியம் வேப்பர் விளக்கு, புதைமின் கம்பிகளை மாற்றியமைத்தல் ஆகியவற்றிற்காக ரூ. 323.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1000 சோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தப்பட இருக்கின்ற முக்கிய இடங்கள் வருமாறு- ''சந்தோம் நெடுஞ்சாலை, சர்தார் படேல் சாலையில் ஒரு பகுதி, ராஜ்பவன் சாலை, அண்ணா நகர் அவின்யூ இரண்டு, மூன்றாம் பகுதி, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பல்லவன் சாலை, எஸ்.என்.செட்டித் தெரு, சென்ற ஆண்டு சூரிய நாராயணா தெரு, இப்போது எஸ்.என்.செட்டித் தெரு, மேடவாக்கம் குளச்சாலை'' என்று அதே எழுத்து மாறாமல் இந்த ஆண்டு அச்சடிக்கப் பட்டிருக்கிறது. ''மேலும் 48 குடிசைப் பகுதிகளில் 658 மின் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தப் பட்ட பகுதிகளில் 1,150 விளக்குகள் பொருத்தப்படும்'' என்று அதே குறிப்பு இதிலே தரப்பட்டிருக்கிறது.

மேலும், 'கல்வி' என்ற தலைப்பில், 45ஆம் பக்கத்தில், பழைய புத்தகம், சென்ற ஆண்டு புத்தகத்தில்-'ஆரம்பக் கல்வி' என்ற தலைப்பில், ''சென்னை மாநகராட்சி 370 ஆரம்பக் கல்விப் பள்ளிக்கூடங்களை நிர்வகித்து வருகிறது. இப்பள்ளி களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,69,500 ஆகும். ஆசிரியர் மற்றும் மற்ற நிர்வாக ஊழியர்களின் எண்ணிக்கை, 4,792. மேற்கண்ட 370 பள்ளிக்கூடங்களில் 28 பள்ளிக் கூடங்கள் தனியார் கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிக்கூடங்களை நாளடைவில் மாநகராட்சியின் சொந்தக் கட்டிடங்களில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் புதிய கட்டடங்கள் கட்டவும், தனியார் கட்டடங்கள், காலி மனை வாங்கவும் ரூ.57.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.'' -கவனிக்க வேண்டும். 1985-86 வரவு செலவுத் திட்டத்தில் புதிய

கட்டடங்கள் கட்டவும், தனியார் கட்டடங்கள், காலி மனை வாங்கவும் ரூ.57.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலே வருகிறது, 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பில் வருகிறது.

1986-87 கொள்கை விளக்கக் குறிப்பில், ''1985-86 ஆம் ஆண்டிற்கு ரூ. 57.96 இலட்சம் அளவில் புதுக் கட்டடங்கள் கட்டவும், அதற்கான நிலம் வாங்கவும் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது'' என்று அதே தொகை, அதே நிலை, அதே கட்டடங்கள். ஆனால் 1986-87 ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டு அச்சடிக்கப்பட்ட பிரகாரம் இருக்கிறது. அதை அப்படியே மறந்துவிட்டு, அதை மீண்டும் இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் வைத்து, இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மற்ற உறுப்பினர்களின் கவனத்திற்கும், அமைச்சரவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். அடுத்து, கொசுக்கள், புகைகக்கும் கருவி என்று கொசுக்களை ஒழிக்கத் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர்கூட அதைப் படித்துக் காட்டினார்கள். அதில், ''கூவம் நதி, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஒட்டேரி கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகியவை நகரின் அனைத்துப் பகுதிகளிலும் நீர்நிலைகளைக் கொண்டு உள்ளதுதான் கொசுத்தொல்லைக்கான மூலகாரணம் ஆகும். அந்நீரில் உள்ள நீர்த்தாமரைகள் கொசுத்தொல்லைகளைப் போக்கும் திட்டங்களுக்கு எதிரியாக உள்ளன. எனினும், பூச்சிக் கொல்லி மருந்துகள் தெளித்தல், 60 புகைகக்கும் இயந்திரங்கள் உபயோகித்தல் (1984-85இல் வாங்கி தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டவை) தொடர்ந்து நடைபெறும்'' என்று 1985-86 கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்படுகிறது. இந்த ஆண்டும், 1986-87இல் அதே ''கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஒட்டேரி கால்வாய் மற்றும் மாம்பலம் கால்வாய் மற்றும் அனைத்து நீர் நிலைகளிலும் காணப்படும் கொசுத் தொல்லைக்குக் காரணம் நீர் தாமரைகள் ஆகும். கொசுக்களை ஒழிக்கும் திட்டத்திற்கான பணிகளை ஏற்றுக்கொண்டுள்ளோம்'' பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தி கொசுக்களை ஒழிக்க எவ்வளவு இயந்திரங்கள் 1985-86இல் பயன்படுத்தப்பட்டனவோ, அதுவேதான் இந்த ஆண்டும்.

சென்ற ஆண்டு 48ஆம் பக்கத்தில் என்ன சொல்லி யிருக்கிறார்களோ அதையே இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலும் கொஞ்சம் கூட மாறாமல், அதே வார்த்தைகளை உபயோகித்து இயந்திரங்களை வாங்கித் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டன என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, 'இதரப் பணிகள்' என்கிற பெயரால்,49 ஆம் பக்கத்தில் சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், விளையாட்டுத் திடல்கள், அங்காடிகள், சமூக நலக் கூடங்கள், இடுகாடுகள், சுடுகாடுகள் போன்றவற்றைப் பராமரிக்க ஒதுக்கப்பட்ட தொகைகள் தரப்பட்டுள்ளன.

1985-86இல் பூங்காக்கள் 88. செலவழிக்கப்பட்ட தொகை 53.68 லட்சம். இந்த ஆண்டும் பூங்காக்கள் அதே 88. செலவழிக்கப்பட்ட தொகை அதே 53.68 லட்சம்.

1985-86இல் விளையாட்டு மைதானங்கள் 80, ஒதுக்கப் பட்ட தொகை 12.90 லட்சம் ரூபாய். இந்த ஆண்டும், அதே 80 விளையாட்டு மைதானங்கள் ஒதுக்கப்பட்ட தொகை 12.90 லட்சம்.

விளையாட்டுத் திடல்கள் 1985-86இல் 3. செலவழிக்கப் பட்ட தொகை ரூபாய் 11.98 லட்சம். இந்த ஆண்டும் விளை யாட்டுத் திடல்களின் எண்ணிக்கை 3. ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை ரூபாய் 11.98 லட்சம்.

சென்ற ஆண்டு அங்காடிகளின் எண்ணிக்கை 14. செலவழிக்கப்பட்ட தொகை 8.45 லட்சம். இந்த ஆண்டும் அங்காடிகளின் எண்ணிக்கை 14. செலவழிக்கப்பட்ட தொகை 8.45 லட்சம் ரூபாய்.

சமூக நலக்கூடங்கள் சென்ற ஆண்டு 10. செல வழிக்கப்பட்ட தொகை ரூபாய் 4.33 லட்சம். இந்த ஆண்டும் அதே 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 4.33 லட்சம்.

சலவை நிலையங்கள் கடந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பின்படி, 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 1.44

லட்சம். இந்த ஆண்டும் கொள்கை விளக்கக் குறிப்பின்படி 10. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 1.44 லட்சம்.

இடுகாடு, சுடுகாடு சென்ற ஆண்டு 30. செலவழிக்கப் பட்ட தொகை ரூபாய் 3.75 லட்சம். இந்த ஆண்டு அதே 30. செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 3.75 லட்சம்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கும்போது, எந்த மாற்றமும் இல்லாமல் இரண்டு வருட கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் ஒரே தொகை காணப்படுகிறது. அப்படியே இரண்டிலும் இருப்பது ஏதோ அதிகாரிகளின் இயலாமையா என்று நான் சொல்லமாட்டேன். சோம்பேறித்தனம் என்றும் கூற மாட்டேன். அதிகாரிகள் இவைகளை எல்லாம் யார் படிக்கப் போகிறார்கள் என்று மன்ற உறுப்பினர்களையும், ஏன் அமைச்சரவையையும்கூட அலட்சியப்படுத்திவிட்டு, இப்படிப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பினைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் நாட்டின் நன்மைக்காகவும், அமைச்சர் மூலமாக இந்தக் குறைபாடுகள் எல்லாம் களையப்பட வேண்டும் என்பதற்காகவும் இந்த அவையின் முன்னால் எடுத்து வைப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இந்த இரண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளும் அந்த வகையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றன, என்ன அழகில் இருக்கின்றன என்பதை எல்லாம் உணர்ந்து பார்த்து, ஏற்ற நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள், என்கிற நம்பிக்கையில் இதனை நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

இன்னொன்று, கடந்த ஆண்டு இந்த நகராட்சி ஊராட்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால் பக்கங்கள் 74 ஆக இருந்தன. ஆனால் இந்த ஆண்டு என்ன கோபமோ தெரியவில்லை அது 47 பக்கங்களோடு அடங்கிவிட்டது. அது போல நகர மன்றங்களை எடுத்துக்கொண்டால், சென்ற ஆண்டு 36 பக்கங்கள் இருந்தன. இந்த ஆண்டு என்ன காரணத் தினாலோ அதுவும் 6,7 பக்கங்களோடு அதுபற்றிய விவரங் களும் குறைக்கப்பட்டுவிட்டன.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

கலைஞர் மு. கருணாநிதி: இவைகள் எல்லாம், நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, ஒரு பத்தாண்டுக் காலம் மக்களுடைய நேரடிப் பார்வையில் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள் தங்களுடைய பணிகளை நிறைவேற்ற முடியாமல் போனதால் ஏற்பட்ட தவறுகள். அந்தக் காரணத் தினால்தான் உள்ளாட்சிமன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளின் சார்பில் பலமுறை எடுத்துக் கூறப்பட்டது. இங்கே பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள், தேர்தல் நடத்தியதற்குப் பாராட்டுத் தெரிவிக்க வில்லையே என்று குறைபட்டுக் கொண்டார்கள். பல உள்ளாட்சித்துறை அமைச்சர்கள், தேர்தல் நடத்துவதாக அறிவித்து அறிவித்துப் பிறகு தேர்தல் நடக்காமல் போனாலும் கூட, இந்தத் தேர்தலை முன்னின்று கங்கணம் கட்டிக்கொண்டு நடத்தி முடித்த என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்ட அந்தக் காலக் கட்டத்திலிருந்து தேர்தல் முடிந்து இதுவரையில், எத்தனை எத்தனை முரண்பாடான அறிக்கைகள், ஆணைகள். இவைகள் எடுத்துச்சொல்லப்படாவிட்டால், திருத்திக்கொள்ள வழி ஏற்படாது என்று, குற்றச்சாட்டாக அல்ல, இப்படிப்பட்ட நிலை மைகள், அரசாங்கத்தில் ஏதோ ஒரு நோக்கத்தோடு நடக்கலாமா என்ற வினாவை எழுப்பி, திருத்திக்கொள்ள வேண்டுமென்ப தற்காக, நான் இவைகளை எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

1985-86இல் நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் வைத்த கொள்கைக் குறிப்பில், 34 ஆம் பக்கத்தில் தெளிவாக ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ''நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்பது ஆண்டு களுக்குமேல் இல்லாமல் இருப்பதால், உடனடியாகத் தேர்தல் களை ஊராட்சித் தேர்தல்களுடன் சேர்த்துக் கட்சி சார்பற்ற முறையில், இதை அடிக்கோடிட்டுக் கொள்ள வேண்டும், கட்சி

சார்பற்ற முறையில் நடத்துவதற்காக 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டத்திலுள்ள பழைய முறைப்படி ஒதுக்கீடுகளைப் பின்பற்ற, அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவுகளுக்கேற்ப தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டம் தக்கபடி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எல்லா ஏற்பாடுகளும் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' என்று அச்சடித்து அமைச்சர் அவர்கள் நமக்கெல்லாம் தந்தார்கள்.

ஆனால், அதற்குப் பிறகு 1986 பிப்ரவரியில் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்தது. இந்த அறிவிப்புக்குப் பிறகு, ஜூலை 27 ஆம் தேதி அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் பேட்டி கண்டபோது சொன்னார். ஏன் மீண்டும் தாமதம் ஏற்படுகிறது என்று கேட்டபோது, வாக்காளர் பட்டியலை அச்சடிப்பதற்காக கூட்டுறவு அச்சகங்கள் எங்களுக்குத் துணை நிற்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். தனியார் அச்சகங்களுக்குத் தரவில்லையா என்று கேட்டதற்கு இந்த வாக்காளர் பட்டியலை கூட்டுறவு அச்சகங்களுக்குக் கொடுப்பது என்பதுதான் எங்கள் கொள்கை, அந்தக் கொள்கைப்படி கூட்டுறவு அச்சகத்திற்குத் தந்திருக்கிறோம், அந்தக் கொள்கையில் நாங்கள் அழுத்தம் திருத்தமாக இருக்கிற காரணத்தால், தாமதமாகிவிட்டது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு, பத்திரிகைகளில் வேறு செய்தி வந்தது. இந்திரா பவர் பிரஸ் என்ற தனியார் அச்சகமும், டிக் பிரஸ் என்ற தனியார் அச்சகமும், ராதாகிருஷ்ணா பவர் பிரஸ், ஜீவன் பவர் பிரஸ் என்ற தனியார் அச்சகத்திற்கும் தரப்பட்டு, அவை அச்சாகிக்கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் ஏடுகளில் வந்தன. இதுகுறித்து நிருபர்கள் அமைச்சரைக் கேட்டதற்கு, அது தவறாகச் சொல்லிவிட்டதாக ஒத்துக்கொண்டார். நான் அதைப் பாராட்டுகிறேன். அதற்குப் பிறகு செப்டம்பர் 11 ஆம் நாள் அமைச்சர் பேட்டி கொடுக்கிறார். தேர்தலை இன்னும் ஏன் நடத்தவில்லை என்று கேட்டதற்கு, காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.பழனியாண்டியும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. சுப்ரமணியமும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர்.அவர்களைச் சந்தித்துத் தேர்தலைக் கட்சி அடிப்படையில் நடத்தவேண்டுமென்று கோரிக்கை கொடுத்த

தாகவும், அது பரிசீலிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார். ஆனால், மறுநாளே காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், அதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். நாங்கள் அப்படி முதலமைச்சரைச் சந்தித்து கேட்கவில்லை என்ற அறிக்கை கொடுத்தார்கள். அதற்குப் பிறகும் நிருபர்கள் அமைச்சரைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டபோது, மிகச் சாமர்த்தியமாகச் சொல்கிறார். ''நான் சொன்னது அப்படியே இருக்கிறது, அவர்கள் சொன்னதும் அப்படியே இருக்கிறது'' என்ற பதிலை அவர்கள் வழங்கினார்கள்.

பிறகு டிசம்பர் 13 ஆம் தேதி அமைச்சர் அளித்த பேட்டியில் டிசம்பர் 7 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அதற்குப் பிறகு அக்டோபர் 21 ஆம் தேதி, டிசம்பர் 7 ஆம் தேதி தேர்தல் நடத்துவதாக இருந்தோம். இப்போது எல்லாத் தேர்தல்களையும் கட்சி அடிப்படையில் நடத்தத் தீர்மானித்திருப்பதால், மேலும் கால அவகாசம் தேவைப்படுகிறது. ஜனவரியில் சட்டமன்றம் இருக்கிறது, எனவே, பிப்ரவரியில் தேர்தல் நடக்கும்'' என்று சொன்னார்கள். நான் கேட்பதெல்லாம், பலமுறை இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களைக் குறித்து அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றபோதெல்லாம் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஒத்திவைப்புக்கு அனைத்துக்கட்சிக் கூட்டம் கூட்டப்படவில்லை. கட்சி சார்பில் நடத்துவதா, கட்சி சார்பற்ற முறையில் நடத்துவதா என்றெல்லாம் அப்போது கேட்கப்பட வில்லை. ஆனால், பிறகு கட்சி சார்பில்தான் தேர்தல்களை நடத்தத் தீர்மானித்திருக்கிறோமென்று அக்டோபர் 1-இல் குறிப்பிட்டார். பிறகு, டிசம்பர் 19 ஆம் தேதி தமிழக அரசு. 1036 என்கிற எண்ணுள்ள அரசாணையை வெளி யிட்டது. அந்த அரசாணை டிசம்பர் 19, 1985 அன்று வெளி யிடப்பட்ட அரசாணையாகும். முனிசிபல் அட்மினிஸ்ட்டி ரேஷன் துறையின் சார்பாக வெளியிடப்பட்டது. அதிலே,

"The Governor of Tamil Nadu here by issues the following directions for the assignment of symbols to the candidates contesting in the elections to the offices of Chairman and Councillors of Municipal Councils."

கீழ்க்காணும் கட்சிச் சின்னங்களில் நகராட்சித் தலைவர் களும், நகராட்சி மன்ற உறுப்பினர்களும் முனிசிபல் கவுன்சிலர்களும் போட்டியிடுவார்கள் என்று தமிழ்நாடு அரசு ஆளுநர் சார்பாக அரசாணையை வெளியிட்டது. எல்லா அரசாணைகளுமே ஆளுநர் சார்பாகத்தான் வெளியிடப்படும். இவ்வாறு முனிசிபல் சேர்மனுக்கும், முனிசிபல் கவுன்சிலர் களுக்கும் சிம்பல்கள் உண்டு என்கிற ஓர் அரசாணையை வெளியிட்டது. அதற்குப் பிறகு, டிசம்பர் 19 ஆம் தேதி அரசாணைக்குப் பிறகு, சரியாக 19 நாள் கழித்து, இன்னொரு அரசாணையை வெளியிட்டார்கள். அரசாணை எண் 63 அந்த அரசாணையில்,

"The Government now direct that the election of Chairman of Municipal Councils be conducted on party basis and the election of Councillors of Municipal Councils on non-party basis."

19 நாட்களுக்கு முன்பு தலைவருக்கும், உறுப்பினர் களுக்கும் நகராட்சித் தலைவருக்கும் கட்சிச் சின்னங்கள் உண்டு என்று ஒரு அரசாணையைப் பிறப்பித்துவிட்டு, 19 நாட்கள் கழித்து கவுன்சிலர்களுக்குக் கட்சிச் சின்னம் இல்லை என்ற கருத்தை இந்த அரசு தன்னிச்சையாக, அவர்களாகவே வெளியிட்டார்கள். அதன் பின்னர் இதனுடைய விளைவுகள் என்ன ஆயிற்று என்பது அனைவருக்கும் தெரியும்.

பல இடங்களில் ஒரு கட்சியைச் சார்ந்தவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், அவர் கட்சியைச் சாராதவர் பல பேர்கள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், இப்போது நடை பெறுகிற துணைத் தலைவர் தேர்தலில் ஏற்படுகின்ற தகராறுகள் எல்லாருக்கும் தெரியும். எந்தமாதிரி காரியங்கள் எல்லாம் நடைபெறக் கூடாதென்று எதிர்பார்த்தோமோ, அந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெறுகின்ற காட்சிகளை நாம் சந்திக்கின்றோம். தலைவர் ஒரு கட்சியின் சார்பாகவும், உறுப் பினர்கள் வேறுபல கட்சிகளின் சார்பாகவும் அமைந்திருக்கின்ற நிலைமைகள் பல்வேறு நகராட்சி மன்றங்களில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வளவு முரண்பாடுகளுக்குப் பிறகும் பிப்ரவரி 29 ஆம் தேதியோடு தேர்தல் முடிந்தது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பிறகு, அரசாங்கம் பரபரப்பாகிவிட்டது. விறுவிறுப்பாக அறிக்கைகள் எல்லாம் வெளிவந்தன. தேர்தல் முடிவு வெளிவந்த சில நாட்களுக்கெல்லாம் மார்ச் 3 ஆம் தேதியன்று புதிய தலைவர்கள் பதவி ஏற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. பிறகு மார்ச் 2 ஆம் தேதி எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்த அறிக்கை அனுப்பப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், நகராட்சி கமிஷனர்கள், ஒன்றிய கமிஷனருக்கு 3 ஆம்தேதி காலை 10 மணிக்குப் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறவேண்டுமென்கிற சுற்றறிக்கையை அனுப்பினார்கள் உடனடியாக நகராட்சி கமிஷனர்கள், ஒன்றிய கமிஷனர்கள் எல்லாம் விறு விறுப்பாக பணியாற்றி, எல்லா உறுப்பினர்களுக்கும் தலைவர்களுக்கும் இந்தத் தகவல்களைத் தந்தார்கள். வேடிக்கை என்னவென்றால், மார்ச் 2 ஆம் தேதி இப்படி உத்தரவு போகிறது. அதே மார்ச் 2 ஆம் தேதி மாலை 6 மணிக்கு இந்த அரசாங்கத்தின் D.R.D. அலுவலகத்திலிருந்து தந்தி எல்லா கமிஷனர்களுக்கும் போகிறது. அதில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால்,

"The oath of affirmation to be taken by the Chairman of Panchayat Union Councils and Presidents and Members of Panchayats fixed on 3rd March 1986 stands postponed, since the date fixed, namely, 3rd March 1986 happens to be Ashtami. The oath of affirmation will be taken on some other date."

முதலிலே குறிப்பிட்ட 3 ஆம் தேதி அஷ்டமியாக இருந்த காரணத்தால் 3 ஆம் தேதி காலையிலே அந்தப் பதவி ஏற்பு நிகழ்ச்சிகளை வைத்துக் கொள்ளாமல், வேறு ஒரு தேதிக்கு மாற்றப்படுகிறது என்று, மார்ச் 2 ஆம் தேதி, ஒரு சுற்றறிக்கை அனுப்பிய அதே மார்ச் 2, மாலை 6 மணிக்கு ''அஷ்டமி'' என்று குறிப்பிட்டு ஒரு தந்தி போகிறது. அதற்குப் பிறகு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் எல்லாம், மன்ற உறுப்பினர்களுக்கு ''அஷ்டமி'' என்று சொல்லி, ''வராதீர்கள் வராதீர்கள்''

என்று செய்தி அனுப்புகிறார்கள். ஆனால், அதே மார்ச் 3 ஆம் தேதி இரவு 8 மணிக்கு D.R.D அலுவலகத்திலிருந்து மற்றொரு தந்தி போகிறது. அதில் 3 ஆம் தேதியே பதவிப் பிரமாணம் செய்து கொள்ளலாம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம் என்றால், 3 ஆம் தேதி காலை 12 மணியோடு தனி அதிகாரிகளுடைய பதவிக்காலம் முடிவடைகிறது. இதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல், முதலிலே ''அஷ்டமி'' என்று சொல்லி, பதவிப்பிரமாணத்தை ஒத்தி வைத்துவிட்டார்கள். தனி அதிகாரிகள் பதவிக்காலம் முடிவடைகிறது என்று தெரிந்த பிறகு, அஷ்டமி இருந்தாலும் பரவாயில்லை என்றும், 3 ஆம் தேதியே பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்ளலாம் என்றும், இப்படி 3 விதமான சுற்றறிக்கைகளை இந்த அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்திலிருந்து, இலாக்காவிலிருந்து அதிகாரிகளின் மேற்பார்வையில் வெளியிடப்படுகின்றன. அதுவரையில் அது எப்படி அவர்களுக்குத் தெரியாமல் போனது? 3 ஆம் தேதியோடு தனி அதிகாரிகளுடைய பதவிக் காலமும் முடிவடைகிறது என்பது அவர்களுக்கு எப்படித் தெரியாமல் போனது? சரி, அப்படித் தெரிந்த பிறகு அந்த 'அஷ்டமி' என்ன ஆனது? 'அஷ்டமி' யில் பதவிப் பிரமாணம் எடுக்கக்கூடாது என்று தந்தி அனுப்பிய இந்த அரசு, அதே 'அஷ்டமி' யில் பதவிப் பொறுப்பை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லும் அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது என்றால், அது விசித்திரமாக இல்லையா?

அடுத்து, துணைத் தலைவர் தேர்தல் நடத்துவதைப் பொறுத்தவரையில், நகராட்சியிலும், ஊராட்சி ஒன்றியத்திலும், 30 நாட்கள் அவகாசத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டுமென்று ஏற்கெனவே இருந்தது. அரசாங்கத்தினுடைய திடீர் ஆணையால் அதை 90 நாட்கள் என்று விஸ்தரித்து, அந்தத் தேர்தலை 90 நாட்களுக்குள் நடத்தினால் போதுமென்று ஒரு அறிக்கை போகிறது. அதோடு கலெக்டர் ஆங்காங்குள்ள நிலைமை களுக்கு ஏற்ப 4 பேர்களையோ, 5 பேர்களையோ, 6 பேர்களையோ அல்லது 2 பேர்களையோ நியமனம் செய்வார் என்று போகிறது. அது ஏற்கெனவே சட்டமாக்கப்பட்டு, அதை எல்லாக் கட்சிகளும்கூட ''ஜனநாயக முறை'' அல்ல என்று

எதிர்த்தும் கூட, அரசு அதை அமல்படுத்த முயன்றபோது, அதற்கு நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அது நீதிமன்ற விஷயமானதால், அதைப்பற்றி நான் விளக்க மாகப் பேச விரும்பவில்லை. அதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அப்படி இடைக்காலத் தடை விதிக்கப்பட் டிருந்த காலத்தில், ஜி.ஓ. 193, தேதி 17-3-1986 என்று ஒரு அரசாணை பிறப்பிக்கப்படுகிறது. அதில், துணைத் தலைவர் தேர்தலுக்குப் பின்தான் 'நாமினேஷன்' அல்லது 'கோ-ஆப்ஷன்' என்று இருந்த விதியை விலக்கிவிட்டு, துணைத்தலைவர் தேர்தலுக்கு முன்பே நியமனம் செய்ய வழிவகை செய்யப்படுகிறது. அந்த ஆணையில்,

"In the said rules, in rule 1, the expression 'after the election of the Vice-Chairman of the Panchayat Union Council" shall be omitted."

இதன்மூலம் என்ன ஆகிறதென்றால், துணைத்தலைவர் தேர்தலுக்குப் பின்தான் 'நாமினேஷன்' அல்லது 'கோ-ஆப்ஷன்' என்ற விதி விலக்கப்படுகிறது. காரணம் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே 4 பேர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் நியமித்துவிட்டால், துணைத் தலைவர் தேர்தலுக்கு அவர்களுடைய வாக்குகளைப் பெற முடியும் என்ற அந்த நோக்கத்தோடு இது செய்யப்பட்ட காரியம். இது ஜனநாயகத்திற்குப் புறம்பானது என்பதற்காகத்தான் சுட்டிக் காட்டினேன். இப்படிப்பட்ட நிலையில் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை உத்தரவு நீக்கப்படுகிறது. அரசு சார்பிலே வாதாடி அது நீக்கப்படுகிறது. அப்படி நீக்கப்பட்டதும் 7 ஆம் தேதி 'ஸ்டே' நீங்குகிறது. 9ஆம் தேதி வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரே ஆணையில் 143 பேர்களை நியமனம் செய்கிறார். அந்த மாவட்டத்திலுள்ள ஒன்றியங்களுக்கு ஒரே ஆணையில் 143 பேர்களை நியமனம் செய்கிறார். அதில் துரிஞ்சாபுரம் என்ற ஒன்றியத்திற்கு 4 பேர்களை நியமனம் செய்கிறார். ஏற்கெனவே அந்த ஒன்றியத்தின் தலைவர் ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தல் நடக்கும் என்று அறிவித்திருக்கிறார். அந்த ஒன்றியத்தில் அது வரையில் உள்ள உறுப்பினர்களின் பலம், சூழ்நிலை என்ன வென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக 23

பேர். சேர்மனுடைய நிலையையும் எண்ணிக்கையையும் சேர்ந்தால் 24 பேர். அ.தி.மு.க வுக்கு ஆதரவாக 24 பேர்கள். 24,24 என்று சமமாக இருக்கிறது. இப்படி 24,24 என்கிற நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நியமனம் காரணமாக 4 பேர்களை உடனடியாகத் துரிஞ்சாபுரம் யூனியனில் பதவிப் பிரமாணம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. கலெக்டரின் நியமன ஆணை மார்ச் 11 ஆம் தேதி அன்று துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவருக்குக் கிடைக்கிறது. துணைத் தலைவர் தேர்தல் 21 ஆம் தேதி என்று அறிவித்தாகிவிட்டது. நாமினேட் உறுப்பினர்கள் 4 பேர்களுடைய பதவி ஏற்பை 23 ஆம் தேதி வைத்துக்கொள்ளலாம் என்று ஒன்றியத் தலைவர் முடிவு செய்கிறார். நான் அதன் விவரத்திற்குள்ளே இப்போது நுழைய விரும்பவில்லை. என்ன முரண்பாடுகள் இருக்கின்றன என்பதை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அதற்குள் ஊராட்சி வளர்ச்சித் துறைச் செயலாளர் அவர்களிடமிருந்து ‘‘மோஸ்ட் இம்மீடியேட்’’ என்று குறிப்பிட்ட ஒரு கடிதம் எல்லாக் கலெக்டர்களுக்கும், எல்லாக் கமிஷனர்களுக்கும் ‘‘த்ரு சேர்மன்’’ என்ற வகையில் அனுப்பப்படுகிறது. அது ஜி.ஓ. அல்ல. அவர் ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். ஏப்ரல் 17 ஆம் தேதி அந்தக் கடிதத்தில் செயலாளர் கையொப்பமிட்டிருக்கிறார். ஒரு கடிதம் செயலாளரால் கையொப்பமிடப்பட்டு, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போக 1,2 நாளாகும் அதிலும் துரிஞ்சாபுரம் போய்ச் சேர வேண்டும் என்றால், எத்தனை நாளாகும் என்பது நமக்கே தெரியும். ஆனால், இந்தக் கடிதமோ துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு 18 ஆம் தேதியே போகிறது. ‘த்ரு சேர்மன்’ என்கிற கடிதம் நேரடியாகவே கமிஷனர் கைக்குப் போகிறது. கமிஷனர், அவரே கையொப்பமிட்டு வாங்குகிறார். அப்படிப் போன கடிதம் அஞ்சல் வழி போனதா என்றால் இல்லை. இதோ இந்தக் கவர்தான் சென்றது.

(மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவையில் அதை எடுத்துக் காட்டினார்.)

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடம் காட்டி விட்டுத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன். ‘‘பஞ்சாயத்து

எலெக்ஷன்ஸ்-இம்மீடியட்-43 நே. போட்டது'' இந்தக் கவர் அஞ்சல் தலை ஏதும் ஒட்டப்படாமல், ஒரு ஆளிடம் தரப்பட்டு அனுப்பப்பட்டது. செயலாளரால் 17 ஆம் தேதி கையொப்ப மிடப்பட்டது. பொதுவாகச் செயலாளர் கையொப்பமிட்ட பிறகு, இங்கேயிருந்து போஸ்ட் ஆவதற்கு எத்தனை நாளாகும் என்பது அனுபவப்பட்டவர்களுக்குத் தெரியும். ஆனால், இந்தக் கடிதம் 18 ஆம் தேதியே போகிறது. அதுவும் ஸ்டாம்பு இல்லாமல் ஒருவர் மூலமாகக் கொடுத்தனுப்பப்படுகிறது. இவ்வளவு அக்கறையோடு இந்தச் செயலில் ஈடுபடுவதற்கு என்ன காரணம் என்றால் 21 ஆம் தேதி துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே நாமினேட் மெம்பர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்துவிட வேண்டும். அந்தக் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றால்

"It is also clarified that if in any Panchayat Union, after the co-option/nomination of Members has been made, the very next meeting of the Council happens to be a meeting for the election of Vice-Chairman, even at such a meeting it will be open to any co-opted/nominated Member to take his oath of affirmation before the transaction of any other business at that meeting."

அதாவது நாமிநேஷன் செய்யப்பட்ட உறுப்பினர்களும் அல்லது கோ-ஆப்ட் செய்யப்பட்ட உறுப்பினர்களும், அதாவது உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களும்-அறிவிக்கப்பட்ட உடனே அடுத்து நடக்கும் ஒன்றியக் கூட்டத்தில் அந்தக் கூட்டம் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கப்படுகிற கூட்டமாக இருந்தாலும் கூட, அந்தக் கூட்டத்தில் மற்ற பிரச்சினைகளை எடுத்துக்கொள்வதற்கு முன்பாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் அவர்கள் வாக்களிக்க முடியும். ஒன்றியத் தலைவர் சொல்லுகிறார். ''அந்தக் கடிதம் எனக்கு வரவில்லை. அது கமிஷனரிடம் வந்து விட்டதால், அது என்னைக் கட்டுப்படுத்தாது'' என்று சொல்லுகிறார். உடனே கமிஷனர் என்ன செய்கிறார்? 18 ஆம் தேதியே ஒரு சுற்றறிக்கை அனுப்புகிறார். ''த்ரு சேர்மேன்'' என்று இருந்தாலும் இந்தக் கடிதம் கமிஷனரிடம் தரப்பட்டதால், இது என்னைக் கட்டுப்படுத்தாது'' என்று ஒன்றியத் தலைவர் சொன்ன உடனே,

ஆணையர் 18 ஆம் தேதியே ஒரு சுற்றறிக்கையை அனுப்புகிறார். அதாவது 21 ஆம் தேதி துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பு நாமினேஷன் செய்யப்பட்ட இந்த 4 பேர்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள் என்று சொல்கிறார். அதாவது

திரு. அரு. நாராயணன்

திருமதி. குப்பு

திருமதி பவுனு.

''மேற்கூறியவர்கள் 21-4-1986 அன்று ஒன்றியத் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்கள். இதற்கு அனைவரும் வருகை தரும்படி கேட்டுக் கொள்கிறேன்'' என்று கையொப்பமிட்டு ஆணையர் தன் பெயரைப் போட்டிருக்கிறார். அதாவது ஊராட்சி ஒன்றியம் ''திருவண்ணாமலை'' என்று அதிலே டைப் அடிக்கப் பட்டிருக்கிறது. அதாவது துரிஞ்சாபுரம் பஞ்சாயத்து யூனியன் ஆணையர், திருவண்ணாமலை பஞ்சாயத்து யூனியன் என்று டைப் செய்யப்பட்ட இடத்தில் கையொப்பமிட்டு அனுப்புகிறார். தவறுதலாக அடித்து விட்டார்கள். பொதுவாக என்னுடைய தனிச் செயலாளரை அழைத்துப் பேராசிரியருக்கு ஒரு கடிதம் டைப் செய்யச் சொன்னால், அவர் தவறிப் போய் ''கருணாநிதி'' என்றுதான் டைப் செய்வார். காரணம், பழக்க தோஷம். அதே போல இந்த ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை, என்று போட்டு இந்த அறிக்கையை அனுப்புகிறார். இன்னும் வேடிக்கை என்னவென்றால், திருத்த அறிக்கையை மறுநாள், அதாவது 18-4-1986 அன்று அனுப்பியிருக்கிறார். துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக 18-4-1986 தேதிய சுற்றறிக்கை எண் 18/86 என்பதில் கடைசியில், ''ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருவண்ணாமலை'' என்பதற்குப் பதிலாக ''ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், துரிஞ்சாபுரம்'' என்று திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு தெரிவித்துத் திருத்த அறிக்கை அனுப்பப்படுகிறது. இவ்வளவிற்கும் பிறகு தி.மு.க வேட்பாளர்களும், அ.தி.மு.க வேட்பாளர்களும் போட்டியிடு

கிறார்கள். முதலிலேயே சொன்னேன். 24,24 என்று இந்த நான்கு பேரும் சேர்க்கப்படுகிறார்கள். இதனால் எண்ணிக்கை 28 ஆகிறது. அ.தி.மு.க.தரப்பில் எண்ணிக்கை 28 ஆகிறது இவருக்கு 24 பேர். ஆனால் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, 3 வாக்குகள் செல்லாமல் போய் தி.மு.க. 27 வாக்குகளைப் பெற்று, அ.தி.மு.க 22 வாக்குகளைப் பெறுகிறது இவ்வளவு முயற்சிகளுக்குப் பிறகும்.

அதைப்போலவே கலசப்பாக்கம் ஒன்றியத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்; ஒருவரை நியமன உறுப்பினராக நியமித்திருக்கிறார். அவர் பெயர்-அணியாறு கிராமம் ஆறு முகத்தின் மகன் கண்ணாயிரம் என்பது. இதிலே விசித்திரம், வேடிக்கை என்னவென்றால், அவருடைய பெயர் வாக்காளர் பட்டியலிலேயே கிடையாது. வாக்காளர் பட்டியலில் இல்லாத ஒருவருடைய பெயரை மாவட்ட ஆட்சித் தலைவர் கலசப் பாக்கம் ஒன்றியத்தில் நாமிநேட்டெட் மெம்பராக அறிவித்திருக் கிறார். நான் ஒரு முக்கியமான வேறுபாட்டை, பாரபட்சத்தை இந்த அவையிலே எடுத்து விளக்குவது என்னுடைய ஜனநாயகக் கடமையென்று கருதுகிறேன்.

துரிஞ்சாபுரத்தில் நாமினேட்டெட் உறுப்பினரும், கோவாப்டெட் உறுப்பினரும் துணைத் தலைவர் தேர்தலுக்கு முன்பே பதவிப்பிரமாணம் செய்து ஓட்டுப்போட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. ஆனால், முசிறியில் நடந்தது என்ன? முசிறி யூனியனில் கோட்ட வளர்ச்சி அலுவலகத்தின் சார்பாகத் 'தேர்தல் அவசரம்' தலைப்பிட்டு ஓர் அறிக்கை அனுப்பப்படுகிறது. அந்த அறிக்கையில், ''மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமிக்கப்பட்டவர்களை ஒன்றியப் பெருந் தலைவரின் கவனத்திற்குப் கொண்டுவருவது ஆணையாளரின் பொறுப்பு. இவர்கள் துணைத்தலைவர் தேர்தலில் வாக்களிக்க உரிமையுண்டு'' என்று தெரிவித்திருக்கிறார்கள். கலெக்டரால் நியமனம் செய்தவர்களுக்குத் துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிக்க உரிமை உண்டு என்று சொல்லி, அதோடு நிறுத்தியிருந்தால், பரவாயில்லை. ஆனால் கடைசிப் பாராவில் ''ஒன்றியக் குழுவின் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டிய பெண், மற்றும் ஆதிதிராவிட உறுப்பினர்கள், துணைத் தலைவர்

பெருந்தலைவர் தேர்தல் முடிந்த பிறகுதான் நியமனம் செய்யப்பட வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக முறையில் கலெக்டரால் நியமனம் செய்யப்படுகிற உறுப்பினர்கள் துணைத்தலைவர் தேர்தலுக்கு முன்பே பதவிப் பிரமாணம் செய்யப்பட்டு, துணைத்தலைவர் தேர்தலில் அவர்கள் வாக்களிக்க வேண்டும். ஆனால், அதைவிட மேலாக ஒன்றியத்திலே உள்ள கவுன்சிலர்கள் எல்லாம் சேர்ந்து, நான்கைந்து பேரைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்றால், ஒன்றியக் குழுவின் மூலம் நியமனம் செய்யப்பட வேண்டிய பெண் மற்றும் ஆதிதிராவிட உறுப்பினர்கள், துணைத்தலைவர், பெருந்தலைவர் தேர்தல் நடந்து முடிந்த பிறகு நியமனம் செய்யப்பட வேண்டும்'' என்றும் ''அதற்கு முழுப் பொறுப்பு ஆணையாளரைச் சேர்ந்தது'' என்றும் முசிறி கோட்டாட்சி அலுவலர் சார்பிலே ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதன் நகல் மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சி அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இரண்டு மணிக்கு அவையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். அமைச்சர் அவர்கள் எவ்வளவு நேரம் பேசுவதாக இருக்கிறார்கள் என்பது தெரிந்தால், அதற்கேற்ப காலத்தை வகுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப.உ.சண்முகம்: ஒரு மணி நேரமாவது வேண்டுமென்று நினைக்கிறேன். இருந்தாலும் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் முடித்துக் கொள்கிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி: நம்முடைய அமைச்சர் அவர்கள் பேரவையில் 26-3-1986 அன்று ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்கள். அதாவது துணைத்தலைவர் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை நகராட்சித் தலைவருக்கு, ஒன்றியப் பெருந்தலைவருக்கு உண்டு என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த அறிவிப்பு அரசாணையாக மாறிச் சென்றதா என்றால், இல்லை. அப்படி அரசாணையாகச் செல்லாத காரணத்தால், அதிகாரிகள், ''அமைச்சர் அவையிலே எதை வேண்டுமானாலும் அறிவிப்பார்கள்''-இப்படியேதான் சொன்னார்கள்-'' அது

அரசாணையாக இந்தக் கைக்குக் கிடைக்காத வரையில், நாங்கள் அதை அமல்படுத்த இயலாது'' என்று சொன்னார்கள். ஆனால், அந்த அமைச்சர் அவர்கள் உறுதிமொழியை நம்பி விருதுநகரில் 2-4-1986இல் துணைத்தலைவர் தேர்தல் நடைபெற்றது. இங்கே 32 கவுன்சிலர்கள். தேர்தல் அன்று இரண்டு பேர்கள் அங்கே வரவில்லை இந்த 32 கவுன்சிலர்களில் அங்கே நகராட்சித் தேர்தல் நடைபெற்றபோதுகூட கூட்டு ஒன்று. இப்படி இரண்டு கூட்டு. அதுவும் அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும் என்று நினைக்கிறேன். இதிலே ஜனதா கட்சி 6, தி.மு.க. 2, இந்திரா காங்கிரஸ் 7. இந்த முறையில்கூட இப்படி ஒரு கூட்டு. அது ஏற்பட்டது. அ.தி.மு.க. 14 மற்றும் சுயேச்சை போட்டி காங்கிரஸ்காரர்கள் 3, இப்படி ஒரு நிலைமை. இந்த நிலைமையிலே துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ப.உ.சண்முகம் பேரவையிலே கொடுத்த உறுதிமொழியை நம்பிக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்கள் வாக்களிக்க முயன்றபோது, அங்கே இருந்த உறுப்பினர்கள் எல்லாம், யார் யார், எந்தெந்தக் கட்சி உறுப்பினர்கள் என்ற விவரங்களை, வேறுபாடுகளை நான் சொல்ல விரும்பவில்லை. அங்கே இருந்த நிலைமைகளைத்தான் சொல்ல விரும்புகிறேன்- ''தலைவருக்கு வோட்டளிக்க உரிமை இல்லை'' என்று சொன்னார்கள். தலைவர் அவர்கள் ''வோட்டளிக்க உரிமை இருக்கிறது'' என்றார்கள். ''உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையிலே தெரிவித்திருக்கின்றார்கள்.'' என்று சொன்னார்கள். ஆனால், ரெக்கார்ட் கிடையாது என்று சொல்லி விட்டார்கள். உடனே நகராட்சித் தலைவர் டைரக்டர் ஆஃப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன், டி.எம்.ஏ. அவர்களுக்கு டிரங்கால் போட்டு, மேலும் கேட்டார்கள். அவர்களாலே பதில் அளிக்கமுடியவில்லை என்கின்றார். அதற்குப் பிறகு தலைவர் அவர்கள் தன்னுடைய முதல் வோட்டைக்கூட போடாமல் இருந்துவிட்டார்கள், எப்படியும் நடப்பது நடக்கட்டும் என்று. தேர்தல் நடந்தது. இருவருக்கும் 15,15 வாக்குகள் கிடைத்தன. 15,15 வாக்குகள் என்று கிடைத்தவுடன் அவர்களே குலுக்கல் போட்டார்கள். ஜனதா கட்சிக்காரர் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதிலே இன்னொரு வேடிக்கை

என்னவென்றால், தலைவருக்கு முதல் வோட்டு மாத்திரமல்ல, இரண்டாவது வோட்டும் உண்டு என்று அறிக்கை வந்திருக்கிறது. அறிவித்தது ஏப்ரல் 1ஆம் தேதி 1986இல் வந்தது.

"For Commissioner and Secretary to Government" "through the Chairman"

என்று வந்தது. ஆடம்கான் என்ற அதிகாரி கையெழுத்திட் டிருக்கிறார்கள்.

தலைவர் முதல் வோட்டு போடுவது மாத்திரமல்ல, சமமான நிலை வருகிற நேரத்தில் கேஸ்டிங் வோட்' டைப் போட தலைவருக்கு உரிமையுண்டு என்று ஏப்ரல் 1 ஆம் தேதி ஒரு அறிக்கை போகிறது. ஒருவேளை ஏப்ரல் 1 ஆம் தேதியில் முட்டாளாக்குவதற்கு இந்த அறிக்கை அனுப்பியிருப்பதாகக்கூட யாரும் கருதிவிட்டார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அங்கே சீட்டுக் குலுக்கிப்போட்டு ஜனதாக் கட்சிக்காரர் துணைத்தலைவர் ஆகிவிட்டார். இல்லாவிட்டால் என்னவாகும்? அந்தத் தகவல் சரியான நேரத்தில் அனுப்பாததால், அந்தச் சோ்மேன் முதல் ஓட்டுப் போட்டு 16 ஆக ஆகாமல் சீட்டுக் குலுக்குகின்ற பிரச்சினை வந்திருக்கிறது. 15,15 என்று இருக்கும்போது காஸ்டிங் வோட்டைப் போடலாம் என்று கேட்டார்கள். இந்த அறிக்கை முன்னாலேயே அனுப்பப்பட்டிருந்தால், இந்தத் தகராறு வந்திருக்காது. இப்படி ஒரு குழப்பமான சூழ்நிலை இருந்திருக்காது. இன்றைக்கு அப்படி பல நடந்திருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டினேனே அல்லாமல் வேறல்ல.

இப்போது அம்மையார் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு அல்லது நகராட்சி மன்றங்களுக்குச் செல்வது குறித்துச் சொன்னார்கள். ஒரே இடத்தில் சமமாக அமராமல் நாற்காலி போட்டு உட்கார வேண்டும் என்று கேட்டார்கள். எனக்கு அதெல்லாம் பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை. ஆனால், சில இடங்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல் நேரத்திலே உள்ளே வந்தபோது, அப்போது சரிசமமாகப்

போட இயலாது என்றுதான் சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகச் சில தகராறுகள், கலவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. தேர்தல் நேரத்திலே முன் வரிசையில் அமர்ந்து, பார்வையாளராக இருக்கலாமா? அவர்களும் கமிஷனர்களுக்குப் பக்கத்தில், தலைவர்களுக்குப் பக்கத்தில் அமரக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. காஞ்சிபுரம் ஒன்றியத்தில் 23 பேர் தி.மு.க. உறுப்பினர்கள்; 17 பேர் அ.தி.மு.க உறுப்பினர்கள். தேர்தல் நடந்து, தி.மு.க. ஜெயித்திருக்கிறது. அந்த ஒன்றியத்தில் மேடையில் அமர வேண்டுமென்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சொன்ன தால், தலைவரும், கமிஷனரும் அவருக்கு எழுதிக்கொடுத் திருக்கிறார்கள்; தேர்தல் தவிர மற்ற சமயங்களில் அமரலாம் என்று...

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசிய பிறகு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு மணி நேரம் வேண்டுமென்று சொல்லு கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு விருப்பமானால், மாலை 4 மணிக்குப் பதிலுரையை வைத்துக் கொள்ளலாமா என்று அறிய விரும்புகிறேன்.

கலைஞர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே! பிற்பகல் 2.30 மணிக்குள் முடித்துக் கொள்ளலாம். அந்தக் கமிஷனரும், தலைவரும் அவருக்கு எழுதிக்கொடுத்திருக் கிறார்கள். ''தேர்தல் நேரத்திலே நீங்கள் வந்து அமர வேண்டாம், மற்ற நேரங்களில் வந்து அமரலாம்'' என்று எழுதிக் கொடுக்கிறார்கள். மறுநாள், கமிஷனர், திரு.கிருஷ்ணமூர்த்தி ஐயங்கார் சஸ்பென்ட் செய்யப்படுகிறார். ஏன் செய்யப்பட்டார், எதற்காகச் செய்யப்பட்டார் என்று சொல்லவில்லை. மறுநாள் இப்படி நடக்கிறது. மறுநாள் திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயங்கார் சஸ்பென்ட் செய்யப்படுகிறார். எனவேதான், இப்படி இடையிலே 10 ஆண்டுக்காலம் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய நன்மைகள் போய்ச் சேராமல் அல்லது செலவழிக்கப்படுகிற பணம், திட்டமிடுகிற பணம், அரசு நல்ல நோக்கத்தோடு செலவழிக்க வேண்டுமென்று எண்ணி இருந்தா லும், அறிஞர் அண்ணா அவர்கள் ஐஸ் கட்டி, பனிக்கட்டி கை

மாறினால் கடைசியில் கொஞ்சம்தான் மிஞ்சும் என்று சொன்னது போல, கிராம மக்களுக்கு, நகரமக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. யாரையும் குறிப்பிட்டுக் குற்றம்சாட்ட நான் விரும்பவில்லை. பொதுவாகச் சமுதாயப்பணியிலே அக்கறை யற்றவர்கள் சில பேர் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கும் அரசியல்வாதிகள்கூட எந்தக் காரணத்தில் ஈடுபட்டாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் சமுதாயத்திற்கு, மக்களுக்கு துரோகம் செய்யும் நிலையிலே நடந்து கொண்டிருக்கிறார்கள். ஒன்றை மாத்திரம் சொல்லி நான் முடிக்கிறேன். உதாரணமாக அச்சிரப் பாக்கத்தில் என்.ஆர்.இ.பி. ஸ்கீம்-அம்மையார் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள்-அது மத்திய அரசும், மாநில அரசும் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் தருகின்ற ஒரு திட்டம். இந்தத் திட்டத்திற்கு 1985-86இல் 4 பள்ளிக்கூடம், 10 சத்துணவுக் கூடம், ஒரு கிடங்கு 26 கிராவல் சாலை இவற்றை அமைப்ப தற்குக் கான்ட்ராக்ட் தரப்பட்டது. இப்படிப்பட்ட வேலைகளுக்கு முன்பணம் தருவதில்லை. ஆனால், முன்பணமாக 1,73,000 ரூபாய்-கேஷ்-தரப்பட்டது. 52,000 ரூபாய் மதிப்புள்ள அரிசி தரப்பட்டது. 1,56,000 ரூபாய் மதிப்புள்ள சிமெண்ட் தரப்பட்டது. ஆக மொத்தம் 3,81,500 ரூபாய் முன்பணம் தரப்பட்டது. ஆனால் எந்தப் பணியும் நடக்கவில்லை. கான்ட்ராக்டர் அந்தப் பணத்தை 1985-86இல் வாங்கினார். எந்தப் பணியும் நடக்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், ஒன்றியப் பொறுப்பை ஏற்றவுடன்- எந்தத் தலைவராக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர் என்று நான் பெருமைப்பட்டுச் சொல்லவில்லை. ஒன்றியத்தின் பெருந்தலைவர் பொறுப்பு ஏற்றவுடன் இது குறித்து ஆணையரைப் பலமுறை கேட்டார், சரியான பதில் வரவில்லை. பிறகு. டி.டி.சி. கூட்டத்தில், மாவட்ட வளர்ச்சிக் குழுக்கூட்டத்தில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர், நண்பர் மதுராந்தகம் ஆறுமுகம், எம்.எல்.ஏ. அவர்கள் இது குறித்து பேசியிருக்கிறார். அதற்குப் பிறகு 14-3-1986இல் அதாவது கடந்த ஆண்டு நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட வேலைக்கு, எந்த வேலையும் நடைபெறாத சூழ்நிலையில் மதுராந்தகம் ஆறுமுகம் டி.டி.சி கூட்டத்தில் சுட்டிக்காட்டிய பிறகு கலெக்டர்

நடவடிக்கை எடுக்கிறார். அதிகாரி, மாற்றப்படுகிறார். அப்படி மாற்றப்படும்போது, அதிகாரி என்ன செய்கிறார் என்றால் எம்.புக்-மெஷர்மென்ட் புக்-இருக்கிறதே, அதில் 20 பக்கங்களை 30-5-1985 என்று தேதியிட்டு வாங்கிக்கொண்டு, அதை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார். என்ன செய்து தப்பித்துக் கொள்ள முயற்சிப்பாரோ எனக்குத் தெரியாது. மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட நிலைமைகள் பல்வேறு இடங்களில் நடைபெறுவதை எண்ணிப் பார்த்து நான் யாரையும் குற்றம்சாட்டச் சொல்கிறேன் என்று எண்ணாமல், பொது நன்மைக்காக அதிகாரிகளாக இருந்தாலும், அரசியல்வாதிகளாக இருந்தாலும், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. இந்த ஆண்டு உரையில், 1986-87 ஆம் ஆண்டு உரையில், 6ஆம் பக்கத்தில் மயிலாடுதுறையில் தேர்தல் நிறுத்தப்பட்டு, மீண்டும் தடை நீக்கப்பட்டுவிட்டது, தடை நீக்கப்பட்டுவிட்ட காரணத்தால், உடனடியாகத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று நம்முடைய அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். 6 ஆம் பக்கத்தில் அது இருக்கிறது. ''மயிலாடுதுறை நகராட்சியில் நகர மன்றத் தலைவர் பதவிக்கும், நகரமன்ற உறுப்பினர் பதவிக்கும் நீதிமன்றம் விதித்த தடை நீக்கப்பட்டதும் தேர்தல் நடத்தப்படும்'' என்று கூறியிருக்கிறார்கள். தடை 2-4-1986இல் நீக்கப்பட்டுவிட்டது. ஆனால், நிலை என்ன தெரியுமா? அங்கேயுள்ள ஸ்பெஷல் ஆபீசருக்கு, கவுன்சிலைக் கூட்டு என்று சொல்லி, அறிவிப்புப் போயிருக்கிறது. ஏன்? 2 ஆம் தேதி தடை நீக்கப்பட்ட பிறகு உடனடியாகத் தேர்தலை மயிலாடுதுறையில் அறிவித்து, தேர்தலை நடத்தினால் என்ன? ஸ்பெஷல் ஆபீசர் கவுன்சிலைக் கூட்ட வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? மன்ற உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் காட்டியது போல, அம்மையார் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, ஆளும் கட்சியினரும் எடுத்துக் காட்டியதைப் போல, சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மூன்று மாநகராட்சிகளுக்கும் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும். நிதியமைச்சர் அவர்கள் நகராட்சிகளுக்கான தேர்தல்

நடந்து முடிந்த பிறகும்கூட, பாண்டிச்சேரியில் நிருபர்களிடம் பேசும்போது, மாநகராட்சிகளினுடைய தேர்தல் விரைவில் நடக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பின்பற்றி உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நினைத்தால், விரைவில் தேர்தலை நடத்த முடியும். உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இதிலும் சட்டத்தைத் திருத்துகிறேன் என்று சால்ஜாப்பு சொல்லமாட்டார் என்று நினைக்கிறேன். உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை அவர் அறிவித்தவாறு, தேர்தலை நடத்திப் புகழ்பெற்ற நிலையில் இந்த மூன்று மாநகராட்சிகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்தி மாபுகழ் பெறுக என்று கேட்டு அமைகிறேன்.

நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு

உரை : 47 **நாள் : 10.05.1986**

கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே! மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள இந்த நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் குறுகிய நேரத்தில் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சற்றொப்ப 3,400 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கான சட்டமுன்வடிவு இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி விவாதிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவாக இருக்கிறது என்பது மாத்திரமல்ல, இதிலே பல உறுப்பினர்களும், ஆளும்கட்சி சார்பிலேயும், எதிர்க்கட்சி சார்பிலேயும், கருத்துக்களை எடுத்துக்கூறுகின்ற வாய்ப்பும் இன்றைக்கு அனைவருக்கும் கிட்டவில்லை.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது யாரும் அதிகம் பேசுவதில்லை. அது அவர்களுக்கே தெரியும். எப்போதும் சாதாரணமாகப் பேசுபவர்கள் அப்படியே பேசினாலும் 5 நிமிடத்திற்கு மேல் யாரும் பேசுவதில்லை. நம்முடைய நிதிநிலை அறிக்கையின் மீது பேசு வதற்கு உறுப்பினர்களுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு சப்லிமெண்டரி பட்ஜெட்டில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிதிஒதுக்க மசோதா மீது யாரும் அதிகமாகப் பேசுவதில்லை. அதுவும் இன்றையதினம் மற்ற வர்கள் யாரும் பேசவில்லை. எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் தான் பேசுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குத் தேவையான நேரத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

கலைஞர் மு. கருணாநிதி: எப்படியோ முன்னாள் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த நானும், இந்நாள் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற நாவலர் அவர்களும் இந்த

நிதி ஒதுக்கீடு குறித்து விவாதித்து அதற்குரிய விளக்கங்களைப் பெறுகின்ற நிலையில் இந்த அவையில் நிகழ்ச்சிகள் அமைந் திருப்பது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியடையாவிட்டாலும், ஆறுதல் அடைகின்றேன். இந்த நிதி ஒதுக்கீடு எவ்வாறெல்லாம் உரிய முறையில் நோக்கங்களுக்கு ஏற்ப மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும், திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்துக்களை நான் இங்கே எடுத்துக்கூறுகிற நேரத்தில், கடந்த காலத்தில் எவ்வாறெல்லாம் இப்படி ஒதுக்கப்பட்ட நிதிகள் உரிய காரியங்களுக்கு அல்லது உரிய நேரத்தில் செலவழிக்கப் படவில்லை என்பதை எடுத்துக்காட்டவும் நான் கடமைப் பட்டிருக்கிறேன். முதல் கட்டமாக அண்மையிலே தமிழ் நாட்டில் குதிரைப்பந்தயம் ஒழிந்தது என்கின்ற ஒரு நல்ல செய்திக்குப் பிறகு, இந்த அவையில் நான் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே, அதுகுறித்து சில வார்த்தைகளை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

1974ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்காகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிலையில்,அது பேரவையிலே நிறைவேற்றப்பட்டு, அதற்குப்பிறகு குதிரைப் பந்தய சங்கத்தினர் உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, குதிரைப் பந்தய ஒழிப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகு, 1975இல் அவர்கள் உச்சநீதிமன்றத் திற்குச் சென்றார்கள். உச்சநீதிமன்றத்திலே அந்தக் குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்திற்கு ஒரு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அதன் காரணமாக மீண்டும் குதிரைப்பந்தயம் தமிழ்நாட்டிலே தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஆனால், ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக உச்ச நீதிமன்றத்திலே இருந்த அந்த வழக்கை விரைவுபடுத்துகின்ற முயற்சியிலே இந்த அரசு முற்படவில்லை என்பதையும், எனவேதான் குதிரைப்பந்தயம் ஒழிக்கப்படாமல் தொடர்ந்து நடைபெற்று வந்தது என்பதையும் நாட்டுமக்கள் மிக நன்றாக அறிவார்கள். அதற்குப் பிறகு திடீரென்று, நான் காரணங்களில் நுழைய விரும்பவில்லை- அரசாங்கம் குதிரைப் பந்தயத்தைத் தேசிய உடமை என்ற நிலையில் அரசாங்கமே ஏற்று நடத்துவது என்கின்ற முடிவை அறிவித்து, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் முனைப்பாக முடிவுற்று, அதன் பின்னர் 1975 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்திலே போய் இடைக்காலத் தடை உத்தரவை இந்தச்

சட்டத்திற்குப் பெற்றிருந்த குதிரைப்பந்தய சங்கத்தினர் அவர்களாகவே அந்த வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்ட காரணத்தால், பிறகு குதிரைப்பந்தயம் ஒழிந்திருக்கிறது. பேரவையிலே, சட்ட அமைச்சர் என்று கருதுகிறேன், அவர்கள் வைத்த அறிக்கையில், அண்ணா வழியில் நின்று குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுகிறது என்று கூறியிருந்தாலும், அண்ணா வழி நின்று குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிற முயற்சிகள் கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துக்கொள்ளப்படாமல் இருந்து, அரசாங்கமே அந்தப் பந்தயத்தை நடத்தலாம் என்ற கருத்துக்கும் ஆட்பட்டு, அந்த முயற்சியில் ஈடுபட்டுப் பிறகு, வழக்குத் தொடர்ந்தவர்களே தங்கள் வழக்கைத் திரும்பப்பெற்றுக் கொண்ட காரணத்தால்தான், குதிரைப்பந்தயம் ஒழிந்திருக்கிறது என்ற உண்மையை யாரும் மறைத்துவிட இயலாது.

அதுமட்டுமல்ல. இதிலே ஒரு வேதனை என்னவென்றால், வழக்குத் தொடர்ந்த குதிரைப்பந்தயச் சங்கத்தினர் தங்கள் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ள உச்சநீதிமன்றத்தை நாடியபோது, நம்முடைய மாநில அரசின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய திருவாளர் சாந்தி பூஷன் அவர்கள் எத்தகைய கருத்தை எடுத்துச்சொன்னார் என்பதை படிக்கும் போதுதான் எனக்கு வியப்பு ஏற்படுகிறது.

நியூஸ் டுடே என்கிற ஆங்கிலப் பத்திரிகையில் வந்த வாசகம் இது:

"Shanthi Bhushan, Senior Counsel who appeared for the state before the supreme court said the application for the withdrawal of 1975 appeal was not maintainable."

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அரசாங்கத் தின் தரப்பில் ஒரு கருத்து வழக்கில் எடுத்துக் குறிப்பிடும்போது, எந்த அளவுக்குக் குதிரைப்பந்தய ஒழிப்பில் இந்த அரசாங்கத் திற்கு ஒரு அக்கறையற்ற தன்மை இருந்தது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இதே உச்சநீதிமன்றம்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் பேருந்துகளையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று கொண்டுவந்த சட்டம் செல்லாது என்று

பேருந்துகளின் அதிபர்கள் வழக்குத் தொடுத்தபோது, அந்த வழக்கும் கடந்த 10 ஆண்டுக் காலமாக உச்சநீதி மன்றத்தில் இருந்து, அது விரைவுபடுத்தப்படாமல், ஆனால், இறுதியாக உச்சநீதிமன்றம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட பஸ்களைத் தேசிய மயமாக்கும் சட்டம் செல்லும்; இது ஒரு சமதர்மச் சட்டம் என்று அறிவித்தது. ஆனால், உச்சநீதிமன்றத்தினுடைய அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு ஆளும் கட்சி, தமிழக அரசு பஸ்களைத் தேசியமய மாக்கும் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தவில்லை என்பதையும் நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி அரசாங்கத்தின் சார்பாக அரசாங்கத்தின் சட்டம் அல்லது முடிவுகளைக் குறித்துச் சுப்ரீம் கோர்ட்-உச்ச நீதிமன்றம்- ஏற்றுக்கொண்ட நிலையில்கூட அவைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஏதோ தயக்கம் ஏற்பட்டு விடுகிறது.

இதற்கு மற்றொரு உதாரணம். ஸ்டீல் ரீ-ரோலிங் மில்ஸ் அரசாங்கத்திற்குத் தரவேண்டிய வரி ஏறத்தாழ ரூ.20 அல்லது 30 கோடி அளவுக்கு இருந்தது. அதை வசூலிக்க வேண்டும் என்று கழக ஆட்சிக் காலத்தில் கேட்டபோது, அதை எதிர்த்து அவர்கள் உச்சநீதிமன்றம் வரை சென்றார்கள். உச்சநீதி மன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால், ''கழக ஆட்சி கூறுவதைப்போல் அந்த வரி தரப்பட வேண்டிய ஒன்றுதான்'' இவ்வாறு ஸ்டீல் ரீ-ரோலிங் மில் சார்பாக வாதாடியபோது, உச்சநீதிமன்றம் தன்னுடைய முடிவை அறிவித்தது. அந்த முடிவை அரசாங்கம் தனக்குச் சாதகமாக எடுத்துக்கொள்ளாமல், அதற்கு மாறாக இந்த அரசு அந்த வரியை வஜா செய்து கொடுத்தது. அப்படி வரி வஜா செய்து கொடுக்கப்பட்டது ஏன் என்று பேரவையில் கணக்குக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த அருமை நண்பர் திரு.என்.எஸ்.வி. சித்தன்- இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கூட- தன்னுடைய கணக்குக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டிருக் கிறார். உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கிய பிறகும் அதை நடைமுறைப்படுத்தாமல் அரசு தயங்குவது ஏன் என்று அதிலே எழுப்பியிருந்தார். இவைகளை நான் சொல்வதற்குக் காரணம்

குதிரைப்பந்தய வழக்குத் திரும்பப் பெறப்பட்ட காரணத்தால் இன்றைக்கு அது தானாகவே ஒழிந்திருக்கிறது. ஆனால், உச்சநீதி மன்றம் அரசாங்கத்திற்குச் சாதகமாகப் பஸ் தேசியமயமாக்கும் கொள்கையிலும் ஏறத்தாழ 30 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய வரியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலையிலும் வழங்கப்பட்ட தீர்ப்புகளை இந்த அரசாங்கம் ஏற்று நடவடிக் கைகள் மேற்கொள்ளவில்லை என்ற என்னுடைய வருத்தத்தை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய கையில் இருப்பது report of the Conptroller and Auditor 1985 ஜூலை 23 ஆம் தேதி கையெழுத்திடப்பட்டு இந்த அவையில் இந்த ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் தேதி அன்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் குடிநீர் வாரியம் எந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கிறது என்பதைக் குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. இப்போது தமிழ் நாட்டிலே இருக்கின்ற வறட்சியைத் தீர்ப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து மாநாடு கூட்டி, இத்தனை கோடி ரூபாய் அதற்காகச் செலவிடப்படுகிறது என்று கூறிய செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம். இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவிலே கூட குடிநீருக்காக ரூபாய் 127 கோடி ஒதுக்கப்படுகிறது என்ற குறிப்பு இருப்பதை நாம் காண்கிறோம். அதனால்தான் இங்கே எடுத்துக்காட்டிய இந்த ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அறிக்கையில் குடிநீர்வாரியம் எப்படி செயல்படுகிறது என்பதைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980-81ஆம் ஆண்டு ஓப்பனிங் பேலன்ஸ் 4 கோடியே 44 இலட்சம் ரூபாய் குடிநீர் வாரியத்திலே இருந்தது. அரசாங்கம் 13 கோடியே 21 இலட்சம் ரூபாய் தருகிறது. ஆக மொத்தம் 1981ஆம் ஆண்டு 17 கோடியே 65 இலட்சம் ரூபாய். ஆனால், அந்த ஆண்டு குடிநீர் வாரியம் செலவழித்த தொகை ரூபாய் 7 கோடியே 43 இலட்சம்தான். அந்த ஆண்டு இறுதியில் மிச்சம் 10 கோடியே 22 இலட்சம் ரூபாய். அந்த பேலன்ஸோடு 1981-82 ஆம் ஆண்டு ஆரம்பம் ஆகிறது. அதாவது 10 கோடியே 22 இலட்சம் ரூபாயோடு 1981-82 ஆம் ஆண்டு தொடங்குகிறது. அப்போது அரசாங்கம் 18 கோடியே 91

இலட்சம் ரூபாய் குடிநீர் வாரியத்திற்கு வழங்குகிறது. ஆக மொத்தம் 29 கோடியே 13 இலட்சம் ரூபாய் ஆகிறது. மொத்தம் 29 கோடியே 13 இலட்சம் ரூபாய் கையில் இருந்தும், அந்த ஆண்டு குடிநீர் வாரியம் செலவழித்தது 6 கோடியே 30 இலட்சம் ரூபாய்தான். ஆகவே, அந்த ஆண்டு இறுதியில் மிச்சம் 22 கோடியே 82 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு இருந்தது. பிறகு 1982-83ஆம் ஆண்டு இந்த வாரியத்தின் ஓப்பனிங் பேலன்ஸ் 22 கோடியே 82 இலட்சம் ரூபாய். அரசு மேலும் 22 கோடியே 26 இலட்சம் ரூபாய் வழங்குகிறது. ஆக மொத்தம் கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் அந்த ஆண்டு இதிலே 1982-83 ஆம் ஆண்டு குடிநீர் வாரியம் செலவழித்தது 6 கோடியே 12 இலட்சம் ரூபாய்தான். அகவே, அந்த ஆண்டு இறுதியில் மிச்சம் 38 கோடியே 96 இலட்சம் ரூபாய்.

பிறகு 1983-84 ஆம் ஆண்டில் 38 கோடியே 96 இலட்சம் ரூபாய் ஓப்பனிங் பேலன்ஸோடு தொடங்குகிற குடிநீர் வாரியத்திற்கு அரசு 23 கோடியே 69 இலட்சம் ரூபாய் தருகிறது. இவை இரண்டையும் சேர்த்தால் மொத்தம் 64 கோடியே 65 இலட்சம் ரூபாய் வருகிறது. இங்கே விசித்திரம் என்னவென்றால் 64 கோடியே 65 இலட்சம் ரூபாயைக் கையில் வைத்துக் கொண்டு இந்த வாரியம் செலவழித்தது ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய்தான். ஆக 62 கோடியே 78 இலட்சம் ரூபாய் 1983-84 ஆம் ஆண்டில் மிச்சப்படுகிறது. 1980-81, 1981-82,1982-83, 1983-84 ஆகிய இந்த ஆண்டுகளில் மொத்தமாக இந்த வாரியத்திலே 80 கோடி ரூபாய் அதற்காகக் கொடுத்தும் கூட, ஓப்பனிங் பேலன்ஸ்ஸோடு 4 கோடி ரூபாய் சேர்த்து அரசு கொடுத்த பிறகு, செலவழிக்காமல் மிச்சம் இருப்பது 63 கோடி ரூபாய். ஆக இந்த 3 ஆண்டுகளுக்கு 17 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்படுகிறது. இந்த 80 கோடி ரூபாயில் இவ்வளவு செலவழித்திருக்கிறது என்று சொன்னால், இந்த வாரியம் எந்த அளவுக்கு விரைவாகச் செயல் பட்டிருக்கின்றது என்பதை நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. 1984,1985 ஆகிய ஆண்டுகளைப் பற்றி ஆய்வு அறிக்கை என்னிடத்திலே இல்லை. காரணம் ஆய்வறிக்கை கொடுக்க முடியாத காரணத்தினாலே மன்றத்திலே வைக்கப்படவும் இல்லை. இது குடிநீரைப் பொறுத்தவரையில்,

அது மாத்திரமல்ல, யூடிலைசேஷன் சர்டிபிகேட், இந்தப் போர்டின் சார்பாக ஒரு நற்சான்றிதழ் தருவது என்பது வாடிக்கை. பயன்படுத்தப்பட்டது இவ்வளவு ரூபாய் என்பதற்காக நற்சான்றிதழ் தருவது வாடிக்கை. எந்தெந்த ஆண்டுக்கு எவ்வளவு என்று கொடுக்க முடியாது நேரம் இல்லை என்பதாலே மொத்தமாகவே சொல்ல விரும்புகிறேன். 1982,1983,1984,1985 இந்த நான்கு ஆண்டுகளின் நிலைமை பற்றி எழுதுகின்றார்கள்.

It would be seen that an amount of Rs.27.57 crores not actually spent was certified as utilised by the Water Board.

2 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை செலவழிக்கப் படாமலேயே அது பயன்படுத்தப்பட்டது என்ற தவறான சான்றிதழ் தரப்பட்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். முடிவுரையாக இந்த ஆய்வறிக்கையிலே பக்கம் 67இல் சொல்லப்பட்டிருக்கின்றது.

Maintenance works were carried out without estimates; accounts of materials were not maintained expenditure was not recorded in proper registers; there was thus no control over materials and expenditure or maintenance works.

என்று போட்டு ஒரு அருமையான பாராட்டுரையை இந்த வாரியத்திற்கு இந்த ஆய்வறிக்கை தருகிறது என்பதை நான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதை என்னுடைய பெரும் கடமையாகக் கருதுகிறேன்.

அடுத்து, இந்த அறிக்கையிலே சத்துணவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. சத்துணவுத் திட்டம் ஆரம்பத்திலே அறிவிக்கப்பட்ட காலகட்டத்திலே அது நல்ல நோக்கத்திற்காக அறிவிக்கப்பட்டாலும்கூட இடையிலே அதிலே பல தவறுகள் விளைந்து,எங்கே போய் அந்தப் பயன் சேர வேண்டுமோ அங்கே போய்ச் சேரவேண்டும் என்ற முறையிலேதான் ஆலோசனைகள் சொல்லப்பட்டதே தவிர அந்த சத்துணவுத் திட்டம் அறவே தேவையில்லை என்ற கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வைக்கப்படவில்லை. சத்துணவுத் திட்டத்திலே என்னென்ன தவறுகள் எப்படி

எப்படியெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் சொல்லவில்லை. நிதிநிலை அறிக்கையின் மீது பேசும்போது நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள்கூட ஒன்றிரண்டு கருத்துக்களை இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். மேலும் சிலவற்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த ஆய்வறிக்கையிலே உள்ள குறிப்புகளைச் சொல்லிக்கொள்கிறேன். வட ஆற்காடு, சேலம், மதுரை, செங்கை, அண்ணா மாவட்டம் (செங்கை மாவட்டத்தை என்னுடைய கருத்தில் அண்ணா மாவட்டம்) ஆகிய இந்த 4 மாவட்டங்களிலும் ஆய்வு நடந்தது. இந்த 4 மாவட்டங்களில் மொத்தம் 829 மையங்கள் இருக்கின்றன. இந்த மையங்களில் 134 மையங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அந்த ஆய்வில் சாப்பிட்ட குழந்தைகளுடைய பதிவு எண்ணிக்கையைப் பார்க்கும்போது, 10 மாதகாலத்திற்குப் பார்க்கும்போது, ஒரு நாளைக்கு 100, மறுநாளைக்கு 400 என்று இப்படிப் பத்துமாத காலத்திற்கும் ஒரே மாதிரியான எண்ணிக்கை கிடைத்துள்ளது. ஒரே மாதிரி எண்ணிக்கை என்பதால் சந்தேகம் ஏற்பட்டது. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 1983இல் ஒன்றிய அதிகாரி ஒருவரை நியமித்து அதையொட்டிச் சுற்றிப்பார்த்து அறிக்கை தரச் சொல்லியிருக்கின்றார்கள். வருகை தந்த பிள்ளைகள் எண்ணிக்கையையும், சத்துணவுத் திட்டத்தில் சாப்பிட வருகின்ற பிள்ளைகள் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப்பார்த்துச் சோதனை நடத்தவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சேலம் மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் அதிகாரிகளுக்கு அவ்வாறு ஆணையிட்டி ருக்கின்றார்கள். அப்படிச் சென்று அங்கே சோதனை செய்யக் கிளம்பியவர்கள் அந்த அறிக்கையிலே தரப்பட்ட தகவல் ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் 79 முதல் 931 வரை குறைவான எண்ணிக்கை இருப்பது தெரிய வந்தது. பதிவேட்டிலே காட்டப்பட்ட எண்ணிக்கை 79 முதல் 931 வரை குறைவான எண்ணிக்கை இருப்பது தெரிய வந்தது.

மாண்புமிகு தலைவர் அவர்களே! இப்படி 20 ஒன்றியங் களைக் கூட்டிப்பார்த்தபோது 4,756 குழந்தைகள் அதிகமாகச் சாப்பிடுவதாகக் கணக்கு எழுதப்பட்டுள்ளது. ஆனால் சாப்பிட்டது 4,756 குழந்தைகள் அல்ல. யார் என்பது சோதனை இட்டவர்களுக்குத் தெரியும். அறிக்கையைப் படித்தவர்களுக்கும்

தெரியும். ஜூலை 1982 முதல் ஆகஸ்ட் 1983 வரை 20 ஒன்றியங்களிலே மாத்திரம் 8.94 இலட்சம் ரூபாய் அளவுக்கு தவறு நடைபெற்றிருக்கிறது. இந்தத்தவறை முறைகேடு என்றோ, விரயம் என்றோ, இடையிலே வந்தவர்கள் பயன்படுத்திக்கொண்டு குழந்தைகளை ஏமாற்றிவிட்டார்கள் என்றோ, எந்தப்பொருளிலே வேண்டுமானாலும் இங்கே உள்ளவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சரவர்களும் ஏற்றுக் கொள்ளலாம். ஆக 20 ஒன்றியங்களிலே இப்படி 8.94 இலட்சம் ரூபாய் ஏறத்தாழ 9 இலட்சம் ரூபாய் அளவுக்குத் தவறு நடைபெற்றிருந்தால், நான் நகரசபைகளை விட்டுவிடுகிறேன்- 380 ஒன்றியங்களில் கிட்டத்தட்ட 1.71 கோடி ரூபாய் அளவுக்குத் தவறு நடைபெற்றிருக்கிறது. சில ஒன்றியங்கள் ஒழுங்காகச் செயல்பட்டிருக்கலாமென்று 21 இலட்சத்தை விட்டுவிடலாம். எனவே 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் இன்றைக்கு இந்த ஆய்வறிக்கையின்படி தவறாகப் பிள்ளை களுடைய பட்டியலைக் காட்டிப் பணமாகவோ அல்லது உணவு வகைகளாகவோ திருடப்பட்டிருக்கிறது அல்லது இடையிலே உள்ளவர்களுக்குப் பயன்பட்டிருக்கிறது என்ற உண்மையை மறந்துவிட முடியாது. மற்றொன்று 292 மையங்களில் 4 மாவட்டங்களில் ஒரு குழந்தைக்கு 40 கிராம் காய்கறி என்று தருவதற்குப் பதிலாக அதில் பாதிகூட கொடுக்கவில்லை என்றும் பல இடங்களில் 5 கிராம் அளவுக்குத்தான் காய்கறி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த அறிக்கையில் 35ஆம் பக்கத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இதைப்போல ஒரு குழந்தைக்குப் புளி 90 கிராம்தான் தர வேண்டும். இது விதி; அப்படி ஏற்கெனவே ஆணை பிறப் பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு ஒன்றியத்திலே சோதனையிட்டபோது 90 கிராம் புளி தருவதற்குப் பதிலாக 1982 செப்டம்பர் மாதத்தில் 435 கிராம் புளியும், 1983 அக்டோபரில் 2232 கிராம் புளியும், 1983 மார்ச்சில் 480 கிராம் புளியும் தந்தார்களா என்றால் இல்லை. தந்ததாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது கணக்கு. அதைப்போல எண்ணெய். எண்ணெய் குழந்தைகளுக்கு அதிகமாகத் தரலாமா, அது குழந்தைகளுடைய ஆரோக்கியத்திற்குப் பொருந்தாது

என்று ஆராய்ச்சி நடைபெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள்-கலெக்டர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடிப் பேசி, அதற்குப் பிறகு அரசுத் தலைமைச் செயலாளர் மட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. 7 கிராம் எண்ணெய் தரத் தேவையில்லை, 4 கிராம் என்று அதைக் குறைத்துவிடலாம், 5 கிராம் தந்தால் போதும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அப்படி முடிவு எடுக்கப்பட்ட 1982 ஜூலை மாதம். ஆனால், அந்த முடிவு அரசு ஆணையாக என்றைக்கு உருவாகிறது என்றால் ஒரு வருடம் கழித்து எடுக்கப்பட்ட முடிவு உடனடியாக நிறை வேற்றப்படாமல், அரசு ஆணையாக உருப்பெறாமல், ஓராண்டு காலம் தாமதமாக, அரசு ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டது. இந்தக் காலதாமத்தின் காரணமாக அரசுக்கு இழப்பு 3 கோடியே 11 இலட்சம் ரூபாய் என்று அறிக்கை குறிப்பிடுகிறது. நான் மேலவையினுடைய துணைத் தலைவர்களின் அனுமதியோடு நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விவரத்தைத் தர விரும்புகிறேன்.

மணப்பாறை நகராட்சி மன்றத் தலைவர் எனக்கு அனுப்பியுள்ள ஒரு அறிக்கை இது. இது ஒருவேளை அரசாங் கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கலாம். நகல் என்று குறிப்பிட்டு எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது ‘‘7-4-1986இல் மணப்பாறை நகராட்சிப் பள்ளியில் சத்துணவை சோதனை செய்த ரிப்போர்ட் தங்களின் மேலான கவனத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எஸ்.எம்.கணேசன் நகரமன்றத் தலைவர், மணப்பாறை நகராட்சி’’ என்று இருக்கிறது. அதிலுள்ள கருத்துக்களை மாத்திரம் நிதி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்து, இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுக்க விரும்புகிறேன். ஏனென்றால் நல்லது நடக்க வேண்டுமென்பதற்காக.

7-4-1986 ஆம் தேதி, பகல் 12 மணி அளவில் நகராட்சி நடுநிலைப்பள்ளி சத்துணவுமைய அமைப்பாளர் திரு.எஸ். சந்திரன் மையத்தில் இல்லை. இது ஒரு குற்றச்சாட்டு. 267 மாணவ மாணவிகளுக்குச் சத்துணவு வழங்கப்பட்டது. உணவு உண்ண வரப்பெற்ற குழந்தைகள் பெரும்பாலோரிடம் தட்டுக்கள் இல்லை.

அவர்கள் தாங்களே கொண்டுவந்த பாத்திரங்களில் உணவைப் பெற்றுகொண்டார்கள். பிற்பகல் சரியாக 1.12 மணிக்குத்தான் அமைப்பாளர் சந்திரன் அந்த மையத்திற்கு வந்தார். ஆனால் வருகைப்பதிவேட்டைப் பார்வையிட்டதில் 350 மாணவ மாணவியர்களுக்குச் சத்துணவிற்காக உணவுப் பொருள்களை அவர் எடுத்திருக்கிறார். சாப்பிடுவதற்காகத் தரப்பட்டது 267 பேர்களுக்கு, ஆனால், சத்துணவை 350 மாணவ மாணவியர்களுக்காக அவர் எடுத்திருந்தார். இன்று, 7-4-1986ஆம் தேதி 267 மாணவ மாணவியர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்பட்டது. 350 பேர்களுக்கு உணவு எடுக்கப் பட்டு, 267 மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்கப்பட்ட பின்னர், அமைப்பாளரால் உணவு சமைக்க எடுத்துக்கொடுத்த கணக்கின்படி, 83 பேர்களுக்கு உணவு மீதம் இருக்கவேண்டும். ஆனால், உணவு எதுவும் மீதம் இல்லையென்று தெரிய வந்தது. அதற்குப் பிறகுதான் மிக முக்கியமானது 7ஆம் தேதி தினசரி வரவு செலவுக் கணக்குப்புத்தகம் ஆய்வு செய்யப்பட்டது. 1-4-1986இல் அலுவலகத்திலிருந்து, 1,800 ரூபாயை மதிய உணவு வகைக்காகத் திரு.சந்திரன் என்கிற அமைப்பாளர் பெற்றுள்ளார். மேற்படி தொகை ரூபாய் 1,850, 1-4-1986 அன்று வரவு வைக்கப்படவில்லை. அன்னவரால் பராமரிக்கப் பட்டு வரப்படும் வரவு செலவுக் கணக்குகளின்படி, 7-4-1986 அன்று ரூபாய் 532.50 கையிருப்பு இருக்க வேண்டும். ஆனால் மேற்படியாரிடம் ரொக்கம் ரூபாய் 102. 50 மட்டுமே இருப்பு இருந்தது. ரூபாய் 1,430 கைவசம் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை அவரே எழுதிக் கொடுக்கிறார், ‘‘7 ஆம் தேதி 12.30 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் என் மையத்தைப் பார்வையிட்ட போது, நான் மையத்திலே இல்லை. குழந்தைகளின் வருகையை வகுப்பில் சென்று குறிக்கவில்லை.’’

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: கூடுமானவரை எந்த அமைப்பாளருடைய பெயரையும் குறிப்பிடாமல்தான் பேசலாம். ஏனென்றால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது. அதிலே அமைப்பாளருடைய பெயர் போடப்பட்டிருக்கிறது. அது உண்மையோ தவறோ நமக்குத் தெரியாது. ஆகவே, குறைபாடு அவருடைய பெயருக்கு களங்கம்

விளைவிப்பதாக அமைகிறது. இந்த நிலையில் அவர் தன்னைத் தானே எப்படி காப்பாற்றிக் கொள்வது? அதற்குள் அது பத்திரிகையில் வந்துவிடும். அது உண்மையா தவறா என்பது நமக்குத் தெரியாது. ஆகவேதான் கூடுமானவரையில் பெயரைக் குறிப்பிடாமல் பேசுமாறு சொல்கிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிந்திருக்கும் என்பதால், நான் அதுபற்றி சொல்லத்தேவையில்லை. பெயரைக் குறிப்பிடாமல் அமைப்பாளர் என்று சொல்வதிலே தவறில்லை. ஏனென்றால் ஒருவருடைய பெயருக்குக் களங்கம் கற்பிக்கக்கூடிய வகையிலே ஒரு நிகழ்ச்சியை நாம் அவையிலே பேசக்கூடாது.

கலைஞர் மு. கருணாநிதி : மணப்பாறை நகராட்சிப் பள்ளியினுடைய சத்துணவு மையத்தின் அமைப்பாளர் மையத்தில் இல்லை. அவரே இதுபற்றிக் கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார். ''குழந்தைகளின் வருகையை வகுப்புகளுக்குச் சென்று குறிக்காமல் 350 குழந்தைகளுக்கு ரேஷன் கொடுத்துள்ளேன். அலுவலக வரவு ரூபாய் 1,850 கையிருப்பு ரூபாய் 102 வங்கியில் இருப்பது ரூபாய் 10. இன்று முடிய வரவு ரூபாய் 515.30 மீதி இருக்க வேண்டிய ரூபாய் 1,430 என் கையிருப்பில் இல்லை. இப்படிக்கு அமைப்பாளர்.' மேற்படி சொல்லி அதில் அவர் கையெழுத்தும் போட்டுள்ளார். அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் கூட கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். தங்களிடத்தில் காட்டி விட்டுத்தான் இங்கே படித்தேன். அதை நடவடிக்கை எடுப்பதற்காக நம்முடைய நிதியமைச்சரிடத்தில் கொடுக்கிறேன்.

(மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள்)

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அனுமதி கொடுத்ததில் ஒன்றும் தவறில்லை. உள்ளே இருப்பது பூராவையும் நான் படிக்கவில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கே தெரியும். அவர்கள் பெயரைச் சொல்லமாட்டார்கள் என்பதால் தான் அனுமதி கொடுத்தேன்.

கலைஞர் மு. கருணாநிதி : அடுத்து, மத்திய அரசு National Programme for control of blindness என்கின்ற

ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாநில அரசுக்கு உதவி செய்து வருகிறது. அப்போது செய்யப்பட்ட உதவி 1979 முதல் 1984 வரை பணமாகவும், பொருள்களாகவும் 62 லட்சம் ரூபாய் மாநில அரசுக்குத் தரப்பட்டது. ஆனால் 1979 முதல் 1984 வரை ஏறத்தாழ 4,5 ஆண்டுக் காலத்தில் தரப்பட்ட 62 லட்சம் ரூபாயில் இந்தத் திட்டத்திற்காக இந்த அரசு செலவழித்தது 7 லட்சம் ரூபாய்தான் என்பதை இந்த ஆய்வு அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. ஆக, மத்திய அரசு இந்த 'நேஷனல் புரோகிராம் பார் கண்ட்ரோல் ஆப் பிளைன்ட்னெஸ்' என்ற திட்டத்திற்காக ஒதுக்கிய தொகையில், 20 சதவிகிதத்தைத்தான் மாநில அரசு செலவிட்டிருக்கிறது என்று அரசு ஆய்வு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், மிகப்பெரு மளவுக்குச் செயலற்ற ஒரு தன்மை குறிப்பிட்டுக் காட்டப் பட்டிருக்கிறது. நான் இங்கே வெளியிடுவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

இன்னொன்று லட்சம், 10 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அளவில்கூட சேதாரம் ஏற்பட்டாலும், சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப்போல இந்த நிதி ஒதுக்கீடு பற்றிய சட்ட முன்வடிவின் மீது விவாதம் நடைபெறும்போது, அதை எடுத்துக்காட்டி, அந்தக் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று வாதாடுவதில் அல்லது சுட்டிக்காட்டுவதில் தவறில்லை என்று நான் கருதுகிறேன்.

1981 ஆம் ஆண்டு மதுரையில் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை என்ற பெயரால் ஆயிரம் கட்டுரைப் புத்தகங்கள் தனியார் அச்சகத்தில் ரூ.3.32 லட்சம் செலவில் அச்சடிக்கப்பட்டன. ஆனால், அந்தத் தனியார் அச்சகம், ஆயிரம் பிரதிகள் அச்சிட்டுத் தந்தது. 850 கட்டுரைப் பிரதிகள்தான் வந்தன. 150 வரவில்லை. அப்படி வராத அந்தக் கட்டுரைத்தாள்களின் மொத்த மதிப்பு 50ஆயிரம் ரூபாய். அது குறித்து, 31-1-1984 அன்று ஆய்வுப்படி, கூறுகிற குற்றச்சாட்டு ''வந்த 850 பிரதிகளிலும் 722 பிரதிகள் விற்பனையாகவில்லை. அப்படி விற்பனையாகாத பிரதிகளின் மதிப்பு 2.89 லட்ச ரூபாய்' என்று அதிலே சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

மாநாட்டுக்கு வந்திருக்கும் பிரதிநிதிகளுக்குப் பரிசு வழங்க ஆயிரம் பரிசுப் புத்தகங்கள் வழங்கினார்கள். ஆனால் அதில் உள்ள குறிப்பின்படி ''அப்படி வழங்கப்பட்ட புத்தகங் களைத் திருப்பிக் கொடுங்கள்'' என்று திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். வாங்கப்பட்ட புத்தகங்கள் தமிழா, ஆங்கிலமா என்று பார்க்காமல் வாங்கிவிட்டார்கள். வாங்கியபிறகு பார்த்தால், அது ஆங்கிலப் புத்தகங்கள். அதன் காரணத்தால், அவைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதிலே பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆய்வறிக்கை கூறுகிறது.

அந்த மாநாட்டில் காட்டுவதற்காகக் குமரிக்கண்டம் என்ற திரைப்படம் எடுக்கப்பட்டது. எத்தனை அடி என்று எனக்குத் தெரியாது. அதன்செலவு 9.25 லட்சம் ரூபாய். 11 பிரதிகள் எடுக்கப்பட்டன என்று கூறப்பட்டது. அதற்கு 1.20 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஆனால், ஒரே ஒரு பிரதிதான் போட்டுக்காட்டப்பட்டது என்று அந்த அறிக்கையில் கூறப் பட்டு, இது 'லார்ஜிலி அன் ஃப்ரூட்ஃபுல்' என்று அந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. இப்படிச் சேதாரம் இல்லாமல் அரசின் சார்பில் நல்ல நோக்கங்களுக்காக என்று சொல்லப்பட்டுச் செலவிடப்படுகிற தொகை, முறையாகச் செலவிடப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

மின்வாரியத்தைப் பொறுத்தவரையில், ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்கள், 1983-84 ஆம் ஆண்டு அளித்துள்ள அறிக்கையில், சொல்லியிருக்கிறார்கள், அதில் ஒன்றை மட்டும் சொல்கிறேன். பல இருக்கின்றன. ஒன்றை மட்டும் சொல்கிறேன். ''தெர்மல் பிளாண்ட்டின் சீஃப் இன்ஜினியர், தரமில்லாத நிலக்கரியை வாங்கிய காரணத்தால், 1982-83-ல் 19.7 கோடி ரூபாயும், 1983-84இல் இதே போன்று தரமில்லாத நிலக்கரி வாங்கியதால் 23.9 கோடி ரூபாயும் மின் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது என்று, ஆடிட்டர் ஜெனரல் தனது அறிக்கையில் தெரிவித்து, தரமில்லாத நிலக்கரியைப் பயன்படுத்தியதால் பாய்லர் கூட பழுதடைந்து போகின்றது, அவ்வாறு பழுதடைவதால் ஆகின்ற செலவுகள் எவ்வளவு என்ற கணக்கை

அந்தப் பொறியாளர் தெரிவிக்கவில்லை என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இப்படி கோடிக்கணக்கில், லட்சக்கணக்கில், ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படுகிற வகையில் நாம் இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக அரசின் சார்பாக ஒதுக்கப்படுகிற இந்தத் தொகை வீணாகச் செலவழிக்கப்பட்டு, நல்லமுறையில் பயன்படுத்தப்பட முடியாமல், யார் யார் பைகளுக்கோ போகிற நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இவைகளை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவில் ஒன்றை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். கிருஷ்ணா தண்ணீர் நம்முடைய சென்னை நகருக்கு மூன்றாண்டுக்காலத்தில் வரும் என்று 1983ஆம் ஆண்டு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஒரு அறிக்கையை வைத்தார்கள். 26-4-1983 அன்று அறிக்கையைப் படித்தார்கள். அந்த அறிக்கை படித்தபோது, கிருஷ்ணா தண்ணீர் கொண்டுவருவது என்பதைவிட, முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்னென்ன காரியங்களைச் செய்யவில்லை என்ற பட்டியல்தான் படித்துக்காட்டப்பட்டது. அந்த அறிக்கையின் மீது விவாதம் நடத்த வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அந்த விவாதத்திற்கு ஏற்பாடு செய்யப்படவே இல்லை. 18-4-1983 அன்று தமிழக அரசுக்கும் ஆந்திர அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி அறிக்கையில் இடம் பெறவில்லை. மேலும் முன்பிருந்த கழக அரசு 1973ஆம் ஆண்டு இருந்தபோது எடுத்த நடவடிக்கையை 1969இல் எடுத்திருந்தால், சென்னைக்குத் தண்ணீர் வந்தி ருக்கும் என்று அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் மூன்றாண்டு காலத்திற்குள்ளே கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்று சொன்ன உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. நான் அரசுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை, இன்னல்களை உணருகின்றேன். அதைப் போலவே வீராணம் திட்டம் நிறைவேறுவதற்கு இருந்த இடையூறுகளை, இன்னல்களை உணர்ந்து முன்பு பேசியிருந்தால், நலமாக இருந்திருக்கும், அதை உணராமல் ஏதோ வீராணம் திட்டம் பாழாய்ப்போன திட்டம் என்றெல்லாம்கூறிவிட்டு,

கூறிவிட்டு, ''நாங்கள் கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று கூறிவிட்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் அதன் முதல்கட்ட நிலையிலேயே இருக்கிறதென்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது, நாட்டுமக்கள், அதிலும் குறிப்பாகச் சென்னை மக்கள், வேதனைப்படாமல் இருக்க முடியாது. அப்போதே இதற்காகக்கூடிய செலவாக, ஆந்திரா எல்லைக்கு 384 கிலோமீட்டர் வாய்க்காலுக்கு 500 கோடி ரூபாயும், தமிழகத்திலே 50 கிலோமீட்டர் தூரத்திற்கு 236 கோடி ரூபாயும் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டது. தமிழக அரசு தமிழகத்திலே செலவழிக்கக்கூடிய 236 கோடி ரூபாய் அன்னியில் ஆந்திராவிலும் செலவழிக்ககூடிய 500 கோடி ரூபாயில் 200 கோடி ரூபாய் தரவேண்டுமென்றும் அப்போது தெரிவிக்கப் பட்டது. அப்போதே நான் கேட்டேன். 15 டி.எம்.சி. தண்ணீரைப் பெறக்கூடிய தமிழகம் மொத்தத்திலே 436 கோடி ரூபாயும், வழியிலே சுமார் 100 டி.எம்.சி. தண்ணீரைப் பாசனத்திற்காகப் பெறப்போகும் ஆந்திரா வெறும் 300 கோடி ரூபாய் செலவழிப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்டேன். அதற்கு அரசுத் தரப்பில் பதில் கூறப்படவில்லை.

ஒப்பந்தம் நிறைவேறிய பிறகு, சில நாட்களில் 30-4-1983இல் ஹைதராபாத்தில் மைய அரசின் மாண்புமிகு பாசன அமைச்சர் திரு.ராம் நிவாஸ் மித்ரா அவர்கள் தெலுங்கு கங்கை திட்டத்திற்காகத் திட்ட அறிக்கையை மத்தியஅரசு எதிர்நோக்கியுள்ளது, இந்தத் திட்டத்தைப் பற்றிய தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்க மத்தியஅரசு தமிழக அரசிடமிருந்தும் ஆந்திர அரசிடமிருந்தும் திட்டம் பற்றிய அறிக்கையை எதிர்நோக்கியுள்ளது என்று குறிப்பிட்டார். அறிக்கையை மத்திய அரசு மிகத்தீவிரமாகப் பரிசீலித்தபின், திட்டக்கமிஷனுக்கு அதன் ஒப்புதல் பெறவும், தேவையான நிதி உதவி வழங்கவும் அனுப்பும் என்றும் கூறினார். ஆனால், இதுவரையில் எதுவும் நடைபெறவில்லை. அதுமாத்திரம் அல்ல, இன்றைக்கு வேறுமாநில அமைச்சர்கள் இதிலே சில எதிர்ப்புகளைக் கிளப்புகிறார்கள். மத்திய அரசுகூட அதற்குத் தலையாட்டுவது போன்று இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது.

ஆனால், 25-5-1983 அன்று பலஇலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுச் சென்னையில் நடைபெற்ற பிரம்மாண்ட

மான விழாவில் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்களும், மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்களும் ஆந்திரா முதல் அமைச்சர் அவர்களும், கர்நாடக முதல் அமைச்சர் அவர்களும், மராட்டிய முதல் அமைச்சர் அவர் களும், தமிழக முதல் அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு, அன்றைக்கு ஆந்திரா முதல்வரிடத்திலே 30 கோடி ரூபாய்க்கான காசோலையும் தமிழக முதலமைச்சரால் தரப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகும் தரப்பட்டிருக்கின்ற கணக்கை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வளவுக்குப் பிறகும் அந்தத் திட்டம் ஒரு கேள்விக்குறியாக இன்றைக்கு இருப்பதற்கு என்ன காரணம்?

ஆந்திரா முதலமைச்சர் சமீபத்தில் தமிழகத்திற்கு வந்த போது கூட மதுரையில் நிருபர்களைச் சந்தித்தபோது தெலுங்கு கங்கை திட்டம் நிச்சயமாக நிறைவேறியே தீருமென்று குறிப் பிட்டிருக்கிறார்கள். சென்னைக்குத் தண்ணீர் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டிருப்பது எந்த அளவு சரியானது? அதற்காகத் தமிழக அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? இப்போது மூன்று மாநில அரசுகள் இதற்கு ஒத்துவராமல் இருப்பதற்குத் தமிழக அரசு தெரிவிக்கின்ற கண்டனம் என்ன? ஏன் இவற்றைப்பற்றி உரத்த குரலில் உரிமையோடு தமிழக அரசு பேசக்கூடாது? மத்திய அரசிடத்திலே ஏன் வாதிடக் கூடாது? இவைகளையெல்லாம் இந்த நேரத்திலே இந்த மன்றத்தின் சார்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.



நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு

உரை : 48 **நாள்: 05.05.1989**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! நிதிநிலை அறிக்கை இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு அதன் தொடர்பான பொது விவாதத்திற்கு பிறகு, தொடர்ந்து பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துவைத்து, இன்று நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவை மாமன்றத்திலே வைத்து, மன்ற உறுப்பினர்களுடைய ஒப்புத லைப் பெறுகின்ற வகையிலே நான் நின்று கொண்டிருக்கிறேன். இன்று வாக்கெடுப்பிற்கு விடப்படுகின்ற நிதி. ரூ. 4,414.85 கோடியாகும். மேலும் 986.67 கோடி சாட்டிய செலவு cared ஆகும். இந்த சாட்டிய செலவு என்பது வாக்கெடுப்பிற்கு விடப்படுகிற ஒன்று அல்ல. எனினும் இந்த இரண்டையும் சேர்த்து 1989-90 ஆம் ஆண்டிக்கு 5410.52 கோடிக்கான நிதி ஒதுக்கம் குறித்து இந்த மாமன்றத்தில் இன்று விவாதம் நடைபெறுகின்றது. நம்முடைய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே பேசும்போது 40 கோடி ரூபாய், 49 கோடி ரூபாய் என்று இந்த மாமன்றத்திலே ஆரம்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் இன்று 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கு வளர்ந்திருக்கிறது என்று பெருமைபடக் குறிப்பிட்டு, சரியாகவோ அல்லது வாய் தவறியோ ஒன்றைச் சொன்னார்கள். இப்படி நாட்டிலே நிதி ஆதாரங்கள் வளர்ந்தும் கூட நாடு முன்னேறி இருக்கிறதா என்று கேட்டார். நல்லவேளையாக மாநிலம் முன்னேறி இருக்கிறதா என்று கேட்கவில்லை. நாடு முன்னேறி இருக்கிறதா என்று அவர் கேட்டதை நான் மிகக் கூர்மையாகக் கவனித்து நெஞ்சிலே பதியவைத்துக்

கொண்டேன். (சிரிப்பு). இல்லை முன்னேறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி.)

எனக்கு மிக நன்றாக நினைவு இருக்கிறது. 1957 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நாங்க ளெல்லாம் இந்த மாமன்றத்திலே இடம்பெற்றபோது, நிதி அமைச்சராக இருந்த சி.சுப்பிரமணியம் அவர்கள் வரவு-செலவு திட்டத்தைப் படிக்கும்போது ஒன்றைக் குறிப்பிட் டார்கள். நான் இன்னும் ஒரு கோடி ரூபாயை இந்த வரவு-செலவு திட்டத்திலே சேர்த்திருந்தால் செஞ்சுரி அடித்திருப்பேன் என்று சொன்னார். 100 கோடியாக ஆகியிருக்கும் என்று சொன்னார். அப்படி 100 கோடியாக ஆகவில்லையே என்று வருத்தப்படுகிற அளவுக்கு இருந்த நிதிநிலை, நிதி ஒதுக்கீடு இன்றைக்கு ஐயாயிரம் கோடியாக வளர்ந்திருக்கிற நேரத்தில் நமக்கு மகிழ்ச்சியும் ஏற்படலாம். அதே நேரத்தில் பணத்தின் மதிப்பு எந்த அளவுக்குக் குறைந்துவிட்டது என்ற கணக்கையும் நாம் மறந்து விடுவதற்கில்லை.

எனவே இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவைப் பயன் படுத்திக்கொண்டு எல்லாக் கருத்துக்களையும் சொல்லலாம் என்ற மரபின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாக் கருத்துக்களையும் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதிலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.இராதா அவர்கள் கொஞ்சம்கூட இந்த நிதி ஒதுக்கீட்டிற்குள்ளே அடி எடுத்துவைக்கமாட்டேன் என்று சத்தியம் செய்துவிட்டு, சில பொதுவான கருத்துக்களைக் கூறலாம் என்ற மரப்பின் அடிப் படையிலே இங்கே கூறியிருக்கின்றார். நான் அவைகளுக் கெல்லாம் பிறகு பதில் சொல்ல விரும்புகிறேன்.

முதலிலே இங்கே வாதத்தை ஆரம்பித்து வைத்த நண்பர் உகம்சந்த் அவர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உள்ள தொகையை வாரியத்தின் மூலமாகச் செலவிடுவதற்குப் பதிலாக அதனை அரசுக்கணக்கிலே, வைப்புக் கணக்கிலே வைத்துவிடுவது தவறு அல்லவா என்று கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்.ஐ.சி. மூலம் கிடைத்த 18 கோடி ரூபாய் ஏன் இப்படிப் பயன் படுத்தப்பட்டது என்று அவர் எழுப்பிய வினாவிற்கு நான் தருகின்ற விளக்கம் இதுதான். அரசு வாரியங்கள், அவைகள் செய்கிற செலவு போக மீதம் உள்ள வரவுகளைக் கணக்கிட்டு

அரசு வைப்புக்கணக்கில் 'பப்ளிக் டெபாசிட் அக்கவுண்ட்'-அதிலே செலுத்த வேண்டுமென்ற ஆணை இன்று அல்ல நீண்ட நாட்களாகவே அமலில் இருந்து வருகிறது. பல்வேறு வாரியங்கள் இந்த தொகைகளை அரசு வைப்புக் கணக்கிலே வைத்து தேவைப்படும்போது பெற்றுக்கொள்கிறார்கள். டுவாட் நிறுவனமும் அவ்வாறு செய்கிறது என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். டுவாட் நிறுவனம் 1989 மார்ச் மாதம்தான் எல்.ஐ.சியிலே இருந்து 18 கோடியைக் கடனாகப் பெற்றது. அந்தத்தொகை ஏற்கெனவே உள்ள விதிமுறைப்படி முதலிலே அரசிடம் வைக்கப்பட்ட பின்னர் அவர்களுடைய தேவையின் அடிப்படையில் மார்ச் ஏப்ரல் இந்த மாதங்களிலே முழுவதும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதையும் நான் அவருக்கு விவரம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருக்குத் தவறான விவரம் தரப்பட்டிருக்குமானால் அதைத் திருத்திக் கொள்வார் என்றும் நான் நம்புகிறேன்.

நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தலைவர் ரமணி அவர்கள் சவுத் இந்தியா விஸ்கோஸ் கம்பெனிகளைப் பற்றி இங்கே சொல்லி அதிலே பட்டை உரிக்கப்பட்ட மரத்தினுடைய விலைகளையும் குறிப்பிட்டு-அது ஏற்கெனவே 275 ரூபாயாக இருக்கிறது-அந்தக் குறைந்த விலைக்கு தருவது நியாயமா என்று எல்லாம் கேட்டார்கள். அவர் அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்புவதற்கு முன்னாலேயே இந்த அரசு இது குறித்துச் சிந்தித்து ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் 275 ரூபாய் டன் ஒன்றுக்கு என்று இருந்த அந்த விலையை 500 ரூபாய் என்ற அளவிலே நிர்ணயித்து 29-3-1989-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் சுமார் 82 சதவீதம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

நம்முடைய நண்பர் லத்தீப் சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறுகின்ற அல்லது நடைபெற்ற, கடந்த காலத்தில் நடைபெற்ற சில முறைகேடுகளைப்பற்றியெல்லாம் இங்கே எடுத்துச்சொன்னார். அந்த முறைகேடுகளை வரிசைப்

படுத்த வேண்டுமேயானால், வேஸ்ட் பேப்பர் விற்றதிலே ஏற்பட்ட ஊழலிலிருந்து, சேலம் சௌடேஸ்வரி கல்லூரியிலே கையூட்டுப் பெற்றதாக உள்ள புகாரிலிருந்து, பரீட்சையிலே கொடுக்கப்படும் டம்மி நம்பர் கொடுத்து தன்னுடைய மக்கள் மூலம் மகன்கள் மூலமாக வெளிப்படுத்தி அதற்குப் பல்கலைக்கழக ஊழியரைப் பழிவாங்கியது உட்பட பல்வேறு விவகாரங்கள் அதிலே இருக்கின்றன. எனவேதான் சம்பந்தப் பட்டவர் அங்கிருந்து உடனடியாக மாற்றப்பட்டு இப்போது ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ரிஜிஸ்டராராக நியமிக்கப் பட்டு மேற் சொன்ன புகார்கள் எல்லாம் மிகத்தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தைப் பொறுத்தவரை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடியும்-ஆனால் ஏதோ மற்றவர்களைவிட இது பெருமை வாய்ந்தது என்று நான் கூறிக்கொள்வதற்காக அல்ல- கழக ஆட்சி முன்பு நடைபெற்றபோதும் சரி, இப்போதும் மன்ற நிகழ்ச்சிகள் நீண்டநாள் நடைபெறுகின்ற ஒரு மரபினை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம். இப்போதுகூட சபாநாயகருடைய அறைக்குச் சென்று அங்கு மாட்டப்பட்டு இருக்கின்ற அந்த பலகையைப் பார்த்தால், 52-57 ஆகிய இந்த 5 ஆண்டுகளில் 9 கூட்டத்தொடர்கள் நடைபெற்று 319 நாட்கள் அன்றைக்கு விவாதங்கள் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. 57- லிருந்து 62 இந்த 5 ஆண்டுகளில் 10 கூட்டத்தொடர்கள். 305 நாட்கள். 62-97-ல் 9 கூட்டத்தொடர் 252 நாட்கள். 67-71-ல் 9 கூட்டத்தொடர் 199 நாட்கள். 71-லிருந்து 76 வரை 14 கூட்டத்தொடர் 326 நாட்கள். அந்தப் பலகையிலே உள்ளத்திலேயே இதுதான் அதிகமான கணக்கு. 77-80-ல் 6 கூட்டத் தொடர் 176 நாட்கள். 80-84-ல் 9 கூட்டத்தொடர் 304 நாட்கள். 85 முதல் 88 வரை 6 கூட்டத்தொடர் 175 நாட்கள். எனவே விரிவாக விவாதிக்க வேண்டும், விளக்கமாகப் பேச வேண்டும். நாட்கள் அதிகமானாலும் பரவாயில்லை. கூட்டத்தொடர் அதிகமானாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தோடு அன்றும் சரி, இன்றும் சரி கழக அரசு மாண்புமிகு உறுப்பினர்களுடைய

மேலான கருத்துக்களைக் கேட்கவும், அந்தக் கருத்துக்களின் அடிப்படையிலே திருத்தங்களைச் செய்து கொள்ளவும், நிர்வாகத்தைச் செம்மைபடுத்திக் கொள்ளவும் தயாராக இருக்கிறது. முன்பும் இருந்தது என்பதை எடுத்துக்காட்டத்தான் இந்த கணக்கினை உங்கள் முன்னால் நான் எடுத்துச் சொன்னேன். கழக ஆட்சி இப்பொழுது தொடங்கிய பிறகு என்னென்ன செயல்பாடுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையெல்லாம் நான் இங்கே விரிவாக மீண்டும் ஒரு முறை கூற விரும்பவில்லை. ஏனென்றால் நிதிநிலை அறிக்கையிலும், தொடர்ந்து பல்வேறு மானியக்கோரிக்கை களிலும் இதைப்பற்றி நாம் விரிவாகக் கூறியிருக்கின்றோம் குறிப்பாக இன்றைக்கு நடைபெற்ற விவாதத்திலே கூட, மிக அதிகமாகப் பேசப்பட்ட பிரச்சினை வறட்சி நிவாரணப் பிரச்சினையாகும். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை அவை முன்னால் வைத்த நேரத்தில் மாநிலத்திலே நிலவி வருகின்ற வறட்சியைப் பற்றி நான் குறிப்பிட்டு துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக உடனடியாக மத்திய அரசிலிருந்து 25 கோடி ரூபாய் நிதி உதவி கோரியிருந்ததாக அறிவித்தேன். உடனடியாக முதல் கட்டமாக என்று அது அறிவிக்கப்பட்டது. 25 கோடி ரூபாய் போதுமா என்று கேட்டபோது கூட முதல் கட்டமாகக் கேட்டிருக்கிறோம். உடனடியாகக் கேட்டிருக்கிறோம் என்று நான் விளக்கம் அளித்திருக்கிறேன். பிறகு 16-4-1989 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மகாநாட்டில் வறட்சி நிலைமைகளைப் பற்றியும் எப்படியெல்லாம் நிவாரணங்களை அளிக்க வேண்டும் என்பதைப் பற்றியும் மிக விரிவாக நாங்கள் ஆராய்ந்தோம். மாநிலத்திலே உள்ள 17,275 கிராமங்களில், 9,438 கிராமங்கள்-170 வருவாய் வட்டங்களில், 135 வருவாய் வட்டங்களிலும் இந்தப் பாதிப்பு, வறட்சியின் பாதிப்பு இருப்பதாக அன்றைக்கு எங்களுக்குத் தகவல்கள் தரப்பட்டன. அதன் அடிப்படையில் ஏற்கெனவே 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவிலே அனுமதிக்கப்பட்ட குடிநீர் ஆழ்துளைக் கிணறுகள் தவிர, 11 கோடியே 32 இலட்சம் ரூபாய்

செலவிலே வேறு குடிநீர் நிவாரணத் திட்டங்களும் உடனடியாகத் துவக்கப்பட்ட வேண்டும் என்று ஆணையிடப் பட்டது. அதுபோக, வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மாநாட்டிலேயே 15 கோடி ரூபாய் செலவிலே புதிய பணிகள் தொடங்கப்படவேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்தப்பணமும், அந்த மாவட்டங் களுக்கு ஒதுக்கப்பட்டது.

அதன் பின்னர்-இங்கே கேட்டார்கள், உகம்சந்த் கேட்டார், இந்த வறட்சி பற்றி புள்ளி விவரங்கள் எடுத்தீர்களா? விவரங்கள் தயாரித்தீர்களா? மத்திய அரசிற்கு அனுப்பினீர்களா? மத்திய அரசினிடத்திலே தொடர்பு கொண்டிருக்கிறீர்களா என்று எல்லாம் கேட்டார்? இப்படிக் கேள்விகள் கேட்கப்பட வேண்டும். அப்படிக் கேட்டால்தான்,

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும்,''

என்ற வள்ளுவருடைய வாய்மொழிக்கொப்ப என்னதான் நல்ல அரசாக இருந்தாலும்கூட, இடித்துச் சொல்கின்றவர்கள் இருக்க வேண்டும். அந்த வகையிலே இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் நான் தருகின்ற பதில் இதுதான். வறட்சி நிவாரண ஆணையர் மற்றும் துறைத்தலைவர்கள் ஆகியோர் கலந்து பேசி பூர்வாங்கமான வறட்சி நிவாரணத்திட்டம் இப்போது தயாரிக்கப்பட்டு இருக்கிறது.

இந்தத் திட்டத்தின்படி மாவட்டங்களிலேயுள்ள குடிநீர்த் திட்டங்களுக்காக, 148 கோடியே 29 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்றும், சென்னை மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளின் குடிநீர்த் திட்டங்களுக்காக 14 கோடியே 40 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்றும், வேலை வாய்ப்புத் திட்டங்களுக்காக 36 கோடியே 99 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்றும், விவசாயிகளுக்கு மானியம் வழங்க, இந்த வறட்சி நிவாரணத்திற்கு சிறப்பு மானியம் வழங்க, 14 கோடியே 15 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்றும், குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் ஏற்கெனவே

உள்ள சத்துணவுத் திட்டம் அன்னியில், சிறப்பு சத்துணவு வழங்க 4 கோடியே 75 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்றும், பொதுச்சுகாதாரப் பணிகளுக்கு 2 கோடியே 50 இலட்சம் தேவைப்படுகிறது என்றும், கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்க 92 இலட்சம் ரூபாய் உடனடியாகத் தேவைப்படுகிறது என்றும், ஆக மொத்தம் 222 கோடி ரூபாய்க்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் நிதியுத வியும், மாநில அரசின் பங்கும் சேர்ந்து அந்த நிவாரணப் பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, அந்தத் திட்டத்தை நேற்றைய தினம் கூடிய அமைச்சரவைக் கூட்டத் திலே நீண்ட நேரம் விவாதித்து, அந்தத் திட்ட அறிக்கையை, 222 கோடி ரூபாய்க்கான திட்ட அறிக்கையை மத்திய அரசாங் கத்திடத்திலே நேராகக் கொண்டுபோய்த் தருவதற்காக நம் முடைய தலைமைச் செயலாளர் இன்று காலையிலே டெல்லிக் குச் சென்றிருக்கிறார் என்ற செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கூடுமானால், ஏற்கெனவே நேற்றைக்குச் சென்று இருக்கிற நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், தொடர்புடைய அமைச்சர்களைச் சந்தித்து இந்தத் திட்டம் பற்றி அவர்களிடத்திலே கலந்து பேசிவிட்டு வரக்கூடும் என்றும் நான் நம்புகின்றேன். அது மாத்திரமல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்திலே சொல்லப்பட்ட ஒரு பெரிய குறைபாடு- அந்த ''ரிக்ஸ்'' வாடகைகள் மிக அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலே அதிகமான வாடகை தந்ததன் மூலமாக, ஏராளமான செலவு, இந்தக் கிணறுகளை, ஆழ்துளைக்கிணறுகளைத் தோண்டுவதிலே ஏற்படுகிறது என்று எடுத்துரைத்ததன் காரணமாக அன்றைக்கே நாங்கள் ஒரு முடிவு எடுத்து, தலைமைச் செயலாளர், அந்த ''ரிக்ஸ்'' ஓனர்ஸ்- அவர்களை எல்லாம் அழைத்து, இந்த வாடகையை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறியதற்கு ஒப்ப, அவர், அவர்களை எல்லாம் அழைத்துப் பேசினார்.

முதலிலே கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளிகளாக, ஆறரை அங்குல விட்டமுள்ள 146 மில்லி மீட்டர் அகலத்திற்குக் குறைவாக ஆழ்துளை போட மீட்டர் ஒன்றிற்கு 160 ரூபாய் என்றும், நாலரை அங்குல விட்டமுள்ள ஆழ்துளை போட மீட்டர் ஒன்றிற்கு 120 ரூபாய் என்றும், குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளிகள் தரப்பட்டன. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தொகை மிக அதிகம் என்று கருதி, அவசர நிலையைக் கருதி அவர்கள் அதிகமாகக் கேட்டிருக்கக்கூடும் என்று சொன்ன கருத்தின் அடிப்படையில் தலைமைச் செயலாளர் பேசியதன் விளைவாக, ஆறரை அங்குல விட்டமுள்ள ஆழ்துளை போட மீட்டர் ஒன்றிற்கு 160 ரூபாயில் இருந்து 140 ரூபாயாகக் குறைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இதன் மூலம் அரசுக்கு கிட்டத்தட்ட 12.5 சதவீதம் முதல் 16.5 சதவீதம் வரை லாபம் கிடைக்கும் என்பதையும் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், பஞ்சாயத்துக்களை வலுப்படுத்துவது என்ற பெயரால் மாநில உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்ற கருத்தை மிக வேகமாக அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். அது குறித்து இன்றைக்கு டெல்லியில் நடைபெறுகின்ற மாநாட்டில் மாநில முதலமைச்சர்கள், மாநில முதலமைச்சர்கள் சார்பில் சென்று இருக்கின்ற பிரதிநிதிகள் கருத்துக்களை எடுத்துக்கூற இருக்கின்றார்கள். நாம் ஏற்கனவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்று கேட்டுக்கொண்டு இருக்கிறோம். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் எந்த அளவுக்கு தேவை? எப்படி எப்படி அவைகளை வகுத்துக்கொடுக்கலாம் என்பதற்காகத்தான் சர்க்காரியா கமிஷன் மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய்ந்து, பரிந்துரை செய்ய அமைக்கப்பட்டு, அதனுடைய பரிந்துரைகளும் அளிக்கப்பட்டுள்ளன. அதற்கிடையே மாநிலங்கள் அதிகாரம் கேட்கின்ற இந்த

காலகட்டத்தில் இருக்கின்ற அதிகாரங்கள் ஒவ்வொன்றாக எடுக்கப்படுகின்ற ஒருநிலைமையும் இருக்கின்றது. எனவே ஒவ்வொரு மாநிலமும் அது காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலமோ; அல்லாத மாநிலமோ எந்த மாநிலமாக இருந்தாலும் மாநில உரிமைகளுக்காக அவர்கள் குரல் கொடுத்தே தீர வேண்டும். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்களுடைய மாநாட்டிலே கூட, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாநில முதலமைச்சர்களே கூட அன்றைக்கு அந்தக்கூட்டத்தில் தங்கள் மாநில உரிமைக்காகக் குரல் கொடுத்த காட்சியை என்னால் காணமுடிந்தது. இந்த வரிகளைப் பற்றி விவாதம் எழுந்தபோது எப்படி காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் குரல் கொடுத்தார்களோ அதைப்போல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர்களும் அங்கே குரல் கொடுத்து இருக்கின்றார்கள்.

பண்டித ஜவகர்லால் நேருவினுடைய பெயரால் ஜவகர் திட்டம் என்று ஒன்றை ஆரம்பிக்கும்போது அதிலே முக்கிய குறிக்கோளாக ஊராட்சிகளை, உள்ளாட்சிகளை எல்லாம் கலைத்துவிடக்கூடாது என்று நம்முடைய பிரதமர், அன்பிற்குரிய ராஜீவ் அவர்கள் சொல்லுகிற நேரத்தில் உள்ளாட்சிகளைக் கலைத்துவிடுவதை விட, மாநில ஆட்சிகளையே கலைத்துவிடுகின்ற காரியங்கள் இன்றைக்கு வெகு வேகமாக நடைபெறுகிறதே என்று நம்மால் எண்ணாமல் இருக்கமுடியவில்லை. நான் இதை விரிவான அரசியல் விவாதத்திற்கு எடுத்துச் செல்ல விரும்பவில்லை. ஆனால், இதனால் இந்த மாநிலத்திற்கு பொருளாதார துறையில் ஏற்பட்டுஇருக்கிற இழப்பு என்ன என்பதை, இந்த மன்றத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டியது என்னுடைய கடமை ஆகும். கடந்த ஆண்டு வரை இருந்த வந்த என்.ஆர்.ஈ.பி. அதாவது தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம். இந்த 2 திட்டங்கள். இதற்குப் பதிலாக இப்போது மத்திய அரசு ஜவகர் திட்டம் அல்லது ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரால் ஒரு திட்டத்தை அறிவித்து, இந்த ஆண்டு முதல்

செயல்படும் என்று கூறுகிறார்கள். தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் செலவிலே சமபங்கு. ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உத்திரவாதத் திட்டமானது மத்திய அரசே முழுமையாக செலவினை ஏற்று மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டம் ஆகும். நடப்பு ஆண்டில் அறிவித்து இருக்கின்ற ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு எங்கிருந்து பணம் திரட்டப்படுகிறது என்பதை உறுப்பினர்கள் மிக கவனமாகத் தெரிந்து கொண்டாக வேண்டும். இப்போது ஒரு சர்-சார்ஜ் போட்டு இருக்கிறார்கள். வருமான வரியிலே சர்-சார்ஜ், இன்கம்டாக்ஸ் சர்-சார்ஜ். இன்கம்டாக்ஸ் அதை அதிகப்படுத்தினால், வருமானவரியை அதிகப்படுத்த அதிகப்படுத்த அதிலே வருகின்ற பங்குத் தொகை நேரடியாக மாநிலங்களுக்கு கிடைக்கும். அப்படி வருமானவரியை அதிகப்படுத்தாமல் வருமானவரிக்கு கூடுதல் வரி சர்-சார்ஜ் என்று போட்டு விட்டால், அந்த சர்-சார்ஜ் மூலமாக வருகின்ற தொகையிலே எள்ளளவு பங்கும் மாநிலங்களுக்குக் கிடைக்காது. வருமான வரியை உயர்த்தினால்தான் மாநிலங்களுக்குப் பங்கு கிடைக் கும். 10 சதவீதம் என்பதை 15 சதவிதம் என்று உயர்த்தினால், 15 சதவீதத்திலே மாநிலங்களுக்குப் பங்கு கிடைக்கும். அப்படி உயர்த்தாமல் 10 சதவீதத்திற்கு சர்-சார்ஜ் என்று போட்டால், அந்த சர்-சார்ஜ், அந்த கூடுதல் வரி மத்திய அரசுக்கு மாத்திரம்தான் கிடைக்கும். மாநில அரசுக்கு நிச்சயமாகக் கிடைக்காது. அந்தத் தந்திரத்தை வெகுவாக கையாண்டு வருமான வரிக்கு ஒரு சர்-சார்ஜ் போட்டு அதன் மூலமாக மத்திய அரசுக்கு 500 கோடி ரூபாய் இப்போது அதிகமாகக் கிடைக்கிறது. அந்த 500 கோடி ரூபாயைத்தான் ஜவகர் திட்டத்திலே இணைந்து இருக்கிறார்கள். அந்த ஜவகர் திட்டத்திலே சேருகிற அந்த 500 கோடி ரூபாயில் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய பங்கு கிடைக்கிறதா? இல்லை. மன்னிக்க வேண்டும். சென்ற ஆண்டு கிடைத்த அளவு பங்காவது கிடைக்கிறதா? அதுவுமில்லை. அதற்கு நான் தருகின்ற விவரம், நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசின் பங்காக கிடைக்க இருப்பது, மத்திய அரசின் பங்காக

மாத்திரம், மாநில அரசின் பங்கை நான் சொல்லவில்லை. மத்திய அரசின் பங்காக மாத்திரம் கிடைக்க இருப்பது 106.62 கோடி ரூபாய். கடந்த ஆண்டு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின் பெயரால் நம்முடைய மாநிலத் திற்கு ஒதுக்கப்பட்டது 98.94 கோடி ரூபாய். கடந்த ஆண்டு மத்திய அரசின் திருத்திய மதிப்பீட்டில் இரண்டு திட்டங் களுக்காக நாடு முழுதும் ஒதுக்கப்பட்ட தொகை 1,258.43 கோடி. இதில் தமிழ்நாட்டினுடைய பங்கு. கடந்த ஆண்டு 7.86 சதவீதமாகும். கடந்த ஆண்டு நாடு முழுதும் ஒதுக்கப்பட்ட 1,258 கோடியில் தமிழ்நாட்டினுடைய பங்கு 7.86 சதவீதமாக இருந்தது. ஆனால் நடப்பாண்டில் மத்திய அரசின் பங்காக ஒதுக்கப்படுவது 1,711 கோடியாகும். இதிலே தமிழ்நாட்டின் பங்கு 6.23 சதவீதம். இதை மறந்து விடக்கூடாது. கடந்த ஆண்டு 7.86 சதவீதமாகக் கிடைத்த நம்முடைய பங்கு இந்த ஆண்டு 6.23 சதவீதமாகக் கிடைக்கிறது. அதாவது 106 கோடி ரூபாய். தொகையைப் பார்த்தால் 98, 106 என்று, 8 கோடி அதிகமாகத் தெரியலாம். ஆனால் 7.86லேயிருந்து 6.23 தான் கிடைக்கிறது. ஒதுக்கப்பட்ட தொகையிலே விகிதாச்சாரம் பார்த்தால், கடந்த ஆண்டைப் போல 7.86 சதவீதம் அளவிற்கு அதேபோல ஒதுக்கியிருந்தால் 134.5 பங்கு கிடைத்து இருக்க வேண்டும். ஆனால் கிடைக்கவில்லை. எனவே 27.94 கோடி ரூபாய் நமக்குக் கூடுதலாகக் கிடைத்து இருக்க வேண்டிய பங்கு, கிடைக்கவில்லை. அந்த 27.94 கோடி ரூபாய் கிடைத் திருக்குமேயானல், இந்த வறட்சியான நேரத்தில் இந்த மாநிலத் திற்கு எவ்வளவோ பயனுடையதாக அது இருந்திருக்கும் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஊராட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டுமென்பதிலே எந்தவிதமான மாற்றுக்கருத்தோ, மறுப்புக்கருத்தோ நமக்கு என்றைக்கும் இருந்ததில்லை. ஆனால், இந்தத் தொகையை நேரடியாக டெல்லியிலேயிருந்து இங்கேயிருக்கிற சின்னஞ்சிறு கிராமங்களுக்கு அவர்கள்தான் அனுப்புவார்கள். இது முறைதானா என்பதை நாம் எண்ணிப்

பார்க்க வேண்டும். முன்பே, இந்தத் திட்டங்கள் என்கின்ற பெயரால் மத்திய அரசு இத்தகைய நிதிகளை ஒதுக்காமல், பஞ்சாயத்துக்களுக்கு என்று நகராட்சிகளுக்கு என்று அல்லது வேலைவாய்ப்புத் திட்டங்களுக்கென்று மாநில அரசை நம்பி அதனுடைய கையிலேதான் பணத்தைத் தரவேண்டும். மாநில அரசுதான் இந்தக் காரியங்களுக்கு அதை ஒதுக்கவேண்டும். அதற்கு மாறாக, இரண்டு திட்டங்கள் இதுவரையிலே இருந்தன- இப்போது திட்டங்களை ஒன்றாக இணைத்து ஜவகர் திட்டம் என்கின்ற பெயரால், பண்டித ஜவகர் அவர்கள் எந்த ஜனநாயகத்திற்காக அன்றைக்குக் குரல் கொடுத்தார்களோ, அந்த ஜனநாயகத்திற்கு முற்றிலும் விரோதமாக, நாங்களே நேரடியாகத் தொடர்பு கொள்கிறோம் என்றால், நான் கேட்க விரும்புகிறேன். டெல்லியிலேயிருந்து இங்கே நம்முடைய சின்ன ஊரிலே, குக்கிராமத்திலே இருக்கின்ற குப்பன், சுப்பன் இவர்களுடைய கண்ணீரைத் துடைக்க டெல்லியிலேயிருந்து கர்சீப்பை நீட்டுவது இயன்ற காரியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தியாவிலே எத்தனையோ கிராமங்கள்,குக்கிராமங்கள் இருக்கின்றன. அந்தந்த மாநில அரசுகள் அதிகாரங்களைப் பரவலாக ஆக்கி, அதன் மூலமாக இந்தக் காரியங்களைச் செய்யும்பொழுது ஏற்படுகின்ற பலன், இதன் மூலமாக ஏற்படாது என்பது நம்முடைய கருத்து. அது மாத்திரமல்ல, இந்தத் திட்டத்தின் மூலமாக 2,100 கோடி ரூபாய் என்று காட்டப்படுகிறது. மாநில அரசுகள் தருகின்ற பங்கையும் சேர்த்து, ஆனால் ஒதுக்கப்படுவது, மத்திய அரசின் சார்பாக 1,500 கோடிதான். அது சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஏறத்தாழ 27 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை நமக்குக் குறைகின்ற அளவிற்குத்தான்.

மத்திய நிதி, மத்திய நிதி என்றால் என்ன? நாம் எண்ணிக் கொண்டு இருக்கிறோம். ஏதோ டெல்லியிலே வசூலித்து, சென்னைக்கு, கல்கத்தாவிற்கு, பம்பாய்க்கு, ஐதராபாத்துக்கு, பெங்களூருக்கு இங்கேயெல்லாம் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று. அல்ல. நாமெல்லாம் தருகின்ற வரிப்பணத்தை அங்கே சேகரித்து பிறகு அனுப்பி வைக்

கிறார்கள்.அவ்வளவுதான். மத்திய நிதி, மத்திய நிதி என்றால் நம்முடைய நிதிதான். அவர்கள் வாங்கி நமக்குத் திருப்பி அனுப்புகிறார்கள்.

அதை விட்டுவிட்டு மத்திய நிதி, மத்திய நிதி என்பது அவர்கள் ஏதோ தந்துவிடுவது அல்ல. நான் இதைக் கூறுகின்ற காரணத்தால் மத்திய நிர்வாகமே கூடாது என்று சொல் கின்றவன் அல்ல. ஆனால் மாநிலங்கள் அதிக அதிகாரத்தைப் பெற்று, அதைப்போலவே அப்படிப் பெறுகின்ற காரணத்தால் மத்திய அரசு வலுப்பெற்று இருக்கவேண்டும் என்கின்ற மாநில சுயாட்சிக் கொள்கைக்கு நேர்மாறான காரியங்கள் நடப்பது கூடாது அதைத்தவிர்க்க வேண்டுமென்கின்ற கருத்தைத்தான் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் இவ்வளவு இடையூறுகளுக்கு ஊடேயும்கூட தொழில் துறை மானியத்திலே நான் பேசும்போது 236.8 கோடி ரூபாய்க்கான பத்து புதிய தொழிற்சாலைகளைப்பற்றி விளக்கம் அளித்திருக்கிறேன். ஒரு வாரப்பத்திரிகையிலேகூட திட்டங்கள் என்று ஏதோ இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு, ரிக்சாக்காரர்களுக்கு, ஆட்டோரிக்சா ஓட்டுகின்றவர்களுக்கு மாத்திரம் எம்.ஜி.ஆரைப் போலவே உதவிகளைச் செய்துவிட்டு பெரிய தொழிற்சாலைகளை நிறுவாமலே விட்டுவிடப்போகிறதா என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறது. ஒருவேளை நான் தொழில் மானியத்திலே பேசுவதற்கு முன்பு எழுதப்பட்ட தலையங்கமாக அது இருக்கலாம்.

நான் தொழில் துறை மானியத்திலே பேசும்போது இத்தனைப் பெரும் தொழிற்சாலைகளுக்கான திட்டங்கள் இந்த அரசால் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை, சற்றொப்ப 236 கோடி ரூபாய்க்கான திட்டங்களை அறிவித்திருக்கிறேன். அது அன்னியில் இந்த ஆண்டு டிட்கோ மூலமாக கூட்டுத்துறை யிலே மேலும் 224 கோடி ரூபாய்க்கான முதலீட்டில் 5 புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை அன்றைக்குத் தெரிவிக்

காததற்குக் காரணம் இது முற்றாக முடிவடையாத சூழ்நிலை இருந்த காரணத்தால் அன்றைக்கு தெரிவிக்கவில்லை. இன்றைக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே தெரிவித்திருக்கிற 236 கோடி ரூபாய்க்கான 10 புதிய தொழிற்சாலைகள், அவைகளை ஒட்டி மேலும் 5 புதிய தொழிற்சாலைகள் டிட்கோ மூலமாக கூட்டுத்துறையில் 224 கோடி ரூபாயிலே தொடங்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலே, பாதுகாப்புத்துறைக்கு தேவையான டங்ஸ்டன் மெட்டல் பௌடர் இன்றைக்கு வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்யப்படுகிறது. அது இந்தியாவிலே வேறு எங்கும் உற்பத்தி செய்யப்படவில்லை. நீண்ட நாளாகவே பாதுகாப்புத் துறையில் இப்படி ஒரு தொழிற்சாலை அமைக்கும் முயற்சி இருந்து வந்தது. இந்த முயற்சியிலே ஈடுபடும்படி சில மாநில அரசுகளுக்கு மத்தியஅரசு ஆலோசனை கூறியது. அதன் அடிப்படையில் தமிழ்நாடு டிட்கோ நிறுவனமும் தென் கொரியாவிலுள்ள கொரியன் மெட்டல் டங்ஸ்டன் கம்பெனியும் செய்து கொண்ட தொழில் நுட்ப ஒப்பந்தத்தின் அடிப்படையில் இப்போது தமிழ்நாட்டில் 45 கோடி ரூபாய் மூலதனத்தில் டங்ஸ்டன் மெட்டல் பௌடர் உற்பத்தித் தொழிற்சாலை இந்த ஆண்டு தொடங்கப்படும். அது அநேகமாக சிதம்பரனார் மாவட்டத்தில் அல்லது திருச்சி மாவட்டத்தில் தொடங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூருக்கு அருகில் குதிரைமொழித்தேரியில் இலுமனைட் என்ற மணலிலிருந்து டைட்டானியம் டையாக்சைடு தயாரிக்கும் தொழிற்சாலை. ஆண்டாண்டு காலமாகக் குவிந்து கிடக்கும் இயற்கைச் செல்வம் இலுமனைட் என்ற மணலிலிருந்து தொழில் நுண்ணறி வால் டைட்டானியம் டையாக்சைடு என்ற பொருளைப் பிரித்தெடுத்து அதை மூலப்பொருளாகக் கொண்டு வண்ணங்களைத் தயாரிக்கலாம். இப்போது டைட்டானியம் டையாக் சைடு தயாரிக்கும் தொழிற்சாலை இந்தியாவிலேயே இல்லை. இதற்கான தொழில் நுண்ணறிவை பின்லாந்து

நாட்டிலே உள்ள கெனிரா என்ற நிறுவனத்திடமிருந்தும் இங்கிலாந்திலே உள்ள டையாக்சைடு நிறுவனத்திடமிருந்தும் டிட்கோ பெறுகிறது. இந்த இரண்டு தொழில் நுண்ணறிவில் எது நம்முடைய தேவைக்குச் சிறந்ததாக கருதப்படுகிறதோ அதைத் தேர்ந்தெடுத்து அந்த நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத் துறையிலே தொழிற்சாலை நிறுவப்படும். இதற்கு 140 கோடி ரூபாய் மூலதனம், இந்த ஆண்டிலே பணிகள் தொடங்கும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ந்து இலுமனைட் தொழிற்சாலை தமிழ்நாட்டின் தென்பகுதியிலுள்ள கடற்கரை ஓரங்களில் அபூர்வமாகக் கிடைக்கக்கூடிய மணலிலிருந்து இலுமனைட் என்ற பொருளைப் பிரித்து எடுப்பதற்கு ஒரு தொழிற்சாலை நிறுவப்படவேண்டும் என்பது நீண்டநாள் திட்டம். இந்த விருப்பத்தை நிறைவுசெய்கின்ற வகையில் மத்திய அரசின் 'இந்தியன் ரேர் எர்த்' என்ற நிறுவனமும் டிட்கோவும் சேர்ந்து கூட்டுத்துறையில் 20 கோடி ரூபாய் மூலதனத்தில் இந்தத் தொழிற்சாலையை இந்த ஆண்டு திருச்செந்தூர் தாலுகாவில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாக்னசைட் தொழிற்சாலை 9 கோடி ரூபாய் மூலதனத் தில் உருவாகிறது. கெனக்டர் என்ற தொழிற்சாலை 10 கோடி ரூபாய் மூலதனத்தில் நிறைவேற்றுவதற்கு தொழில் நுண்ணறிவு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. இந்த இரண்டு தொழிற்சாலைகளும் இந்த ஆண்டிலே தொடங்குவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புதிய 5 திட்டங்களுக்கு மொத்த மூலதனம் 224 கோடி ரூபாய். தொழில்துறை மானியத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு முதலீடு 236 கோடி ரூபாய். ஆக மொத்தம் 460 கோடி ரூபாய்க்கான தொழில் திட்டங்களுக் கான அறிவிப்புகளை அன்றும், இன்றும் இந்த மன்றத்தில் நான் மிகுந்த மனநிறைவோடு வைத்திருக்கிறேன்.

அஃதன்னியில் மத்திய அரசினுடைய பொதுத்துறை நிறுவனமான மின்னணுவியல் தொழில் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சி நிறுவனம் மூலமாக வீடியோ கேஸட் ரிக்கார்டர்கள், வீடியோ கேஸட் ப்ளேயர்கள் தயாரிக்கிற ஒரு பெரிய தொழில்-டோகியோ என்ற ஜப்பானிய கம்பெனியினுடைய தொழில் நுட்ப உதவியோடு 10 இலட்சம் வீடியோ கேஸட் ரிக்கார்டர்கள் மற்றும் வீடியோ கேஸட் ப்ளேயர்கள் தயாரிக்கும் திட்டம்-இந்தத் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு 55 கோடி ரூபாயாகும். தமிழகத்தில் சென்னைக்கருகே இந்தத் தொழிற்சாலையை அமைக்க தமிழக அரசு மத்திய அரசிடம் தீவிரமாக முயன்று வருகிறது. இதற்காகத் தேவைப்படும் நிலம் 30 ஏக்கர். நேற்றைய தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் அந்தத் தொழிற்சாலைக்காக 30 ஏக்கர் நிலத்தை வழங்குவது என்றும், மறைமலைநகரிலோ, காக்கலூரிலோ, செம்பரம்பாக்கத்திலோ ஒரு இடத்தைத் தருவது என்றும் மின்னணுவியல் தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி நிறுவனம் இதில் எதை விரும்புகிறதோ அதைத் தருவது என்றும் அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிற்சாலை தமிழகத்தில் நிறுவப் படுமேயானால், 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பயன்படும். அந்த இடத்தைச் சுற்றிப் பல துணைத் தொழில்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகவும் அமையும் என்று எதிர்ப் பார்க்கப்படுகிறது. தமிழகத்திலே மத்திய அரசினுடைய முதல் பெரிய மின்னணுவியல் தொழிலாக இது அமையும் என்பதையும் நான் பூரிப்போடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையே மெட்டல் பாக்ஸைத் திறந்திருக்கிற இனிய செய்தி இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நண்பர் திரு.பூவராகன் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே உள்ள விருத்தாசலம் செராமிக்ஸ் பற்றி அன்றும் பேசினார். இன்றும் பேசி இருக்கிறார். விருத்தாசலத்தில் செராமிக்ஸின் இரண்டு யூனிட்டுகள் இருக்கின்றன. ஒன்று செராமிக்ஸ் தொழிற்சாலை, இன்னொன்று மெருகூட்டிய மண்ணால் செய்யக்கூடிய குழாய்த் தொழிற்சாலை. இதிலே பணிபுரிந்த

தொழிலாளர்களுக்குப் பணிக்கொடை மற்றும் ஊதியங்கள் கொடுக்கப்பட்டு அவர்கள் விலக்கப்பட்டு விட்டார்கள். செராமிக்ஸ் தொழிற்சாலைக் கட்டிடம் 24 சிறு தொழில்கூடங் களாகக் பிரிக்கப்பட்டு சிறு தொழில் தொடங்குவதற்கு அளிக்கப்படலாம் என்று ஒரு கருத்து உள்ளது. இந்தச் சிறு தொழிற்கூடங்கள் பீங்கான் உற்பத்தி செய்யும் கூடங்களாக அமையும், இந்த இடத்தில் முன்பு செராமிக்ஸ் தொழிற்சாலை யில் வேலைபார்த்த நபர்களின் எண்ணிக்கையைவிட அதிக மானபேர் வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மெருகூட்டிய மண்ணால் குழாய் செய்யக்கூடிய தொழிற்சாலையை மீண்டும் தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை இரண் டொரு நாளில் பிறப்பிக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய நண்பர் பூவராகன் அவர்களும் சொன்னார்கள்; மற்றவர்களும் பேசும்போது குறிப்பிட்டார்கள். கிட்டத்தட்ட இந்த அரசு பொறுப்பேற்ற 98,99 நாட்களில் முதலில் பொறுப்பேற்கும்போது மிகுந்த கவலையோடு கோட்டைக்குள்ளே நுழைந்த நாங்கள், காலியான கருவூலமும், களஞ்சியமும் என்ற நிலையில் நுழைந்த நாங்கள் இன்றைக்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக, ஐ.எம்.எப்.எஸ். மூலம் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதல் வருவாய் 130 கோடி ரூபாய் கிடைக்கும் என்று ஒரு நிலையை உருவாக்கி இருக் கிறோம். ஒரு மிருகக்காட்சி சாலை இடம், 40 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள ஒரு இடம், ஒன்றே முக்கால் கோடி ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டதை, இந்த அரசின் சொத்தை மீட்டுக் கொடுத்திருக்கிறோம். தண்டமுனி மோகன்ராவிடம் இருந்து மாமல்லபுரம், திருவிடந்தை, முட்டுக்காடு, வள்ளுவர் கோட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள 10 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள சொத்தை மீண்டும் அரசுக்கு மீட்டு இருக்கிறோம்.

டாமின் மீது நடவடிக்கை எடுத்து, ஏற்பட்ட 10 கோடி ரூபாய் இழப்பை இனி ஏற்படாத அளவுக்கு 10 கோடி மட்டு மல்ல; மேலும் 20 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கக்கூடிய

அளவுக்கு அந்தத் தொழிலை வளர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இதற்கிடையில் இன்னொரு செய்தியைச் சொல்லியாக வேண்டும். மால்கோ என்ற நிறுவனம் பற்றி உங்களுக் கெல்லாம் தெரியும். அந்த மால்கோ நிறுவனம் 1974 முதல் 1984 வரை தமிழ்நாடு மின்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்தவில்லை. அந்தக் கட்டணத்தையும் அபராதக் கட்டணத்தையும் சேர்த்து வசூலிக்க வேண்டும் என்று அன்றைக்கு இருந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டது. கட்டாய முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அந்த நிறுவனம்- மால்கோ நிறுவனம் அதை எதிர்த்து 1977-ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கு 1984-ல் முடிவுற்று உயர்நீதின்றம் தீர்ப்பு அளித்தது. என்ன தீர்ப்பு அளித்தது? என்ன தீர்ப்பு என்றால், 20 கோடி ரூபாய் அந்த நிறுவனம் மின்சாரவாரியத்திற்கு அரசு சார்புடைய மின்சார வாரியத்திற்குத் தரவேண்டும் என்று கட்டாயப் படுத்தப்பட்டது. முறையாகக் கட்டாயப்படுத்தப்பட்டது. உரியதொகை வரவேண்டுமென்பதற்காகக் கட்டாயப் படுத்தப்பட்டது. உடனே அந்த மால்கோ நிறுவனம் நீதிமன்றத் திற்குச் சென்றது. நீதிமன்றம் அளித்த தீர்ப்பு என்னவென்றால் 20 கோடி ரூபாயை மால்கோ நிறுவனம் கட்டவேண்டிய தில்லை. அதற்குப் பதிலாக அரசாங்க சார்புடைய இந்த எலெக்ட்ரிசிட்டி போர்ட், மின்சார வாரியம் மால்கோ நிறுவனத் திற்கு 42 கோடி ரூபாய் தரவேண்டும். இப்படி ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டது. 1984-ல் கேட்டு சென்றது ரூ.20 கோடி, வழங்கப்பட்ட தீர்ப்பு 20 கோடி ரூபாய்கூட கிடையாது அரசுக்கு. அரசுக்கும் கிடையாது. அதே போல மின்சார வாரியத்திற்கும் கிடையாது. அதற்கு மாறாக 42 கோடிரூபாய் மால்கோவுக்கு, இந்த நிறுவனத்திற்குத் தரவேண்டும் என்று அதாவது நம் மின்சார வாரியம் தரவேண்டுமென்று ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதை எதிர்த்து அரசாங்கம், மின்வாரியம் இந்த இரண்டு பேர்களும், இரண்டு பார்ட்டிகளாக உச்சநீதி மன்றத்திற்குச் சென்றார்கள். சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றார்கள். பழைய அரசு காலத்திலே நடந்ததைச் சொல்கிறேன்.உச்சநீதி

மன்றத்திற்குச் சென்றார்கள் மேல் முறையீட்டுக்கு உச்சநீதி மன்றத்தில் சென்று அப்பீல் செய்துகொண்ட அதே காலகட்டத் திலே மால்கோ நிறுவனத்தார் ஒரு ஸ்டே ஆர்டரையும் உச்ச நீதி மன்றத்திலே பெற்றுக்கொண்டார்கள். அப்படி அங்கே வழக்கு, நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, 1988-ஆம் ஆண்டு, இதைத்தான் கவனிக்க வேண்டும், 5-12-1988 அன்று ஒரு குழு அமைக்கப்பட்டது. கடந்த கால ஆட்சியிலே கடந்த கால ஆட்சி என்றால், 'அ.தி.மு.க' ஆட்சி அல்ல. அதற்கும் அடுத்த ஆட்சியிலே, அது உங்களுக்குச் சந்தோஷமாக இருக்கும் என்று நினைக்கிறேன், ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஒரு முடிவெடுத்தது. என்ன முடிவு என்றால், நாமும் மால்கோவிடம் 20 கோடி ரூபாய் கேட்க வேண்டாம். அவர்களும் நம்மிடத்திலே 42 கோடி ரூபாய் கேட்க வேண்டாம். வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லி ஒரு முடிவெடுக்கப்பட்டது. அந்த முடிவினையொட்டி ஒரு அக்ரிமெண்ட், ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்திய-இலங்கை ஒப்பந்தம் போல. (சிரிப்பு) சிரிக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானதை அந்த ஒப்பந்தம் என்றைக்கு கையெழுத்து ஆகிறது தெரியுமா? என்ன ஒப்பந்தம் தெரியுமா? அவர்களும் 42 கோடி கேட்கக்கூடாது. நாமும் 20 கோடி கேட்கக்கூடாது. நாம் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கின்ற அப்பீலை வாபஸ் வாங்கிக்கொள்வோம் என்று மால்கோ நிறுவனத்திற்கு இந்த இராமகிருஷ்ணன் சார்பாக, இராமகிருஷ்ணன் யார் என்று தெரியும், மத்திய அமைச்சர் பிரபு அவர்களுடைய தந்தையார். அவர் சார்பாக ஒரு கையெழுத்து, அதைப்போல எலக்ட்ரிசிடி போர்டு சார்பாக ஒரு கையெழுத்துப் போடப்பட்டது. இது நடைபெற்றது என்றைக்குத் தெரியுமா? தமிழ்நாடு வாக்காளப் பெருமக்கள் எல்லாம் 21-ஆம் தேதி வாக்குச் சாவடிக்கு செல்கிறார்கள். 20-ஆம் தேதி அந்த ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. 21-ஆம் தேதி வரை காத்திருக்க யாராலும் இயலவில்லை. எல்லாவற்றிற்கும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பாப்புலர் கவர்ன்மென்ட் வரட்டும், வரட்டும் என்று சொல்லிக் கொண்டிருந்த நிலைமாறி இதிலே மாத்திரம் பாப்புலர் கவர்ன்மென்ட் பற்றிக் கவலைப் படாமல் 21-ஆம் தேதி வாக்குப்பதிவு என்றால், 20-ஆம்

தேதி எலெக்ட்ரிசிட்டி போர்டு, இப்படிப்பட்ட ஒரு சமரசத்தை செய்துகொண்டு, அந்த மால்கோ நிறுவனத்தோடு கையெழுத்துப் போட்டுவிடுகிறார்கள். போட்டுவிட்ட பிறகு இப்போது நிலைமை என்ன? எல்லா பழிகளும் நம் தலை யிலேதானே. நாம் வந்து விட்டோம். அவர்கள், அவர்களே வரப்போவதாக நினைத்து ஒப்பந்தம் எல்லாம் செய்து கொண்டார்கள். நாம் வந்து தொலைந்தோமா (சிரிப்பு) வந்த வுடனேயே மால்கோ நிறுவனம் அரசாங்கம் போட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டுமென்று சொல்லி உச்ச நீதிமன்றத்திலே போய் வாபஸ் வாங்கக் கேட்டார்கள். இப்போது உச்சநீதி மன்றம் எங்களைக் கேட்கிறது. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? அரசாங்கத்தினுடைய நிலை என்ன? நீங்கள் வழக்காடப்போகிறீர்களா அல்லது எலெக்ட்ரிசிடி போட்டிருக்கின்ற ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா என்று? இதற்காகவே நேற்று அமைச்சரவை கூடி நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். என்னவானாலும் சரி (மேசையைத் தட்டும் ஒலி) வழக்காடுவது என்று முடிவெடுத்திருக்கிறோம்.

உறுப்பினர் பூவராகன் அவர்கள் சொன்னதுபோல ஒரு சல்லி காசுகூட வீண் ஆகாமல் விரையம் ஆகாமல் பார்த்துக் கொள்கின்ற நிலைமையிலேதான் இந்த அரசு யாருக்கும் பயப்படாமல், இதனாலே என்ன ஆகுமோ என்ன விளைவுகள் ஏற்படுமோ என்றெல்லாம் கவலைப்படாமல் முடிவு செய் கிறோம். இது ஏழைகளுக்காக இருக்கிற அரசு; பிரபுக்களுக்காக இருக்கிற அரசல்ல. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) எனவே அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், இந்த முடிவை இந்த அரசு எடுத்திருக்கிறது.

இந்த அரசு பொறுப்புக்கு வருவதற்கு முன்பு பழி வாங்கப்பட்ட பல தொழிலாளர்களைப் பற்றியும், அலுவலர் களைப் பற்றியும், ஆசிரியர்களைப் பற்றியும் இந்த மாமன்றத் திலே எல்லா சார்பான உறுப்பினர்களும் எடுத்துச்சொல்லி, அதிலும் குறிப்பாக அதற்காகக் குரல் கொடுத்த நம்முடைய திரு. ரமணி போன்றவர்களுடைய குரல்களுக்கு எல்லாம் மதிப்பளித்து, ஏனென்றால் அந்தக் குரலுக்கும், எங்களுடைய குரலுக்கும் உறவு உண்டு என்ற காரணத்தால், அது வேறுபட்ட

குரல் அல்ல தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் என்று எண்ணுகின்ற காரணத்தால், பொதுவாக எதிர்க்கட்சிகளில் உள்ள தலைவர்கள் அத்தனைபேர்களுடைய குரல்களுக்கும் மதிப்பளித்து பலர் மீது போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அரசாங்கத்திற்கு, வழக்குகள் நடந்தபோது லட்சக்கணக்கான ரூபாய் செலவானாலும், அவற்றினுடைய முடிவைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணமில்லாமல், திரும்பப்பெறப்பட்டன. பாரத் பந்த் போராட்டத்தில் பங்கு பெற்று, அதன் காரணமாக வழக்குகளில் சிக்கியிருந்த 811 பேர் 75 வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். 427 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 5,409 பேர் விடுவிடுக்கப்பட்டார்கள். ஜாக்டீ அமைப்பின் சார்பில் போராட்டத்தில் ஈடுபட்டு, 16 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 226 பேர் விடுவிக்கப்பட்டார்கள். நண்பர் நெடுமாறன் அவர்களும், திரு. நல்லசிவன் அவர்களும் அவர்கள் தலைமையிலே கலந்து கொண்ட 19 பேர் மீதும் போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. ஆக மொத்தம் 521 வழக்குகள் சம்பந்தப்பட்ட 6,590 பேர் அந்த வழக்குகளிலே இருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் என்னுடைய பேச்சை முடிப்பதற்குள்ளாக இந்த அரசினுடைய நிர்வாகத்தினுடைய விறுவிறுப்பு, சுறுசுறுப்பு மேலும் பன்மடங்கு பெருக வேண்டுமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறவன் நான் என்பதை நீங்களும் அறிவீர்கள். அரசின் அலுவலர்களும் மிக நன்றாக அறிவார்கள். கடந்த ஒரு மாத காலமாக நீங்கள் பார்க்கின்றீர்கள், கையிலே முறையீட்டுப் பத்திரங்களை ஏந்திக்கொண்டு எத்தனை தாய்மார்கள், பெரியோர்கள், வாலிபர்கள் அவரவர்களுடைய கோரிக்கைகளோடு இந்தக் கோட்டையைச் சுற்றி நிற்கிறார்கள் என்பதை. இதுவரையிலே 2 அல்லது 2½ லட்சத்திற்கு மேற்பட்ட மனுக்களை நான் பெற்றிருக்கிறேன். மேலும் நம்முடைய அமைச்சர்கள் பெற்றிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, குறைகளைப் போக்குவதற்கு இங்கே தலைமையிடத்திலே

மாத்திரமில்லை. ஆங்காங்கே மாவட்டங்களிலேகூட, வட்டங்களிலும் கூட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அவர்களுக்கெல்லாம் எடுத்துக்கூறப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் குறைகள் அரசுக்குத் தெரிவிக்க எண்ணுகிற நேரத்தில், எப்படி அந்தக் கோரிக்கைகளைச் கொடுப்பது, யாரை அணுகுவது என்றுகூடத் தெரியாது தவிக்கும் நிலைமைகள் இருப்பதை நாம் நன்றாக உணரமுடியும். எனவேதான் அரசு அலுவலகங்களில் சில வரையரைகளைக் கையாள வேண்டுமென்று எண்ணி, ஒவ்வொரு அலுவலகமும் பொதுமக்கள் என்னென்ன விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்று தெளிவாக எழுதி, நோட்டீஸ் போர்டிலே ஒட்ட வேண்டும். அந்த அறிவிப்பு விளக்கங்கள் மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே இருந்திட வேண்டும். மேலும் அந்த அறிவிப்புப்பலகையில் உள்ள விவரங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கும் மனுக்கள்மீது அரசு அலுலர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் முடிவு எடுத்து ஆணை பிறப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட வேண்டும். உதாரணமாக பட்டா மாறுதல் செய்ய ஒருவர் மனு தருகிறார் என்றால், விளம்பரப் பலகையிலே மனுதாரர் நிலம் வாங்கியதற்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவணம்; நிலம் விற்றவருக்கு நிலத்தை விற்க பாத்தியதை உண்டு என்பதற்கான ஆதார ஆவணம்; பட்டா அதுவரையில் யார் பெயரில் இருக்கிறதோ அவருக்கும் விற்றவர்க்கும் உள்ள தொடர்பைக்காட்டக்கூடிய ஆவணம் ஆகியவைகளோடு விண்ணப்பிக்க வேண்டுமென்று எழுதி வைத்திருக்க வேண்டும். இந்த ஆதாரங்களோடு அவர்கள் விண்ணப்பம் செய்வார்களானால் அதன் பேரில் 10 நாட்களுக்குள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு வங்கிகளில் கடன் வாங்கச் செல்பவர்களானாலும் சிறு தொழில் தொடங்க கடன் வாங்கச் செல்பவர்களானாலும் அவர்கள் மாதக் கணக்கிலே நடந்து, நடந்து அலைகின்ற நிலைமாற இந்த அரசானது அனைத்து முயற்சிகளையும், மேற்கொண்டிருக்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், எந்த ஒரு

அதிகாரியிடமும் 3 நாட்களுக்குமேல் கோப்புகள் தங்கக் கூடாது (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆணை அதிகாரிகளுக்கு மட்டுமல்ல, அமைச்சர்களுக்கும் பொருந்தும் (பலத்த மேசையை தட்டும் ஒலி) அமைச்சர்கள் பொதுமக்கள் பிரச்சினைக்காக வெளியூர் சென்றிருப்பார்களேயானால் 5 நாட் களுக்குள் கோப்புகளை கையெழுத்திட்டு அனுப்பி வைக்க வேண்டும். இத்தகைய ஆணைகள் அல்ல. அன்பு வேண்டு கோள்கள் விடப்பட்டிருக்கின்றன. அதிகாரிகளுக்கும் அலு வலர்களுக்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து இங்கே ஒரு கருத்து அடிக்கடி சொல்லப்பட்டது. அதாவது நம்முடைய அ.தி.மு.க உறுப்பினர்கள் பேசும்போது எம்.ஜி.ஆரை மறைக்கப் பார்க்கிறீர்கள்-அவருடைய திட்டங் களை ஒழிக்கப் பார்க்கிறீர்கள்'' என்று சொன்னார்கள். எல்லோ ருக்கும் தெரியும் காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் கூட நடுநிலையோடு சிந்திக்கக் கூடியவர் இலக்கியச்செல்வர்- அவருக்குத் தெரியும்- இன்றைக்குக் காலையில்கூட நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்ட முன்வடிவின் தலைப்பே ''டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம்''தான். எனவே, மறைக்கப்படவில்லை. கடந்த காலத்தில் பெயர்கள் மறைக்கப்பட்டிருக்கலாம். ஆனால், இப்போது இல்லை. அவர்கள் இப்படிப் பேசுவார்கள் என்று எதிர்பார்த்துத்தான் ஒரு ஆதாரத்தைக் கொண்டு வந்தேன்.

இது ''பேரறிஞர் அண்ணா பவளவிழா மலர்'' (விழா மலரைக் காட்டி) இதை வெளியிட்டவர்-மலர் தயாரித்தவர் அருமை நண்பர் அமைச்சராக இருந்த திரு.பண்ருட்டி இராமச் சந்திரன் அவர்கள். இந்த மலரில் ஒரு படம் இருக்கிறது. அருமை அண்ணா மறைவதற்கு முன்பு பொங்கல் நாளில் கலைவாணருடைய சிலையை அண்ணா அவர்கள் திறந்து வைத்தார்கள். இதில் என்ன ஒரு பொருத்தம் என்றால்- என்.எஸ்.கே. அவர்கள் மறைவதற்கு முன்பு அண்ணா அவர் களுடைய படத்தைத் திறந்து வைத்தார். அடுத்த வாரம் அவர் மறைந்துவிட்டார். அதைப்போலவே கலைவாணர் சிலையை அண்ணா அவர்கள் திறந்து வைத்தார். சில நாட்களுக்கெல்லாம்

அவர் மறைந்துவிடுகிறார். அந்தப் பொருத்தத்தைக் காட்ட அந்தப் படம் வெளியிடப்பட்டிருக்கிறது.

அண்ணா அவர்கள் திறந்து வைத்த கலைவாணர் சிலை திறப்பு விழாவுக்கு தலைமை வகித்தவன் நான். இந்த மலரிலே அந்தப்படம் வந்திருக்கிறது. நான் தலைமை வகித்தபோது எடுத்த படம் எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இதில் அண்ணா நடுவில் நிற்கிறார். பக்கத்தில் நான் நிற்கிறேன். இன்னொரு பக்கத்தில் திரு. வாசன் நிற்கிறார். இன்னொரு பக்கத்தில் நடிகர் திலீப்குமார் நிற்கிறார். திலீப் குமாருக்கு அருகாமையிலே என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். நிற்கிறார். தலைமை வகித்தவன் என்ற முறையில் அண்ணாவுக்கு அருகே நான் நிற்கிறேன். பொதுப்பணித்துறை அமைச்சரான நான் நிற்கிறேன். அது பத்திரிகைகளிலெல்லாம் வெளிவந்த படம். ஆனால் அந்த மலரில் அந்தப் படத்தை வெளியிடும்போது என் படத்தை அப்படியே வெட்டி எடுத்து விட்டு திலீப்குமாருக்குப் பக்கத்தில் நிற்கிற அருமை நண்பர் எம்.ஜி.ஆர்.படத்தை எடுத்து என் படத்திற்கு மேலாக வைத்து ஒரு மலரே வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தகைய குறுகிய நோக்கம் தி.மு.கவுக்கு உண்டா என்பதை தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எனவே, பெருந்தன்மையோடும், பரந்த மனப்பான்மை யோடும்- யாராக இருந்தாலும்-எவ்வளவு கருத்து மாறுபாடு களுக்கு மாச்சர்யங்களுக்கு இடையிலேயும் மற்றவர்களை மதிக்கக் கற்றிருப்பவர்கள்தான் நாங்கள் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன். எம்.ஜி.ஆர். அவர் களுக்கும் எங்களுக்கும் எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கலாம். காரசாரமாகக் கூட விவாதித்துக் கொண்டிருந் திருக்கலாம். ஆனால்...

திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். இது பழைய காலத்துப் பிரச்சினை. இந்தப் பிரச்சினைக் குரிய படத்தை உண்டாக்கியவர் மரியாதைக்குரிய திரு.பண்

ருட்டியார். நீங்கள் அவரிடம் கேட்டால் உண்மை தெரியும். எங்களுக்கு அந்த நிகழ்ச்சி பற்றித் தெரியாது. தெரிந்திருந்தால் நாங்கள் உங்களோடு வாதிடத் தயாராக இருப்போம். தெரியாத நிகழ்ச்சியைப்பற்றி நாங்கள் வாதாடத் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பார்ப்பதற்காகத் தான் சொல்கிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நன்றி. அவர் அமைச்சராக இருந்தபோது எப்படிப்பட்ட காரியங்கள் நடை பெற்று இருக்கின்றன என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். ஆனால் இந்த ஆட்சியில் அப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நடைபெறாது. என்னதான் கருத்து வேறுபாடு இருந்தாலும் 40 ஆண்டுக்காலம் நானும் எம்.ஜி.ஆரும் பழகியவர்கள். நீங்க ளெல்லாம் கூட புதியவர்கள் அவருக்கு. நானும் அவரும் பழகிய அளவுக்கு யாரும் பழகி இருக்கமுடியாது-இன்றைக்கு அவரோடு- அவரது கட்சியை நடத்துகிறவர்களும் சரி மற்றவர்களும் சரி- யாரும் அந்த அளவுக்குப் பழகி இருக்க முடியாது. எனவே, அரசியல் காழ்ப்புணர்ச்சி வேறு- இது வேறு நேற்றைக்குக்கூட நாவலர் அவர்களுக்கு நானே டெலிபோன் செய்தேன்- இன்றைக்கு வர வேண்டுமென்று, பெங்களூருக்கு ஒரு நிகழ்ச்சிக்கு ஒத்துக்கொண்டு விட்டேனையா- ஆகவே வர இயலவில்லை- வாழ்த்து அனுப்புகிறேன் என்று நேற்றைக்குக் கூட சொன்னார். இன்றைக்குப் பொன்விழா. நீங்களெல்லாம் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். உங்களாலே வர இயலவில்லை. உங்கள் கட்சியினுடைய பொருளாளர் திரு.மாதவன் அவர்களே கூட சபாநாயகருக்குக் கடிதம் எழுதினார். கட்டாயமாக வருகிறேன் என்று. இப்போது அவராலே வர முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகை யால், பெருந்தன்மை, பரந்த மனப்பான்மை இவைகளெல்லாம் ஒருவழியாக இருந்துவிடக்கூடாது. இரண்டு வழியாக இருந்தால் தமிழ்நாட்டினுடைய அரசியல் பண்பாடு மேலும் மேலும் நிலைப்பதற்கு வழி உண்டு என்பதை எடுத்துச்சொல்லி ஒரு கோரிக்கையைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர். சொன்னதையெல்லாம் மாற்றுவதாகச் சொன்னார்கள். இல்லையென்றால் ஒரு அடையாளமாக- அவர் ஏற்கெனவே வடாற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதியைப் பிரித்து 'சம்புவராயர் மாவட்டம்' என்று பெயர் வைப்பதாகச் சொல்லியிருந்தார். அதை அப்படியே இந்த அரசு ஏற்றுக் கொண்டு, திருவண்ணாமலையைத் தலைநகரமாகக் கொண்ட பகுதிக்கு ''திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்'' என்று பெயர் சூட்டுகிறது. வேலூரைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்கு ''வேலூர்-அம்பேத்கார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டுகிறது என்று தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன்- நன்றி- வணக்கம்.

நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவு

உரை : 49 **நாள்: 07.05.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மிக முக்கியமான மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டிய பொறுப்புணர்வோடும், கடமை உணர்வோடும் இந்த மாமன்றத்தினுடைய உறுப்பினர்கள் இன்றைக்கு இங்கே இருக்கின்றார்கள். நிதிநிலை அறிக்கை மன்றத்திலே வைக்கப் பெற்று சற்றொப்ப 180 மணி நேரத்திற்கு மேலாக, பல்வேறு பிரச்சினைகள் இந்த மன்றத்திலே விவாதிக்கப்பட்டு, அரசின் மானியக்கோரிக்கைகள் அனைத்தும் மாண்புமிகு உறுப்பினர் களுடைய கருத்துக்களோடு இணைந்தும், சிலவற்றிலே இணைய இயலாமலும், அவையினுடைய ஒப்புதலைப் பெற்று நிறை வேற்றப்பட்டு, அதற்கான நிதி ஒதுக்கீட்டிற்கான சட்ட முன் வடிவு இன்று காலையிலிருந்து நம்முடைய பல்வேறு கட்சிகளின் தலைவர்களாலும், உறுப்பினர்களாலும் விவாதிக்கப் பெற்று, அதன் அடிப்படையிலே சில கருத்துக்களாலும் விவா திக்கப்பெற்று, அதன் அடிப்படையிலே சில கருத்துக்களைக் கூற நான் முன் வந்துள்ளேன். நேரம் அதிகம் இல்லையென்பதால் சற்று வேகமாகவே செய்திகளை நான் இன்றைக்குச் சொல்லிக் கொண்டு போக வேண்டியவனாக இருக்கிறேன்.

அரசினுடைய கொள்கைகள், அணுகுமுறைகள், திட்டங்கள், இன்றைய ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் வெளியிட்டு, அவைமீது சட்டப்பேரவையில் நடந்த பொது விவாதங்களுக்கு விரிவாக விளக்கங்கள் தரப் பட்டு, பின்னர் பல்வேறு துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகளும், அவற்றின் மீது நடைபெற்ற விவாதங்களும், அமைச்சர்களின் விளக்கங்களும், மானியக் கோரிக்கை விவாதங் களின் அடிப்படையிலே அறிவிக்கப்பட்டு, புதிய திட்டங்கள்,

சலுகைகள் இவற்றின் காரணமாக, நிதிநிலை அறிக்கை மேலும் மெருகு ஏறி இருக்கிறது என்றே கூற வேண்டும்.

நிதிநிலை ஒதுக்கீட்டு மானியத்திற்குப் பேரவை ஒப்புதல் அளிப்பது என்பது பட்ஜெட் வழிமுறையிலே இருக்கிற கடைசி கட்டமாகும். இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக்காட்டியதைப்போல, ரூ. 6000 கோடி அளவிற்கு ஒப்பு தலைப் பெறுகின்ற ஒரு சட்டமுன்வடிவு இந்த மன்றத்திலே விவாதிக்கப்படுகின்றது.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, இந்தப் பெரும் விவாதத்திலே 5,000 அல்லது 6,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிற நேரத்தில் பிரதான எதிர்க்கட்சி கலந்து கொள்ளாதது. அவர்களுடைய பொறுப்பின்மையை உணர்த்து கிறது என்று நான் சொல்ல மாட்டேன். இந்த அரசை அலட் சியப்படுத்த வேண்டுமென்கிற கருத்தோடு இன்று அவர்களால் அவை புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இன்றைய தினம் அரசைக் கண்டித்து நடத்துகின்ற ஊர்வலங்கள், பேரணிகள் எவையாயினும் மாலை நேரத்திலே அவை நடைபெறுகின்ற காரணத்தால், ஒருவேளை காலையிலே நடைபெற வேண்டு மென்று இருந்தாலும்கூட, அவர்களிலே ஒரு சிலராவது இன்றைய விவாதத்திலே கலந்துகொண்டு பிரதான எதிர்க்கட்சியி னுடைய எண்ணங்களை எடுத்துக்கூறி இருப்பார்களானால்- அது இந்த அரசு ஆக்கபூர்வமாக சிந்தித்து, அதன் வழி தன்னுடைய எண்ணங்களை எடுத்துச்சொல்வதற்கு ஏற்றதாக அமைந்திருக் கும். ஆனால் அந்த வாய்ப்பு அவர்களால் இன்றைக்கு உரு வாக்கப்படவில்லையென்பது வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.

தேர்தல் அறிக்கையில் இன்றைய ஆளும்கட்சி நிறை வேற்றுகின்ற வகையில் எண்ணற்ற திட்டங்கள் கடந்த காலத்தில் அறிவிக்கப்பட்டு, அவை தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன என்பதையும், இது விரைந்து செயல்படுகின்ற அரசு என்பதையும் எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் வேண்டு மானால் விவாதத்திற்காக சில நேரங்களில் மறுத்தாலும் கூட

உண்மையை ஒப்புக்கொள்ளத் தவறமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

ஒரு சான்று கூறவேண்டுமானால், இன்று காலையிலே கூட நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவர் அவர்கள் கண்ணகி கோயில் வழிபாட்டிற்குச் செல்லுகின்ற தமிழக மக்கள் தடுக்கப்படக் கூடாது என்ற ஒரு வேண்டுகோளை வைத்தார்கள். நான் உடனடியாக கேரள அரசோடு தொடர்பு கொண்டு தக்கவை செய்யப்படும் என்று சொன்னேன், அதற்கேற்ப உடனடியாக நம்முடைய செயலாளர், கேரள மாநில அரசினுடைய தலைமைச்செயலாளருடன் தொடர்பு கொண்டு இங்கே அவையில் நான் எடுத்துக்கூறிய செய்திகளை அவருக்கு உணர்த்தி அவரும் ஆவண செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார் என்ற நல்ல செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே விரைந்து மாத்திரமல்ல, உடனடியாகச் செயல்படுகிற அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதற்கு இது ஒரு சான்று என்பதை நீங்கள் மிகத்தெளிவாக உணர்வீர்கள்.

1988-89ல் 1,202 கோடி ரூபாயாக சரிவடைந்திருந்த ஆண்டுத் திட்ட அளவினை, 1989-90ல் 1,377 கோடியாகவும் உயர்த்தி இருக்கிறோம். தேசிய அளவில் எட்டாவது ஐந் தாண்டுத் திட்டம் உருவாகிற நேரத்தில் அதன் அடிப்படையில் தமிழ்நாட்டின் திட்டச்செலவு உயர்த்தப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவான 6,225 கோடிக்கு மாறாக எட்டாவது திட்டக் காலத்திலே 8,500 கோடி முதல் 9,000 கோடி ரூபாய் அளவுக்கு தமிழகத்தினுடைய திட்டப்பணிகள் மேற்கொள்ளப் படும் என்பதையும் மீண்டும் இந்த அவைக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரம், பாசனம், சாலைகள், தொழில், நகர்ப்புற மேம்பாடு- இவை அன்னியில் வேளாண்மைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடிநீர், வீட்டுவசதித் துறைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்

பட்டு, அரசின் திட்டங்களிலும், சட்டங்களிலும் நலிந்த பிரிவினரான மகளிர், முதியோர், ஊனமுற்றோர், ஆதி திராவிடர்-பழங்குடி மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், பிற்படுத்தப்பட்டோர் இவர்களுக்கு பல சலுகைகளும், சிறப்புத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு, செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு சில விவரங்களை மேலும் இங்கே தெரிவித்து, உங்களுடைய மேலான ஒப்புதலை இந்தச் சட்ட முடிவுக்குப் பெற நான் விரும்புகிறேன்.

பல மானியக் கோரிக்கைகளுக்குப் பிறகு நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல ஒதுக்கப்பட்ட தொகை ஒட்டுமொத்தமாக 6,830 கோடி ரூபாய். இதில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு உட்பட்ட செலவு (Voted Expenditure) 5,066 கோடி ரூபாயாகும். தொகுப்பு நிதியில் (Consolidated Fund) காட்டிய செலவு 1,764 கோடி ரூபாய் (Charged Expenditure) என்பதாகும்.

கடந்த ஆண்டோடு இதை ஒப்பிடும்போது சென்ற ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகளின்படி காட்டிய செலவாக 1,439 கோடியும் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தொகையாக 4,820 கோடியும் ஒதுக்கப்பட்டது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட தொகையில் 246 கோடியும் சாட்டிய செலவில் 325 கோடியும் உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு வளர்ச்சிப்பணிகளுக்குத் தேவையான செலவினை மேற்கொள்ள இப்படி தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டுச் செலவான 6,830 கோடியில் வருவாய் கணக்கில் 4,978 கோடியும் மூலதனக் கணக்கில் 1,852 கோடியும் அடங்கும். அரசுக்குக் கிடைக்கின்ற வரி வருமானம், ஏனைய வருமானங்கள் அனைத்தும் தொகுப்பு நிதியிலே சேர்க்கப்படுகிறது. உயர்நீதிமன்றச் செலவு, ஆளுநருக்கான செலவு, மத்திய அரசிடமிருந்தும் பொதுச்சந்தையிலிருந்தும் பெற்ற கடனைத்

திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ஆகியவை சாட்டிய செலவுகள் ஆகும்.

தலைவர் அவர்களே, இந்தத் தொகை குறித்து சட்டமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடத் தேவையில்லை. அரசாங்கத்தினுடைய மற்ற செலவுகள் அனைத்தும் தொகுப்பு நிதியிலிருந்து, சட்டமன்ற அனுமதியுடன் செலவழிக்க இயலும். அந்த அனுமதி தொடர்ந்து பல்வேறு மானியக் கோரிக்கைகளில் இந்த அவை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு இருக்கிறது. அனைத்து மானியக் கோரிக்கைகளும் இந்த அவையால் ஏற்கப்பட்ட பிறகு, இவ்வாறு ஒதுக்கப்பட்ட செலவையும், சாட்டிய செலவையும் அரசு மேற்கொள்ள அதிகாரம் வழங்குவதற்காகத்தான் இந்த நிதியொதுக்கச் சட்டம் இங்கே உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்கள் பல பேர் புதியவர்களாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் இந்த சாட்டிய தொகை, நிதியொதுக்கச்சட்டம் இவைகளைப் பற்றியெல்லாம் நான் விரிவாக அவர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறேனே அல்லாமல், பழைய உறுப்பினர்களுக்கு இது தெரியும் என்றாலும், திரும்ப ஒருமுறை சொல்வதற்காக அவர்கள் அலுப்படையக் கூடாது. புதியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த விளக்கங்களை அளித்தேன்.

இங்கே நம்முடைய கட்சிகளுடைய தலைவர்களும் மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துச்சொன்ன பல்வேறு விளக்கங்களுக்குப் பதில் சொல்ல எனக்கு இப்போது நேரம் இல்லை. நேரம் இல்லையென்று சொல்கிற காரணத்தால் நினைவு இல்லை என்று பொருள் கொள்ளக்கூடாது. எண்ணம் இல்லை என்று யாரும் கருதிவிடக்கூடாது. இங்கே எடுத்துச்சொல்லப் பட்ட இந்தக் கருத்துக்களில் பல அறிவுரைகளாக ஏற்றுக் கொள்ளப்படும். நம்முடைய உறுப்பினர் ரமணி அவர்கள் கூறியதைப் போல எச்சரிக்கையாகக் கருதப்படும். அதற்கேற்ப

எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ, அப்படியெல்லாம் அரசு நடந்துகொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திலே உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1989-90ஆம் ஆண்டு வணிக வரி வசூலில் ஒரு நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்ற கணக்கை நான் இந்த அவைக்குத் தெரிவித்தாக வேண்டும். 1988-89ஆம் ஆண்டிலே வசூலிக்கப்பட்ட தொகையை விட, இந்த ஆண்டு 17 சதவீதம் கூடுதலாக இந்த வரி வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஒப்பிட்டுக் கணக்கை நீங்கள் பார்ப்பீர்களானால் 1985-86- ஆம் ஆண்டு 1,035,13 கோடி ரூபாய் வருவாய் வணிக வரி வசூலில். இது அதற்கு முன்பிருந்த ஆண்டை விட 14.4 சதவீதம் அதிகம். 1986-87-ஆம் 1,172.44 கோடி ரூபாய். இது கடந்த ஆண்டை விட 13.7 சதவீதம் அதிகம். 14 சதவீதத்திலிருந்து 13 சதவீத மாகக் குறைகிறது. 1985-86ஆம் ஆண்டிலிருந்து 1986-87ஆம் ஆண்டில் 13.7 சதவீதமாகிறது. அதாவது குறைகிறது. 1987-88ஆம் ஆண்டு வருவாய் 1,313.49 கோடி ரூபாய். இது அதற்கு முன்பிருந்த ஆண்டை விட 12 சதவீதம்தான் அதிகம். 13 சதவீதம் அதிகம். என்பதிலிருந்து 12 சதவீதம் அதிகம் என்ற அளவிலே குறைகிறது. 1988-89 ஆண்டு வருவாய் 1502.73 கோடி ரூபாய். இது அதற்கு முன்புள்ள ஆண்டைவிட 14.4 சதவீதம் அதிகம். ஆனால் 1989-90ஆம் ஆண்டு வருவாய் 1,759.01 கோடி ரூபாய். இது 1988ஆம் ஆண்டை விட 17 சதவீதம் அதிகம் என்பதை எண்ணும்போது, இந்தத் துறையில் உள்ளவர்கள் யாருக்கும் தொல்லை கொடுக்காமல், கசக்கிப் பிழியாமல் கடமை உணர்வோடு, பொறுப்புணர்ச்சியோடு இந்தப் பணியை ஆற்றியதன் மூலம், அரசாங்கம் நிர்வாகத்திலே ஒரு நேர்மையை அதே நேரத்தில் உற்சாகப்படுத்துகிற தன்மையை கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிற நிலையை ஏற்படுத்தியதன் காரணமாக, அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் வணிகப் பெருமக்களுடைய நல்லாதரவோடு இந்த 17 சதவீதம் கடந்த ஆண்டை விட அதிகமாக வணிகவரி வசூலில் நாம் இன்றைக்குப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறோம். இங்கே நம்முடைய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசுகிற

போது 5000, 6000 கோடி என்று நிதி ஒதுக்குகிறோம். அதற்கான அங்கீகாரத்தை நாங்கள் தருகிறோம். அதை ஒழுங்காகச் செலவு செய்யுங்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் ஒரு குடும்பத்திலே பணத்தைக் கீழே இருப்பவர்களுக்குக் கொடுத்து விட்டு, ஒழுங்காகச் செலவு செய் என்று கூறுகின்ற ஒரு தந்தையைப் போல் அவர்கள் இங்கே அந்த ஆணையைப் பிறப் பித்தார்கள். பரவாயில்லை, பெயரே பாலசுப்பிரமணியம். அவர் தந்தைக்கே உபதேசம் செய்தவர்தான். அதனால், உபதேசத்திலே தவறு இல்லை என்று கருதுகிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில், அவர்கள் இன்ன செலவு, இப்படித் தவறாக நடை பெற்றது என்று எடுத்துக்காட்டவில்லை. எல்லாவற்றையும் பொதுவாகச் சொன்னார்கள். பொதுவாகச் சொன்னதற்குக் காரணம், அது ஒரு பொதுவான அறிவுரை என்ற காரணத்தால், பொதுவாகச் சொன்னார்கள். குறிப்பிட்ட இன்ன குறை, இன்ன குற்றம், இன்ன தவறு, இன்ன முறைகேடு என்று அவர்கள் இயம்பவில்லை. ஆனால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கடந்த கால ஆட்சியிலே நடைபெற்ற தவறுகள் ஏதும் நடைபெறாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டே ஒன்றே இந்த ஆட்சிக்கு உரிய பெரும் சிறப்பு என்பதை இன்றைக்கு இந்தியா முழுமையும் உள்ளவர்கள் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

நாங்கள் மக்களுக்கு அதிகம் செய்தோமா, இல்லையா என்பது கேள்விக்குரிய பிரச்சினையாக இருந்தாலும் கூட ஊழலின் ஊற்றுக்கண்கள் அத்தனையும் இன்றைக்கு அடைக்கப் பட்டு இருக்கின்றன என்பதையும், அதன் காரணமாக இந்த ஆட்சிக்கு வரவேண்டிய, அரசுக்கு வரவேண்டிய வருவாய் பெருகி இருக்கிறது என்பதையும் நீங்கள் தெளிவாக உணர் வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய நண்பர் பாண்டியன் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கத்தினுடைய சொத்து எல்லாம் எங்கேயோ போய் விட்டது என்ன செய்தீர்கள் என்று சொல்லி விட்டு அவரே சொன்னார். நீதிமன்றம் இடையிலே குறுக்கிட்டு விடுகிறது

என்று சொன்னார்கள். நீதிபதியோடு கூட முதலமைச்சரே சென்று பேசி, அந்தத் தடைகளை எல்லாம் நீக்கவேண்டும் என்று கூட ஆர்வத்தின் காரணமாக அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். உங்களுக்குத் தெரியும், இதே அவையிலே நான் சொல்லியிருக்கிறேன். 40 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு இடத்தை, ஒரு கோடியே 75 லட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்து, 'பல்லவா ஹோட்டல் கார்ப்பரேசன்' என்ற பெயரில் பழனி பெரியசாமி என்ற ஒரு நபருக்குத் தாரை வார்த்த செய்திகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். அந்த 1 கோடி 75 லட்சம் ரூபாய் கூட விற்பனைக்காக சொல்லப்பட்ட தொகை கூட அரசுக்குக் கிடைக்கவில்லை. அதையும், அந்தக் கார்ப்பரேசனில் அந்த 1 கோடி 75 லட்சம் ரூபாயை அரசாங்கத்தின் பங்குத் தொகையாக வைத்துக்கொள் என்று கூறிவிட்டார்கள் என்பதையும் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நடவடிக்கை எடுத்து அரசுக்குச் சொந்தமான 40 கோடி ரூபாய் நிலத்தை மீட்ட அரசு தமிழக அரசு என்பதையும் நீங்கள் எல்லாம் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே மாமல்லபுரத்தில் அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒரு ஹோட்டலை ஆதாயத்தோடு நடத்தி வந்தது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்தில் ஒரு உணவு விடுதியை நல்ல லாபத்தோடு நடத்தி வந்து இருக்கிறது. அரசாங்கத்தினுடைய நிறுவனத்தை ஜாயின்ட் செக்டார் என்ற கடந்த கால ஆட்சியிலே மாற்றினார்கள். யாரோடு ஜாயின்ட் செக்டார் கோடம்பாக்கத்திலே உள்ள ஒருவர், மோகன் ராவ் தண்டமுடி என்ற ஒருவர், அவரை வெளிநாட்டுக்காரர் என்று அறிமுகப்படுத்தி, அவர்களை என்.ஆர்.ஐ. என்ற பட்டியலிலே கொண்டுவந்து 1 கோடி 60 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அந்த இடத்தை 56 லட்ச ரூபாய்க்கு மதிப்பீடு செய்து, அவர்களிடம் பொறுப்பைத் தந்தார்கள். இதுகுறித்து அக்கவுன்டன்ட்-ஜெனரலே தன்னுடைய கடுமையான மறுப்பைத் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து, அந்த ஹோட்டலையும் அரசு கைப்பற்றிய

பெருமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, திருவிடந்தை கிராமத்தில்- 1984ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலே ஆணை பிறப்பிக்கப்பட்டு, எம்.ஜி. ஆர். அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று இருந்த நேரத்தில், திருவிடந்தை கிராமத்து நிலம், அதற்கு 1984-லே ஆணை பிறப்பிக்கப்பட்டு, 1985ஆம் ஆண்டு அவர்கள் திரும்ப வந்து கையெழுத்துப் போடச் செய்து, ஆலயத்திற்குச் சொந்தமான 299 ஏக்கர் நிலம், 300-க்கு ஒரு ஏக்கர் குறைவு, ஏறத்தாழ 300 ஏக்கர் நிலத்தை, 3 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தை அதுவும் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தை அதே மோகன்ராவ் தண்ட முடிக்குக் கொடுத்தார்கள். அந்த ரூபாயைப் பெற்றுக்கொண்டல்ல, சொற்ப விலைக்கு தந்தார்கள். அதையும் இந்த அரசு கைப்பற்றிய வரலாறு உங்களுக்குத் தெரியும்.

அதே மாமல்லபுரம் சாலையில் உள்ள முட்டுக்காடு 1984-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் தேதி, ஆணை எண்: 585-ன்படி 50 ஏக்கர் அரசாங்க நிலம், 70 லட்சம் ரூபாய் மதிப்புடைய நிலம், மோகன்ராவ் தண்டமுடிக்குத் தரப்பட்டது. அதிகாரி பரிந்துரை செய்தது 6 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய். அதையும் கழக ஆட்சி கைப்பற்றியது அவர்களிடமிருந்து.

அடுத்து வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் கோட்டத்தை யும் விடவில்லை. அதற்கு அருகே 83 கிரவுண்ட் நிலம், அங்கே நட்சத்திர ஹோட்டல் கட்டப்போவதாகச் சொல்லி, 3 கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்தை, 3½ லட்சம் ரூபாய் என்று போட்டு, அதே மோகன்ராவ் தண்டமுடிக்குக் கொடுக்க முயற்சித்ததையும் கழக அரசுதான் தடுத்து நிறுத்தியிருக்கிறது. இப்படி எங்கேயோ செல்ல இருந்த பணத்தையெல்லாம், அரசாங்க நிலத்தையெல்லாம் அரசுக்குத் திரும்பப் பெற்ற பெருமை நமக்குண்டு.

அது மாத்திரமல்ல. நான் முதலிலேயே குறிப்பிட்டேனே, சாராய சாம்ராஜ்யத்தை ஒழிப்போம் என்று சூளுரைத்து இந்த அவையில் நாம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அதற்கு

மாற்றாக நாம் செய்த பணிகள், செயல்கள் என்ன என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

1989க்குப் பிறகு நடவடிக்கைகள் எடுத்து, அதற்குப் பிறகு நான் அறிவித்ததற்கிணங்க, ஐ.எம்.எப்-எல். சில்லறைக் கடைகள் ஏலம் மற்றும் டெண்டர் முறையிலே கொடுக்கப் பட்டன. ஆயத் தீர்வைக்குப் பிறகு ப்ரூப் லிட்டர் ரூ. 25 என்று இருந்தது, ரூ. 55-ஆக உயர்த்தப்பட்டது. ஏற்கெனவே விதிவிலக்கு அளிக்கப்பட்ட சாராவிற்கு (Rectified Spirit)க்கு மறுபடியும் ஆயத்தீர்வை விதிக்கப்பட்டு, அதன் மூலமாக மாத்திரம் ரூ. 23 கோடி அரசுக்கு வருமானம் வந்தது. வினியோ கத்திலே பல கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. ஐ.எம். எப்.எல். மதுபானங்களை சில்லறைக் கடைகளில் விற்பதற்கு விலையும் நிர்ணயிக்கப்பட்டது. கண்டபடி விலை வைத்து விற்று ஏராளமாகக் கொள்ளையடித்துக்கொண்டிருந்த நிலையை மாற்றி விலையும் நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஏற்பாடுகளால் இதற்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு இதே ஐ.எம்.எப்.எல்.லிருந்து ரூ. 120 கோடி இந்த அரசுக்கு வந்ததற்குப் பதிலாக ரூ. 300 கோடி அதாவது அதிகமாக ரூ. 180 கோடி வருமானத்தைப் பெருக்கிய அரசு இந்த அரசு.

கூட்டுத் துறையிலே இருந்த மதுபானத் தொழிற்சாலை 'சாபிள்' என்ற ஒரு நிர்வாகம். அந்த நிர்வாகம் ஏற்கெனவே கூட்டுத்துறையிலே இருந்தது. அந்தக் கூட்டுத்துறையிலும்- நம்முடைய நண்பர் பாலசுப்பிரமணியம் இங்கே விவாதித்தாரே, அதே பெரிய குடும்பம்- இந்தக் கூட்டுத்துறையிலே இருந்தது. நான் ஒரேயொரு வித்தியாசத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த 'சாபிள்' ஐ- கூட்டுத்துறையிலிருந்து அரசாங்கமே எடுத்துக் கொண்டது. கடந்த ஆண்டு அதுவரையிலே தனியார் பொறுப்பிலே நிர்வாகம் நடந்தபோது, ஏராளமான நஷ்டம் காட்டப்பட்டது. நஷ்டமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் நஷ்டக் கணக்கு காட்டப்பட்டது. இப்போது அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு மாதம் ஒன்றுக்கு ரூ. 40 இலட்சம் லாபம். ஒரு வருடத்திலே ரூ. 4.8 கோடி லாபம் கிடைத்திருக்கிறது என்றால் இப்போது தனியாரோடு நாங்கள்

உறவு வைத்துக்கொண்டு, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை எங்கேயோ கொள்ளைபோகச்செய்வதற்கு வழி வகுக்க நடை பாவாடை விரிக்க இந்த அரசு தயாராக இருக்க முடியுமா என்பதை பாலசுப்பிரமணியம் போன்ற பழைய பொது வுடைமைக் கொள்கையிலே நாட்டம் உடையவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் 1984-ஆம் ஆண்டு தனியார் ஒருவருக்கு எம்.பி. ப்ரூவரிஸ் என்ற ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்கள் அந்தத் தொழிற்சாலையை நிர்மானிக்க சற்று காலமாயிற்று. நம்முடைய அரசு வந்த பிறகு தான் அந்தத் தொழிற்சாலையினுடைய கட்டிடம் பூர்த்தியாயிற்று. அதற்கிடையே இந்த அரசின் சார்பில் நம்முடைய கொள்கை இந்த மாமன்றத்தில் தெளிவாக விளக்கப்பட்டு விட்டது. எனவே இந்தக் கொள்கை அடிப்படையில் அந்தத் தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியைத் தொடங்காமல் இருந்த நிலையில், அரசாங்கமே அவர்களுக்கு அனுமதி தர மறுத்துவிட்டு, அதை அரசாங்கமே இப்போது எடுத்துக்கொண்டு விட்டது. அதற்குப் பிறகு 'டாஸ்கோ' என்கின்ற நிறுவனத்தை அமைத்து, அந்த டாஸ்கோ நிறுவனம்தான் இன்றைக்கு இந்த மலிவு விலை மது உற்பத்தியையும் செய்யப்போகிறது. தனியாருக்குத் தந்து அவர்கள் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுக்கவும், அரசாங்கத்திற்கு முறையாக வர வேண்டிய உரிய வருமானம் வருவதற்கும் நாம் இந்த ஏற்பாடுகளை, நம்முடைய வருமானம் முழுமையாக வரவேண்டும், அது சிந்தாமல், சிதறாமல் வர வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடுகளைச் செய்திருக் கிறோம்.

இன்னும் ஒன்று, இந்த மது விலக்குச் சட்டத்தில், திருத்தப் பட்ட சட்டத்தில் 'கம்பவுண்டிங்' முறையைப் புகுத்தியபோது இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லி, தங்களுடைய கசப்பு உணர்வுகளை எல்லாம் இங்கே வெளிப்படுத்தினார்கள். ஆனால் அதன் காரணமாகத் தேங்கிக் கிடந்த பல்லாயிரக்கணக்கான வழக்குகள் முடிக்கப்பட்டன. 1989 சூன் முதல் 1990 பிப்ரவரி வரையில், கம்பவுண்டிங் முறையில்

தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 84,388. அதன் மூலம் கிடைத்த அபராதத் தொகை ரூ. 3.58 கோடி. 1989ஆம் ஆண்டு கம்பவுண்டிங் முறை மற்றும் கோர்ட்டிலே சுமார் 2 லட்சம் வழக்குகள் தீர்க்கப்பட்டு, அதன்மூலம் கிடைத்த மொத்த அபராதத் தொகை ரூ. 8.13 கோடி, மற்றும் கடந்தகாலத் தவறுகள் எப்படித் திருத்தப்பட்டன என்பதற்கு இன்னொரு சான்று. பேருந்துகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையில், கடந்தகால அரசு நடந்து கொண்ட விதமே அதற்கு உதாரணமாகும். திரு. ஏகப்பன் என்ற ஒருவர், மதுரை முதல் குமுளி வரையில் தனக்கு வழித்தடம் வேண்டுமென்று மேல் முறையீடு செய்துகொண்டார். 'அப்பீல்' செய்து கொண்டார். அரசு அதை எதிர்த்தது. அவர் எஸ்.டி.ஏ.டி.க்குச் சென்றார். அங்கே அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்தது. அதை எதிர்த்து அரசு உயர்நீதிமன்றத்திலே மனுச் செய்தது. ஏகப்பனுக்கு அங்கேயும் சாதகமாகத் தீர்ப்பு கிடைத்தது. அ.இ.அ.தி.மு.க. அரசு உச்சநீதிமன்றத்திற்கு 'அப்பீல்' செய்தது. ஏகப்பனுக்கு வழித்தடம் வழங்கப்பட்டது. இங்கேதான் ஆச்சரியமான திருப்பம், இதுவரையிலும், உயர்நீதிமன்றம் வரையிலும் ஏகப்பனுக்கு சாதகமான தீர்ப்பு, அதை எதிர்த்து உச்சநீதி மன்றத்திலே அரசு வழக்குத் தொடுத்தது. அங்கே அரசுக்குச் சாதகமான தீர்ப்பு. ஏகப்பனுக்கு எதிராகத் தீர்ப்பு. அந்த அரசாங்கம், அந்தத் தீர்ப்பின்படி நடக்காமல், தனக்குச் சாதகமாகக் கிடைத்த தீர்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல், ஏகப்பனுக்கு ஆதரவாக அந்த வழித்தடத்தைக் கொடுத்தது. இந்த கடந்த அரசினுடைய 'பஸ்' தேசியமயக் கொள்கையினுடைய புனிதமான ஒரு கட்டம். 1987-ஆம் ஆண்டு, தேசியமயமாக்கப்பட்ட கொள்கைக்கே விரோதமாக, இந்த அவையிலே ஒரு மசோதா வந்தது. அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், அந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்து வெளிநடப்புச் செய்ததெல்லாம் வரலாறாகும். அந்த 1987-ஆம் ஆண்டு வந்த அந்த மசோதா, என்ன உள்ளடக்கத்தைக் கொண்டதென்றால், தேசியமாக்கப்பட்ட அல்லது ஆக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட பேருந்து வழித்

தடங்கள் உள்பட, எல்லா வழித்தடங்களையும் தனியார் உரிமை கோரினால், தடையின்றிக் கொடுக்க வேண்டும். இப்படி இந்த ஒரு மசோதா அன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் நல்லவேளையாக இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டவுடன், அப்படி இங்கே நிறைவேற்றப்பட்ட மசோதா, டெல்லிக்குச் சென்று, குடியரசுத் தலைவருடைய கையெழுத்தையும் ஒப்பு தலையும் பெற்று இங்கே வந்தபோது, அதை நடைமுறைப் படுத்தாமலேயே தூக்கி வைத்துவிட்டு, நாம் வேறொரு சட்டமுன்வடிவைக் கொண்டுவருவதற்கான ஆயத்தங்களைச் செய்து, அந்த தேசியமயக்கொள்கையை, நம்முடைய மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இந்த மாமன்றத்திலே சட்டம் வருவதற்கும் இருக்கின்றது. அதைப்போலவே, நம்முடைய ஆளும் கட்சியினுடைய, அதைப் போலவே ஆளுங்கட்சியைச் சேர்ந்த தோழமைக் கட்சிகளினுடைய, ஏன் எதிர்க்கட்சியிலே கூட இருக்கின்றவர்களுடைய எண்ணத்தின் பிரதிபலிப்பாக பினாமி நிலங்களை ஒழிப்பதற்கான சட்டமுன்வடிவும் இந்த மாமன்றத்திலே இந்தக் கூட்டத்தொடரில் வரவிருக்கிறது.

மற்றொன்று 'லோக் பால்', முதல்அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், இவர்களைப்பற்றி புகார்கள் வருமேயானால் அந்தப் புகார்களை விசாரிப்பதற்காக ஒரு 'கமிஷன்' "Tamilnadu Public Functionaries (Enquiry into allegations of Corruption) Bill" என்ற ஒரு மசோதா இங்கே வரவிருக்கின்றது. "Chief Minister, Ministers Mayer and Deputy Mayor, Municipal Chairman, Vice-Chairman, Chairman of any Committee of Municipal Council and Municipal Corporation, Chairman of Panchayat Union and Vice Chairman, a person other than a Government Servant who is or has been the Chairman of any Public Sector Corporation or any Government Company' இவர்கள் மேலெல்லாம் புகார்கள் வருமேயானால், விசாரித்து அறிவிப்ப தற்காக பாராளுமன்றத்திலே வருகின்ற 'லோக் பால்' மசோதா வைப் போன்று, அந்த அடிப்படையிலே இங்கே ஒரு சட்ட

முன்வடிவு கொண்டு வருவதற்கும்' ஏற்பாடாகியிருக்கிறது. அதுவும் இந்தக் கூட்டத்தொடரிலேயே அறிமுகப்படுத்தப்பட விருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில முக்கியமான அறிவிப்புகளை, இந்த நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு விவாதிக்கப்பட்டு நிறைவேறுகின்ற நேரத்தில் வெளியிட விரும்புகின்றேன். ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், ஊதிய விகிதங்கள் மத்திய அரசுக்கு இணையாக ஏற்கெனவே 450 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது. பல ஊதிய விகிதங்கள் மத்திய அலுவலர்கள் ஊதிய விகிதங்களைவிட அதிகமாக வழங்கப் பட்டுள்ளன. எனினும் இந்த ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்யும்போது ஒருசில முக்கியப் பொறுப்பிலே உள்ளவர்கள் ஊதிய விகிதங்களில் சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அதில் பெரும்பான்மையான அப்படிப்பட்ட முரண்பாடுகள் நீக்கப் பட்ட போதிலும் ஒருசில முரண்பாடுகள் இருப்பதைக் களையும் பொருட்டு சில மாறுதல்களை இங்கே அறிவிக் கின்றேன்.

வேளாண்மை அலுவலர்கள் தங்களுடைய ஊதிய விகிதத்தை 1820-3200 என்பதிலேயிருந்து 2000-3500 ஆக மாற்றியமைக்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசின் முன் வைத்துள்ளார்கள். மத்திய அரசின் ஊதிய விகிதங்களை செயல் படுத்தியுள்ள மாநிலமான மகாராஷ்டிரத்தில் இவர்களுடைய ஊதிய விகிதம் ரூ. 1,640-2,900 (குறுக்கீடு) என்றுதான் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும் வேளாண்மை அலுவலர்கள் ஏற்கெனவே உதவி கால்நடை மருத்துவர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் ஆகியோருக்கு இணையாக ஊதிய விகிதம் பெற்று வந்தால் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதப்பட்டது. மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் வழங்கும்போது ஒவ்வொரு குழுவினருக்கும் முன்பு இருந்த நிலையை ஒட்டி ஊதிய விகிதம் வழங்க இயலாது. இருப்பினும் விவசாய வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்ற நோக்கம் இந்த அரசுக்கு உள்ளதால் வேளாண்மை அலுவலர் ஊதிய விகிதம்

ரூ. 2000லிருந்து 3,500 என்று நிர்ணயிக்க முடிவு எடுக்கப்படுகிறது. இதனால் 2,500 வேளாண்மை அலுவலர்கள் பயனடைவார்கள்.

ஏ.ஈ. - உதவிப் பொறியாளர்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள ஊதிய விகிதம் ரூபாய் 2,000-லிருந்து 3,500 ஆக இருக்கிறது. இதற்கு இணையாக மாநில அரசிலே பணியாற்றக்கூடிய உதவிப் பொறியாளர்களுக்கு பட்டப்படிப்பு முடித்த பொறியாளர்கள்- மத்திய அரசு வழங்கிய ஊதிய விகிதம் ரூ. 2,000லிருந்து 3,500 வழங்கப்பட்டுள்ள இளநிலைப் பொறியாளர்கள்- டிப்ளமா படித்த பொறியாளர்கள், பட்டயப் படிப்பு படித்த பொறியாளர்கள்- மத்திய அரசு ரூ. 1,400-லிருந்து 2,600 என்று ஊதிய விகிதத்தை வழங்கியுள்ளது. இதன் அடிப் படையில் மாநில அரசும் இளநிலைப் பொறியாளர்களுக்கு 5வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ரூ. 1400-2,600 என்று ஊதிய விகிதத்தை நிர்ணயித்தது. இருப் பினும் இளநிலைப் பொறியாளர்கள், அவர்களுக்கும் உதவிப் பொறியாளர்களுக்கும் இடையே ஊதிய விகிதத்தில் பெருத்த வேறுபாடு உள்ளது என்று கூறி- மத்திய அரசு கொடுத்ததைக் கொடுத்தோம்: இருந்தாலும் கூட ஏற்கெனவே வழங்கியதிலே உள்ள விகிதாச்சாரத்திலே வேறுபாடு வந்துவிட்டது என்று அவர்கள் கூறி- அவர்களுடைய ஊதிய விகிதத்தைத் தக்கமுறை யிலே திருத்தியமைக்க வேண்டும் என்று அரசின் முன் பலமுறை கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையை மனதிலே கொண்டும் 5-வது ஊதியக் குழுவிற்கு முன்பு அவர்களுக்கு இருந்த ஊதிய விகிதங்களின் நிலையைக் கருத்தில் கொண்டும் இளநிலைப் பொறியாளர்களுடைய ஊதிய விகிதத்தை ரூ. 1,640-லிருந்து 2,900 என்று திருத்தியமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). இதன் மூலம் 3,100 இளநிலைப் பொறியாளர்கள் பயனடைவார்கள். வேறு துறை களிலும் இதே ஊதிய நிலையிலே உள்ள பட்டயப்படிப்பு, டிப்ளமோ கல்வித்தகுதி உடைய சுமார் 800 அலுவலர்கள் இருக்கிறார்கள். அதாவது என்ஜினியரிங் சூப்பர்வைசர், ஃபோர் மேன் டிப்ளமோ, என்ஜினியரிங் இன்ஸ்பெக்டர் இன் ஸ்கூல் எஜுகேஷன் டிபார்ட்மென்ட் என்று 800 பேர் இருக்கிறார்கள்.

அவர்களுக்கும் இந்த ஊதிய உயர்வு பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓய்வூதியக்காரர்களுடைய அகவிலைப்படி, கழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான் 9.8.1989 அன்று ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக ஓய்வூதியங்களை 1.6.1988 முதல் முன்தேதியிட்டு வழங்க ஆணையிட்டது. அவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக அகவிலைப்படியும் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மத்திய அரசு ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 1.1.1990 லிருந்து அகவிலைப்படியை உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது. இதனை முழுமையாகப் பின்பற்றி தமிழக அரசு ஓய்வூதியர் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 1.1.1990லிருந்து அக விலைப்படியை உயர்த்த முடிவு எடுத்துள்ளது. இதனால் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்ச உயர்வு 15 ரூபாயாகவும், அதிகபட்ச உயர்வு 115 ரூபாயாகவும் இருக்கும். அரசுக்கு இதனால் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 9 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 2 இலட்சம் ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பணியில் இறப்பார் குடும்பப் பாதுகாப்பு நிதி, 1974-ஆம் ஆண்டு கழக அரசு, அரசு அலுவலர் நலனைக் கருதி குடும்ப நல நிதித் திட்டத்தை அறிவித்தது. மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் பிடித்தம் செய்து அரசு அலுவலர்கள் பணியிலே இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் குடும்ப நல நிதியாக வழங்க ஏற்பாடு செய்தது.

பின்னர் அ.தி.மு.க. ஆட்சியில் அரசு அலுவலரிடம் 3 ரூபாய் வீதம் பிடித்தம் செய்து, அரசு அலுவலர் இறப்பாரானால், 20,000 ரூபாய் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒரு ரூபாய் பிடித்தம் செய்து 10,000 ரூபாய், 3 ரூபாய் பிடித்தம் செய்து 20,000 ரூபாய். மீண்டும், கழக அரசு கடந்த ஆண்டு ஏற்பட்ட பிறகு, இப்போது 3 ரூபாய், என்பதை 5 ரூபாயாக உயர்த்தி- 6-ஆக உயர்த்தாமல்- 5 ரூபாயாக உயர்த்தி, அரசு அலுவலர்

இறந்தால் 40,000 ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டதை உறுப்பினர்கள் அறிவார்கள். இதனால் அரசிற்கு, ஆண் டொன்றிற்கு 3.08 கோடி ரூபாய் அதிகச் செலவு. வருவாய்த் துறையில் பணியாற்றக்கூடிய கிராம ஊழியர்களுக்கு, அவர்கள் பணிக் காலத்திலே இறந்தால் அவர்களது குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக இப்போது 20,000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதற்காக அவர்களிடம் 3 ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. 1.7.1989லிருந்து அரசு அலுவலர்களுக்கு குடும்ப நல நிதித் தொகை ரூ. 20,000லிருந்து 40,000ஆக உயர்த்தி வழங்கியது போல, கிராம ஊழியர்களுக்கும் அவர்கள் பகுதிநேர ஊழியர் களாக இருந்தாலும்கூட, இந்தத் தொகையை 20,000லிருந்து 40,000ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. மாதந்தோறும் அவர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் 3 ரூபாய், 5 ரூபாயாக ஆகும். இதனால் 31,600 கிராம ஊழியர்கள், வெட்டி யான்கள், தலையாரிகள் போன்ற கிராம ஊழியர்கள், பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, குடிநீர்ப் பிரச்சினையில் இந்த அரசு மிகுந்த ஆர்வம் கொண்டு, அக்கறைகாட்டிப் பணியாற்றி வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1988-89 ஆம் ஆண்டில் மழை பொய்த்த காரணத்தால் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 45 கோடிக்கு மேற்பட்ட தொகை செலவிடப்பட்டது. இப்போது குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க விரைவான நடவடிக்கை எடுக்க மேலும் ஒரு 13 கோடி ஒதுக்கப்பட்டு, கிராமப்புறங்களிலே 5 கோடி ரூபாயும்- புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்குப் பதிலாக புதிய கிணறுகளை அங்கே உருவாக்கவும் 5 கோடி ரூபாய், கிராமப் பகுதிக்கும் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதியில் குடிதண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்ற 3 கோடி ரூபாயும், சென்னை மாநகராட்சிக்கு 5 கோடி ரூபாயும் என்று 13 கோடி ரூபாய் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்காக இந்த ஆண்டு ஒதுக்கப்படுகிறது.

நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே நான் தாக்கல் செய்தபோதும், அதன் மீதான பொது விவாதத்திற்குப் பதில ளித்த போதும் விற்பனைவரி சம்பந்தமாக பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இன்றைக்கும் அந்த வரிகளைப் பற்றி நம்முடைய நண்பர் லத்தீப் போன்றவர்கள் எல்லாம் இங்கே பேசியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் மனதில் கொண்டு மேலும் சில அறிவிப்புகளைச் செய்ய விரும்புகின்றேன்.

பலமுனைவரியை ஒருமுனை வரியாக மாற்றியதற்கு வணிகச் சங்கங்களும் வாங்குவோரும் தங்கள் வரவேற்பைத் தெரிவித்துள்ளார்கள். இது ஒரு அடிப்படை மாற்றமாக இருப்ப தால் இதற்கு நல்ல வரவேற்பும், பாராட்டும் இருப்பது இயற்கை தான். பலமுனை வரி முறையில் ஒவ்வொரு கட்டத்திலும் 5 சதவிகிதம் வரி செலுத்துவதோடு, மேல் வரி மற்றும் கூடுதல் வரி என்று பல கட்டங்களில் வரி செலுத்தவேண்டி நிலை இருந்தது. இதை அகற்றி ஒருமுனை வரியாக 8 சதவிகிதம் என்று ஆக்கிய காரணத்தால் அதிகச் சலுகை வணிகர்களுக்குக் கிடைக்கும். மேலும் பல பொருட்களின் விலையைக் குறைப்ப தற்காக ஏற்கெனவே அளித்த சலுகைகளைத் தவிர, இப்போது தரப்படுகின்ற சலுகைகளை உறுப்பினர்கள் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.

தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் சவ்வரிசி வியாபாரத்திற்கு பலமுனை வரி ஏற்கெனவே 5 சதவிகிதம் என்று விதிக்கப்பட்டிருந்தது. அந்த மாவட்டங்களிலே இயங்கும் சவ்வரிசி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதிலே சலுகை வரியாக 5 சதவிகிதம் பலமுனை வரிக்குப் பதிலாக, 4 சதவிகித பலமுனை வரி ஏற்கெனவே விதிக்கப்பட்டிருந்தது. பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியபோது, 8 சதவிகிதம் என்ற அள விற்கு நிர்ணயிப்பதற்குப் பதிலாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு 4 சதவிகிதம் என்றும் இதர வணிகர்களுக்கு 8 சதவிகிதம் என்ப தற்குப் பதிலாக 5 சதவிகிதம் என்றும் குறைத்து அறிவிக்கப் பட்டிருந்தது. இதன் பின்னர், இதர வணிகர்கள் தங்களுக்கும் 4 சதவிகிதம் அளவுக்கு மட்டுமே இந்த வரியை விதிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள். அவர்களின் கோரிக்கையை

ஏற்று, இப்போது அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 5 சதவிகிதம் ஒருமுனை வரி என்பது 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகிறது. அதைப்போலவே, கூட்டுறவுச் சங்கங்களும் நல்லமுறையில் லாபகரமாக இயங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்களுக்கு விதிக்கப்பட்ட 4 சதவீத ஒருமுனை வரி மேலும் குறைக்கப்பட்டு 2 சதவீதமாக இனிமேல் வசூலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகள் நலனை முன்னிட்டு டிராக்டர்களுக்குத் தேவைப்படும் உதிரிப் பாகங்கள் மீதான ஏற்கனவே விதிக்கப்பட்டு இருந்த 9 சதவீத வரி, 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விவசாயிகளின் மின் கலப்பைகளுக்கு, 'பவர் டில்லர்' உதிரிப் பாகங்கள் மீதுள்ள விற்பனை வரியான 10 சதவீதம் என்பது இனிமேல் 4 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிளாஸ்டிக் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி பல தொழில்கள் நடைபெறுகின்றன என்ற கோரிக்கையும் எழுப்பப் பட்டுள்ளது. அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பிளாஸ்டிக் பொருட்கள் மீதான வரிவிகிதம் கர்நாடகத் தில் 10 சதவீதம், கேரளத்தில் 8 சதவீதம், ஆந்திராவிலே 6 சதவீதம், தமிழ்நாட்டில் 8 சதவீதம் என்று இருக்கிறது. எனவே, இதையும் குறைத்து ஆந்திராவில் இருப்பதைப் போல 6 சதவீதமாக ஆக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தும் எண்ணத்தோடு மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்களை அடைத்து விற்கக்கூடிய டின்கள், 'டின் கன்டெயினர்' இதன் மீதான வரியை 8 சதவீதத்திலிருந்து, 5 சதவீதமாக குறைக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே காகித அட்டைப்பெட்டிகள் (Card board box cartons) மீதான வரியையும் 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அச்சடிக்கப்பட்ட பொருட்கள் மீதான வரி (Printed materials) பலமுனை வரி முறையில் 5 சதவீதமாக இருந்தது. ஒரு முனை வரி முறையாக இதனை மாற்றும்போது 8 சதவீதமாக மாறி இருக்கிறது. என்றாலும், வணிகர் மற்றும் மக்கள் நலன் கருதி இனி இந்த வரி விகிதம் 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதனிடப்பட்ட தோல்கள் மீதான விற்பனை வரி ஒரு விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. விற்பனை வரி முறையை மாற்றவேண்டும் என்றும், சிறிய வணிகர்களுக்கும், தோல் பதனிடும் நிறுவனங்களுக்கும் வரி குறைக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை வந்தது மாத்திரம் அல்ல. திரு. லத்தீப் அவர்கள் இங்கே பெரும் குரலே கொடுத்து, அது குறித்து விவாதித்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பதனிடப்பட்ட தோல் மீது 2 சதவீதம், பதனிடப்படாத தோல் மீது 2 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலே இதற்கு வரி 4 சதவீதம் ஆகும். அதாவது பதனிடப்படாத நிலையில் வரி செலுத்தியிருந்தால் பதனிடப்பட்ட நிலையில் வரி செலுத்தத் தேவையில்லை என்ற நிலையில் அங்கே 4 சதவீதம் ஆகும். தமிழ்நாட்டில் வரி விகிதங்கள் குறைவாக இருப்பதால் வரி விதிக்கப்படும் முறையை மாற்றாமல் சிறிய விற்பனையாளர்களுக்கு லத்தீப் அவருடைய பேச்சிலே திரும்பத் திரும்பச் சொன்னது, சிறிய விற்பனையாளர்கள் பற்றிதான் சொன்னார். எனவே அதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு, 10 லட்சம் ரூபாய் வரை மொத்த விற்பனை உள்ள பதனிடப்பட்ட தோல் வணிகர்களுக்கு முன்னர் இருந்ததைப் போல ஒரு சதவீத வரியும், மற்றவர்களுக்கு 2 சதவீத வரியும் இனி விதிக்கப்படும், பதனிடப்படாத தோலுக்கு மாறுதல் இல்லை. முன்பும் 2 சதவீதம்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிழற்படக் கருவிகள், படச்சுருள், நிழற்படக் காகிதங்கள் ஆகியவற்றின் மீதான வரி விகிதம் பிற மாநிலங்களை விட நம் மாநிலத்தில் அதிகம் என வணிகக் குழுமங்கள் முறையிட்டுள்ளன. அவற்றின் மீது தற்போதுள்ள வரி 15 சதவீதம் ஆகும்.

ஆந்திராவில் நிழற்படக் கருவிகள், காகிதங்கள் மீது 10 சதவீத வரி. படச்சுருள் மீது 13 சதவீதம், கர்நாடகத்தில் நிழற்படக் கருவிகள் மீது 8 சதவீதம், படச்சுருள், காகிதங்கள் இவற்றின் மீது 10 சதவீதம் வரி. தமிழ்நாட்டிலும் கர்நாடகத்தைப் போலவே நிழற்படக் கருவிகள் மீது 8 சதவீதம், படச்சுருள் நிழற்படக் காகிதங்கள் ஆகியவற்றின் மீது 10 சதவீத வரியாகக் குறைத்து விதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவகங்களில் விற்கப்படும் உணவுப் பொருட்கள் மீது தற்போது 5 சதவீத ஒருமுனை விற்பனை வரி விதிக்கப் படுகிறது. இதிலே ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் வரை வியாபாரம் செய்பவர்களுக்கு வரி கிடையாது என்று இப்போது இருக்கிறது. 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் 15 இலட்சம் வரை விற்பனை உள்ள உணவகங்களுக்கு ஒட்டுமொத்த வரியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வரி விகிதங்கள் கூடுதலானவை என்று சிலர் முறையீடு செய்து இருக்கிறார்கள். உணவுப் பொருட்களின் விலை உயர்வுக்கும் இதுவே காரணம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்திலே 15 லட்சத்திற்கு மேல் விற்பனை உள்ள உணவகங்களுக்கு வரி விகிதம் 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரை விதிக்கப் படுகிறது.

அங்கே காம்பௌண்டிங் முறையே கிடையாது. ஒரு லட்சம் ரூபாய் விற்பனை உள்ள உணவகங்களுக்கு கர்நாடகத் திலே வரிவிலக்கு, ஒரு லட்சம் முதல் 15 லட்சம் வரை விற் பனை உள்ள உணவகங்களுக்கு அங்கே கம்பௌண்டிங் முறை அமலில் உள்ளது. ஆந்திர மாநிலத்தில் 2 இலட்சத்துக்கு மேல் விற்பனை உள்ள உணவகங்களுக்கு 5 சதவீதம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. கேரள மாநிலத்தில் 20 லட்சம் ரூபாய் விற்பனை உள்ள உணவகங்களுக்கு 10 சதவீதம் வரி விதிக்கப் படுகிறது. தமிழ்நாட்டில் விற்பனை வரி குறைவாக இருப்பது மாத்திரமல்ல. அரிசி போன்ற பண்டங்களின் மீது விற்பனை வரி கிடையாது என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பொது மக்களுக்கும் உணவகங்களுக்கும் சலுகை அளிக்கவேண்டு மென்ற எண்ணத்தில் வரி விலக்கு வரம்பு 10 லட்சத்திலிருந்து

15 லட்சமாக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கம்பௌண்டிங் என்பது இந்த 15 லட்சத்துக்கு மேல்தான். இந்த 15 லட்சத்துக்கு மேலே கம்பௌண்டிங். அதற்குமேல்தான் 5 சதவீதம் வரி.

உணவுப் பொருள்களின் விலையை மிக அதிகமாக உயர்த்தி அதற்குக் காரணம் தமிழக அரசின் வரிக்கொள்கைதான் என்று ஒரு சில உணவகங்களிலே எழுதிப்போட்டிருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்தது. அப்படி எழுதிப் போடப் பட்டிருந்தால் நிச்சயமாக அந்த உணவகங்களில் 15 இலட்சம் ரூபாய்க்குமேல் விற்பனை ஆகிறது என்று பொருள். எனவே, அதிகாரிகள் அங்கே வரி வசூலிக்கச் செல்வார்கள் என்பதை, அந்த உணவகங்களுக்கு நான் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். எனவே, இப்படிப்பட்ட முறையில் எழுதி வைப்ப வர்கள் இந்த விற்பனை வரிக்கு ஆளாவார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அவை உறுப்பினர்களுக்கு ஒரு செய்தி. அன்றைக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகளைக் கோரி பல செய்திகள் பேசப்பட்டபோது அவர்களுடைய சிகிச்சைகளுக்கான சலுகைகளைப் பற்றிப் பேசப்பட்டது. அதன் அடிப்படையிலே ஒன்றை அறிவிக்க விரும்புகிறேன். அரசு அலுவலருக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்தவ உதவி அரசின் சார்பிலே இப்போது தரப்படுகிறது. அரசு அலுவ லர்களுக்கு இப்போது தரப்படும் மருத்துவ உதவி, அரசு மருத்துவமனைகளிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இப்போது வழங்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மேலும் ஒரு சலுகை தரவேண்டுமென்ற நோக்கத்துடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் இருதயம், சிறுநீரகம் போன்ற பெரிய அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதுகுறித்து முன்கூட்டியே அரசாங்கத்திற்குத் தெரி வித்தால், இந்தியாவிற்குள் ஒரு பொது மருத்துவமனையிலோ அல்லது அவர்கள் விரும்புகின்ற தனியார் மருத்துவ மனையிலோ சிகிச்சை பெறுவதற்கு அரசு எல்லா நிதி உதவி களையும் செய்யும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு

(மேசையைத் தட்டும் ஒலி) இவ்வளவு சலுகைகளையும் அறிவித்து இருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொண்டு, விரைந்து உங்களுடைய ஒப்புதலை வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

துணை மானியக் கோரிக்கை

உரை : 50 **நாள்: 22.08.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகையில் இந்த மானியக் கோரிக்கையினைப் பயன்படுத்திக்கொண்டு, மானியக் கோரிக்கையில் எழுதப்படாத பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். எனக்குள்ள ஆறுதல் எல்லாம் இந்த மன்றத்திலிருந்து செயல்பட வேண்டிய எதிர்க்கட்சி செயல்படாத சூழ்நிலையில், அந்தப் பொறுப்புக்களையும் தாங்களே ஏற்றுக்கொண்டு, இங்கேயுள்ள உறுப்பினர்கள், மற்ற கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் கடமையை மிகச் செம்மையாக நிறைவேற்றி இருப்பதற்காக நான் மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன், ஆறுதல் சொல்கிறேன்.

நான்கு நாட்கள்தான் இந்த அவை- 20, 21, 22 மற்றும் 23 ஆகிய நாட்களில்- நடைபெறுகிறது என்றாலும்கூட, இந்த நான்கு நாட்களில் மிக முக்கியமான பிரச்சினைகளை இந்த அவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. துணை மானியக் கோரிக்கை முதல்நாள் முன்வைக்கப்பட்டது. நேற்றைய தினம் வரலாற்றுச் சிறப்புமிக்க மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று மத்திய அரசு அறிவித்ததையொட்டி பல சீரிய கருத்துக்கள் இங்கே எடுத்துவைக்கப்பட்டன. இன்று மிக முக்கியமாக 200 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகைக்கான அனுமதியை, இந்த அவையிலே நிதியமைச்சர் என்கிற அந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிற வகையிலே, உங்களிடத்திலே பெறுகின்ற இந்தச்சூழலில், 'தொகை ஒதுக்கினால் மாத்திரம் போதாது, அதற்கு நாங்கள் ஒப்புதல் அளித்தால் மாத்திரம் போதாது, இன்னின்ன குறைபாடுகள் இன்னும் இந்த அரசில் இருக்கின்றன, அவைகளையெல்லாம் களையவேண்டுமென்று சுட்டிக்காட்டுதல்களையும் நீங்கள் இங்கே எங்களுடைய நெஞ்சத்தில் பதிய வைத்திருக்கிறீர்கள். பலதரப்பட்ட யோச

னைகள், கருத்துக்கள், குறைபாடுகள் இங்கே கூறப்பட்டிருக் கின்றன. இந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிற எல்லா அமைச்சர்களும், அந்த அமைச்சர்களோடு இணைந்து பணி யாற்றுகிற அதிகாரிகளும், துணை மானியக் கோரிக்கையைப் பயன்படுத்திக்கொண்டு எடுத்துச்சொல்லப்பட்ட பல்வேறு நல்ல கருத்துக்களை எல்லாம் செவிமடுத்திருக்கிறார்கள். அவை களை உரிய முறையில் செயல்படுத்துவதற்கு முனைப்போடு அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்ற உறுதி மொழியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர் பாண்டியன் அவர்கள் ஏதோ இன்று தமிழ்நாடு அரசினுடைய நிதிநிலை ஒரு ஆபத்தான கட்டத்தில் இருப்பதைப்போல, பத்திரிகையில் செய்தி வந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிற அளவிற்கு ஒரு ஐயப்பாட்டை எழுப்பினார்கள். முதல் தேதி சம்பளம் கொடுப்ப தற்குப் பணம் கருவூலத்தில் இருக்கிறதா? அதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அந்த அச்சம் நம்முடைய பாண்டியன் அவர்களுக்குத் தேவையில்லை என்று கருதுகிறேன். முதல் தேதி எம்.எல்.ஏ.க்கள் உள்பட அனைவருக்கும் சம்பளம் தர நம்முடைய நிதிநிலைக் கருவூலம்...

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பி.எச். பாண்டியன்: தலைவர் அவர்களே, நான் இதைப் பேசியிருக்கமாட்டேன். இரண்டு மாதங்களுக்கு முன்பு எனக்கு வந்த செய்தி. ஒன்றாம் தேதிக்குள்- சில துறைகளி லிருந்து- அதாவது செக் போட்டு விட வேண்டுமென்று ஒரு அட்வைஸ்- ஒன்றாம் தேதி சம்பளம் போட வேண்டுமென்று இரண்டு மாதங்களுக்கு முன்னால் அப்படி நடந்தது. அந்த நிலையைப் பார்த்துவிட்டுத்தான் நான் பேசினேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நிதித்துறையிலே அவ்வப்போது ஏற்றத்தாழ்வுகள் வருவது சகஜம். அதை திரு. பாண்டியன் அவர்களே தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டு இருக்கிறார்கள். எப்போதும் வங்கியிலே பணம் இருக்கும் என்றல்ல என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே அவர்கள் எழுப்பிய ஐயப்பாட்டுக்கு நான் விளக்கமாக,

நிச்சயமாக நான் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டு இருப்பதைப் போல, இந்திய ரிசர்வ் வங்கியி னுடைய உதவியோடும் மற்றும் நமக்கு வணிக வரிகள் மூலமாக வருகின்ற அந்த வருவாய்த் தொகையோடும் நம்முடைய நிதிநிலை முதல் தேதி சம்பளம் கொடுப்பதற்கு ஏற்ற வகையிலேதான் அமைந்திருக்கிறது. நான் இதைப் பற்றி அதிகமாகச் சொல்லி மார்தட்டிக் கொண்டால், பிறகு மத்திய அரசைப் பார்த்து உதவிகளைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அந்த வகையிலே நண்பர் பாண்டியன் அவர்களுடைய பேச்சு எனக்கு ஒரு ஆயுதமாகப் பயன்படும். மத்திய அரசிடத்திலே நிதநிலையைப் பற்றி எடுத்துச் சொல்லி மேலும் தொகை பெறுவதற்கு என்ற நிலையில் நன்றி செலுத்துகிறேன்.

இந்த மாமன்றத்தில் 1990-91ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்டபோது, 432 புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று கூறி அதற்கு ஏறத்தாழ 31 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அறிவித்து இருந்தேன். ஒரு துணை மானியக் கோரிக்கை வைக்கும்போது ஏன் அதிகச் செலவா யிற்று. இவைகளுக்கு எல்லாம் எங்களிடத்திலே ஒப்புதல் பெற்றீர்களா என்று நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே கேட்டார்கள். துணை மானியக் கோரிக்கை என்பதே செலவழித்தவைகளுக்கு மன்றத்தினுடைய ஒப்புதலைப் பெறுவதுதான். இது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருந்த காலந்தொட்டு நடைபெற்று வருகின்ற ஒன்று. திடீரென்று இப்போது இலங்கை அகதிகள் வந்து விட்டார்கள். இலங்கை அகதிகள் வந்தவுடன் சட்டமன்றத்தைக் கூட்டி, அவர்களுக்காக ஒரு 6 கோடி ரூபாய் செலவழிக்கலாமா என்று அனுமதி பெற்று பிறகு செலவழிக்க இயலாது. அதுதான்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குள் தான் 'கண்டின்ஜென்சி பண்ட்' என்று இருக்கிறது. அதை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறீர்கள். அது போகவும், நீங்கள் அதிகமாக செலவழித்திருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் சுட்டிக் காட்டினேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: செலவழிக்காமலே இருக்கிற அரசு செயல்படாத அரசு. செலவழித்துவிட்டு உங்களிடத்திலே ஒப்புதல் கேட்கும்போது, செலவிலே இன்ன தவறு இருந்தது, இன்ன குற்றம் இருந்தது என்று சுட்டிக் காட்டினால், தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிற அரசு இந்த அரசு. எனவே தேவைகளுக்கு ஏற்ப, நாம் செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான ஒப்புதலை முறைப்படி, ஜனநாயக ரீதியில் இந்த மாமன்றத்திலே பெறுகிறோம்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, அறிவிக்கப் பட்ட 432 புதிய திட்டங்களில், 25.66 கோடி ரூபாய்ச் செலவில் 393 திட்டங்களுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியோடு இங்கே நான் தெரிவித்துக் கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள 30 திட்டங் களுக்கான விவரமான அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் மீதும் விரைவிலே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 432 புதிய திட்டங்களும் நடைபெறத்தொடங்கும் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில்வளத்தைப் பெருக்குவதற்கு இந்த அரசு எத்தகைய கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை மாமன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதிலும் குறிப்பாக இன்றைக்கு நம்முடைய மாநிலத்திற்கு வராது என்கிற அளவிற்கு முடிவு கட்டப்பட்டு, உத்தரப் பிரதேசத்திலுள்ள சலீம்பூர் என்ற இடத்திற்குத்தான் அது கிடைக்கும், தமிழகத்திற்குக் கிடைக்காது என்கிற அளவிற்கு, அகில இந்திய அளவிலே உள்ள எல்லா ஏடுகளிலும்கூட செய்திகள் வெளியிடப்பட்ட ஒரு சூழ்நிலை யில் 'ஆரோமேட்டிக்ளான்ட்' அது தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும் என்று வாதாடி, உத்திரப் பிரதேசத்திற்கும் வழங்குங்கள், எங்களுக்கும் அதைத் தாருங்கள் என்று கேட்டு, அண்மையிலே சென்னைக்கு வந்திருந்த மத்திய அமைச்சர், அந்தத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு குருபாதசாமி அவர்கள் பத்திரிகையாளர்கள் கூட்டத்திலே அதைப்பற்றி

எடுத்துக் கூறி, தமிழ்நாட்டிலும் சென்னை மாநகரத்தையொட்டி யுள்ள பகுதியிலே இந்த 'ஆரோமேட்டிக்' தொழிற்சாலையை வழங்குவதற்கு எங்கள் அமைச்சகம் அதற்கான ஒப்புதலை வழங்கியிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நடைபெற வேண்டிய பணிகளுக்காக அடுத்த நாள் முதலே பிரதமருக்கும் மற்றும் அந்தத் துறையினுடைய அமைச்சர் திரு. குருபாதசாமி அவர்களுக்கும் இந்த அரசின் மூலமாகக் கடிதங்கள் எழுதப்பட்டு உள்ளன. தொலைபேசி மூலமாகவும், அவர்களோடு தொடர்பு கொண்டு பேசப்பட்டு வருகிறது. மேலும் தொடர வேண்டிய சம்பிரதாயங்கள் முற்றுப் பெற்று, 1,356 கோடி ரூபாய் அளவிலே அந்த மிகப்பெரும் தொழிற்சாலை தமிழ்நாட்டிலே அமைவதற்கான கால்கோள் விழா வெகு விரைவிலே நடைபெறும் என்ற மிக மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மைத் துறையில் உலக வங்கியின் உதவியோடு சுமார் ரூ. 170 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தொடங்க இருக்கிறோம் என்று வரவு-செலவுத் திட்டத்திலே அறிவித் திருந்தேன். இப்போது அந்தத் திட்டத்தை மேலும் ஆய்வு செய்த வகையில் ரூ. 250 கோடி செலவிலே செயல்படுத்தலாம் என்று மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உலக வங்கிக் குழுவினரோடு வரும் நவம்பர் மாதத்திலே இதற்கான இறுதிப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அந்தத் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. 'டேனிடா' நிறுவனத்தின் உதவியோடு ரூ. 6.25 கோடி செலவில் சிதம்பரனார், நெல்லை கட்டபொம்மன் மாவட்டங்களில் புதிய புஞ்சைப் பயிர்த் திட்டம் ஒன்றும் நடைபெற இருக்கிறது. இதற்கான இறுதி நடவடிக்கைகள் எல்லாம் முற்றுப்பெற்று, அக்டோபர் மாதத்திலிருந்து அது செயல்படுத்தப்படும். ஒருங்கிணைந்த புஞ்சைப் பயிர்த் திட்டம் 300 இடங்களில் தொடங்கப்படும் என்று வரவு செலவுத் திட்டத்திலே அறிவித்திருந்தேன். அதற்கான ஆணை எண். 390, வேளாண்மைத்துறை சார்பில் 29-5-1990 அன்று பிறப்பிக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதால் 75,000

ஏக்கர் புதிய பரப்பளவு உள்ள புஞ்சை வேளாண்மை மேம்படுத்தப்படும். 100 புதிய வேளாண்மை விரிவாக்க நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கிறேன். அதற்கான அரசு ஆணை எண். 466, 15.6.1990ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 71/2 மற்றும் 10 குதிரைத் திறன் உள்ள மின் விசை இயக்கங்களுக்கான மின் கட்டணம் ஒரு குதிரைத் திறனுக்கு ரூ. 75-லிருந்து ரூ. 50ஆகக் குறைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனைச் செயல்படுத்தும் அரசு ஆணை எண். 714, பொதுப்பணித்துறையின் மூலமாக 29.3.1990ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அரிசி உற்பத்தித்திட்டம் மாவட்டங்களில் செயல் படுத்தப்படுவதற்கான மத்திய அரசின் ஆணை வருவதற்கு முன்பாகவே நாம் செயல்படுத்த முனைந்திருக்கிறோம். இவைகள் எல்லாம் பெரிய திட்டங்களைப் பற்றியவை. அதைப் போலவே கிராமப்புற வளர்ச்சிக்காகவும் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதற்கான அரசு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. தேதிவாரியாக அந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே இருக்கின்றன. நேரம் அதிகம் இல்லாத காரணத்தினாலே அவைகளை எல்லாம் எடுத்துக்கூற இன்றைக்கு வாய்ப்பில்லை என்பதை நான் தெரிவிக்கின்றேன்.

மூடிக்கிடந்த 6 நூற்பாலைகளின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்கு அனுமதி கோரப்பட்டுள்ளது என்பதை வரவு-செலவுத் திட்டத்தில் எடுத்துச்சொன்னேன். ஆனால் அது குறித்து மத்திய அரசின் இறுதியான பதில் வருவதற்கு முன்பே 'ஜாயின்ட் செக்டார்' -கூட்டு நிர்வாக முறைப்படி அந்த 6 ஆலை களில் இரண்டு ஆலைகளை மீண்டும் இயக்கச்செய்திருக் கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள்.

குடி தண்ணீரைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டிலே அனைத்து கிராமங்களுக்கும், குக்கிராமங்களுக்கும் அடிப்படை குடிநீர் வசதி நடப்பாண்டில் ஜூன் மாதத்திலே செய்துதரப் பட்டிருக்கின்றது. தெலுங்கு- கங்கைத் திட்டத்தை செயல்படுத்து

வதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவர்கள் கோரி யுள்ள தொகையைத் தவணை முறையில், தவறாமல் ஆந்திர மாநிலத்திற்கு தமிழக அரசின் சார்பில் நாம் வழங்கி வருகிறோம். பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரநாராயனார்கோயில், புதுக் கோட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய ஆறு நகரங் களுக்குக் குடிநீர் வழங்குகின்ற புதிய திட்டத்தைச் செயல்படுத்த நிதியுதவி வழங்க உலக வங்கி இசைவு அளித்துவிட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே செயல்படுத்திவந்துள்ள சத்துணவுத் திட்டங்களை இணைத்து ஒரே மையத்தில் 6 மாதங்களிலிருந்து 3 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தும், 3 வயதிலிருந்து 6 வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவும் கிடைக்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த திட்டம் உலக வங்கி உதவியோடு செயல்படுத்தப்படும் என்று அறிவித் திருந்தேன். வரவு-செலவுத் திட்டத்தில், இதற்கான இறுதிப் பேச்சுவார்த்தைகள் முடிக்கப்பட்டு, உலக வங்கி உதவி அளிக்க இசைவு அறிவித்துள்ளது. இந்தத் திட்டம் படிப்படியாக எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கான மொத்தச்செலவு ரூ. 350 கோடியாக இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகளுடைய நலன் கருதி இந்த அரசு அவர்களுக் குக் கொள்முதல் விலையை உயர்த்தியது உட்பட பல்வேறு சலுகைகள் வழங்கி இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். 10 ஆயிரம் ரூபாய் கடனை ரத்து செய் கின்ற மத்திய அரசுடைய அறிவிப்புப்படி- தேசிய முன்னணியி னுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டதற்கு ஏற்ப- மத்திய அரசு எடுத்துக்கொண்ட அந்த முயற்சியின் விளைவாக, மாநில அரசு உடனடியாக செயல்பட்டு அந்த பத்தாயிரம் ரூபாய் கடனை ரத்து செய்கின்ற அறிவிப்புகளை அளித்திருக்கிறது. இதிலே 1.4.1986க்குப் பிறகு பெறப்பட்டு 2.10.1989இல் நிலுவை

களிலே உள்ள, மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட காலக்கட்டத்திலே உள்ள தவணை தவறிய கடன்களுக்கு நிவாரணம் அளிக்கப் படும். அந்த நிவாரணம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதி யிலே உள்ள கடன்தார்களுக்கு அணாவாரி சர்டிபிகேட்டுகளின் அடிப்படையிலே அளிக்கப்படும். அதைப்பற்றி நம்முடைய நண்பர் திரு. நூர்முகமது அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். இந்த அணாவாரி சான்றுகள் தேவையில்லை என்று சொன்னார்கள். அணாவாரி சான்றுகள் மூலமாகப் பயன் அடையக்கூடிய விவசாயிகளுடைய கடன் நிவாரணத் தொகை 40 கோடி ரூபாய் தான். அணாவாரி செலவு மாத்திரம் அல்ல, இறந்து போன வர்கள் அல்லது இன்சால்வன்சி ஆனவர்கள். அதாவது மஞ்சள் கடுதாசி கொடுத்தவர்கள், இவர்கள் அத்தனை பேருக்கும் சேர்த்து நாம் தரவேண்டிய தொகை, இழக்க வேண்டிய தொகை 40 கோடி ரூபாய்தான். இது அன்னியில் நாம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். இது அனாவாரி சான்றிதழினை ஒரு நிபந்தனையாக ஆக்காமல், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்கிற அந்தத் தலைப்பில் கொண்டுவாருங்கள் என்று மத்திய நிதியமைச்சருக்கு எழுதி இருப்பதோடு நேரிலும் பல தடவை அவரிடத்திலே நான் விவாதித்து இருக்கிறேன். அவர்கள் அது பற்றி சிந்தித்து ஆவன செய்வதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அதற்காகக் காத்திராமல் இன்றைக்கு இந்தியாவிலேயே முதல் முயற்சி எடுத்த மாநிலம் நம்முடைய மாநிலம் என்கிற பெயரைப் பெறுகின்ற அளவுக்கு அந்த முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

அப்படி மேற்கொண்ட வகையில் கூட்டுறவுக் கடனாக நாம் தீர்க்கவேண்டிய கடன் 320 கோடி ரூபாய்தான். வணிக வங்கியின் சார்பாக தீர்க்க வேண்டிய கடன் 180 கோடி ரூபாய். ஆக 500 கோடி ரூபாய்க்கு பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. வணிக வங்கிகளின் கடனைப்பற்றிய மத்திய அரசு நேரிடையாக அவர்கள் முயற்சிசெய்து தீர்க்க வேண்டும். அதற்கிடையில் கூட்டுறவு வங்கிக் கடன்களை நாம் தீர்ப்போம் என்று முடிவெடுத்து- நான் உங்களுக்குப் பெருமை யோடு சொல்லிக்கொள்கிறேன்- 385 ஊராட்சி ஒன்றியங்களில்

305 ஊராட்சி ஒன்றியங்களின் கணக்கு எடுத்து முடிக்கப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல, அந்த ஒன்றியங்களுக்கு எல்லாம் அரசிடமிருந்து, இந்தத் துறையிலே இருந்து தாக்கீது கடிதங்கள் சென்று நீங்கள் அளிக்க வேண்டிய கடனில் 10 ஆயிரம் ரூபாய் அளிக்க வேண்டிய தேவையில்லை என்று ஒவ்வொருவருக்கும் தாக்கீது அனுப்பப்பட்டுவிட்டது. 385 ஒன்றியங்களில் 305 ஒன்றிய்ங்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. மேலும் 80 ஊராட்சி ஒன்றியங்களிலேயும் 31.8.1990க்குள் முடிவு அடைகிறது என் பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் திரு. பொன். விஜயராகவன் அவர்கள் பத்து ரூபாய் கட்டியதற்கு பணம் திருப்பித் தரப்படும் என்று சொன்னீர்கள், தரவில்லை என்று சொன்னார். அதைத் திருப்பிச் செலுத்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கு முழு அதிகாரமும் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இது 31.8.1990க்குள் வழங்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைய தினம் சிறைச்சாலையில் நடைபெற்ற சம்பவத் தைப் பற்றி இங்கே எடுத்துச்சொன்னார்கள். சட்டம்-ஒழுங்கு, அமைதி இதனால் கெட்டுவிட்டது என்பதற்கு இது ஓர் உதாரணம் என்றெல்லாம்கூட பேசப்பட்டது. இன்றைக்கு இந்திய நாட்டிலே உள்ள பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிடும் போது, மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல், நெஞ்சறியப் பேசினால் தமிழ்நாடு பல மடங்கு எந்த மாநிலத்தையும் விட சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படுவதிலே முன்னணியிலே இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

நான் பெயர் குறிப்பிட்டு எந்த மாநிலத்தின் பெயரையும் சொல்ல விரும்பவில்லை. ஒரு மாநிலத்தில் கிட்டத்தட்ட 7 மாவட்டங்கள் நக்சலைட்டுகளுடைய அதிகாரத்திலே இருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. அது எந்தக் கட்சி ஆளுகிற மாநிலம், எந்த மாநிலம் என்பதை எல்லாம் சொல்லி, அந்த

மாநிலத்தோடு எனக்கு இருக்கிற நட்பையும் அந்த மாநிலத் திற்கும் நமக்கும் இருக்கிற அணுகுமுறையையும் நான் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. 6, 7 மாவட்டங்களில் நக்சலைட்டுகள் அதிகாரம், அவர்களே, கோர்ட்டு நடத்தி, மரத்தடிகளிலே கோர்ட்டு நடத்தி தீர்ப்பு வழங்குகிறார்கள் என்ற அளவுக்கு மாநிலங்கள் இருக்கின்றன. பஞ்சாப் மாநிலத்தி னுடைய நிலைமையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. காஷ்மீரத்தைப் பற்றி சொல்லத் தேவையில்லை. அசாமிலும் அதே நிலை. அவற்றை எல்லாம் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் ஒன்றிரண்டு சம்பவங்கள், போலீஸ்காரர்களுக்குள்ளேயே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இல்லை என்ற ஒரு கருத்து இங்கே பேசப்பட்டது. நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். 10 ஆண்டுக் காலத்திலே இந்த நாட்டினுடைய நிர்வாகம் எப்படி யெல்லாம் கெட்டுப்போயிருக்கிறது என்பதற்கு அவை எல்லாம் அடையாளங்கள். யார், யார் எல்லாம், எந்த, எந்தப் பதவிகளில் எல்லாம் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்; எந்த, எந்தப் பணிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் என்பதற்கு இவை எல்லாம் அடையாளங்களே அல்லாமல், வேறு அல்ல. அப்படி நடைபெற்ற சம்பவங்கள் எதையும் நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து சட்ட ரீதியாக நாம் அவர்களைக் கைது செய்தும் வழக்குத் தொடர்ந்தும் இருக்கிறோம். அதைப் போலத்தான் நேற்று சிறைச்சாலையி லிருந்து தப்பிவிட்ட ஆட்டோ சங்கர் மற்றும் அவரோடு 4 பேர்கள். இது ஒரு சதிதான்- அதிகாரிகளோடு சேர்ந்து நடத்தப் பட்ட சதிதான்- என்கின்ற காரணத்திற்காக 12 பேர்கள் நேற்றைய தினம் வேலை நீக்கம் செய்யப்பட்டு 3 அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தப்பித்தவர்களைத் தேடுவதற்கான பலத்த முயற்சிகளையும் அரசு மேற்கொண்டிருக்கிறது. 12 பேர்களை வேலை நீக்கம் செய்தது மாத்திரம் அல்ல, இன்றைக்கு உங்களுக்குச் சொல்கிறேன். மத்திய சிறைச்சாலையினுடைய சூப்பரின்டென்டும் இன்றைக்குத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார் என்பதை இங்கே அறிவித்துக் கொள் கின்றேன். அது மாத்திரம் அல்ல, யாரும்கூட வற்புறுத்த

வில்லை; சொன்னதாகக் கூட நினைவில்லை. நானே இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி விசாரிக்க ஒரு நீதி விசாரணை நடைபெறுவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய் துள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியிடத்திலே அந்த நீதிபதியினுடைய பெயரைக் குறிப்பிட்டு அனுப்பவேண்டுமென்று அரசின் சார்பிலே வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. அந்தப் பெயர் தலைமை நீதிபதி அவர்களால் குறிப்பிடப்பட்டவுடன் அதற்கான நீதி விசாரணை நிச்சயமாக நடைபெறும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றிரண்டு அறிவிப்புகளை இங்கே அவசரமாகச் செய்ய வேண்டியிருக்கிறது. சென்னை மற்றும் இதர மாவட்டங்களிலே உள்ள அரசுக் கல்லூரி மற்றும் தொழிற் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவுத் தொகை கடைசியாக 1986ஆம் ஆண்டு மாற்றி அமைக்கப் பட்டது. அது அப்படியே இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. அது குறித்து இந்தத் துணை மானியக் கோரிக்கை விவாதிக்கப்படுகிற நேரத்தில் அறிவிக்க விரும்புகிறேன். ஆதி திராவிடர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தங்கிப்படிக்கும் அரசு மாணவர்கள் விடுதிகளில், உணவுத்தொகை பின்கண்டவாறு மாற்றி அமைக்கப்படும்.

சென்னையிலுள்ள அரசுக்கல்லூரி மற்றும் தொழில் கல்லூரி விடுதிகளில் தற்போது வழங்கப்படும் உணவுத்தொகை ரூ. 140; இனி வழங்கப்படுவது ரூ. 160. இதர மாவட்டங் களிலுள்ள அரசுக் கல்லூரி மற்றும் தொழில் கல்லூரி விடுதிகளில் தற்பொழுது வழங்கப்படுவது ரூ. 135; திருத்தி இனி வழங்கப் பட இருப்பது ரூ. 155. பள்ளி விடுதிகளில் வழங்கப்படுவது ரூ. 85. இனி வழங்கப்பட இருப்பது ரூ. 105. இதனால் சுமார் 56,000 ஆதி திராவிட மாணவர்களும் 18,000 மிக பிற்படுத்தப் பட்ட மாணவர்களும், 20,200 பிற்படுத்தப்பட்ட மாணவர்களும் பயன் அடைவார்கள். ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு இதனால்

ஆகின்ற கூடுதல் செலவு ரூ. 2.26 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

முதியோர் உதவித்தொகை ஏற்கனவே ரூ. 35-லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். 31.3.1989 அன்று இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைபவர்களுடைய எண்ணிக்கை 3.73 இலட்சம். 30.6.1990 அன்று அந்த எண்ணிக்கை 4.88 இலட்சம் என்ற அளவுக்கு உயர்ந்துள்ளது. இன்னும் கூட 30.6.1990 அன்று பரிசீலனைக் காக நிலுவையிலே இருக்கிற விண்ணப்பங்களுடைய எண்ணிக்கை 15,685 ஆகும். நிலுவையில் உள்ள விண்ணப்ப தாரர்கள் அனைவருக்கும் முதியோர் உதவித்தொகை வழங்க தற்போது ஆணையிடப்படுகிறது என்பதையும் இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவு ஆண்டு ஒன்றுக்கு 50 கோடி ரூபாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கை இராணுவத்தினுடைய விமானக் குண்டு வீச்சு போன்ற தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்பட்டு இதுவரை சுமார் 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். இது ஒரு இலட்சத்தை எட்டுமோ என்கின்ற அச்சம் நமக்கு இருக்கிறது. நாளைய தினம் இது பற்றி தீர்மானம் வருகிற காரணத்தால் அப்போது விரிவாகப் பேச இருக்கிறோம். அவர்களுக்கு முதல் கட்டமாக ஏற்கெனவே உள்ள அரசுக் கட்டிடங்களில் தங்க வைப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டன. அதுவும் போதாத சூழ்நிலையிலே 10,000 வீடுகளை அவர் களுக்கு உடனடியாகக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அதற்காக சுமார் 4,000 ரூபாய் செலவிலே அந்த வீடுகளைக் கட்டிட 4 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்படும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வீடுகள் மேலும் தேவைப்படும் என்பதால் இன்னும் கூடுதலாக 10,000 வீடுகளைக் கட்டுவதற்கு மேலும் 4 கோடி ரூபாய் சேர்த்து மொத்தமாக 8 கோடி ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்பட்டு 20,000 வீடுகள் இலங்கை அகதிகள் தங்குவ தற்காக கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம ஊழியர்கள் பற்றி ஓர் அறிவிப்பு செய்ய விரும்பு கிறேன். வருவாய்த்துறையில் சுமார் 32,000 கிராம ஊழியர்கள் தொகுப்பு ஊதியம் பெற்று வருகிறார்கள். இவர்கள் தொகுப்பு ஊதியம் பெற்று வருவதால் அகவிலைப்படி உயர்வு ஒவ்வொரு முறையும் ஒரு குறிப்பிட்ட தொகை என்று வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை மாதம் ஒன்றுக்கு 5 ரூபாயாக இருந்து கடைசியாக ரூ. 10 ஆக வழங்கப்பட்டது. அண்மையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இவர்களுடைய தொகுப்பு ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 402-லிருந்து 502 ஆக உயர்த்தப் பட்டுள்ளது. அதற்குப் பிறகு மூன்று முறை அகவிலைப்படி உயர்த்தித்தரப் பட்டுள்ளது. இவர்கள் தொகுப்பு ஊதியத்தில் இருந்தாலும் இந்த அகவிலைப்படி உயர்வு தங்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையை அரசு ஏற்று கிராமங்களிலே பணியாற்றக்கூடிய அடிப்படை ஊழியர்களுக்கு இந்த அகவிலைப்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 10 என மூன்று முறை கணக்கிட்டு வழங்கப்படும். ஒருமுறை வழங்குவதற்கு ஆண்டு ஒன்றுக்கு 37.88 இலட்சம் ரூபாய் செலவாகும். மூன்று முறைக்கும் ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் செலவாக மொத்தம் 1.14 கோடி ரூபாய் ஆகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகளோடு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன பல்வேறு கருத்துக்கள் செயற்குறிப்பிலே நிச்சயமாக ஏறும் என்பதையும் அவற்றைச் செயல்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை உரிய நேரத்திலே எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அனைவரையும் கேட்டு, அமைகின்றேன்.

நிதி ஒதுக்கீடு மசோதா

உரை : 51 **நாள்: 23.08.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பதிலுரையாக விளக்க உரை எதுவும் நிகழ்த்த வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அடுத்து இலங்கைத் தமிழர் குறித்த தீர்மானம் ஒன்று இருக்கின்ற காரணத்தால் இதில் நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஏற்கனவே இந்த அவையில் நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி விவாதிக்கப்பட்ட மானியத்தில் உறுப்பினர்கள் பலரும் எழுப்பிய கோரிக்கை களின் அடிப்படையில் அன்றைக்கே அவையின் முன்னவர் கல்வி அமைச்சர் அவர்களால் அரசின் சார்பில் தெரிவிக்கப் பட்ட பல சம்பள விகிதங்களுக்கான சட்ட முன் வடிவு இன்று சட்டமாக ஆகிறது என்பதே தவிர, வேறு ஒன்றும் இதில் புதுமை இல்லை. இதிலே ஒரேயொரு திருத்தம். அரசுக் கொறடாவையும் பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சகத்தின் பேரவைச் செயலாளர் ஆகியோருடைய வரிசையிலே இணைத்து அவர்களுக்கு உள்ள வசதிவாய்ப்புகள், ஊதியம் இவைகள் தரப் படுவதற்கான திருத்தம் அரசின் சார்பில் தரப்பட்டிருக்கின்றது. முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களுக்கும், பேரவைத் தலைவருக்கும் வழங்கப்பட்ட சம்பளம் ரூ. 2,100 என்பதி லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது. பேரவைத் துணைத் தலைவர், அமைச்சகத்தின் பேரவைச் செயலாளர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர், அரசுக் கொறடா ஆகியோ ருடைய சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,900 என்பதிலிருந்து ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டிருக்கின்றது.

உறுப்பினர்களுக்கு 600 ரூபாய் என்று இருந்தது, ஆயிரமாக உயர்த்தப்படுகின்றது. உறுப்பினர்களுக்கு வழங்கப் படும் ஈட்டுப்படி மாதம் ஒன்றுக்கு 700 ரூபாய் என்று இருந்தது, 800 ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. தொலைபேசிப் படி திங்கள் ஒன்றுக்கு 480 ரூபாய் என்பது 700 ரூபாயாக உயர்த்தப்படுகின்றது. எனவே இதுவரையில் 1,750 ரூபாய் என்ற அளவுக்குப் பெற்றுக்கொண்டிருந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் 2,500 ரூபாய் வழங்கப்படுகின்றது என்ற ஒரு நிலையில் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு வீடு, கார், செக்யூரிட்டி, கன்மேன் போன்றவைகளெல்லாம் வழங்குவதற்கும் ஏற் கெனவே உத்தரவு இடப்பட்டிருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் பேசும்போது உறுப்பினர்கள் உள்ளே வந்து கடமையை ஆற்ற வேண்டும். கையெழுத்து மாத்திரம் போட்டுவிட்டுப் போகக் கூடாது என்ற கருத்தை எடுத்துச்சொன்னார்கள். அது பற்றி சட்டமன்ற விதிகளை ஆராய்ந்து- சட்டமன்ற விதிகளை வகுக்கும்போது அந்த விதிகளுக்காக அமைக்கப்பட்ட குழு இதனை ஆலோசித்து முடிவு எடுத்து- அந்த விதியை அதிலே இணைக்க வேண்டும். அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் ஒன்றை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஜனநாயகத்திலே ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒரு நாணயத்தினுடைய இரண்டு பக்கங்கள் என்று சொல்வார்கள். எதிர்க்கட்சிக்கு உரிய மதிப்பினை ஆளும் கட்சி தருவதும், ஆளுங்கட்சிக்கு உரிய மதிப்பை எதிர்க்கட்சி தருவதும்- எவ்வளவுதான் காரசாரமான விவாதத்தை- சூடான பேச்சுக்கள் இருந்தாலும் கூட- அதிலே மனத்திற்குள் வெம்மை இல்லாமல் நாடு நலிவின்றி நடப்பதற்கான ஒரு ஒளி இருக்க வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்தினுடைய இலக்கணம். எதிர்க்கட்சி என்பது- எண்ணிக்கையில் அதிகமாக உள்ள கட்சியை மாத்திரம் நான் குறிப்பிடவில்லை. எல்லாக் கட்சிகளும், தோழமைக்கட்சியாக இருந்தாலும்கூட-

''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.''

என்ற குறளுக்கு ஏற்ப, அரசுக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய வைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பிலே உள்ள கட்சிகளாகத்தான் இருக்கின்றன. அந்த நிலையிலே பணியாற்றுகிற கட்சிகளை இங்கே நான் பாராட்டினாலும் கூட, பிரதான எதிர்க்கட்சியைப் பொறுத்தவரையில் நேற்றைய தினம் கூட சட்டமன்றத் தலைவர் அவர்களிடத்திலே கொடுத்து விட்டுப் போன தாளில்- ஆளுங்கட்சியினுடைய தலைவனாக உங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள-முதலமைச்சராக இருக்கின்ற என்னைப் பற்றி படிப்பதற்கே கண் கூசக்கூடிய அளவுக்கு எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருக்கின்றார்கள். ஏதோ எதிர்க்கட்சியைப் பிளந்து அதன் மூலமாக என்னுடைய எதிர்கால வாழ்வை நான் சரிப்படுத்திக் கொள்ள விரும்பு கிறேன் என்றும் 'ஏய், கருணாநிதி, நீ ஆட்சிக்கு ஒரு கேடு' என்பதைப்போல வாடா, போடா என்கிற வகையிலே எழுதிக் கொடுத்து விட்டுப்போயிருக்கிறார்கள். இது எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணம் அல்ல.

இங்கே மூதறிஞர் இராஜாஜி அவர்களின் திருவுருவப் படத்தினை, பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்தினை, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தினை மாட்டி வைத்திருக்கின்றோம். இங்கிருக்கிற எல்லாப் படங்களுக்கும் மேலாக உத்தமர் காந்தியடிகளுடைய படமும் இருக்கிறது. அந்த வகையிலே இந்த அவையிலே நாம் பரி மாறிக்கொள்கின்ற வார்த்தைகளிலே கண்ணியம் இருக்க வேண்டும். நாம் ஆற்ற வேண்டிய கடமையைப் பொறுத்து இடையிலே கடுமையான வார்த்தைகள் வந்தாலும்கூட- கடமைக்கும் கடுமைக்கும் இடையிலே பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை. ஒரு எழுத்துதான் வித்தியாசம்- அந்தக் கடமைக்காக சில நேரங்களில் கடுமை தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து அதற்குப்பிறகு தோழமையோடு பழகக் கூடிய ஒரு பண்பை, அரசியல் நாகரிகத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

எதிர்க்கட்சியைப் பிளக்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு என்றைக்கும் இல்லை. அவர்களே, அவர்களுக்குள்ளே இருப்பவர்களை நீக்கிக்கொண்டு அவர்களே இரண்டாகப் பிரிந்து போய், 'இதற்கு எல்லாம் காரணம் முதலமைச்சர்தான், கருணாநிதிதான்' என்று கூறுவது சரியல்ல. ஆளும் கட்சியின் சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவைக்கு இன்றைக்கு நடுநிலையாக இருந்து தீர்ப்பு வழங்குகிற அவைத்தலைவராகிய பேரவைத் தலைவர் அவர்களேகூட அன்றைக்கு திருக்குறளில் உட்பகை கூடாது' என்கிற அந்தக் குறளோடுதான் இந்த அவையைத் தொடங்கினார்கள். அதே உணர்வோடுதான் நானும் இருக்கிறேனே அல்லாமல் யாருக்கும் விரோதமாகச் செயல் பட்டு கட்சியைப் பிளக்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் கிடையாது. ஏனென்றால் இந்த அவையிலே பிரதான எதிர்க் கட்சியாக அ.தி.மு.க இருக்கிற காரணத்தால் அதைப்பற்றித் தான் இந்த அவையிலே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே இந்த சம்பள விகிதங்களின் உயர்வை இந்த அவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அன்றைக்கு விஜயராகவன் எடுத்து சொன்ன கருத்தை இந்த அரசு மனதிலே பதியவைத்துக்கொள்ள வேண்டுமென்று குறிப் பிட்டார்கள். அவைகள் எல்லாம் இந்த நேரத்திலே விவாதிக்கப் பட வேண்டிய பல திட்டங்களைப் பற்றியோ நிதிநிலை அறிக்கையிலே பேசும்போது விவாதிக்கப்படவேண்டிய கருத் துக்கள். அதனால் இன்றைக்கு நான் அவைகளை அலட்சியப் படுத்திவிட்டேன் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் எடுத்துக்காட்டி, சீனிவாசன் அவர்கள் சொன்னார்கள். ஒரு ஊராட்சிமன்றத் தலைவருக்கு, ஒன்றியத் தலைவருக்கு இருக்கின்ற அதிகாரம் கூட எம். எல். ஏ. க்களுக்கு இல்லை என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டில் எம். எல். ஏக்கள் என்றால் எம். பிக்கள் என்றால் அப்படி பழகிவிட்டோம். உண்மை யிலேயே ஊராட்சி மன்றத் தலைவர்கள்தான், ஒன்றியத் தலைவர்கள்தான் மக்களோடு இணைந்து அவர்களுக்குத்

தேவையான பணிகளை, சேவைகளை, திட்டங்களை, வளர்ச்சிக் காரியங்களைச் செய்ய வேண்டியவர்கள். ஆனால் நம்முடைய நாட்டில் எப்படி பழகிவிட்டோம் என்றால் சட்டமன்றத்திற்கு வருவது சட்டங்களை இயற்றுவதற்காக, நாட்டுக்குத் தேவையான சட்டங்களைப்பற்றி ஆராய்வதற்காக, அவைகளைப் பெரும்பான்மையாக இருந்து நிறைவேற்றிக் கொடுப்பதற்காகத் தான் சட்டமன்றம் இருக்கிறது. ஆனால் இங்கே ஒரு எம்.எல்.ஏ., எம்.பி. ஆனால் தொகுதிக்கு எத்தனை முறை வந்தாய் என்று கேட்கின்ற அளவிற்கு ஒரு பழக்கத்தை உண்டாக்கிவிட்ட காரணத்தால் ஒரு ஒன்றியத்தலைவருக்கு இருப்பதைப் போன்ற அதிகாரங்கள் எம். எல். ஏ. க்களுக்கும் இருக்க வேண்டும் என்று விரும்புகின்ற ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. அது சரியா, தவறா என்ற விவாதத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை. அப்படி ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலைக்கு ஏற்ப சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்னென்ன உதவிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளை எல்லாம் தொடர்ந்து பரிசீலித்து அடுத்தடுத்து வருகின்ற இதுபோன்ற பிரச்சினைகள் ஆராயப்படும்போது இயன்றதை இந்த அரசு செய்யும் என்பதை உறுதியாகத் தெரிவித்து இந்த சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

பொது விற்பனை வரி மானியம்

உரை : 52 நாள் : 06.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலிருந்து, பொது விற்பனைவரி மற்றும் தீர்வைகள் நிர்வாகம், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், மாவட்ட நிர்வாகம் ஆகிய தலைப்புகளில், மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை, தங்களுடைய கோரிக்கைகளை, இந்த அரசுக்குத் தேவையான, ஆழமான ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சி சார்பாகப் பேசிய உறுப்பினர்களைத் தவிர, எதிர் வரிசையிலே அமர்ந்துள்ள திரு. சொக்கர் அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு, கணேசன் அவர்களும், திரு. நிஜாமுதீன் அவர்களும், திரு. கே சுப்பராயன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும், திரு. மோகன் கந்தசாமி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும், இந்த மானியக் கோரிக்கையிலே தங்களுடைய பாராட்டுக்களை வழங்கியிருப்பதோடு இன்னும் சில மாறுதல்கள் செய்யப்பட்டால் வரிக்கொள்கையில் ஏற்றம் பெறமுடியும் என்பதையும், நிர்வாகத்திலே மேலும் வேகத்தை, விரைவைக் காணமுடியும் என்பதையும் எடுத்துக்கூறியிருக் கிறார்கள்.

அவர்கள் தெரிவித்த ஆலோசனைகள் எதுவும் புறக்கணிக்கப்படக்கூடியவை அல்ல. உடனடியாக நடைமுறைப் படுத்தக்கூடியது என்று நான் சொல்லமுடியாவிட்டாலும் மீண்டும் மீண்டும் கலந்து பேசி, மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல அடுத்து வரும்

நிதிநிலை அறிக்கைகளுக்கும் சரக்குத் தேவையென்பதற்காக அவைகளை எல்லாம் சற்று ஒத்திவைத்துப் பின்னர் படிப்படியாக-இன்னும் 5 ஆண்டு காலத்திற்கு ஜனநாயக ரீதியிலே இருக்கக்கூடிய ஆட்சி இது என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு மாத காலத்திற்குள்ளாகவே எல்லா விதமான சலுகைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்றி விட்டால் பிறகு உங்களுக்கும் வேலை இருக்காது, எங்களுக்கும் வேலை இருக்காது என்ற அந்தச் சிரமத்தை எண்ணி சற்று உங்களுடைய வாய்ப்புகள் பெருக, உங்களைத் தேர்ந்தெடுத்த மக்கள் உங்களை அடிக்கடி நாடி வந்து தங்களுடைய கோரிக்கைகளைத்தர வசதி செய்து கொடுக்கக்கூடிய வகையிலே சிலவற்றைப் பின்னுக்குத் தள்ளி செய்யப்பட்டவைகளுக்கான விளக்கங்களையும், செய்ய வேண்டியவைகளுக்கான கருத்துக்களையும் உங்களுடைய மேலான முன்னிலையில் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு வைத்திட நான் நின்றுகொண்டிருக்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானத்திலே பிற மாநிலங்களில் உள்நாட்டு பனியன் உற்பத்திக்கு விற்பனை வரி விதிக்காத நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் விற்பனை வரி விதிக்கப்பட்டுள்ளது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார். இதுபற்றி நான் விசாரித்து அறிந்தபோது பிற மாநிலங்களில் உள்நாட்டுப் பனியன்கள் உற்பத்திக்கு விற்பனை வரி இருக்கிறது என்ற தகவல் வந்துள்ளது. ஆந்திராவிலே 2 சதவிகிதம், கர்நாடகத்திலே 3 சதவிகிதம், மராட்டியத்திலே 4 சதவிகிதம், புதுவையிலே 3½ சதவிகிதம், கேரளாவிலே 6 சதவிகிதம் உள்நாட்டு பனியன் உற்பத்திக்கு அங்கெல்லாம் விற்பனை வரி விதிக்கப்பட்டுத்தான் இருக்கிறது என்பதற்கு இவை ஆதாரங்கள். ஆனால் அதேநேரத்தில் ஒன்றை நாம் சிந்திக்க வேண்டும். தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் பனியன்களில் 85 சதவிகிதம் வெளி மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன. 15 சதவிகிதம்தான் தமிழ்நாட்டுக்குள்ளே விற்பனை ஆகின்றன. இவ்வாறு வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் பனியன்களுக்கு மத்திய விற்பனை வரி இதுவரையிலே 2 சதவிகிதமாக இருந்ததை-அந்த வரியையும் மாநிலம்தான் வசூலிக்கிறது-2 சதவிகிதமாக

இருந்ததை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளையும் திரு. மோகன் கந்தசாமி அவர்களை விட்டுவிடக் கூடாது, அவருடைய வேண்டு கோளையும் செவிமடுத்து, அதை 1 சதவிகிதமாக ஏற்கெனவே குறைத்து நிதிநிலை அறிக்கைக்கான என்னுடைய பதிலுரையிலே நான் தெரிவித்திருக்கிறேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பனியன்களுக்கு மத்திய விற்பனை வரி எதுவும் கிடையாது என்பதையும் நான் அறிவேன். எனவே 2 சதவிகிதத்தை 1 சதவிகிதமாகக் குறைத்து இருக்கிறோம். இது மகிழ்ச்சிக்குரிய செய்தியென்று அவர்கள் ஏற்றுக்கொண்டாலும் கூட, பனியன்களுக்கு அறவே விற்பனை வரியை எடுத்துவிட வேண்டும் என்று அவர்கள் தொடர்ந்து வைத்துள்ள இந்தக் கோரிக்கையை நான் அலட்சியப்படுத்த மாட்டேன். இந்த பனியன்களுக்கான வரியை நீக்க வேண்டுமென்பதில் திரு. சுப்பராயன் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, திரு. மோகன்கந்தசாமி அவர்களுக்கு எவ்வளவு ஆர்வமிருக்கிறதோ, அதைப்போன்ற ஆர்வம் எங்களுக்கும் இருக்கிறது. சிக்கலில்லாமல் இதைத் தீர்த்து வைக்கின்ற முயற்சியில் நான் ஈடுபடுவேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மதிப்பு கூட்டு வரி பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இது மீண்டும் பலமுனை வரிக்கு வழி வகுத்துவிடுமோ என்ற ஐயத்தை இங்கே கிளப்பினார்கள். உதாரணத்திற்கு ஒரு உற்பத்தியாளர் ஒரு பொருளை 100 ரூபாய்க்குச் செய்வதாக வைத்துக்கொள்வோம். ஒரு மர நாற்காலி செய்வதாக வைத்துக்கொள்வோம். அப்படிச் செய்யும்போது அதற்கு 10 சதவீதம் வரி விதித்தால் 100 ரூபாய் பொருள் 110 ரூபாயாக ஆகிறது. 110 ரூபாய்க்கு வாங்கிய ஒருவர் அதற்கு மெத்தை தைத்து, குஷன் வைத்து அதை 150 ரூபாய்க்கு விற்கிறார் என்றால் அந்த 150 ரூபாய்க்கு வரி போடப்படாமல், 110லேயிருந்து உயர்த்தி 40 ரூபாய் மதிப்பை உயர்த்துகிறார் அல்லவா. அந்த 40 ரூபாய்க்குத்தான் வரி போடப்படுகிறது. அதனால்தான் இது மதிப்புக் கூட்டுவரி என்ற பெயரைப் பெற்றுள்ளது. அந்த வரிதான் 'Value Added Tax-VAT'

என்று சுருக்கமான பெயரிலே அழைக்கப்படுகிறது. மொத்தமாக ஒருவர் நாற்காலியைச் செய்து, அதிலே குஷன் வைத்து 150 ரூபாய்க்கு விற்கும்போது அதற்கு வருகின்ற வரியைவிட, இது இரண்டு பகுதியாகப் பிரிக்கப்பட்டு-முதலிலே செய்யப்பட்டது சாதாரண நாற்காலி, பிறகு பளபளப்பாக்கப்பட்ட நாற்காலி என்று இரண்டுக்கும் வரியைப் பிரிக்கும்போது-வரி குறைகிறது. இதிலே ஏதாவது தகராறு ஏற்படுமானால், பிரச்சினை ஏற்படுமானால், மாண்புமிகு சொக்கர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல அது மறுபரிசீலனைக்கு உரியது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிகர்கள் தங்களுடைய Renewal of Registration அதாவது, பதிவுகளைப் புதுப்பித்தலைப் பற்றி சொக்கர் அவர்கள் ஒரு யோசனை சொன்னார்கள், அது அரிய யோசனை. தனியாக அவர்கள் என்னிடத்திலே பேசும்போது சொன்னார்கள். என்னிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் பேசும்போது சொன்னார்கள். நீங்கள் இவ்வளவு சலுகைகள் அளித்தி ருப்பதற்கு நாங்கள் ஒவ்வொரு வணிகரும் இந்த ஆண்டு 5 ஆயிரம் ரூபாயை பதிவுத்தொகையாகக் கட்டிவிடுகிறோம், பிறகு ஆண்டுதோறும் 200 ரூபாய் கட்டுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் எனக்குள்ள சங்கடம் என்னவென்றால், சலுகை அளித்துவிட்டதற்கு 5 ஆயிரம் ரூபாயை அவர்களிடம் பெறுவது என்பது பிடித்தமான காரியமாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் சொக்கர் அவர்களுடைய வார்த்தையை முழுமையாகப் புறக்கணித்து விடக்கூடாது என்பதற்காக நாம் செய்துள்ள திருத்தம் : 5ஆண்டு காலத்திற்கு ஒரு முறை-இப்போது ஆண்டுதோறும் பணத்தைக் கட்டித்தான் பதிவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. அதற்குப் பதிலாக, ஆண்டு ஒன்றுக்கு 200 ரூபாய் அவர்கள் கட்ட வேண்டும், இல்லாவிட்டால் 5 ஆண்டு காலத்திற்கு ஒரு முறையாக-ஆயிரம் ரூபாய கட்டிவிட்டால் பிறகு 5 ஆண்டுகாலத்திற்குப் பிறகு அந்தப் பதிவைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இதனால் ஆண்டுதோறும் அலைச்சல் மிச்சம், ஆண்டுதோறும் அதிகாரிகளோடு அவர்களுக்கு ஏற்படுகின்ற சங்கடங்கள் மிச்சம். எனவேதான் இதை வணிகர்களுடைய

விருப்பத்திற்கே-Option-க்கே இந்த அரசு விட்டுவிடுகிறது. 200 ரூபாய் ஆண்டுதோறும் கட்டினாலும் கட்டலாம், அல்லது 1000 ரூபாயைக் கட்டிவிட்டு 5 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபதிவு செய்துகொண்டாலும் செய்துகொள்ளலாம். வேண்டுமானால் ஒன்றை யோசித்துப் பார்க்கலாம். 5 ஆயிரம் ரூபாய், ஆவலைத் தூண்டுகின்ற யோசனை. எனவே 5 ஆயிரம் ரூபாய் கட்டிவிட்டால் 25 ஆண்டுகளுக்கு அவர்களிடத்திலே மறுபதிவுக்கான பணத்தை கேட்பதில்லையென்று ஒரு முடிவை அரசு எடுப்பதை வணிகப் பெருமக்கள் அவர்களுடைய சங்கங்களின் சார்பாக ஒப்புக்கொள்வார்களேயானால் 5 ஆயிரம் ரூபாயைக் கட்டிவிட்டு ஒரு வெள்ளி விழா வரையில் 25 ஆண்டுகள் வரையில் மறுபதிவுக்குப் பணம் கட்டாமல் இருக்கலாம். இதை மாண்புமிகு சொக்கர் அவர்கள் வணிகர் சங்கங்களுடன் கலந்து பேசி முடிவு செய்து சொல்வாரேயானால், இந்த ஆண்டே பல கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரும் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கிருஷ்ணசாமி பேசும்போது சொன்னார்கள். இவ்வளவு சலுகைகளை அளித்திருக்கிறீர்களே, அது சாதாரண மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்க்கிறீர்களா என்று கேட்டார். மாண்புமிகு சந்தானம் அவர்களும் சொன்னார்கள். ஏழை எளிய மக்களுக்கு இந்த வரிகளால் என்ன லாபம் என்ற சங்கடத்தை அவர் இங்கே புலப்படுத்தினார். இந்த பட்ஜெட்டுக்கு முன்பு இருந்த விலைவாசிகளுக்கும் பட்ஜெட்டுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள விலைவாசிகளுக்கும் உள்ள வேறுபாட்டை நான் சொல்ல விரும்புகிறேன். இது ஏதோ ஒரு கடையிலே எடுக்கப்பட்ட புள்ளி விவரம் அல்ல. வடசென்னையில், வண்ணாரப்பேட்டைப் பகுதியிலே உள்ள 40 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கூட்டுறவுப் பண்டக சாலையிலிருந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரம். இந்த பட்ஜெட் வருவதற்கு முன்பு மஞ்சள் விலை ஒரு கிலோ 41 ரூபாய் 50 காசு. இன்று 40 ரூபாய் 50 காசு. இந்த பட்ஜெட் வருவதற்கு முன்பு துவரம்பருப்பின் விலை 33 ரூபாய் 20 காசு இன்று 30 ரூபாய். உளுத்தம்பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய்,

இன்று 27 ரூபாய் 50 காசு. பயத்தம் பருப்பு ரூ. 27.70 லிருந்து ரூ. 23.50க்கும் புளி ரூ. 29-லிருந்து ரூ. 21க்கும் குறைந்திருக்கிறது. சீரகம் ரூ. 90-லிருந்து ரூ. 77-ஆகக் குறைந்திருக்கிறது. மிளகு ரூ. 89-லிருந்து ரூ. 84 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. கடுகு ரூ. 23.20-லிருந்து ரூ. 20 ஆகக் குறைந்திருக்கிறது. தனியா ரூ. 28.70-லிருந்து ரூ. 22 ஆகக் குறைந்திருக்கிறது. சீயக்காய் ரூ. 41-லிருந்து ரூ. 34 ஆகக் குறைந்திருக்கிறது. பொன்னி அரிசி ரூ. 16-லிருந்து ரூ. 15 அளவிலும், விலை உயராமல் சில இடங்களில் அதே 16 ரூபாய் அளவிலும் விற்பனை ஆகிறது. நல்லெண்ணெய் ரூ. 56.70 என்கிற நிலையிலிருந்து 54 ரூபாயாகக் குறைந்திருக்கிறது. ரேடியோ ஆயில் ரூ. 48-லிருந்து ரூ. 45-ஆகக் குறைந்திருக்கிறது. மிளகாய் ரூ. 49லிருந்து ரூ. 42 அல்லது ரூ. 45 வரையிலேதான் இன்றைக்கு விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது.

இவைகளன்னியில், இந்த வரிச் சலுகைகளால் ஏற்பட்ட இந்த லாபம் அன்னியில், தமிழ்நாட்டில் வணிகப்பெருங்குடி மக்களுக்கு மாத்திரமல்ல, தொழில் வளர்ச்சியை ஊக்கப் படுத்தும் வகையிலேயும் தரப்பட்டுள்ள சலுகைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பாராட்டிப் பேசி இருக்கின்றார்கள். தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள் ''ரா மெட்டிரியல்ஸ்'' கொள்முதல் செய்வதில் ஏற்கெனவே செலுத்தப்பட்டு வந்த 5,6, சதவிகிதம் ஒட்டுமொத்த வரி தற்போது 3 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில், நான் சேலம் சென்றிருந்தேன். அங்கேயும் சரி, சென்னையில் என்னைச் சந்திக்கின்ற பல நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் சரி, என்னிடத்தில் கொஞ்சம் கோபமாகவே வாதிடுகிறார்கள். மூன்றாக இருந்ததை நான்காக ஆக்கி வீட்டீர்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே, மூன்றாக இருந்தது அடிப்படை வரி, அந்த மூன்று சர்சார்ஜ் அதற்கு மேலும் இன்னொரு சர்சார்ஜ், அதற்கு மேலும் கூடுதல் விற்பனை வரி 'அடிஷனல் சேல்ஸ் டேக்ஸ்' என்ற முறையிலே 56 ஆக இருந்ததை 4 ஆகக் குறைத்து இருக்கின்றோம். ஆனால் வந்து பேசுகின்றவர்கள் மூன்றை நான்காக ஆக்கிவிட்டார்கள் என்கிறார்கள். இல்லை. 5.6 ஐத்தான் 4 ஆக ஆக்கி

இருக்கிறோம். இல்லை, நாங்கள் 3-ஐத்தான் கூட்டினோம் என்றால், அப்படியானால், நீங்களும் இடையிலே உள்ள அதிகாரிகளும் ஏதோ அட்ஜஸ்ட் பண்ணியிருக்கிறீர்கள். இந்த வரியினால், எங்களுக்கு இனிமேல் அதிக வருமானம் வரும். பரவாயில்லை மகிழ்ச்சி என்று நான் அவர்களை வழி அனுப்பி வைக்கிறேன். தொழிற்சாலைக்குப் பயன்படுத்தப்படும் 'கேப்பிடல் குட்ஸ்', முதலீட்டுப் பொருள்களுக்கு ஏற்கெனவே உள்ள 11.6 சதவிகித ஒட்டுமொத்த வரி தற்போது மூன்று சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அரசால், அங்கீகரிக்கப் பட்ட மின் உற்பத்தித் திட்டங்களுக்கு வாங்கப்படும் முதலீட்டுப் பொருள்களுக்கு 16.4 சதவிகித ஒட்டுமொத்த வரி தற்போது மூன்று கதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அரசால், அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களுக்கு வாங்கப்படும் முதலீட்டுப் பொருள்களுக்கு 16.4 சதவிகிதமாக இருந்த ஒட்டுமொத்த வரி, தற்போது மூன்று சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தியும், பொருள்களின் உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த அளவிற்கு வரிக்குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது. 100 சதவிகித எக்ஸ்போர்ட் ஓரியன்டட் யுனிட்ஸ், அதாவது 100 சதவிகித ஏற்றுமதி நிறுவனங்கள்; யுனிட்ஸ், அதாவது அலகுகள் என்று அழைப்பது உண்டு. அவைகளும் மற்றும் சென்னை ஏற்றுமதி மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்களும் மாநிலத்திற்குள் வாங்கும் மூலப் பொருட்களுக்கு தற்போது 5.6 சதவிகித ஒட்டுமொத்த வரி விதிக்கப்பட்டு வந்தது. இதற்கு முற்றிலுமாக விற்பனை வரி விதிப்பதிலிருந்தே விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். மீண்டும் இதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். கரும்பின் மீதான கொள்முதல் வரி 14.7 சதவிகிதம் ஒட்டுமொத்த வரியிலிருந்து 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது ஏன் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு கேட்டார். சர்க்கரை ஆலைகளினுடைய லாபத்திற்கா என்ற கேட்டார். அதை ஓரளவுக்கு ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏன் என்றால், சர்க்கரை ஆலைகளில் பெரும்பாலானவை நம்முடைய அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும் இருக்கின்றன. எனவே, அந்த லாபத்தைக் கூட்டுறவுச் சர்க்கரை

ஆலைகளும் பெறமுடியும் என்பதற்காகத்தான் இந்த 14.7 சதவிகிதத்தை 8 சதவிகிதமாகக் குறைத்து இருக்கிறோம். இப்படித் தரப்பட்ட சலுகைகள் மூலம் பயன்பெற்றவர்களுடைய எண்ணிக்கையையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

வரி வதிப்பு எல்லைக்குள்ளே வர தற்போதுள்ள விற்பனை அளவு ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் உள்ள 40 ஆயிரம் சிறு வணிகர்கள் பயனடைகிறார்கள்.

ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்கு மேற்படாத விற்பனையளவுள்ள வணிகர்களுக்கு இணக்க வரி விதிப்பு முறை- Compounding Tax அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வணிகர்கள் மொத்த விற்பனை அளவிற்குக் கணக்குகளைப் பராமரித்தாலே போதுமானது. அதாவது மொத்த விற்பனைக் கணக்குகளைப் பராமரித்தால் மாத்திரம் போதும். அடிக்கடி அதிகாரிகளுடைய தொல்லைக்கு ஆளாகத் தேவையில்லை. விரிவான பராமரிப்புக் கணக்குகளை வைத்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. கம்பவுண்டிங் முறை, இதுகூட வணிகர்களுடைய விருப்பத்தின்பால் அதாவது 'ஆப்ஷன்' என்ற அடிப்படையிலேதான் அமைகிறதே தவிர, கட்டாயம் எதுவும் கிடையாது. அவர்கள் கம்பவுண்டிங் முறையை ஒத்துக்கொண்டாலும் சரி, இல்லை, அடிக்கடி அதிகாரிகளைப் பார்த்து, அந்த அளவிலே தீர்த்துக் கொள்ளலாம் என்றாலும் சரி, அது அவர்களுடைய 'ஆப்ஷன்'. இதன்மூலம் சுமார் 40 ஆயிரம் வணிகர்கள் பயன்பெறுகிறார்கள்.

சுயவரி மதிப்பீடு முறை- Self Assessment பற்றி இங்கே பேசப்பட்டது. இதில் 5 இலட்சம் ரூபாய்க்கு மேல் 10 இலட்சம் ரூபாய் வரை விற்பனையளவுள்ள வணிகர்களுக்கு இது விரிவாக்கப்படுகிறது. இதனால் 70,000-க்கும் மேற்பட்ட வணிகர்கள் பயனடைகிறார்கள். கூடுதல் விற்பனை வரி வரம்பை ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 100 கோடியாக உயர்த்தியதன் காரணமாக சுமார் 70,000 பேர் பயனடைகிறார்கள்.

நிதி நிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்குப் பதிலளித்தபோது முகவர்களின் விற்பனைத்தொகையை ஒருங்கிணைத்து-வெளி மாநிலத்திலிருந்து பொருள்களை இங்கே கொண்டுவந்து விற்கிறார்களே அந்த நிறுவனத்தினுடைய முகவர்கள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களுடைய விற்பனைத் தொகையை எல்லாம் ஒருங்கிணைத்து-அவர்கள் முதன்மை நிறுவனத்தின்மீது, கூடுதல் விற்பனை வரி விதிப்பது தொடர்பாக ஆராயப்படும் என்று கூறியிருந்தேன். இப்படி நன்கு ஆராய்ந்து அதன் விளைவாக எடுத்துள்ள முடிவு, தமிழகத்திற்கு வெளியே தலைமையகத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களின் கிளைகள் அல்லது முகவர்களுக்கு, கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான உயர்த்தப்பட்ட உச்சவரம்பு பொருந்தாது. அவர்களுக்கு முன்பிருந்த நிலையே நீடிக்கும் என்ற முடிவு எடுக்கப் பட்டிருக்கிறது. ஏனென்றால் தமிழகத்திலே உள்ளவர்கள் இந்த 100 கோடி ரூபாய்க்கு மேல் 'டர்ன் ஓவர்' உள்ளவர்கள் இந்த வரிக்கு ஆளாக வேண்டியிருக்கும். அதே நேரத்திலே, வெளி மாநிலத்திலே உள்ளவர்கள் இந்த வரிக்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ள நேரிடும் என்பதற்காகத்தான் வெளி மாநிலங்களிலிருந்து வந்து இங்கே பொருள்களை விற்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இந்தக் கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான உச்சவரம்பு பொருந்தாது என்று திட்டவட்டமாக முடிவு எடுக்கப்பட்டி ருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்வரி (சர்சார்ஜ்), கூடுதல் வரி (அடிஷனல் சர்சார்ஜ்) ஆகிய வரிகளை அறவே நீக்கியதால் அவை சம்பந்தப்பட்ட படிவங்களையும் கணக்குகளையும் வணிகர்கள் பராமரிக்கத் தேவையில்லை என்று அறிவித்துவிட்டதனால், இதன் மூலமாக 1 இலட்சத்து 50 ஆயிரம் வணிகர்கள் பயனடைகிறார்கள் என்பதையும் நான் பெருமிதத்தோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'ரேண்டம்' சுயவரி மதிப்பீடு பற்றி திரு. சொக்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வரம்பு 10 இலட்சம் ரூபாய் விற்பனை அளவுள்ள வணிகர்களையும், தொழிற்சாலைகளையும்

உள்ளடக்கும் வகையில் 10 இலட்சம் ரூபாயாக வரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான வரி விதிப்பாளர்கள் பயன்பெறும் வகையில் ஏற்கெனவே உள்ள நிபந்தனைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு 25 சதவீதம் பேர் 'கம்ப்யூட்டர்' மூலமாக அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தேர்வு செய்யப்படுவார்கள். அவர்கள்மாத்திரம் விரிவான கணக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவார்கள். வணிக வரி ஆணையரால் கணிப்பொறியைப் பயன்படுத்தி அங்கொன்றும் இங்கொன்றுமாகப் தேர்வு செய்யப்படும். இத்தேர்வில் உள்ளூர் வணிகவரி அலுவலர்களுக்குத் தம் சொந்த விருப்புரிமை இல்லை. மீதம் உள்ள 75 சதவீத வரி விதிப்புக்குரியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தாக்கல் செய்த கணக்கின்படி வரி விதிப்பு செய்யப்படும். அவர்கள் தவறு செய்தார்கள் என்றால் அடுத்த ஆண்டு இந்த கம்யூட்டர் முறையின் மூலம் அந்த வகையில் 25 சதவீதம் பேரைப் பொறுக்கி எடுக்கும்போது அதில் அவர்கள் சிக்கிக்கொள்ளக்கூடும். எனவேதான் இதையும் ஒரு பரீட்சார்த்தமாக இந்த அரசு செய்துபார்க்க, வணிகர்கள் நலனுக்காக முன்வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில தவறான செய்திகள் பத்திரிகைகளிலே வந்துவிடுகின்றன. பத்திரிகைக்காரர்களுக்குச் சரியான தகவல் கிடைக்காத காரணத்தால் வரக்கூடும். இன்று காலையிலேகூட, ஆயத்த ஆடைகளுக்கு 8 சதவீத வரி இருப்பதாக பத்திரிகையிலே செய்தி வந்தது. ஆனால் ஆயத்த ஆடைகள் என்று சொல்லப்படுகின்ற ரெடிமேட் கார்மெண்ட்ஸ் இவைகளுக்குப் புதிய வரி விதிப்பு முறையிலே உள்ள பிரச்சினைகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது, அந்த வணிகர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு-குறிப்பாக நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஊரான மதுரையிலிருந்து வணிகர்கள், வந்தார்கள். இந்த ஆயத்த ஆடைகளுக்கு வரி குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு வந்தார்கள். அவர்களுக்கு அந்த வரியைக் குறைப்பதற்காக வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் ரெடிமேட் துணிகளுக்கு 'சி'

ஃபாரம் கிடைக்காதபட்சத்தில், 10 சதவிகிதம் வரி கட்ட வேண்டியிருக்கிறது என்று அவர்கள் தெரிவித்தார்கள். வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல், தமிழகத்திலேயே விற்கப்படும் துணிகளுக்கு 8 சதவிகிதமாக வரி இருக்கிறது-இனிமேல் ரெடிமேட் ஆடைகளை நம்முடைய மாநிலத்தில் விற்றாலும் சரி, 'சி' ஃபாரம் பெற்றோ, பெறாமலோ வெளி மாநிலங்களுக்கு அனுப்பினாலும் சரி, அவர்கள் 4 சதவீதம் வரி மாத்திரமே செலுத்தினால் போதும் என்று ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் இன்றைக்குப் பத்திரிகையிலே 8 சதவிகித வரி இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது ஒரு தவறான தகவல் என்பதைமாத்திரம் நான் பணிவன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொக்கர் அவர்கள் சொன்னார்கள். எமெர்ஜென்சி லைட், அதற்கு முன்னால் ஒட்டுமொத்த வரி 16.4 என்று இருந்ததை, இப்போது 16 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம். 0.4 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, இல்லை ஒட்டுமொத்த வரி ; சர் சார்ஜ், சர் சார்ஜ்க்கு சர் சார்ஜ், அடிஷனல் சர் சார்ஜ். (குறுக்கீடு)

திரு. ஆர். சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படை வரி 3 சதவீதமாக இருக்கும்போது, சர் சார்ஜ், அடிஷனல் சர் சார்ஜ், அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் மூன்றும் சேர்ந்து அது 5.6 சதவீதமாகத்தான் மாறும். ஆனால் அடிப்படை வரி 12 சதவீதமாக இருக்கும்போதுதான் சர் சார்ஜ், அடிஷனல் சர் சார்ஜ், ஏ.எஸ்.டி சேர்ந்து அந்த 16.6 சதவீதமாக மாறும். ஆனால் இந்த எமர்ஜென்சி லைட்டைப் பொறுத்த வரையிலே, முன்னால் 3 சதவீத வரிதான், அடிப்படை வரியாக இருந்தது. இந்தக் குழப்பத்திற்கு என்ன காரணம் என்றால், அது எலக்ட்ரிகல் கூட்சா, எலக்ட்ரானிக் கூட்சா என்பதில் தவறாக விளக்கம் அளித்திருக்கிறார்கள். ஆகவே முன்னால் இருந்தது 3 சதவீத வரி, அடிப்படை வரி, மொத்த வரி என்று கணக்குப் பார்த்தால் 5.6 சதவீதமாகும். இப்போது ரிவைஸ் செய்ததன்படி 4 சதவீத வரிதான் அதற்கு இருக்க வேண்டும். அதில் ஏதோ ஒரு

தவறு நடந்து இருக்கிறது. சாவகாசமாக பார்த்துகூட நீங்கள் நியாயம் வழங்கினால் போதுமானது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : சாவகாசமாக அல்ல; சகவாசமாகவே பார்க்கிறேன். கையினால் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களுக்கு பிரிவு 3 (3)ன்படி சலுகை கொடுக்க வேண்டுமென்று சொக்கர் அவர்கள் சொன்னார்கள். இதற்குத் தேவையான சட்டத்திருத்தம் கொண்டுவரப்படும் என்பதை இங்கே அவருக்கும், மற்றவர்களுக்கும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

செங்கல்லுக்குப் பயன்படும் மண்ணுக்கு 8 சதவீத வரி இருக்கிறது. இதை ரத்துச்செய்ய வேண்டுமென்று சொக்கர் அவர்களும் சொன்னார்கள். நம்முடைய சந்தானம் அவர்களும் கிராம மக்களின் சார்பாக இங்கே போர்க்குரல் கொடுத்தார்கள். முன்பு அடிப்படை விற்பனை வரி 8 சதவீதமாகவும், மேல்வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளோடு சேர்த்து மொத்த வரி 11.6 சதவீதமாகவும் இருந்தது. அதை இந்த அரசு ஏற்கெனவே 4 சதவீதமாகக் குறைத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நண்பர் நிஜாமுதீன், அவர் எந்தக் கோரிக்கையை வைத்தாலும் வீண்போவதில்லை. இன்றைக்கும் ஒரு கோரிக்கை வைத்தார். லாட்ஜ்களுக்கு ஆடம்பர வரி வரம்பு தற்போது ரூபாய் 50 ஆக இருப்பதை உயர்த்த வேண்டும் என்றார். வரி வரம்பை, 50 ரூபாய் லாட்ஜ்களுக்கு ; அறைகளுக்கு வாடகை வாங்குவதால் வரி உண்டு என்று இருப்பதை, இந்த ரூ. 50-ஐ உயர்த்தி வரிப் பளுவைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். இது வரை இந்த ஆடம்பர வரி, அறை வாடகை ரூபாய் 50க்கு மேல் இருந்தால் உண்டு என்று இருந்தது ; அறை வாடகை 50க்கு மேல் இருந்தால் அதற்கு வரி உண்டு என்று இருந்தது ; இனி அந்த வரம்பை தற்போது, ரூபாய் 200-ஆக உயர்த்த இந்த முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

வரி விதிப்பில் அதிகாரிகள் ஊழல்கள் புரிகிறார்கள் என்ற கருத்தைப் பரவலாக எல்லா உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும் இங்கே சுட்டிக்காட்டினார். ஆனால், அவர்கள் இங்கே எதிர்க்கட்சியிலே அமர்ந்து இருந்தபோது கடந்த காலத்தில் இந்த வரி விதிப்பில் எவ்வளவு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை அவர் மறந்து இருந்தாலும் நினைவுக்குக் கொண்டுவருவது என்னுடைய கடமை ஆகும். இரண்டே இரண்டு மாத்திரம் (குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு : நான் அதுபற்றிச் சொல்லவில்லை. ஒரே ஒரு நிமிஷம். சாரி, நான் சொல்வது, ஊழல் அதிகாரிகள் என்று சொன்னால், கமர்ஷியல் டாக்ஸ் அதிகாரிகள் எல்லாம் கோபித்துக்கொள்ளப்போகிறார்கள். நான் சொன்னது. அதை முறைப்படுத்தினால், இன்னும் கூட வருமானம் வருமே என்று சொன்னேனே தவிர, அதிகாரிகள் எல்லாம் ஊழல் பண்ணுகிறார்கள் என்று சொல்லவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : நான் சொல்ல வருவது என்ன என்பது, இரண்டே இரண்டு எடுத்துக் காட்டுகள்தான் ; நிறைய இருக்கின்றன ; நேரம் இல்லாத காரணத்தால் இரண்டு எடுத்துக்காட்டுகள் மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன்.

தமிழ்நாடு மாவு ஆலைகள் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்தச் சங்கம் ஒரு கோரிக்கை வைத்தது கடந்த கால அரசின் முன்னால். கோதுமை மாவை அறிவிக்கப்பட்ட பொருளாக -declared goods - ஆக அப்படி என்றால், 4 சதவீத வரி கூட இல்லாத-goods, declared goods - ஆகக் கருத வேண்டுமென்று வழக்குப் போட்டார்கள், அதை - declared goods - ஆக அறிவிக்க வேண்டும் என்று, எங்களுக்கு வரி கூடாது என்று வழக்கே போட்டார்கள். உயர்நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றது. தீர்ப்பு அந்த வணிகர்களுக்குப் பாதகமாக அமைந்தது. ஏன் வரி கொடுக்கக்கூடாது, declared goods -ஆக அறிவிக்க முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. உச்ச நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். வணிகர்கள் அல்லவா?

எனவே கடைசி வரையிலும் பார்ப்பது என்று உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலும் அவர்களுக்குப் பாதகமாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது ; அரசாங்கத்திற்குச் சாதகமாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது. இந்த வழக்கு நடைபெற்ற இடைப்பட்ட காலத்தில் அவர்கள் மேல் வரி, கூடுதல் மேல் வரி, மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளை அரசுக்கு செலுத்தாமலேயே இருந்தார்கள், வழக்கு நடைபெற்ற காரணத்தால். 1967ஆம் ஆண்டு அரசாணையின்படி ஒரு நிறுவனம் உயர்நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்து அதிலே தோல்வியுற்றால் உச்ச நீதிமன்றத்திலும் தொடர்ந்து வழக்கில் தோல்வியுற்றால் அவர்கள் வரித்தள்ளுபடிக்குத் தகுதியற்றவர்கள். இதுதான் 1967 ஆம் ஆண்டு அரசு ஆணை. ஆனால், தமிழ்நாடு மாவு ஆலைகள் சங்கத்தின் வரித் தள்ளுபடிக்கான கோரிக்கையை ஏற்று அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த ஆட்சியில் அவர்களுக்கு வரியைத் தள்ளுபடிசெய்ய முடிவு எடுக்கப்பட்டது. உயர்நீதிமன்றத்திலும் அவர்களுக்குப் பாதகமான தீர்ப்பு ; உச்ச நீதிமன்றத்திலேயும் அவர்களுக்குப் பாதகமான தீர்ப்பு ; அரசுக்குச் சாதகமான தீர்ப்பு. ஆனால், அவர்களுடைய கோரிக்கையை ஏற்று 13-3-1990-லே இருந்து 31-3-1993 வரை retrospective effect கொடுத்து, மேல் வரி, கூடுதல் மேல் வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்ய 7-6-1995 அன்று முடிவு எடுக்கப்பட்டது. இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்பு 20 கோடி ரூபாய் என்பதை மிகுந்த வேதனையோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்னொன்று, 1995ஆம் ஆண்டு வரை கனிம எண்ணெய்-மினரல் ஆயில் மற்றும் லேப் ஃபிட் ஸ்டாக், மண்ணெண்ணை போன்ற இன்னொரு பொருள் ஆகியவை எல்லாம் பிரிவு 3 (3)-ன் கீழ் சலுகை வரிக்குத் தகுதி இல்லாமல் இருந்து வந்தன. அவைகளுக்கு சலுகை வரி கிடையாது, சட்டப் பிரிவு 3(3)-ன்படி. 1994-95-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தப் பொருள்களுக்கு சலுகை வரி 3 சதவீதம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது ; நினைவிலே வைத்துக்கொள்ள

வேண்டும். 1994-95ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை அநேகமாக நாவலர் அவர்கள்தான் படித்து இருப்பார்கள் என்று கருதுகிறேன் ; இந்தப் பொருள்களுக்கு சலுகை வரி 3 சதவீதம் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மினரல் ஆயில் மற்றும் லேப் ஃபிட் ஸ்டாக் முழுவதற்கும் வரி விகிதம் 12 சதவீதம் ஆகும். அதைத்தான் குறைத்து 3 சதவீதம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், முந்தைய அரசு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த அந்தச் சலுகைக்கு சட்டத் திருத்தங்களைக் கொண்டுவரவே இல்லை. எதையோ எதிர்பார்த்து சட்டத்திருத்தத்தைக் கொண்டுவரவில்லை. காரணத்தை உறுப்பினர்கள் புரிந்துகொள்ளலாம். இதற்குப் பிறகு லேப் ஃபிட் ஸ்டாக் பயன்படுத்துகிற ஒரு தனியார் நிறுவனத்திற்கு லேப்ஃபிட் ஸ்டாக்கை மண்ணெண்ணெயாக கருதி அதற்கு 3 சதவீதம் சலுகை வரி கொடுத்தார்கள் பிறகு. இதற்கான முடிவு 7-6-95 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது. இந்த வரிச் சலுகை 1987-88ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டது. 1995-ல் வரிச் சலுகை கொடுக்கும்போது ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து 1987-88 ஆம் ஆண்டிலிருந்து கொடுக்கப்பட்டது. எப்படி ஆம்னி பஸ்களுக்கு வரியைக் குறைத்துவிட்டு ரெட்ராஸ் பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்பட்டதோ, அதைப்போலவே கடந்த ஆட்சியில் இதற்கும் கொடுக்கப்பட்டது. இதனால் 18.5 கோடி ரூபாய் வரியும், அதற்கு மேல் வட்டியும், தண்டத் தொகையும் 27.7 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 46.2 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. இதை அமைச்சரவையில் விவாதித்து இப்படி ஒரு முடிவு எடுக்கிற நேரத்தில் இரண்டு பேர் கேட்டார்கள். எங்களுக்கும் இந்த வரியைக் குறைத்துக் கொடுங்கள் என்று கேட்டபோது ஒருவரை விலக்கி வைத்துவிட்டு ஒருவருக்கு மட்டும் கொடுத்தார்கள். அப்போது திருநாவுக்கரசு அவர்கள் இங்கே சொன்னார்களே, அதிகாரிகள் சில நேரங்களிலே சிக்கலுக்கு ஆளாகிறார்கள் என்று, எப்படி சிக்கலுக்கு ஆளாகி இருக்கலாம் என்பதற்கு சில உதாரணங்கள். -Commercial Tax Department opposed the request. They quoted the principles embodied in G.O. No. 973

dated 27-5-67. The department opposed by stating that when there has never been finding in favour of the dealer and only the dealer has always been feeling that it would be in his favour, retrospective waiver is not considered favourable. Otherwise it would seriously affect revenue. In fact, such an order may even create an unhealthy precedent which other dealers may start exploiting. Therefore any major retrospective effect would amount to a major new policy decision revising the decisions embodied in G.O. MS. No. 973, Revenue, dated 27-5-67. But they have not taken any policy decision. The Finance Department also opposed giving retrospective effect.- இவ்வளவுக்கும் பிறகு, அதிகாரிகள் எல்லாம் மறுத்துரைத்த பிறகு, ஒரே ஒரு அதிகாரி ஆதரவாக இருந்ததாகக் கேள்வி. அவர் அப்போது இண்டஸ்ட்ரிஸ் செகரட்டரியாக இருந்தவர். அவர் யார், எவர் என்று தெரியலாம். இவ்வளவுக்கும் பிறகு அரசுக்கு 46.2 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் வகையில் 1987-88ஆம் ஆண்டு முதல் வரிச்சலுகை தரப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, அதே அமைச்சரவைச் கூட்டத்தில் மற்றொரு நிறுவனம்-மணலி பெட்ரோ கெமிக்கல்ஸ்- இந்தச் சலுகையை எங்களுக்கு எட்டு வருடங்கள் முன்பிருந்து தர வேண்டாம். 1994-95 லிருந்து கொடுங்கள் என்று கேட்டார்கள். அந்தக் கோரிக்கை அதே அமைச்சரவைக் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டுவிட்டது. ஒரு வருடத்திற்கு கொடுக்கவில்லை. ஆனால் 1987-88 முதல் ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட் கொடுத்து 46.2 கோடி ரூபாயை இழந்திருக்கிறார்கள். இதற்கு அப்போது சட்டம் கொண்டு வராமல் 1995-96-ல் தான் அதற்கான சட்டத்தையே கொண்டு வருகிறார்கள். அறிவித்தது 2 ஆண்டுகளுக்கு முன்பு, இவ்வளவும் நடந்த பிறகு 1995-96-ல் இந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள்.

வருவாய்த்துறை பற்றியும் இங்கே பேசப்பட்டது. வருவாய்த் துறை மானியத்திலே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் பல நல்ல விளக்கங்களை எல்லாம் அளித் திருக்கிறார்கள். வருவாய்த் துறை பல துறைகளுக்கும் தாய்த்துறையாக எப்படி விளங்குகிறது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு 1989 ஆம் ஆண்டு

பொறுப்பிலே இருந்தபோது, உங்களுக்கு நினைவு இருக்கும், காவல் துறையில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்து அத்துறையின் பணிகளை செம்மைப்படுத்தும் வகையில் அரசுக்கு கருத்துரைகளும் ஆலோசனைகளும் வழங்கும் பொருட்டு காவல் துறை ஆணைக்குழு-போலீஸ் கமிஷன்-ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரைகள் அடிப்படையில் பல்வேறு நல்ல மாற்றங்கள் அந்தத் துறையில் நிறைவேறியதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதுவரையில் காவலர்களுக்கு 80 ரூபாய் சம்பளம், 70 ரூபாய் சம்பளம் என்று இருந்த நிலையை மாற்றி, முதன் முதலாக காவல் துறையினர்களுக்கு 200, 250 ரூபாய் என்று சம்பளம் உயர்த்தப் பட்டதே அந்தக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில்தான் என்பதை அறிவீர்கள். அதைப்போல பொது நிர்வாகத்திற்கு முதுகெலும்பாக விளங்குகிற வருவாய்த் துறையில் மக்களின் அன்றாடத் தேவைகளை ஒட்டிய பல பணிகள் கவனிக்கப் படுகின்றன. அத்துறையில் போதுமான அளவிற்கு வேகம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன குறைபாட்டை நான் ஏற்றுக்கொள்கிறேன். எனவே, இந்தத்துறை சம்பந்தப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளைச் செம்மைப் படுத்தவும், இதன்மூலம் இந்தத்துறை மேலும் வேகமாகச் செயல்படவும், தக்க யோசனைகளையும், பரிந்துரைகளையும் அரசுக்கு வழங்கிட வருவாய் ஆணைக்குழு, (ரெவின்யூ கமிஷன்) ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருவாய்த் துறையின் மூலமாக மாவட்டத்திலே உள்ள ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சித் தவைவர் ஆகியோர் மாதம் ஒருநாள் ஒரு கிராமத்திற்குச் சென்று மக்களின் குறைகளை நேரில் கேட்டறியத்தான் மனுநீதித் திட்டத்தை மீண்டும் நாம் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். இதிலே சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு, தங்கள் பணியினைச் செய்து வருகிறார்கள். பத்திரிகையிலே பார்த்தேன், நானும் கேட்டு அறிந்து கொண்டேன். வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தினுடைய

ஆட்சித் தலைவர், கட்டிடங்களிலே அமர்ந்துதான் இந்தப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும் என்று இல்லாமல், வெய்யிலிலே, மரத்தடியிலே, மரத்து நிழலிலேகூட அமர்ந்து மக்களைச் சந்தித்து, மனுக்களைப் பெற்று, அந்த மனுக்களுக்கான முடிவுகளை உடனடியாக அதே இடத்திலே அன்று மாலை நேரத்திற்குள்ளாக அறிவித்தார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன். அந்த முறையை மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களும், ஆங்காங்குள்ள வருவாய் அலுவலர்களும், கோட்டாட்சித் தலைவர்களும் பின்பற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

25 நாட்களுக்கு ஒரு முறை இந்த மனுநீதித் திட்டம் கிராமங்களுக்குச் சென்று, இன்றைக்கு நடைமுறையிலே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்த இடத்திலேயே தீர்வு காண முடியாத மனுக்களை, இரண்டு வார காலத்திற்குள் முடிவு கண்டு, ஆணை பிறப்பிக்க வேண்டும் என்றும், அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு 3 ஆண்டுகால இடை வெளிக்குள் வருவாய்த்துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள், அனைத்து வருவாய்க் கிராமங்களையும் சென்று பார்த்துவிட வேண்டும் என்றும் கூறப்பட்டு இருக்கின்றது.

முதியோர் உதவித்தொகை பெறக் கோரும் மனுக்கள் மீது அதிகபட்சம் 60 நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும். கருவுற்ற ஏழாவது மாதத்தில் பேறுகால உதவியை 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அது ரூ. 300-லிருந்து 500 ஆக உயர்த்தப்பட்டு இருப்பது உறுப்பினர்களுக்குத் தெரியும்.

விபத்து ஏற்பட்ட 30 நாட்களுக்குள் விபத்து நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டும். 30 நாள் என்பதால், அதுவரையிலேயும் காத்திருக்கத் தேவையில்லை. ஒரு வாரத்திற்குள்ளே கூடி அதை வழங்கினால் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமண உதவி ரூ. 5 ஆயிரத்திலிருந்து 10 ஆயிரம் என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது. கடந்த ஆட்சியில் இந்தத் திட்டம் சீர்குலைக்கப்பட்டது. 18 வயது நிரம்பிய பெண்கள் என்பதை 21

வயது நிரம்பிய பெண்கள் என்று மாற்றியதன் காரணமாக கிராமப்புறத்திலே இருக்கிற ஏழை எளிய வீட்டுப் பெண்களால், அந்த உதவியைப் பெற முடியவில்லை. அதுமாத்திரமல்ல, நானே பல மனுக்களை-புறக்கணிக்கப்பட்ட மனுக்களை எதிர்க் கட்சியிலேயிருந்தபோது நானே காண நேரிட்டது. சில பேர்கள் அச்சடித்திருக்கிற அழைப்பிதழில், இன்ன மண்டபத்தில் திருமணம் நடைபெறும், எனவே, இந்த உதவிகளைத் தாருங்கள் என்று கேட்டபோது, மண்டபத்தில் திருமணம் நடைபெறுகிற காரணத்தால் உதவி அளிக்க முடியாது என்றே பதில் தரப்பட்டது. மண்டபத்தில் திருமணம் நடத்தாமல் மரத்தடியிலா நடத்த முடியும்! மண்டபத்தில்தான் நடத்த முடியும் இருந்தாலும்கூட இந்தத் திருமண உதவி அன்றைக்கு கைவிடப்பட்ட நிலையிலே ஆகிவிட்டது. இந்தத் திருமண உதவியை அளிப்பதிலே இந்த மனுநீதி நாட்களிலே கலந்து கொள்கின்றவர்கள் சுறுசுறுப்பாக, ஆர்வத்தோடு, அக்கறையோடு செயல்பட வேண்டும்.

கிராம அதிகாரிகளைப் பற்றி இங்கே அன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவது குறித்து நிதி நிலை அறிக்கையிலே நான் சுட்டிக்காட்டி யிருக்கிறேன். அவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் தொடுத்த வழக்கில், டிரிபியூனல் தீர்ப்பு அளித்துவிட்டது. அப்படித் தீர்ப்பு அளித்த பிறகும், உச்சநீதிமன்றத்திலே அரசாங்கம் வழக்கு தொடர்ந்தது. ஏற்கனவே அவர்கள் அல்லோலகல்லோலப்பட்டு அகற்றப் பட்டார்கள். திடீரென்று நள்ளிரவில் அவர்கள் நடுத்தெருவிலே விடப்பட்டார்கள். அவர்களுடைய கணக்குகள் எல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. அப்படி அவதிப்பட்ட அந்தக் கிராம அதிகாரிகள், தங்களுடைய ஓய்வு ஊதியத்தையாவது பெறவேண்டும் என்பதற்காக டிரிபியூனலை நாடிச் சென்றபோது, சாதகமான தீர்ப்பைப் பெற்றபோது, அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்குக் கடந்த கால அரசு சென்றது. இப்போது, இந்த அரசு எடுத்துள்ள முடிவின்படி உச்சநீதிமன்றத்திலே கடந்த கால அரசு தொடுத்திருக்கின்ற வழக்கைத் திரும்பப் பெற்று. 8500 பேர் பயனடையத்தக்க அளவிற்கு ஓய்வு ஊதியத்தை வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் மாவட்ட நிர்வாகம் நல்ல முறையிலே செயல்பட எந்த நடப்பாண்டிலும் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு கட்டிடங்கள் கட்ட, கட்டிடங்கள் என்றால் கலெக்டர் அலுவலகங்கள் அல்ல. ஆங்காங்கே இருக்கின்ற சிறிய சிறிய கோட்டாட்சி, வட்டாட்சி அலுவலகக் கட்டிடங்களைக் கட்ட, பழுது பார்க்க, வாகனங்கள், மின் கருவிகள் இவைகள் எல்லாம் வாங்க இந்த ஆண்டு முதன் முதலாக ரூ. 4.4 கோடி இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாவட்டங்களைப் பற்றி இங்கே திருநாவுக்கரசு அவர்கள் பேசினார்கள். நான் ஏற்கெனவே இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறேன். 1969-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், நம்முடைய தலைவர் அவர்கள், நம்மைவிட்டு மறைந்து முதல்வர் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டபொழுது நான்கூட எண்ணியதுண்டு-சில மாவட்டங்களுக்கு தலைவர்களுடைய பெயரை வைக்க வேண்டுமென்று. ஏனென்றால் ஆந்திராவில் பிரகாசம் மாவட்டம் என்ற ஒரு மாவட்டம் இருப்பதை நான் அறிவேன். எனவே அப்படித் தலைவர்களுடைய பெயரை வைக்கலாம் என்று எண்ணியபோது இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தலைவர்களுடைய எண்ணிக்கை அதிகம். எனவே ஒன்றை ஆரம்பித்தால் ஒவ்வொன்றாக படிப்படியாக வரும் என்பதற்காகத்தான் நீங்கள் தயவுசெய்து உங்களுடைய கவனத்தைத் திரும்பிப் பார்த்து சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

1969 முதல் 1976 வரையில் ஆட்சி கலைக்கப்பட்ட அந்தக் காலக்கட்டம் வரையில் அண்ணா பெயரையோ, பெரியார் பெயரையோ, பெருந்தலைவர் காமராசர் பெயரையோ, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரையோ யாருடைய பெயரையும் எந்த மாவட்டத்திற்கும் வைக்கவில்லை. ஒரு மாவட்டத்திற்கு வைத்தால் அது வளர்ந்து கொண்டே போகும் என்பதற்காகத்தான் சாலைகளுக்கு அந்தத் தலைவர்களுடைய பெயர்கள், பூஞ்சோலைகளுக்கு அவர்களுடைய பெயர்கள்,

கல்லூரிகளுக்கு அவர்களுடைய பெயர்கள் என்ற அளவிலே அந்தப் பெயர்கள் வைக்கப்பட்டன. ஆனால் அருமை நண்பர் மறைந்த மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெரியார் பிறந்த ஈரோட்டைத் தலைநகராகக் கொண்ட அந்த மாவட்டத்திற்கு பெரியார் மாவட்டம் என்று பெயர் வைத்தார்கள். அதற்குப் பிறகு தொடர்ந்து அண்ணா மாவட்டம், பெருந்தலைவர் காமராசர் பெயரால் காமராசர் மாவட்டம் என்று பல மாவட்டங்கள் உருவாயின. இதிலே ஜாதியின் பெயரால் மாவட்டத்திற்கு பெயர் வைக்கக்கூடாது என்பதை நூற்றுக்கு நூறு நான் ஒத்துக் கொள்கின்றேன். அதிலே ஒரு சிறு சிக்கல் இருக்கிறது. சில பேருடைய பெயரை மாத்திரம் சொன்னால், அது எந்தத் தலைவர் என்று தெரியாத நிலை இருக்கின்றது. தமிழ்நாட்டிலே விடுதலை இயக்கத்தை நடத்திய மூன்று பெரும் தலைவர்களை அந்தக் காலத்தில் நாயுடு, முதலியார், நாயக்கர் என்றே அழைத்தார்கள். நாயுடு என்றால் வரதராஜூலு நாயுடு, முதலியார் என்றால் கல்யாணசுந்தர முதலியார், நாயக்கர் என்றால் ஈ.வே. ராமசாமி நாயக்கர் என்று இப்படி அழைக்கப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஜாதி சனி என்ற பிடியிலேயிருந்து விலக வேண்டுமென்று சமுதாய எழுச்சி வலுப்பட வலுப்பட அதிலேயிருந்து நாம் ஓரளவு நம்மை விடுவித்துக் கொண்டி ருக்கிறோம் என்றாலும்கூட சில பேருடைய பெயரை ஜாதியோடு சேர்த்துச் சொன்னால்தான் யாருக்கும் தெரியும். திடீரென்று கோயம்பத்தூரில் போய் ஜி.டி.என். சாலை என்று பெயர் வைத்தால் யாருக்கும் புரியாது. ஜி.டி. நாயுடு என்று சொன்னால்தான் புரியும். நாயுடுவை எடுத்துவிட்டு ஜி.டி. என். என்று சொன்னால் புரியாது. அதேபோல் தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரத்திற்கு எஸ்.எஸ். ராமசாமி என்று பெயர் வைத்தால் அது திரு. எஸ். எஸ். ராமசாமி படையாட்சி யாருடைய பெயர் என்று நிச்சயமாக யாருக்கும் தெரியாது. அதேபோல் பசும்பொன் முத்துராமலிங்கம் என்று பெயர் வைத்தால் எந்த முத்துராமலிங்கம் என்ற குழப்பம் ஏற்படும். எனவேதான் சில தலைவர்களுடைய பெயர்களோடு ஜாதி ஒட்டிக் கொண்டிருப்பதைப் பிரிக்கமுடியாத சூழ்நிலை

இருக்கின்றது. எனவேதான் எம்.ஜி.ஆர். அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கம் என்று பெயர் வைத்தபோது அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், தலைவர்கள், பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேவர் திருமகன் என்ற பெயர் வைக்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில், நாங்கள், அது ஒரு ஜாதியாக முழுமையாகத் தெரியவில்லை என்ற காரணத்தால் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்ற பெயர் வைத்தோம். பிறகு அது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்றே மறுபடியும் மாற்றப்பட்டது கடந்த ஆட்சியிலே. அதுவும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்றே கருதுகின்றேன். எனவே ராமசாமி படையாட்சி யாருடைய பெயருடன் படையாட்சியார் என்ற ஜாதிப் பெயர் சேர்ந்தால்தான் எல்லோருக்கும் விளங்கும். நான் அன்றைக்கு ஒரு நிகழ்ச்சியிலோ அல்லது இங்கேயோ சொன்னது போல எதிர்காலத்தில் பெயரை விட்டு விட்டு இனிஷியல் மாத்திரம் சொல்ல ஆரம்பித்து எஸ்.எஸ்.ஆர் மாவட்டம் என்று சொல்ல ஆரம்பித்தால் அது, எஸ்.எஸ். ராஜேந்திரன் மாவட்டமா என்ற காரணத்தினால்தான் சில ஜாதிப் பெயர்கள் ஒட்டிக் கொண்டிருந்தாலும் அதை விடமுடியாத சூழ்நிலை நமக்கு இருக்கின்றது. ஆனால் தீரன் சின்னமலை என்று சொன்னால் போதும். அதிலே கவுண்டரைச் சேர்ப்பது தேவையே இல்லை. அதை கொங்கு வேளாள மக்களேகூட விரும்பவில்லை. ஜாதிப் பெயரைச் சேர்த்து தீரன் சின்னமலையினுடைய பெயரைக் குறுக்காதீர்கள். சின்னப் பெயராக ஆக்காதீர்கள் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் கோவை கொங்கு வேளாள இளைஞர் சங்கத்தின் சார்பில் எனக்கு கோரிக்கை வந்ததின் பேரில், இப்போது தீரன் சின்னமலை மாவட்டம் என்று அந்த மாவட்டத்திற்குப் பெயர் வழங்கப்படுகிறது.

அண்ணா மாவட்டம் பற்றி சொன்னார்கள். அண்ணாவை அங்கும், இங்கும் போட்டு அலைக்கழிக்கிறீர்கள் என்று. அண்ணாவை யார், அலைக்கழிக்கிறார்கள் என்று நாட்டுக்கு நன்றாகத் தெரியும். அண்ணாவை இதயசுத்தியோடு உள்ளத்திலே வைத்து, அண்ணாவினுடைய கொள்கைப்படி, லட்சியத்தின்படி, நடந்து செல்பவர்கள் யார் என்பது எனக்கு

தெரியும். நாட்டிற்கும் தெரியும். தம்பி திருநாவுக்கரசுக்கும் மிக நன்றாகத் தெரியும். ஆனால், என்னுடைய ஆசையெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த விருதுநகரை மையமாக வைத்து, தலைநகரமாக வைத்து காமராஜர் மாவட்டம் என்று பெயர் இருக்கும்போது, தந்தை பெரியார் பிறந்த இடத்தைத் தலைநகராக வைத்து பெரியார் மாவட்டம் என்று பெயர் இருக்கும்போது, ஏன் அண்ணா பிறந்த காஞ்சீபுரத்தைத் தலைநகராக வைத்து, அது அண்ணா மாவட்டம் என்று இருக்கக்கூடாது என்பதுதான் எனக்கிருந்த ஆதங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஏக்கத்தைப் போக்கிக் கொள்கின்ற வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கிறது. அடுத்து வருகின்றவர்கள் மாற்றிவிட மாட்டார்களா என்ற வருத்தத்தை திருநாவுக்கரசு அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் மாற்றும்போது திருநாவுக்கரசு அவர்கள் இங்கேதான் இருப்பார். நம்மோடு இருந்து மாற்றுவதைத் தடுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மாவட்டங்கள் 29 மாவட்டங்கள் என்று இங்கே குறிப்பிடப் பட்டன. எங்கெங்கே எந்தெந்த மாநிலத்திலே, மாவட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றெல்லாம் இங்கே பலரும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். தமிழகத்திலே, தற்போது மொத்தமுள்ள மாவட்டங்கள் 29. நான் அந்த மாவட்டங் களினுடைய பெயரைப் படிக்கிறேன். அதுதான் அந்த மாவட்டங்களினுடைய பெயர் என்று நீங்கள் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அதிகாரிகளும் குறித்து வைத்துக் கொண்டு, அந்தப் பெயரையே புழக்கத்திலே கொண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். இங்கு முத்தரையரை எடுத்துவிட்டு பெரும்பிடுகு என்று சொன்னால் நன்றாக இருக்குமா? பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம். பெரும்பிடுகு முத்தரையர்

என்ற சொன்னால்தான், அந்தப் பெயருக்கு ஒரு கம்பீரம் இருக்கிறது. இந்த ஜாதி உணர்வு கூடாது என்ற சொன்னாலும் கூட, பெரும்பிடுகு முத்தரையர் என்று சொல்லும்போதுதான் அந்தப் பெயருக்கு கம்பீரம் இருக்கிறது. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுக முத்தரையர் மாவட்டம். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம். பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம். வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம். சில அச்சடிக்கப்பட்ட புத்தகங்களில்கூட எங்களுக்குத் தரப்படுகின்ற புத்தகங்களில் கூட அம்பேத்கர் மாவட்டம் என்று சொல்லுகின்றார்கள். அது தவறு. பேருந்துகளில் போய் கார் என்று எழுதவேண்டிய அவசியம் இல்லை. வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பெரியார் மாவட்டம், அண்ணா மாவட்டம், காமராஜர் மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம். இராஜாஜி மாவட்டம் என்ற பெயர்களிலும், இஃதன்னியில் சேலம் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், மதுரை மாவட்டம், ராமநாதபுரம் மாவட்டம். தர்மபுரி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், நீலகிரி மாவட்டம், சென்னை மாவட்டம் இப்படி நிர்வாக வசதிக்காக இந்த மாவட்டங்களுடைய பெயர்களை நாம் அமைத்து, அழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கான கட்டிடங்கள் கட்டவேண்டிய மாவட்டங்கள் ஆகும். திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், இராஜாஜி மாவட்டம், எம்.ஜி.ஆர் மாவட்டம், வைகை வீரன் அழகுமுத்து மாவட்டம் இவைகளில் எல்லாம் அறிவிக்கப்பட்ட மாவட்டங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்படவேண்டிய நிலைமையிலே உள்ளன. ஆனால், ஏற்கெனவே கடந்த ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப் பட்டு செயல்பட்டு வருகின்ற சிதம்பரனார் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம்,

விழுப்புரம்-இராசாமி படையாட்சியார் மாவட்டம், கரூர்-தீரன் சின்னமலை மாவட்டம், பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் அடிக்கற்கள் நாட்டப்பட்டிருக்கின்றதே தவிர கட்டிடங்கள் எழுப்பப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடங்கள் இன்னமும் கட்டுவதற்கான சூழ்நிலை அங்கே உருவாகவில்லை. திருவண்ணாமலை -சம்புவராயர் மாவட்டத்தில் ஓரளவிற்கு வேலைகள் துவங்கப்பட்டு, பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக அது கட்டப்படாத நிலையில் முடங்கிக் கிடக்கின்றது. வேறு இடத்திலே அந்த அலுவலகத்தைக் கட்டலாம் என்ற திட்டம் இந்த அரசுக்கு இருக்கிறது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம், ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டு இன்னமும் கலெக்டர் அலுவலகங்கள் கட்டப்படாத நிலையிலே உள்ள மாவட்டங்கள் அனைத்திற்கும் இன்னும் 3 ஆண்டு காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களும், தேவையான அலுவலகங்களும் கட்டி முடிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு செய்ய உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவிற்குத் தலைவராக பிரின்சிபல் கமிஷனர்-முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் அவர்களும் தலைமைப் பொறியாளர், பொதுப்பணித்துறை-கட்டிடப் பொறியாளர், முதன்மை கட்டிட கலைஞர், பொதுப்பணித் துறை, நகரமைப்பு வல்லுநர் நகர ஊரமைப்பு இயக்கம், தனி அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் இதன் அமைப் பாளராகவும் இருப்பார்கள். இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள அந்தக் குழு, அந்தப் பணிகளைச் செவ்வனே விரைவிலே முடிக்கக் கடமைப்பட்டுள்ள குழுவாகும். இந்த மாவட்டங்களில் கோட்டங்கள் அமைப்பது பற்றியும், வட்டங்கள் அமைப்பதைப் பற்றியும் இங்கே பலரும் பேசியிருக்கிறார்கள். நம்முடைய பா.ம.க. சார்பிலே பேசிய கணேசன் அவர்கள் மகுடஞ்சாவடி மகுடஞ்சாவடி என்று சொல்லி எடப்பாடி எடப்பாடி என்று

குறிப்பிட்டார். எடப்பாடி இருக்கிறது தலை இல்லை என்றார். என்ன செய்வது? பேரிலேயே 'பாடி' (Body) மாத்திரம் தான் இருக்கிறது. (சிரிப்பு) இருந்தாலும்கூட இந்தத் தாலுக்கா பிரச்சினைகள், கோட்டப் பிரச்சினைகள் இவைகளைப் பற்றியெல்லாம் நிச்சயமாக இந்த அரசு பரிசீலித்து நல்ல முடிவுகளை அறிவிக்கும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கோட்டங்கள் என்பது இரண்டு தாலுக்காக்களாவது இருந்தால்தான் ஒரு கோட்டத்தை அமைக்க முடியும். ஒரு தாலுக்காவை வைத்துக்கொண்டு ஒரு வட்டத்தை வைத்துக்கொண்டு அதைக் கோட்டமாக ஆக்குங்கள் என்றால் ஆக்க முடியாது. இந்தச் சூழ்நிலையையும் நம்முடைய அதிகாரிகள் விளக்கியிருக்கிறார்கள். ஆங்காங்கே, தொடர்ந்து இதுபோன்ற கோரிக்கைகள் வரும்போது பொதுவாக தமிழ்நாட்டிலே உள்ள மாவட்டங்களில் இன்னும் தேவைப் படுகின்ற கோட்டங்கள் எத்தனை, வட்டங்கள் எத்தனை என்ற இவைகள் எல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது வருவாய்க் கோட்டங்கள் 72 இருக்கின்றன. வட்டங்கள் 195 இருக்கின்றன. உள்வட்டகள் 1106. வருவாய்க் கிராமங்கள் 17,271 இருக்கின்றன. இந்த மாவட்ட நிர்வாகிகளை நாம் எப்படிப் பயன்படுத்திக்கொள்கின்றோம்? சொன்னால் இந்த நேரத்திலே இது தேவையா என்று திருநாவுக்கரசு அவர்கள் கூட எண்ணக்கூடும். இருந்தாலும் ஒரு மாவட்ட வருவாய்த் துறையிலே உள்ளவர்கள் நிர்வாகத்திலே இருப்பவர்கள் மாவட்ட ஆட்சியாளரின் முதன்மை அலுவலராக இருப்பவர்கள் இவர்கள் எல்லாம் கூட கடந்தகால அரசைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை நான் இங்கே சொல்லித்தான் ஆக வேண்டும்.

குடந்தையில் 1992 ஆம் ஆண்டு மகாமக உற்சவம் நடைபெற்றது. அதிலே அரசின் கணக்கின்படி 48 பேர் இறந்தார்கள். 66 பேர் காயமுற்றார்கள். இதுசம்பந்தமாக நீதி விசாரணை வேண்டும் என்று இன்றைய கல்வி அமைச்சரும் கழகத்தினுடைய பொதுச் செயலாளருமான பேராசிரியர் அவர்கள் உயர்நீதி மன்றத்திலே ஒரு வழக்குத் தொடுத்து, நீதிவிசாரணைக்கு ஆணை கேட்டார்கள். ஆனால் நீதிமன்றம்,

கேட்ட அந்தத் தீர்ப்பை வழங்கவில்லை. அதே நேரத்திலே அதற்கு மாறாக அன்றைய அரசு தஞ்சை மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய கூடுதல் மாவட்ட மேஜிஸ்ட்ரேட் பிரவின் குமார் என்பவரை இந்த விபத்துக்கான காரணங்களை விசாரித்து அறிக்கை தருமாறு ஆணையிட்டது. விசாரணை அதிகாரி கூட்ட நெரிசலில் காயமுற்ற நபர்களில் தானாக விரும்பி சாட்சியளிக்க வந்தவர்களையும், காவல்துறை அதிகாரிகளையும், மருத்துவ அதிகாரிகளையும் மற்றும் பலதுறை அதிகாரிகளையும், பல தனிப்பட்ட நபர்களையும் சாட்சிகளாக விசாரித்துள்ளார். ஆனால் சில அதிகாரிகள், விசாரணை அதிகாரி சம்மன் அறிவிப்பு வழங்கியும் விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதிலே வேடிக்கை என்னவென்றால் விசாரணை அதிகாரி-பேராசிரியர் கேட்டது உயர்நீதி மன்றத்திலே ஒரு நீதிபதியைக் கொண்ட விசாரணை வேண்டுமென்று. வழங்கப்படவில்லை. இருந்தாலும் அங்கு விசாரித்த விசாரணை அதிகாரி-கூடுதல் மாவட்ட மேஜிஸ்ட்ரேட் அவர்கள் அறிக்கையிலே என்ன குறிப்பிட்டிருக் கிறார்கள் என்றால், எந்தச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்த வேண்டும் என்று குறிப்பிடவில்லை. அதனால் சாட்சியங்களை வரவழைப்பதற்கோ, விபத்து சம்பந்தமான பொருள்களைச் சோதனை செய்வதற்கோ, பறிமுதல் செய்வதற்கோ குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கமுடியவில்லை என்று அதிலே குறிப்பிட்டிருக்கிறார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க இயலாததால் எந்த ஒரு நபரையும் சாட்சியம் அளிக்க நிர்ப்பந்தப்படுத்த முடியவில்லை என்றும் விபத்து சம்பந்தமான பொருட்களைச் சோதனையிடவும், பறிமுதல் செய்யவும் முடியவில்லை என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார். அதற்குச் சான்றாக தூர்தர்ஷன் எடுத்த வீடியோ கேசட் விசாரணை அதிகாரி முன்பு பார்வைக்காகக் காட்டப்படவில்லை என்றும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். வீடியோ கேசட் அதுவே சாட்சியமாகக் காட்டப்படவில்லை. "The example of the handicap was the non-provision of the video cassette by the Doordharshan in spite of letter and tele-messages sent" என்று

அவர் குறிப்பிடுகிறார். இந்தக் குறைபாடுகளுக்கு இடையே அவருக்குக் கிடைத்த ஆவணங்களை வைத்தும் சாட்சியின் அடிப்படையிலும் சில முக்கியமான முடிவுகளைக் கொடுத் துள்ளார். விசாரணை அதிகாரி, காவல் துறையினர் விபத்து நடந்த நேரத்தை மாற்றி ஜோடிக்க முயன்றதை ஏற்கவில்லை என்று குறிப்பிடுகிறார். ஆனால் சுதந்திரமான சாட்சிகளின் அடிப்படையில் இந்த விபத்து 12-15 மணிக்குத் தான் நடந்து இருக்க வேண்டும் என்றும் 1.00 மணிக்கு நடைபெறவில்லை என்றும் கூறியுள்ளார்.

"Seeing all these above points, the statements of witnesses, and the material evidences, there is no hesitation in saying that the accident occurred around 12-15 p.m. when the Hon. Chief Minister had just left the Mahamaham Tank or was about to leave the Tank" 1980 ஆம் ஆண்டு காலை முதலே கூட்டம் வந்து சேர்ந்து கொண்டிருந்தது. ஆனால் 1992 ஆம் ஆண்டு அன்று 11.45 மணிக்குதான் நல்ல நேரம் என்ற காரணத்தால் அதே நேரத்திலே அன்றைய முதலமைச்சரும் மகாமகம் குளத்திற்கு வந்த காரணத்தால் அனைத்து மக்களும் அங்கேயே தங்கி இருக்க வேண்டியதாயிற்று. அன்று பகல் சுமார் 1.00 மணி அளவிலே பாங்வர் தர்மசாலை சத்திரத்தில் பொதுமக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் கொடுத்ததாகவும், அதைப் பெற கூட்ட நெரிசல் அதிகமானதால் உணவுப் பொட்டலங்களைக் கூட்டத்தை நோக்கி வீசியெறிய ஆரம்பித்ததாகவும், எனவே உணவுப் பொட்டலங்களைப் பொறுக்கவும் நெரிசலிலிருந்து தப்பவும் தர்மசாலை இரும்பு கிரில் கேட்டையும் பிடித்து ஏறி வர முயற்சித்தபோது அந்த கேட் சிமெண்டு கட்டையோடு சாலையில் விழுந்ததாகவும் அதன் அடியில் மக்கள் சிக்கியதாகவும், சத்தத்தைக் கேட்டு மக்கள் கிதறி ஓடியபோது பலர் தடுமாறி கீழே விழுந்ததாகவும், அவர்கள் மீது ஏறி மிதித்துக் கொண்டு மக்கள் ஓடியதால் சிலர் காயம் அடைந்ததாகவும், மயக்கம் அடைந்தும் கேட்டின் அடியில் சிக்கி இறந்து போனதாகவும், பிறகு ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், காவல் துறையினர் கூறியுள்ளனர். ஆனால் விசாரணை அலுவலர் பாங்கூர்

தர்மசாலையில் எந்தவிதமான உணவுப் பொட்டலங்களையும் வினியோகிக்கவில்லை என்றும், உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்பட்டன என்று பேசப்பட்டது காவல் துறையின் கற்பனை என்றும் அந்த சாதாரண அதிகாரியே யாருக்கும் பயப்படாமல் உண்மையைக் கூறியிருக்கிறார். " So, it will be a reasonable conclusion that no plan of food packets distribution was there at the Pangoor Dharmasala and the theory of food packets distribution is only an imaginary one, created by the Police Department for reasons best known to them." எந்த அளவுக்கு உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. (குறுக்கீடு)

1968 ஆம் ஆண்டு அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நான் பொதுப்பணித் துறை அமைச்சர். அப்போது காசிராமன் அவர்கள், ராமன் அண்டு ராமன் பஸ் சர்வீசுக்கு சொந்தக்காரர்-எம்.எல்.ஏ. வாக இருந்தார். அவர் இதே சட்டசபையில் அண்ணா அவர்களையும், அவரோடு இணைத்து என்னையும் புகழ்ந்து பேசினார். மகாமகக் குளத்திற்கு முதல் நாளே 2,3 நாட்களுக்கு முன்பே, சில வாரங்களுக்கு முன்பே பொதுப்பணித் துறை அமைச்சர் கருணாநிதி வந்திருந்து அந்தக் குளத்தைப் பார்வையிட்டு வடிகால், கொள்கால் வசதிகளை எல்லாம் எப்படிச் செய்யவேண்டும் என்ற திட்டமிட்டுச் செய்து வடிகால் திறப்பு விழாவை நடத்தி வைத்து விட்டுச் சென்றார். எனவே, மகாமகம் சிறப்புற நடைபெற்றதாகவும், ஒரு பிக் பாக்கெட்கூட நடைபெறாமல், ஒரு அசம்பாவிதம் கூட நடைபெறாமல் அண்ணா அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் எடுத்துக்கொண்ட அக்கறையைப் பாராட்டுகிறேன் என்றும் இதே அவையிலே காசிராமன் அவர்கள்-காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் பேசியிருப்பது நினைவு கூறத்தக்கது. அப்போது மைசூர் மகாராஜா அந்த மகாமகத்திற்கு வந்தார். அவர் வரும்போது அவரைப் பார்க்கக் கூட்டம் கூடும் என்பதற்காக தனி வழி அமைத்து, தனிப் பாதையில் அவர் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் 1992 ஆம் ஆண்டு மிக முக்கியமான பிரமுகர்களுக்கு இடம் தேர்வு செய்தவர்கள் இந்த விபத்துக்குப்

பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்த அதிகாரி கூறியுள்ளார். அவர் 1968-ஐயும் சுட்டிக்காட்டி 1992-ஐயும் சுட்டிக்காட்டி அதன்படி நடந்து இருந்தால் இந்த விபத்தே வந்து இருக்காது என்று குறிப்பிட்டிருக்கிறார். நான் நீண்ட நேரம் சொல்ல விரும்பவில்லை. சுருக்கமாகச் சொல்ல விரும்பு கின்றேன். இப்படி ஒரு அறிக்கை வந்தது. இந்த அறிக்கை யாருக்காவது தெரியுமா? இந்த அவையிலே வைக்கப்பட்டதா? அந்த அறிக்கை வந்தவுடன், அந்த அறிக்கை மீது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துக்களைப் பெற்று, 6-5-96 அன்று முன்னாள் முதலமைச்சருடைய கையொப்பம் பெற்று, மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அந்தக் கோப்பு முடிக்கப்பட்டுவிட்டது.

இது மாவட்ட நிர்வாகத்தைப் பற்றியும் பேச வேண்டிய மானியம் என்பதால் இதைப் பேசினேனே அல்லாமல், தொடர்பில்லாத விஷயம் அல்ல என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அமைச்சர்களைப் பற்றியும் பேச வேண்டியிருக்கின்றது. ஆடம்பரச் செலவுகள் ஓரளவு-ஏன், பெருமளவு ஒழிக்கப் பட்டால், வரிச் சலுகையினால் ஏற்படுகின்ற இழப்பை நிச்சயமாக ஈடு செய்ய முடியும். இவ்வளவு வரிச்சலுகை கொடுத்து விட்டாரே என்ன ஆகுமோ என்ற கவலை நம்முடைய சொக்கருக்குக்கூட இருக்கிறது. நம்முடைய பழனிசாமிக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் இருக்கிறது. இவ்வளவு வரிச்சலுகையா, இவ்வளவு வரிச் சலுகையா என்று ! இதை எப்படி ஈடுகட்டப் போகிறோம் என்ற கவலை எல்லோரையும்விட, முன்னாள் முதலமைச்சருக்கு இருக்கிறது. இவ்வளவு துண்டுவிழுகிற பட்ஜெட் வந்திருக்கிறதே, எப்படி ஈடுகட்டப் போகிறார் கருணாநிதி என்று கூட அம்மையார் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள்.

ஆடம்பரச் செலவுகளைப் பெருமளவு குறைத்தாலே நிச்சயமாகச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இன்னும்கூட வரிச்சலுகை வழங்கலாம். நீங்கள் கேட்ட வரிச் சலுகையெல்லாம், இந்த ஆடம்பரச்

செலவுகளையெல்லாம் நானும் குறைத்து, அமைச்சர்களும் குறைத்து, அதிகாரிகளும் எங்களோடு ஒத்துழைப் பார்களேயானால் இன்னும்கூட வரிச் சலுகைகளை அடுத்த பட்ஜெட்டிலே உங்களுக்கு அறிவிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

ஒன்றிரண்டைக் கோடிட்டுக்காட்டுகிறேன். கடந்த ஐந்தாண்டுகளில் முன்னாள் முதலமைச்சர் கலந்து கொண்ட விழாக்களுக்கு ஆன செலவு- உலகத் தமிழ் மாநாடு, தெற்காசிய விளையாட்டுப் போட்டி, இரண்டையும் விட்டு விடுகிறேன்.

இரண்டுக்கும் மொத்தம் ஆன செலவு ரூபாய் 27 கோடி விழாச் செலவு. அதை விட்டு விடுகிறேன். ஏனென்றால், விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிகச் செலவு மற்ற நாடுகளில் நடைபெறுகிறது, அதை விட்டு விடுகிறேன்.

உலகத் தமிழ் மாநாடு. அது அதிகச் செலவுதான். அண்ணா இருக்கும்பொழுது ரூ. 2,3 கோடி. எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திய பொழுது ரூ. 7,8 கோடி அல்லது 10 கோடி. இப்பொழுது எத்தனை கோடி? ரூ. 74 கோடியோ 80 கோடியோ. அன்றைக்குத் தமிழ்க்குடிமகன் அவர்கள்-அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் இங்கே அதை வெளியிட்டார்கள். எனவே (குறுக்கீடு) அது ரூ. 74 கோடி.

இந்த இரண்டு மாநாட்டுச் செலவையும், விளையாட்டுப் போட்டிச் செலவையும் சேர்க்காமலே முதலமைச்சர் கலந்து கொண்ட விழாக்களுக்கான மொத்தச் செலவு, இந்த 5 ஆண்டுக் காலத்தில் 27 கோடியே 56 லட்சத்து 43 ஆயிரத்து 856 ரூபாய். 1991-96 இந்த 5 ஆண்டுக் காலத்தில், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் தனிப்பட்டவர்களுடைய விமானத்தை வாடகைக்கு உபயோகப்படுத்தியதன் காரணமாக ஆன செலவு-அப்பொழுது விமானம் வாங்கவில்லை-4 கோடியே 8 லட்சத்து 40 ஆயிரத்து 57 ரூபாய். இது தவிர, அரசின் ஹெலிகாப்டரை உபயோகப்படுத்த ஆன செலவு 20 லட்சத்து 62 ஆயிரத்து 481 ரூபாய். அரசாங்கத்தின் விமானத்தைப் பயன்படுத்திய வகையில் ஆன செலவு 39 லட்சத்த 95 ஆயிரத்து 831 ரூபாய். இவ்வாறு பயணம் செய்ய ஒரேயடியாக வாங்கப்பட்ட விமானத்தின் விலை-விமானம்

விலை 19 கோடியே 85 லட்சத்து 12 ஆயிரத்து 662 ரூபாய். ஹெலிகாப்டர் விலை 19 கோடியே 69 லட்சத்து 29 ஆயிரத்து 428 ரூபாய். இந்த இரண்டையும்தான் விற்பதாக அரசு முடிவு செய்திருக்கிறது. அதிலே ஒரு 40 கோடி ரூபாய் ஏறத்தாழ வருமானம் வர இருக்கிறது. ஆகவே, வரிச் சலுகைக்காக யாரும் கவலைப்பட வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

தற்போது ஆண்டு ஒன்றுக்கு இந்த விமானங்களைப் பராமரிக்க ஆகிற செலவு ரூ. 80 லட்சம். ஆண்டு ஒன்றுக்கு பராமரிப்புச் செலவு. இந்த விமானங்கள் நிற்க மாதம்தோறும் தருகின்ற வாடகை 20 ஆயிரம் ரூபாய். இதையெல்லாம் எண்ணித்தான் இந்த விமானங்களை நாம் விற்பதாக இருக்கிறோம்.

இன்னொன்று 1989-90,1990-91 இரண்டு ஆண்டுகள் நான் முதலமைச்சராக இருந்தது உங்களுக்கெல்லாம் ஞாபகத்திலே இருக்கும். இந்த 1989-90-இல் என்னுடைய இல்லத்தினுடைய முதலமைச்சருடைய இல்லத்தினுடைய பராமரிப்புச் செலவு99 ஆயிரத்து 624 ரூபாய் ; 1990-91-இல் முதலமைச்சருடைய இல்லத்துப் பராமரிப்புச் செலவு 44 ஆயிரத்து 64 ரூபாய். முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய இல்லப் பராமரிப்புக்கான செலவு, 1991-91-ல் 22 இலட்சத்து 73 ஆயிரத்து 68 ரூபாய். முதலமைச்சர் வீடாக இருந்தாலும், எந்த அமைச்சர் வீடாக இருந்தாலும், அந்த வீட்டுப் பராமரிப்புக்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு செலவு இருக்கிறது. இப்படி அதிகமாகச் செய்யப்பட்ட செலவை இந்த அரசு பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம், இந்த 5 ஆண்டுகளிலே இல்லத்தினுடைய பராமரிப்புச் செலவுக்கு மாத்திரம் 31 இலட்சத்து, 54 ஆயிரத்து 638 ரூபாய்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தினுடைய விமானங்களைப் பயன்படுத்திய

பாக்கிகள் ஏதாவது இருக்கிறதா? அப்படி ஏதாவது இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : எல்லாவற்றிற்கும் நிவாரணமாகத்தான் விமானங்களை விற்பதாக இருக்கிறோமே

நான் 1989-90, 1990-91-ல் தொலைபேசிக்காக செல வழித்தது 6 இலட்சத்து 93 ஆயிரத்து 387 ரூபாய். நானே அடிக்கடி தொலைபேசியிலே, யார் எனக்குத் தொலைபேசியிலே சொன்னாலும், என்னுடைய பி.ஏ. எடுப்பதற்கு முன்பே நானே தொலைபேசியை எடுத்துப் பேசுவது வழக்கம். எந்த ஊரிலே நிகழ்ச்சி என்றாலும் நானே டயல் செய்து அந்த அதிகாரிகளோடு பேசுவது வழக்கம். அப்படி அடிக்கடி தொலைபேசியிலே பேசியும்கூட 6 இலட்சத்து 93 ஆயிரத்து 387 ரூபாய்தான் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஆனது. முன்னாள் முதலமைச்சருக்கு 1993-94-ல் மாத்திரம் 8 இலட்சத்து 28 ஆயிரத்து, 583 ரூபாய். 1994-95-ல் 9 இலட்சத்து 46 ஆயிரம். 1995-96-ல் 9 இலட்சத்து 13 ஆயிரம். 1991-92-ல் 2 இலட்சத்து 51 ஆயிரம். 1992-93-ல் 6 இலட்சத்து 49 ஆயிரம். ஆக மொத்தம், 35 இலட்சத்து 89 ஆயிரத்து 961 ரூபாய்.

பிராயாணச் செலவு இருக்கிறதே அது இந்த 5 ஆண்டு காலத்தில் அவர்களுக்கு ஆனது எனக்கு ஆனது-9 இலட்சத்து 27 ஆயிரத்து 446 ரூபாய். இரண்டு ஆண்டு காலத்திற்கு எனக்கான செலவு 9 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய். 5 ஆண்டு காலத்திற்கு அம்மையார் அவர்களுக்கு ஆனது-3 கோடியே, 8 இலட்சத்து 94 ஆயிரத்து 666 ரூபாய்.

இதோ என்னுடைய கையிலே இருப்பது தமிழக அரசினுடைய, பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் நாகமாணிக்கம் என்பவர், தமிழக அரசின் வருவாய்த் துறைச் செயலாளர் அவர்களுக்கு 13-4-96 அன்று எழுதிய கடிதத்தினுடைய நகல். அசல், கோப்பிலே இருக்கிறது. கடிதத்தினுடைய எண் சி.டி.ஒ.சி. 20233/96. இந்த ஆண்டு ஜனவரி 11,12 ஆகிய நாட்களில், அதாவது 1996, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் தங்களுடைய

தொகுதியான பர்கூரில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் சென்றபோது, பொதுப்பணித்துறை மாத்திரம் செய்த செலவுகளுக்கு ஒப்புதல் பெற எழுதிய கடிதம். அதில் 47 அயிட்டங்கள். அதிலே முக்கியமானவை, பந்தல், மேடை அலங்காரம், போன்றவைகளுக்கான செலவு 32 இலட்சத்து 62 ஆயிரத்து 684 ரூபாய். பேரிகேடு கட்ட-வழியிலே பேரிகேடு, அதாவது சவுக்குக் கம்புகளைக் கட்டி பிறகு அவற்றை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். அந்தப் பேரிகேடு கட்ட 10 இலட்சத்து 45 ஆயிரத்து 415 ரூபாய். தரையைச் சமப்படுத்தி நாற்காலிகள் போட ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 634 ரூபாய். ஹெலிபேட் அமைக்க ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 168 ரூபாய். ராஸ்ட்ரம் அமைப்பதற்கான செலவு ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 543 ராஸ்ட்ரம் நின்று கொண்டு பேசுகிறோமே, அதை வாடகைக்குக்கூட வாங்கலாம் 10 ரூபாய்க்கு. அதற்கு ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 543 ரூபாய். மேடைக்குச் செல்லும் படிகளை அமைக்கச் செலவு 72 ஆயிரத்து 92 ரூபாய். மேடையிலே டாய்லெட் செலவு 3 இலட்சத்து 9 ஆயிரத்து 87 ரூபாய். ஆக மொத்தம் 51 இலட்சத்து 34 ஆயிரத்து 633 ரூபாய். இது பொதுப்பணித்துறை சம்பந்தப்பட்டது மாத்திரம். இன்னும் மின்சாரச் செலவு வேறு இருக்கிறது. வேறு செலவினங்கள் இருக்கின்றன என்று கடிதம் எழுதியிருக்கிறார். இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், இப்படியெல்லாம் ஆடம்பரச் செலவுகள் நாங்கள் செய்யமாட்டோம். செய்தால் தட்டிக் கேட்போம் என்று சொல்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் எதிரே இருப்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வேறு, மோகன் கந்தசாமி வேறு பயமுறுத்துகிறார் நாங்கள் ஆட்சிக்கு வரப்போகிறோம் என்று. எனவே, நாங்கள் மிகுந்த எச்சரிக்கையாக இருப்போம் என்று கூறி, இங்கே வைக்கப்பட்ட கோரிக்கைகள், ஆலோசனைகள் அனைத்தையும் இதயபூர்வமாக வரவேற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறவேண்டுமென்று பணிவோடு கேட்டு அமைகின்றேன். வணக்கம்.

நிதி ஒதுக்கீடு மசோதா

உரை : 53 **நாள் : 28.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, ஆணை யிட்டபடி அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இல்லாவிட்டால், இன்றைக்கு வளர்ப்பு மகன் பிரச்சினை, உடன்பிறவா சகோதரியை ரத்து செய்த பிரச்சினை, இவைகளெல்லாம் வரும், அதையெல்லாம் எதிர் கொள்வதற்கு அவர்களால் இயலாது, எனவே வெளிநடப்பு என்ற பெயரில் இன்று அவையிலே இருந்து தப்பித்துக் கொண்டு விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அவர்களுடைய சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன்.

அவர்கள் வெளிநடப்புச் செய்துவிட்ட காரணத்தினால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் எழுப்பிய பிரச்சினைக்கு சாங்கோபாங்கமாக நான் பதில் சொல்ல இயலும் என்றே கருதுகிறேன். உறுப்பினர் ஞானசேகரன் இந்த அரசின் மீதே ஒரு குற்றம்சாட்டினார். பத்திரிகையாளர்கள் இப்படி தொடர்ந்து தாக்கப்படுகிறார்கள். நீங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னார். போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, உரிய நடவடிக்கை எடுக்க வில்லை, கடுமையான செக்ஷன்கள் போட்டு அவர்களை தண்டிக்கவில்லை என்றெல்லாம் குறை சொன்னார்.

எதிர்க்கட்சியிலே உள்ள ஒரு உறுப்பினர் என்ற முறையில் இந்த அரசின் மீது குறை சொல்ல அவருக்கு உரிமையுண்டு, குற்றம்சாட்ட உரிமையுண்டு. ஆனால் வெளியிலே நடந்தவைகளை எல்லாம் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவரலாமா என்ற ஒரு அற்புதமான கேள்வியை

வெளிநடப்புச் செய்த திருநாவுக்கரசு அவர்கள் இங்கே கேட்டார்கள். இதிலிருந்து பத்திரிகைக்காரர்களை அடிப்ப தெல்லாம் உள்ளே நடக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்று கருதுகிறேன். வெளியே அடித்தால் கேட்கக் கூடாது, உள்ளே நிருபர்கள் அமர்ந்து இருக்கிற இடத்திலேயே சென்று அ.இ.அ.தி.மு.க.-காரர்கள் அடித்தால்தான் அதைக் கேட்கவேண்டுமென்று சொல்கிறார் போலும்.

எத்தனையோ, நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பிரச்சினைகள் இந்த அவை தோன்றிய காலந்தொட்டு வெளியிலே நடைபெற்ற பிரச்சினைகளுக்காகத்தான் கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம் இவைகளெல்லாம் இந்த அவையிலே கொண்டுவரப்படுவது என்பது மரபாக, வழக்கமாக, ஜனநாயக இலக்கணமாக இருந்து வருகிறது என்பதை ஜனநாயக மரபை உணர்ந்தவர்கள் மிக நன்றாக அறிவார்கள். இந்தச் சட்டமன்றத்திலேயே இன்று வெளிநடப்புச் செய்த திருநாவுக்கரசு அவர்கள் வெளியில் நடைபெற்ற பல்வேறு பிரச்சினைகளுக்காக ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் இவைகளெல்லாம் கொண்டு வந்திருக்கிறார்.

இப்போது கழக ஆட்சி நடைபெறுகிற இந்த 3 மாத காலத்திலேகூட வெளியில் நடைபெற்ற பல்வேறு பிரச்சினை களுக்காக அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திருநாவுக்கரசு ஆகட்டும், அல்லது தாமரைக்கனி ஆகட்டும், அல்லது வேறு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆகட்டும் வெளியில் நடைபெற்றுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்காக இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள்.

இராமேஸ்வரத்திலே கடத்தல்காரர்கள் தப்பித்துக் கொள்வதற்காக நாங்கள் இங்கே உள்ள கலங்கரை விளக்கத்தை - அதனுடைய மாடத்தை இடிக்க வந்தோம் என்று சொன்னதும், அவர்கள் கைது செய்யப்பட்டதும் வெளியில் நடைபெற்ற விஷயம்தான். இராமேஸ்வரத்தில் நடைபெற்ற, வெகு தொலைவில் நடைபெற்ற அந்தப் பிரச்சினையை இந்த அவைக்குக் கொண்டுவரலாமா என்று யாரும் கேட்கவில்லை. அப்படி நாங்கள் கேட்டிருந்தால் நாங்கள் அறிவுடையோர்

வரிசையிலே சேர்க்கப்பட்டிருக்கமாட்டோம். எனவேதான் வெளியில் நடைபெறுகின்ற எந்தப் பிரச்சினையானாலும் - அதனுடைய தராதரம் இருக்கிறது. அதிலே சட்டப்பிரச்சினை இருக்கிறதா, அதிலே வன்முறை புகுந்திருக்கிறதா, அது யாரை பாதிக்கின்ற பிரச்சினை, அது பொதுமக்களை பாதிக்கிறதா இல்லையா என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்க வேண்டிய கடமையும், உரிமையும் இந்த அவையினுடைய தலைவருக்கும், துணைத்தலைவராக இருக்கின்ற தங்களுக்கும் இருக்கிறது. அது பயன்படுத்தப்பட்டுத்தான் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே தன்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முன்மொழிந்து, அதைப்பற்றிப் பேசி இந்த அரசு இன்னும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற அளவிலே, எடுத்த நடவடிக்கை போதாது என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் சம்பந்தப்பட்டவர்களே, பாதிக்கப்பட்டவர்களே அவர்களுடைய பத்திரிகையில் இதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அதைப் படித்தாலே இந்த அரசு எடுத்த நடவடிக்கை போதுமானதுதான் என்று ஞானசேகரன் ஒத்துக்கொள்வார் என்று கருதுகின்றேன்.

ஏற்கெனவே தங்களிடத்திலே அனுமதி பெற்றிருக்கிற காரணத்தினாலே இதை நான் இந்த அவையிலே படிக்க விரும்புகிறேன். 'ஆர்.எம்.ஏ. தோட்ட மர்மம்' என்ற தலைப்பில் அந்தப் பத்திரிகை 'தமிழன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே எழுதப்பட்டுள்ள அந்தக் கட்டுரையில் இந்தச் சம்பவத்திற்கு பெரும்பான்மையான இடம் தரப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது. "முத்தப்பன்பட்டியிலே பிறந்த முன்னாள் சபாநாயகருக்கு 3 ஏக்கர் நிலம்கூட சொந்தமாகக் கிடையாது என்பது ஒரு காலம். ஆனால் இன்று நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கும், அடுக்குமாடிக் கட்டிடங்களுக்கும் அதிபதியாக இருக்கிறார். கடந்த 5 ஆண்டுக்கால ஆட்சிக் காலத்தில்தான் இந்தச் சொத்துக்களை உருவாக்கியிருக்கிறார். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது இரண்டு முறை முத்தையா சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அப்போது அவருக்கு ஒரு கார் மாத்திரமே சொந்தம். அதுவும் கூட எஸ்.டி.எஸ். வாங்கிக்கொடுத்ததாக அப்போதைக்குச் சொல்லப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியில் சபாநாயகரான பிறகு

அவர் பல கட்டிடங்களுக்கு அதிபதி. இதைத்தான் தோண்டித் துருவிக் கொண்டிருக்கிறது லஞ்ச ஒழிப்புத் துறை. முத்தையா, சேடப்பட்டி தொகுதி என்பதால், சேடப்பட்டியார் ஆனார். சொந்தத் தொகுதியில் வீட்டைத் தவிர எந்த ஒரு சொத்தையும் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது அவரது புத்திசாலித்தனம். 21ஆம் தேதியன்று அவரது வீட்டிற்கு வந்த லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் பல ஆவணங்களைக் கைப்பற்றினார்கள். கல்லுப்பட்டி அக்கிரஹாரத்திலே உள்ள இரண்டு மாடிக் கட்டிடமான 'பாப்பா அப்பார்ட்மெண்ட்ஸ்'ம், சோதனைக் குள்ளாயின. சோதனையில் ஃபிக்சட் டெபாசிட் ரசீதுகள், நகைகள், வாகனங்கள் கைப்பற்றப்பட்டன. லஞ்ச ஒழிப்புச் சட்டம் 1988-ன் 13(2), 13(1) (ஈ) பிரிவின்படி அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. சபாநாயகரான பிறகு சேடப்பட்டி முத்தையா வாங்கிக் குவித்துள்ள சொத்துக்கள், நிலங்கள், வாகனங்களைப் பற்றிய ஆதாரங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. அதில் சிக்கியதுதான் கொடைரோடு அருகே உள்ள ஆர்.எம்.ஏ. எஸ்டேட் சம்பந்தமான ஆவணங்கள்". இப்போது ஞானசேகரன் குறிப்பிட்டாரே அந்தச் சொத்துக்கள். "1993-ல் இந்த இடத்தை முத்தையா வளைத்துப் போட்டார். அதற்கு ஆர்.எம்.ஏ. தோட்டம் என்ற பெயரையும் சூட்டினார். ஆர். முத்தையா மகன் அறிவழகன். அதனால் அது ஆர்.எம்.ஏ. தோட்டமாயிற்று. இது 200 ஏக்கர் நிலப்பரப்பு. இதில் 60 ஏக்கருக்கு உட்பட்ட நிலம்தான் மற்றவர்களிடமிருந்து வாங்கப்பட்ட பட்டா நிலம். மீதியுள்ள 140 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் அரசின் புறம்போக்கு நிலம்". அரசின் புறம்போக்கு நிலம். அவ்வளவுதான். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், தேர்தல் பொதுக் கூட்டங்களில், இன்னும் கொஞ்சம் நாள் விட்டால் இந்தியா மேப்பில் தமிழ்நாடு இருந்த இடத்தில் ஓட்டைதான் இருக்குமென்று சொன்னேன். நல்லவேளை தமிழ்நாட்டு மக்கள் தமிழ்நாட்டைத் தப்ப விட்டுவிட்டார்கள்.

"சிறுமலையை ஒட்டியுள்ள காட்டு இலாக்காவிற்குச் சொந்தமான நிலங்களும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. பார்க்கப் பார்க்க மலையடிவார பசும்சோலைதான். விசாரித்தால் சின்ன குழந்தைகூட சொல்கிறது. சேடப்பட்டி முத்தையா தோட்டமென்பதை. ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள்,

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் லட்சக்கணக்கான கொய்யா கன்றுகள், மறுபுறம் சப்போட்டா மரங்கள், வாழைத் தோப்புகள், மாட்டுப் பண்ணை, மீன் பண்ணை, மூலைமுடுக்கு வரை கார் சென்று வர பாதை. அத்தனையும் அந்த நிலத்தில் அடக்கம். தண்ணீர் பாய்ச்ச மாத்திரம் 16 கிணறுகள். 7 ஆழ்துளைக் கிணறுகள்". அந்த கிராமத்து விவசாயிகள் வயிற்றைப் பிடித்துக் கொண்டு, வாயைப் பிளந்து ஆழ்துளைக் கிணறு வேண்டும், தண்ணீர் இல்லை என்கிறார்கள். அதைப் பத்திரிகையில் எழுதவில்லை. நான் சொல்கிறேன். "தண்ணீர் பாய்ச்ச மாத்திரம் 16 கிணறுகள். 7 ஆழ்துளைக் கிணறுகள். அத்தனையிலும் மின்சார மோட்டார்கள். இவற்றுக்கு மின் சப்ளை செய்ய தனியாக டிரான்ஸ்ஃபார்மர்" - வீராசாமி அவர்கள் கவனத்திற்கு. "ஒரே நேரத்தில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஆவணத்தின் மூலம் வெளிச்சத்திற்கு வந்த சொத்தே இந்த 200 ஏக்கர் நிலம் என்றால் மற்ற ஆவணங்களின் மூலம் வெளிச்சத்திற்கு வர இருக்கிற சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு இருக்கும்? உங்கள் யூகத்திற்கே விடப்படும்" என்று எழுதியுள்ள பத்திரிகை ஞானசேகரனுடைய குற்றச்சாட்டிற்கும் பதில் சொல்லியிருக்கிறது.

அந்தப் பத்திரிகையே பதில் சொல்கிறது. "சேடப்பட்டி முத்தையா வீட்டில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் கடந்த 21ஆம் தேதி சோதனை நடத்தினார்கள். அந்தச் செய்தி கிடைத்தவுடன் தமிழன் எக்ஸ்பிரஸ் நிருபர் மார்க்கண்டன் தனது காமிராவோடு விவரங்களைச் சேகரிக்கச் சென்றார். மார்க்கண்டேயன் கொடை ரோடிலேயிருந்து ஒரு வாடகை சைக்கிள் மூலம் தொடுகொம்பு என்ற இடத்திற்கு போய் பண்ணையைப் படம் பிடித்துவிட்டுத் திரும்பினார். சிறிது நேரத்தில் சீறிப் பாய்ந்து வந்த ஒரு கார் அவரைத் துரத்தியது. டாட்டா சுமோ காரில், டி.எண்.58-1000 என்ற நம்பரில் வந்த சிலர் துரத்திவந்து, சைக்கிள் மீது மோதினார்கள். கீழே விழுந்த மார்க்கண்டேயனுக்கு மாற்றி மாற்றி உதை, எடுடா, துப்பாக்கியை, சுட்டுத் தள்ளுவோம் என்று மிரட்டி இருக்கிறார்கள். ஒருவர் பிலிம் ரோலையும் பிடுங்கி கொண்டார். காயம்பட்ட உடலோடு சைக்கிளைத் தள்ளிக் கொண்டே, கொடை ரோடுக்கு வந்தார் மார்க்கண்டேயன். வாடகை சைக்கிளை ஒப்படைத்து

விட்டு பஸ் நிலையம் வந்தார். அ.தி,மு,க. கரை வேட்டி கட்டிய முத்துவேல் என்பவர் அவரைத் தாக்கி காமிராவை பறித்து உடைத்தார். இந்தச் சம்பவம் குறித்து திண்டுக்கல் - மன்னர் திருமலை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் எழுத்து மூலம் மார்க்கண்டேயன் புகார் செய்தார். பிறகு நமது அலுவலகத்திற்கு தகவல் கொடுத்தார்''. அவர்களுடைய சென்னையிலே இருக்கக்கூடிய அலுவலகத்திற்கும் தகவல் கொடுத்தார். "உடனே சென்னையிலுள்ள உயர் அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. உடன் அரசு தரப்பில் மிக துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சேடப்பட்டிக்குச் சொந்தமான டி.என். 58-1000 'டாடா சுமோ' பறிமுதல் செய்யப்பட்டது".

திரு. ஞானசேகரனுக்குச் சொல்கிறேன். குற்றம் சாட்டியவருக்கும் சொல்கிறேன். "டாடா சுமோ" பறிமுதல் செய்யப்பட்டது. "மேலும் நிருபர் தாக்கப்பட்ட சம்பவத்தில் சம்பந்தப்பட்ட செல்வம், வீரமணி, காந்திராஜன், கணபதி ஆகிய நால்வரும் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 506(2) கொலை மிரட்டல், 427 பொருளுக்கு சேதம் உண்டாக்குதல், 341 சட்டவிரோதமாக தடுத்து நிறுத்துதல், 323 காயம் ஏற்படும் வகையில் தாக்குதல், 109 குற்றத்திற்கு தூண்டுதல், உடந்தையாக இருத்தல் ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரிடமிருந்து பிலிம் ரோலையும் போலீசார் மீட்டுத் தந்தார்கள். தற்போது காவல்துறையினரிடம் உள்ள அந்த நிருபரின் காமிராவை திரும்ப பெற்றுத் தர விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு காமிராவை உடனடியாக நிருபரிடம் திரும்பத் தருமாறு டி.ஐ.ஜி. கணேசன் தொலைபேசி மூலம் உத்தரவிட்டார். சேதம் அடைந்த காமிராவுக்கு நஷ்டஈட்டை சட்டப்படி பெற்றுத் தருவதாகவும் டி.ஐ.ஜி. உறுதி அளித்துள்ளார். அவ்வப்போது தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமையினை கேட்டறிந்து நடவடிக்கைக்கு ஊக்கப்படுத்தி, காரை பறிமுதல் செய்ய உத்தரவிட்ட ஐ.ஜி. காளிமுத்து, நாம் நேரில் எந்த விதத்திலும் அணுகாதபோதும் உடனே நடவடிக்கை எடுக்க

துரிதப்படுத்திய மதுரை சரக டி.ஐ.ஜி. கணேசன், புகார் கொடுத்தவுடன் நடுராத்திரி என்றும் பாராமல், கடும் மழை என்றும் பாராமல் ரெயின்கோட்டை மாட்டிக்கொண்டு தோட்டத்திற் குள்ளே புகுந்து அதிரடி நடவடிக்கை எடுத்த திண்டுக்கல் மாவட்ட எஸ்.பி. கருணாசாகர், நமக்கு நம்பிக்கையூட்டி ஆறுதல் சொல்லி தீவிர நடவடிக்கை எடுத்த டி.எஸ்.பி. பாஸ்கரன், தாலுக்கா எஸ்.ஐ. கர்ணம், நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்த டி.எஸ்.பி. பகூகர், எஸ்.ஐ. உத்ரன் ஆகியோரின் நேர்மை தவறாத கடமை உணர்வை மனமார பாராட்டுகிறோம்" என்று தமிழன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதியிருக்கும்போது, ஞானசேகரன் எங்கள் மீது இப்படி குறை சொல்லலாமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, அடிபட்டவருடைய பெயர் மார்க்கண்டேயன். அந்த மார்க்கண்டேயனுக்கு திருக்கடையூரில் உள்ள சிவபெருமான் அபயம் கொடுத்தது போல, பத்திரிகைக் காரர்களாக இருக்கின்ற மார்க்கண்டேயர்களுக்கெல்லாம் தி.மு.க. அரசு பாதுகாப்பு கொடுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி). மார்க்கண்டேயர்களைக் கொல்ல வருகின்ற எமதர்மர்களை விட்டுவைக்காது என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு சட்டமுன்வடிவு என்பது சட்டப்பேரவையிலே நிதிநிலை அறிக்கையையொட்டி, விவாதிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுகின்ற ஒரு முக்கியமான ஒதுக்கீடு ஆகும். இதிலே, அவையிலே எல்லாக் கட்சியினுடைய உறுப்பினர்களும் தவறாமல் வந்திருந்து, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுப்பதுதான் ஜனநாயக மரபாகும். எந்த எந்த உறுப்பினர்கள், எந்த எந்தக் கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். அவைகளுக்கு உடனடியாக பதில் அளிக்க முடியாவிட்டாலும், அவைகளை குறித்து வைத்துக்கொண்டு, பின்னர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு எல்லா அமைச்சர்களும், அவையிலே இருக்க வேண்டியதும் முக்கியமான ஒன்றாகும். இதை நான் நினைவு படுத்துவது எதிர்காலத்திலாவது, இந்த ஒழுங்குமுறை கடைப் பிடிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான். நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் மாத்திரம் அல்ல, இந்த விவாதம் தொடங்குகின்ற போதும், தொடர்ந்தும், உறுப்பினர்களும்,

அமைச்சர்களும் அவையிலே இருந்தால்தான் - நிதி ஒதுக்கீடு சாதாரணம் அல்ல. 11,000 கோடி, 12,000 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதியை இந்த மாநில மக்களுக்காக ஒதுக்கித் தருகின்ற அந்தப் பெரும் கடமையை ஏற்றிருக்கின்ற அமைச்சர்கள், ஆளும் கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்ற தோழமைக் கட்சிகளுடைய உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளுடைய உறுப்பினர்கள் - அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் இன்றைக்கு இந்த நிதி நிலை ஒதுக்கீட்டில் உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய, செழுமிய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்த மன்றத்திலே வாக்கெடுப்புக்கு விடப்படுகின்ற மொத்த நிதி ஒதுக்கீடு 12,216.97 கோடி ரூபாய்க்கு உரியதாகும். மேலும் 3,440.24 கோடி ரூபாய் சார்ஜ்டு ஐடெம், அதாவது சாட்டியச் செலவினம், இந்தச் சாட்டியச் செலவினம் என்பது சில பேருக்குப் புரியாமல் இருக்கலாம். சாட்டியச் செலவினம் என்பது நிதி நிர்வாகத்திற்காக ஏறத்தாழ 10 கோடி ரூபாய் கடன் குறைப்பு அல்லது தவிர்ப்புக்கான நிதி ஒதுக்கம் 112 கோடி ரூபாய் வட்டிக் கொடுப்பதற்காக 1,481 கோடி ரூபாய், மாநில அரசினுடைய உள்நாட்டுக் கடன்களைத் தீர்ப்பதற்கு 1,524 கோடி ரூபாய், மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களும், முன் பணங்களும் 299 கோடி ரூபாய் என்கின்ற இந்த வகையிலே 3,440 கோடி ரூபாய் சாட்டுதல் செலவாக இணைக்கப்பட்டு - நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல, 12,216.97 கோடி ரூபாய்க்கான அளவிலே வாக்கெடுப்புக்கு விடப்படுகின்ற நிதியாகவும், 3440 கோடி ரூபாய் சாட்டியச் செலவினங்களுக்காக உள்ள ரூபாயாகவும், இந்த மாமன்றத்திலே அதற்குரிய விவாதம் நடைபெற்று வாக்கெடுப்பு நேரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிற இந்த வேளையில் சில கருத்துக்களை உங்களிடையே பரிமாறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

பேசிய உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றி பொதுவான சில குறைபாடுகளைப் பற்றியெல்லாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் அவர்கள் தொடக்கத்தில் இன்றைக்கு புதிய அரசு பல

சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்கிற ஆர்வத்தோடு செயல்பட்டாலும்கூட, முழுமையான அளவில் அது வெற்றி அடையவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, எந்த எந்தக் கட்டங்களிலெல்லாம் வெற்றி அடைய வேண்டும். எந்த எந்தச் சூழ்நிலைகளிலெல்லாம் வெற்றியை நோக்கிச் செல்லவேண்டும் என்பதை எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். குறிப்பாக தீயணைக்கும் படையிலுள்ள பெரிய அதிகாரி, இத்தகைய தவறுகளைச் செய்திருக்கிறார். அவர்மீது என்ன நடவடிக்கை என்றெல்லாம் கேட்டு இருக்கிறார். தவறுகள் சுட்டிக்காட்டப் படும்போது அது தவிர்க்கப்படாது. அவைகளையெல்லாம் மேற்கொண்டு விசாரித்து இங்கே செல்லக்குமார் அவர்கள் சாட்டியக் குற்றச்சாட்டில் ஆதாரம் இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நிதிநிலை அறிக்கையிலே ஒரு வாசகத்தை குறிப்பிட்டிருந்ததை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். **'கோப்புகள் சிகப்பு நாடாவிலே கட்டப்பட்டு உறங்கிக்கொண்டிருக்கும் போது, ஊழல் எழுந்து உட்கார்ந்து ஊர் சுற்றப் புறப்பட்டு விடுகிறது'** என்று குறிப்பிட்டிருந்தேன். ஒன்றைச் சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படமாட்டீர்கள். ஏனென்றால் கடந்த ஆட்சியிலே இதுதானா நடந்தது. இன்னும் ஏதோ நடந்திருக்க வேண்டுமே என்கின்ற அளவுக்கு நீங்கள் பழகிப்போய்விட்ட காரணத்தால் ஆச்சரியப்படமாட்டீர்கள். கடந்த ஆட்சியில் தேக்கி வைக்கப்பட்ட கோப்புகள், நாங்கள் வந்தபோது நானும் மற்ற அமைச்சர்களும் பார்த்துத் தீரவேண்டிய அவசியத்திற்கு வந்த நிலையிலே 2,681 கோப்புகள் தேங்கிக் கிடந்தன. அதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால், 2,681 கோப்புகளில் 5 ஆண்டுகளாக கிடந்த கோப்புகள் 34, - 5 ஆண்டுகளாக இருந்த கோப்புகளில் ஒரு கோப்பை எடுத்து நான் பிரித்து அதிலே கையெழுத்து இடுகிற நேரத்தில் டஸ்ட் அலர்ஜி என்பார்களே, அந்த அலர்ஜி கூட எனக்கு வந்துவிட்டது. 5 ஆண்டுகளாக பிரிக்கப்படாமல் கிடந்த கோப்பால்; 4½ ஆண்டுகளாக பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 60 கோப்புகள்; 4 ஆண்டுகளாக பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 120 கோப்புகள்; 3½ ஆண்டுகளாக பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 150 கோப்புகள்; 3 ஆண்டுகள் பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 457 கோப்புகள்;

2½ ஆண்டுகள் பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 238; 2 ஆண்டுகள் பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 229 கோப்புகள்; 1½ ஆண்டுகள் பார்க்கப்படாமல் இருந்த கோப்புகள் 276 கோப்புகள்; ஓராண்டு காலமாக தேங்கிக் கிடந்த கோப்புகள் 184; இப்படி மொத்தத்தில் 2681 கோப்புகள் தேங்கிக் கிடந்தன. அல்லது தூங்கிக்கொண்டு இருந்தன. காரணம், அதிலே எந்த ஆதாயத்தையும் பெற வழியில்லாத அப்பாவி கோப்புகள்; (சிரிப்பு) எனவே, அதை யாரும் சீண்டவில்லை. ஆனால், மற்ற கோப்புகள் எல்லாம் காலையிலே சென்றால் மாலையிலே கையெழுத்தாகி திரும்பி இருக்கின்றன. கோப்புகளை பார்க்கின்ற இடத்திலே கோட்டையிலே நாங்கள் இருக்கின்ற காரணத்தால் இந்த விவரங்கள் எங்களுக்கு புரிந்தது என்பதால் அவைகளை விளக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு மிக முக்கியமான பல பிரச்சினைகளில், மக்களுடைய அன்றாட அத்தியாவசிய தேவைகள், அடிப்படை வசதிகள், இவைகளிலே போதிய கவனத்தை செலுத்தி இருக்கிறது. அதற்காக நம்முடைய அமைச்சர் பெருமக்களும், அமைச்சர்களுடைய துறைகளிலே உள்ள அதிகாரிகளும், மாவட்டங்களில் உள்ள ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள் அனைவரும் இன்றைக்கு ஒருங்கிணைந்து செயல்படுகின்ற ஒரு உன்னதமான நிலை உருவாகி இருக்கிறது என்ற அந்தச் சூழ்நிலையில், அவைகளைப் பற்றி எல்லாம் விளக்க நேரம் இல்லாத காரணத்தால், வேலை வாய்ப்பை பொறுத்தவரையில், இந்த அரசு எந்த அளவிற்கு விரைவு காட்டி இருக்கிறது என்பதை எடுத்துக்கூற நான் விரும்புகின்றேன்.

1994ஆம் ஆண்டில் 14 ஆயிரம் பேருக்குத்தான் வேலை வாய்ப்பு. 1995-ல் 18 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்று இப்போது நாம் இந்த நிதியாண்டு காலத்தில், இந்த நடப்பாண்டு காலத்தில் வேலை வாய்ப்புக்கு அளிக்கப்பட்டு இருக்கிற உத்தரவாதம், நிச்சயமாக அடுத்த நிதிநிலை அறிக்கையை நான் இங்கே படிக்கிற நேரத்தில் இவைகள் எல்லாம் செய்து முடிக்கப்பட்டுவிட்டன; இவ்வளவு பேர் வேலைவாய்ப்பு பெற்று

இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு உள்ள அந்த நிலையை மாத்திரம் இங்கே எடுத்துக்கூற விரும்புகின்றேன். மக்கள் நலப் பணியாளர் ஒரு ஊராட்சிக்கு 2 பேர் வீதம், 25 ஆயிரம் பேர்; மக்கள் நலப் பணியாளர்கள் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 10 ஆயிரம் பேர்; குடிப்பழக்கத்தின் தீமையை மக்களுக்கு எடுத்துரைக்க மகளிர் 25 ஆயிரம் பேர்; மகளிருக்கான கிராமப்புற மத்திய மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைப்பு மூலம் 3 லட்சம் பெண்கள்; இடைநிலை ஆசிரியர்கள் 11 ஆயிரம் பேர், முறைப்படி அவர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமிக்கப்படுகிறார்கள்; பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் 3 ஆயிரம் பேர்; கடந்த ஆட்சியில் தேர்வு நடந்தும் நியமிக்கப்படாமலே இருந்த காவலர்கள் 10 ஆயிரம் பேர்; சப்-இன்ஸ்பெக்டர்கள் 1100 பேர்; தீயணைப்புப் பணியாளர்கள் 1060 பேர்; இந்த ஆட்சியிலே புதிதாக தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்ற, நடப்பு ஆண்டிலே தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்ற காவலர்கள் 5 ஆயிரம் பேர்; எனவே, மொத்தம் 4 லட்சம் பேர், ஏறத்தாழ 4 லட்சம் பேருக்கு (மேசையைத் தட்டும் ஒலி). இந்த நடப்பு ஆண்டிலேயே வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்ற நற்செய்தியை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒவ்வொன்றும், ஒவ்வொரு திட்டமும் ஒழுங்குற நிறைவேற, எங்களால் எல்லாம் முடியும் என்கின்ற அந்த ஆணவத்தோடு நாங்கள் இல்லாமல், அறிவார்ந்த மக்கள், ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், மேதைகள், அவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் தேவை என்பதற்காக சில குழுக்கள் அமைக்கப்படும் என்றால், பேராசிரியர் கல்கி ஒரு காலத்திலே வேடிக்கையாகச் சொன்னதைப் போல, ஒரு காரியம் நடக்கவேண்டாம் என்றால் அதன் தலையிலே ஒரு கல்லைப்போடு, இல்லாவிட்டால் ஒரு கமிட்டியைப் போடு என்பார்கள். ஆனால் கழக ஆட்சியில் நாங்கள் எப்போது கமிட்டி போட்டாலும் அது இயங்கி, நல்ல பல காரியங்களை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றது. அந்த வகையிலேதான், இரண்டாவது பசுமைப் புரட்சியை உருவாக்கிடும் நோக்கத்துடனும், பொருத்தமான

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தரிசு நிலங்கள் மற்றும் பாசன வசதி ஆகியவற்றை மேம்படுத்தவும், வறுமையை ஒழிக்கவும் விவசாயிகளுடைய வாழ்க்கையிலே வளத்தைப் பெருக்கவும் அதற்கான திட்டங்கள் தீட்ட பரிந்துரைகள் வழங்க வேண்டுமென்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது.

அந்தக் குழுவினுடைய தலைவராக டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள், உறுப்பினர்களாக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், திரு. எஸ். குகன், டாக்டர் வைத்தியநாதன், டாக்டர் சம்பந்தமூர்த்தி, டாக்டர் ராணி பெருமாள், திரு. மோகனகிருஷ்ணன், டாக்டர் டி. நடராஜன், டாக்டர் சி.ஏ. புண்டரிகாந்தன் ஆகியோரும், வேளாண்மைத் துறையின் செயலாளர் இந்தக் குழுவின் உறுப்பினர்-செயலாளராகவும் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள். இது அறிவிப்போடு நிற்கவில்லை. இதற்கான உத்தரவு, அரசு ஆணை எண் 251, 2-7-1996-லேயே பிறப்பிக்கப்பட்டு, இந்தக் குழுவின் இரண்டு கூட்டங்களும் இதுவரையில் நடைபெற்றுவிட்டன என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஊழல்கள் நடைபெறாமல் தடுப்பதற்காகவும், அரசின் நடைமுறைகளிலும் நிர்வாக அமைப்பிலும் சில மாற்றங்களை பரிந்துரை செய்ய வேண்டும் என்பதற்காகவும் ஒரு உயர்நிலைக் குழு உடனடியாக உருவாக்கப்படும் என்று நான் அறிவித் திருந்தேன். அதற்கேற்ப ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ராமானுஜம் அவர்களுடைய தலைமையில், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி செல்வி எம்.எஸ். ரமேஷ், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. சி. தங்கராஜ், ஓய்வுபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரி திரு. சி.வி நரசிம்மன், அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அனந்தகிருஷ்ணன், சட்டமன்ற முன்னாள் மேலவை உறுப்பினர் திரு. ஏ.ஆர். தாமோதரன், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கே.எஸ். லட்சுமிகாந்தன் பாரதி ஆகியோரும், அந்த உயர்நிலைக் குழுவின் செயலாளராக பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் செயலாளரும் அதிலே இடம் பெற்றுள்ளனர். அதற்கான அரசாணையும் 2-8-1996 அன்று பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்ற மகிழ்ச்சியான

செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மூன்றாவதாக ஒரு குழு. பொது விநியோக முறையை மேலும் சீராக்கிச் செயல்படுத்த, அண்டை மாநிலங்களுக்கு ஒரு குழு அனுப்பிவைக்கப்படும் என்று அறிவித்து, அந்தக் குழுவினுடைய உறுப்பினர்களின் பெயர்களும் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் குழுவில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சு. ப. தங்கவேலன், திரு. ஞானசேகரன், திரு. ராஜாரெட்டி, திரு. தாமரைக்கனி, திரு. முகம்மது இஸ்மாயில், திரு. இ. கணேசன், திரு. ஆர். தேசிகன், குடிமைப்பொருள் வழங்கல் கழகத்தின் தலைவர், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் ஆகியோர் இடம் பெற்றிருக்கின்றார்கள். இதற்கான அரசாணை, எண் 144ல், 13-8-1996 அன்று பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு இந்தக் குழு பக்கத்து மாநிலங்களுக்குச் சென்று இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து உடனடியாக அறிக்கையைத் தரும். அந்தப் பரிந்துரைகளை ஏற்று அரசு செயல்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அரசாங்கம் நிறைவேற்றவேண்டிய திட்டங்களைக் கலந்தாலோசித்து பரிந்துரை செய்ய ஒரு திட்டக்குழு - மாநில அளவிலே ஒரு திட்டக்குழு - இது 1971ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழக அரசிலேதான் மாநில திட்டக்குழு தொடங்கப்பட்டது. மாநிலத்தில், திட்டக்குழு முதன்முதலாக இந்தியாவில் தொடங்கப்பட்டதை அன்றைக்கு மத்தியில் உள்ள அமைச்சர்கள் எல்லாம் வரவேற்றார்கள். பெரியவர் சி. சுப்பிரமணியம் போன்றவர்கள் எல்லாம் அன்றைக்கே வரவேற்று வாழ்த்துத் தெரிவித்தார்கள். இப்போது அதற்கு வெள்ளி விழா. 1971-லே தொடங்கிய மாநிலத் திட்டக் குழுவுக்கு இப்போது வெள்ளிவிழா. நாங்கள் இடையிலே இல்லாவிட்டாலும் விழாக்களை நடத்துகின்ற நேரத்திலே நாங்கள் வந்துவிடுகின்றோம் என்பதற்கு மற்றொரு சான்றாகும் இது.

(மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டக் குழுவினுடைய தலைவராக முதலமைச்சரும், இப்போது திருத்தியமைக்கப்பட்ட திட்டக் குழு உறுப்பினர்களாக மத்திய திட்டக் குழுவின் உறுப்பினராக இருந்த எல்.சி.ஜெயின், தமிழக அரசின் முன்னாள் நிதித்துறை செயலாளர், ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் எஸ். வெங்கிடரமணன், தமிழக அரசின் முன்னாள் நிதித் துறைச் செயலாளர் குகன், தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் டி.வி. அந்தோணி, முன்னாள் துணை வேந்தர் திருமதி லலிதா காமேசுவரன், முன்னாள் திட்டக் குழு உறுப்பினராக இருந்த ஜி. சிதம்பரம், டாக்டர் வைத்தியநாதன், எம்.பி.பி.எஸ். முன்னாள் துணை வேந்தர் டாக்டர் சண்முகசுந்தரம், முழு நேர உறுப்பினராக கே.வி. பழனிதுரை என்று இந்தக் குழு திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் அரசாணை 14-8-1996 அன்றும் 21-8-1996 அன்றும் பிறப்பிக்கப்பட்டு, இந்தக் குழுவினுடைய முதல் கூட்டம் செப்டம்பர் திங்கள் 6ஆம் நாள் நடைபெற இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வருவாய்த் துறையில் ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் - ரெவின்யூ கமிஷன் - என்று நான் ஏற்கெனவே இந்த அவையிலேயே அறிவித்து இருக்கிறேன். அந்த ரெவின்யூ கமிஷனுடைய தலைவராக, முன்பு போலீஸ் கமிஷனுக்கு தலைவராக இருந்த, முன்னாள் தலைமைச் செயலாளர் சபாநாயகம் அவர்கள் செயல்படுவார்கள். உறுப்பினர்களாக நான்கு பேர்கள், அதிலே ஒருவர், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வி. கே. லட்சுமணன் அவர்கள் உறுப்பினர்களில் ஒருவர், ஐ.ஏ.எஸ். அதிகாரி, ஓய்வு பெற்றவர், கே. எஸ். இராமகிருஷ்ணன், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ். சிவசுப்பிரமணியம், மேனேஜ்மென்ட் எக்ஸ்பர்ட் என்று சொல்லத்தக்க டி. சங்கரன் ஆகியோர் இந்தக் குழுவிலே இருப்பார்கள். இந்தக் குழுவின் செயலாளராக பணியிலே உள்ள ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி நியமிக்கப்பட இருக்கிறார்.

பின்னர், சுயநிதிக் கல்லூரிகளைப் பற்றி தொடர்ந்து இந்த அவையிலே கல்வி மானியத்திலும் சரி, வேறு மானியங்களிலும் சரி, பொதுப் பிரச்சினைகளைப் பேசும்போதும் எடுத்துக் கூறப்

பட்டிருக்கிறது. எனவே, சுயநிதி கல்லூரிகள், தனியார் நடத்துகிற இந்தக் கல்லூரிகளை எல்லாம் அரசு கண்காணிக்கும் என்ற உறுதிமொழியை நம்முடைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் இந்த அவையிலே பல முறை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதற்கேற்ப தமிழ்நாட்டில் புதிய சுயநிதிக் கல்லூரிகள் பெருகியுள்ள சூழ்நிலையில் அந்த கல்லூரிகளுக்கான அனுமதியை வழங்குவதற்கு முன்பாக அதற்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் உள்ளனவா என்பதைக் கண்டறிந்து, சிபாரிசு செய்வதற்காக அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று சென்று பரிந்துரை செய்வதற்கு ஏற்ப, அந்த அடிப்படை வசதிகள் எல்லாம் தொடர்ந்து செய்யப்பட்டு இருக்கின்றனவா என்பதைச் சோதனை செய்யவும், சிறுபான்மையோருக்கு என்ற சிறப்பு அடிப்படையில் அனுமதி பெற்ற சுயநிதிக் கல்லூரிகள் உண்மையிலேயே அப்படித் தொடர்ந்து இயங்குகின்றனவா என்பதைக் கண்டறிந்து, அரசாங்கத்திற்கு அறிக்கை தர ஒரு குழு அமைக்கப்படுகிறது. அந்தக் குழுவிலே முன்னாள் துணை வேந்தர் டாக்டர் எம். அனந்தகிருஷ்ணன் தலைவராகவும் முன்னாள் கல்வித்துறை செயலாளர் எச்.பி.என். ஷெட்டி, சேலம் அரசு பொறியியல் கல்லூரியினுடைய முதல்வராக இருந்து ஓய்வுபெற்ற பாலகிருஷ்ணன் ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு அந்தக் குழு இயங்கும். இந்தக் குழு புதிய, பழைய, எல்லா சுயநிதிக் கல்லூரிகளின் செயல்பாடுகளையும் ஆய்வு செய்யும். இந்தக் குழு ஆற்ற வேண்டிய பணிகளை குறித்த விவரம் பிறகு தனியாக வெளியிடப்பட இருக்கிறது.

நிதிநிலை அறிக்கையில் தொழில் வளர்ச்சிக்கான ஆலோசனைகளைக் கூற ஒரு உச்சநிலைக் குழு உருவாக்கப் படும் என்று அறிவித்து இருந்தேன். அந்தக் குழுவின் தலைவராக முதலமைச்சர் இருப்பார். குழுவின் உறுப்பினர்களாக பொள்ளாச்சி மகாலிங்கம், மெட்ராஸ் சிமென்ட்ஸ் பி.ஆர். இராம சுப்ரமணிய ராஜா, ஈ.ஐ.டி. பாரி லிமிடெட் எம்.வி. அருணாசலம், ஏ.சி. முத்தையா, ஆர்.ஜே. சஹானி, அசோக் லேலண்ட், சிவசைலம் - அமால்கமேஷன்ஸ் லிமிடெட் சேர்மன், கோயமுத்தூர் ஜெயவர்த்தனவேலு, சுந்தரம் கிளேட்டன் - வேணு சீனிவாசன், பாண்ட்ஸ் இந்தியா லிமிடெட், சென்னை -

பி. பலராமன், தோல் தொழிற்சாலை அதிபர் முகமது ஆசிம். தமிழ்நாடு சிறுதொழில் அதிபர்கள் சங்கம், சென்னை - டி.வி. ஹரிஹரன், சி.ஐ.ஐ. சென்னை - ஜெகநாத்; சதர்ன் இந்தியா மில்ஸ் அசோசியேஷன், கோயமுத்தூர் - ஏ.ஆர். குருசாமி, இந்தியா சிமென்ட்ஸ், சென்னை - சீனிவாசன், கெமிக்கல் இண்டர்ஸ்டிரிஸ் அசோசியேஷன், சென்னை - எஸ். கிருஷ்ணசாமி, தியாகராஜா மில்ஸ், மதுரை கருமுத்து டி. கண்ணன், அருணா ஷுகர்ஸ் - சிவராமன், ஜெம் கிரானைட்ஸ் - ஆர். வீரமணி, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் - சக்திவேல் மற்றும் அரசுத் துறை அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம் பெறுவார்கள்.

இந்த மாமன்றத்திற்கு மற்றொரு மகிழ்ச்சிகரமான செய்தியை, நீண்ட நாள் எதிர்பார்த்த மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்.

கிருஷ்ணா நீர் எப்போது வரும் என்று மாண்புமிகு உறுப்பினர்களும், சென்னை நகரத்து மக்களும் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில், இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த திட்டம் 1983ஆம் ஆண்டு வாக்கில், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும், ஆந்திரா மாநிலத்தினுடைய முதல்வராக இருந்த அருமை நண்பர் என்.டி.ஆர். அவர்களும் மற்றும் இரண்டு மாநில முதலமைச்சர் களும் கலந்துகொண்டு, அன்று பிரதமராக இருந்த, அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய முன்னிலையில் சென்னை கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட திட்டம். அந்த ஒப்பந்தமும் அன்றைக்கு கையெழுத்து ஆனது. ஆனால் பல ஆண்டுகள் அந்தத் திட்டம் கிடப்பிலே இருந்து, இடையிடையே எழுந்து நடமாடி, வருமா, வராதா என்கிற அளவிற்கு எதிர்பார்த்திருந்த இந்தச் சூழ்நிலையில், கழக ஆட்சி, 1989-90-ல் பொறுப்பேற்ற நேரத்தில் அப்போது ஆந்திராவிலே முதலமைச்சராக இருந்த ராமாராவ் அவர்களும் அதன் பின்னர் முதலமைச்சராக பொறுப்பேற்ற இன்றைய தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களும் அடிக்கடி சந்தித்து, அந்தத் திட்டத்தை விரைவு படுத்தி, தொடர்ந்து சந்திக்க இயலாத ஒரு சூழ்நிலையில், ஆட்சி

கலைக்கப்பட்டு, இப்போது - முன்பிருந்த ஆட்சி, தங்களால் இயன்ற அளவிற்கு முழுவதும் இல்லாவிட்டாலும், ஓரளவு இந்தத் திட்டத்திற்கான வசதிகளைப் பெருக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டாலும்கூட முழுமை பெறாதிருந்த இந்தச் சூழ்நிலையில் - இன்றைக்கு தமிழக அரசு ஆந்திர அரசோடு கலந்து பேசி, இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற வேண்டும் என்று கேட்ட நேரத்திலே 15 டி.எம்.சி. என்பதிலே, முதல் கட்டமாக 3 டி.எம்.சி.தான் தரமுடியும் என்றும், அப்படி ஒரு ஒப்பந்தத்திற்கு ஏற்கெனவே இருந்த அரசு கையெழுத்து போட்டு கடிதமே அனுப்பிவிட்ட காரணத்தால், எங்களுக்கு இருந்த சந்தேகத்தின் காரணமாக, பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஹைதராபாத்திற்கே செல்ல நேரிட்டு ஒரு புதிய ஒப்பந்தம் போல 1.5 டி.எம்.சி. தருகிறோம், முதல் கட்டமாக 3 டி.எம்.சி. தருகிறோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டு, அந்த முதல் கட்டமான 3 டி.எம்.சி. தண்ணீர் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களுடைய முயற்சியால், செப்டம்பர் 15ஆம் தேதி, அண்ணா பிறந்தநாளில் (மேசையைத் தட்டும் ஒலி). சென்னை மாநகருக்கு வர இருக்கிறது. 15ஆம் தேதி காலை, எங்களுக்கு அதுதான், அன்றுதான் உண்மையான அண்ணா பிறந்தநாள், அன்றைக்கு எங்களுக்கு, நமக்கு.அன்று காலையிலே ஊத்துக்கோட்டை என்ற பகுதியில் அந்தத் தண்ணீரை வரவேற்பதற்கான நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலையிலே நம்முடைய இராஜாஜி மண்டபத்திற்கு எதிரிலே உள்ள பரந்த வெளியில் அந்த தண்ணீரைப் பெற்றதற்கான நன்றி கூறுகின்ற விழா, ஆந்திர முதலமைச்சருக்கும் மற்ற முதலமைச்சர்களுக்கும் நடைபெறுகிற விழாவாக அமைய இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வரிகளைப் பற்றி எல்லாம் இங்கே பேசினார்கள். நம்முடைய செல்லக்குமார் அவர்கள் பேசினார்கள். பழனிச்சாமி அவர்கள் தயிருக்கும், வெண்ணெய்க்கும் வரி விலக்கு செய்யுங்கள் என்று அவரே ஏதோ தயிர் வியாபாரி போல, வெண்ணெய் வியாபாரி போல, கேட்டுக்கொண்டு, இப்படி எல்லாம் கோரிக்கை வைக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

தாழ்வாரத்திலே எத்தனை கோரிக்கைகள் வருகின்றன என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதேபோல் செல்லக்குமார் அவர்களும், மோசஸ் அவர்களும், மூக்குக்கண்ணாடிக்கு, கடிகாரத்திற்கு வரி விலக்கு வேண்டும். அது ஏழைபாழைகள் பயன்படுத்தவில்லையா என்றெல்லாம் கேட்டார்கள். தினந்தோறும் வாங்குகின்ற பொருள் அல்ல மூக்குக்கண்ணாடி. தினந்தோறும் வாங்குகின்ற பொருள் அல்ல கடிகாரம் என்பது கடிகாரம் கட்டியிருக்கிற செல்லக்குமாருக்கும் தெரியும். மூக்குக் கண்ணாடியும் போட்டுக்கொண்டிருக்கிற காரணத்தாலே அவருக்கும் தெரியும். வாரந்தோறும் வாங்குகிற பொருள் அல்ல. எனவே, அதற்கு விதிக்கப்படுகின்ற வரியினால், யாரும் பாதிக்கப்பட்டுவிடமாட்டார்கள். தயிர், வெண்ணெய் பற்றி நம்முடைய பழனிச்சாமி அவர்கள் சொன்னார்கள். வேறு சில வரி விலக்குகளைப் பற்றியும் பேசப்பட்டு இருக்கிறது. ஏராளமான வரிகளை ரத்து செய்திருக்கிறோம் என்று பொதுமக்களேகூட இன்றைக்குப் பேசிக்கொள்கிறார்கள். இந்த மன்றத்திலேகூட இவ்வளவு வரியை விலக்கிவிட்டு, எப்படி நீங்கள் ஆட்சி நடத்தப் போகிறீர்கள் என்றெல்லாம்கூட ஆச்சரியத்தோடு கேட்கப்பட்டது உண்டு. இருந்தாலும்கூட, அடுத்த நிதிநிலை அறிக்கை வருவதற்கு இன்னும் இடையிலே அதிக காலம் இல்லை. ஜனவரி, பிப்ரவரி மாதத்திலே அடுத்த நிதிநிலை அறிக்கை வர இருக்கிறது. நீங்கள் சொன்ன அரிய யோசனைகளை எல்லாம் அன்றைக்குச் சிந்தித்து, ஆராய்ந்து, நிறைவேற்ற முடியுமா என்று பார்த்து, முடிந்ததை, இயன்றதை நிறைவேற்றுவோம் என்ற உறுதியை, வரிகளை மேலும் குறைக்க வேண்டும் என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விடையாக, விளக்கமாக அளிக்க விரும்புகிறேன்.

தேங்காய் மட்டை நாருக்கு ஏற்கெனவே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் தேங்காயிலிருந்து அதன் நாரிலிருந்து தயாரிக்கப்படுகின்ற கயிறுக்கு வரி விலக்கு வேண்டுமென்ற ஒரு கோரிக்கை. எனவே இந்த அரசு அதை ஆராய்ந்து தேங்காய் நாரிலிருந்து வருகின்ற மற்ற எல்லா பொருள்களுக்கும் அல்ல, கயிறுக்கு மாத்திரம், கயிறு திரிக்க மாத்திரம் (சிரிப்பு) கூடிவரி விலக்கு அளிக்கப்படுகிறது

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). வேகமாக வீரபாண்டி கைதட்டுகிறார். ஏனென்றால் கோரிக்கை அவர் மூலமாக வந்தது. எனவே அவர் கைதட்டுகிறார்.

தஞ்சாவூர் தட்டு என்று கூறப்படும் புகழ்மிக்க தட்டுகளுக்கு 1971ஆம் ஆண்டு கழக ஆட்சி இருந்தபோது வரிவிலக்கு தரப்பப்பட்டது. அது தஞ்சாவூர் தட்டு என்ற காரணத்தாலோ என்னவோ 1994ஆம் ஆண்டு அந்த வரி விலக்கு ரத்து செய்யப்பட்டது. ஒரு வேளை அது மன்னார்குடி தட்டாக இருந்தால் ரத்து செய்யப்பட்டி ருக்காதோ என்னவோ! (சிரிப்பு) எனவே இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ள சிறு தொழிலதிபர்களை ஊக்குவிக்க மீண்டும் தஞ்சாவூர் தட்டிற்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சுதந்திரப் போராட்டத் தியாகிகளைப் பற்றி இங்கே பேசப்பட்டது. இதிலே சரியான விவரத்தைப் பெறாமலோ என்னவோ நம்முடைய செல்லக்குமார் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள். சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாநில அரசு கொடுக்கின்ற தொகை குறைவானது என்று குறிப்பிட்டார்கள். அல்ல. சுதந்திரப் போராட்டத் தியாகிகள் 8,145 பேருக்கு மாநில ஓய்வூதியம் ரூ. 1,500 வீதம் தரப்படுகிறது. மருத்துவப் படியும் சேர்த்து மேலும் ஒரு ரூ. 15 அவர்களுக்குத் தரப்படுகிறது. ஆனால் அவர்களிலே 2867 பேர் நேரடியாக மத்திய அரசினுடைய ஊதியத்தைப் பெறுகின்றார்கள். இந்த மத்திய அரசினுடைய ஊதியத்தைப் பெறுகின்ற 2867 பேருக்குத்தான் மாநில அரசின் சார்பில் நாமும் தந்தோம் என்பதற்காக ரூ. 250 தரப்படுகிறதே அல்லாமல் மொத்தத்திலே மாநில அரசின் சார்பாக தரப்படுகின்ற ஓய்வூதியம் ரூ. 250 அல்ல. 8,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு ரூ. 1500/-ம், மருத்துவப்படி ரூ. 15/-ம் தரப்படுகின்றது. ரூ. 1500 மத்திய அரசிலேயிருந்து பெறுகின்றவர்களுக்குத்தான் ரூ. 250, மருத்துவப்படி ரூ. 15 வழங்கப்படுகிறது.

மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் மரணத்திற்குப் பிறகு, அவர்களுடைய விதவை மனைவி அல்லது கணவன், அந்தத் தியாகி பெண்பாலராக இருந்தால் அவருடைய கணவன், ஆணாக இருந்தால் அவருடைய விதவை மனைவி, மற்றும் மைனர் வாரிசுக் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ. 750, மருத்துவப்படி ரூ. 15 வீதமும் வழங்கப்படுகிறது.

நேற்றையதினம் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், என்னுடைய பழைய நண்பர் கோவையைச் சேர்ந்த சின்னதுரை அவர்களும் என்னைச் சந்தித்து, இன்னும் சில சலுகைகள் வேண்டுமென்றார்கள். அதில் ஒன்று அந்தத் தியாகிகளின் விதவை மனைவிகள் பேருந்திலே செல்ல இலவச அனுமதி வழங்கவேண்டும் என்றார்கள். அவர்களுக்கு இலவச பேருந்து பயண அனுமதி வழங்கப்படும் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கட்டபொம்மன் வாரிசுகளுக்கு ரூ. 300/-ம் மருது பாண்டியர் வாரிசுகளுக்கு ரூ. 150/-ம் தரப்படுகிறது அதைக் குறைகூறி நம்முடைய சிவகங்கை மருதுபாண்டியர் தொகுதியைச் சேர்ந்த சிவகங்கை தா. கிருஷ்ணன் அவர்கள் கட்டபொம்மனுக்குத் தருவதைப் போல் அதே ரூ. 300-ஐ இவர்களுக்கும் - மருதுபாண்டியர் வாரிசுகளுக்கும் தரவேண்டு மென்று சொன்னார். அது ஏற்கப்படவில்லை. அதற்குப் பதிலாக கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கு 300-ஐ ரூ. 500/-ஆகவும், அதே போல் மருதுபாண்டியர் வாரிசுகளுக்கு ரூ. 500/- ஆகவும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மொழிக் காவலர்களுக்கு சுதந்திரப்போராட்டத் தியாகிகளைப் போலவே தமிழ் மொழிக் காவலர்களுக்கு 1938 பேர் - அவர்களுக்கு இப்போது மாதந்தோறும் தரப்படுகின்ற ரூ. 500 இனிமேல் மாதம் ரூ. 1500 என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கும் கை தட்ட வேண்டும். தியாகிகளுக்கு தட்டினார்களா இல்லையா? மொழிக் காவலர்களுக்கும் தட்டுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

ரூ. 1500 அளவிற்கு உயர்த்தி வழங்குவதோடு, மருத்துவப்படியாக மாதம் ரூ. 15 வழங்கப்படும். தமிழ் மொழிக் காவலர்களின் விதவை மனைவி அல்லது கணவன் மற்றும் மைனர் வாரிசுக் குழந்தைகளுக்கு மாதம் ரூ. 750 வீதமும் மருத்துவப்படி ரூ. 15/-ம் அவர்களுக்கும் இலவச பஸ் பயணமும் அனுமதிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்று காலையிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர் திரு. மணி அவர்கள் ஜீவா அவர்களுடைய நினைவகம் ஒன்றை கன்னியாகுமரியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டு என்னிடத்தில் ஒரு கடிதம் கொடுத்தார்கள். நீங்கள் இங்கே பேசுங்கள், ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னேன். பேசினாரோ, இல்லையோ, எனக்கு தெரியவில்லை. (குறுக்கீடு) பேசினாரா? அமைச்சர் ஆற்காடு வீராசாமியிடம் குறிப்பெடுக்கச் சொன்னேன். அவர் பேசவில்லை என்று சொன்னார் (சிரிப்பு). ஆனால் பேசியிருந்தாலும், பேசாவிட்டாலும், காலையிலே என் கையிலே கொடுத்த கடிதத்திற்கு மதிப்புண்டு. ஒரு செய்தியை முன்கூட்டியே சொல்கிறேன். 29-4-94 அன்று இதே சட்டப் பேரவையில் 1994-95ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளித்தபோது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் சார்பில் ஜீவா பிறந்த பூதப்பாண்டியிலே அரசின் சார்பில் நினைவகம் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா 6-7-94 அன்று குமரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோதும் ஜீவாவிற்கு நினைவகம் கட்டப்படும் என்று அறிவிப்புச் செய்தார். இவ்வாறு அறிவிக்கப் பட்டபோதிலும், அந்த நினைவகம் அமைக்கப்படவில்லை. அமைக்கப்படமாட்டாது. ஜீவாவைப் பற்றி அவருக்கு என்ன தெரியும்? (சிரிப்பு) ஜீவா என்றால் என்ன என்றே தெரியாதவர்கள். ஜீவா என்று எண்ணும்போது எனக்கு ஏதேதோ நினைவுகள். அவரும் நானும் பெருமளவிற்கு பழகி இருக்கிறோம். நான் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி'யிலேகூட ஜீவாவைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். கலைவாணர் அவர்களுடைய இல்லத்திலே தலைமறைவாக ஜீவா இருந்தபோது, கலைவாணர் திடீரென்று ஒருநாள் அங்கு சென்ற என்னை, இங்கே மேலே வாருங்கள். ஒரு சாமியார்

வந்திருக்கிறார் என்று அழைத்துச் சென்று காட்டினார். ருத்திராட்சக் கொட்டையோடு, காவி உடையோடு, கையிலே கமண்டலத்தோடு, அவர் உட்கார்ந்திருந்தார். பார்த்தால், அவர்தான் அண்ணன் ஜீவானந்தம். தலைமறைவாக அவர் நடத்திய வாழ்க்கையின்போது, நான் பார்த்த ஜீவானந்தம் அவர்கள். ஜீவானந்தம் அவர்கள் சென்னை மருத்துவ மனையிலே மறைந்து விட்டார் என்று செய்தி கேட்டவுடன், உடனடியாக ஓடிச்சென்று பார்த்தவர்கள் அண்ணா அவர்களும், நானும், விடியற்காலை 5 மணிக்கு சென்று. அவர் மறைந்தபோது, மார்ச்சுவரியிலேதான் அவருடைய உடலைக் கிடத்தி யிருந்தார்கள். அங்கே சென்று அதை எடுத்து வெளியிலே வைத்து மாலை அணிவித்துவிட்டு, அண்ணாவும் நானும், என்.வி. நடராஜன் அவர்களும் அவருக்கு அஞ்சலி செலுத்தினோம். 1952ஆம் ஆண்டு எஸ்.ஐ.ஏ, கிரௌண்டில் திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநில மாநாடு நடைபெற்றபோது சி.பி.எம். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் அப்போதெல்லாம் ஒரே கட்சிதான். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தேர்தல் உடன்பாடு இல்லை என்றாலும், அந்த மாநாட்டிற்கு வந்து, அண்ணா பக்கத்திலே வந்து அமர்ந்திருந்தவர் ஜீவானந்தம். கட்சிகளைக் கடந்து, கொள்கைகளைக் கடந்த அளவிற்கு அதைப் புரிந்து கொண்டவர். இன்னும் சொல்லப்போனால், பெரியாருடைய அணுக்கத் தொண்டராக இருந்த, சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளியாகத் திகழ்ந்தவர் ஜீவானந்தம் அவர்கள். அப்பொழுது அண்ணா சொன்னார், தமிழ்நாட்டிலே நானும் உங்களைப் போன்ற கம்யூனிஸ்ட் கட்சித்தான் என்று ஜீவாவைப் பார்த்துச் சொன்னார். ஜீவாவும் புன்னகை புரிந்தார். இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்கு நிழலாடுகிறது நெஞ்சத்தில். அந்த ஜீவா அவர்களுக்கு, அவர் பிறந்த வீட்டை நினைவு இல்லம் ஆக்க வேண்டும் என்பதற்கு சில இடையூறுகள் இருந்தாலும்கூட, திரு. மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார். நாகர்கோவில் நகரத்தின் மத்திய பகுதியில் சி.பி. ராமசாமி நினைவுப் பூங்காவில் ஜீவா நினைவகம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த இடத்தை பார்வையிட்டு எது பொருத்தமான இடமாக இருக்கும் என்பதைப் பற்றி 15 நாட்களுக்குள் அரசுக்கு அறிவிக்க வேண்டுமென்று, மாவட்ட

ஆட்சித் தலைவருக்கு இன்றே ஆணை பிறப்பிக்கப்படுகிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி). ஜீவா நினைவகம் அங்கே அமையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, காலையிலே பேரவைத் தலைவருடைய அறையில் நான், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரை சந்தித்தபோது, அவர்களுடைய மனக்குறையை புரிந்துகொள்ள முடிந்தது. எல்லோருக்கும் அதை உயர்த்துகிறார்கள், இதை உயர்த்துகிறார்கள், எங்களுக்கு என்ன என்று என்னைப்பார்த்து கொஞ்சம் வருத்தத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். பெயர்களைச் சொல்லலாம் என்று சொன்னால் மற்ற உறுப்பினர்களைப் பார்க்கும்போது கொஞ்சம் வெட்கமாக இருக்கும் என்பதற்காக (சிரிப்பு) யாருடைய பெயரையும் நான் சொல்ல விரும்பவில்லை. மனக்குறைவு இருப்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. அவை முன்னவர் இடத்திலே கலந்து பேசினேன். ஏனென்றால் அவர் நேற்றைக்கு சில அறிவிப்புகளைச் செய்தார். அந்த அறிவிப்புக்கு மாறாக நான் குறைத்து செய்தால் அவர் வருத்தப்படுவார் என்பதற்காக (சிரிப்பு) (குறுக்கீடு) வருத்தப்படமாட்டீர்களா? அவரையும் கலந்து அறிவிப்பது – நேற்றைக்கு அறிவித்தபோது சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதிய உயர்வாக பல கட்டங்களில் பல்வேறு சலுகைகளோடு அடங்கி அவர்களுக்கு 5,000 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டது. அதே நிலையில் ஒவ்வொன்றிலும் உயர்த்தப்பட்டு அது 6,000 ரூபாயாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). மேசையைப் பிளந்து போடாமல் தட்டவும். அதைப்போலவே பேரவைத் தலைவர், அமைச்சர்களுக்கு இருக்கின்ற ரூ. 5,000, ஐந்தாயிரத்துச் சொச்சம் என்பது ரூபாய் 7,000-மாக உயர்த்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). துணைத் தலைவர், அரசாங்க கொறடா, எதிர்க்கட்சித் தலைவர் இவர்களுடைய ஊதியம் எல்லாவற்றையும் சேர்த்து 6,500 ரூபாயாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த அளவில் எல்லோருக்கும் என்பதை அறிந்த பிறகு இந்த நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்றித் தராமலா போய்விடுவீர்கள்? எனவே நிறைவேற்றித்தாருங்கள் என்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

துணை மானியக் கோரிக்கை

உரை : 54 **நாள் : 30.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 பேர் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே உரையாற்றியிருக்கிறார்கள். நான் 1-30 மணிக்குள்ளாகப் பேசிமுடிக்க வேண்டும். அது நியதி, எனவே உறுப்பினர்கள் அவர்கள் விரும்பியவாறு நீண்ட நேரம் பேச முடியாமைக்கு அவர்கள் சார்பில் நான் வருந்துகின்றேன். இந்தத் துணை நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எதிர்பாராத செலவினங்கள் என்றால் இயற்கைச் சீற்றத்தால் ஏற்படுகின்ற விளைவுகள், விபத்துக்களால் ஏற்படுகின்ற விளைவுகள், அதற்காக ஒதுக்கப்படுகின்ற தொகை ஒன்றுதான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அவர் எதிர்பாராதவிதமாக இப்போது அவையிலே இல்லை, இருந்தாலும் அரசியல் சட்டத்திலேயே- கான்ஸ்டிட்யூஷன் ஆஃப் இந்தியா - அதிலேயே 205-வது பிரிவில் "If the amount authorised by any law made in accordance with the provisions of Article 204 to be expended for a particular service for the current financial year, is found to be insufficient for the purposes of that year or when a need has arisen during the current financial year for supplementary or additional expenditure upon some new service not contemplated in the Annual Financial Statement for that year" என்று இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இங்கே இந்தத் துணை மானியத்தில் எதிர்பாராத செலவுகள் என்ற தலைப்பிலே பல இனங்கள்

ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 1996-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 27-ஆம் நாள் 1996-97-ஆம் ஆண்டுக்கான இடைக்கால வரவு -செலவுத் திட்ட அறிக்கை இந்த அவையில் கடந்த கால ஆட்சியினால் தாக்கல் செய்யப்பட்டதற்கும் கழக அரசில் இந்தக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்ட முழுமையான வரவு-செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கைக்கும் அது தொடர்புடைய நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டதற்கும் இடைப்பட்ட இந்தக் காலத்தில் சில அவசர செலவுகளுக்காக எதிர்பாராத செலவு நிதியிலேயிருந்து வழங்கப்பட்ட முன் பணங்களைத் திருப்பிச் செலுத்தி ஈடுகட்டுவதற்குமாகக் கோரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின்மீதுதான் இன்றைக்கு இந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது.

இந்த விவாதத்திலே நாம் அனுமதிக்கக்கூடிய தொகை, இந்த அவை இன்று அனுமதிக்கவேண்டிய தொகை 130.66 கோடி ரூபாய் ஆகும். இதிலே 95.70 கோடி ரூபாய் இந்த அரசு பதவியேற்ற பிறகு அனுமதி வழங்கப்பட்ட தொகையாகும். இந்த 130 கோடி ரூபாயில் 95.70 லட்சம் ரூபாய் இந்த அரசு பதவியேற்ற பிறகு வழங்கப்பட்டது ஆகும்.

ஒன்றை நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1957ஆம் ஆண்டு இந்த அவையில் அண்ணா அவர்கள் தலைமையில் 15 கழக சட்டமன்ற உறுப்பினர்களில் ஒருவராக நான் இருந்தபோது, அன்றைய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன்பு இந்த அவையிலே நிதியமைச்சராக இருந்து நிதிநிலை அறிக்கையைப் படிக்கும்போது சொன்னார், நான் இன்றைக்கு செஞ்சுரி அடிக்கப்போகிறேன் என்று சொன்னார். 1957-ஆம் ஆண்டு 100 கோடி ரூபாய்- போட்ட அளவே 100 கோடி ரூபாய்தான். (குறுக்கீடு) 100 கோடியோ, 99 கோடியோ, 100 கோடி ரூபாய் அளவுதான். 40 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு 130 கோடி ரூபாய் என்பது துணை மானியக் கோரிக்கையாக இருக்கிறது என்பதை எண்ணும்போது 40 ஆண்டு காலத்திலே எவ்வளவு பெரிய மாறுபாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதும், அது மாத்திரமல்ல, பணத்தினுடைய மதிப்புகூட எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது என்பதும் வெளிப்படையான விவரங்கள் ஆகும். இந்தத் தொகையில், இந்த 130 கோடியில் மிகப் பெரிய அனுமதி என்று வைத்துக்

கொண்டால், அதுதான் எதிர்பாராத செலவு. நாங்கள் வரும்போது அதை எதிர்பார்க்கவில்லை. திருநாவுக்கரசு அவர்களும்கூடச் சொன்னார்கள் நீங்களெல்லாம் இதனை முன்பே எதிர்பார்த்து இருக்க வேண்டும். என்று. நானும், திருநாவுக்கரசு அவர்களும் எதிர்பார்த்ததுதான். போக்குவரத்துக் கழகங்களுக்கு 68.52 கோடி ரூபாய். தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதியொதுக்கக் கழகத்திற்கு திருப்பிச் செலுத்துவதற்காக அரசு கடனாக வழங்கக்கூடிய தொகை 68.52 கோடி ரூபாய் ஆகும். நாம் புதியதாகச் சொன்னால், ரூ. 95 கோடியிலே இந்த 68 கோடி ரூபாய் பெருந்தொகை அரசு கடனாக வழங்க வேண்டிய எதிர்பாராத செலவு ஏற்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால், பேருந்துகள் பல இடங்களிலே ஓடவே முடியாது. ஓடினாலும், பயணிகள் அங்கே உட்கார முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேதான் போக்குவரத்து பேருந்துகள் எல்லாம் இன்றைக்கு ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை,பேருந்திலே பயணம் செய்யக்கூடியவர்கள்- காரிலே பயணம் செய்யக்கூடிய என்னைப் போன்ற, திருநாவுக்கரசு போன்றவர்கள் அறிய முடியாது என்றாலும், பேருந்துகளிலே பயணம் செய்யக்கூடிய மாமன்றத்து உறுப்பினர்கள்-மிக நன்றாக அறிந்திருக்கிறார்கள். நான் பதவியேற்றவுடன் திருவாரூர் சென்றிருந்தபோது அங்கே தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் என்னைச் சூழ்ந்துகொண்டு சொன்னார்கள், இந்த சோழன் போக்குவரத்துப் பேருந்துகளிலே உட்காரவே முடியவில்லை. மழை பெய்தால் உள்ளே ஒழுகுகிறது. உட்கார்ந்தால் வேட்டியைக் கிழிக்கிறது. சேலையைக் கிழிக்கிறது, அந்த அளவுக்கு இருக்கைகள் இருக்கின்றன. உடனடியாக இதை மாற்றுங்கள் என்று கேட்டபோது, நான் இங்கே வந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளையும் கலந்துபேசி இது பற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்ற சூழ்நிலையில்தான் ஏற்பட்ட நஷ்டத்தைப் பற்றியும், போக்குவரத்து துறையிலே ஏற்பட்டு இருந்த ஊழல்களைப் பற்றியும் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பே ஏற்பட்டது. எனவே, இந்த 68 கோடி ரூபாயை கோக்குவரத்திற்கான கடனாக வழங்க வேண்டிய சூழ்நிலை.

நல்ல யோசனை ஒன்றைக்கூறி மாவட்ட அளவிலே இதைக் கடைப்பிடித்துப் பாருங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னார்கள். தனியாருக்கு ஒரு மாவட்டத்தைத் தந்து பாருங்கள் என்று அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். தனியாரிடமிருந்து பேருந்துகளை அரசு எடுக்க வேண்டும் என்று எண்ணியதற்குக் காரணமே தேசீயமயமாக்கல் கொள்கை, சோஷலிசக் கொள்கை என்பது மாத்திரம் அல்ல. சோஷலிசக் கொள்கை, தேசீயமயமாக்கக் கொள்கை எதற்கு வருகிறது என்றால், எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய காரியங்கள் அரசின் சார்பில் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான். தனியாரிடத்திலே இந்த பஸ்களை ஒப்படைத்தால், அரசுத்துறையிலே போக்குவரத்துக் கழகங்கள் சார்பிலே பணியாற்றுகிற தொழிலாளர்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

அரசுத் துறையில் இருக்கிற போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கே இன்னும் பென்ஷன் தரவில்லை என்று நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால் தனியார்மயமாக ஆக்கி விட்டால் நம்முடைய தொழிலாளர்களுடைய கதி என்ன என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அது மாத்திரம் அல்ல, தனியார் பேருந்துகளை நடத்தினால் தங்களுடைய இலாபத்திற்காக நடத்துவார்கள். நன்றாக நடத்துவார்கள். நான் மறுக்கவில்லை. ஆனால் தங்களுடைய இலாபத்திற்காகத்தான் நடத்துவார்கள். சின்னஞ்சிறு கிராமங் களுக்கு, குக்கிராமப் பகுதிகளுக்கு, பட்டி தொட்டி களுக்கு அரசு பஸ் என்றால் செல்லும், தனியார் பஸ் என்றால் செல்லாது. அப்படிச் செல்லக்கூடாது என்பதற்காகத் தான் கடந்த கால ஆட்சியில் பெருந்தொகை கொடுத்து ஒரு சட்டத்தையே அவர்கள் நிறைவேற்றிக் கொண்டார்கள் என்பதும், அதன் காரணமாக கிராமப்புறங்களில் இந்த ஆட்சி வந்த நேரத்தில் ஏற்பட்ட புரட்சியும் அதைத் தணிப்பதற்காக இந்த அரசு அந்தச் சட்டத்தையே மாற்றி எல்லா இடங்களுக்கும் பேருந்துகள் செல்வதற்கான வசதியை ஏற்படுத்தியதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாகவே அறிவீர்கள்.

இப்படி பல்வேறு இனங்களில்- பக்கிங்காம் கால்வாயிலே தூர்வார ஒரு கோடியே 90 லட்சம் ரூபாய் ; நெசவாளர்களுக்கு சிட்டா நூல் மானிய விலையில் அளிக்க கோ-ஆப்டெக்ஸ்க்கு ஏறத்தாழ 11 கோடி ரூபாய் ; மீனவர்களுக்கு நாட்டுப் படகுகளில் மோட்டார் பொருத்த, மீன்பிடி சாதனங்கள் வாங்க உதவித் தொகை ஏறத்தாழ 8.89 கோடி ரூபாய்-இவ்வளவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

இத்தோடு இந்தப் புத்தகத்திலே, உங்களுக்கு வழங்கிய இந்த ஏட்டிலே குறிப்பிடப்படாத ஒரு செலவையும் உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். பொதுவாக துணை மானியத்திலே கடந்த கால, கடந்த ஆண்டு செலவுதான் உறுப்பினர்களிடத்திலே அதற்கான அனுமதி பெறக்கூடிய ஒன்றாக இருக்கும். ஆனால் எங்களுடைய சங்கடம் 1994ஆம் ஆண்டு ஆன செலவுக்குக்கூட உங்களிடத்திலே இப்போது அனுமதி பெறவேண்டிய ஒரு நிலைக்கு நாங்கள் ஆளாகியிருக்கிறோம். 1994 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளுக்கான செலவுத்தொகைக்கு இன்னும் அனுமதி வாங்கப்படவில்லை. 1994-க்கு பிறகு 1994,1995,1996 என்ற நிலையில் இப்போதுதான் உங்களிடத்திலே அனுமதி கேட்கிறோம், வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு. இல்லாவிட்டால் நாங்கள் திக்கற்றுப் போய்விடுவோம். (சிரிப்பு)

ஈரோடு நிகழ்ச்சிக்கு- 2-9-1994-ல் அந்த அம்மையார் முதலமைச்சராக ஈரோடு நிகழ்ச்சியில் கலந்து கொண்டதற்கான செலவு 22.43 லட்சம் ரூபாய்.

திண்டுக்கல் நிகழ்ச்சியில் 23-9-1994-ல் கலந்து கொண்டதற்கான செலவு 31.26 லட்சம் ரூபாய்.

திருவண்ணாமலையில் 2-3-94-ல் கலந்து கொண்டதற்கான செலவு 28.19 லட்சம் ரூபாய்.

வேலூரில் 10-9-1994ல் கலந்து கொண்டபோது ஆன செலவு 19.19 லட்சம் ரூபாய். ஆக மொத்தம் 101 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய். ஒரு கோடி ரூபாய். இந்த ஒரு கோடி சொச்சம் ரூபாய் 1994 ஆம் ஆண்டு முன்னாள் முதலமைச்சருடைய செலவுக்கு அப்போது நிதி ஒதுக்கப்படாமல் இருந்து இந்தத் துணை

மானியத்திலேதான் ஒதுக்கப்பட்டு உங்களால் நிறைவேற்றப்பட இருக்கிறது. அருள்கூர்ந்து அதற்கான வாக்கினை நீங்கள் வழங்க வேண்டுமென்று உங்களை எல்லாம் நான்-யாரோ செய்த பாவம் என் தலையிலே விடிகிறது (சிரிப்பு) என்றாலும்கூட நீங்கள் வழங்க வேண்டுமென்று-கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குண்டன் அவர்கள் நீலகிரி மாவட்டத்தைப் பற்றி சென்னார்கள். தொடர்ந்து இந்தக் கூட்டத்தொடரில் பலமுறை அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. 4 நாளைக்கு முன்புகூட நம்முடைய மத்தியில் அமைச்சராக இருக்கின்ற திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதைப்பற்றிப் பேசினார்கள். என்னைச் சந்தித்து விட்டு நீலகிரி மாவட்டத்தைப் பற்றி அவர் எழுப்பிய அந்தப் பிரச்சினையைப் பத்திரிகைகளுக்குச் செய்தியாகவும், தொலைக்காட்சிக்குச் செய்தியாகவும்கூட அளித்துவிட்டுச் சென்றார்கள்.

நீலகிரி மாவட்டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற திரு. குண்டன் அவர்கள், திரு. முபாரக் அவர்கள், திரு. தங்கவேல் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பலமுறை இந்த மாமன்றத்தில் எழுப்பியிருக்கிறார்கள். நீலகிரி மலைப் பகுதியிலே போடப்பட்டிருக்கிற மாஸ்டர் பிளான், அதை மாற்ற வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை. முன்னாள் முதலமைச்சர் செயலலிதா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நீலகிரி மலைப் பகுதியில் கட்டிடங்கள் எதுவும் கட்டப்படக் கூடாது என 1992 ஆம் ஆண்டு திடீரென்று ஒரு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து கட்டுமானப் பணிகள் எல்லாம் நீலகிரியில் நிறுத்தப்பட்டு விட்டன. அதைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு நீலகிரி மலைப் பகுதிக்கு பெரும் திட்டம், மாஸ்டர் பிளான் ஒன்று தயாரிக்கப்பட்டு அதற்கு முந்தைய அரசும் அதற்கு அரசு ஆணை எண். 360, நாள் 14-5-1993 அன்று ஒப்புதல் அளித்தது.

இதன்படி குடியிருப்புப் பகுதி, வாணிகப் பகுதி, வேளாண்மைப் பகுதி, பொழுதுபோக்கு வசதிகளுக்கான

காலியிடம், மரங்கள் வளர்க்க இடம், தடை செய்யப்பட்ட இடம் என இடத்தின் உபயோகத்திற்கு ஏற்ப பல வகைகளாக பிரிக்கப்பட்டன. இந்த மாஸ்டர் பிளான் சரியாகத் தயார் செய்யப்படாமல் அவசரக் கோலத்திலே அள்ளித் தெளிக்கப் பட்டதாக, மரங்களே இல்லாத பகுதியை மரங்கள் வளர்க்கும் பகுதி என்றும், நகரையொட்டியுள்ள கட்டிடம் கட்டத் தகுதியான இடத்தை வேளாண்மை செய்யகூடிய பகுதி என்றும் மாற்றி மாற்றி அந்த மாஸ்டர் பிளானிலே பாகுபாடு செய்யப்பட்டதால் வந்த வினைதான் இவ்வளவும்.

மேலும் கட்டிடம் கட்ட-ஒருவருக்குக் கட்டிடம் கட்ட அனுமதி அளிக்க வேண்டுமேயானால் மனை அளவு- அந்த பிளாட் குறைந்தபட்சம் 24 சென்ட்டாவது இருக்க வேண்டுமென்ற நிபந்தனை அந்தப் புதிய விதியிலே புகுத்தப்பட்டது. 24 சென்ட் என்றால் செல்வந்தர்கள்தான் கட்ட முடியும். சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் யாரும் கட்ட முடியாது. (குறுக்கீடு) 4 கிரவுண்ட், அதுதான் சொல்கிறேன். 24 சென்ட் என்றால் 4 கிரவுண்ட் -4 கிரவுண்டிலேதான் கட்ட வேண்டும் ; அதற்கும் கீழே மூன்றே முக்கால் கிரவுண்ட் இருந்தால்கூட கட்டக் கூடாது என்று அந்த மாஸ்டர் பிளான் சொல்லிவிட்டது. அப்படிப்பட்ட ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்ட காரணத்தால் நடுத்தர மக்கள், ஏழை எளிய மக்களால் அங்கே வீடு கட்ட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இந்த மாஸ்டர் பிளான் சரியில்லை என்று ஒரு புகார் எழுந்தபொழுது மற்றொரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டது. அது இதைவிட அதிகமாகக் குறை நிறைந்ததாக ஆகிவிட்டது. எனவே, இந்த அரசு இந்த மாஸ்டர் பிளானை மாற்றியமைப்பதற்கு முடிவெடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஏற்கெனவே நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் இதே மாமன்றத்தில் 9-8-1996 அன்று வெளியிட்ட அறிவிப்பில், ''நீலகிரி மாவட்டத்தில் இனிமேல் கட்டிடம் கட்ட அனுமதி கோரி யாரும் அலையத் தேவையில்லை. நேரடியாக நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமே அதற்கான அனுமதியைப் பெறலாம்.'' என்ற முடிவு ஏற்கனவே அவரால் இங்கு அறிவிக்கப்பட்டதை அனைவரும் அறிவீர்கள். எனவே நான் நீலகிரி மாவட்டத்திலே

இந்த மாஸ்டர் பிளானைப் பற்றிச் சொல்லுகின்ற குறிப்பு இதுதான். ''கடந்த ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்ட மாஸ்டர் பிளான் திட்டத்தின்படி நீலகிரியிலே கட்டிடம் கட்டுவதற்குக் குறைந்த அளவு 24 சென்ட் பரப்பளவு கொண்டதாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை அறவே நீக்கப்படுகிறது'' என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மலைப் பகுதிகளுக்கு உரிய கட்டிட விதிகளில் கூறப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், ஊரகப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனினும் கட்டிடத்தின் உயரம், கட்டிட அளவு, காலியிட அளவு, சரிவர கூரை அமைப்பு ஆகியவை குறித்த விதிகள் பின்பற்றப்படும். புதிதாக மாஸ்டர் பிளான் ஒன்று நீலகிரி மாவட்டத்திற்காக வல்லுநர் குழு நீலகிரி மாவட்டதைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் ரொம்பவும் பயமுறுத்தினார்கள். நீங்கள் இப்படியெல்லாம் ரூ. 138 கோடி, 100 கோடி என்றெல்லாம் துணை மானியத்திலே கோருகிறீர்கள்; ஏற்கனவே துண்டு விழுகின்ற பட்ஜெட்டைத் தயாரித் திருக்கின்றீர்கள். என்ன ஆகப் போகிறீர்களோ தெரியவில்லை என்று தன்னுடைய வேதனையைத் தெரிவித்துக் கொண்டார்கள். ஒருவேளை அவருக்கு இந்த அரசு மீது உள்ள அக்கறையால், அதன் காரணமாக இந்த எச்சரிக்கை செய்திருப்பார் என்று நான் கருதுகின்றேன். ஆனால் அவருக்குச் சொல்லுகிறேன். நாங்கள் ஆடம்பரச் செலவுகளையும், தேவையற்ற செலவு களையும் குறைப்பதன் மூலமே இவைகளையெல்லாம் நிச்சயமாகச் சரிக்கட்டுவோம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மீண்டும் மீண்டும் சொல்வதற்காக நான் வருந்துகின்றேன். பாதுகாப்புச் செலவுக்காக மாத்திரம் 5 ஆண்டுகளில்-கடந்த ஆட்சியிலே 21 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது. அது இப்பொழுது மிச்சப்படுகிறது.

விமானம் வாங்கியதற்கு 19 கோடி ரூபாய். அதை விற்றால் வரவாக வரப் போகிறது இந்த ஆட்சிக்கு.

ஹெலிகாப்டர் வாங்கியதிலே 19 கோடி ரூபாய். அதையும் விற்கப் போகிறோம். அதுவும் வரவாக வரப்போகிறது இந்த ஆட்சிக்கு.

இந்த 2 விமானத்திற்கும் ஹெலிகாப்டருக்கும் ஆண்டு ஒன்றுக்குப் பராமரிப்புச் செலவு 1 கோடி ரூபாய், அதுவும் இனி இல்லை. அதுவும் இந்த ஆட்சிக்கு வரவாகத் தங்கப் போகிறது.

விழா நிகழ்ச்சிகளுக்கு முதலமைச்சருக்கு-ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு ரூ. 25 இலட்சம், 30 இலட்சம் என்று செலவானது இந்த 5 ஆண்டுகளில் 27 கோடி ரூபாய். இனி அந்த அளவிற்குச் செலவு ஆகப் போவது இல்லை ; அதிலே கால் பகுதிகூடச் செலவு ஆகாமல் பார்த்துக் கொள்ளுகின்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. எனவே, அதுவும் மிச்சமாகப் போகிறது.

முதலமைச்சருடைய வீட்டைப் பராமரிக்கிற செலவே 30 இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது. உலகத்திலே எந்த முதலமைச்சர் வீட்டிற்கும் அவ்வளவு செலவு ஆகி இருக்காது.

பிறகு, உலகத் தமிழ் மாநாடு, தெற்காசிய விளையாட்டுப் போட்டி என்ற பெயரால்-அவைகள் தேவை என்றாலும்கூட, அதிலே தேவையில்லாமல் செலவழிக்கப்பட்ட கோடிக் கணக்கான ரூபாய், இவைகளையெல்லாம் பார்த்தால் அவைகளையெல்லாம் மிச்சப்படுத்தப்போகிறோம்.

அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களை உண்மை யிலேயே வேறு யாராவது வாங்கியிருந்தால் 2 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைத்திருக்கும். அதிகமாக அரசுக்குச் சொந்தமான நிலத்தை வாங்கி அதிலே இரண்டு கோடி ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தினார்களே அதுபோன்ற இழப்பு ஏற்படுவதற்கு இந்த அரசு ஒருக்காலும் சம்மதிக்காது. மீனா அட்வர்டைசிங் ஏஜென்சிக்கு அவர்கள் செலுத்த வேண்டிய இரண்டு கோடி ரூபாயை விட்டுக் கொடுத்து, அதிலே பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டார்களே, அதுபோன்ற நிலைமை இந்த ஆட்சியில் நிச்சயம் இருக்காது.

ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கியதில் 8½ கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தி

அதிலே பங்கிட்டுக் கொண்டார்களே, அது போன்ற இழப்பு இந்த அரசுக்கு ஏற்படாது. இலவச வேட்டி சேலை வாங்கியதிலே 16 கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கிறதே, அந்த 16 கோடி ரூபாய் இந்த அரசின் கருவூலத்திலே இருக்கிறதே தவிர, யாருக்கும் போய்ச் சேராது. இதைச் சொன்னால் சந்தோஷமாக இருக்கும், பட்டுப் புடவை, அலங்காரத் துணிகள் வாங்கியதிலே 10 கோடி ரூபாய் இழப்பு, அந்த இழப்பு இந்த அரசுக்கு ஏற்படாது. முறைகேடாகத் தெருவிளக்குகள் வாங்கியதிலே 23 கோடி ரூபாய் கொள்ளை, அது இந்த அரசுக்கு ஏற்படாது. பி.வி.சியைப் வாங்கியதிலே 2 கோடி ரூபாய் இழப்பு, அது இந்த அரசிலே ஏற்படாது. வட சென்னை மின் நிலையத்திற்கு நிலக்கரி பயன்பாட்டு அமைப்புக்கு வழங்கியதிலே 7 கோடியிலிருந்து 10 கோடி வரை ஊழல் நடந்து இழப்பு ஏற்பட்டிருக்கிறதே, அந்த இழப்பு ஏற்படாது. ஸ்பிக் நிறுவனத்திலே பங்குகளைக் குறைந்த விலைக்கு விற்றவகையில் மத்திய தணிக்கை அறிக்கையின் படியே 123 கோடி ரூபாய் நஷ்டம் ஆனால், சரியான கணக்குப்படி 40 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறதே டிட்கோவிற்கு, இந்த அரசுக்கு அந்த இழப்பு ஏற்படாது. இப்படிப்பட்ட இழப்புக்களெல்லாம் ஏற்படாமல் பாதுகாத்து இந்த அரசு நல்ல முறையிலே ஆயிரம் கோடி ரூபாய் துண்டு விழுகிறதென்றாலும்கூட அதையும் சரிகட்டுகின்ற அளவிற்கு புதிய வரி போடாமல், மக்களை நசுக்காமல், ஏழை எளிய மக்களுக்காக நிச்சயமாக நடைபெறும் என்ற வாக்குறுதியை நான் இந்த மாமன்றத்திலே அத்தனை உறுப்பினர்களுக்கும் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) அளவில் இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை ஏற்றுகொள்ளவேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.



துணை மானியக் கோரிக்கை

உரை : 55 **நாள்: 25.03.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கை மீது இன்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரன், டாக்டர். அ. செல்வக்குமார், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக திரு. மு.பெ.சாமிநாதன், திருமதி கோமதி சீனிவாசன், திரு. ஏ. ராசேந்திரன், பாரதீய ஜனதா கட்சி சார்பாக திரு. சி. வேலாயுதன், இந்திய தேசிய லீக் சார்பாக திரு. அ.வ.அப்துல் நாசர், அ.தி.மு.க. சார்பாக திரு. எஸ். திருநாவுக்கரசு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. ஜி. பழனிச்சாமி ஆகிய 9 பேர்கள் உரையாற்றி, பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது துணை மானியக் கோரிக்கை என்ற அளவில் மிக விரிவாக விளக்கங்களைத் தருகிற வகையிலே அவர்களுடைய உரையும் அமைவதற்கு வகையில்லை; என்னுடைய உரையும் அவ்வாறு அமைவதற்கு வழியில்லை என்பதை இந்த அவை மிக நன்றாக அறியும். இந்தத் துணை மானியக் கோரிக்கை பற்றிக்கூட இன்னும் பொதுவாக அவையிலே வருகின்ற பல்வேறு கோரிக்கைகள், சட்டங்கள், மசோதாக்கள், இவைகளைப் பற்றியெல்லாம்கூட நாம் இன்னும் கற்க வேண்டிய செய்திகள் நிரம்ப இருக்கின்றன. இந்த அவையிலே பெரும்பாலான உறுப்பினர்கள் புதியவர்கள். சிலர்தான் பழைய உறுப்பினர்கள். நீண்டகால உறுப்பினர்கள், 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் உள்ள உறுப்பினர்கள். எனவே, நான்கூட நண்பர் சொக்கர் அவர்களிடத்திலே ஒரு நாள் விவாதித்துக் கொண்டிருந்தபோது, அவரும் கேட்டார். நானும் கூட, பேரவைத் தலைவரைக் கலந்துகொண்டு, அவை

முன்னவரைக் கலந்து கொண்டு, சொல்வதாகக் கூறியிருக் கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம், சட்டமன்றத்திலே ஒவ்வொரு பொருள் குறித்தும் எவ்வாறு விவாதிப்பது, எப்படி உரை நிகழ்த்துவது, எப்படி அந்தப் பொருள்களை புரிந்துகொள்வது என்பது குறித்து ஒரு வகுப்பு நடத்தலாம், சட்டமன்றக் கூட்டத்தொடர் நீண்டகாலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அத்தகைய வகுப்புகளை நடத்தலாம் என்றும், அது அவர்களைக் கவரத்தக்க இடமாக மாமல்லபுரம் போன்ற இடமாகக்கூட இருக்கலாம் என்று கூடப் பேசி, அதைத் தங்களுடைய முடிவுக்கும், அவை முன்னவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர்களுடைய, மற்றும் உள்ள கட்சித் தலைவர்களுடைய முடிவுக்கும் விடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், நான் யாரையும் புண்படுத்துவதாகக் கருதிக்கொள்ளக் கூடாது. மேலும் நாமெல்லாம் பண்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட கருத்து இது. சிந்தித்துக்கொண்டிருக்கின்ற கருத்து இது.

அந்த வகையில் இன்றைக்குக்கூட பார்த்தால் இந்தத் துணை மானியக் கோரிக்கைக்கு 79 வெட்டுத் தீர்மானங்கள் தரப் பட்டுள்ளன. அதிலே நம்முடைய இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக திரு. நாசர் அவர்கள் 4 வெட்டுத் தீர்மானங்கள்: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. சிவபுண்ணியம் அவர்கள் 4 வெட்டுத் தீர்மானங்கள்; பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்கள் 8 வெட்டுத் தீர்மானங்கள்; தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ஞானசேகரன் அவர்கள் 10 வெட்டுத் தீர்மானங்கள்; பேராசிரியர் தீரன் அவர்கள் 12 வெட்டுத் தீர்மானங்கள்; எல்லோரையும் மிஞ்சக் கூடிய அளவிற்கு திரு. இ. கணேசன் அவர்கள் 41 வெட்டுத் தீர்மானங்களையும் தந்திருக்கின்றார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்கள்- ஏறத்தாழ 79 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன என்றால் பெரும்பாலானவைகள் வரக்கூடிய காலங்களில் பல தேவைகளை, அவரவர்களுடைய தொகுதியில் அல்லது மாநிலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்று கோரி விடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களேயல்லாமல்,

இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே பேச வேண்டிய கருத்துக்கள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களாக அவைகள் இல்லை. இருந்தாலும் கூட, இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய தொகுதிகளைப் பற்றி இங்கே உரையாற்றிய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக்கூறியிருக் கின்றார்கள். தொகுதியைப் பற்றிப் பேசாத ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இன்றைக்கு செல்லக்குமார் ஒருவர்தான். இன்னொரு நாள் பேசுவார். (குறுக்கீடு) நான் அந்தத் தொகுதி மக்களிடத்தில் (குறுக்கீடு) இருங்க சார் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள், உறுப்பினர் செல்லக்குமாரைப் பற்றி நல்லதுதான் சொல்கிறார்கள். ஆகவே திரு. செல்லக்குமார் உட்காருங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: உங்களைப் பாராட்டிச் சொல்வதைக்கூட உங்களால் புரிந்துகொள்ள முடிய வில்லை. பாராட்டுவதையே புரிந்துகொள்ள முடியவில்லையே, என்ன செய்வது, அவ்வளவு கோபத்தில் இருக்கிறார். நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் தொகுதியைப் பற்றிப் பேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை நான் இன்றைக்கு அலட்சியப்படுத்திவிட விரும்பவில்லை. அவர்களுக்குப் பதில் சொல்லாவிட்டால் அவர்கள் மனம் கஷ்டப்படும் என்பதற்காக ஒன்றிரண்டை இங்கே நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பொதுவாக நம்முடைய ஞானசேகரன் அவர்கள்...

டாக்டர் அ. செல்லக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முதலிலே உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு. செல்லக்குமார் நான் சொல்கிறேன். முதலில் உட்காருங்கள். என்னை வந்து பார்த்து, நீங்கள் பேச அனுமதி கேட்கிறபோது, 5 நிமிடம் என்றீர்கள்; அப்புறம் 10 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். பேசி முடிக்கிறபோது தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று சொல்வது,

இந்த மரபே முறையற்றது. நீங்கள் தொகுதி விஷயமாகப் பேச வேண்டுமென்றால், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட 5 நிமிடத்தில் பேசியிருக்கவேண்டும். இப்போது, பொதுப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் பேசியதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உங்களுக்குப் பாராட்டு தெரிவித்ததாக நான் கருதுகிறேன். இதிலேபோய் பாய்ன்ட் ஆஃப் ஆர்டர் என்ன இருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன், பாராட்டுதான். அவர் இந்த அவையிலே எத்தனையோ முறை, இந்தக் கூட்டத் தொடரிலே கூட தொகுதி பற்றிப் பேசியிருக்கிறார். இன்னும் பல நேரங்களில் பேச இருக்கிறார் என்று நான் அவருடைய தொகுதி மக்களுக்கு உறுதியளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன், அவர் சார்பாக. எனவே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இங்கே உரையாற்றியபோது அவரும், நம்முடைய பழனிசாமி பேசும் போது அவர்களும் நியாயவிலைக் கடைகளிலே அரிசி தருவது பற்றி எடுத்துச்சொன்னார்கள். இப்போது 20 கிலோ தருகின்ற இதே அளவுக்கு, அங்கே இரண்டு பேராக இருந்தாலும், 3 பேராக இருந்தாலும் தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இருக்கின்ற கஷ்ட நிலைகளை நாம் உணர வேண்டும். மத்திய அரசு ஒரு புதிய ஏற்பாடு இந்த நியாய விலைக் கடைகளிலே கொண்டுவந்து, எந்த அளவிற்கு அரிசி அளவைக் குறைத் திருக்கிறது என்பதையும், நாம் அப்படிக் குறைப்பதற்கு முற்படாமல், அதைப்போல விலையைக் கூட ஏற்றித் தருவதற்கு முற்படாமல் பழைய விலையிலேயே அரிசியைத் தருவது என்று இந்த அவையிலே, நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்து இருக்கின்றேன். இருந்தாலும்கூட 8 கிலோ ஆகிவிடுமோ, 4 கிலோ ஆகிவிடுமோ என்கின்ற அச்சம் பழனிசாமி அவர் களுக்கோ, ஞானசேகரன் அவர்களுக்கோ நிச்சயமாகத் தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதிகபட்சம் இப்போது தரப்படுகின்ற 20 கிலோ அரிசி தரப்படும்; குறைந்தபட்சம் 8 ஆகவோ, 6 ஆகவோ இருக்காது; குறைந்தபட்சம் நிச்சயமாக 12 கிலோவாக இருக்கும் என்பதை

நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4 பேராக இருந்தால் 16 கிலோதான். ஏனென்றால் 4 × 4 = 16 என்கிறபோது, 4 × 5 = 20 என்பது அதிகபட்சம் 4 × 4 = 16 என்ற அளவுக்கு இருக்கும், 3 பேரும் ஒரு குழந்தையும் இருந்தால் 14 கிலோ- ஃபோர்ட்டீன் கிலோஸ், என்ற அளவுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புறம்போக்கு நிலங்களை ஏழைகட்கு விநியோகிக்க வேண்டும் என்ற கருத்தை ஞானசேகரனும் மற்றும் நண்பர் வேலாயுதனும் இங்கே எடுத்துரைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதெல்லாம் ஏழைகளுக்குப் புறம்போக்கு நிலங்களை, அரசுக்கு உரிய நிலங்களை வழங்குவதில் என்றைக்கும் தயக்கம் காட்டியது இல்லை. அதுமாத்திரமல்ல, பட்டா நிலங்களைக்கூட அவர்களுக்குத் தருவதிலே எந்த அளவுக்குச் செம்மையாகச் செயல்பட்டு இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை பேசிய நண்பர்கள் நன்றாக அறிவார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டிலே, குறிப்பாக தஞ்சைத் தரணியில், திருச்சி பகுதியிலே எவ்வளவு கடுமையான போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றன என்பதும், விவசாயத் தொழிலாளர்களுடைய படை திரட்டி அன்றைக்கு கம்யூனிஸ்ட் இயக்கம் எவ்வளவு பெரும் போராட்டத்தை நடத்தியது என்பதையும் நாடு மிக நன்றாக அறியும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகுதான், நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்தில் குடியிருப்புமனை சட்டம் விவசாயத் தொழிலாளர்களுக்கு அவரவர்கள் குடி இருக்கின்ற இடம் சொந்தம் ஆக்கப்படும் என்று அறிவித்த போதுதான் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாபெரும் தலைவர் மணலி கந்தசாமி, அந்தக் குடியிருப்பு மனைகளை வழங்கிய விழாவிலே குறிப்பிட்டார், பல்லாயிரக்கணக்கான விவசாயப் பெருங்குடிமக்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் போராடிப் போராடி, எவ்வளவோ ரத்த ஆறு ஓடியும்கூட நிறைவேற்ற முடியாத இந்தச் சாதனையை ஒரு சொட்டு மையில்

கருணாநிதி நிறைவேற்றி விட்டார் என்று மணலி கந்தசாமி குறிப்பிட்டது (மேசையைத் தட்டும் ஒலி), அதுவும் திருத்துறைப்பூண்டி கூட்டத்திலேதான்- பழனிசாமி எல்லாம் இன்னும் சிறுவர்களாக இருந்து கலந்துகொண்ட கூட்டம் அது; என்பது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.

வேலாயுதன் அவர்கள் இங்கே பேசும்போது மரப் பட்டா வரி உயர்த்தப்பட்டு இருக்கிறது; அது குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னார். அவருக்கு நான் நினைவு படுத்துகிறேன். 30.8.1996ல் அரசு ஆணை 864ன் படி ஏற்கெனவே அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்ட அந்த வரி ரத்துச்செய்யப்பட்டு விட்டது என்பதை நான் வேலாயுதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோமதி சீனிவாசன் வலங்கைமானுக்கு சர்க்கரை ஆலை வேண்டும் என்றார்கள். திருநாவுக்கரசு அவர்கள் அறந்தாங்கி சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். உங்களுடைய ஆட்சியிலே கிடைக்காத அந்த சர்க்கரை ஆலை அறந்தாங்கியில் நிச்சயமாக வரும் என்ற நம்பிக்கையை அவருக்கு நான் தெரிவித்தேன்; தெரிவித்ததற்கு இணங்க, நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அறந் தாங்கியில் ஈ.ஐ.டி. பாரி கம்பெனி சர்க்கரை ஆலை அமைக்க 10.3.1997 அன்று மத்திய தொழில் அமைச்சர் முரசொலி மாறன் முயற்சியின் காரணமாக நடைபெற்ற மத்திய லைசென்ஸிங் கமிட்டி முடிவு செய்து தமிழக அரசுக்கு அறிவித்து இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) திருநாவுக்கரசு அவர்களுக்கு இந்த அவையில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். வலங்கைமான் மற்றும் உள்ள இடங்களில் சர்க்கரை ஆலை வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அதுவும் விரைவில் நிறைவேறும் என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திருநாவுக்கரசு பேசும்போது சொன்னார், இந்தத் துணை மானியக் கோரிக்கையைப் பார்த்தால், 1163 கோடி வருவாய்

கணக்கு, 678 கோடி மூலதன கணக்கு, இரண்டும் சேர்ந்தால் 1841 கோடி; இதுவே கிட்டத்தட்ட ஒரு பட்ஜெட் மாதிரி இருக்கிறது என்று சொன்னார். இதுவே பட்ஜெட் மாதிரி என்று சொன்னால், 1991-93 அ.தி.மு.க. ஆட்சியில் துணை மானியக் கோரிக்கை 3640 கோடி ரூபாய்க்கு இருந்ததே (மேசையைத் தட்டும் ஒலி), அது எது மாதிரி என்று திருநாவுக்கரசுதான் எனக்குச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) (சிரிப்பு) சொன்னால் (குறுக்கீடு) அப்போது நான் இல்லையென்பார். பொதுவாக நிதி ஆண்டு என்பது, ஏப்ரல் 1 முதல் மார்ச் இறுதி வரையிலேதான் நிதி ஆண்டு கணக்கிடப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி, நாமெல்லாம் சட்டமன்றத்திற்கு வந்து, நாங்கள் ஆட்சிக்கு வந்து மே 13-லிருந்து மே 13 வரைதான் ஓராண்டு நிறைவு அடை கிறது; எனவே இன்னும் ஓராண்டு நிறைவு அடையவில்லை. நிதி ஆண்டு ஏறத்தாழ நிறைவடைகின்ற கட்டத்தில் இருக் கின்றது. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தது மே மாதத்தில்தான் நிறைவடைகின்றது. எனவேதான் நம்முடைய பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அறிவிக்கப்பட்ட தொகைகள் விரைவிலே ஒதுக்கப்படமுடியாத ஒரு சூழ்நிலை. காலங்கால மாகப் பல அரசுகளில் இந்தத் தாமதம் அதிகாரிகளால் ஏற்பட லாம். வருங்காலத்திலே இந்த ஆட்சியிலே நிச்சயமாக இந்தத் தாமதம் ஏற்படாது என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் கடந்த காலங்களில், இந்தப் பத்து மாதங்களிலே நாம் மே மாதம் ஆட்சிக்கு வந்தோம் என்றால், ஜூன், ஜூலை மாதங்களில் சட்டமன்றம் நடைபெற்றது. ஆளுநர் உரை நடைபெற்றது, நிதிநிலை அறிக்கை விவாதங்கள் நடைபெற்றன. அதற்குப் பிறகு உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்கள் நடைபெற்றன. வெள்ளச் சேதங்கள், வெள்ள நிவாரணத்திற்காக நாம் நம்முடைய பணிகளை வேறு முனையிலே திருப்ப வேண்டிய அவசியம், ஆக இவைகள் எல்லாம் நடைபெற்ற காரணத்தால், உடனுக்குடன் அறிவிப்புகள் நடைமுறைக்கு வருவதற்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்யமுடியாமல் போனது என்பது உண்மைதான். இருந்தாலும் கூட, எவ்வளவு சுமைகள்

எல்லாம் நம்முடைய தலையில் வந்து விழுந்தன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

13.5.1996லே நாம் ஆட்சிக்கு வருகின்றோம். தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில்- ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்படுகின்ற இலவச கான்கிரீட் வீடுகளைப் பொறுத்த வரையில், 13.5.1996ல் கட்டாமல் விடப்பட்டிருந்த தொகுப்பு வீடுகளுடைய எண்ணிக்கை 80 ஆயிரத்து 824. இந்த ஆட்சியில் அந்த 80 ஆயிரத்து 824. தொகுப்பு வீடுகளைக் கட்டத் தொடங்கி, இந்த ஒன்பது மாதங்களில் அப்படிக் கட்டி முடித்த வீடுகளுடைய எண்ணிக்கை 49,039. அதிலும் மீதி இருக்கின்ற வீடுகள் 31,785. இருக்கின்ற சுமையையே இறக்க முடியாமல் இருக்கின்றபோது, நாம் புதிதாக இப்போது 1996-97ல் அறிவித்திருப்பது 71,598 வீடுகள். அதிலே முடிக்கப்பட்டவை 5,000 இதைக் கழித்தால் 66,598. இந்த 66,598-ஐயும் ஏற்கெனவே பழைய ஆட்சியிலே விட்டுப்போய் நாம் கட்டி முடித்தும் இன்னும் மீதி இருக்கின்ற வீடுகள் 31,785ஐயும் சேர்த்தால், இன்னும் கட்டப்பட வேண்டிய வீடுகள் 98,383 வீடுகள். ஆக, 1996 வரையிலேயும் பழைய பாக்கியில் 80,824 இருந்ததால், இப்போது அந்த எண்ணிக்கை 93,383 என்று இருக்கின்றது. இவைகள் இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களிலே கட்டி முடிக்கப்படும் என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இவைகள் கட்டி முடிக்கப்பட்டவுடன், 1997-98ஆம் ஆண்டுக்கான வீடுகள் கட்டும் பணி அதற்குப் பிறகு தொடரும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அளவுக்குத் துணை மானியத்தில் நிதி ஒதுக்கீடு ஏறத்தாழ 1,600 கோடி அளவுக்கு வந்ததற்கு என்ன காரணம் என்பதைப் பார்த்தால், திருநாவுக்கரசு அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, வெள்ள நிவாரணத்திற்குக் கிட்டத்தட்ட 241 கோடி ரூபாய் நாம் ஒதுக்க வேண்டியதாகிவிட்டது. 1,000 கோடி ரூபாய் சேதம் என்று சொன்னீர்களே. 241 கோடிதானே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேள்வி கேட்டால் சேதத்தின் மதிப்பு

என்பது வேறு, நிவாரணத்திற்காகத் தேவைப்படுகின்ற தொகை என்பது வேறு என்பதுதான். சேத மதிப்பு நிறைய ஆகி யிருக்கலாம். ஒரு வீடு இடிந்துவிட்டால் 1,000 ரூபாய்தான் நிவாரணம் தருகிறோம் என்றால், அந்த ஆயிரம் ரூபாய்தான் அந்த வீட்டின் மதிப்பா? இல்லை. மதிப்பு ரூ. 5,000 அல்லது 6,000 என்று இருக்கலாம். நாம் நிவாரணமாக 1,000 தருகின்றோம். இதற்குப் பெயரே நிவாரணம்தான். அதைப் போலத்தான் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சேதம் ஏற்பட் டிருந்தாலும் கூட, 241 கோடி ரூபாயை நாம் செலவழித்து இருக்கின்றோம். வெள்ளப்பெருக்கு 6.12.1996ல் தொடங்கி, 6.12.1996 வரையிலே அடாத மழையும் பெருங்காற்றும் வீசியது. பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று எடுத்துக் கொண்டால் அண்ணா மாவட்டம், சென்னை மாவட்டம், விழுப்புரம்- ராமசாமி படையாட்சியார் மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவண்ணாமலை- சம்புவராயர் மாவட்டம், தென்னாற்காடு- வள்ளலார் மாவட்டம், நாகை- காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூர்- ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய இவைகள் எல்லாம் பெருமளவு பாதிக்கப்பட்டன. வட ஆற்காடு- அம்பேத்கர் மாவட்டம், தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம், திருச்சி முத்தரையர் மாவட்டம் பெரம்பலூர் திருவள்ளூர் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் இவைகள் எல்லாம் வெள்ளத்தால் ஓரளவு பாதிக்கப் பட்டன. வெள்ள நிவாரண உதவி நிதி பற்றிக் கேட்டார்கள். 13.12.1996ல் பிரதமர் அவர்களுக்கு ரூ. 200 கோடி கேட்டுக் கடிதம் எழுதினேன். 21.12.96ல் பிரதமர் ஒகூரில் 25 கோடி ரூபாய் அறிவித்தார். 22.12.1996ல் மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு. மிஸ்ரா அவர்கள் தமிழகத்திற்கு வந்தார். அவரைத் தொடர்ந்து 28, 29, 30 தேதிகளில் ஒரு குழுவும் வந்தது. அந்தக் குழு என்னையும் சந்தித்தது. விவசாய அமைச்சர் மிஸ்ரா அவர்களும் என்னைச் சந்தித்தார். பல தலைவர்களையும் சந்தித்தார். அந்தக் குழு எல்லோரையும் சந்தித்தது. அதற்குப் பிறகு கூட, 6.1.97, 3.2.97, 27.2.97 ஆகிய நாட்களில் அமைச்சர் களுக்கும், மத்திய அரசுக்கும் கடிதங்கள் இந்த நிவாரணத்

தொகையை நினைவூட்டி எழுதப்பட்டன. இவ்வளவுக்கும் பிறகு 10.3.97 தேசிய துயர்த்துடைப்பு நிதிக்குழுவிலே 25 கோடி ரூபாய் அனுமதிப்பதாக முடிவெடுத்து நேற்று அந்த 25 கோடி ரூபாய் நம்முடைய கணக்கிலே அனுப்பப்பட்டுவிட்டதாக நேற்றைக்குத்தான் செய்தி வந்திருக்கிறது. கேட்டது 200 கோடி ரூபாய், அதற்கு எவ்வளவு கடிதப் போக்குவரத்துக்கள், எவ்வளவு அலைச்சல், எவ்வளவு கஷ்டம்- அதற்குப் பிறகும் 25 கோடிதான் வந்திருக்கிறது என்றால் மத்தியிலே இருக்கிற அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டு மென்ற நம்முடைய கருத்தை மேலும் வலுப்படுத்துகிற வகையிலேதான் இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இதைச் சொல்கிற அதே நேரத்தில் இந்த வெள்ள நிவாரணத்தினால் 241 கோடி ரூபாயும், போக்குவரத்துக் கழகங் களுக்குப் புதிய பஸ்கள் 2,176 வாங்க 182 கோடி ரூபாயும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு நெல் கொள்முதலுக்கு வழிவகை முன் பணம் - Ways and Means Advance 100 கோடி ரூபாயும், மின்வாரியப் பங்கு மூலதனம் 133 கோடி ரூபாயும், சாலை பராமரிப்பிற்கு 94 கோடி ரூபாயும் என்ற அளவில்- இலவச வேட்டி சேலைக்கு 100 கோடி ரூபாய் ஆகிறது. அதிலே அதிகச் செலவு என்ற வகையில் 24 கோடி ரூபாயும், மாணவர் களுக்கு பஸ் பாஸ்- ப்ளஸ்-2 வரையில் படிக்கிற மாணவர் களுக்கு பஸ் பாஸ் என்று பட்ஜெட் படித்த பிறகுதான் அறிவித் தோம். உங்களுக்குத் தெரியும். எனவே அதற்கு ஒரு 45 கோடி ரூபாயும், கொள்முதல் போனஸ்- அதுவும் பட்ஜெட் படித்த பிறகுதான் அதிகப்படுத்தி அறிவித்தோம். எனவே அதற்கு 45 கோடி ரூபாய் ஆகிற செலவில் துணை மானியத்தில் 30 கோடி ரூபாயும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக 43 கோடி ரூபாயும், மருந்துப் பொருள்கள் வாங்க வேண்டும்- 1995-96க்கும் 1996-97க்கும் ஒரு வித்தியாசம், 1995-96ஐ விட 1996-97ல் மக்கள் நல்வாழ்வுத்துறை மிகத் தீவிரமாகச் செயல்பட்டதன் காரணமாக, இந்த மருத்துவத்துறையில், மக்கள் நல்வாழ்வுத்துறையில் ஒரு

முன்னேற்றம் ஏற்பட்டு, 1996-97ல் 58 லட்சம் பேர் புற நோயாளிகள் அதிகமாக மருத்துவமனைக்கு வந்தார்கள். நோயாளிகள் அதிகமாக வருவது பெருமையல்ல. ஆனால் வேறு மருத்துவமனைகளை நாடிச் சென்றவர்கள் இந்த மருத்துவ மனைக்கு 58 லட்சம் பேர் அதிகமாக வந்தார்கள். எனவே அவர்களுக்கு ஏற்ப மருந்து பொருள்கள் அதிகமாக வாங்கத் தேவைப்பட்ட பணம் 15 கோடி ரூபாய், குடிசை மேம்பாட் டுக்காக 19 கோடி, குடிநீருக்காக 20 கோடி, காவல் துறைக்கு அதிவிரைவுப்படை, தீயணைப்பு நிலையம்- நான் இங்கே அறிவித்த 21 தீயணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டு விட்டன என்பதை சம்பந்தப்பட்ட ஊர்க்காரர்கள் நிச்சயமாக அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்தும் அமலாக்கப்பட்டுவிட்டன. நடைமுறைக்கு வந்துவிட்டன. அந்தத் தீயணைப்பு நிலையங்களுக்காக, நாம் ஆரம்பித்து இருக் கிறோமே காவல் துறையினுடைய அதிவிரைவுப்படை- மத நல்லிணக்கத்திற்காக, மனித நேயத்தை வளர்ப்பதற்காக, ஆங்காங்கே கிளம்புகிற பூசல்களை எல்லாம் புகைவதற்கு முன்பே அடக்குவதற்காக அமைக்கப்பட்ட அதி விரைவுப் படை- அதற்கு ஒரு டெபுடி கமான்டன்ட், 2 அசிஸ்டென்ட் கமான்டன்ட், 8 இன்ஸ்பெக்டர்கள், 24 எஸ்.ஐ.க்கள், 48 ஹவில் தார்கள், 24 நாயக்குகள், 168 இரண்டாம் நிலை காவலர்கள், இவர்களுக்கு ஆகிற செலவு எல்லாம் சேர்த்து 24 கோடி ரூபாய்- மொத்தம் இந்தக் கணக்கிலே 970 கோடி ரூபாய் அளவுக்கு நாம் இந்தத் துணை மானியத்திலே கேட்டிருக்கிறோம். இ°தன்னியில் சில்லரையாகக் கேட்ட தொகை எல்லாம் சேர்த்துத்தான் இந்த 1600 கோடிக்கு மேற்பட்ட தொகையாகும்.

இந்த அதிவிரைவுப் படையினுடைய பயிற்சி 28ஆம் தேதி ஆவடியில் தொடங்குகிறது (மேசையத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு வெள்ள நிவாரண உதவி செய்யவில்லையே தவிர மற்ற உதவிகள் செய்திருப்பதை நான் நிதிநிலை அறிக்கையிலேயே கோடிட்டுக் காட்டி இருக்கிறேன். அதிலே குறிப்பாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் எனக்கு

நினைவூட்டி, நானும் அவர்களிடத்தில் பேசி, 'நபார்டு' வங்கியி லேயிருந்து சாலை, நீர்ப்பாசனத்திற்காக 272 கோடி பெற்றோம். இதைக் கடந்த ஆட்சியிலேகூட பெற்றிருக்க முடியும். ஒதுக்கப் பட்ட தொகையை, நபார்டு ஒதுக்கிய இந்தத் தொகையை கடந்த ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவேயில்லை. அந்த 272 கோடி ரூபாயை, ஆர்.ஐ.டி.எப். மூலமாக சென்ற ஆண்டு வாங்காமல் இருந்த தொகையை, நாம் வாங்கியிருக்கின்றோம். மத்திய அரசுக்கு நான் நன்றி தெரிவித்து இருக்கின்றேன்.

அதைப்போல, மற்றொன்று, நன்றி தெரிவிக்க வேண்டிய காரியம், இந்திய கட்டமைப்பு வசதி நிதி நிறுவனம்- Infra-structure Development Finance company (IDFC), பிரதமரும், நிதி அமைச்சரும் இங்கே ஒரு விழாவிற்கு கலைவாணர் அரங்கத்திற்கு வந்திருந்தபோது, நான் அவர்களை வரவேற்றுப் பேசிய நேரத்திலே சொன்னேன். இங்கே அகில இந்திய நிதி நிறுவனம் முதன் முறையாக கட்டமைப்பு வசதி நிதி நிறுவனத்தை இங்கே அமையுங்கள் என்று கேட்டேன். அதை ஏற்று, அது அமைவதற்கு இன்றைக்கு அவர்கள், அதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மையைச் சேர்ந்த வணிக ரீதியான ஏற்றுமதிக்கு கடன் வழங்க நபார்டு நிறுவனம் ஒரு வங்கியை தமிழகத்திலே அமைக்கிறது என்ற மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக்கொள் கின்றேன். இதில் மாநில அரசும் பங்கேற்கிறது. இது இந்தியா விலே மூன்று மாநிலங்களிலே ஒன்று என்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்வாறு மத்திய அரசின் சார்பாக நாம் பெறவேண்டிய உரிமைகளையும், நன்மைகளையும், உதவிகளையும் பெற்றிருக் கிறோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்ற அதேநேரத்தில் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட ஒன்று. இது நிதிநிலையிலே, அரசு நிதியிலேயிருந்து எடுக்கப் படாமல் முதல்வர் நிதியிலிருந்து எடுக்கப்படுகிற, கொடுக்கப் படுகிற தொகை என்ற காரணத்தால், துணை மானியக் கோரிக் கையிலே இதை அறிவிக்கலாம் என்பதற்காக அறிவிக்கின்றேன்.

பத்திரிகைத் துறையிலே 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதையொட்டி, அதற்கான அரசு ஆணை 20-3-1997 அன்று பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன். அந்த ஆணையிலேயே இந்தச் சலுகை குறித்து வேறு சிலர் எழுப்பிய சந்தேகங்களுக்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது. அதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் வருமாறு:

(1) தமிழ்நாட்டிலேயிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் தமிழ்நாட்டிலேயே முழுநேர உழைக்கும் பத்திரிகையாளராக 20 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.

(2) தமிழ்நாட்டிலேயிருந்து வெளிவரும் நாளிதழ், பருவ இதழ்களில் ஆசிரியர், துணை ஆசிரியர், செய்தியாளர், புகைப் படக்காரர், தமிழ்நாட்டிலேயே பணிபுரிந்திருக்க வேண்டும்.

(3) பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தில் உதவி பெறுவதற்காக விண்ணப்பம் தமிழ்நாட்டிலே உள்ள ஏதேனும் ஒரு பத்திரிகையாளர் சங்கத்தின் மூலம் முறைப்படி பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

(4) விபத்து மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு திடீரென்று மரணம் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு 20 ஆண்டுகள் பணி தேவையில்லை. 5 ஆண்டுகள் பணி புரிந் திருந்தால் போதுமானதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தில் உதவி பெறுவதற்கான விண்ணப்பம் செய்து மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களிடம் உரிய முறையில் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களோடு விண்ணப்பிக்க வேண்டும்.

(6) பத்திரிகையாளர் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு என நடைமுறையில் உள்ள பத்திரிகையாளர் ஓய்வு ஊதிய பரிசீலனைக் குழுவே, இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுவதற்கான

விண்ணப்பங்களையும் பரிசீலித்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணைகள் வெளியிடப்படும்.

இத்திட்டம் 5-3-1997ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று நான் அறிவித்திருந்தாலும்கூட, அதற்கு சில வாரங்களுக்கு முன்பு, மறைந்த பழம்பெரும் பத்திரிகையாளர் வேம்புசாமி அவர்களுடைய மறைவையொட்டி, அதைச் சிறப்பு நேர்வாகக் கருதி, வேம்புசாமி அவர்களுடைய குடும்பத்திற்கு 25ஆயிரம் ரூபாய் ஓய்வு நிதி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

வேறு உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து இங்கே விவாதிக்க இருக்கின்ற ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்போதும் விளக்கம் அளிப்பதற்கு ஏற்ற வகையிலே அமைந்துள்ளதாகையால், அவைகளைப் பற்றி யெல்லாம் அந்த நேரத்தில் விரிவாகப் பேசிக்கொள்ளலாம் என்று கூறி துணை மானியக் கோரிக்கைய அனைவரும் ஆதரித்து ஏற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமை கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.ச.அழகிரி.

திரு.ச.அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூருக்கு ஒரு அகல ரயில் பாதைத் திட்டம் சென்ற முறை வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட தண்டவாளங்கள் மற்றும் உபகரணங்களை எல்லாம் இப்போது ரயில்வே துறை திரும்பவும் எடுத்துக் கொண்டுபோவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே இதைக் கண்டித்து அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ரயில் மறியல் செய்திருக்கிறார். அவர் கைதும் செய்யப்பட்டிருக்கிறார். நமக்கு ஏற்கனவே இருக்கின்ற அகல ரயில் பாதையினுடைய அளவு குறைவாக இருக்கின்ற இந்த நேரத்தில், வழங்கப்பட்டு இருக்கிற ஒரு திட்டமும் நம்முடைய கையை விட்டுப் போய்விட்டால் அது மாநிலத்திற்கு பெரிய இழப்பாகும். எனவே மத்திய அரசாங்கம் இதில் தலையிட்டு நமக்குக்

கிடைத்திருக்கிற இந்த அகல ரயில் பாதை வருமே யானால் அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர், மாயவரம், கும்பகோணம், சிதம்பரம் போன்ற பகுதிகளும் அந்த அகல ரயில்பாதைத் திட்டத்தால் பயனடையக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு கலந்துபேசி, நாகூருக்கு வழங்கப்பட்டிருந்த அந்த அகலரயில் பாதைத் திட்டத்தை மீண்டும் நிலைநிறுத்த முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தேவையான ரயில்பாதைகள் குறித்து எல்லாம் கடிதம் மூலமாகவும், நேரில் சந்தித்தும், தமிழகத்திலேயே, இங்கேயே அரசு செயலகத்திலேயே மத்திய ரயில்வேதுறை அமைச்சரோடு விவாதித்தும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம் 2,3 பாதைகள் தவிர மற்ற பாதைகள் இப்போது தரப்படவில்லை.தரப்பட்ட பாதைகளுக்காக நன்றி செலுத்திக் கொண்டிருக்கிறோம். தராத பாதைகளுக்காக ஒரு உறுப்பினர் இன்றைக்கு அமைதியான முறையிலே போராடி சிறைப்பட்டிருக்கிறார். அந்த உணர்வை மத்திய அரசிலே உள்ளவர்கள் புரிந்துகொண்டு செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். அதற்கு இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினை உதவிடும் என்றும் நம்புகிறேன்.

நிதி ஒதுக்கீடு மசோதா

உரை : 56 நாள் : 28.04.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அதிகச் செலவு, அதாவது மிகைச் செலவு பற்றி ஒப்புதலைப் பெறுவதற்கு வைக்கப்பட்ட இந்தக் குறிப்புகள் அனைத்தும் இந்த ஆட்சி அமைந்த பிறகு ஏற்பட்டதல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் மிக நன்றாக அறிந்தேதான் பேசுகிறார். 1986-87, 1987-88-ஆம் ஆண்டுகளுக்கான மிகைச் செலவுகள் பற்றித்தான் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இது கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முறை. அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, இனி தொடர்ந்து அதுபோன்ற நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள அழகிரி அவர்கள் இங்கே அளித்த ஆலோசனை பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியொதுக் கீட்டு மசோதாவின் மீது இன்று காலையிலிருந்து பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை எடுத்துச் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக, அளிக்கப்பட்ட கருத்துக்களில் பலவற்றை ஆய்ந்து பார்த்தால் அவர்களுடைய தொகுதிகளைப் பற்றிய கருத்துக்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு தனி அலுவலர் வேண்டுமென்று கேட்டோமே, அது என்னவாயிற்று என்ற சீற்றம் மிகுந்த வினாக்களையும் இங்கே இருந்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

இதற்கிடையில் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. சி. ஞானசேகரன் அவர்கள் மணல்குவாரி எடுப்பதிலே நடைபெறுகிற கொடுமைகளை இங்கே எடுத்துக்கூறினார். நானே

அதை கொடுமைகள் என்றுதான் சொல்கிறேன். ஆனால் இதற்கு நாம் உடனடியாக எதுவும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், இந்த உரிமம் பல ஆண்டுகளுக்கு முன்பு கடந்த கால ஆட்சியில் அவர்களுக்குத் தரப்பட்டு, இத்தனை ஆண்டுகள் வரையிலே அந்த உரிமத்தை அனுப விக்கலாம் என்று வரைமுறையும் செய்யப்பட்டிருக்கிறது. அதை நாம் தடுக்கிற முயற்சியில் ஈடுபட்டால் உடனடியாக அவர்கள் நீதிமன்றம் சென்று தடையாணையைப் பெற்றுவிடுகிறார்கள். சுரண்டல் லாட்டரிக்கே தடையாணை கிடைக்கிற இந்தக் காலகட்டத்தில், அவர்கள் மணலைச் சுரண்டுவதைத் தடுப்பதற்கு அரசு எந்த நடவடிக்கை எடுத்தாலும் உடனடியாக அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள். தடையாணையைப் பெற்று விடுகிறார்கள். மேலும் முறைகேடாக மணல் எடுப்பவர்கள்மீது ஆங்காங்கே சட்டத்திற்குட்பட்டு நடவடிக்கைகள் எந்த அளவுக்கு எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு எடுக்கப்பட்டு வருகின்றன. நேற்றைக்குக்கூட நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்கள் ஒரு குறைபாட்டை கன்னியாகுமரி மாவட்டத்தில் சுட்டிக் காட்டினார்கள். உடனடியாக நான் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதுபற்றி குறிப்பு எழுதிக் கேட்டு, அவரும் எத்தனை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற விவரத்தைச் சொல்லி இருக்கிறார். நிச்சயமாக, இந்த மணல்குவாரி மூலமாகக் குறைந்த அளவிலே அவற்றை ஏலம் எடுத்துவிட்டு - ஒப்பன் டெண்டர் மூலமாகக்கூட அல்ல. அந்தக் கால ஆட்சியில் விருப்பத்திற் கேற்ப அவரவர்கள் ஏலம் எடுத்துவிட்டு - ஆற்றையே இன்றைக்கு பாதாளங்களாக ஆக்கிக்கொண்டிருக்கிற பயங்கரங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதன்மீது எப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பதை இந்த அரசு சட்டபூர்வமாக ஆராய்ந்து மேல் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொன்றை அவர் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் தமிழகத்திற்குள்ளே நுழையும்போதே ஏன் கைது செய்யவில்லை என்று குறிப்பிட்டார். நுழைந்தவுடனாவது கைது செய்திருக்கிறோம் என்பதை அவர் பாராட்டினார். இருந்தாலும்கூட இங்கே கைது செய்யப்பட்ட இந்த விடுதலைப் புலிகள் உதயகுமார்,

கமலநாதன் என்ற இருவரும் - ஏற்கெனவே உதயகுமாருடைய மனைவி, மாமியார் ஆகியோர் 1996-ஆம் ஆண்டின் தொடக்கத்திலேயே, அதாவது ஜனவரி, பிப்ரவரி மாதங்களிலேயே தமிழகத்திற்கு வந்து அகதிகள் முகாமிலே இருப்பவர்கள். அவருடைய நண்பர் கமலநாதன் 1-10-1996-ல் அகதியாகத் தமிழகத்திற்கு வந்திருப்பதாக விசாரணையிலே தெரிய வந்திருக்கிறது. இன்று அவர்கள் - கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். நீண்ட கடற்கரையில், என்னதான் கப்பற்படையி னுடைய காவல் இருந்தாலும்கூட, நம்முடைய காவல்துறையின் கண்காணிப்பு இருந்தாலும்கூட, அதையும் மீறி நீண்ட கடற்கரையில் எங்கோ ஒரு மூலையிலே அவர்கள் புகுந்துவிட முடிகிறது. ஆனாலும் அவர்களைத் தடுத்து நிறுத்துகின்ற முயற்சியிலும் அவர்களைக் கைது செய்கின்ற முயற்சியிலும், இம்மியளவும் எந்த பாரபட்சமும் காட்டாமல், தயவு தாட்சண்யம் காட்டாமல் நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. தொடர்ந்து எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொன்றை திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். வரியே இல்லாமல் இருந்த மீன் வலைகளுக்கு நீங்கள் வரியைப் போட்டு, அது எங்களுக்குத் தெரியாமல் போய், அதைக் குறைப்பதாகச் சொல்லி, நாங்களும் மகிழ்ந்து ஆரவாரம் செய்து இப்போது வரி இருப்பதாக மீனவர்கள் சொல்கிறார்களே என்று குறிப்பிட்டார். அவருடைய நினைவுக்கு நான் சொல்கிறேன். 15-8-1974 முதல் 28-2-1982 வரையில் இந்த மீன் வலைகளுக்கு 4% வரி இருந்து இருக்கிறது. அதற்கு வரியே இல்லை என்று சொல்வது தவறு. பிறகு 1-3-1982 முதல் 31-3-1990 வரை 5% வரி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. பிறகு 1-4-1990 முதல் 11-3-1993 வரை 8% வரி என்று ஆக்கப்பட்டிருக்கிறது. 12-3-1993 முதல் 4-4-1997 வரை 11% வரி என்று இருந்ததைத்தான் 5-4-1997-ல் குறைத்து 4% என்று இந்த அரசு அறிவித்து இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆனால் மீனவர்கள் வலை பின்னுவதற்காக 'மால்' வாங்குகிறார்கள். அது துண்டு துண்டாக இருக்கின்ற ஒன்று..

அந்த 'மாலை' வாங்கி அந்த வலைகளைத் தயார் செய்யும்போது அந்த 'மாலுக்கு' வரி விதிக்கவில்லை. ஆனால் அந்த வியாபாரிகள், அந்த 'மாலுக்கு' வரி வியாபாரம் செய்கின்றவர்கள், அதற்கு வரி வாங்குவதாக மீனவர்கள் புகார் கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அதன்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்த வரியை வாங்காத ஒரு சூழ்நிலை மீனவர்களுக்கு ஏற்படுத்தப்படும் என்ற உறுதியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கல்கி ஆசிரமம் குறித்து திரு. சி. ஞானசேரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கல்கி ஆசிரமத்தில் உடனடியாக என்ன நடக்கிறது என்று ஆய்ந்துபார்க்க வேண்டுமென்று, காவல் துறையை, இந்த அரசை யாரும் கேட்க முன்வருவதற்கு முன்பே நடவடிக்கை எடுத்து, போலீஸார் அங்கே சென்று ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். பிரச்சினை என்னவென்றால், அங்கே சென்று சேர்ந்து இருக்கிற பெண்கள் ஆனாலும், ஆண்கள் ஆனாலும் அவர்கள் எங்களுக்கு 18 வயது ஆகிவிட்டது, எங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு, நாங்கள் விருப்பப்பட்டுத் தான் இங்கே வந்தோம் என்று சொல்கிற நேரத்தில் சட்டப்படி அவர்களைக் கைது செய்யவோ அல்லது அவர்களை மீட்டு வரவோ முடியாத ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் படிப்படியாக அந்தக் கல்கி ஆசிரமம் எந்த நிலைக்குச் செல்கிறது என்பதைக் காவல்துறை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் அதையும் மீறி எந்தத் தவறும் அந்தக் கல்கி ஆசிரமத்திலே நடந்துவிட முடியாதபடி பார்த்துக்கொண்டும், நடந்தால் உடனடியாக தக்க நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற வகையில், அரசு அதனுடைய பணிகளைக் காவல்துறை மூலமாக முடுக்கி விட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு விவாதிக்கப்பட்டு, உங்களுடைய அங்கீகாரத்தைப் பெற இருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவு. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, ஏறத்தாழ 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கான அனுமதியை உங்களிடத்திலே பெறுகிற சட்ட முன்வடிவாகும். இந்த 18 ஆயிரம் கோடி எப்படி வந்தது

என்றால் -14 ஆயிரம் கோடிதான் - ஏற்கெனவே வாங்கி இருக்கின்ற கடன்களைத் திருப்பித் தருகின்ற வகையில் ஏறத்தாழ ஒரு 4 ஆயிரம் கோடி ரூபாய், அதுவும் சாட்டுதல் என்கிற வகையிலே இதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது.

1997-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து தொடங்குகிற நிதி ஆண்டின் பணிகளுக்காகவும், நோக்கங் களுக்காகவும் மாநிலத் தொகு நிதியத்திலேயிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கான சட்டமுன்வடிவு கடந்த 26-ஆம் தேதி இந்த அவையிலே அறிமுகம் செய்யப்பட்டு, அதற்கான விவாதம் இன்று நடைபெற்று, மாமன்றத்தின் உறுப்பினர்கள் பலர், இந்தச் சட்ட முன்வடிவை ஒட்டியும் அதற்கு அப்பாற்பட்டும் பொதுவான பல கருத்துக்களையும் இங்கே வழங்கி இருக்கின்றார்கள்.

1997-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளிலே யிருந்து 1998 மார்ச் முடிகின்ற வரையிலே உள்ள நிதி ஆண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், தேவைப்படக்கூடிய 18,131 கோடியே 10 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத ஒரு தொகையை மாநிலத் தொகு நிதியத்திலேயிருந்து ஒதுக்கீடு செய்யலாம் என்பதற்கான சட்ட முன்வடிவுதான் இந்தச் சட்ட முன்வடிவாகும். இந்தத் தொகையிலே 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க முன்னளி மானிய வாக்களிப்புச் சட்டத்தின் இரண்டாம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட, அதாவது Vote on Account 4,532 கோடியே 77 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் தொகையும் இதிலே உள்ளடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே சட்டமன்றப் பேரவையால் பல்வேறு மானியத் தலைப்புகளில் அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் இங்கே முன்வைத்து விவாதம் நடத்தி, உறுப்பினர்கள் எல்லாம் ஒப்புதல் அளித்து, வாக்களிக்கப்பட்ட தொகை 14,400 கோடியே 67 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாயாகும். இது தவிர, மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்ட தொகை 3,730 கோடியே 42 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாயாகும். சட்டமன்றம் வாக்களித்து நிறைவேற்றிய மானியக் கோரிக்கைகள் என்ற அடிப்படையில்

பார்த்தால் எந்தெந்தத் துறைகளுக்கு தொகை, எந்தெந்த வகையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களையும் நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கல்வி 2,969 கோடி ரூபாய்; ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் 1,308 கோடி ரூபாய்; நுகர்பொருள் வழங்கல் 1,020 கோடி ரூபாய்; ஊரக வளர்ச்சி 790 கோடி ரூபாய்; நகராட்சிப் பணிகள் 376 கோடி ரூபாய்; மக்கள் நல்வாழ்வு, மருத்துவம் 834 கோடி ரூபாய்; சமூக நலன் 600 கோடி ரூபாய்; காவல்துறை 539 கோடி ரூபாய்; வேளாண்மை 689 கோடி ரூபாய்; சாலைகள், பாலங்கள் 357 கோடி ரூபாய்; பாசனம் மூலதனச் செலவு 249 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் 184 கோடி ரூபாய்; மாவட்ட நிர்வாகம் 332 கோடி ரூபாய்; தாழ்த்தப்பட்டோர் நலன் 254 கோடி ரூபாய், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் நலன் 64 கோடி ரூபாய். எனவே, பல்வேறு ஆக்கப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகைகளை செலவழிக்கக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டமுன்வடிவை அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்ற அதேநேரத்தில் சில கருத்துக்களை உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகின்றேன்.

5-3-1997 அன்று, மார்ச் மாதம் 5 ஆம் தேதி அன்று, 1997-98 ஆம் ஆண்டிற்கான இந்த நிதி நிலை அறிக்கை வைக்கப்பட்டபோது நான் குறிப்பிட்டு இருக்கின்றேன். 1997-98 ஆம் ஆண்டுக்கு மத்திய திட்டக்குழு 4 ஆயிரம் கோடி ரூபாய் என்று திட்ட ஒதுக்கீட்டை நிர்ணயித்துள்ளது. ஆயினும் நமது வரவு-செலவுத் திட்டத்தில் 4,052 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். இந்த நிதி ஆண்டில் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை முழுமையாக எய்தி விடுவோம் என்ற நம்பிக்கையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

1997-98-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்காக வரைவு ஆணைகள் தயாரிக்கப்பட்டு, வெளியிடும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. ஏதோ அறிவித்தோம், அத்துடன் விட்டுவிட்டோம் என்று

இல்லாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னென்ன புதிய திட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டதோ, அதற்கான வரைவு ஆணைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டு, வெளியிடும் நிலையிலே இருக்கின்றன. அவற்றிலே ஒன்றிரண்டைத்தான் இந்தக் கூட்டத் தொடருக்கு இடையிலே நாம் வெளியிட்டிருக்கிறோம். அரசு ஆணைகளை வெளியிட்டிருக்கிறோம். மற்றவைகளை இன்று உங்கள் அனைவருடைய அனுமதியைப் பெற்ற பிறகுதான், நாளை முதல்தான் அந்த ஜி.ஓக்கள் அந்த அரசு ஆணைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்காக வெளியிடப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை சட்டமன்ற மரபுகளை உணர்ந்த நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இந்த ஆணைகள் ஆளுநருடைய ஒப்புதலைப் பெற்று, மிக விரைவிலே வெளியிடப்படும். இதற்கிடையிலே என்னென்ன அறிவிப்புகளை நாம் எந்த அளவிற்கு ஆணைகளாக பிறப்பித்து இருக்கிறோம் என்பதற்குச் சில உதாரணங்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப் படும் என்று குறிப்பிட்டிருந்தேன். 'மானிடரிங் செல்' என்ற அந்த செல் அமைக்கப்பட்டு இந்த அவையிலே முதலமைச்சராகிய நான் அறிவிக்கின்ற அறிவிப்புகள் ஆனாலும், ஏனைய அமைச்சர் பெருமக்கள் அறிவிக்கின்ற அறிவிப்புகள் ஆனாலும், அவைகளை எல்லாம் தொகுத்து, உடனடியாக இந்த அறிவிப்புகள் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றன, இதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா, இது மக்களுக்குப் போய்ச் சேருகின்ற அளவிற்கு பணிகள் தொடங்கப்பட்டுவிட்டனவா, என்பதையெல்லாம் அறிந்து, அவ்வப்போது அமைச்சர்களிடத்திலே விவாதித்து, என்னிடத்திலே அதைத் தொகுத்துத் தருகின்ற அளவிற்கு அந்த மானிடரிங் செல் இன்றைக்குப் பணியாற்றத் தொடங்கிவிட்டது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமாத்திரமல்ல அந்த மானிடரிங் செல்லைக் கடந்து சரியான முறையிலே இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்

படுகின்றனவா என்பதைக் கண்டறிந்து அரசுக்குத் தெரிவிக்க 14 ஆணையாளர்கள் - கமிஷனர்கள் - 28 மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 1997-98 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளாட்சி மன்றங் களுக்கு ரூ. 1174 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. 10-ஆம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு அளிக்கப்பட வேண்டிய ரூ. 100 கோடியில் முதல் காலாண்டிற்கு அளிக்க வேண்டிய ரூ. 25 கோடி உட்பட, ரூ. 300 கோடி வழங்குவதற்கான ஆணைகள் இந்த வாரத்தில் வெளியிடப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இது தவிர, உள்ளாட்சி மன்றங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 60 கோடி வழங்குவதற்கான ஆணைகளும் இந்த வாரத்திலேயே வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் அனைத்து உள்ளாட்சி மன்றங்களும் போதிய நிதியாதாரத்தைப் பெற்று அடிப்படை வசதிகளைச் செய்யத் தொடங்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

உதாரணமாக, காவல்துறை மானியக் கோரிக்கையின் பொழுது கடந்த ஆண்டு காவல்துறை மானியத்தின்போது - அறிவிக்கப்பட்ட சலுகைகளையொட்டி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை விவரமாக நான் இந்த அவையிலே கூறியிருக் கின்றேன். அதைப்போல 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிவிப்பையொட்டி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இந்தத் தொடர்க் கூட்டத்தின் இறுதிக் கூட்டத்தில் வெளியிட விரும்புகிறேன். வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே அறிவிக்கப்பட்டதுபோல வறுமை ஒழிப்புத் திட்டத்தையும், குடிநீர் வழங்கு திட்டத்தையும் செயல்படுத்த ஊராட்சி மன்றத்திற்கு உரிய பொறுப்புகளை ஒப்படைத்து, அரசு ஆணைகள் 14-3-1997-ல் வெளியிடப்பட்டுவிட்டன. 5-3-1997-லே அறிவித்து, அதற்கான ஆணைகள் 14-3-1997-ல் வெளியிடப் பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லாத 154 குடியிருப்புகளுக்கு 1997-ஆம்

ஆண்டு மார்ச் 31-க்குள் குடிநீர் வழங்கப்படும் என்று அறிவித்தேன். அந்தப் பணி முடிவுற்று குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தகவல் பெறும் உரிமைச் சட்டம் ஒன்று இந்தச் சட்ட மன்றத்திலே அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவித்தேன். அந்தச் சட்டமுன்வடிவு இறுதி செய்யப்பட்டு, இந்த மாமன்றத்திலே அந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டது என்பதையும், அதன் மேல் நீங்கள் எல்லாம் விவாதிக்க இருக்கின்றீர்கள் என்பதையும் நான் அறிவிக்கவே தேவையில்லை.

தென் மாவட்டங்களில் மொத்தம் ரூ. 42½ கோடி அளவில் வறட்சி நிவாரணப் பணிகள் செய்யப்படும் என்று நிதிநிலை அறிக்கையின்போது நான் குறிப்பிட்டிருந்தேன். தென் மாவட்டங்களிலே ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியைக் கண்டு வந்த நம்முடைய அமைச்சர் பெருமக்களும் மற்ற அதிகாரிகளும் தெரிவித்த கருத்தின் அடிப்படையிலேதான் ரூ. 42 கோடி உடனடியாக அதற்கென ஒதுக்கப்பட்டது. அந்த வறட்சிப் பணிகளைத் தொடங்க ரூ. 7.5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு, பணிகள் தொடங்கிவிட்டன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அ•தன்னியில் திண்டுக்கல் - மன்னார் திருமலை மாவட்டத்திலே வறட்சிப் பணிக்காக ரூ. 15 கோடி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டாகிவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான சிறிய ஏரிகளைப் புதுப்பிக்கும் திட்டம் 270 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே அளிக்கப்பட்டு, ஜப்பான் நாட்டினுடைய நிதியைப் பெறுவதற்கு மத்திய அரசுக்கு அந்தக் கோப்பு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டிவனம், பாண்டிச்சேரி, கிருஷ்ணகிரி ஆகிய சாலைப் பகுதிகளில் 19.90 கோடி ரூபாய்ச் செலவில் ஒரு கீழ்ப்பாலம் மற்றும் வழிமாற்றம் செய்யும் பணிகளுக்கு அரசாணை 11-3-1997-ல் வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், 1000 முதல் 1500 வரை மக்கள் தொகை கொண்ட 108 கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு நிறுவனத்திடமிருந்து Rural Infrastructure Development Fund - லேயிருந்து பெறப்பட்ட நிதியிலேயிருந்து சாலை மேம்பாடு மற்றும் பாசன வசதிகள் திட்டத்திற்கு மொத்தம் 272 கோடி ரூபாய் அறிவிக்கப்பட்டது. அதிலே 210 கோடி ரூபாய்க்கு ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

விளையாட்டு அரங்கம் இல்லாத 12 மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் கட்டுவதற்காகவும், உள் விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்காகவும் கொள்கையளவில் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல் ரூ. 10 கோடி விளையாட்டு மேம்பாட்டு நிதி ஏற்படுத்துவதற்காக மாநில அரசு ஈடான தொகை வழங்குவதற்கு கொள்கையளவிலே ஆணை பிறப்பித்துள்ளது.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதற்கான அரசாணை 10-3-1997-லேயே வழங்கப் பட்டாயிற்று.

குழந்தைத் தொழிலாளர்கள் மறு சீரமைப்பு மற்றும் நலநிதி உருவாக்க 12-3-1997-லேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன.

வயதான, பரம்பரை சித்த மருத்துவர்களுக்கு மாத ஓய்வூதியம் 150 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி 13-3-1997-லேயே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட் டோருக்கான வீட்டு மனை வழங்கும் திட்டத்தை இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் விரிவாக்க 13-3-1997-லேயே ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன.

ஈழத் தமிழ் அகதிகளுக்குக் கூடுதலாக மாதம் 50 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவித்தேன். அதற்கான ஆணைகளும் வெளியிடப்பட்டுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிகைத் துறையிலே தொடர்ந்து 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், போட்டோகிராபர்கள், போன்றவர்கள் இயற்கை எய்தினால் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்தேன், அதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டாயிற்று. முதல் உதவியாக பழம்பெரும் செய்தியாளர் திரு. வேம்புசாமி அவர்களுடைய குடும்பத்திற்கு இந்த நிதி வழங்கப்பட்டுவிட்டது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கூறியதுபோல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி என்று அறிவித்ததற்கு ஏற்ப விளம்பரப்படுத்தப்பட்டு, 95 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மனுக்கள் பெறப்பட்டு அந்த 95 ஊராட்சி ஒன்றியங்களில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும், எஸ். எஸ். எல். சி. வரையிலே படித்த ஏழை மாணவர்கள் அந்தத் தொழில் பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி பெற்று வேலை வாய்ப்புகளையும் எளிதாகப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயே, நடந்த முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஆளுநர், மறைந்த டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் ஆற்றிய உரையில் அறிவிக்கப்பட்ட மனித உரிமையியல் ஆணையம் Human Rights Commission தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு, ஆணையத்திற்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள்; அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டு விட்டன.

பயன்படாத தரிசு நிலங்களை மேம்படுத்த, புதிய தொழில்நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்த முன்னாள் துணைவேந்தர் பி. சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையிலே 1996-ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது அறிக்கையை மே மாதம் 19-ஆம் தேதி தரவிருக்கிறது. அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, தரிசு நிலங்களை மேம்படுத்தவும், புதிய தொழில்நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்தவும் அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொதுவான சட்டம் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்பட்டதையொட்டி, அதற்கான சட்டமுன்வடிவை இந்த அரசு இன்று அறிமுகப்படுத்தியுள்ளது என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது மாத்திரம் செய்யப்பட்ட அறிவிப்புகள் 118. இந்த 118 அறிவிப்புகளில் 30 அறிவிப்புகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுவிட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவைகள் வெளியிடப்படாததற்குக் காரணம் இந்தச் சட்டமுன்வடிவு இன்றைக்கு நிறைவேறியபிறகுதான் வெளியிட வேண்டும் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அமைச்சர் களும், தங்கள் துறையின் சார்பாக மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்குப் பதிலளித்தபோது இம்மாமன்றத்தில் பல்வேறு அறிவிப்புகளைச் செய்து இருக்கின்றார்கள்.

அந்த வரிசையிலே பார்த்தால் தொழில்துறை மற்றும் காவல்துறை சார்பாக நான் வெளியிட்ட அறிவிப்புகள் 52, கல்வி அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் 24. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 5. வருவாய்த் துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் 22. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 23. வேளாண்மைத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 27. பொதுப்பணித்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 10. போக்குவரத்துத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 26. தமிழ்

ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 18. உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 39. பால்வளத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 6. தொழிலாளர் நலத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 5. வணிக வரிகள்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 18. கைத்தறித்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 2. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 23. வனம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 15. வீட்டு வசதித்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 26. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 15, இந்துசமய அறநிலையத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 17. சமூக நலத்துறை அமைச்சர் 14 அறிவிப்புகள், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் 39 அறிவிப்புகள், சுற்றுலாத்துறை அமைச்சருடைய அறிவிப்புகள் 13. கதர் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் 124 அறிவிப்புகள். மீன் வளத்துறை அமைச்சர் 23 அறிவிப்புகள். ஆக மொத்தம் 484 அறிவிப்புகள் இங்கே இந்த அவையிலே முதலமைச்சராலும் மற்ற அமைச்சர்களாலும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்படி அறிவிக்கப்பட்ட வளர்ச்சிப் பணிகளும், வேலை வாய்ப்புப் பணிகளும், நல்வாழ்வுத் திட்டங்களும் மாவட்டங் களிலே தொடர்ந்து நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிக்கத் தான் அமைக்கப்பட்டுள்ள மானிடரிங்செல்லைப் பற்றியும் மாவட்டங்களில் 14 கமிஷனர்கள் நியமிக்கப்பட இருக்கின்றார்கள் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட இருக்கின்றேன். இந்தப் பணிகள் எல்லாம் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா என்பதை கவனித்துக்கொள்கின்ற பெரும் பொறுப்பு அனைத்து அமைச்சர்களுக்கும் உள்ளது என்பது மாத்திரம் அல்ல, அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த விவாதத்தில் நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் 2, 3 பொதுவான பிரச்சினைகளைப் பற்றிப்

பேசினார்கள். பொதுவான பிரச்சினை என்றாலும் தமிழ் நாட்டிற்கு மிக மிகத் தேவையான பிரச்சினைகளைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். முதலாவதாக, காவிரியைப் பற்றி அவர்கள் பேசும்போது உடனடியாக ஒரு முடிவை தமிழ்நாட்டு விவசாயிகளுடைய நலனைக் காப்பதற்காக நாம் எடுத்தாக வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினை எத்தனை ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகின்ற பிரச்சினை என்பதையும் 1968 முதல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலந்தொட்டு இன்று வரையில் 20 அல்லது 25-க்கு மேற்பட்ட தடவை கர்நாடக அரசோடு கலந்து பேசி மத்திய அரசினுடைய நீர்வளத்துறை அமைச்சர்களை முன் வைத்து அவர்கள் முன்னிலையிலே கலந்து பேசி முடிவு காணாத சூழ்நிலையில்தான் கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1989-90-ல் இங்கே இருந்தபோது நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க அன்றிருந்த பிரதமர் வி. பி. சிங் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவரும் அதற்கு உடன்பட்டு, நம் சார்பாக நாம் எடுத்துச்சொன்ன கருத்தை நீதிமன்றத்திலே எடுத்து வைக்கின்ற பொறுப்பினை உணர்ந்து ஏற்றுக்கொண்டு, அந்த அடிப்படையிலே நடுவர் மன்றம் அமைந்தது என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்த நடுவர்மன்றத்திற்குப் பிறகு இடைக்காலத் தீர்ப்புகளை நிறைவேற்றுவதற்கு கர்நாடக அரசு முன்வராத காரணத்தால் ஏற்பட்ட பிரச்சினைகள், குழப்பங்கள் அனைவரும் அறிந்த ஒன்றுதான். தொடர்ந்து அதைப்பற்றி விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை என்றே நான் கருதுகிறேன். கடந்த 5-1-1997 வரையில் உச்சநீதிமன்றத்தினுடைய கருத்திற்கிணங்க நம்முடைய தண்ணீர்த் தேவை குறித்து கர்நாடக அரசுடன் பேசுகிற வாய்ப்பு ஏற்பட்டபோது அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு ஏன் முழுமையாகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் முன்வரக்கூடாது என்று கர்நாடக அரசு தெரிவித்த அந்தக் கருத்தை புறந்தள்ளிவிடாமல் நாம் அவர்களோடு 5 முறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அந்தப் பேச்சுவார்த்தையினால் எந்தப் பலனும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக நாங்கள் இன்னொரு அணை கட்டப்போகிறோம்; அதற்கு

ஆதரவு தாருங்கள் என்று கேட்கின்ற அளவுக்கு ஏதோ மேகதாதோ, மேகதூதோ (குறுக்கீடு) மேகதாது என்ற ஒரு அணை கட்டப்போகிறோம், அதற்கும் அனுமதி தாருங்கள் என்கின்ற அளவிற்கு, சம்மதம் தாருங்கள் என்கின்ற அளவிற்கு, அவர்கள் வந்துவிட்ட காரணத்தால் இனிமேல் இவர்களோடு பேசி எதுவும் நடக்காது என்ற அளவில் நாம் தொடர்ந்து கண்டிப்பாகச் சொல்லி வந்திருக்கிறோம். சிலரிடத்திலே பேச்சுவார்த்தை நடத்தினாலும் கூட, நடுவர்மன்றத்தினுடைய வரம்பிற்கு உட்பட்டுத்தான் நடத்துவோம் என்று சொன்னதற்கிணங்க, அந்த வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பேசத் தயாராக இல்லாத ஒரு சூழ்நிலையில், மீண்டும் நடுவர்மன்றத்தையே நாம் நாடினோம். நடுவர் மன்றத்தை நாடியது மாத்திரம் அல்ல; உச்சநீதிமன்றத்திலே இன்றைக்கு அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

உச்சநீதிமன்றம் இந்த வழக்கை, ஐந்து பேர் கொண்ட கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் ஒன்றை அமைத்து, அதற்கு அனுப்பியிருக்கின்றது. கான்ஸ்டிடியூஷனல் பெஞ்ச் இந்த வழக்கை விசாரித்து மைய அரசின் நிலையைக் கேட்டபோது, மைய அரசின் சார்பாக அட்டர்னி ஜெனரல் ஆஃப் இந்தியா எட்டுவார கால அளவிற்குள் நடுவர் நீதிமன்றம் கொடுத்த இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதற்கான வரைவு திட்டத்தைத் தருவதாக உச்சநீதிமன்றத்திலே இந்த மாதம் 2-வது வாரத்திலே கூறியிருக்கின்றார்கள். எனவே, அதை நாம் உடனடியாக, நம்முடைய தீரன் அவர்கள் கருதுவதைப்போல தள்ளிவிட முடியாது. அவர்கள் எந்த அளவிற்கு உச்சநீதி மன்றத்திலே தங்களுடைய கருத்தை, அந்த வரைவை எடுத்துச் சொல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிந்துகொண்ட பிறகுதான் மேல் நடவடிக்கைகளை நாம் எடுக்கமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தக் காவிரிப் பிரச்சினையில் தற்போதைய நிலையின் சுருக்கத்தை நான் உங்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

ஆனால், இன்றைக்கு ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்டவர்கள், கடந்த ஐந்தாண்டுக் காலம் ஆண்டவர்கள்,

காவிரிப் பிரச்சினைக்குத் துரோகம் செய்து விட்டதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான்; திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்று இன்றைக்குச் சொல்லி வருவதை நாம் காணுகிறோம். அளிக்கின்ற பேட்டியானாலும், பேசுகின்ற மேடையானாலும், நிருபர்களைச் சந்திக்கின்ற நேரமானாலும் எல்லா நேரத்திலும் ஏதோ காவிரிப் பிரச்சினைக்குத் திராவிட முன்னேற்றக் கழக அரசு துரோகம் செய்துவிட்டதைப் போலப் பேசி வருகின்றார்கள்.

உங்களுக்கு நான் ஒரு உதாரணத்தை மாத்திரம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே ஒரு முறை கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இன்றைக்கு விவரமாகவே சொல்ல விரும்புகின்றேன்.

ஜெயலலிதா அவர்கள், முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள், இந்தக் காவிரிப் பிரச்சினையிலே எப்படி நடந்து கொண்டார்கள், எவ்வளவு ஆர்வத்தோடு, எவ்வளவு விரைந்து இந்தக் காவிரிப் பிரச்சினையிலே அக்கறை காட்டினார்கள் என்பதற்கு நான் இங்கே படிக்க இருக்கின்ற இந்த இரண்டு மூன்று கடிதங்களும், குறிப்பிட இருக்கின்ற தேதிகளுமே சான்றுபகரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

9th June 1992. 1992 ஜூன் மாதம் 9-ஆம் தேதி முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுக்கு ஒரு கடிதம் வருகிறது. கடிதத்தை எழுதுபவர் சுக்லா அவர்கள். சுக்லாவை உங்களுக்குத் தெரியும். அவர், இந்த அம்மையார் உண்ணாவிரதம் இருந்தபொழுதுகூட வந்து சில உறுதிமொழிகளைத் தந்து, அந்த உறுதிமொழிகளின் காரணமாக உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டதே, அந்த சுக்லாதான் இந்த சுக்லா. அவர் 1992-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 9-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதுகிறார்.

"Dear Jayalalithaji,

Keeping in view the interim order of the Cauvery Water Disputes Tribunal, it is proposed to assign the responsibility of monitoring its implementation to the Central Water Commission in co-operation with the basin States. Shri

Vaithialingam, Chief Minister of Pondicherry has generally agreed with this proposal. The Joint Regulation Committee to be headed by the Chief Engineer, CWC, would include representatives of the respective State Governments also. I will be obliged, if you could please communicate your concurrence with such an arrangement".

''உங்களுடைய ஒப்புதலை உடனடியாக அதற்கு அனுப்புவீர்களேயானால் - நான் அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்ற அளவிலே இந்தக் கடிதத்தை வி.சி. சுக்லா அவர்கள் 9-6-1992 - 1992 ஜூன் 9-ஆம் தேதி அன்று எழுதுகிறார். 9-ஆம் தேதி எழுதிய அந்தக் கடிதம் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு எப்பொழுது வைக்கப்படுகிறது என்றால், 9/6 இல் எழுதப்பட்ட கடிதம், அவருடைய பார்வைக்கு 18-7-1992 அன்று வைக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்து என்று வைத்துக்கொள்ளுங்களேன். 18-7-1992 அன்று அவருடைய பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பார்வைக்கு வைக்கப்பட்டவுடன் அவசரமாக அவர்கள் முடிவு எடுத்தார்களா என்றால் 20-7-1992 அன்று காவிரி டெக்னிக்கல் செல் இருக்கிறதே அந்த டெக்னிக்கல் செல் ஒரு கடிதத்தை எழுதுகிறது யாருக்கு?

The Remarks of the Chairman, Cauvery Technical Cell, Madras on the above subject are as follows:-

"The Government may agree to the proposal of Government of India, as indicated in the letter cited, to assign the responsibility of monitoring the implementation of the interim order of the Cauvery Water Disputes Tribunal to the Central Water Commission" என்று 20-7-1992-ல் காவிரி டெக்னிக்கல் செல், தமிழகத்திலேயுள்ள செல் முதலமைச்சருக்குத் தெரிவிக்கிறது. அல்லது அரசுக்குத் தெரிவிக்கிறது. Chief Secretary-க்குத் தெரிவிக்கிறது. இப்படித் தெரிவித்த பிறகு, ஒரு ஓ. சி. காப்பி, உங்களுக்குத் தெரியும், ஓ. சி. என்றால் ஆபீஸ் காப்பி. ஒரு ஆபீஸ் காப்பி எப்படி வருகிறதென்றால், கடிதம்

எழுதுவதற்காக, ஒரு ஆபீஸ் காப்பி, முதலிலே ஒரு டிராப்ட் போட்டு வருகிறது. அந்த டிராப்ட் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் அதிலே கையெழுத்து இட்டு 14-12-1992, அன்று ஒப்புதல் தருகிறார். 6-ஆம் மாதம் கடிதம், 7-ஆம் மாதம் நினைவூட்டல், பிறகு 12-ஆம் மாதம், 14-12-1992 அன்று ஓ.சி. தயாராகிறது. 5 மாதம் ஆகிறது அந்த ஓ.சி.க்கே. ஓ.சி. தயாராகிறது. அந்த ஓ.சி. எப்படித் தயாராகிறது தெரியுமா? 21-7-1992-ல் பி.டபிள்யூ.டி. செக்ரட்டரி கையெழுத்தைப் போட்ட ஓ.சி., அதே 21-7-1992-லே கையெழுத்துப் போட்ட அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சர், அவருடைய கையெழுத்தைப் போட்ட அந்த ஓ.சி. இவைகளை 14-12-1992-லேதான் முதலமைச்சர் அதை அப்ரூவ் பண்ணுகிறார். அந்த லெட்டரை அப்ரூவ் பண்ணுகிறார். அப்ரூவ் பண்ணினபிறகு, அனுப்பப்பட வேண்டிய தட்டச்சு கடிதம் வரவேண்டுமல்லவா, அந்தக் கடிதம் அவருக்கு எப்பொழுது வருகிறதென்றால் 30-3-1993. வேடிக்கை பாருங்கள். ஜூன் மாதம் 9-ஆம் தேதி சுக்லா கடிதம் எழுதுகிறார். அதற்குப் பதில் எழுதக்கூடிய கடிதம், பல கட்டங்களைத் தாண்டித் தாண்டித் தாண்டி, Fair Copy 30-3-1993, அடுத்த வருடம் வருகிறது. ஒரு வருடம் கழித்து ஓ.சி.க்குப் பிறகு Fair Copy-க்கு 3½ மாதம் தாமதம், ஓ.சி.க்கு 5 மாதம் தாமதம். ஓ.சி. எல்லாம் தாமதமாகத்தான் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஓ.சி. இல்லாமல் இருந்தால் அங்கே தாமதத்திற்கே இடம் கிடையாது. ஓ.சி.க்குப் பிறகு Fair Copy செய்ய 3½ மாதம் தாமதம். அதற்குப் பிறகு அம்மையார் 30-3-1993-லே, கையெழுத்துப் போடுகிறார்கள். அந்த அம்மையார் கையெழுத்துப் போடுகிறார்கள் Fair Copy-லே. 30-3-1993-லே கையெழுத்துப் போட்ட பிறகு, எப்போது கடிதத்தை (despatch) அனுப்புகிறார்கள் தெரியுமா? 14-4-1993-ல் கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். இப்படி காவிரிப் பிரச்சினையில் அக்கறை காட்டிய அம்மையார்தான் என்னைப் பார்த்து துரோகி, துரோகி என்கிறார். யார் யாரோ துரோகி என்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து இவரும் துரோகி என்கிறார் என்று நான் விட்டுவிட்டுப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து நம்முடைய பேராசிரியர் தீரன் அவர்கள் இட ஒதுக்கீடு குறித்து வலுவான சில கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள். இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலும் இங்கேயுள்ள அனைவரும் எந்த அளவிற்கு ஒருமித்த கருத்தோடு, உள்ள உறுதியோடு, இந்த 69 சதவிகிதத்தை நாம் நிலைநாட்ட வேண்டுமென்று முடிவெடுத்தோம் என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். 1991-ஆம் ஆண்டு வரை 69 என்று இருந்த இந்த இட ஒதுக்கீட்டினுடைய சதவிகிதம் பிறகு உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒன்றின் காரணமாக 50 சதவிகிதமாக உருக்கொண்டது, பிறகு 1993-ஆம் ஆண்டு இதே அவையிலே ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒரு சட்டமும் நிறைவேற்றப்பட்டது. 69 சதவிகிதத்திற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்போதுகூட நாம் சொன்னோம், இந்தச் சட்டம் மாத்திரம் போதாது, ஒவ்வொரு மாநில அரசும், அந்த மாநிலத்திலேயுள்ள நிலைமைக்கேற்ப, இந்த இட ஒதுக்கீட்டை நிர்ணயித்துக்கொள்கின்ற அதிகாரத்தைப் பெற வேண்டும். அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டு மென்ற கருத்தை நாம் அன்றைக்கே எடுத்துக்கூறியிருக் கின்றோம்.

இன்னொன்று, இவர்களுக்கு இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில் எவ்வளவு குழப்பம் இருந்தது என்பதற்கு அமைச்சரவைக் கூட்டங்களில், அவர்கள் நடத்திய அமைச்சரவைக் கூட்டங்களிலே எடுத்த முடிவு ஒன்றைப் பார்த்தாலே - தீரன் அவர்கள் சொன்னார்களே - புரோமோஷனில் கூட இட ஒதுக்கீடு வேண்டுமென்ற கருத்தை ஜெயலலிதா அமைச்சரவை ஆதரிக்கவில்லை என்றே குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதை இந்த அமைச்சரவை ஆதரிக்கவில்லை யென்றே அவர்கள் எழுதியிருக்கிறார்கள். புரோமோஷனில், பதவி உயர்வில் இட ஒதுக்கீடு தேவையென்ற அந்தக் கருத்தை அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவினுடைய அமைச்சரவை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கான குறிப்பே இன்றைக்கு தலைமைச் செயலகத்திலே இருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, ஏதோ 69 சதவீதம் என்று ஒரு சட்டத்தை உருவாக்கினார்கள். அதற்குக்கூட திராவிடர் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் திரு. வீரமணி அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லி, அந்த அடிப்படையிலேதான் அந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், அந்தச் சட்டத்தை Ninth Schedule-இல் சேர்க்க வேண்டும், ஒன்பதாவது அட்டவணையிலே சேர்க்க வேண்டும் என்பதற்காக நானும்கூட வடக்கே எல்லாம் இருந்த எல்லாத் தலைவர்களுக்கும் கடிதம் எழுதினேன். ஆச்சரியம் என்னவென்றால், திரு. வாஜ்பாய் அவர்கள்கூட அதை ஏற்றுக்கொண்டு, உடன்பட்டு, ஆதரிப்பதாக எனக்குப் பதில் எழுதியிருக்கிறார்கள். மற்றும் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய தலைவர்களும் ஏற்றுக்கொண்டிருந்தார்கள். மற்ற கட்சிகளுடைய தலைவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருந்தார்கள். அங்கே, ஒன்பதாவது அட்டவணையிலே தமிழகத்திலே இயற்றப்பட்ட அந்தச் சட்டம் இடம் பெற்றது. ஆனால், அதைக் கெடுப்பதற்குக் காரணமாக இருந்தவர்களும் இயற்றியவர்களேதான்; இயற்றியவர்களே, அது கெடுவதற்கும் காரணமாக இருந்தார்கள் என்ற உண்மையை யாரும் மறந்துவிட முடியாது. அதற்கு ஆதாரம் வேண்டுமென்றால் அந்தச் சட்டத்தை எதிர்த்து, 69 சதகிவிதத்தை எதிர்த்து ஒரு வழக்கு நடைபெற்றபோது, 17-11-1994-ல் உச்சநீதிமன்றத்தில், உச்சநீதிமன்றம் அளித்த அதனுடைய ஆணையிலே என்ன குறிப்பிடப்படுகிறது என்றால், "It is significant to notice that after the order, dated 18th August, 1994 was passed, the State itself moved for modification of that order in the circumstances stated in its application. That application was filed on 23rd September 1994. In that application, no plea was raised based upon the inclusion of the said Act in the Ninth Schedule and orders were obtained on 3rd October 1994" 69 சதவீத இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான குறிப்பையும் உச்சநீதிமன்றத்திலே அன்றைக்கு வாதாடிய வழக்கறிஞர்கள் எடுத்துக்காட்டவில்லை என்று அந்தக் குறிப்பை உச்சநீதிமன்றமே தெரிவித்திருக்கின்றது. அது போகட்டும், இருந்தாலும் நாம் அந்த முயற்சியைக் கைவிடாமல்,

இங்கே திரு. தீரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நம்முடைய இரத்தத்தோடு ஊறிய விவகாரம் இது என்ற காரணத்தினால், இட ஒதுக்கீடு பிரச்சினையிலே நாம் என்றைக்கும் திடமாக இருப்போம், உறுதியாக இருப்போம் என்ற அளவில் சட்ட ரீதியாக நீதிமன்றத்திலே வாதாடிக்கொண்டு வருகின்றோம். 28-4-1997 ஆகிய இன்று Constitution Bench முன்பு விசாரணைக்கு வந்திருக்கின்றது. ஆனால் நாள் ஒத்திப்போடப்பட்டிருக்கின்றது. மூத்த வழக்கறிஞர், மத்திய அரசினுடைய வக்கீல் திரு. அசோக் தேசாய் அவர்களையும், (Attorney-General) தமிழ்நாடு அரசு சார்பிலே திரு. கபில்சிபல் அவர்களையும் வைத்து நாம் வாதாடிக் கொண்டிருக்கின்றோம். இதை சுலபத்திலே விட்டுவிட முடியாது என்கிற அளவிலே, வழக்குகள் எல்லாம் நடைபெற்று இன்றைக்கு, ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்து வாதாடுவோம், நிச்சயமாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தக்கூடிய வாய்ப்பு அங்கே இப்போது இருக்கிறதா என்று பார்த்தால், 13 கட்சிகளைச் சேர்ந்த ஐக்கிய முன்னணி, வேறு சில கட்சிகள் அங்கே இருக்கின்றன. எல்லாக் கட்சிகளும் நாம் சொல்கின்ற இந்த 69 சதவீதத்தை ஐக்கிய முன்னணியிலே இல்லாத கட்சிகள் எல்லாம் ஏற்று, நியாயமாக முறைப்படி பெறவேண்டிய பெரும்பான்மையைப் பெற்றால்தான், திருத்தத்தைச் செய்ய இயலும் என்பதை மாண்புமிகு உ.றுப்பினர்கள், நீங்கள் அனைவரும் மிக நன்றாக அறிவீர்கள், திரு. தீரன் அவர்களும் அறிவார்கள். இருந்தாலும்கூட, இந்த இடஒதுக்கீட்டை விட்டு விடக்கூடாது என்பதிலே நாம் கண்ணும்கருத்துமாக இருப்போம், திடமாக இருப்போம், நிச்சயமாக இந்த இடஒதுக்கீட்டை நாம் பெற்றே தீருவோம் என்ற உறுதியை இந்த மாமன்றத்திலே நான் அறிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்திலே, இன்று நம்முடைய சட்டமன்றத்திலே மானியங்கள் மீதான விவாதத்தினுடைய இறுதிநாள், தொடர்ந்து சட்டமுன்வடிவுகள் பற்றியெல்லாம் பேசி, நாம் நிறைவேற்ற விருக்கின்றோம். அதற்கிடையில் ஒருசில செய்திகளை உங்களுடைய நினைவிற்கு நான் வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், மக்கள் மறதிக்குணம் படைத்தவர்கள். ஆகவே,

எல்லாவற்றையும் மறந்து விடுவார்கள் என்கிற ஒரு மனப் பான்மையோடு இன்றைக்கு எல்லாவற்றையும் மறைத்துவிடப் பார்க்கின்ற மாயாஜால வித்தைகள் நடைபெற்று வருகின்றன. அந்த மாயாஜால வித்தைக்கு இடம் தரமாட்டார்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன். பல வழக்குகள் கடந்த ஆட்சியினர்மீது இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. சில அலுவலாளர்கள் மீதும் போடப்பட்டிருக்கின்றன. திரு. ஞானசேகரன் கூட இங்கே கேட்டார், தீயணைப்புத் துறையிலே ஒருவர் மீது மாத்திரம் வழக்கு போட்டிருக்கிறார்கள். இன்னொருவர் மீது என்னவாயிற்று என்று, ஒரு வழக்கு அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டவர் இன்றைக்குக் கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெறுகிறது. அவர் குறிப்பிடுகின்ற வழக்கு, வேறு ஒரு வழக்கு. அந்த வழக்கு பற்றிய புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே, அந்த விசாரணையிலே தகவல்கள் கிடைத்தால், ஆதாரம் இருந்தால், நிச்சயமாக யாரும் விடப்படமாட்டார்கள் என்ற உறுதியை நான் திரு. ஞானசேகரன் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்; சந்தேகப்படுகின்ற யாராக இருந்தாலும் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பெரிய பெரிய ஊழல்களைப் பற்றியெல்லாம் பேசியிருக்கிறோம். 'டான்சி' ஊழல், 'நிலக்கரி' ஊழல், 'ஸ்பிக்' ஊழல் என்று பெரிய பெரிய ஊழல்களைப் பற்றித்தான் பேசியிருக்கிறோம். சில சிறிய ஊழல்களும் உண்டு. 'Minor' ஊழல்களும் உண்டு. அதாவது கொசுறு ஊழல்கள். (சிரிப்பு) அந்த ஊழல்களைப் பற்றி நானல்ல. நம்முடைய இந்தியத் தலைமைக் கணக்காய்வு அலுவலர் கொடுத்த தணிக்கை அறிக்கையிலேயே இந்த ஊழல்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டுகளில் நாங்கள் இல்லாத நேரத்தில், இன்றைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், அன்றைக்கு காங்கிரஸ் கட்சிக்காரர்களாக இருந்த அந்த காலகட்டத்தில், நீங்களெல்லாம் பேசியிருக்கிறீர்கள். அப்பொழுதே 'ஸ்பிக்'-ல் 12 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டு, ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று அரசின் மீது குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. இதுபற்றி இந்தியத் தலைமைக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்களெல்லாம்

கூட இதைப்பற்றிக் கேட்டு, வாய் திறக்க முடியாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றதை பத்திரிகைகளில் படித்துப் பார்த்திருக்கிறேன். இன்றைக்கு அதே தணிக்கை அறிக்கையில் கடந்த கால ஆட்சியைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு அறிவிப்பு வந்திருக்கிறது. கடந்த ஆட்சியில் ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது அதாவது, 40 வயதுக்குள்ளான பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 12 ஆயிரத்துக்குக் குறைவாக இருந்து, ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மாத்திரம் பெற்று, ஆண் குழந்தை இல்லாமல் குடும்பக்கட்டுப் பாட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தால், அந்தப் பெண் குழந்தைக்கு 5 ஆயிரம் ரூபாயும், ஒரு தங்க மோதிரமும் வழங்கப்படும் என்பது அந்தத் திட்டம். இதைப்பற்றி இந்தியத் தலைமை தணிக்கை அலுவலர் அறிக்கை என்ன சொல்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மோதிரம் வாங்குவதில் பெரிய ஊழல் நடைபெற்றுள்ளது. 'ஒரு குழந்தைக்கு 2 கிராம் எடையில் 800 ரூபாய் மதிப்புள்ள தங்க மோதிரம் வழங்கப்பட வேண்டும்' என்பது அறிவிப்பு. ஆனால் வாங்கப்பட்ட மோதிரங்களின் எடை 1.4 முதல் 1.62 கிராம் வரையிலான எடைதான். இதை நான் சொல்லவில்லை. இந்தியத் தலைமை தணிக்கை அலுவலரின் அறிக்கை சொல்கிறது. மோதிரம் வாங்குவதிலே ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றவேயில்லை. அதில் ஆங்கிலத்தில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்றால், "The gold rings were purchased with a lesser weight varying from 1.4 to 1.62 grams. For the purchase of gold rings, no tender procedure was adopted and the rings were purchased from some private jewellers without calling for any tender or quotations" என்று இந்தியத் தலைமை தணிக்கைத்துறை அதிகாரி குறிப்பிடுகிறார். அவர் மேலும் குறிப்பிடுகிறார், என்னவென்றால், 'வாங்கப்பட்ட மோதிரங்களின் தரம் பற்றி பரிசீலிக்கவேயில்லை, செய்கூலி ஒவ்வொரு வியாபாரிக்கும் ஒவ்வொரு விதம். சிலரிடம் தங்கத்தின் விலையில் 2% சிலரிடம் தங்கத்தின் விலையில் 11% என்று இப்படி மோசடிகள் நடைபெற்றுள்ளன' என்று குறிப்பிடுகிறார். இந்த மோதிரங்களை யாரிடத்திலே பெறவேண்டுமென்றால், DSWO - "District Social Welfare Officers were to collect the gold rings

either from the Directorate or from the Officer of the Minister for Social Welfare after paying the cost." பணத்தைக் கொடுத்துவிட்டு, அமைச்சரிடத்தில் இதைப் பெறவேண்டும். இதிலே ரூ. 85.2 இலட்சம் செலவாகியிருப்பதாக ஒரு கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. மோதிரங்களில் எவ்வளவு ஊழல் நடைபெற்றுள்ளது என்பது பற்றி நான் சொல்லிவிட்டேன். இந்த ஆட்சி வந்த பிறகு, வழங்கப்பட்டது போக, மீதமுள்ள 659 மோதிரங்கள் அப்படியே உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திரைப்பட நகர் ஜெ. ஜெ. சினி சிட்டி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். இதன் பெயரை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகுதான், பொருத்தமான பெயராக, 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' என்று மாற்றியிருக்கிறோம். இதைப் பொறுத்தமட்டில், இதிலே விரிவாக எழுதியிருப்பதைப்பற்றிச் சொல்லி நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அதனுடைய தொடக்க விழாவுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்புத் தொகை 75 ஆயிரம் ரூபாய். ஜெ.ஜெ. சினி சிட்டி தொடக்க விழாவுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட தொகை 75 ஆயிரம் ரூபாய். ஆனால் செலவழித்தது 43.14 இலட்சம் ரூபாய். 75 ஆயிரம் ரூபாய் எங்கே, 43.14 இலட்சம் ரூபாய் எங்கே என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதிலேயும்கூட ஆங்கிலத்தில் இப்படி எழுதியிருக்கிறது; "The Company incurred an expenditure of Rs. 43.14 lakhs by way of printing of invitation cards, souvenir, decoration, silver mementoes, cultural programmes, etc., towards inauguration of the project as against the ceiling of Rs. 75,000/- fixed in September 1991 by the State Government for such function." எல்லோரும் வியப்பிலே அப்படியே குமுறலோடு உட்கார்ந்திருக்கிறீர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. 75 ஆயிரம் ரூபாய் என்பது 44 லட்ச ரூபாய்க்கு எப்படி நீண்டது என்பது எனக்கே புரியவில்லை.

ஸ்டுடியோ கருவிகள் வாங்கியிருக்கிறார்கள். இன்றைய எம்.ஜி.ஆர். ஸ்டுடியோ, அன்றைய ஜெ.ஜெ. ஸ்டுடியோ, அதற்கு ஸ்டுடியோ கருவிகள், ஒலிப் பதிவு மற்றும் ஸ்டுடியோ கருவிகள்

- வாங்க மும்பை, டெக்னோ குளோப் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. அதற்கென்று டெண்டர் எல்லாம் கிடையாது. நேரிடையாக மும்பை டெக்னோ குளோப் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி விவரங்களின்படி, உண்மையான தயாரிப்பாளரிடமோ, அல்லது தயாரிப்பாளர்களின் ஏஜெண்டுகளிடமிருந்தோதான் அந்தப் பொருள்களை வாங்கியிருக்க வேண்டும். அப்படியெல்லாம் வாங்கவில்லை. அந்தக் கம்பெனி இறக்குமதி செய்த விலை 2.16 கோடி ரூபாய். ஒப்பந்தப்புள்ளி மூலம் கொடுக்காமல், தனியார் ஒருவருக்குக் கொடுத்தார்களே அவர்கள் இறக்குமதி செய்த விலை கஸ்டம்ஸ் டியூட்டி உட்பட 2.16 கோடி ரூபாய். திரைப்பட நகருக்கு விற்ற விலை 3.36 கோடி ரூபாய். தணிக்கையில் எழுதியிருக்கிறார்கள். "The order was placed on Techno-Globe who were neither the manufacturers nor the direct authorised agent of any manufacturer. Interestingly, it was observed that as per the bill of entry. the cost of imported equipment inclusive of customs duty received by Techno-Globe was Rs. 2.1 Crore. But Techno-Globe billed the Company for the same equipment for Rs. 3.36 Crores." - ஒரு கோடியே 20 இலட்ச ரூபாய் எங்கே போனது, தெரியாது. கடவுளின் குழந்தைக்குத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி).

மக்கள் நல்வாழ்வுத் துறையிலே, மக்களுடைய உயிரைக் காக்கும் மருந்து ஒன்று, 'ப்லாலிடாக்சைம் ஐயோடைட்' என்ற ஊசி - 20 எம்.எல். கொண்ட ஆம்ப்யூல் - வாங்கியதைப் பற்றி அவர்கள் எழுதுகிறார்கள். தணிக்கைக் குழு எழுதுகிறது. அவர்களாகவே ஒரு பெயரை வைத்திருக்கிறார்கள். எக்ஸ், ஓய், இசட் என்று. எக்ஸ் - 104 ரூபாய், ஓய் - 154 ரூபாய், இசட் - 260 ரூபாய். குறைந்த விலை கோரிய எக்ஸ் நிறுவனம் 1990 டிசம்பர் மாதத்திற்குப் பிறகு தயாரிப்பு உரிமை இல்லை என்ற காரணத்தைக் காட்டி நிராகரிக்கப்பட்டது. என்ன வேடிக்கை யென்றால், ஒப்பந்தம் மூலம் அரசு வாங்கிய ஆம்ப்யூல் விலை ஒன்று 260 ரூபாய். அவர்கள் வாங்கியது. ஒரு ஆம்ப்யூலின் விலை 260 ரூபாய். இதே ஒப்பந்த காலத்திலேயே, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவனையில் ஏப்ரல் 1992-ல் ரூ. 85.80-க்கும், ஆகஸ்ட் 1992-ல் ரூ. 88.50-க்கும், அக்டோபர் 1992-ல்

ரூ. 114.15-க்கும் வெளி மார்க்கெட்டிலிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. ரூ. 80-க்கும், ரூ. 90-க்கும் ரூ. 114-க்கும் வாங்கும் மருந்தை, ஒரு ஆம்ப்யூல் ரூ. 260 என்று இவர்கள் வாங்கியிருக்கிறார்கள். இதையும் அந்த அறிக்கையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து இலவச காலணி வழங்கும் திட்டம். இந்தத் திட்டத்தை மறைந்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அருமைத் துணைவியார் சில காலம் முதலமைச்சராக பொறுப்பை ஏற்றபோது அறிவித்தார்கள், அல்லது அறிமுகப்படுத்தினார்கள். அறிமுகப்படுத்தப்பட்டபோது யார் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்கள் என்றும் சொல்லப்பட்டது. (1) தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகம் (தமிழ்நாடு லெதர் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்) (2) சமூக நல இயக்ககம் (டைரக்டரேட் ஆஃப் சோஷியல் வெல்பேர்), (3) கதர் வாரியம், இந்த மூன்று நிறுவனங்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டும். அதுமாதிரி முதலில் வாங்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன் எல்லாவற்றையும் மூடிவிட்டு, கதர் வாரியத்திலிருந்து வாங்க வேண்டுமென்று சொல்லி, கதர் வாரியத்தில் பெயரளவுக்கு பதிவு செய்து கொண்ட பல கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நேரிடையாகக் காலணிகளை வாங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. இதில் என்ன வேடிக்கை என்றால், இந்தச் சங்கங்கள் கொடுத்த முகவரிகளுக்குச் சென்று பார்த்தால், அதிகாரிகள் சென்று விசாரணை நடத்தியபோது, இப்படிப்பட்ட சங்கங்களே இல்லை. முகவரி இல்லாத சங்கங்கள். முகவரி இல்லாத பேர் இன்றைக்கு நாட்டிலே இருப்பதைப் போல (மேசையைத் தட்டும் ஒலி) முகவரி இல்லாத கூட்டுறவுச் சங்கங்களுக்கு, முகவரி இல்லையென்றால் விட்டுவிட்டார்களா, என்றால் இல்லை. முகவரி இல்லையா? அப்பொழுது பிடி, உனக்கே 7, 8 தருகிறோம். இவ்வாறு அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி 1992-93-ல் ஒரு உத்தரவு போட்டு காலணிகளை முழுமையாக விநியோகம் செய்யவில்லை. இப்படி முழுமையாக விநியோகம் செய்யாத நிலையில் முன்னாள் சமூக நலத்துறை அமைச்சர் கோப்பிலே எழுதும்போது 'சென்ற ஆண்டு வாங்கியதைப் போலவே இந்த ஆண்டும் கதர் வாரியத்திலிருந்து 10 இலட்சம் ஜோடி காலணிகள் வழங்க உத்தரவிடலாம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களே

10 இலட்சம் ஜோடி என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அடுத்து கோப்பு நிதியமைச்சரிடம் வருகிறது. நடமாடும் பல்கலைக்கழகம் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடத்திலே இது வருகிறது. அவர் என்ன எழுதுகிறார் இதிலே என்றால் - இந்த அம்மாள் ஏற்கெனவே ஊழல் நடந்திருக்கிறது, 10 இலட்சம் ஜோடி போதும் என்று எழுதியிருக்கிறார்கள். 10 இலட்சம் ஜோடி காலணிகள் வழங்க உத்தரவிடலாம் என்று எழுதினார்கள். இவர் எழுதுகின்றார்; 10 இலட்சம் ஜோடி போதாது; 19½ இலட்சம் ஜோடியாக உயர்த்தி, நிதியமைச்சரே கைப்பட எழுதி கையெழுத்துப் போட்டிருக்கிறார். இதுவும், இந்த ஊழல் வழக்குகளில் வருகின்ற ஒன்று. இதெல்லாம் கொசுறு வழக்குகள் என்பதற்காக, முன்பெல்லாம் இதைப்பற்றிச் சொல்லவில்லை. இவையெல்லாம் கொசுறு வழக்குகளிலே வரப்போகின்றவைகள்.

இன்னொன்றும் தெரியும் உங்களுக்கு உல்லாசப் பேருந்து எப்படிப்பட்டது என்று. அந்த உல்லாசப் பேருந்து, நடமாடும் சொர்க்கம். அந்த நடமாடும் சொர்க்கத்தை திடீரென்றுதான் நம்மால் கண்டுபிடிக்க முடிந்தது. சொர்க்கத்தை அவ்வளவு சுலபத்தில் கண்டுபிடிக்க முடியுமா? எனவே, அந்த சொர்க்கத்தை இப்பொழுதுதான் ஒரு மாதத்திற்கு முன்பு கண்டுபிடித்திருக்கிறோம். பெரிய பேருந்து, அதற்குள்ளே எல்லா வசதிகளும்; இரண்டு கட்டில், படுக்கை, மெத்தை, பாத்ரூம், கிச்சன், டி.வி. வீடியோ இவ்வளவும் அங்கே இருக்கின்றன. அது மாத்திரம் அல்ல, உள்ளேயிருந்து வெளியே பார்க்கலாம் வெளியே இருக்கிற யாரும் உள்ளே பார்க்க முடியாது. அது மாதிரியான வசதி வாய்ப்புக்களோடு நடமாடும் சொர்க்கலோகப் பேருந்து ஒன்று. அது, ரூ. 50 இலட்சமோ, ரூ. 60 இலட்சமோ, அதுவும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் விரைவில் நீதிமன்றத்திற்கு வர இருக்கின்றன. அதற்கான தனி நீதிமன்றங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவை வெண்திரையில் காண்க என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை அனைவரும் வரவேற்று, ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன், வணக்கம்.

துணை மதிப்பீடுகள்

உரை : 57 **நாள்: 17.10.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகள் குறித்து நடைபெற்றுள்ள இந்த விவாதத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், மாண்புமிகு லத்தீப் அவர்களும், மாண்புமிகு பழனிசாமி அவர்களும், மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், மாண்புமிகு வேலாயுதன் அவர்களும், மாண்புமிகு வல்லரசு அவர்களும், மாண்புமிகு தாமரைக்கனி அவர்களும், மாண்புமிகு ஐ. கணேசன் அவர்களும், மாண்புமிகு டி. மணி அவர்களும், மாண்புமிகு சி.டி. தண்டபாணி அவர்களும், மாண்புமிகு ஞானசேகரன் அவர்களும், தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைத்து, கோரிக்கைகள் சிலவற்றையும் முன் நிறுத்தி, இந்த விவாதத்திலே சுவையும், இடையிடையே சூடும் உருவாக்கி இருக்கின்றார்கள்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலை பற்றிக் குறிப்பிட்டார்கள். நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் நானும் விரைவிலேயே ஒவ்வொன்றாக தொட்டுக்காட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதுதான் முறையாக இருக்கும் என்று நான் சொல்கிறேன். ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற் சாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்பதை இந்த அரசு எவ்வளவு அக்கறை காட்டியது என்பதிலே இந்த மாமன்றத்திலே உள்ள பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்கள் மிக நன்றாக அறிவார்கள். 1989-90ஆம் ஆண்டில் ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் திறக்கப்படுவதற்காக இந்த கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களில் ஒருவரான நண்பர் கோபு அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டபோது அவருடைய கொள்கையை ஏற்று, நிதிஉதவி கூட அந்தத்

தொழிற்சாலைக்காக அன்றைக்குச் செய்யப் பட்டதும், அந்தத் தொழிற்சாலை திறக்கப்பட வேண்டுமென்ப திலே இந்த அரசு அக்கறையுடையதாக இருந்தது என்பதும் எடுத்துக்காட்டக்கூடிய மிக முக்கியமான சான்றாகும். அதற்குப் பிறகு, பல நேரங்களில் என்னைத் தொழிற்சங்கத் தலைவர்கள் பலரும் சந்தித்து, குறிப்பாக நண்பர் பாண்டியன் போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் சந்தித்து இந்தத் தொழிற்சாலையை ஏற்று நடத்த தொழிலதிபர்கள் முன்வந்தால் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டபோது, நான் உறுதியாக அதை ஏற்றுக் கொள்வேன் என்று குறிப்பிட்டேன். ஆனால், பிறகு யாரும் வரவில்லை. அவரும் அழைத்துவந்ததாகத் தகவல் இல்லை. ஆனால், இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெரிய தொழிலதிபர்களை அழைத்து நடத்தச் சொன்னால் நடத்துவார்கள் என்று குறிப்பிட்டார்கள். சொன்னால் நானே அழைத்து வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அவருடைய உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு, அப்படி ஒரு பெரிய தொழிலதிபரை, ஸ்டாண்டர்டு தொழிற்சாலையை நடத்து வதற்கு அழைத்து வருவாரேயானால் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல், இடையிலே வில்லங்கங்கள் ஏதாவது இருந்தால் அவைகளை அகற்றுவதற்குக்கூட இந்த அரசு முயற்சி மேற் கொண்டு அந்தத் தொழிற்சாலையை தொடர்ந்து நடத்துவதற்கு முன்வரும் என்ற உறுதியை இந்த மாமன்றத்திலே நான் தெரி வித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவர்கள் இன்னொன்றும் சொன்னார்கள் 35 பேர் குற்றமற்ற இளைஞர்கள் மீது- அவர்கள் இன்றைக்குக் கூட, ஜாமீனில் வந்திருந்தாலும் கூட, அவர்கள் மீது வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் உடனடியாக அதற்கான பதிலை அளிக்க முடியாவிட்டாலும் பாதகமான நிலை எதையும் எடுக்கமாட்டேன். இந்த அரசு எடுக் காது என்ற உறுதியை அவருக்குத் தெரிவித்து அந்த வழக்கு பற்றிய பரிசீலனை நிச்சயமாக நடைபெற்று நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை அவருக்கு மாத்திரமல்ல. அப்பாவி மக்கள் சில பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று லத்தீப்

அவர்கள் குறிப்பிட்டார்கள். வல்லரசு அவர்கள் எப்போதும் 100, 200 என்று சொல்லமாட்டார்கள். பல்லாயிரம், பல லட்சம் என்றுதான் சொல்வார்; பல்லாயிரக்கணக்கான வழக்குகள் இருப்பதாகச் சொன்னார். அப்படி பல்லாயிரக்கணக்கான வழக் குகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பல வழக்குகள் என்று சொல்லியிருப்பாரேயானால், அதிலே உண்மை இருக்கக் கூடும். எனவே, அப்படிப்பட்ட வழக்குகள் அது வல்லரசு சொல்வதாக இருந்தாலும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொல்வதாக இருந்தாலும் அவற்றையெல்லாம் தீர விசாரித்து அதிலே அப்பாவி மக்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பார்களே யானால் நிச்சயமாக அவர்கள் வழக்கிலேயிருந்து விடுபடு வதற்கு ஏற்ற முடிவுகளை இந்த அரசு எடுக்கும் என்பதை நான் மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது பத்திரிகை களிலே பரபரப்பாக படங்களோடு வெளியிடப்பட்டிருக்கின்ற குறுவை நெல் கொள்முதல் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இது அத்தியாவசியமான ஒன்று என்பதால் நான் அதுபற்றி பேச நேரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் முதலிலேயே குறிப்பிட வேண்டுமென்று கருதுகிறேன். கொள்முதல் என்பது இரண்டு நிலை. ஒன்று, கட்டாயக் கொள்முதல்; மற்றொன்று இருநிலை களில் கொள்முதல் செய்வது. வியாபாரிகள் ஒருபுறத்திலே கொள்முதல் செய்வது; அரசாங்கம் இன்னொருபுறத்திலே கொள்முதல் செய்வது என்று இருநிலை. கட்டாயக் கொள்முதல் என்னும்போது, அரசுக்கே நெல் கிடைக்காத ஒரு சூழ்நிலையில் நியாய விலைக் கடைகளில் வழங்கக்கூடிய அரிசிக்குத் தேவை யான நெல் இல்லாத சூழ்நிலையில் சில பகுதிகளில் கட்டாயக் கொள்முதல் செய்வது அவசியமாகி, அப்படி கட்டாயக் கொள்முதல் செய்கிற நேரத்திலே, விவசாயிகள் கேட்கின்ற, அவர்கள் வைக்கின்ற கோரிக்கை அனைத்தையும் ஏற்று, நல்ல விலை கொடுத்து, அந்த நெல்லை வாங்குவது. அப்படி வாங்கி யிருக்கிறது இந்த அரசு. இது உங்களுக்கு எல்லாம் தெரியும். இன்றைக்கு உள்ள சூழ்நிலை என்னவென்றால் அமோகமான விளைச்சல் குறுவையிலே ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அந்த

நெல்லை வாங்குங்கள் என்கிறார்கள். வியாபாரிகள் வாங்க முன்வரவில்லை. அவர்கள் வாங்காவிட்டாலும் நீங்கள் வாங்க வேண்டும் என்கிறார்கள். வாங்கச் சென்றாலும் அதிக விலை கொடுத்து வாங்குங்கள் என்கிறார்கள். அப்படி வாங்கும்போது தரக்கட்டுப்பாட்டிலே இவ்வளவு சதவீதம்தான் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். இவ்வளவையும் ஏற்றுக் கொண்டு மத்திய அரசு ஏற்கெனவே ஏற்றியிருக்கிற விலை யுடன் 35 ரூபாய் மாநில அரசு சார்பாக தந்து, தரக்கட்டுப் பாட்டிலே விவசாயிகள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, கிட்டத்தட்ட 350க்கு மேற்பட்ட கொள்முதல் நிலையங்களை அந்தப் பகுதியிலே திறந்து இன்றுவரையிலே ஏறத்தாழ 5 இலட்சம் டன், நெல்லை இந்த அரசு கொள்முதல் செய்து இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், நெல்லைக் கொள்முதல் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு அந்த விவசாயிகளுடைய கோரிக்கைகள் வருகிற நேரத்திலே, அதைப் பெரிதாக வெளியிடுகிற பத்திரிகைகள், கொள்முதல் செய்த நெல்லை வைப்பதற்கே ஏன் இடமில்லை என்று கேட்பது என்பது வேடிக்கையான விமர்சன மாகும்.

இன்று அல்ல; நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் பல நேரங்களில் பார்த்திருக்கலாம். தஞ்சை போன்ற மாவட்டங் களிலே, திருச்சி போன்ற மாவட்டங்களிலே கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை சாலைகளில் பெரிய பெரிய துணிகள் போட்டு மூடி வைக்கப்பட்ட காட்சிகளையெல்லாம் பல நேரங் களிலே பார்த்திருக்கலாம். இருந்தாலும்கூட, நான் உணவுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும், மற்றுமுள்ள அதிகாரி களிடத்திலும் குறிப்பிட்டுச் சொல்லி, இப்படிக் கொள்முதல் செய்யப்படுகின்ற தானியங்களை உடனடியாக வைப்பதற்கு, தேவைப்பட்டால் ஆலயங்களைக்கூட பயன்படுத்திக்கொள்ள லாம்; பல சிறைச்சாலைகளிலே இன்றைக்கு மிகுந்த இடங்கள் இருக்கின்றன. அவற்றைக்கூட பயன்படுத்திக் கொள்ளலாம். இன்னும் பல இடங்களில் பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. அவற்றையும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொன்னாலும்,

இருக்கிற பிரச்சினை என்னவென்றால் எடுத்துச் செல்வதற்கான வண்டி வாகனங்கள் உடனடியாகக் கிடைக்கவில்லை. சில வண்டிகளை நிறுத்தி, வாகனங்களை நிறுத்தி, நெல்லை எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னால் அதற்கும் கோபித்துக் கொள்கிறார்கள்; எங்களுக்கு வேறு வேலை இருக்கிறது; எடுத்துச் செல்ல முடியாது என்று சொல்கிறார்கள். அவர்களை யெல்லாம் சமாதானப்படுத்தி அவர்களுக்குத் தரவேண்டிய கூலியைத் தந்து அதன்பிறகு எடுத்துச்செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும் ஏறத்தாழ 5 இலட்சம் டன்- இன்றைக்குக் கொள் முதல் இருநிலைகளிலே- கொள்முதல் வியாபாரிகளும் வாங்கிக்கொள்ளலாம். அரசும் வாங்கிக் கொள்ளலாம் என்ற இரு நிலையில் கொள்முதல் செய்யப்பட்டு, குறுவை நெல் விளைச்சலில் விவசாயிகளுக்கு எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று இருக்கின்றன. பத்திரிகைகளிலே ஏதோ இரண்டு மூன்று படங்களை எடுத்துப் போட்டுவிட்டு நெல் எல்லாம் முளைத்துவிட்டது என்றெல்லாம் சொல்கிறார்கள். நான் சொல்கிறேன்; முளைத்தாலும்கூட, அது உண்மையாக இருந்தாலும்கூட, வேறு என்ன செய்யமுடியும் என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்கவேண்டும். நெல்லை வாங்குவது என்பது ஒன்றும் கட்டாயம் இல்லை அரசுக்கு. ஏன் வாங்குகிறோம் என்றால் விவசாயிகளுடைய வேதனையைப் போக்குவதற்காக, அவர்களுக்கு அந்தக் கொள்முதலுக்கு உரிய விலை கிடைக்கவேண்டுமென்பதற்காக அரசாங்கம் நெல்லை வாங்குகிறது. அப்படி வாங்குகிற நேரத்திலேகூட அதை நீங்கள் சரியாக வைக்கவில்லை என்று சொன்னால், அதற்கு விவசாயிகள் வருத்தப்படத் தேவை யில்லை. வாங்கி புசிப்பவர்கள்தான் வருத்தப்படவேண்டும். ஆனால், விவசாயிகளுக்காக இன்றைக்கு வேதனை கண்ணீர் வடித்துக் கொண்டு, வாங்கிய நெல்லை ஒழுங்காக வைக்க வில்லை என்று பேசுகின்ற பேச்சும், எழுதுகின்ற எழுத்துக்களும் அவசரப்பட்டு அது ஏதோ ஆர்வக் கோளாறின் காரணமாக செய்யப்படுகின்ற பிரச்சாரமே தவிர வேறல்ல.

அதற்காக இந்த அரசு வாளா இருந்துவிடவில்லை. மங்கநல்லூரிலே இப்படிப்பட்ட தானியங்கள் குவிக்கப்பட்டு இன்னும் எடுக்கப்படாமல் இருக்கிறது என்ற செய்தி கிடைத்த வுடன், நான் உடனடியாக உணவு அமைச்சர் நேருவுக்கு திருச்சிக்குத் தகவல் சொல்லி- இந்தச் செய்தி அந்த ஊர் பத்திரிகைகளிலே வராதகாரணத்தால், தகவல் சொல்லி, உடனடியாக அவர் மங்கநல்லூருக்குச் சென்று, அங்கே குவிக்கப்பட்ட நெல்லையெல்லாம் வேறு இடத்திற்கு மாற்றி இருக்கின்றார். முதல் நாள் சென்னையிலே பத்திரிகையிலே செய்தி வந்தது. மங்கநல்லூர்காரர் கடிதம் எழுதியிருந்தார். இப்படி நெல் குவிக்கப்பட்டு இருக்கிறது; முளைத்துக் கொண்டிருக்கிறது என்றெல்லாம் எழுதியிருந்தார். மறுநாள் அந்த நண்பர் அதே பத்திரிகைக்குக் கடிதம் எழுதி, ''நான் எழுதி பத்திரிகையிலே செய்தி வெளியிட்டவுடன், மறுநாளே நெல்லை எடுத்து விட்டார்கள். இதைப் பாராட்டுகிறேன்; நன்றி'' என்று கடிதம் எழுதினார். அதே பத்திரிகைக்கு. அதை அந்தப் பத்திரிகையில் பிரசுரிக்கவில்லை. அந்தக் கடித நகல் என்னிடத்திலேதான் இருக்கிறது. எனவே, உடனடியாக எந்தக் கோரிக்கை வைக்கப்பட்டாலும், எந்தக் குறைபாடு சுட்டிக் காட்டப்பட்டாலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதற்கு இதைவிட வேறு சான்றுகளை நான் உங்களுக்கு எடுத்துக்காட்டத் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

துணை மானியக் கோரிக்கை 953 கோடி ரூபாய்க்கு உங்களுடைய ஒப்புதலைக் கேட்டு இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டு இருக்கிறது. 953 கோடி ரூபாய் துணை மானியக் கோரிக்கை என்பது பெரும் தொகையாகத் தெரியக்கூடும். ஆனால் இந்த 953 கோடி ரூபாயில் மின்சார வாரியத்திலே இருந்து அரசுக்குச் சேர வேண்டிய கடன் 448,28 கோடி ரூபாய் ஆகும். அந்த 448 கோடி ரூபாயை மாநில அரசினுடைய மூலதனமாக வைத்துக் கொள்வது என்று அரசு ஆணை பிறப்பித்துவிட்ட காரணத்தாலேதான், அந்த 953-ல் இந்த 448ம் அடங்கி இருக்கிறது. இதைக் கழித்துவிட்டால் 505 கோடி

ரூபாய்க்குத்தான் இந்தத் துணை மானிய மதிப்பீடு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள முடியும்.

ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்குக் கோரப்படுகின்ற இந்தத் துணை மானியக் கோரிக்கையில், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 58 கோடியே 75 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது- 25 லட்ச ரூபாய் போதுமானதல்ல என்று நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே வாதிட்டார்; வெட்டுப் பிரேரணையில்கூட அவர் குறிப்பிட்டு இருக்கின்றார்; அவர் மிக மிக முக்கியமாக கருதுகிற காரணத்தால்தான் வெட்டுப் பிரேரணையிலே குறிப்பிட்டு அதைப்பற்றி இங்கு விரிவாகப் பேசி இருக்கின்றார். ஒன்றை மறந்துவிடக்கூடாது. அது சட்டமன்ற தொகுதிக்கு 25 லட்ச ரூபாய் என்றால், ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு கணக்குப் பார்த்தால் 1½ கோடி ரூபாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு மத்திய அரசு தருகிற தொகை ஒரு கோடி ரூபாய்; நாம் தருகிற தொகை 1½ கோடி ரூபாய் என்பதை ஞாபகத்திலே வைத்துக் கொண்டால், ஞானசேகரன் மேலும் பணம் வேண்டும் என்று கேட்கமாட்டார் என்று கருதுகிறேன். (சிரிப்பு) ஒருவேளை மத்திய அரசு இன்னும் அதிக நிதி ஒதுக்குமேயானால், அப்பொழுது மாநில அரசும் அதைப்பற்றிச் சிந்திக்கும் என்று அந்த உறுதியை மாத்திரம் இந்த மாமன்றத்திலே நான் வைக்க விரும்புகின்றேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பற்றிப் பேசும் பொழுது நம்முடைய பழனிச்சாமி ஒன்றைச் சொன்னார். இந்தத் திட்டத்திற்காக இன்றைக்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறுகின்ற நிலையில் படிப்படியாகத்தான் செலவாக முடியும். அவர் சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்தை அதிகாரிகள் ஒதுக்குவது இல்லை என்று குறைபட்டுக் கொண்டார்; அவர் களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலை வர்களுடைய கூட்டம் அண்மையில் சென்னையில் நடைபெற்ற பொழுது, அந்தக் கூட்டத்தினுடைய முடிவுகள் என்னென்ன

என்று பத்திரிகைகளிலே விவரமாக வெளியிடப்பட்டு இருக்கிறது. அதிலே ஒன்று, இனிமேல் சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பி கேட்கின்ற அந்தப் பகுதியிலேதான் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை நடத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்படுகிறது என்பதை அப்பொழுதே வெளியிட்டு இருக்கிறோம். இருந்தாலும் மறந்து இருப்பார். மறந்துவிட்ட பழனிசாமி அவர்கள் அதை இங்கு ஞாபகப்படுத்தி இருக்கிறார் என்று நான் கருதுகிறேன்.

நமக்கு நாமே திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. இதைக்கூட இந்த அவையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் சில பேர் மத்திய அரசு ஒதுக்குகின்ற பணத்தை எல்லாம் இப்படி நாம் இந்தத் திட்டங்களுக்காக செலவழிக்கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டது என்னுடைய கவனத்திற்கு வந்தது. இந்த 5 கோடி ரூபாய் மாத்திரமல்ல. அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 கோடி மாத்திரமல்ல, மத்திய அரசின் சார்பாக தொகை ஒதுக்கப்படவில்லை என்று நான் கூற மாட்டேன்: அந்தத் தொகையையும் சேர்த்துத்தான் நாம் மக்களுக்காக செலவிடுகின்றோம். இதிலே மத்திய அரசு பணம், மாநில அரசு பணம் என்றெல்லாம் பிரித்துப்பார்த்துப் பேசவேண்டிய அவசியம் இல்லை. ஒரு கணக்குக்காக, விவரத்திற்காக வேண்டுமானால் இதிலே மாநில அரசு பணம் இவ்வளவு, மத்திய அரசு பணம் இவ்வளவு என்று பார்க்கலாம். எல்லாம் மக்கள் தருகின்ற பணம்தான் மத்திய அரசு பணம் என்றாலும், மாநில அரசு தருகிற பணம் என்றாலும், மக்கள் தருகின்ற வரிப் பணம்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. அப்படி ஒதுக்கப்படுகின்ற அந்தப் பணத்திலேகூட இந்தத் திட்டத்தையும், மத்திய அரசினுடைய திட்டங்களையும் யாரும் மறைக்கவும் இல்லை, அதை மறுக்கவும் இல்லை.

குறிப்பாக இந்திரா வீடு கட்டும் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கின்றது. அதற்காகத் தரப்படுகின்ற தொகை, மத்திய அரசிலேயிருந்தும் தரப்படுகிறது. மாநில அரசும் ஓரளவுக்குத் தொகையைச் செலவழிக்கின்றது. அப்படிச்

செலவழிக்கின்ற நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கட்டப்படுகின்ற அந்தத் தொகுப்பு வீடுகளுக்கு, 'இந்திரா வீடு கட்டும் திட்டம்' என்ற பெயர்தான். அது அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் வந்தாலும், 'நமக்கு நாமே' திட்டத்தில் வந்தாலும், அந்தப் பெயர்தான் இப்போதும் சூட்டப்படுகின்றது. அதை யாரும் மாற்றிவிடவில்லை. ஆனால் வரலாற்றை நீங்கள் பார்ப்பீர்களேயானால், இந்தியாவிலேயே முதன்முதலாக ஆதிதிராவிடர்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகள் கட்டுகின்ற திட்டத்தைத் தொடங்கியது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அந்தத் திட்டம் நேர்த்தியான திட்டம் என்பதை உணர்ந்த அகில இந்தியாவில் உள்ள மத்திய அரசு, அந்தத் திட்டத்தைத் தன்னகப்படுத்திக்கொண்டு அதை இந்தியா முழுவதும் இன்றைக்கு விரிவாக்கியிருக்கின்றது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பெயரைப் பற்றி முக்கியம் இல்லை. அது தமிழக அரசின் திட்டமாக இருந்தாலும், மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும், அது மக்களுக்கான திட்டம், அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திட்டம் என்ற முறையில் அதை நாம் வரவேற்கிறோம்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு உதவித் திட்டத்திற்கு ஏற்கெனவே செலவழிக்கப்படுகின்ற தொகையை விடக் கூடுதலாக 21 கோடியே 15 லட்சம் ரூபாய், இந்தத் துணை மானிய மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி சேலை வழங்குவதற்கு, கூடுதலாக 24 கோடி ரூபாய் இந்த மதிப்பீட்டில் கோரப்பட்டிருக்கின்றது. இந்த இலவச வேட்டி சேலைகளை, பொங்கலன்று வழங்குவதற்கு ஆகின்ற செலவு மொத்தம் 89 கோடி ரூபாய். இந்த 89 கோடி ரூபாயிலே கூடுதலாக இந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிற 24 கோடி ரூபாயும் அடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போலவே, கடந்தகால ஆட்சியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு, 1992-93லிருந்து 1995-96 வரையிலான கால அளவிற்கு உரிய நிகரச் செலவு மானியத்

தொகையை வழங்கவே இல்லை. அப்படி வழங்காமல் தேங்கிய தொகை 13 கோடியே 70 இலட்சம் ரூபாய். கடந்த ஆட்சியில் 1992-93இல் இருந்து 1995-96 வரையில் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கவேண்டிய தொகை 13 கோடியே 70 லட்சம் ரூபாய். அதுவும் நம்முடைய தலையில்தான் இன்றைக்கு விழுந்திருக்கிறது. அந்தக்காரணத்தால் இந்தத் துணை மதிப் பீட்டிலே அந்தத்தொகையும் இடம்பெற்றிருக்கின்றது.

சேலம், நெல்லை, திருச்சியில் காவல்துறை ஆணை யாளர்கள் அலுவலகங்களைப் புதிதாகத் தொடங்க 11 கோடியே 7 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. காவல்துறையி னுடைய பல்வேறு பிரிவுகளுக்குப் புதிய மோட்டார் வண்டிகளை வாங்குவதற்கு 3 கோடி ரூபாய் முன்பணமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. காவல் துறை பணியாளர்களுக்கு உணவுக் கட்டணங்களை உயர்த்திய வகையில் 2 கோடியே 73 லட்ச ரூபாய் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மாவட்டங்களுக்கும், அரசுப் போக்குவரத்துக் கழகங் களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்களை எல்லாம் எடுத்துவிட்ட காரணத்தால் ஏதோ அவற்றை எடுப்ப தற்கு முனைந்தவர்கள், அந்த யோசனையைச் சொன்னவர்கள் எல்லாம் நாட்டுப்பற்று இல்லாதவர்கள், தலைவர்களை மதிக்காதவர்கள் என்றெல்லாம் இங்கே அ.தி.மு.க. சார்பிலே எடுத்துக்கூறப்பட்டது. நான் ஒருவனாக அல்லது சிலராக இந்த முடிவை எடுத்துவிடவில்லை. 40, 50 பேர் கொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, ஒரு முறைக்கு இருமுறை கூட்டி, அந்தக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையிலேதான் மாவட்டங்களுக்கும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்டிருந்த தலைவர்களுடைய பெயர்களை எடுத்துவிட்டு, 15 பல்கலைக்கழகங்களில் அந்தத் தலைவர்களுடைய பெயரால் 28 அறக்கடளைகளை ஏற்படுத்த முடிவு செய்து, அதற்காக 7 கோடி ரூபாய் இந்தத் துணை மதிப்பீட்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகியவற்றுக்கு அவசர சிகிச்சை வாகனங்கள் 'ஆம்புலன்ஸ்' வாங்குவதற்கு 9 கோடியே 91 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கின்றது. மீனவர்களுக்கு, சிங்காரவேலர் நினைவு வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 4,000 வீடுகள் கட்டுவதற்குக் கூடுதலாக 10 கோடியே 80 லட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தைத் திருத்தியமைக்க, கூடுதலாக 4 கோடியே 5 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே அறிமுகப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டு, ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலுங்கூட, அதில் பல சிக்கல்கள் இருந்தன. அந்தக் குழந்தையின் பெயரால் ரூ. 5000 போடுவ தாகச் சொன்னார்களே தவிர, அதற்கான சான்று அந்தக் குழந்தைக்குத் தரப்படவில்லை. அரசு போட்டு வைக்கும்; 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக்குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்றுதான் இருந்தது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு எந்த அரசு வருவது? எந்த அதிகாரி இருப்பது? எந்தச் சான்றிதழை யாரிடத்திலே போய்க் காட்டி அந்தப் பணத்தைப் பெறுவது என்பதற்கான விவரங்களும் இல்லை; அதற்கான வழிமுறை களும் இல்லை. அதனால்தான் ஒரு குழந்தைக்கு, ஒரு பெண் குழந்தை என்றால் 3,000. 2 பெண் குழந்தைகள் என்றால் அவர்கள் கருத்தடை செய்து கொள்ள வேண்டும். தலா 1500, 1500 என்று 3,000 ரூபாய் அவர்களுக்குப் போக்குவரத்துக்கழக நிறுவனத்திலேயுள்ள நிதி நிறுவனங்களிலே அந்தப் பணத்தை அரசாங்கம் உடனடியாகப் போட்டு அதற்கான சான்றிதழை அந்தப் பெற்றோரினுடைய கையிலே கொடுத்துவிடுகிற திட்டத்தை இப்போது நாம் உருவாக்கி இருக்கின்றோம். அந்தச் சான்றிதழ் அவர்களுடைய கையிலே இருந்தால் எப்பொழுது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் போய் சான்றித ழைக் காட்டி இது எங்களுக்கான பணம். அன்றைக்கே எங்கள் பெயரில் போடப்பட்ட பணம் என்று வாங்கிக்கொள்ளக்கூடிய அந்த உறுதியும், உத்தரவாதமும் இந்தத் திட்டத்தின்படி இன்றைக்கிருக்கிறது. அதற்காக இப்பொழுது கூடுதலாக 4

கோடியே 5 இலட்சம் ரூபாய் இன்றைக்கு இந்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழுகின்ற ஏழை மக்களுக்கு -ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மாத்திரம் மனைகள் ஒதுக்கப்பட்டன. இப்போது ஏழைகள் அனை வருக்கும், பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அது மாத்திரமில்லாமல் முன்னேறிய வகுப்பினருக்கும், ஏழைகளாக இருந்தால், அவர்களுக்காக வீட்டுமனை வழங்க 16 கோடி ரூபாய் இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே இடம் பெற்றுள்ளது.

குடிசை மாற்று வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டு, ஏறத் தாழ 25 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்த வீடுகளெல்லாம் நீண்ட நாட்களாகவே பழுதுபார்க்கப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். பராமரிக்கப்படவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும். அந்தப் பழுதுபார்க்கும் பணிகளையும் பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்ள 9 கோடியே 50 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

காவிரிப் பிரச்சினையைப் பற்றி நாம் பேசுகிறோம். ஆனால் காவிரிப் பிரச்சினை தீர்ந்தாலும்கூட காவிரித் தண்ணீர், தஞ்சை மாவட்டத்திலுள்ள கடைக்கோடிப் பகுதிகளுக்குச் (Tail End) செல்ல முடியாமல் வாய்க்கால்களெல்லாம் தூர் விழுந்து மேடு கட்டி வகைப்படுத்தாத ஒரு சூழ்நிலை இருந்தது. அதைத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைவரும் அறிவார்கள். அதற் காக 10 கோடி ரூபாய் அளவிலும், அந்தக் கால்வாய்களை யெல்லாம் தூர் எடுக்கவும், நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளையெல்லாம் அகற்றுவதற்கு ஏறத்தாழ 2 கோடி ரூபாய் செலவிலே பொதுப்பணித்துறைக்கும், வேளாண்துறைக்கும் அதன் சார்பிலே செலவிடப்பட்டு அதற்கு அனுமதிக்கப்பட்ட தொகையும் இந்த மதிப்பீட்டிலே இடம்பெற்றிருக்கிறது.

இந்திய விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி 50 இடங்களிலே சமத்துவபுரம் அமைப்பது என்று அறிவிக்கப்பட்டு

முதல் கட்டமாக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப வேலைகளுக்காகத்தான் அந்த 5 கோடி ரூபாயும் ஒதுக்கப் பட்டிருக்கிறது. சமத்துவபுரம் என்பது 50 இடங்களில் 100 வீடுகளைக்கொண்டு அமைக்கப்படுகின்ற புதிய இடங்களாகும். அதிலே எல்லா சமூக மக்களும் அங்கே கூடி வாழ வேண்டும்; சமத்துவத்தை அந்த வகையிலே நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சமத்துவபுரம் என்ற திட்டம் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. 5 கோடி ரூபாயிலே என்ன செய்ய முடியும் என்ற கேள்வி நியாயமான கேள்வியாக இருந்தாலும், நிலத்தை ஆர்ஜிப்படுத்தவும், தொடர்ந்து அந்த இடத்திலே சமத்துவபுரத்தை அமைப்பதும், நம்முடைய 2 கட்டப் பணிகள் என்பதால், ஆரம்பப் பணிகளுக்காக இந்த 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி மன்றத்தினுடைய அதிகாரங்களைப் பற்றி யெல்லாம் நேற்றும் இன்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே பெரும்பான்மையான அதிகாரங்கள் ஊராட்சி மன்றங்களுக்கும் ஒன்றியங்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன. அதற்கான பட்டியல் என்னிடத்திலே இருந்தாலும்கூட, படித்துக்காட்ட நேரம் இல்லை. இருந்தாலும், இருக்கின்ற குறைகளை அகற்றி, இன்னும் சில அதிகாரங்கள் தேவை என்று எழுந்துள்ள குரலை மதித்து நம்முடைய மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாள ராகக் கொண்ட அனைத்துக் கட்சிகளைச்சேர்ந்த உறுப்பினர் களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. இன்னும் 4, 5 கட்சிகளைச்சேர்ந்த உறுப்பினர்களுடைய பெயர்கள்தான் எங்களுக்கு வந்து சேரவில்லை. மற்ற எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய பெயர்களும் எங்களுக்கு வந்து சேர்ந்து விட்டன. இன்னும் அனுப்பிவைக்காத கட்சிகளைச்சேர்ந்தவர்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தொடங்கி அறிவித்து ஏறத்தாழ 2 அல்லது இரண்டரை மாதங்கள் ஆகின்றன. இந்த இரண்டரை மாத காலமாகக் கடிதப் போக்குவரத்து நடைபெற்றும்கூட, நேற்றைக்கோ அல்லது போன

வாரத்திலோதான் முக்கியமான கட்சிகளெல்லாம்கூட யார் யாரை இந்தக் குழுவிலே நியமிக்கலாம் என்கின்ற வகையில் சிலருடைய பெயர்களை அனுப்பி இருக்கின்றார்கள். முதலிலே அறிவித்திருந்தால், ஏற்கெனவே இந்தக் குழு கூடி, எந்தெந்த அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலேகூட வைத்து இருக்க முடியும். அரசு எல்லா வற்றிலும் தாமதமாக இருக்கிறது என்று குறை சொல்கிறவர்கள், அவர்கள் எப்படித் தாமதமாக இருந்தார்கள் என்பதை மாத்திரம் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா பெயர்களும் எம்.எல்.ஏ. பெயர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று இல்லை. ஒரு கட்சிக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடிதம் எழுதி இருப்பாரேயானால் அந்தக் கட்சியிலுள்ள எம்.எல்.ஏ.க்கள் அல்லாதவர்கள்கூட, ஆனால் பஞ்சாயத்திலோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ அல்லது உள்ளாட்சி மன்றங்கள் எதிலும் இடம் பெறாத வர்களாக இருந்து, பொதுவாக இந்த நிலையை ஆராயக் கூடியவர்கள் அதிலே அனுபவம் பெற்றவர்கள், அவர் களுடைய பெயர்களை அதிலே இணைத்தால் இப்போது எம்.எல்.ஏ.க்கள் பெயர்களை கொடுத்திருந்தால் அவர்கள்கூட மாற்றிக்கொள்ளலாம். இந்தக் குழு கூடுவதற்கு முன்பாக. அந்தவகையிலே, இந்தக் குழு அமைந்து என்னென்ன அதிகாரங்கள் தரப்படவேண்டும் என்ற முடிவை எடுக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக கிருஷ்ணசாமி போன்றவர்கள் பேசும்போது சமத்துவம் இல்லாத ஒரு சூழ்நிலை சுதந்திர இந்தியாவிலே பொன்விழா கொண்டாடும் நேரத்திலேகூட இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி வேதனையைத் தெரிவித்துக்கொண்டார்கள். அந்த வேதனை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும், எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் இருக்கின்றது.

ஒரு குறிக்கோளை, ஒரு இலட்சியத்தை அடையவேண்டும் என்கிறபோது, அதற்குச் சில அணுகுமுறைகள் இருக்கின்றன. நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்த அணுகுமுறையிலே, அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் முரட்டுத்தனமாக, மூர்க்கத்தனமாக, ஆர்வக்கோளாறு காரணமாக அவசரம் காட்டினால், அந்த அணுகுமுறை நிச்சயமாக வெற்றியைத் தராது. அந்த அணுகு முறையை, சாத்வீகமாக, அதே நேரத்தில் நெஞ்சமுத்தத்தோடு அந்தக் காரியத்தை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் நிறைவேற்றியாக வேண்டும். அதிலே மாறுபாடான கருத்து இந்த அரசுக்கு இல்லை. இந்த அரசை நடத்திச்செல்கின்ற என்னைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே நான் எந்த அளவிற்குத் தொடர்புடையவன்; எந்த அளவிற்கு அவர்களுடைய நன்மை தீமைகளில் எனக்கு அக்கறை உண்டு என்பதை மாமன்றத்திலே இருக்கின்ற யாரும் அறியாதவர்கள் அல்ல.

கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே என்னைப் பாராட்டினார். ஒரு துணைவேந்தரை அவருடைய சமுதாயத்திலிருந்து நியமித்து விட்டோம் என்பதற்காகப் பாராட்டினார். இன்றைக்கு துணைவேந்தர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது மாத்திரமல்ல; தமிழ்நாடு தேர்வாணையக் கமிஷனின் தலைவரும், இந்த ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் நியமிக்கப் பட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல, என்னுடைய அந்தரங்கச் செயலாளர்களிலே, மூத்தவராக இருக்கின்ற அதிகாரியும், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், சென்னை உயர் நீதிமன்றத்தின் நூற்றாண்டுக்கால வரலாற்றில் முதன் முதலாக ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நீதிபதி அமர்ந்ததும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது. ஒரு டி.ஜி.பி.யாக அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர் வரவேண்டுமென்று, திரு. துரை அவர்கள் அந்தப் பதவியிலே நியமிக்கப்பட்டதும் தி.மு.கழக

ஆட்சியிலேதான், அதையெல்லாம் நண்பர் கிருஷ்ணசாமி மறந்திருக்க மாட்டார். இருந்தாலும்கூட, இன்றைக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்; பாராட்டு தெரிவித்தார். தெரிவித்து விட்டு, இன்னமும் அங்கொன்று இங்கொன்றுமாக இருக்கின்ற சில வேதனைகளைச் சுட்டிக்காட்டினார். அதை அவருக்கு மாத்திரமல்ல; எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? இந்திய தேசிய லீக் கட்சிக்குத் தெரியாதா? பாட்டாளி மக்கள் கட்சிக்குத் தெரியாதா? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தெரியாதா? எல்லா கட்சிகளுக்கும் தெரிந்த விஷயம்தான். எல்லோரும் வேதனைப்படுகின்ற விஷயம்தான் இது.

நான் ஒரு புள்ளி விவரம் எடுக்கச்சொன்னேன். தமிழ் நாட்டில் இருக்கின்ற சற்றொப்ப 58 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் ஆயிரம் கிராமங்களிலாவது டீக்கடைகளில் இரண்டு டம்ளர்களை வைத்து, டீ வழங்குகின்ற அந்தக் கொடிய பழக்கம் இருக்கிறது என்பதை நான் உணர்ந்து கொள்ள முடிந்தது; இருக்கிறது.

சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமென்பதற்காகத் தான் அண்மையிலே அரசாங்கத்தின் சார்பாக வெளியிடப்பட்ட விளம்பரங்களை நீங்கள் கண்டிருக்கக்கூடும். அவர் குறிப்பிட்டதைப்போல, வேலைவாய்ப்புகளில் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள், வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக, அவர், கிருஷ்ணசாமி உள்ளிட்ட ஒரு குழு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில், அமைக்கப்பட்டு அந்த ஆய்வும் நடைபெற்று வருகின்றது. காலியிடங்களை நிரப்புவதற்கு ஆட்கள் இருந்தால், அதிலே எந்தவிதமான தயக்கமும் இருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. ஆட்கள் இருந்தும் நிரப்பப்படாமல் இருந்தால் என்ன காரணம் என்பதை அறிந்து, அதனை நிரப்புவதற்கான வாய்ப்புக் கூறுகளை இந்த அரசாங்கம் உருவாக்கும் என்ற உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் வெளியிடப்பட்ட விளம்பரத்தில், ''கிராமப் புறங்களில் உள்ள ஒருசில கடைகளில் அங்கு வரும் அனை வரையும் சமமாக நடத்துவதில்லை என்று புகார்கள் வந்துள்ளன. கடைகளுக்கு வரும் அனைவரையும் சமத்துவத்துடன் நடத்த வேண்டும் என்றும், அனைவருக்கும் அனைத்து வசதிகளும் ஏற்றத்தாழ்வின்றி தரப்பட வேண்டுமென்றும், அனைவரையும் சமமாக நடத்தாத உரிமையாளர்கள்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அரசு எச்சரிக்கின்றது. கோவையில் அதுபோல் சமத்துவத்தைக் கடைப்பிடிக்காத சில கடைகளின் உரிமையாளர்கள்மீது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதலின், எல்லாக்கடைகளின் உரிமை யாளர்களும் மேலே கூறப்பட்ட அரசின் கருத்தைக் கவனத்திலே கொண்டு தங்கள் கடைகளுக்கு வரும் அனைத்து மக்களையும் சமத்துவமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். கடைகளுக்கு வரும் மக்களைச் சமத்துவமாக நடத்தவில்லை என்றால், இதுகுறித்த புகார்களை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அரசுக்கோ கொடுக்கலாம். அப்படி புகார் கொடுக்காமல் நேரடியாகவே சட்டத்தை தாங்கள் கையிலே எடுத்துக்கொண்டு செயல்பட்டால், அவர்கள் மீதும் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.''

அரசே இதற்கு ஒத்துழைக்கும்போது, அரசே இதற்கு ஆணைகள் பிறப்பித்து, இந்த விதிகளை மீறுகிறவர்கள் சமத்துவத்திற்கு எதிராக நடக்கிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முற்படும்போது, அவரவர்களும் தங்கள் கைகளிலே சட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது, சமூக விரோதிகள் சில பேர் சேர்ந்து ஒரு துக்கம் கடைப்பிடிக்கின்ற நேரத்திலே கூட - உங்களுக்குத் தெரியும். என்னுடைய இனிய நண்பர் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். மறைந்தபோது அந்தத் துக்கத்திலேகூட சென்னை மாநகரத்திலே என்னென்ன நடைபெற்றன என்பது உங்களுக்குத் தெரியும்- எத்தனைக் கடைகள் சூறையாடப்பட்டன: எத்தனைக் கடைகளிலேயிருந்து நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன; எத்தனை பேர் அன்றைக்கு வன்முறைக்கு ஆளானார்கள்? எல்லாம் அந்தக் கட்சிக்காரர்கள் செய்தார்கள்

என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் சமூக விரோதிகள் அதைப் பயன்படுத்திக்கொண்டு இந்த நேரம் பார்த்து திருடலாம் கொள்ளையடிக்கலாம் என்று காரியங்களில் சமூக விரோதிகள் நுழைந்து, இதுதான் நேரம், இந்த டீக்கடையிலே போய் எத்தனை கிளாஸ்களைத் திருடலாம். எத்தனை ரூபாயைத் திருடலாம், எத்தனை உண்டியலை உடைக்கலாம் என்று சில பேர் முற்படுவார்களேயானால் அது நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பயன்படாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதைப்போலவேதான், கோயில் நுழைவு. இன்றைக்கும் தமிழ்நாட்டில் சில இடங்களில் கோயில்களில் சமத்துவம் இல்லை. அந்தச் சமத்துவத்தை நிலைநாட்ட வேண்டுமென்ப தற்காகத்தான், எல்லா ஆலயங்களிலும் சமபந்தி விருந்து நடைபெற வேண்டும் என்று அரசின் சார்பிலே சொல்லப்பட்டு, அறநிலையத்துறை அமைச்சரும், அந்தத் துறையின் அதிகாரி களும், மற்றும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் ஒத்து ழைத்து, ஏன் ஆன்மீகவாதிகளும்கூட ஒத்துழைக்க முன்வந்து, மடாதிபதிகள், ஆதீனகர்த்தர்கள் எல்லாம்கூட ஒத்துழைக்க முன்வந்து சமபந்தி விருந்துகள் நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான கோயில்களிலே நடைபெற்றிருப்பதை நீங்கள் மறந்திருக்க முடியாது.

மனிதச்சங்கிலி அணிவகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை எல்லாம் சமத்துவம் தழைத்தோங்க வேண்டுமென்ற குறிக்கோளோடுதான் நடைபெறுகின்றன. மனதைத் திருத்தவேண்டும். மனப்பக்குவத்தை உருவாக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையிலேதான் இவை எல்லாம் நடைபெறுகின்றன. ஆனால் நான் செய்தி பார்த்தேன். கோயம் புத்தூரிலே ஒரு ஊரிலே ஒரு கோவிலுக்கு ஐநூறு பேரை அழைத்துக்கொண்டு நான் நுழைவேன் என்று நண்பர் கிருஷ்ணசாமி அறிவிக்கின்ற நேரத்தில் இன்னொரு சாராரை அது ஆத்திரப்படுத்தி, அதன் காரணமாக ஆலயப் பிரவேசம் நடந்தது என்று அகமகிழ்ச்சி அடைவதைவிட, ஆலயப் பிரவேசம் என்ற பெயரால் இருசாராரும் அடித்துக்கொண்டு

இத்தனைப் பேர் செத்தார்கள் என்ற அந்தக் கணக்கைப் பார்க்க நான் தயாராக இல்லை. அது மிகப்பெரும் வேதனை. அந்த வேதனை வெள்ளத்திலே நாமெல்லாம் மிதக்கக்கூடாது என்பதற்காகத்தான் நான் இந்த அணுகுமுறையிலே மாற்றம் வேண்டும் என்றும், அதேநேரத்தில் ஊரிலே பெரியவர்களாக இருப்பவர்கள்- நான்கூடக் கேள்விப்பட்டேன்; கோவையைப் பொறுத்தவரையில், அந்த ஊரிலே இருப்பவர்கள்- எல்லாம் ஒன்று கூடி, நம்முடைய அமைச்சர் பழனிச்சாமி அவர்கள் முன்னிலையிலே அந்த மலைக்கோவிலில் எல்லாரும் சமபந்தி விருந்தை விரைவிலே ஒரு நாள் குறித்து நடத்துவதென்று முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த முடிவு மலைக்கோவிலிலே மாத்திரமல்லாமல், மாநிலம் முழுவதிலுமுள்ள எல்லாக் கோவில்களிலும், பெரியவர்களால் நடத்தப்படுமானால் நம்மைவிட மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இருக்க முடியாது.

எனவேதான், நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். சுட்டிக்காட்டக்கூடிய, சுயமரியாதைக்கு இழுக்குத் தேடக்கூடிய, சமத்துவத்திற்கு, சமதர்மத்திற்கு மாறான காரியங்கள் நடைபெற்றாலும்கூட, அதை மாற்றுவதற்கு நாம் மேற்கொள்கின்ற அணுகுமுறை சரியானதாக இருக்க வேண்டும். உத்தமர் காந்தியடிகள் இந்திய விடுதலையைப் பற்றிச் சொல்லும்போது இந்திய நாட்டின் விடுதலை நமது குறிக்கோளாக இருந்தாலும், அதற்கான அணுகுமுறை அனைவரும் பாராட்டத்தக்க அளவிற்கு, ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிற்கு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒருவர் இறந்தாலும், சமுதாயத்திற்குச் சேதம்தான். பத்து பேர் இறந்தாலும், சமுதாயத்திற்குச் சேதம்தான். எனவே, நூறு பேர், இருநூறு பேர் சாகக்கூடிய அளவிற்கு, தொடர்ந்து சாதிக் கலவரங்கள் ஏற்படுகின்ற அளவிற்கு அணுகுமுறைகள் இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எதை வேண்டுமானாலும் விவாதிக்கலாம்; நேரில் வந்து பேசலாம். என்னைவிட ஒரு மலிவான முதலமைச்சர் உங்களுக்கு யார் கிடைக்கப் போகிறார்கள்? என்னைவிட வந்து சந்தித்துப் பேசக் கூடிய ஒரு முதலமைச்சர் உங்களுக்கு வேறு யார் கிடைக்கப்

போகிறார்கள்? கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே யார் அப்படிக் கிடைத்தார்கள்? எனவே எதையும் பேசலாம்; வந்து பேசி விவாதித்து, அதைப் பற்றி முடிவெடுக்க நான் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் நான் ஒன்றும் பெரிய குடும்பத்திலே யிருந்து வந்த ஒரு ஆள் அல்ல. மிக மிக சாதாரணமான, சாமான்யமான குடும்பத்திலே பிறந்து பெரியாரைப் பின்பற்றி, அண்ணாவைப் பின்பற்றி, அவர்களுடைய கொள்கைகளை உள்ளத்திலே ஏந்திய காரணத்தினால், இன்றைக்கு இந்த அவையிலே நான் முதலமைச்சராக நின்றுகொண்டிருக்கிறேன்.

நேற்றைக்குக்கூட, பிரிட்டிஷ் ராணியிடம் நான் பேசிக் கொண்டிருந்தபோது சொன்னேன். 36 ஆண்டுக் காலத்திற்கு முன்பு உங்களை நான் சந்தித்தேன் என்று சொன்னேன். பெருந் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது நேற்றைக்கு இங்கே வந்த பிரிட்டிஷ் ராணி அன்றைக்கும் வந்தார்கள். ராஜாஜி மண்டபத்திலே முதலமைச்சர் காமராஜர் விருந்தளித்தார். அப்போது எங்களையெல்லாம், அவர் ராணிக்கு அறிமுகப் படுத்தினார். குறுக்கீடு. பொன்னம்மாள், எம்.எல்.ஏ. தானும் வந்த தாகக் கூறுகிறார். ஆமாம், அக்காள் அவர்களும் வந்திருந்தார். அப்போது அக்காள் அவர்கள் மிகவும் இளமையாக இருப் பார்கள். (பலத்த சிரிப்பு) 36 ஆண்டுகளுக்கு முன்பு! பெருந் தலைவர் எங்களையெல்லாம் ராணியாருக்கு அறிமுகப்படுத் தினார்கள். அப்போது அவருடன் வந்த கணவர் கூட கேட்டார். ''நீங்கள் திராவிட நாடு கேட்கிறீர்களாமே?'' என்று 1961ஆம் ஆண்டு அது. ''ஆமாம் அது எங்களுடைய ரைட்'' என்று அப் போது கூறினேன். ''அது திராவிட நாடு கேட்டுக்கொண்டிருந்த காலம். ஏன், இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், அப்போது ஹை கமிஷனர் என்னிடம் 36 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எம்.எல்.ஏ.வாக இருந்தீர்களா என்று கேட்டார்; நான் ஆமாம் என்றேன். இப்போது நீங்கள் முதலமைச்சராக ஆகிவிட்டீர்களா என்றார்; அதற்கும் ஆமாம் என்றேன். அப்போது அவர் சொன்னார். ''நான் ஒரு கதை சொல்கிறேன். நீங்கள் இங்கே எம்.எல்.ஏ.வாக இருந்த போது 1961-ல் எங்கள் ராணியார் வந்தபோது, என்னுடைய தந்தைதான் ஹை கமிஷனராக இங்கே

இருந்தார்'' என்று அவருடைய தந்தை ஹை கமிஷனராக இருந்த கதையை அவர் சொன்னார். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அன்றைக்கு நானோ, பேராசிரியரோ, மற்றவர்களோ, எம்.எல்.ஏ.க்களாக இருந்தோம். அப்போது நாங்கள் முதலமைச்சராகவோ, அமைச்சர்களாகவோ வரப்போகிறோமென்று கருதவில்லை. எனவேதான், அந்தச் சாதாரண நிலையிலே தான் இருக்கின்ற காரணத்தால் இன்றைக்கும் சாதாரணமாக எல்லோரையும் பார்க்கக்கூடிய வகையிலும், எல்லோருடனும் விவாதிக்கக்கூடிய வகையிலும் இருக்கின்ற ஒரு முதலமைச்சரை நீங்கள் பெற்றிருக்கும்போது, இதை மீறிக் காரியங்களை செய்தால்தான் என்னுடைய கவனத்திற்கு வருமென்று நீங்கள் யாரும் கருத வேண்டாம். என்னை அவர்கள் பார்த்தாலே போதும், புரிந்துகொள்வேன் என்னவென்று, அதற்காக அடித்துப் புரிந்துகொள்ள வைக்க வேண்டாமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவுசெய்கிறேன்.

நிதி ஒதுக்கீடு மசோதா

உரை : 58 நாள் : 28.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கீடு சட்ட முன்வடிவின் அடிப்படையில் பேரவையிலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கியிருக்கின்றார்கள். கருத்துக்களை வழங்கத் தொடங்கிய போது பலரும் எனக்குப் பவள விழா வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நான் என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று சிலபேர் எனக்குச் சாபமிட்டார்கள். நான் அந்தச் சாபத்தையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன். பவள விழா ஆண்டு என்று குறிப்பிட்டு, இந்தப் பவள விழா ஆண்டிலே பல்கலைக்கழகம் வேண்டுமென்று நம்முடைய ஞானசேகரன் வேண்டுகோள் விடுத்தார். பவள விழா ஆண்டு, இது தொடக்க ஆண்டு. பவள விழாவினுடைய நிறைவு விழாவின்போது ஞானசேகரனுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

இன்று விவாதிக்கப்பட்டு, உங்களுடைய ஒப்புதலைப் பெற இருக்கின்ற இந்த நிதியொதுக்கச் சட்ட முன்வடிவு, 22,513 கோடி ரூபாய்க்கான அனுமதியை உங்களிடத்திலே பெறுகின்ற சட்டமுன்வடிவாகும். இதில் 18,318 கோடி ரூபாய், சட்டமன்றப் பேரவையினால் வாக்களிக்கப்படுகின்ற தொகையாகும். மீதமுள்ள 4,195 கோடி ரூபாய் சாட்டப்பட்ட தொகை - Charged amount - அதாவது, ஆளுநர் செலவுகளுக்காக, நீதிபதிகளுடைய செலவுகளுக்காக, சர்வீஸ் கமிஷன் - தேர்வாணையத்தினுடைய செலவுகளுக்காக, வட்டி செலுத்துதல் போன்ற செலவுகளுக்காக

ஆகின்ற இந்தச் செலவுகளெல்லாம் 4,195 கோடி ரூபாய் என்கின்ற சாட்டப்பட்ட செலவினத் தொகையாக வருகின்றது. 1998ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலே தொடங்குகின்ற நிதி ஆண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநில தொகு நிதியிலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கான சட்டமுன்வடிவு, கடந்த மார்ச் திங்கள் 27ஆம் தேதி இந்த அவையிலே அறிமுகம் செய்யப்பட்டு, இது தொடர்பாக விவாதம் நடைபெற்று, மாமன்றத்தின் உறுப்பினர்கள் பலர் இந்தச் சட்டமுன்வடிவை ஒட்டியும், அதற்கு அப்பாற்பட்டும் பல கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கின் றார்கள். இந்தத் தொகையில் முதலில் வாக்கெடுத்தது, 5,911 கோடியே 41 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் - Vote on account - இந்தத் தொகையும் இதிலே உள்ளடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சட்டமுன்வடிவிலே அடங்கியுள்ள சில முக்கியமான ஒதுக்கீடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொரு மானியத்தின்போதும் தெரிந்து கொண்டிருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக ஒரு தொகுப்பாக நினைவூட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

கல்விக்கு 3,568 கோடி ரூபாய். ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்பதற்கு 1,953 கோடி ரூபாய்; நுகர்பொருள் வழங்கல் 1166 கோடி ரூபாய்; ஊரக வளர்ச்சி 1,186 கோடி ரூபாய்; நகராட்சிப் பணிகள் 514 கோடி ரூபாய்; மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவம் 1,096 கோடி ரூபாய்; சமூக நலன் 458 கோடி ரூபாய்; காவல்துறை 709 கோடி ரூபாய்; வேளாண்மை 739 கோடி ரூபாய்; சாலைகள், பாலங்கள் 380 கோடி ரூபாய்; பாசனம் குறித்த மூலதனச் செலவு 262 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் 208 கோடி ரூபாய்; மாவட்ட நிர்வாகம் 459 கோடி ரூபாய்; தாழ்த்தப்பட்டோர் நலன் 434 கோடி ரூபாய்; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் 90 கோடி ரூபாய். எனவே, கடந்த ஆண்டின் திட்ட ஒதுக்கீடுபற்றி நாம் எண்ண வேண்டுமேயானால், 4,052.6 கோடி ரூபாய், கடந்த ஆண்டின் திட்ட ஒதுக்கீடாக இருந்தது. 31-3-1998 முடிய, இந்தக் காலத்திற்கான திட்டச் செலவு, 4,134.5 கோடி ரூபாய் ஆகும். இது, திட்ட ஒதுக்கீட்டில், 102 விழுக்காடு என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல், இந்த நிதியாண்டிலேயும், மத்தியத் திட்டக் குழுவோடு கலந்து ஆலோசித்து நிர்ணயிக்கப்படுகின்ற திட்ட ஒதுக்கீட்டை நாம் பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்கான வரைவு ஆணைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. முன்பெல்லாம், அறிவிக்கப்பட்டவைகளுக்கு வரைவு ஆணைகள் வருவதற்கே நீண்டகாலமாகும். அங்ஙனம் இல்லாமல், வரைவு ஆணைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வெளியிடும் நிலையிலே வைக்கப் பட்டுள்ளன, 1998-99ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்கு இதைத் தவிர, இந்த நிதிநிலை அறிக்கையிலே, என்னென்ன புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டனவோ, அவை அனைத்திற்கும் 15-6-1998-க்குள் உரிய அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு விடும் என்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்லாமல், பல்வேறு துறைகளைச் சார்ந்த அமைச்சர்களும், தத்தம் மானியக் கோரிக்கை விவாதங்களின் போதும் பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது, நிதித்துறைச் செயலாளர் மிகக் கண்டிப்பாகவும், கனிவாகவும் கேட்டுக் கொண்டார்; இத்தோடு என்னை விட்டுவிடுங்கள்; இதற்குமேல் ஒவ்வொரு மானியத்திலேயும் அமைச்சர்கள் ஒவ்வொரு அறிவிப்பைச் செய்து தொல்லைக்கு ஆளாக்காதீர்கள் என்று எவ்வளவோ கேட்டுக்கொண்டார். ஆனாலும் அமைச்சர்கள் நிதித்துறைச் செயலாளரைத் தொல்லைக்கு ஆளாக்க நினைக்கா விட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களைத் தொல்லைக்கு ஆளாக்கி, அதன் காரணமாக பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.அந்த அறிவிப்புகள்மீதும் உரிய அரசாணைகள் ஜூலை மாதம் 15ஆம் தேதிக்குள் வெளியிடப் பட்டுவிடும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், 1996 - 97ஆம் ஆண்டு நிலவரப்படி, உள்ளாட்சி மன்றங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாகவும், ஏனைய பிற பணிகளுக்காகவும், மானியங்களாகவும் வழங்கப்பட்ட தொகை 841 கோடி ரூபாய் என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1997-98ஆம் ஆண்டில், 1,341 கோடி ரூபாய் என்ற அளவிலே வழங்கினோம். நடப்பாண்டில், இந்தத் தொகை உள்ளாட்சி மன்றங்களுக்கு 1,588 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் நான் மிகுந்த மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, கணிசமான கூடுதல் நிதியொதுக்கம் அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்படாமல் இருக்கின்ற பல கட்டுமானப் பணிகளை, உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொள்வ தற்கு, அதிகப்படியான நிதி தேவைப்படுவதால், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி, உலக வங்கியின் நிதியுதவி, நிதி நிறுவனங்களின் வாயிலாகக் கூடுதல் நிதி என நிதி திரட்டப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அடிப்படை வசதிகளுக்காக நபார்டு நிறுவனத்திடமிருந்து சாலைகள் மேம்பாட்டிற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் 503.41 கோடி ரூபாயும், நீர்ப்பாசன வசதிக்காக 24.72 கோடி ரூபாயும், இந்த அரசு பெற்றுள்ளதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்வேன். ஏனென்றால், இந்த நபார்டு நிறுவனம் நமக்கு வழங்குவதற்காக வைத்திருந்த தொகையை கடந்த கால அரசு, அ.இ.அ.தி.மு.க. அரசு பெற்றுக்கொள்ளவே முன்வரவில்லை. ஏனென்றால், அது கணக்குக் கேட்கின்ற நிறுவனம். எனவே அதைப் பெற்றுக்கொள்ளவே முன்பிருந்த அரசு முன்வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் இந்த தகவலை என்னிடத்திலே எடுத்துரைத்து, இப்படி ஒவ்வொரு ஆண்டும் 200 கோடி ரூபாய், 250 கோடி ரூபாய் என்று நபார்டு நிறுவனம் மூலமாக வருகிறது; அதைக் கடந்த காலத்திலே இருந்த அரசு பெற்றுக்கொள்ளவே இல்லை என்று குறிப்பிட்டார்.

உடனடியாக நான் அதைப்பற்றிய விவரங்களை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எழுதி, அவர்களிடமிருந்து தகவல்களை சேகரித்து உடனடியாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாகவும், அரசுச் செயலாளர்கள் மூலமாகவும், நானே முன்னின்றும் மத்திய அரசு நிதித் துறையிடத்திலே பேசி நபார்டு நிறுவனத்திலிருந்து இந்த இரண்டு ஆண்டுகளிலே மாத்திரம் 503 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம் என்றால், நீர்ப்பாசனத் துறைக்கு அ°தன்னியில் ஏறத்தாழ 25 கோடி ரூபாயும் பெற்றிருக்கிறோம் என்றால் இந்த அரசைத்தான் செயல்படாத அரசு தூங்குகிற அரசு என்று சில தூங்காத தம்பிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை.

மேலும் இந்த நிதியாண்டிலேகூட நபார்டு உதவியோடு 210 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வருவாயைத் திரட்டுவதிலே சிறுசேமிப்பு ஒரு பிரதான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சிறுசேமிப்புக் கடனாக மத்திய அரசிடமிருந்து 1000 கோடி ரூபாய் பெற திட்டமிடப்பட்டுள்ளது. 1000 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம். அதற்கு 1400 கோடி ரூபாய் சிறுசேமிப்பை நாம் திரட்டினால்தான் அதைக்காட்டி அந்த 1000 கோடி ரூபாயை நாம் பெறமுடியும். அதற்காக இந்த ஆண்டு முதல், வீட்டு வருமான சேமிப்புகளில் கணிசமான பகுதியை சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூலிக்க திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சிறுசேமிப்பில் மக்களை அதிகஅளவில் ஈடுபடுத்தத் தற்போதுள்ள முகவர்களுடைய எண்ணிக்கையை 10,000 என்பதை 20,000 என்கிற அளவிற்கு உயர்த்துவதற்கு நாம் திட்டமிட்டிருக்கின்றோம். எனவே சிறு சேமிப்பிலே 1400 கோடி ரூபாய் அளவுக்கு சேர்த்தால் 1000 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து கடனாக நாம் பெறமுடியும். அது மாத்திரம் அல்ல, அந்த 1400 கோடி ரூபாயையே எங்களுக்குத் திருப்பித்

தரவேண்டும் என்றுகூட மத்திய அரசோடு நாம் இன்றைக்கு வாதிட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புப் பணிக்குழு என்று மாநில அரசுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்து திரு. செகாவத் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு மத்திய அரசால் இன்றைக்கு அமைக்கப்பட்டிருப்பதை அவை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். அது 22ஆம் தேதி அன்று கூடிற்று; 22-5-1998 அன்று அந்தக் குழு கூடிற்று. 21-ஆம் தேதியே அவர்களுக்குக் கிடைக்கும் வகையிலே நான் ஒரு கடிதத்தை தமிழக அரசின் சார்பாக அனுப்பி வைத்திருக்கின்றேன்.அந்தக் கடிதத்திலே நான் கேட்டிருக்கின்ற கோரிக்கைகள் பல என்றாலும் ஒன்றிரண்டை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மைய அரசின் மொத்த வரிவருவாயில் 33 சதவிகிதம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நமது நெடு நாள் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி அந்தக் கடிதத்திலே நான் எழுதியிருக்கின்றேன். அதேபோல, திட்டப் பணிகளுக்கான மைய அரசினுடைய உதவித் தொகையில் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்பட்டு வருவதை மாற்றி, 50 சதவிகிதம் கடனாகவும், 50 சதவிகிதம் மானியமாகவும் மாற்றி வழங்க வேண்டும் என்றும் நான் அதிலே கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

மத்திய அரசுக்கு இணையான ஊதிய விகிதம் மாநில அரசுப் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளதைக் கருதி மத்திய அரசு கூடுதல் உதவித் தொகையை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் அந்தப் பணிக்குழுவிடம் நான் அளித்திருக்கின்றேன். அதையெல்லாம் செகாவத் குழு பரிசீலித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாகவும் அறிகிறேன். எனவே மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தி வழங்கப்படும் என்ற நோக்கோடு, 1998 - 99ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தை நாம் எல்லாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

வரும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி வருமேயானால் நாம் அறிவித்திருக்கின்ற எல்லாத் திட்டங்களையும் அட்டியின்றி நிறைவேற்ற முடியும். இல்லையெனில் அதற்காக வேறு முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டியிருக்கும் என்பதையும் நான் இந்த அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த விவாதத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை, தொகுதிப் பிரச்சினைகள், அல்லது இந்த நிதி ஆதாரம் அல்லாத வேறு பல பிரச்சினைகளை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், புதிய தமிழகம் கட்சியின் சார்பாக உரையாற்றினார்கள். அன்றைக்கு அவர்கள் உரையாற்றும் போதும் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கும் இதைத் தொடர்ந்து குறிப்பிட்டிருக்கிறார்கள்.அதைப்பற்றி எனக்குக் கிடைத்த விளக்கக்குறிப்பை முதலில் நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நான் எப்போதுமே, இந்த விளக்கக் குறிப்புகள், அதிகாரி களிடமிருந்து வருவதை அப்படியே நம்பிவிடுகிறவன் என்று சொன்னவன் அல்ல, சொல்லப் போகின்றவனும் அல்ல. இருந்தாலும் எனக்கு வந்த தகவல்களை முதலில் நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், புளியம்பட்டி காவல் நிலையத்தில் மதுவிலக்குச் சட்டப் பிரிவு 4 (1)-ல் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 28/98 மற்றும் அதே சட்டப் பிரிவு 4 (1) (a)-ல் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 43/98 ஆகிய வழக்குகள் தொடர்பாக திருவைகுண்டம் வட்டம், கீழபூவானியைச் சேர்ந்த திரு. செல்லையா மகன் கணேசன், வயது 37, புளியம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளரால் கைது செய்யப்பட்டு 18-5-1998 காலை 11.50 மணிக்கு கோவில்பட்டி கிளைச்சிறையில் (சப் ஜெயில்) நீதிமன்ற விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டார். இதில் லாக்-அப் சாவு ஏற்படவில்லை என்பது ஒன்று. சப்-ஜெயிலில் அடைக்கப்பட்டார். 18ஆம் தேதி அடைக்கப்பட்ட அவர் 21-ஆம் தேதி அன்று மாலை 4.30 மணிக்கு

உடல்நிலை குறைவு காரணமாக கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலன் அளிக்காமல் அன்று மாலை 4.35 மணிக்கு அவர் இறந்து விட்டார். இது தொடர்பாக கோவில்பட்டி கோட்டாட்சியர் பொறுப்பு வகித்த தூத்துக்குடி உதவி ஆட்சியர் பிரேத விசாரணை மேற்கொண்டார். பிரேத பரிசோதனைக்காக 21-5-1998 அன்று இரவு 11.30 மணிக்கு பிரேதம் பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் உறவினர்களிடம் பிரேதத்தைப் பெற்றுக்கொள்ள கோரப்பட்டது. இறந்தவரின் உறவினர்கள் பிரேதத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால், பிரேதம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிண வறையில் வைக்கப்பட்டது.

இதற்கிடையில் 22-5-1998 அன்று புளியம்பட்டியில் சுமார் 100 நபர்கள், ஒட்டப்பிடாரம், பாளையங்கோட்டை ரோட்டில் கூடி பேருந்து மறியலில் ஈடுபட்டார்கள். இரண்டு வண்டிகளை - மின்வாரிய வண்டி ஒன்று, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று - இரண்டையும் சிறைபிடித்து வைத்துள்ளார்கள்.

அவர்களிடம் தூத்துக்குடி உதவி ஆட்சியர், கோவில் பட்டி கோட்டாட்சியர் மற்றும் மணியாச்சி உதவி காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியும், அவர்கள் சாலை மறியலைக் கைவிடவும் இல்லை, பிரேதத்தைப் பெற்றுக்கொள்ளவும் முன்வரவில்லை. அவர் காவல்துறையின் கொடுமையால் இறந்ததாகக் குற்றம் சாட்டுகிறார்கள். சம்பந்தப்பட்ட காவல்துறை சார்பு ஆய்வாளரை தற்காலிகப் பணிநீக்கம் செய்தால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடவும் மற்றும் பிரேதத்தைப்பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென அவர்களுடைய கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. கூறியுள்ளதாக போராட்டக் காரர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அவர்களிடம், பிரேத பரிசோதனைச் சான்று கிடைக்கப் பெற்றவுடன், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை

உடனடியாக எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டும்கூட அவர்கள் இதுவரை ஏற்றுக்கொள்ள வில்லை. தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண மாவட்ட நிர்வாகத்தினாலும், காவல்துறையினாலும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்ற இந்தச் செய்திகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன.

இதிலே, நான் அதிகாரிகள் சொல்லுவதுதான் சரி, டாக்டர் கிருஷ்ணசாமி சொல்லுவது தவறு என்று ஒரேயடியாக சொல்ல விரும்பவில்லை.மேலும் இது குறித்த விசாரணையில் நான் நிச்சயமாக ஈடுபடுவேன். எந்த மட்டத்தில் இந்த விசாரணை நடைபெற வேண்டுமென்ற அளவில் சிந்தித்து, அதற்கான செயல்பாடுகளை இந்த அரசு உடனடியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தவகையிலும் அமைதியான முறையிலே இந்தக் காரியம் நடைபெறவும், இதனால் எந்தஅல்லலும், அமளியும் ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளவும், உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் இந்த அரசு தயக்கம் காட்டாது என்ற உறுதியை தெரிவித்து இந்த அளவில் இதற்கான விளக்கத்தை நான் நிறைவு செய்கிறேன்.

ஒன்று, தொடர்ந்து இந்த நிதிநிலை அறிக்கை மற்றும் மானியங்களுடைய விவாதங்களிலே, விலைவாசி இந்த ஆட்சியிலே உயர்ந்து விட்டது, உயர்ந்து விட்டது என்ற ஒரு குரல் எழுப்பப்பட்டு வருகிறது. அந்தக் குரல் தொடர்ந்து எழுப்பப்பட்ட காரணத்தினால் ஒரு சில விவரங்களை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1991ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட நாளன்று துவரம் பருப்பினுடைய விலை ஒரு கிலோ ரூ. 14.50. 30-3-1996 அன்று ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியில், அதாவது ஜனவரி, பிப்ரவரி, மார்ச் - மாதம் துவரம் பருப்பு ஒரு கிலோ விலை 34 ரூபாய். கழக ஆட்சியிலே, 1991-இலே 14.50 ரூபாய் துவரம் பருப்பு, ஆனால் 34 ரூபாய் 1996ஆம் ஆண்டு. இப்போது 34-ஐ குறைத்து துவரம்

பருப்பு கிலோ 22 ரூபாய் என்று ஒரு ரகம், 26 ரூபாய் ஒரு ரகம், சில இடங்களில் 29.50 ரூபாய் என்ற அளவிலே அந்த விலை இருக்கிறது.

உளுந்தம் பருப்பு 31-1-1991 - கழக ஆட்சி கலைக்கப் பட்ட காலகட்டத்தில் 11 ரூபாய் ஒரு கிலோ, அது ஜெயலலிதா ஆட்சியில் 32 ரூபாய். இப்போது அது ஓரளவு குறைக்கப்பட்டு ஒரு கிலோ 17 ரூபாய் என்றும், 21 ரூபாய் என்றும் உளுத்தம் பருப்பு விற்கப்படுகிறது.

ஒன்றாம் நம்பர் புளி; கழக ஆட்சியில் 31-1-1991-ல் ரூ. 7.50. ஜெயலலிதா ஆட்சியில் 33 ரூபாய். இன்றைக்கு 23 ரூபாய். இரண்டாம் நம்பர் புளி; கழக ஆட்சியில் 31-1-1991-ல் ரூ. 5.75. ஜெயலலிதா ஆட்சியில் 25 ரூபாய். இப்போது அது குறைக்கப்பட்டு 18 ரூபாய்.

கடுகு ரூ. 6.50 கழக ஆட்சியில் 1991ஆம் ஆண்டு. ஜெயலலிதா ஆட்சியில் 25 ரூபாய். இன்றைக்கு 18.50 ரூபாய்.

ஒன்றாம் நம்பர் மிளகாய் கழக ஆட்சியில் 1991ஆம் ஆண்டு ரூ. 10.50. ஜெயலலிதா ஆட்சியில் 48 ரூபாய். இன்றைக்கு 36 ரூபாய். இரண்டாம் நம்பர் மிளகாய் கழக ஆட்சியில் 1991ஆம் ஆண்டு 9 ரூபாய் கிலோ. ஜெயலலிதா ஆட்சியில் 38 ரூபாய். இன்றைக்கு அது ரூ. 32.50-ஆகக் குறைந்திருக்கிறது.

தேங்காய் எண்ணெய் 48 ரூபாய் கழக ஆட்சியில் 1991ஆம் ஆண்டு. ஜெயலலிதா ஆட்சியில் 97 ரூபாய். இப்போது அது குறைந்து 45 ரூபாய் என்றும் சில இடங்களில் 55 ரூபாய் என்றும் விற்கப்படுகிறது.

நல்லெண்ணெய் கழக ஆட்சியில் ரூ. 30.50. ஜெயலலிதா ஆட்சியில் 56 ரூபாய். இன்று இது குறைக்கப்பட்டு ரூ. 35 என்றும் ரூ. 40 என்றும் விற்கப்படுகிறது.

கடலை பருப்பு 8 ரூபாய் கழக ஆட்சியில், ஜெயலலிதா ஆட்சியில் ரூ. 20.50, இன்றைக்கு ரூ. 13.50.

சீயக்காய் கழக ஆட்சியில் ரூ. 7.50. ஜெயலலிதா ஆட்சியில் 34 ரூபாய். இன்றைக்கு 21 ரூபாய்.

பொன்னி அரிசி நம்பர் 1 கழக ஆட்சியில் 91ஆம் ஆண்டு ரூ. 5.50, ஜெயலலிதா ஆட்சியில் 18 ரூபாய். இன்றைக்கு 10 ரூபாய். பொன்னி நம்பர் 2 கழக ஆட்சியில் 5 ரூபாய். ஜெயலலிதா ஆட்சியில் 16 ரூபாய். இன்றைக்கு 9 ரூபாய்.

சிறுமணி கழக ஆட்சியில் 4 ரூபாய். ஜெயலலிதா ஆட்சியில் ரூ. 10.50. இன்றைக்கு ரூ. 8.50 வெளி மார்க்கெட்டிலே.

இட்லி அரிசி கழக ஆட்சியில் ரூ. 3.50, ஜெயலலிதா ஆட்சியில் ரூ. 9.00. இன்றைக்கு ரூ. 6.50 அல்லது ரூ. 7.00.

இதுதான் விலைவாசி விவரத்தைப் பொறுத்தவரையில் நான் தருகின்ற விளக்கம், உண்மையான விளக்கம்.

சாராயத்தைப்பற்றி நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று இல்லாவிட்டாலும், கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்களும் மற்றவர்களும்கூட, எல்லாக் கட்சி உறுப்பினர்களும்கூட இன்றைக்கு கள்ளச்சாராயம் கடலாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது, அதைத் தடுத்துநிறுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே இருவிதமான கருத்துக்களுக்கு இடமே கிடையாது. கள்ளச்சாராயத்தை ஒழிப்பது என்பதிலே எல்லோருக்கும் ஒரே குறிக்கோள்தான். ஆனால், அதை ஒழிப்பது எப்படி என்பதிலேதான் சில மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன. சாத்தூரிலேகூட சில பேர் கடந்த 18-ந் தேதியன்று கள்ளச்சாராயம் அருந்தி இறந்திருக்கிறார்கள். அதை வைத்து அ.தி.மு.க.வினுடைய தலைவியானவர்கள், ஜெயலலிதா அவர்கள் ஓர் அறிக்கை விட்டிருக்கின்றார்கள். அந்த அறிக்கையிலே ஏதாவது உண்மை எங்கேயாவது இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தேன். கள்ளச்சாராயத்தைக்கூடத் தேடிக் கண்டுபிடித்துவிடலாம் போலிருக்கிறது. ஜெயலலிதா விட்ட அறிக்கையிலே உண்மையைத் தேடிக் கண்டுபிடிப்பது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

அதிலே சொல்லியிருக்கிறார்கள். ''கடந்த 18ஆம் தேதியன்று காமராசர் மாவட்டம் சாத்தூரில் கள்ளச்சாராயம் குடித்தவர்கள் 10 பேர் இறந்து போயிருக்கிறார்கள்'' என்று. இறந்தது 5 பேர்தான். 5, 10 ஆகியிருக்கிறது ஜெயலலிதா அறிக்கையிலே. நம்முடைய தாமரைக்கனிக்கு நன்றாகத் தெரியும். அவர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர், பக்கத்திலே இருப்பவர். முதலிலே 2 பேர், பிறகு 3 பேர், கடைசியாக 5 பேர் இறந்தார்கள் என்றுதான் விவரம் வந்திருக்கிறது. ஆனால் ஜெயலலிதா, அறிக்கையிலே 10 பேர் என்று கூறியிருக்கிறார் .

அதுமாத்திரமல்ல, அந்த அறிக்கையில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், ''எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்று. இது சம்பந்தமாக சாத்தூர் காவல் நிலைய பொறுப்பு உதவி ஆய்வாளர் குமாரவேல், அவருடைய பொறுப்பற்ற தன்மைக்காக, தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல, டி.எஸ்.பி. - சாத்தூர் துணைக் கண்காணிப் பாளர் என்.எம். பொன்னுசாமிக்கு கள்ளச்சாராயத்தை ஒழிக்க பல அறிவுரைகள் கொடுத்தும்கூட இரண்டு முறை, அவருடைய காவல் எல்லையிலே மரண சம்பவங்கள் உண்டாக அவர் காரணமாக இருந்ததால், அவர்மீதும் துறை நடவடிக்கை எடுக்கவும், அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

ஜெயலலிதா தன்னுடைய ஆட்சியில் கள்ளச்சாராயமே இல்லை, கருணாநிதி ஆட்சியிலேதான் கள்ளச்சாராயம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று சொல்கிறார். நான் ஒன்றைச் சொல்லி, ஒன்றை நியாயப்படுத்த விரும்பவில்லை. அப்போது ஓடவில்லையா கள்ளச்சாராயம் என்று கேட்டு, இப்போது ஓடுவதிலே என்ன தவறு இருக்கிறது என்று நான் கேட்கின்ற அளவுக்கு அவ்வளவு அறிவுக் கூர்மை அற்றவன் அல்ல நான். எனவே, நான் நினைவுபடுத்த விரும்புவது அதுவல்ல. ஜெயலலிதாவினுடைய ஆட்சியில், இதே சாத்தூரில் 15-10-1995 அன்று, கள்ளச்சாராயம்-விஷச் சாராயம்-அருந்தி செத்துப் போனவர்கள் 28 பேர். 28 பேர் சாத்தூரிலே 1995ஆம் ஆண்டு இறந்து போயிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் எடுத்துக்

கொண்டால், 5 ஆண்டு கால ஜெயலலிதா ஆட்சியில், 30 நிகழ்வுகளில், 136 பேர் இந்தக் கள்ளச்சாராயத்தாலே இறந்து போயிருக்கிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். என் வாதத்தை நியாயப்படுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. விவரங்கள் சரியாக மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

இன்னொன்று சொல்கிறார் ஜெயலலிதா. இதுதான் ரொம்ப வேடிக்கை. தாமரைக்கனிக்குக்கூட கோபம் வரும் என்று நினைக்கிறேன்.

''கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக, தனது ஆட்சியில் காவல்துறையில் மதுவிலக்கு அமல் தனிப்பிரிவை உருவாக்கி, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டேன்'' என்று தன்னைத்தானே அம்மையார் அவர்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். உண்மையா அது? அல்ல. இந்த மதுவிலக்குப் பிரிவை 1971ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்தபோது 'ஆயத் தீர்வை மற்றும் மதுவிலக்குப் பிரிவு' என்று ஒன்றை ஆரம்பித்தேன். அதற்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1979ஆம் ஆண்டுதான் அவர்கள் 'மது விலக்கு அமல் பிரிவு' என்ற அந்தப் பிரிவை, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆரம்பித்தார்கள். இந்தப் பெருமையைக்கூட எம்.ஜி.ஆர்-க்கு விட்டுத்தர அம்மையார் அவர்களுக்கு இஷ்டமில்லை.

இதற்கு முன்பு இன்னொரு அறிக்கையிலேகூட அப்படித் தான், எம்.ஜி.ஆர். செய்ததை, தான் செய்ததாகவே சொன்னார்கள். அவரும், நானும் ஒன்று. ஆகவே சொல்கிறேன் என்று அவர் வாதமிடலாம். ஆனால், அவர் வேறு முதலமைச்சர்; இவர் வேறு முதலமைச்சர். அவர் முதலமைச்சராக இருந்த காலம் வேறு; இவர் முதலமைச்சராக இருந்த காலம் வேறு; அதையெல்லாம் மக்களுடைய கண்களிலே மண்ணைத் தூவி மறைத்துவிட்டு, ''நான்தான் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைக் கொண்டு வந்தேன், அதைக் கருணாநிதி கெடுத்துவிட்டார்'' என்று

சொல்வது எவ்வளவு தவறான வரலாற்றுப் பொய்யுரை என்பதைத் தயவுசெய்து நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, 1979ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள்தான் இந்த மதுவிலக்கு அமல் பிரிவைத் தோற்று வித்தார். 1971ஆம் ஆண்டு மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையை நான் தோற்றுவித்தேன். அதை அமல்படுத்துகின்ற பிரிவைத் தோற்றுவித்தவர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தான் என்பதை நான் ஞாபகப்படுத்துகிறேன்.

அதுமாத்திரமல்ல, ''1971ஆம் ஆண்டிலே, ஓட்டேரியிலே கள்ளச்சாராயம் குடித்துப் பலபேர் பேசமுடியாமல் ஆகி விட்டார்கள் கருணாநிதி ஆட்சியிலே'' என்று எல்லாம் அந்த அறிக்கையிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுவும், கடைந்தெடுத்த, உண்மைக்கு மாறான செய்தியாகும். அந்தப் பகுதியில் ''காவல் நிலைய சரக எல்லை-அயனாவரம் காவல் நிலையத்தினுடைய சரக எல்லையில், 2-7-1976 அன்று எரி சாராயத்தைக் குடித்து 118 பேர் இறந்தார்கள். 193 பேர் பாதிக்கப் பட்டார்கள். இவையெல்லாம் கவர்னருடைய ஆட்சியில். அன்றைக்கு இருந்த தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு, அதற்குப் பிறகு வந்த கவர்னருடைய ஆட்சியிலேதான் 118 பேர் அயனாவரம் காவல் நிலைய சரகத்திலே இறந்தார்களே யல்லாமல், அம்மையார் சொல்வதைப்போல கழக ஆட்சியிலே அல்ல.

எந்த ஆட்சியில் நடந்திருந்தாலும் - காங்கிரஸ் ஆட்சியில் இறந்திருக்கிறார்கள், கள்ளச்சாராயம் குடித்து; அண்ணா ஆட்சியில் இறந்திருக்கிறார்கள்; எம்.ஜி.ஆர். ஆட்சியிலே கள்ளச்சாராயம் அருந்தி இறந்திருக்கிறார்கள்; தி.மு.க. ஆட்சியில் இறந்திருக்கிறார்கள், பக்தவத்சலம் ஆட்சியில் இறந்திருக்கிறார்கள். ஆனாலும் - கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே நீ மேலா, நான் மேலா, உன் காலத்திலே அதிகமா, என் காலத்திலே அதிகமா என்றெல்லாம்கேட்டுக்கொண்டிராமல், எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே குறிக்கோளோடு கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற அந்தப் பணியினை நாம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு இந்த அவையிலே இருக்கின்ற எல்லா

மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். எல்லா கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைக்க முன்வருவார்களேயானால், அதை அமைதியாக, அதே நேரத்திலே கண்டிப்பாக நாம் நிறைவேற்ற முடியும் என்ற உறுதியை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவாதத்தினுடைய உரையில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி அதை ரெக்கார்டு செய்து, அதிலே, அது சரியாக இருந்தாலும் தவறாக இருந்தாலும் கவலை இல்லாமல் ஏதாவது சொல்லவேண்டுமென்று சொல்கின்ற வகையிலே அல்ல. முன்பு இருந்த ஆட்சியைப்பற்றி, இன்றைக்கு இருக்கின்ற மத்திய அமைச்சர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் என்ன சொன்னார்கள் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்தைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். ஏதோ, எங்கேயோ பேசி, மேடையிலே பேசி, பத்திரிகையிலே வரும் செய்தி அல்ல. கவர்னர் பெருமானாக இருந்த சென்னாரெட்டியிடத்திலே கொடுத்து அவர் அரசுக்கு அனுப்பி, அவைகள் ஆவணங்களாக இந்த அரசிலே பதிவாகி இருக்கின்ற விஷயங்களைத்தான் சொல்கிறேன். எனவே, இதற்குப் புறம்பானவை அல்ல, இங்கே பதிவாகியிருக்கின்றவை. கவர்னர் மாளிகைக்குச் சென்று கொடுக்கப்பட்ட புகார், அங்கேயிருந்து இங்கே முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு அது ரெக்கார்டு செய்யப்பட்டு வைக்கப்பட்ட ஆவணத்திலிருந்துதான் நான் படிக்க விரும்புகின்றேன்.

"The AIADMK Government headed by Ms. Jayalalitha is corrupt. The Chief Minister herself is misusing her office and is amassing wealth. It is a case of planned subversion of law by the Chief Minister and other Ministers. A corrupt political structure has been evolved in the State. The L.T.T.E. has become very active.

ஜெயலலிதா தலைமையிலே நடைபெறும் அ.இ.அ.தி.மு.க. அரசு ஊழல் மயமானது. முதலமைச்சரே தன்னுடைய பதவியைப் பயன்படுத்தி சொத்துக்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார்.

முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் திட்டமிட்டு சட்டத்தைக் கையிலே எடுத்துக்கொண்டுள்ளார்கள். மாநிலத்தில் ஊழல் மயமான சூழ்நிலைதான் உலவுகிறது. விடுதலைப் புலிகள் மிகவும் தீவிர நடவடிக்கையிலே ஈடுபட்டுள்ளார்கள். மேலும் "The Chief Minister and other Ministers are looting the State. - Looting the State - There is a large scale corruption. The Government machinery is paralysed. The bureaucracy is silenced. The Police force is made helpless. The crime rate is alarmingly increasing. People with criminal records are ruling the State and manning various Corporations. There is complete breakdown of the constitutional machinery. The Speaker of the Tamil Nadu Legislative Assembly Mr. Sedapatti Muthiah is acting in a high handed manner. The Opposition is not allowed to raise the issue of corruption in the Assembly. One, Mr. Tamaraikani. M.L.A. is often used by the ruling party to physically attack the opposition Members. Of late,there are attempts to silence the judiciary also. False cases are foisted against the close relatives of judges who discharges their constitutional duties." இதற்குத் தமிழ் மொழி பெயர்ப்பு தேவையில்லை என்று கருதுகிறேன். இதையெல்லாம் கொடுத்தது யார் என்றால் இன்றைய மத்திய அமைச்சராக இருக்கின்ற திருவாளர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள்தான். கவர்னர் சென்னா ரெட்டி அவர்களிடத்திலே, இவைகளையெல்லாம் 16-3-1994ஆம் ஆண்டு கொடுத்திருக்கிறார். இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப்பற்றி, அதிலே உள்ள அதிகாரிகளைப் பற்றியும் குறை சொல்லுகின்ற அளவிற்கு துணிவு ஏற்படுவது உள்ளபடியே பாராட்டத்தக்கதுதான். ஏனென்றால் இந்த அவையிலே ஆளுங்கட்சியினர் நிரம்பி இருந்தபோது, தம்பி பரிதி இளம்வழுதி, இன்றைய துணை சபாநாயகர் அன்றைக்கு என்ன பாடுபட்டார் என்பதையும், ஏன் இன்னும் அதிகமாக இருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட என்ன பாடுபட்டார்கள் என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது, நாம் இரண்டு பேர் தனியாக போகிறோமே என்ன ஆகுமோ என்று, இரண்டு மூன்று பேர் தனியாக இருக்கிறோமே என்று

பயப்படாததற்கு என்ன காரணம் என்றால், தாமரைக்கனியோ அல்லது சுந்தரமோ, மற்றவர்களோ பயப்படாததற்கு என்ன காரணம் என்றால், அவர்களுக்கு இந்த அண்ணன் மீது அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). நம்மை எல்லாம் அன்பாக நடத்துவான்; நம்மை எல்லாம் கொடுமையாக நடத்தமாட்டான் என்று.

அதைப்போல, சபாநாயகர் அவர்களும், துணை சபாநாயகரும் அப்படி நடத்தமாட்டார்கள்; அவர்கள் எல்லாம் அண்ணா வழியை கொஞ்சம்கூட தவறாமல் (மேசையைத் தட்டும் ஒலி). பின்பற்றக்கூடியவர்கள் என்கின்ற அந்த நம்பிக்கை இருக்கின்ற அந்தக் காரணத்தினாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் எல்லாம் இந்த அவையிலே எதையும் பேசுகின்றார்கள்; எவ்வளவோ எதிர்ப்பான கருத்துக்களை எல்லாம்கூட எடுத்துக் காட்டுகின்றார்கள். நான் பயந்துகொண்டு, இன்றைக்கு, சட்டசபையைக்கூட ஒரு நாள் யாருக்கோ பயந்துகொண்டு நீடித்து இருப்பதாகச் சொன்னார்கள். இதெல்லாம்கூட சொக்கர் கோபித்துக் கொள்ளக்கூடாது; அழகிரி கோபித்துக் கொள்ளக்கூடாது; நம்முடைய ஞானசேகரன் எல்லாம் கோபித்துக் கொள்ளக்கூடாது; தாமரைக்கனிக்கு ஒரு துணிச்சல் ஏன் வருகிறது என்றால், நான் பயப்படுகிறேன் என்று எதிர்கட்சித் தலைவரே கல்கிக்கு பேட்டி கொடுக்கிறார்; எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் அவர்களே, ஆட்சியைக் கலைத்து விடுவார்களோ என்று நான் பயப்படுகிறேன் என்று அவரே கல்கிக்கு பேட்டி கொடுத்து இருக்கிறார். அதைப் பார்த்தவுடன் தாமரைக்கனிக்கு நாம் ஏன் சொல்லக்கூடாது? எதிர்க்கட்சித் தலைவரே சொல்கிறார்; தோழமைக் கட்சித் தலைவர் பாலகிருஷ்ணனே சொல்கிறார்; அவர் சொல்லும்போது நாம் ஏன் சொல்லக்கூடாது? அப்படி என்று தாமரைக்கனியும் சொல்கிறார்.

‘‘முதலில் தி.மு.க. ஆட்சி நன்றாகத்தான் இருந்தது. ஆனால் சமீப காலங்களில் ஆட்சிக் கலைப்பு பற்றிய செய்திகள் கருணாநிதியிடம் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. 352, 356 என்ற பிரிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க சட்ட பூர்வமாக அனுமதி கிடையாது என்று தெரிந்தும், கலைஞர்

பயப்படுவதற்கான காரணம் புரியவில்லை. இந்த பயத்தின் விளைவான தயக்கத்தின் காரணமாக நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது.'' இது ஒன்று போதும்; ஆட்சியைக் கலைப்பதற்கு. நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவரே ஒரு பிரதான பத்திரிகையில், வாரப் பத்திரிகையில் சொல்கிறார்; இன்னும் பலவும் சொல்கிறார். கொடும்பாவி பற்றி எல்லாம் சொல்லி இருக்கிறார். அதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. முதலமைச்சர் கருணாநிதி கொடும்பாவியைக் கொளுத்தினால் போலீஸ்காரர்கள் சும்மா இருப்பார்களா என்று கேட்டு இருக்கிறார். 1996ஆம் ஆண்டு அ.தி.மு.க.-வினர் பல இடங்களில் என்னுடைய கொடும்பாவிகளைக் கொளுத்தினார்கள். அப்போது நாங்கள் சும்மா இருந்தோமா இல்லையா என்பது தாமரைக்கனிக்கு தெரியும். அதனாலே, தாமரைக்கனிக்குத் தைரியம் எப்படி வந்தது; அவருக்கு வந்த தைரியத்துக்கு என்ன காரணம் என்றால், இதுபோன்ற பேட்டிகளும் இதுபோன்ற பேச்சுக்களும்தான் என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு, வேறு சில செய்திகள். வரிகள் குறைப்புபற்றி எல்லாம் பேசப்பட்டது. ஆனால், அக்காவுக்கு ரொம்ப வருத்தம். ''நானும் பல நாட்களாகக் கேட்கிறேன், தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால் என்று; அதற்கு வரியை குறைக்கமாட்டாயா என்று கேட்கிறேன்'' என்றார். நானும் பல நாட்களாக அதிகாரிகளோடு அதுபற்றிப் பேசிப் பார்த்தேன். கடைசியாக, இப்போது அக்கா அவர்கள் இங்கே பேசியவுடன் - அக்கா என்று சொன்னால் மாத்திரம், அது பத்திரிகையில் வந்தால் யாருக்கும் புரியாது - பொன்னம்மாள் அவர்கள் பேசியபிறகு, நான் நிதிச் செயலாளரோடு கலந்து பேசி எடுத்த முடிவு, தேங்காய்ப் பாலுக்கு வரி அறவே ரத்து செய்யப்படுகிறது என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி).

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கால்நடைத் தீவனத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அதைப்பற்றி சுந்தரம்கூட இங்கே பேசினார். மற்றும் பல உறுப்பினர்கள் பேசி இருக்கின்றார்கள். நம்முடைய சொக்கர் பேசி இருக்கின்றார்.

அதைப்பற்றிச் சில சந்தேகங்களை எழுப்பி இருக்கிறார். . . இந்த வரி விலக்கு, கால்நடை வைத்து இருப்போர்க்கு விற்கப்படும் காம்பவுண்டு கால்நடைத் தீவனத்திற்கு Compound Cattle Feed-க்கு அளிப்பதில் சில நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கின்றார்கள். அதைப் பரிசீலித்து, கால் நடைகளை வைத்து இருப்போர் வாங்கும் காம்பவுண்டு கால்நடைத் தீவனத்திற்கு வரி விலக்கு இருக்குமாறு விற்பனைச் சட்டத்தின்கீழ் உள்ள அட்டவணைக்கு தேவையான மாறுதல்கள் செய்யப்படும் என்ற உறுதியை நான் இங்கே அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சொக்கர், நா. பெரியசாமி, என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார், ஜி.கே. மணி, எம்.ஏ. லத்தீப், ஐ. கணேசன், எல். சந்தானம் ஆகியோர் பதப்படுத்தப்படாத வெண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். இயற்கையான பதப்படுத்தப்படாத வெண்ணெய், பதப்படுத்தப்பட்ட வெண்ணெய் என்று பிரித்து வரி விதிப்பதில் சில சிரமங்கள் உள்ளன. என்றாலும், இயற்கையான பதப்படுத்தப்படாத வெண்ணெய், பெரும்பாலும் வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெயாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பொதுவாக, ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் வரை வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு வரி விதிப்பது இல்லை என்பதை 1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்து இருந்தேன். அதன்படி 3 லட்சம் ரூபாய் வரை வெண்ணெய் வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு வரி விதிப்பு இல்லை. என்றாலும், தற்போது உறுப்பினர்கள் கொடுத்து உள்ள கோரிக்கைகளைப் பரிசீலித்து, வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெய்க்கு மாத்திரம் 4-5-1998 முதல் வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன்.

இதனால் வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெய் வியாபாரம் 3 லட்சத்திற்கு மேற்பட்டாலும் அதற்கு வரி விதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நம்முடைய திருவேங்கடம் போன்ற உறுப்பினர்கள் முதலில் தொடங்கி, அதைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். - சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து, கரும்பை எடுக்காத காலகட்டத்தில், விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பை அரவை செய்வதற்கு தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பைப் பயன்படுத்துகிறார்கள் என்று. இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக 5 ஆயிரம் ரூபாயும், ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 5 ரூபாய் என்றும், கரும்பு விவசாயிகளிடம் தற்போது வசூலிக்கப்பட்டு வருவதாக அவையிலே உறுப்பினர் கலசப்பாக்கம் திருவேங்கடம் தெரிவித்தார். இந்தக் கோரிக்கை மேலும் பல விவசாயிகளிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று, கரும்பு விவசாயிகளின் நலன் கருதி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ஏற்கெனவே 5000 ரூபாயிலிருந்து ரூ. 500 ஆகக் குறைத்தோம். ஒரு யூனிட் மின்சாரத்திற்கு தற்போது வசூலிக்கப்படும் 5 ரூபாய் என்பதை ரூ. 1.25 என்று குறைத்தும் வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்து, 6-4-1998-ல் அறிவித்தேன். மின்சார மோட்டார் பொருத்துவது மற்றும் தனியாக மின் இணைப்பு வழங்குவது ஆகியவற்றில் உள்ள சிரமங்கள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதுகுறித்து அதிகாரிகளோடு மேலும் விவாதிக்கப்பட்டது.

விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த கரும்பை, சர்க்கரை ஆலைகள் அரைவைக்கு எடுக்காத காலகட்டத்தில், அவர்கள் தாங்களே வெல்லம் தயார் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு, விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதைப்போல மின்சாரக் கட்டணம் இல்லாமல் இலவசமாக மின்சாரத்தை வழங்கலாம் என்று முடிவெடுக்கப் பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

Gauze மற்றும் bandage துணிகள் பற்றி இங்கே இந்த விவாதத்தின் இறுதியில் பேசிய திரு. ஞானசேகரன் போன்றவர்கள் சொன்னார்கள். பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். இதுகுறித்து உறுப்பினர்கள் வி.பி. இராசன், ஆர். சொக்கர், கே.எம். விஜயகுமார் மற்றும்

ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் போன்ற அந்த வட்டாரத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நம்முடைய பழனிசாமி அவர்களும் அதைப்பற்றி இங்கே இன்றைக்கு உரையாற்றும்போது குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்கெனவே ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் வரையிலான விற்பனைத் தொகை உள்ள விசைத்தறி தயாரிக்கும் காஸ் மற்றும் பாண்டேஜ் துணிகளுக்கு, தமிழ்நாடு பொது விற்பனை வரியிலிருந்து 1-4-1998 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. வரிவிலக்கு அளவினை உயர்த்தவேண்டுமென்ற சிறு விசைத்தறி உற்பத்தியாளர்களின் கோரிக்கையை சட்டமன்ற உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். சிறு விசைத்தறி உற்பத்தியாளர்களின் நலனையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனையும் கருத்திற்கொண்டு, திரு. ஞானசேகரன் இங்கே குறிப்பிட்டதைப்போல, ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாய் வரையிலான விற்பனைத் தொகை உள்ள விசைத்தறியில் தயாராகும் காஸ் மற்றும் பாண்டேஜ் துணிகளுக்கு, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலிருந்து 1-4-1998 முதலும் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்திலிருந்து இன்று முதலும், வரி விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். மத்திய விற்பனை வரிச் சட்டத்திலிருந்து இன்று முதல் என்று நான் சொன்ன காரணம், ஏற்கெனவே முன் தேதி போடுவதற்குச் சட்டத்தில் இடம் இல்லை. ஆகவே இன்று முதல் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி).

புதிய வட்டங்கள் சிலவற்றை நான் ஏற்கெனவே அறிவித்தேன். அப்படி அறிவித்தபோது 2, 3 வட்டங்கள் விடுபட்டுவிட்டன. அந்த 2, 3 வட்டங்களை மீண்டும் நான் இங்கே அறிவிப்பதால், மற்ற வட்டங்கள் எல்லாம் என்னை வட்டமிட்டுவிடக் கூடாது என்கின்ற வேண்டுகோளை முன்வைத்து, அவைகளை அறிவிக்கின்றேன்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, காரியாப்பட்டியைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், வேலூர் மாவட்டத்தில் உள்ள

குடியாத்தம் மற்றும் வாலாஜா ஆகிய வட்டங்களைச் சீரமைத்து, காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய வட்டமும், திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தை இரண்டாகப் பிரித்துத் தொட்டியத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய வட்டமும் இந்த ஆண்டிலிருந்து செயல்படத்தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்த பிரச்சினைக்கு வேகமாகச் செல்கின்றேன். ஏனென்றால் சில வட்டங்கள் கிளம்பிவிடக்கூடும். (சிரிப்பு) இது சுதந்திரதின பொன் விழா ஆண்டு. என்னுடைய பவள விழா ஆண்டு என்பதைவிட நான் அதிகமாக நேசிப்பது, இந்தச் சுதந்திரதின பொன் விழா ஆண்டைத்தான். அதைப்போல, அதிகமாக நான் நேசிப்பது, திராவிட இயக்கத்தினுடைய அரசியல் பிரிவான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொன் விழா ஆண்டும் இந்த ஆண்டுதான். அந்த திராவிட இயக்கத்தின் பரந்த மனப்பான்மையை, அந்த பரந்த மனப்பான்மையை உபதேசித்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேருள்ளம், அதன் அடையாளமாக - ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும் - பல பெரியவர்கள், கவிஞர்களுடைய புத்தகங்கள் எல்லாம் நாட்டுடைமையாக ஆக்கப்பட்டிருக்கின்றன. பாரதியார், பாரதிதாசன், தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், அறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், திரு.வி.க., கல்கி, இவர்களுடைய எழுத்துக்களெல்லாம் அரசுடைமையாக ஆக்கப்பட்டிருக்கின்றன. சுதந்திர தினப் பொன் விழா ஆண்டு என்பதை உத்தேசித்து, தேசிய எழுத்தாளர்கள், மறைந்த தேசிய எழுத்தாளர்கள் அவர்களுடைய நூல்களையெல்லாம் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதியன்று அரசுடைமையாக ஆக்குவது என்று தீர்மானித்துள்ளோம். யார் யாருடைய நூல்கள் என்றால், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ப. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ.உ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.ஏ, ஐயர், வா.ரா., கா.மு. ஷெரீஃப், நாவலர் சோமசுந்தர பாரதியார் ✸ பரளி நெல்லையப்பர், வ.வே.சு. ஐயர், காரைக்குடி சா. கணேசன்,

✸மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திரும்பப் பெறப்பட்டது.

எஸ்.டி.எஸ். யோகி ஆகியோரைக் கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கென அந்தப் பதிப்பகத்தாருடன் கலந்து பேசி, அவர்களிடமிருந்து உரிய தொகை கொடுத்து, அந்த உரிமங்கள் பெறப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதைப்போலவே, சென்னை மாகாணத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் பி.எஸ். குமாரசாமிராஜா அவர்களுடைய நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டு வருகின்றது. இந்த நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் அவர் பிறந்த நாளான ஜூலைத் திங்கள் 8ஆம் நாள் இராஜபாளையத்திலே விமரிசையாகக் கொண்டாடப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், குமாரசாமி ராஜா அவர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் அவர்களது நூற்றாண்டையொட்டி மத்திய அரசின் சார்பில் அஞ்சல் தலை ஒன்றை வெளியிட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு 7-5-1998 அன்று கடிதம் எழுதி இருக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குமாரசாமி ராஜா அவர்களுடைய அந்த நூற்றாண்டு விழாவிற்கு இந்தியாவினுடைய குடியரசுத்தலைவர் அவர்களையும், முடியுமானால் பிரதமர் அவர்களையும் அழைத்து அந்த விழா கொண்டாடப்படும். நம்முடைய தமிழகத்தினுடைய தலைவர்களும் அதிலே கலந்து கொள்வார்கள் என்பதையும் தெரிவித்து, இந்த இனிய நற்செய்தியோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன். வணக்கம்.



நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு

உரை : 59 **நாள் : 14.05.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு குறித்து இந்த அவையிலே இன்று காலை முதல் பல்வேறு உறுப்பினர்களுடைய கருத்துக்களையும், எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிகின்ற வாய்ப்பைப் பெற்று, அனைவருடைய அன்பான ஆதரவோடு அது நிறைவேற விருக்கின்ற கட்டத்தில் சில விளக்கங்களை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

இன்று இந்த விவாதத்தில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு.ரங்கநாதன் அவர்களும், ஆளுங் கட்சியின் சார்பில் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பெரியசாமி அவர்களும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் திரு. திருநாவுக்கரசு அவர்களும், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் திரு. நிஜாமுதீன் அவர்களும், இறுதியாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பல கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

இந்தச் சட்டமுன்வடிவில் - நிதி ஒதுக்கீடு செய்கின்ற சட்டமுன்வடிவிலே பேசுகின்ற வாய்ப்பில்தான் பல உறுப்பினர்கள் பல்வேறு மானியங்களிலே பேசுகின்ற வாய்ப்பைப் பெறாத காரணத்தால் அல்லது பெற்றிருந்தும் அந்த நேரத்திலே சொல்லுகின்ற நிலை இல்லாத காரணத்தால், நேரம் இல்லாத காரணத்தால் - கடைசியாக இந்த நிதி ஒதுக்கீடு மசோதாவிலேதான் - கருத்துக்களை எடுத்துச்சொல்வது

வாடிக்கை. அந்த வகையிலே பல கருத்துகள் இங்கே கூறப்பட்டிருக்கின்றன. இன்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பேச்சிலே பெரும் பகுதியை ஆன்மீகத்திற்குச் செலவிட்டிருக்கிறார்கள். பாம்பன் சாமியாரி லிருந்து ஆரம்பித்து, மேல்மருவத்தூர் சாமியார் வரையில் சென்றிருக்கிறார்கள். இன்று எந்தச் சாமியார்களும் என்னைப் பொறுத்தவரையில், எங்களைப் பொறுத்தவரையில், எங்களுக்கு விரோதமானவர்கள் அல்ல. ஊரை ஏமாற்றுகின்ற சாமியார்கள், ஆரூடம் சொல்லுகின்ற சாமியார்கள், தாய்மார்களை ஏமாற்றுகின்ற சாமியார்கள் என்ற இந்தச் சாமியார்களிடத்திலே தான் ஆளும் கட்சிக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு, இங்கு உள்ள பல முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கு எல்லாம் எதிர்ப்புக் கருத்தே தவிர, தாங்கள் உண்டு, தங்கள் பாடு உண்டு என்கின்ற நிலையில், சமுதாயத்திற்குத் தங்களால் இயன்ற பணிகளைச் செய்து கொண்டிருக்கின்ற எந்தச் சாமியாரிடத்திலும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்குப் பகை கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, மேல்மருவத்தூரில் அந்த வழியாகச் செல்லும் போது, கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்கள், அங்கே உருவாகி யிருக்கின்ற சமுதாயத்திற்குத் தேவையான பல நல்ல காரியங்கள் இவற்றை எல்லாம் பார்க்கும்போது, அதேபோல இரத்தின கிரியிலே ஒரு சாமியார் அவர் அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்காகச் செய்திருக்கின்ற பொதுநல ஏற்பாடுகளை எல்லாம் காணுகின்ற நேரத்தில், அங்கெல்லாம்கூட நாங்கள் சென்று - எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் போல ஆன்மீக உணர்வு என்ற அந்த அடிப்படையிலே அல்ல - அவர்கள் செய்கின்ற காரியங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும், பொது மக்களுக்காக, சமுதாயத்திற்காகச் செய்கின்ற தொண்டுகளுக்கு என்கின்ற அளவிலே அங்கே சென்று வருவதும் உண்டு. அந்த வகையில் அவர்கள் இங்கே எடுத்துக் கூறிய, அந்த ஆன்மீகத் துறையிலே உள்ள நல்லவர்களுக்கான பல்வேறு கோரிக்கைகளை இந்த அரசு நிச்சயமாக பரிசீலிக்கும், இயன்ற வரையிலே ஆவன செய்யும் என்பதை முதற்கண் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

17-3-1999 அன்று நிதிநிலை அறிக்கை இந்த அவையிலே முன்வைக்கப்பட்டது. அதற்கான ஒப்புதலை இன்றைக்கு சட்ட பூர்வமாக அவையிலே அது பெறவிருக்கிறது. ஒப்புதலைப் பெறவிருக்கின்ற நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு 23,072 கோடி ரூபாய். இதிலே சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்படுகின்ற தொகை 18,176 கோடி ரூபாய். Charged தொகை, வாக்கெடுப்பு இல்லாத சாட்டப்பட்ட தொகை என்ற வகையில் 4,896 கோடி ரூபாய். சாட்டப்பட்ட தொகை என்றால் Charged தொகை என்றால், வாங்கிய கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி, திருப்பித் தரவேண்டிய கடன் தவணை, கவர்னர் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுடைய ஊதியம், படிகள் போன்றவை சாட்டப்பட்ட செலவினங்களிலே வரும். அதற்காக வாக்கெடுப்பு நடத்துவதில்லை. அதனால்தான் அதனை Charged items என்று சொன்னேன். 1999ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், முதல் நாளிலேயிருந்து தொடங்குகின்ற நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் - அதாவது நம்மைப் பொறுத்தவரையில் பட்ஜெட்டில் ஏப்ரல் முதல் தொடங்கி மார்ச் மாதம் முடிய கணக்கிடுவதுதான் நிதியாண்டாகும். இவைகளைப் பற்றியெல்லாம் ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வகுப்பு நடத்தப்பட்டிருக்கிறது; தொடர்ந்து இரண்டு நாட்கள் நடத்தப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமன்ற வரலாற்றிலேயே முதல் தடவையாக, நாமக்கல்லார் மாளிகையிலே நிதித்துறைச் செயலாளரும் மற்றும் அரசுச் செயலாளர்களும் கலந்துகொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களும் பல ஐயப்பாடுகளை எழுப்பி, அவற்றிற்கெல்லாம் விடை கண்ட நிகழ்ச்சி முதன்முதலாக, தமிழக சட்டமன்ற வரலாற்றிலே நடைபெற்றிருப்பதையும் நாம் யாரும் மறந்துவிடுவதற்கில்லை. எனவே, இந்த நிதியாண்டில் மாநிலத் தொகுதி நிதியிலேயிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கான சட்டமுன்வடிவு இந்த அவையிலே அறிமுகம் செய்யப்பட்டு, அதன் தொடர்பாக விவாதம் நடைபெற்றிருக்கிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்தத் தொகையில் 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க முன்னளி மானிய வாக்களிப்புச் சட்டத்தின் இரண்டாவது பிரிவிலே

குறித்துரைக்கப் பெற்ற, அதாவது, 6,058 கோடியே, 26 இலட்சத்து, 99 ஆயிரம் ரூபாய், Vote on account தொகையும் இதிலே அடங்கும்.

நம்முடைய திட்டங்கள், ஆண்டு திட்டங்கள், இந்த அரசைப் பொறுத்தவரையில் நல்லமுறையிலே அவற்றினுடைய குறிக்கோள்களை எய்துகின்றன என்பதற்கு அடையாளமாக கடந்த இரண்டு ஆண்டுகள் போலவே இந்த ஆண்டும், திட்ட ஒதுக்கீடான 4,500 கோடி ரூபாயை நாம் முழுமையாக எய்தியுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலும் மத்தியத் திட்டக் குழுவோடு கலந்து பேசி நிர்ணயிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு 5,250 கோடி ரூபாயாகும். அந்த ரூபாய் 5,250 கோடிக்கான திட்டங்களையும் இந்த நிதியாண்டிலே நாம் பெற்றுள்ள அந்த ஒப்புதலுக்கு ஏற்ப எய்திவிடுவோம் என்ற நம்பிக்கையை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நிதிநிலை அறிக்கையிலே இறுதிப் பற்றாக்குறை என்பது 529 கோடி ரூபாய். அதாவது மூலதனச் செலவு, வருவாய் கணக்கு, வரிவசூல் மூலமாக வரக்கூடிய தொகை, இவையெல்லாம் போக, இந்த ஆண்டு இறுதிப் பற்றாக்குறையாக 529 கோடி - சுமார் 530 கோடி ரூபாய், இருக்குமென்று அறிவித்திருக்கின்றேன். அதற்கான கூடுதல் நிதியாதாரங்களை நாம் திரட்டியாக வேண்டும். அதற்கேற்ற வகையில், சிறுசேமிப்பைப் பொறுத்தவரையில், 1997-98-இல் நிகர வசூல் 547 கோடி ரூபாயாக இருக்க, மேலும் இந்தத் திட்டத்தை முனைப்போடு செயல்படுத்தியதன் காரணமாக, 1998-99-இல் நிகர வசூல் 1,105 கோடி ரூபாயாகப் பெருகி யிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதன் பயனாக, நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து கூடுதலாகக் கிடைக்கக்கூடிய கடன் 383 கோடி ரூபாயாகும். நாம் வசூல்செய்து கொடுக்கின்ற இந்தச் சிறு சேமிப்புத் திட்டத் தொகைக்கு ஏற்ப, ஒரு விகிதாச்சாரம் கடனாக, மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்குகிறது. அதிலே இந்த ஆண்டு நாம் 1,105 கோடி ரூபாயை எட்டிவிட்ட காரணத்தால், 1998-99-இல் கூடுதல் கடனாக 383 கோடி ரூபாய் நமக்குக்

கிடைக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டிலும் நாம் நம்முடைய இறுதிப் பற்றாக்குறையை மனதிலே வைத்துக் கொண்டு, இன்னும் வேகமாக வசூல் செய்வதன் மூலம் மத்திய அரசிடமிருந்து கூடுதலாகக் கடன்பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் வசூல் செய்து கொடுப்பதிலே 75 சதவிகிதத்தைக் கடனாக மாநில அரசுக்கு மத்திய அரசு வழங்குகிறது என்பதையும் நீங்கள் ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். இப்படித் தரப்படுகின்ற இந்தக் கடன், நிரந்தரக் கடனாக ஆக்கப்பட வேண்டும் என்றும் நாம் வற்புறுத்தி வருகின்றோம். கடன் அப்படியே இருக்க வேண்டும், வட்டி மாத்திரம் அதற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் கேட்டு வருகின்றோம். அதற்கு இன்னும் முழுமையாக ஒப்புதல் மத்தியிலேயிருந்து மாநிலங்களுக்குக் கிடைத்தபாடில்லை.

தமிழகத்திலே விற்பனைவரியைப் பொறுத்தவரையில், நிலுவை வரிகளை முனைப்போடு மேலும் வசூலித்தால் இந்த இறுதிப் பற்றாக்குறையை ஈடுகட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நிதிநிலை அறிக்கையிலே ஒன்றை அறிவித்திருக்கின்றேன். மத்தியிலே இருப்பதைப்போல 'சமாதான் திட்டம்' என்று ஒரு திட்டம்; Commercial Tax-ஐப் பொறுத்தவரையில், விற்பனை வரியைப் பொறுத்தவரையில், கட்டாமல் இருக்கின்றவர்கள், கட்டத் தயங்குகின்றவர்கள், இது அதிகம் என்று வாதிட்டுக்கொண்டிருப்பவர்கள், அவர்களை எல்லாம் அழைத்துவைத்துப் பேசி சமரசமாக ஒரு உடன்பாடு கண்டு, அந்த உடன்பாட்டின்படி அவர்கள் அந்தத் தொகையை அரசுக்குக் கட்ட வேண்டும் என்பதுதான் 'சமாதான்' திட்டமென்பதாகும். இது மத்தியிலே அறிமுகப்படுத்தப்பட்டு இன்றைக்குக் கடைப்பிடிக்கப்படுகிறது. இது எந்த அளவுக்கு வெற்றியை எட்டியிருக்கிறது என்பதைச் சொல்ல முடியாது. காரணம், மத்தியிலே உள்ள நிலவரத்தில் அந்தக் கணக்கை இப்போது பார்ப்பதற்கு இயலாது. ஆனால், இங்கே தமிழகத்திலே இந்தத் திட்டத்திற்கான ஒரு சட்டமுன்வடிவை, மசோதாவை, இந்தக் கூட்டத் தொடரிலேயே அரசு கொண்டு வருவதற்குத் தீர்மானித்திருக்கிறது. அது அறிமுகப்படுத்தப்

படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவை எல்லாம் நம்முடைய இறுதிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக மேலும் நிதி திரட்டுகின்ற வகைகள்.

இன்னொன்று : முத்திரை வரி மூலம் அரசுக்குக் கிடைக்கின்ற வருவாயைப் பெருக்குவதற்காக, குறைவான மதிப்பில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்வதற்காக, சிறப்பு துணை மாவட்ட ஆட்சியரிடம் நிலுவையிலே உள்ள ஆவணங்களில் விரைவில் முடிவெடுக்க 1-3-1999 முதல் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, 1-3-1999-லே செயல்படுத்தத் தொடங்கிய இந்தத் திட்டம், 10-5-1999 வரையில் 8,851 ஆவணங்களில் முடிவெடுத்து, அதன் பயனாக 8.39 கோடி ரூபாய் வசூலாகி இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டுஒலி). இந்தத் திட்டம் 30-6-1999 வரையிலே செயல்படுத்தப்படும் என்பதையும் கூற விரும்புகின்றேன்.

பரிசுச் சீட்டு; அதனுடைய வருவாய்கூட உயர்ந்திருக்கிறது. அதை அறவே ஒழித்துவிடலாம் என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை ஆரூண் ஒத்துக்கொள்வாரோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், இந்தப் பரிசுச் சீட்டின் காரணமாக ஏற்படக்கூடிய தீமைகளை அரசு உணர்ந்திருக்கிறது. இதை ஆரம்பிக்கும்போது, அறிஞர் அண்ணா அவர்கள் இதற்காக ஒரு கருத்து மொழியையே சொன்னார்கள். ''விழுந்தால் வீட்டுக்கு, விழாவிட்டால் நாட்டுக்கு'' என்று குறிப்பிட்டார்கள். பரிசு விழுந்தால் வீட்டுச் செலவுக்கு. விழாவிட்டால் நாட்டுக்கு என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அதற்குப்பிறகு இதிலே ஏற்பட்ட பல்வேறு குளறுபடிகள்; குழப்பங்கள்; சிலபேர் நடத்திய மோசடிகள்; ரூபாய் நோட்டுகளை கள்ள நோட்டுகளாக அடிப்பதைப் போல, பரிசுச் சீட்டுகளையும் கள்ளச் சீட்டுகளாக அடித்து விற்பனை செய்த இந்த நிலவரங்களை எல்லாம் கண்டபோது, இராஜாஜி யினுடைய நினைவு மண்டபத்தைத் திறந்து வைக்க ஜெயப்பிரகாஷ் நாராயண் வந்தபோது, அன்றைக்கு நான் என்னுடைய தலைமையிலே இராஜாஜி நினைவு மண்டபத்

திறப்பு விழா கிண்டியில் நடைபெற்றபோது, ஜெயப்பிரகாஷ் அவர்கள் மேடையிலே இந்த வேண்டுகோளை வைத்தார்கள். 'பரிசுச் சீட்டையும் ஒழித்துவிட வேண்டும்' என்று சொன்னார்கள். நான் அங்கேயே அறிவித்து, பரிசுச் சீட்டு அறவே தமிழகத்திலே ஒழிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, 1977-78-லே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தப் பரிசுச் சீட்டு மீண்டும் தொடங்கப்பட்டு, அது மக்களுடைய வாழ்க்கையிலே இன்றைக்கு ஒரு நித்திய கடமையாகவே ஆகிவிட்டது. அந்த அளவிற்கு அவர்களோடு ஒன்றிப்போன ஒன்றாக இன்றைக்கு இந்தப் பரிசுச் சீட்டு ஆகிவிட்டது. அதிலும் இப்போது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒருவகையிலே நமக்கு சாதகம் என்றாலும்கூட, எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல, ஒரு பக்கம் சாதகமும் இருக்கிறது; இன்னொரு பக்கம் பாதகமும் இருக்கிறது. சாதகம் என்னவென்றால், மாநில அரசு நினைத்தால் பரிசுச் சீட்டைத் தடை செய்யலாம் - அதற்கு இடைக்காலத் தடை பெற்று இருந்தார்கள். அது நீக்கப்பட்டு, உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பு வந்திருக்கிறது - மாநில அரசு விரும்பினால், பரிசுச் சீட்டைத் தடை செய்யலாம். அதே நேரத்திலே, வேறு மாநில அரசுகளினுடைய பரிசுச் சீட்டும் இங்கே வராமல் பார்த்துக்கொள்ளலாம். அதையும் தடுக்கலாம். அப்படித் தடுப்பதாக இருந்தால், இந்த மாநிலத்திலே பரிசுச் சீட்டு இருக்கக்கூடாது. இப்படி ஒரு நிபந்தனை. நாம் பரிசுச் சீட்டை விற்றுக்கொண்டு, நமது மாநில அரசின் சார்பாக விற்றுக்கொண்டு, பீகார் மாநிலமோ அல்லது அசாம் மாநிலமோ அல்லது ஒரிசாவோ, இராஜஸ்தானோ அல்லது வேறு எங்கிருந்தோ வருகின்ற பரிசுச் சீட்டைத் தடுப்பதற்கு நமக்கு உரிமை இல்லை என்ற வகையிலே உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அமைந்திருக்கிறது. எனவேதான் நானும், அதிகாரிகளும் மற்றும் அமைச்சர்கள் மட்டத்திலும் இதைப்பற்றிப் பேசி, இதை மேலும் செம்மைப்படுத்தி, இதில் ஏற்கெனவே பரிசு என்பது ஒரு அதிர்ஷ்டம் என்று கூறப்பட்டாலும், அதிலே ஓரளவுக்கு சூதும் நிறைந்திருக்கிறது; இதிலே சூது, வாது அதிகமாக ஆகிவிடாமல், செம்மைப்படுத்த முடியுமா என்றும் யோசிக்கின்றோம். ஒரு நல்ல காரியம்; இந்தச் சுரண்டல் லாட்டரி ஒழிக்கப்பட்டுவிட்டது,

உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பால். அதற்குப் பெயர் Single orient lottery-யா? Orient lottery, உடனடி லாட்டரி என்று இரண்டு பரிசுச் சீட்டுகள். இதிலே சுரண்டல் லாட்டரி என்பதை நான் பார்த்ததில்லை; கேள்விப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு கடைகளிலும், இந்த லாட்டரிச் சீட்டை வாங்கி வைத்துக்கொண்டு, அங்கேயே சுரண்டிப் பார்ப்பது, நம்பர் அதிலே வந்தால், (குறுக்கீடு) ஆரூண் என்ன சுரண்டலா? (சிரிப்பு).

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னால், ஒன்றரை இலட்சம் பேர் பேரணியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கருணை மனுவைத் தந்தார்கள். அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையோடு, 'என்னய்யா, சாதாரண விஷயத்திற்காக ஒரு இலட்சம் பேர், ஒன்றரை இலட்சம் பேர் வருகிறீர்கள்? தொழிலாளர்கள்மீது அக்கறை உள்ள அரசு, ஏழைகள்மீது அக்கறை உள்ள அரசுதான் இது; நாங்கள் நிச்சயமாக பரிசீலனை செய்வோம்' என்று சொன்னார்கள். ஏறத்தாழ இப்போது 5 இலட்சம் குடும்பங்கள் இதை நம்பி இருக்கின்றன. இது குறித்துக் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) Instant lottery-க்கு அமெரிக்காவிலே, இலண்டனிலே விமான நிலையத்திலே 5 கடைகள், 4 கடைகள் வைத்திருக்கிறார்கள். சமீபத்திலே மெக்ஸிகோவிற்குப் போயிருந்தபோது, கனடா போயிருந்தபோது Airport counters-லேயும் விற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் லாட்டரிச் சீட்டு நடத்துவது தொடர்பாகத்தான், அமெரிக்காவுக்கும், மெக்ஸிகோவுக்கும் போகிறீர்கள் என்று ஊரெல்லாம் சொல்கிறார்கள். (சிரிப்பு).

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வேறு Garment Industries எல்லாம் வைத்திருக்கிறோம்; Chemical factories வைத்திருக்கிறோம்; இதுமட்டும் அல்ல. இப்போது நாங்கள் அந்தத்

தொழிலைச் சுருக்கிக்கொண்டோம். வட இந்தியாவைச் சார்ந்தவர்கள்தான் நிறையப் பேர் அதைச் செய்கிறார்கள். நாங்கள் அதை 5 சதவிகிதம் அளவுக்குக்கூடச் செய்வதில்லை. அதுதான் உண்மை. அரசுக்கும் தெரியும். அதிலே உண்மையிலேயே நிறையத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சுரண்டல் லாட்டரி, Instant lottery என்பதை அயல்நாடுகளிலே, கனடாவிலே, பெரிய அளவிலே செய்கிறார்கள். கனடா விமான நிலையத்திலே விற்கிறார்கள். (குறுக்கீடுகள்) சுரண்டல் லாட்டரி என்பது, எந்தப் பேப்பரிலே ஒரு Coin-ஐ வைத்து Rub பண்ணிப் பார்ப்பார்கள். அதிலே நம்பர் வரும்; அதற்குப் பிரைஸ் வரும், ஐயா. (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போலவும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போலவும், இலட்சக்கணக்கான மக்கள் வேலை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் உணராமல் இல்லை. அவர்களுக்கெல்லாம் ஒரு மாற்றுத்தொழில் தருவதற்கும் உடனடியாக முடியாது என்பதையும் எல்லோரும் மிக நன்றாக அறிவோம். அதனால்தான், நடக்கின்ற இந்தப் பரிசுச்சீட்டு ஒழுங்காக, செம்மையாக நடைபெற வேண்டுமென்ற வகையில், அதற்கு என்னென்ன விதிமுறைகளை, சட்ட திட்டங்களை இன்னும் கடுமையாக ஆக்கலாம் என்பதைப்பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு).

டாக்டர் அ. செல்லக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இங்கு அவையிலே பேசுகிறபோது, அவை முன்னவர் அவர்கள், இந்தப் பரிசுச் சீட்டுகள் ஒழிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது. . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், மொத்தமாக ஒழிக்கப்படும் என்று சொல்லவில்லை. நான் சொல்கிறபோது, சட்ட ஆலோசனை பெற்று ஒழிக்கப்படுவதற்குக் கருதப்படுகிறது

என்று சொன்னேன். உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஓரளவுக்குச் சாதகமாக இருக்கிற காரணத்தினால், சட்ட ஆலோசனை பெற்று ஒழிப்பதற்குக் கருதப்படுகிறது என்பதுதான் நான் கூறிய கருத்து.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேராசிரியர் அவர்கள் உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பை ஓரளவுக்குத் தெரிந்துகொண்டு சொன்னார்கள். அவருக்கு எல்லோரையும் போல, சூது, வாது எல்லாம் அதிகமாகத் தெரியாது. (சிரிப்பு) சில பேருக்குத் தெரியும்; யார், யாருக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். (சிரிப்பு). அறவே பரிசுச் சீட்டு ஒழிக்கப்படும் என்று சொல்லவில்லை. இதை எப்படி ஒழுங்குபடுத்தி நடத்தலாம் என்பதைப்பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. ஏனென்றால், இரு தரப்பிலும் இந்த எண்ணத்தைப் பரிமாறிக் கொள்ளவேண்டும். அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுக்கும் கஷ்டம் வராமல், இதனால் துன்பம் வராமல், நாட்டுக்கும் கேடு வராமல் எப்படி நடத்துவது என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

அன்றைக்குக்கூட, நிதிநிலை அறிக்கையிலே முதலில் பேச ஆரம்பித்த நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். குங்குமம் பத்திரிகையிலே பரிசுச் சீட்டு என்று சொன்னார்கள். குங்குமம் மாத்திரம் அல்ல; குங்குமம், தினமலர், மாலை முரசு, தேவி இப்படி எல்லாப் பத்திரிகைகளிலும் வந்தது. அன்றைக்குக் குங்குமத்தை மாத்திரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். விசேஷமானது என்பதால் குங்குமத்தை மாத்திரம் குறிப்பிட்டிருப்பார் என்று கருதுகிறேன். ஆனால் ஒன்று, குங்குமம் எனக்குத் தொடர்புடைய பத்திரிகை அல்ல. ஒரு காலத்திலே தொடர்புடைய பத்திரிகை. இல்லை என்று மறுக்கவில்லை. அந்தப் பத்திரிகை, அவர்கள் கருதுவதைப் போல, எனக்குத் தொடர்புடையதாக இருந்தாலும் கூட, அதையும் தடுப்பதற்காக உத்தரவு போட்ட கைதான் இந்தக் கை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். பரிசுச் சீட்டைத் தடுங்கள், அது குங்குமமாக இருந்தாலும் சரி, எந்தப் பத்திரிகையாக இருந்தாலும் சரி, என்று உத்தரவு போட்டு, அது

நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாம் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். அது இடையிலே விட்டுப்போய் விட்டது. அந்த வரிசையிலேதான் இந்தப் பரிசுச் சீட்டுகளைச் செம்மையாக ஆக்கலாம் என்று எண்ணினோம். 1997-98ஆம் ஆண்டு பரிசுச் சீட்டு மூலமாக, நம்முடைய மாநில அரசுக்குக் கிடைத்துள்ள நிகர வருவாய் - செலவு எல்லாம் போக நிகர வருவாய் - 8.94 கோடி ரூபாய். 1998-99ஆம் ஆண்டு நாம் கைக்கொண்ட பல்வேறு நல்ல முறைகளால் பரிசினுடைய தொகையை உயர்த்தியதன் காரணமாகவும், செம்மைப் படுத்தியதன் காரணமாகவும் - இன்னும் செம்மைப்படுத்த வேண்டியிருக்கிறது - இந்த அளவில் 8.94 கோடி ரூபாயாக இருந்த நிகர வருவாய், 1998-99-ல் 18.34 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை 50 கோடி, 100 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்துவதற்கும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

10ஆவது நிதிக்குழு பரிந்துரைத்தபடி, 1997ஆம் ஆண்டு, அன்றைக்கு இருந்த ஐக்கிய முன்னணி அரசு, மத்திய அரசினுடைய மொத்த வரி வருவாயில், 29 விழுக்காட்டை 1-4-1996 தேதியிட்டு, மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க ஒப்புக் கொண்டது. அப்போது மாண்புமிகு நண்பர் சிதம்பரம் அவர்கள் மத்தியிலே நிதி அமைச்சராக இருந்தார்கள். அவர்களும், மாநில முதலமைச்சர்களும் இப்படி நாங்கள் எல்லோரும் கலந்து கொண்ட கூட்டத்திலேதான் இது வலியுறுத்தப்பட்டு, 29 சதவிகிதம் மொத்த வரியிலேயிருந்து தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அதுவும் முன் தேதியிட்டு 1-4-1996-லே யிருந்து தேதியிட்டுத் தரப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அந்தச் சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்திலே வர இயலவில்லை. அப்பொழுதும் வர இயலவில்லை, இப்பொழுதும் வர இயலவில்லை. அது வந்திருக்குமேயானால், 1998-99ஆம் ஆண்டுக்கு 491 கோடி ரூபாய் கூடுதலாகவும்,

இந்த ஆண்டு நிலுவைத் தொகையாகவும் கிடைத்திருக்கும். நடப்பு ஆண்டுக்கு 539 கோடி ரூபாய், ஆக மொத்தம் 1000 கோடி ரூபாய் வந்திருக்கவேண்டும். இனி நாடாளுமன்றத் தேர்தல் முடிவுற்று, அதற்குப் பிறகு சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டு, அது நிறைவேறிய பிறகுதான் - இன்னும் ஒரு 6, 7 மாதங்களுக்குப் பிறகுதான் அந்த 1000 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட விருக்கிறது. இடையிலே வந்திருந்தால், எத்தனையோ நல்ல பல காரியங்களுக்கு அதைச் செலவிட்டு இருக்க முடியும். பல திட்டங்களுக்கு அவை பயன்பட்டிருக்கக்கூடும்.

2000-2005ஆம் ஆண்டுகளுக்கான, மைய அரசிட மிருந்து மாநில அரசுகளுக்கான நிதிப் பகிர்வு பற்றிப் பரிந்துரை அளிக்க அமைக்கப்பட்டுள்ள 11ஆவது நிதிக்குழுவிடம், மத்திய அரசின் வரி வருவாயில் 29 விழுக்காடு, மாநிலங்களுக்கு 1-4-1996 முதல் பகிர்ந்தளிப்பதோடு, 1-4-1998 முதல், 33.33 விழுக்காடாகப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்றும் இந்த அரசு வற்புறுத்தியிருக்கிறது. 1-4-2000-லேயிருந்து அதை 40 விழுக்காடாக உயர்த்த வேண்டுமென்றும் நாம் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம். தற்பொழுது திட்டப் பணிகளுக்காக, மத்திய அரசு உதவித் தொகையை 70 விழுக்காடு கடனாகவும், 30 விழுக்காடு மானியமாகவும் வழங்கிக்கொண்டு இருக்கிறது. அதைக்கூட 50 விழுக்காடு கடனாகவும், 50 விழுக்காடு மானியமாகவும் மாற்றி வழங்க வேண்டுமென்றும் நாம் மத்திய அரசை, நிதிக் குழுவை, திட்டக்குழுவை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம். சிறு சேமிப்பு நிகர வசூலை நிரந்தரக் கடனாக மாற்றி யமைக்கவும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு மூலதனச் செலவுக்காகக் கூடுதலாக மானியம் அளிக்கப்படவேண்டு மென்றும் மத்திய அரசை நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கின்றோம். இந்தக் கடன்களை நிரந்தரமாக ஆக்குவது என்றால், கடனையே திருப்பித் தருவதில்லையா என்று கேட்கக்கூடும். ஆமாம், அப்படித்தான். அது கடன். கடனாகவே இருக்கும். வட்டி மாத்திரம் ஆண்டுதோறும் வரும்.

ஏறத்தாழ 13 சதவிகித வட்டி. அதுதான் நாம் தரவேண்டி இருக்கும். அதிலே மாநிலங்களுக்குத் தொல்லை இல்லை. மத்திய அரசுக்கும் தொல்லை இல்லாமல், இந்தக் காரியம் நடைபெறும் என்று நாம் அவர்களுக்குத் தெரிவித்து இருக்கின்றோம். அவைபற்றி எல்லாம் யோசிப்பதாகக் கூறி யிருக்கின்றார்கள். யோசிக்கக்கூடிய காலகட்டம் வரும்போது, மாநிலங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

மற்றொன்று, நாம் சில நேரங்களிலே இந்தியாவிலே மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டக்கூடிய அளவிற்குச் செயல்படும்போது, அது நமக்குப் பாதகமாகக்கூட முடிந்து விடுகிறது. உதாரணமாக, குடும்பக் கட்டுப்பாடு; குடும்ப நலத் திட்டம். அந்தக் குடும்ப நலத் திட்டத்தை நாம் செம்மையாக நிறைவேற்றியிருக்கின்ற காரணத்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை ஏற்கெனவே இரண்டு குறைந்துவிட்டது. 41 ஆக இருந்தது தமிழ் மாநிலத்திலே 39 ஆக ஆகிவிட்டது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று, அப்போதே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் - அவர்கள் அப்போது ஆட்சிப் பொறுப்பிலே இல்லை; நான் இருந்தேன் - இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் ஒரு குழந்தைகள் நலத் திட்ட விழாவிற்கு வந்தபோது, அந்தக் குழந்தைகள் நலக் காப்பகத்தினுடைய புரவலராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் என் அருகிலேயே அமர்ந்து இருந்தபோது, இந்திராகாந்தி அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டார்கள், இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டின் காரணமாக தமிழ் மாநிலம் ஏற்கெனவே இரண்டு இடங்களை இழந்துவிட்டது, அதை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று. அவர்களும் யோசிப்ப தாகச் சொன்னார்கள். ஆனால், மத்திய அரசு அதற்கான நடவடிக்கை எதையும் தொடர்ந்து எடுக்கவில்லை என்பது வருந்துவதற்குரிய ஒன்றாகும்.

அதோடு இன்னொன்று. 1997-98 ஆம் ஆண்டு வரையில், மத்திய அரசால் மாநிலங்களுக்கு, வறுமை ஒழிப்பு மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதி எந்த அளவுகோலின்படி வழங்கப்பட்டது என்றால், 1987-88

ஆம் ஆண்டின் வறுமை விகிதாச்சார அடிப்படையிலேதான் வழங்கப்பட்டது. அந்த அடிப்படைதான் அதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 1997-98ஆம் ஆண்டுக்கு, தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை 7.062 விழுக்காடாக அமைந்தது. 1998-99ஆம் ஆண்டில் மத்திய அரசு வேறொரு திருத்திய அளவுகோலை அறிமுகப்படுத்தி, அதைப் பயன்படுத்திய காரணத்தால், தமிழக அரசு வறுமையைக் குறைத்தது என்பதற்குப் பரிசாக, 7.062 என்ற அந்த விகிதாச்சாரம் 4.987 என்கின்ற அளவிற்குக் குறைந்து விட்டது. இது நமக்குக் கிடைத்த பரிசா என்றுதான் ஏக்கத்தோடு நாம் கேட்க வேண்டியிருக்கிறது. வறுமையைக் குறைத்ததற்காக நமக்குத் தர வேண்டிய விகிதாச்சார அளவு குறைந்துவிட்டது. இதை நான் பிரதமரிடத்திலும், அப்போதைய திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் அவர்களிடத்திலும் வலுவாக எடுத்துக்கூறி வாதிட்டிருக்கிறேன். தொடர்ந்து கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கின்றேன்.

19-2-1999-ல் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவிலே கூட, இது குறித்து முழுமையாக ஆராய நாங்கள் எல்லாம் எடுத்துச்சொன்ன பிறகு, ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டது. மீண்டும் இந்தப் பொருள் குறித்து, மாநிலங்களுக்கு வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக அளிக்கப்படும் ஒரு ஒப்புக் கொள்ளக்கூடிய அளவுகோல் நிர்ணயிக்கப்படுகிற வரையில், 1997-98 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட 7.062 என்ற அதே விழுக்காடு அளவுகோலைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்றோம். இந்த முடிவை எடுக்கிறவரையில், ஏற்கெனவே இருந்த அந்த அளவுகோலைத் தான் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம். இவ்வளவு நெருக்கடிகள், நிதி ஆதாரத்தை வலுப்படுத்துவதற்காக நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற சிரமங்கள், இவற்றுக்கு இடையிலும்கூட, அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, செய்யவேண்டிய அந்த உதவிகளை, சலுகைகளை, உரிமைகளை நான் தட்டிக்கழிக்கவில்லை. இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள்

யார், யாரோ, உண்ணாவிரதம், போராட்டம் நடத்துவதை யெல்லாம் கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். மற்றவர்களும் இங்கே பேசும்போது அவற்றைக் குறிப்பிட்டிருக் கின்றார்கள்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபடி, அரசு அலுவலர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும், மத்திய அரசுக்குச் சமமாக ஊதியம் மற்றும் ஓய்வூதியத்தை 1-1-1996-லேயிருந்து முன் தேதியிட்டு, நிலுவை உட்பட அளித்த தொகை 3630 கோடி ரூபாய். இது கூடுதல் செலவு இந்த அரசுக்கு. மத்திய அரசு ஊழியர்களுக்குச் சமமாக அளித்த காரணத்தால் ஏற்பட்ட கூடுதல் செலவு 3630 கோடி ரூபாய். இதில் கடந்த ஆண்டு, அரசு ஊழியர்களுக்கு, அலுவலர்களுக்கு 20 விழுக்காடு நிலுவைத் தொகை வழங்கப்பட்டுவிட்டது. இரண்டாம் தவணையாக இந்த ஆண்டு மே, ஜூன் திங்களில் 20 விழுக்காடு நிலுவைத் தொகை அளிக்கப்படும். அதற்கும் ஏறத்தாழ ஒரு 200 அல்லது 210 கோடி ரூபாய் தேவைப்படும். இப்படி 40 விழுக்காடு கொடுத்துவிட்டு, கடைசியாக 60 விழுக்காடை அவர்களுடைய Provident Fund-லே இணைத்துக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டு, அதை அவர்களுடைய சங்கங்களும் ஏற்றுக் கொண்டு, செய்யப்பட்ட ஒப்பந்தமாகும்.

ஓய்வூதியதாரர்களுக்கும், நிதிநிலை அறிக்கையில் நான் தெரிவித்தவாறு கடந்த ஆண்டு அளித்த நிலுவைத் தொகையான 20 விழுக்காடு போக, ஓய்வூதியத்தில் 40 விழுக்காடு இந்த ஆண்டில் அளிக்கப்படுகிறது. முதலிலே 20 விழுக்காடுதான் சொல்லியிருந்தோம். அவர்கள், எங்களுக்கெல்லாம் வயதாகிக் கொண்டே போகிறது. நாங்கள் எப்போது அந்தப் பணத்தை வாங்குவது என்று கேட்டு, அது உருக்கமாக இருந்த காரணத்தால், 20 என்பதை 40 ஆக உயர்த்தி, 40 விழுக்காடு இந்த ஆண்டு அளிக்கப்படுகிறது. இதற்கான ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டுவிட்டன. இவைகளால் அரசுக்கு இந்த நிதியாண்டில் 410 கோடி ரூபாய் செலவு ஏற்படும். இந்தத் தொகை மே, ஜூன் மாதங்களில் அவர்களுக்கு வழங்கப்பட்டு விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது அகவிலைப்படி: மத்திய அரசு அகவிலைப்படியை அறிவித்துவிட்டது. அறிவித்தது மாத்திரம் அல்ல 'குதிரை கீழே தள்ளியது மாத்திரமல்லாமல், குழியும் பறித்தது என்பதைப்போல 10 சதவிகிதம் உயர்த்தியே வழங்கி இருக்கிறது. என்ன கோபமோ தெரியவில்லை, மாநிலங்களின் மீது. ஆனால், இதுவரையில் நம்முடைய மாநிலம் மத்திய அரசினுடைய இந்த அகவிலைப்படி, ஊதிய உயர்வு, இவற்றைப் பின்பற்றி, அரசு அலுவலர்களுக்கு அதே விகிதத்திலே வழங்கி வந்த காரணத்தினால், முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இந்த முறை அகவிலைப்படி 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் பலபேர் மகிழமாட்டீர்கள், எனக்குத் தெரியும். இருந்தாலும், 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்பட வுள்ளது. தற்போது அளிக்கப்பட்டு வரும் அகவிலைப்படி, ஊதியத்தில் 22 விழுக்காடு என்பதை, 32 விழுக்காடு ஆக உயர்த்தி, நமது மாநில அரசு அலுவலர்களுக்கும் 1-1-1999 முதல் வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனால், ஆண்டு ஒன்றுக்கு 660 கோடி ரூபாய் செலவாகும். இந்த நிதியாண்டில் மாத்திரம் ரூபாய் 825 கோடி தேவைப்படும். இந்த அகவிலைப்படி உயர்வு, அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உதவிபெறும் கல்வி நிறுவனங்களிலே பணிபுரியும் ஆசிரியர்கள், அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனத்திலே பணிபுரியும் அலுவலர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், கிராம உதவியாளர்கள் மற்றும் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏற்கெனவே அலுவலர்களுக்கு 20 விழுக்காடு ஊதியத் திருத்த நிலுவைத் தொகையையும், ஓய்வூதிய தாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் ஓய்வூதிய நிலுவைத் தொகையிலே 40 விழுக்காட்டையும் இந்த ஆண்டு வழங்க இருப்பதால், தற்போதைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, வரும் ஜூலை மாதம் முதல் திருத்திய அகவிலைப்படி ரொக்கமாக வழங்கப்படும். ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான நிலுவைத் தொகை அலுவலர்களின் சேம நல நிதியில் Provident Fund-ல் சேர்க்கப்படும்.

மேலும் தொகுப்பூதியம் (Consolidated Pay) மற்றும் மதிப்பூதியம் (Honorarium) பெறும் பணியாளர்களுக்குச் சென்ற முறை வழங்கப்பட்ட அதே குறியீட்டளவில், உயர்வு 1-1-1999 முதல் வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வால் 12.42 இலட்சம் அலுவலர்களும், 3.47 இலட்சம் ஓய்வூதியதாரர்களும் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் அறிவிக்கின்ற பட்ஜெட், அதாவது நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த முக்கியமான திட்டங்களையெல்லாம் கிடப்பிலே போடாமல், உடனடியாக அதற்கான வரைவு ஆணைகள் தயாரித்து, அந்த ஆணைகள் வெளியிடப் படுகின்றன என்பதைச் சில மேற்கோள்களைக் காட்டி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்க விரும்புகின்றேன். முன்பெல்லாம், அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்கும் அவற்றுக்கான வரைவு ஆணைகள், G.O.-க்கள் வெளியிடப் படுவதற்கும் இடையிலே நீண்ட காலம் தாமதம் ஆகும். இன்றைக்கு அந்த தாமதத்தையெல்லாம் போக்குகின்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட திட்டங்களினுடைய எண்ணிக்கை 245. 245 திட்டங்களுக்கும் அரசாணை வெளியிடப்பட வேண்டும். இவற்றில், 30-4-1999 வரை - மார்ச் மாதம் நிதிநிலை அறிக்கையைப் படித்தேன் என்றால், ஒரு மாதத்திலே, 30-4-1999 வரையில் - 87 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுவிட்டன என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சிய திட்டங்களுக்கும் உரிய G.O.-க்கள் அரசாணைகள், வருகிற 31-7-1999-க்குள் வெளியிடப்படும் என்ற உறுதியையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள் கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அறிவிக்கப்பட்ட அந்த அறிவிப்புகளில் அரசாணை வெளியிடப்பட்டவை ஒன்றிரண்டை மாத்திரம் இங்கே நான் படித்துக்காட்ட விரும்புகின்றேன். தென் மாவட்டங்களிலுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு, அவர்களுக்குக்

கல்வி, பொருளாதார மேம்பாடு, வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி போன்ற முன்னேற்றங்களை உருவாக்கிட அரசு சார்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்ந்து, மேம்பாட்டுத்திட்டம் ஒன்றை வகுத்தளிக்க, நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் தலைமையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழுவிற்கு, பணிகளைத் தொடங்க அரசாணை வெளியிடப்பட்டு, பணிகளை அவர்கள் தொடங்கிவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தரிசு நில மேம்பாட்டு ஆணையம் - Waste Land Development Authority அமைப்பதற்கான அரசாணை - 29-4-1999 அன்று பிறப்பிக்கப்பட்டு விட்டது.

பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதத்தை, பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலே மத்திய அரசு மாற்றியமைத்தது. அதைப் பின்பற்றி மாநில அரசும், இவர்களின் ஊதிய விகிதத்தை 1-1-1996 முதல் மாற்றியமைக்க, 24-3-1999 அன்று அரசாணை வெளியிட்டுவிட்டது.

472 கிலோமீட்டர் நீளத்திற்கு ஆற்றுப்படுகை, 1,624 கிலோமீட்டர் நீளத்திற்கு வடிகால்கள், 1,816 கிலோமீட்டர் நீளத்திற்குக் கால்வாய்கள் மற்றும் 136 குளங்கள் ஆகியவற்றில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ள 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பட்ஜெட்டிலே அறிவித்தேன். அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் தொடங்கி, நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

10 அல்லது 12ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு, சாதிச் சான்றிதழ். அவர்கள் படிப்பை முடித்துப் பள்ளியிலிருந்து - Transfer Certificate - மாற்றுச் சான்றிதழ் பெறும் நேரத்தில், பள்ளியிலே ஒரு சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்து அதையும் வழங்க வேண்டும் என்பதற்கு 1-4-1999 அன்று அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு உறுப்பினர் தொகுதிக்கும் ரூ. 50 இலட்சம், ஐம்பதே ஐம்பது இலட்சம் ஒதுக்கீடு செய்து 15-4-1999 அன்று ஆணை வழங்கப்பட்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆணை வழங்கப்பட்டுவிட்ட காரணத்தால், இனி மாற்ற இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (சிரிப்பு)

மக்கள் நலப் பணியாளர்களின் மதிப்பூதியத்தை ரூபாய் 750-ஆக உயர்த்தி அளிக்கவும், பயணப்படியாக மாதம் ரூபாய் 50 அளிக்கவும் 26-4-1999 அன்று ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

'தொடக்கக் கல்வி இயக்கம்' ஒன்றைத் தொடங்கி, அதன் அவசியத்தை மக்களிடம் பரப்ப, விழிப்புணர்ச்சி முகாம் மே மாதம் நடத்திட, 26-4-1999 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

வணிகவரித் துறையிலே வெளியிடப்பட்ட 30 அறிவிப்புகளில், அதாவது வரி சம்பந்தமான அறிவிப்புகளில், 25 அறிவிப்புகளுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டுவிட்டன.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு, அவற்றின் பங்குத்தொகையாக ரூபாய் 100 கோடியும், மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயண அட்டைகளை வழங்கியதற்கான ஈட்டுத் தொகை ரூபாய் 80 கோடியும் ஒதுக்கீடு செய்து, 21-4-1999 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

திரு கோலப்பன் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, விவசாயத் தொழிலாளியின் குறைந்தபட்ச ஊதியம் குறித்த ஆணை 23-4-1999 அன்று வெளியிடப்பட்டு, தமிழ்நாடு அரசிதழிலும் பிரசுரிக்கப்பட்டுவிட்டது.

மாநிலம் முழுவதுமுள்ள 1,200 மேல்நிலைப் பள்ளி களிலும், 11, 12 ஆகிய வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக எடுக்க வழிவகை செய்யும் ஆணை, 28-4-1999 அன்று வெளியிடப்பட்டுவிட்டது.

பயிர்க்கடனை எவ்வித நிலுவையும் வைக்காமல் முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, அவர்கள் செலுத்திய நடப்புக் கடன் தொகையில் 6.25 விழுக்காடு ஊக்கத்தொகை வழங்க, 6-5-1999 அன்று ஆணை வழங்கப் பட்டாகிவிட்டது.

பத்திரிகையாளர் ஓய்வூதியத்தை 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தியும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியை 25,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாயாக உயர்த்தியும், 28-4-1999 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டாகிவிட்டது.

மனிதக் கழிவை மனிதனே அகற்றும் இழிநிலையைப் போக்குவதற்கான சட்டம் குறித்த தீர்மானம் சட்டமன்றத்தில் 11-5-1999 அன்று நிறைவேற்றப்பட்டுவிட்டது.

5 கோடி ரூபாயை, தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதியாக ஒதுக்கீடு செய்து, நடைபெற்ற தமிழ் மாநாட்டில் நான் வெளியிட்ட அந்த அறிவிப்புக்கு, 6-5-1999 அன்று நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டாகிவிட்டது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அனுப்பப் படும் பட்டியலில் விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் மொழிக் காவலர்களுடைய வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற அரசாணையும் வெளியிடப்பட்டாகிவிட்டது.

தொழில்நுட்பக் கல்லூரிகளில் கிராமப்புற மாணவர் களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள 15 விழுக்காடு குறித்த இடங்களும், உண்மையிலேயே கிராமப்புற மாணவர்களுக்குக் கிடைக்கத்தக்க வகையில் அன்றைக்கு அவை முன்னவர் இங்கே படித்த அந்த அறிக்கைக்கான அரசாணை, 7-5-1999 அன்று வெளியிடப்பட்டுவிட்டது.

இப்படி விரைந்து ஆணைகள் வெளியிடப்பட்டு, செயல்பாடுகள் நடைபெறுகின்றன என்பதற்காகத்தான் இவற்றை யெல்லாம் குறிப்பிட்டேன்.

அதுமாத்திரம் அல்ல. கழக அரசு ஏற்பட்ட பிறகு, சில குழுக்கள் இந்த 3 ஆண்டு காலத்தில் அமைக்கப்பட்டன.

ஒவ்வொரு துறையிலும் ஆக்கப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அந்தக்குழுக்களினுடைய பரிந்துரைகள் நமக்குப் பயன்பட்டு வருகின்றன.

வரவு-செலவுத் திட்டம்சாரா நிதி ஆதாரங்களை விரிவாக ஆய்வு செய்து, அத்தகைய கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவது குறித்துப் பரிந்துரைக்க, ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னரும், மாநிலத் திட்டக்குழுவின் தற்போதைய உறுப்பினருமான வெங்கட்ரமணன் தலைமையிலே ஒரு குழு 5-6-1997 அன்று நியமிக்கப்பட்டு, 9-10-1997 அன்று அறிக்கை கிடைக்கப் பெற்று, குழுவின் பரிந்துரைகள் அனைத்தும் அரசின் பரிசீலனையிலே இன்றைக்கு இருந்து வருகின்றன.

தொழிற் கல்வி மேம்பாட்டுக்காக டாக்டர் அனந்த கிருஷ்ணன் தலைமையிலே ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, பரிந்துரைகளைப் பெற்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. அவர்கள் அளித்த முக்கியப் பரிந்துரைதான் - Single Window System - ஒற்றைச் சாரள முறை ஆகும்.

தமிழகத்திலேயுள்ள தரிசு நிலங்களை மேம்படுத்த முன்னாள் துணை வேந்தர் டாக்டர் வி.சி. குழந்தைசாமி தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளன. அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, புதிதாக, தரிசு நில மேம்பாட்டு ஆணையம் - Waste Land Development Authority ஒன்று நிறுவப்பட்டாகிவிட்டது.

விற்பனை வரி சீரமைப்புக்காக, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தங்கராஜ் அவர்களைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்களையும், வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக்குழு அளித்த பெரும்பான்மையான பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டன.

மேலும் உள்ளாட்சி அதிகாரங்களைப்பற்றி எடுத்துக்கூற, பரிந்துரைக்க ஒரு குழு; மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் ஆகியோருடைய பணி வாய்ப்புப் பின்னடைவுகளைச் சரி செய்வதற்காக ஒரு குழு

அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் அறிக்கை நேற்றையதினம் அவையிலேயும் வைக்கப்பட்டாகிவிட்டது.

தமிழ்ச் சான்றோர், தமிழ் மொழிக்காக நடத்திய போராட்டம். அந்தப் போராட்டத்திலே அவர்களோடு செய்துகொண்ட உடன்பாட்டின்படி அதற்கான ஒரு குழு அமைக்கப்பட்டு, அதுவும் பணியைத் தொடங்க இன்றைக்கு ஆரம்பித்துவிட்டது என்ற நல்ல செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப்போலவே இராமானுஜம் கமிஷன். நிர்வாகத்திலே சீர்திருத்தங்களையும், விரைவையும், மேலும் வேகத்தையும் ஏற்படுத்துவதற்காக, சிறு, சிறு ஊழல்களோ, புகார்களோ, தவறுகளோ, முறைகேடுகளோ நடைபெறாமல் இருப்பதற்காக, நீதியரசர் இராமானுஜம் தலைமையிலே அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் அரசால் பெறப்பட்டு இந்த அவையிலே வைக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். அதிலே தந்த பரிந்துரைகள் 210. அவை இனம் பிரிக்கப்பட்டு, 232 பரிந்துரைகளாக நாம் விரிவாக்கினோம். அதிலே முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் 91; மாறுதலோடு ஏற்றுக்கொள்ளப்பட்டவை 26; ஏற்கப்பட்டு ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டவை 19; கொள்கை யளவில் ஏற்கப்பட்டவையாயினும் மத்திய அரசின் முடிவுக்குப் பின் நடவடிக்கை தொடர உள்ளவை 36; ஏற்கப்படவில்லை என்றாலும் மாற்று ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளவை 12; ஏற்கப்படாதவையெனினும் தற்போதைய முறை தொடரலாம் என 24, ஏற்கப்படாதவை 24. இந்தக் குழுவின் அறிக்கையும், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையும் இந்த அவையிலே கடந்த 11ஆம் தேதி வைக்கப்பட்டது, மாண்புமிகு உறுப்பினர் களுக்கெல்லாம் நன்கு தெரியும். அதிலே முக்கியமான பரிந்துரை களெல்லாம் கட்டம் கட்டி அதிலே வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றை உறுப்பினர்கள் படித்துப்பார்த்தால் தெளிவாகப் புரியும்.

அதிலே இந்த லோக்பால் சட்டம். அதைப்பற்றி நீதிபதி இராமானுஜம் கமிஷன் ஒரு பரிந்துரையைத் தந்திருக்கிறது. அதை ஏதோ நாம் பின்பற்றப்போவதில்லை என்பதைப்போல சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. இந்த லோக்பால் சட்டம் மத்தியிலும், நாடாளுமன்றத்திலும் அந்த மசோதா இருக்கின்ற காரணத்தால், அது நிறைவேறுகிற நேரத்திலே, அது எப்படி, எப்படி அமைக்கப்படுகிறது என்ற அந்த அமைப்பு ரீதியைத் தெரிந்து நாம் நடத்தலாம் என்பதற்காகத்தான் அது ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறதே யல்லாமல் அதை ஏற்க முடியாது என்று மறுத்துவிடவில்லை. கொள்கை அளவிலே அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர், நகராட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் என்று எல்லோரின் மீதும் வருகின்ற புகார்கள் மீது, குற்றச்சாட்டு கள் மீது விசாரிப்பதற்கான சட்டம்தான் லோக்பால் சட்டம். இது நமக்கு ஒன்றும் புதிது அல்ல.

1973ஆம் ஆண்டு இதே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே "Tamil Nadu Public Men (Criminal Misconduct) Act, 1973" என்ற தலைப்பிலே நிறைவேற்றப்பட்டது. அது அப்போது சிலரால் கருப்புச் சட்டம் என்று பேசப்பட்டு, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு, அந்தச் சட்டத்தையே எடுத்துவிட்டார்கள். அந்தச் சட்டத்தில் பொய்யான புகார்களைக் கொடுப்பவர்கள் மீது மூன்றாண்டுகள்வரை சிறைத் தண்டனையும், அபராதம் விதிக்கவும் வழிவகை செய்யப் பட்டிருந்தது. அதனாலே கருப்புச் சட்டம் என்று கூறிவிட்டார்கள். ஆனால், இப்போது மத்தியிலே கொண்டுவந்திருக்கின்ற, 1998ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ள லோக்பால் சட்டத்திலும், பொய்யான புகார் கொடுப்பவர்கள்மீது குறைந்த பட்சம் ஓராண்டு தண்டனையும் - அது மூன்றாண்டுகளுக்கு மிகாமலும், 50,000 ரூபாய் வரை அபராதமும் விதிக்கலாம் என்று வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

நீதிபதி இராமானுஜம் கமிஷன் பரிந்துரையிலும் அதே தகவல். பொய்யான புகார் கொடுப்பவர்கள்மீது ஓராண்டு கால

சிறைத் தண்டனையும், 10,000 ரூபாய் வரை அபராதமும் அல்லது இரண்டும் வழங்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. பரிந்துரையே அப்படி இருக்கும்போது, அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு எந்தவிதமான தயக்கமும் எங்களுக்குக் கிடையாது. இருந்தாலும்கூட, இப்படி மாறுபட்ட கருத்துகள் இருப்பதால், ஏற்கெனவே சொல்லப்பட்ட கருத்துகளையும், எந்த, எந்தக் கருத்துகளை மாற்றியமைக்கலாம் என்பதையும் மீண்டும் ஆழமாகச் சிந்திப்பதற்காகத்தான் மத்தியிலே வர இருக்கின்ற அந்தச் சட்டத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறோம் என்பதைத் தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல், இந்த லோக்பால் சட்டம் வேண்டாம் என்று கருதுகின்ற ஆட்சி அல்ல இந்த ஆட்சி என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லியாக வேண்டும். பெரிய பட்டியல் இருக்கிறது என்னிடத்திலே. கடந்த கால அரசினுடைய சுமைகள் பலவற்றை இந்தத் தலை தாங்க வேண்டியிருந்தது. தலை எப்படி இருக்கிறது என்று உங்களுக்கே தெரியும். இந்தத் தலை தாங்க வேண்டியிருக்கிறது. அவ்வளவு சுமைகளை, அவர்கள் வைத்துவிட்டுப்போன கடன்கள், அவர்கள் தரவேண்டிய தொகைகள், அவர்கள் செய்துவிட்டுப் போன ஊழல்கள், அதன் காரணமாக எற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், இவற்றையெல்லாம் இந்த அரசுதான் இந்த மூன்றாண்டு காலமாக, மெத்த சிரமத்தோடு தாங்கி வருகிறது என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையைச் சேர்ந்த காவல் வாகனம் ஒன்று, 28-9-1991 அன்று விபத்துக்கு உள்ளாகி, உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் என்பவர் இறந்து விட்டார். இந்த அரசாங்கமாக இருந்தால் என்ன செய்யும் என்பதை நீங்கள் என்னைக் கேட்டிருப்பீர்கள். உடனே பணம் கொடு, ஒரு இலட்சம் போதாது இரண்டு இலட்சம் கொடு என்று கேட்டிருப்பீர்கள். நானும் உடனே சரி என்று, இங்கேயே அதை உடனடியாக அறிவித்திருப்பேன். ஆனால் 1991-ல் வாகனம்

ஒன்று விபத்துக்கு உள்ளாகி உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் மாண்டு போனார். எந்த நிதியும் தரவில்லை. தீர்ப்பாயம் வரையிலும் வழக்கு போய்விட்டது. 4-10-1994-ல் தீர்ப்பாயம், தீர்ப்பு அளிக்கிறது. என்ன தீர்ப்பு தெரியுமா? 6 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடாகவும், 15 சதவீதம் வட்டித் தொகையும் வழங்க தீர்ப்பாயம் உத்தரவிடுகிறது. நாம்தான் கட்டுகிறோம். யார் செய்த தவறுக்கு? அப்போதே ஒரு இலட்சம், 2 இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தால் அது முடிந்து போயிருக்கும். இன்றைக்கு அவர்கள் தீர்ப்பாயம் வரையிலே சென்று, 6,34,000 ரூபாய்க்குத் தீர்ப்புப் பெற்றார்கள். 6 இலட்சம் என்று சொன்ன பிறகும்கூட, 1994-ல் அதை ஏற்றுக்கொள்ள வில்லை அரசு. ஏற்றுக்கொள்ளாமல், இதற்கு மேல்முறையீடு செய்யலாம் என்று அப்போது இருந்த வழக்கறிஞர்கள் சொல்லி, அதற்கு ஒரு 25,000 ரூபாய் கோர்ட்டில் கட்டி, ஆனால் மேல் முறையீடும் செய்யாமல், அப்படி இழுபறியாகக் கிடந்து, நம்முடைய தலையில் அது 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக விடிந்திருக்கிறது. ஒரு இலட்சம் ரூபாய், இரண்டு இலட்சம் ரூபாய் நிதி கொடுக்கவேண்டிய விவகாரத்திலே, நீதிமன்றம் வரையிலே சென்று, நீதிமன்றத்தினுடைய தீர்ப்பாயத்தினுடைய முடிவையும் ஏற்காமல், மேல்முறையீடு செய்யப்போகிறோம் என்று அறிவித்து, அதையும் செய்யாமல், 12,50,000 ரூபாயை இப்போது நாம் தரவேண்டிய சூழ்நிலை; தந்தாகிவிட்டது.

அதேமாதிரி, பல விஷயங்கள், கோவை நகரத்திலே காவல் வாகனம் ஒன்று மோதி, மஸ்தான் என்பவர் இறந்த போதும், அது குறித்தும் நீதிமன்றம் வரையில் - தீர்ப்பாயம் வரையில் - அவர்கள் போய் 87 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈட்டுத் தொகை, வழங்கவேண்டிய நாள்முதல் 12 விழுக்காடு வட்டியுடன், அதையும் நாம்தான் இப்போது கட்டியிருக்கிறோம்.

இன்னொன்று, 1995ஆம் ஆண்டு டிசம்பரில், சென்னையில், தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடை பெற்றது. அது எல்லோருக்கும் தெரியும். நல்ல முறையிலே நடைபெற்றது. அந்த விளையாட்டைப் பொறுத்தவரையில், யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. தமிழ்நாட்டினுடைய புகழை நிலைநாட்டுகின்ற அளவுக்கு அந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றது என்பதிலே நமக்கெல்லாம் பெருமைதான். ஆனால், அந்த விளையாட்டுப் போட்டிக்கு, இராணுவ ஹெலிகாப்டர், எம்.ஐ. 8 ரக, மூன்று

ஹெலிகாப்டர்களை டெல்லி தமிழ்நாடு இல்லத்தினுடைய ஆணையாளர், இந்திய விமானப்படையிலே இருந்து தருவித்திருந்தார். தருவித்திருந்தார், முடிந்து போய்விட்டது. 1995-ல் நடைபெற்றது. இப்போது நாம் 1999-ல் இருக்கிறோம். இப்போது வருகிற பில். 47 இலட்சத்து 7 ஆயிரத்து 84 ரூபாய்க்கு பில் வருகிறது. யார் ஆர்டர் கொடுத்தார்கள், என்ன, ஏது என்ற விவரம் எதுவும் கிடையாது. எந்த ஆர்டரும் கிடையாது. நமக்குள்ள சங்கடம், அது இராணுவ விமானம். யார் ஆர்டர் கொடுத்தார்கள் என்று கேட்டால், அவர்களுக்குக் கோபம் வரும். சொல்ல முடியாது. வழியில்லை, பில் அனுப்பி விட்டார்கள். நம்முடைய நிதித்துறையும்,யார் தவறு செய்தார்கள் என்று அப்புறம் கண்டுபிடித்துக்கொள்ளலாம்; முதலில் பணத்தைக் கொடுக்கலாம் என்று சொல்லி, நிதித்துறை பணத்தை அனுப்பி விட்டது, இராணுவ விமானம் என்கின்ற காரணத்தினால். ஏனென்றால், அடுத்த முறை, ஓர் அவசரத்திற்கு என்று கேட்டால் தரமாட்டார்கள். அவசரத்திற்குப் பயன்படாமல் போய்விடும் என்கிற அந்த அச்சத்தின் காரணமாகவே அந்தப்பணம் கட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதற்கு அந்த விமானம் வந்தது? அந்த மூன்று ஹெலிகாப்டர்கள் வந்தது. பூ தெளிப்பதற்கு. பூ தெளிப்பதற்காக வந்த ஹெலிகாப்டருக்கு 47 இலட்சத்து 7 ஆயிரத்து 84 ரூபாய். அதே விளையாட்டுப் போட்டியில் வாண வேடிக்கைக்கு 20 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவு. இதற்கும் நிதித்துறையினுடைய அனுமதியும் கிடையாது. நிதித்துறையினுடைய அனுமதி இல்லாமலே - இன்றையநாள் வரையிலும் தேடிப்பார்க்கிறோம். யார் அனுமதி கொடுத்தார், எப்படி அந்தப் பணம் போயிற்று என்று, இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதெல்லாம் அந்த 46-ல் வராதது. மூன்று சிறப்பு நீதிமன்றங்களில் இருக்கிறதே, அங்கே இருக்கிற 46-லே வராதது இவை எல்லாம். (மேசையைத் தட்டும் ஒலி). 20 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய். இப்படிப் பெரிய பட்டியல் இருக்கிறது. நான் படிக்க விரும்பவில்லை; நேரம் இல்லாத காரணத்தால்.

அது மாத்திரமல்ல. நிதி ஆதாரங்களை நாம் மட்டுப்படுத்த, கட்டுப்படுத்த, திட்டங்களை நிறைவேற்ற, சிக்கனமாக, ஓர் அரசு செயல்பட வேண்டும் என்பதை மனதில் வைத்துத்தான் செயல்படுகிறோம். இதில் உள்ள ஏற்றத்தாழ்வு ஒப்பீட்டையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கும் மற்றும்

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

1989-90-லே நான் முதலமைச்சராக இருந்தபோது, அந்த இரண்டு வருடத்திற்கு எனக்கு ஏற்பட்ட பயணச்செலவு 9 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் - இரண்டு வருடத்திலே - இப்போது இந்த மூன்று வருடத்திலே ஏற்பட்ட பயணச் செலவு 10 இலட்சத்து 23 ஆயிரத்து 116 ரூபாய். இந்த மூன்றையும், இரண்டையும் வேண்டுமானால் கூட்டிப்பார்த்துக்கொள்ளுங்கள், ஒப்பிட்டுக்கொள்வதற்காக. இரண்டையும் சேர்த்தால் 19 இலட்சம், 20 இலட்சம் என்று வைத்துக்கொள்ளுங்கள். 20 இலட்சம், 5 வருடத்திற்கு.

1991-லே இருந்து 1996 வரையிலும் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது ஏற்பட்ட பயணச் செலவு 3 கோடியே 8 இலட்சத்து 94 ஆயிரத்து 666 ரூபாய்.

அடுத்து வீராசாமி விவகாரத்திற்கு வருவோம். மின் கட்டணச் செலவு. இந்த மூன்று ஆண்டிற்கு முதலமைச்சராக இருக்கிற என்னுடைய இல்லத்திற்கான மின் கட்டணச் செலவு 2 இலட்சத்து 48 ஆயிரத்து 944 ரூபாய். செல்வி ஜெயலலிதா அவர்களுடைய இல்லத்திற்கு மின் கட்டணச் செலவு 20 இலட்சத்து 24 ஆயிரத்து 104 ரூபாய்.

இப்படிப்பட்ட ஆடம்பரச் செலவுகள், ஆரவாரச் செலவுகளின் காரணமாக நம்முடைய நிதி நிலைமை எந்த அளவுக்கு மோசமாக ஆகியிருக்கிறது; அவற்றை எல்லாம் சமாளித்து, இந்த ஆட்சியை நாம் எப்படி நடத்திக் கொண்டிருக் கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்ப்பதற்காகத்தான் இவற்றையெல்லாம் சொல்கின்றேன்.

சில அறிவிப்புகள் மானியத்தின்போதும், வேறு விவாதங்களிலும், இன்றைக்கும் மாண்புமிகு உறுப்பினர் களுக்கும், எதிர்க்கட்சித் தலைவரும் எடுத்துவைத்த பல முறையீடுகள் அல்லது வேண்டுகோள் அல்லது கோரிக்கை, இவற்றின் அடிப்படையிலே ஒன்றிரண்டை அறிவிப்புகளாகத் தர விரும்புகிறேன்.

இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றை அமைப்பது பற்றி ஆராய்ந்து, முடிவுகளை அறிவிக்க ஒரு குழுவை அரசு நிச்சயம் அமைக்கும் என்று நான் உறுதி

அளித்திருந்தேன். நாம் குழு அமைத்தால் அது செயல்படுகிறது. பரிந்துரை அளிக்கிறது. அதை நடைமுறைப்படுத்துகிறோம் என்று எல்லோருக்கும் தெரியும். கல்கி சொன்னது மாதிரி, 'காரியம் ஆகவில்லை என்றால் ஒரு கமிட்டியைப் போடு' என்பதுபோல போடுகின்ற கமிட்டிகள் அல்ல இவை. பரிந்துரையைப் பெற்றுச் செயல்படுகிற அரசு இது. (மேசையைத் தட்டும் ஒலி). அந்த வகையில் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்ட, இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிறுவனம் அமைப்பது பற்றி ஆராய்ந்து, முடிவுகளைத் தெரிவிக்கவும், அந்தப் பரிந்துரைகளைப் பற்றி விரைவிலே நடவடிக்கை எடுக்கவும், இயல்பாக தேவையான முறையில் ரிசர்வ் வங்கியினுடைய முன்னாள் கவர்னரும், தமிழகத்தினுடைய முன்னாள் நிதித்துறைச் செயலாளருமாக இருந்தவரும் தற்போது தமிழக மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினருமான திரு. வெங்கட்ரமணன் அவர்கள் தலைமையிலே ஒரு குழு இதற்காக அமைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னொரு அறிவிப்பு. 30 ஆண்டுகளாகக், குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் அமைப்புகளின் பராமரிப்புப் பணிகளை, குடிசைமாற்று வாரியமே கவனித்து வந்தது.

குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் பணியில் குடிசைப் பகுதிக் குடியிருப்புகளில் வாழும் மக்கள் உடனடிப் பயன்களைப் பெற, சென்னையிலே உள்ள 146 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை சென்னைக் குடிநீர் வாரியமே எடுத்து மேம்படுத்தி பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதற்குச் செலவாகும் 7 கோடியே 89 இலட்சம் ரூபாயை சென்னைக் குடிநீர் வாரியமும், தமிழக அரசும் சரிபாதியாக ஏற்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 146 குடிசை மாற்றுப் பகுதிகளில் உள்ள சுமார் 3 இலட்சத்து 26 ஆயிரம் மக்கள் பயனடைவார்கள்.குடிசைமாற்றுவாரியக் குடியிருப்புகளில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் குடிநீருக்குக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படக் கூடாது என்று இந்த அரசு குடிநீர் வாரியத்திற்கு ஆணையிட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமாத்திரமல்லாமல், சென்னை மாநகரத்தை அடுத்துள்ள மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர், பல்லாவரம், தாம்பரம் நகராட்சிகளிலும், பம்மல், அனகாபுத்தூர், மீனம்பாக்கம், சிட்லபாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், வளசரவாக்கம், மதுரவாயல், போரூர், பேரூராட்சிகளிலும், பரங்கிமலை கன்டோன்மென்டிலும், பொழிச்சலூர், கவுல்பஜார், இராமாபுரம் ஊராட்சிகளிலும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களை சுமார் 30 கோடி ரூபாய் செலவிலே சென்னை குடிநீர் வாரியம் மூலமாக இந்த நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தால் சுமார் பத்து இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் துறை மானியக் கோரிக்கையிலே பேசும்போது, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே உப்பளத்தொழில் ஆபத்தான நிலையில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, கடந்த ஆட்சிக் காலத்தில், ஒரு ஏக்கர் உப்பள நிலத்திற்குக் குத்தகைத் தொகை 29 ரூபாய் என்று இருந்ததை உயர்த்தி, 429 ரூபாயாக ஆக்கியதன் விளைவாக அந்தத் தொழிலையே மூடக்கூடிய அபாயம் இருக்கிறது என்று பேசினார்கள். இதை அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் பலமுறை என்னிடத்திலே எடுத்துக்கூறி, துளைத்து எடுத்துக் கொண்டிருந்தார். அதற்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே அந்தக் குறையை எடுத்துக்காட்டினார்கள். அதற்கு உடனே நான், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்தை இந்த அரசு அலட்சியப்படுத்தாது, 400 ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருந்தால் அது அதிகம்தான், பழைய அளவுக்கு குறைக்க முடியாவிட்டாலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும், ஒத்துக்கொள்கிற அளவுக்கு அதைக் குறைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்று பதில் அளித்தேன். அதற்கேற்ப, இந்தப் பிரச்சினையை ஆழமாகப் பரிசீலனை செய்து அதன் தொடர்பான கோப்பில் நேற்றையதினம் ஒப்புதல் அளித்து, உத்தரவிட்டதற்குப் பிறகுதான் அதுபற்றி இப்போது இங்கே பேசுகிறேன். 22-6-1982 அன்று வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் - 1982-ல் உப்பள நிலங்களுக்கான குத்தகை ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்குக் குத்தகை ராயல்டி,

அத்தோடு தல வரி, தலமேல் வரி எல்லாம் சேர்த்து 39 ரூபாய் என்று இருந்தது; எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்தது. பிறகு 1993ஆம் ஆண்டில், கடந்த ஆட்சிக்காலத்தில், செல்வி ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 12-3-1993 அன்று உப்பள நிலத்திற்குக் குத்தகைத் தொகையை மாற்றியமைத்து உயர்த்தி, ஆணை வெளியிடப்பட்டது. கடந்த ஆட்சிக் காலத்தில், இந்த ஆணையின்படி, ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்குக் குத்தகை ராயல்டி, தல வரி, தலமேல் வரி எல்லாம் சேர்த்து 445 ரூபாய் என்று ஆனது. இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கோரிக்கை, சட்டமன்ற உறுப்பினர் தூத்துக்குடி பெரியசாமி அவர்களுடைய கோரிக்கை, இவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு, உப்பளத் தொழிலாளர்களுடைய நல வாழ்வு, உப்பளத் தொழில் நலிந்துவிடாமல் இருக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றையெல்லாம் கருதிப் பார்த்து, 445 ரூபாய் என்று கடந்த ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்பட்ட குத்தகைத் தொகையைக் குறைத்து, குத்தகை ராயல்டி, தல வரி, தலமேல் வரி எல்லாவற்றையும் சேர்த்து, ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டு ஒன்றுக்கு 135 ரூபாய் செலுத்தினால் போதும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). 445 ரூபாய் என்பது 135 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

மற்றொன்று; பனை வெல்லத்திற்கு இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் விற்பனைக் குழுக்களில் சந்தைக்கட்டணம் வசூலிப்பதைக் கைவிடவேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று பனை வெல்லத்திற்கு சந்தைக்கட்டணம் வசூலிப்பதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் மற்றும் கோவை பயிர்ப் பாதுகாப்பு விசைத் தெளிப்பான் மற்றும் உதிரிப் பாகங்கள் தயாரிப்பாளர்கள் அமைப்பு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூடச் சொன்னார்கள்; இவர்களின் கோரிக்கையை ஏற்று விவசாய விசைத் தெளிப்பான்கள் - Agricultural Power Sprayers மீது விதிக்கப்படும் விற்பனை வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது.

ஈரோடு மஞ்சள் மற்றும் மசாலாப் பொடிகள் சிறு தயாரிப்பாளர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, வணிகச் சின்னமிடப்பட்ட அல்லது சின்னமிடப்படாத - பஜ்ஜி, முறுக்கு போன்றவை தயாரிக்கப் பயன்படும் மசாலா கலந்த மாவுப் பொருட்கள்மீது விதிக்கப்படும் விற்பனை வரி 11 விழுக்காட்டி லிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள்; இன்றைக்கும் சொன்னார்கள் பல பேர்; தமிழ்நாடு அகர்பத்தி தயாரிப்பாளர் மற்றும் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, அகர்பத்தி மீது விதிக்கப்படும் விற்பனை வரி 8 விழுக்காட்டி லிருந்து தற்போது 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. முழுமையாக குறைத்தால் 5 அல்லது 6 கோடி ரூபாய் இழப்பு ஆகும். அதனால் 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

சித்த மருந்துகள் பற்றி இங்கே பேசப்பட்டது. அப்போது நான் இங்கு இல்லை. சித்த மருந்து உயர்ந்ததா அல்லது அலோபதி உயர்ந்ததா என்றார்கள். நம்முடைய வீராசாமி அவர்களும், மத்திய அரசினுடைய அமைச்சரும் கலந்து கொண்ட மாநாட்டில் பேசும்போது நான் சொன்னேன். இந்த இரண்டைப் பற்றியும் சொன்னேன். அலோபதியா, சித்தமா என்கிறபோது 'வரும் முன் காப்பது சித்த மருத்துவம், வந்த பின் காப்பது அலோபதி மருத்துவம்' என்று நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். எனவேதான் சித்த மருத்துவத்துக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் முழு வரிவிலக்கை யுனானி மருந்துகளுக்கும் நீட்டிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ஏற்று, யுனானி மருந்துகள் மீது விதிக்கப்படும் 8 விழுக்காடு வரி அறவே நீக்கம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மேற்கண்ட வரிக் குறைப்பு மற்றும் வரி விலக்கு ஆகியவை, வரும் 1-6-1999 முதல் அமலுக்கு வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சில முரண்பாடுகள், உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன் அவர்கள் தெரிவித்ததைப்போல, கவரா, லெட்டரா என்றெல்லாம் இருக்கிறது. அதிலே அச்சடிக்கப்பட்ட தாளுக்கும், அச்சடிக்கப்படாத கவருக்கும் உள்ள வித்தியாசங்கள் எல்லாம்

இருக்கின்றன. இந்த முரண்பாடுகளைப்பற்றிப் பலரும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பற்றி அறிய ஏற்கெனவே அமைக்கப்பட்டதைப் போன்ற, வரி சீரமைப்புக் குழு மீண்டும் அமைக்கப்பட்டு, அவர்களுடைய கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் கேட்டு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழக அரசு ஏற்பட்ட பிறகு, இதுவரை தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகளார், திரு.வி.க., புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, வ.உ.சிதம்பரனார், வ.வே.சு. அய்யர், பரலி நெல்லையப்பர், வ.ரா., ச.து.சு. யோகி, சா. கணேசன், கல்கி போன்றவர்களின் நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக்கியதை அனைவரும் அறிவீர்கள். அந்த வரிசையில், சிறந்த மொழி பெயர்ப்பாளராகவும், பத்திரிகையாளராகவும், நாடக நடிகராகவும், எழுத்தாளராகவும், திகழ்ந்து, நாடகம், சிறுகதை, அரசியல் ஆகிய துறைகளில் காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, பிளேட்டோவின் அரசியல், கிரேக்கக் குடியரசு, அரிஸ்டாட்டில், இட்லரின் மெயின் கேம்ப் போன்ற அரிய பல நூல்களை ஆக்கித் தந்தவருமான திரு. வெ. சாமிநாத சர்மா அவர்களின் நூல்களையும் நாட்டுடைமை யாக்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றொன்று, மூத்த பத்திரிகையாளரும் - தமிழில் மூத்த பத்திரிகையாளரும் - தமிழில் பல நூல்களை எழுதி வெளியிட்டிருப்பவருமான திரு. ஐ. சண்முகநாதன் அவர்கள் 'ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு வரலாறு' என்ற பெயரில் ஒரு பெரிய வரலாற்று நூலை எழுதி வெளியிட, அரசிடம் மானியத் தொகை கோரியுள்ளார். நேற்று அவரை அழைத்து, நானும், நம்முடைய நிதித்துறைச் செயலாளரும், கலந்து பேசினோம். ஓர் அருமையான நூலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். ஆங்கில பாணியில் தயாரிக்கப்படுகிற அந்த நூல் ''ஒரு தமிழனுடைய பார்வையில் 20ஆம் நூற்றாண்டு''.

உலகம் முழுவதும் 20ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற சம்பவங்களை எல்லாம் படங்கள் மூலம் சிறு குழந்தைகளும் கூடப் படித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு அந்த நூலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார். 'ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு வரலாறு' என்ற பெயரில் ஒரு வரலாற்று நூலை எழுதி வெளியிட, அரசிடம் மானியத் தொகையும், அரசு சார்பிலே நூலகங்களிலும், அரசு அலுவலகங்களிலும் அந்நூல் இடம்பெற அரசே 2000 பிரதிகளை வாங்கிக்கொள்ளவேண்டுமென்றும் கோரிக்கை ஒன்றை வைத்துள்ளார். வருங்காலத் தலைமுறையினருக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இந்த நூல் பெரிதும் பயன்படும் என்பதால், திரு. ஐ. சண்முகநாதன், ''ஒரு தமிழன் பார்வையில் இருபதாம் நூற்றாண்டு'' என்ற நூலினைத் தயாரித்து வெளியிட உதவியாக மூன்று இலட்சம் ரூபாயை அரசின் சார்பில் மானியமாக வழங்குவதென்றும், (மேசையைத் தட்டும் ஒலி). அந்த நூலின் 2 ஆயிரம் பிரதிகளை அரசு சார்பில் வாங்குவது குறித்து, நூல் அச்சிடும் பணி முடிவுற்ற பிறகு முடிவெடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நேற்றையதினம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஊதிய உயர்வு குறித்து இங்கே அறிவிக்கப்பட்டபோதிலும், ஓய்வு பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் குறித்து அறிவிக்கப்படவில்லை. அவர்களுடைய கோரிக்கையை அவை முன்னவரும், நானும், மீண்டும் பரிசீலித்து இந்த முடிவை எடுத்திருக்கின்றோம். ஓராண்டுகால அளவிற்கு மட்டுமே பணியாற்றிய முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய ஓய்வூதியம் இதுவரை 2 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை, இனிமேல் 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலவே ஓராண்டுக்கு மேல் பணியாற்றி ஓய்வு பெற்ற சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு இதுவரை ஓய்வூதியம் 3 ஆயிரம் என்று இருந்ததை, இனிமேல் 5 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). ஏன் என்றால், நான்

பல முன்னாள் எம்.எல்.ஏ.க்களைப் பார்க்கின்றேன். பஞ்சக் கோலமாக, பராரியாக, அழுக்குச் சட்டையோடு, கிழிந்த வேட்டியோடு பல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்தேன். தி.மு.க. உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, வேறு கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அப்படிப்பட்ட கோலத்தில் பலரைப் பார்க்கின்றேன். அப்படிப் பார்த்த காரணத்தினாலேதான் 5 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்த வேண்டும் என்று, முடிவுக்கு வந்தோம்.

இன்னொன்று, ஓய்வூதியம் பெறும் முன்னாள் எம்.எல்.ஏ. இறந்துவிட்ட பிறகு, அவர் பெற்று வந்த ஓய்வூதியத் தொகையில் 50 சதவீதம் மனைவிக்கு அல்லது வாரிசுதாரர் களுக்கு அரசு வழங்கும், அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல, என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றொன்று; இறுதியாக இரண்டு, மூன்று முறை இந்த அவையிலே சொல்லப்பட்டது; பத்திரிகையிலே எல்லாம் ஒரு தவறான தலைப்பைப் போடுகிறார்கள். என்னுடைய அறிக்கையையும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். 'POTA' சட்டத்தைத் தி.மு.க. ஆட்சி வாபஸ் பெற்றுவிட்டது என்று போடுகிறார்கள். இப்படிச் சொல்வதால் சுப்பராயன் அதிர்ச்சி அடையத் தேவையில்லை. வாபஸ் பெறவில்லை. சட்டத்தை அறிமுகப்படுத்தினோம், அதை நடைமுறைப்படுத்தினால் அல்லவா வாபஸ் பெறுவது- நடைமுறைப்படுத்தவே இல்லை. சட்டத்தை இங்கே பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய ஆதரவோடு நாம் நிறைவேற்றினோம். அதை மத்திய அரசுக்கு அனுப்பினோம். மத்திய அரசு, குடியரசுத் தலைவருக்கு அதை அனுப்புவதற்கு முன்பாகவே, சில விளக்கங்களை நம்மிடத்திலே கேட்டிருந்தது. அதற்கிடையே பல தலைவர்கள் என்னைச் சந்தித்தார்கள். இஸ்லாமிய சமுதாயத் தலைவர்களும், சிறுபான்மை சமுதாயத் தலைவர்களும், கிருத்துவ சமுதாயத் தலைவர்களும், அஃதன்னியில் இஸ்லாமியர் அல்லாத, கிருத்துவர் அல்லாத பல்வேறு கட்சித் தலைவர்கள் என்னைச் சந்தித்து இதைப்பற்றி என்னிடத்திலே பேசினார்கள். கொஞ்சம்

பொறுமையாக இருங்கள் என்று அவர்களுக்குச் சொல்லி வைத்தேன். இந்த விளக்கங்களைக் கேட்டதையே சாக்காக வைத்துக்கொண்டு, நான் ஏற்கெனவே அறிவித்ததைப்போல, சட்ட அமைச்சர் மாண்புமிகு ஆலடி அருணா தலைமையிலே ஒரு குழு அமைத்து, செலக்ட் கமிட்டிக்கு விடலாமா என்று யோசித்தபோது, நம்முடைய சட்டப் பேரவையினுடைய செயலகத்தின் மூலமாகப் பெறப்பட்ட தகவல், 'இங்கே நிறைவேறிய பிறகு செலக்ட் கமிட்டிக்கு விட முடியாது' என்று சொன்னதன் காரணமாக, இதை நாம் நிறைவேற்றப் போவதில்லை என்று அறிவித்துவிட்டோம். எனவே, திரும்பப் பெற்றுவிட்டோம் என்பதிலே அர்த்தமே இல்லை. நடை முறைக்கே வரவில்லை நடைமுறைக்கு வந்திருந்தால்தான் திரும்பப்பெற்றோம் என்றாகும். ஒரு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தால், தாக்கல் செய்யப்பட்ட பிறகு வாபஸ் பெறுவது என்பது வேறு. தாக்கல் செய்யாமலேயே, தாக்கல் செய்வதற்காகப் போகும்போதே திரும்பிவிடுவது வேறு. ஆகவே, இந்தச் சட்டம் திரும்பப் பெறப்பட்டதாக நீங்கள் கருத வேண்டாம். இந்தச் சட்டம் அமலுக்கு வராது என்பதைத்தான் அழுத்தம் திருத்தமாக நான் கூறியிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்து, இன்று காலை முதல் இதுவரையில் நல்ல பல கருத்துக்களை, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்குப் பகிர்ந்தளித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, இந்த அளவில் அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

தாழ்த்தப்பட்டோர் நல மானியம்

உரை : 60 **நாள் : 16.05.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்களே, தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்களின் கையைப் பிடித்துத் தூக்க வேண்டும், அதற்காக முன்னேறிய சமுதாயத்தின் காலைப் பிடித்து இழுக்கக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றுகின்ற சமூக நீதிக் கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கொள்கை இன்று நேற்று அல்ல, நீண்ட நெடுங்காலமாக நான் தலைமை ஏற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச்சொல்லி வந்திருக்கின்றேன். 1928-ஆம் ஆண்டு தமிழகத்திலே ஓர் ஒளி தோன்றியது. இருட்டைக் கிழித்துக்கொண்டு வெளி வந்த ஒளி அந்த ஒளி. அந்த ஒளிக்குப் பெயர்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் Communal G.O. என்பதாகும்.

அந்த ஒளியைப் பிரகாசிக்கச் செய்தவர் முத்தையா முதலியார். அன்றையதினம் நீதிக்கட்சியினுடைய அமைச்சரவையில் சுப்பராயன் அவர்கள் இருந்தபோது இந்தச் சட்டத்தை இயற்றி, அப்படி இயற்றப்பட்ட காரணத்திற்காக தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கத்தில் மந்திரி முத்தையா முதலியார் வாழ்க, வாழ்க, வாழ்க என்று மூன்று முறை எழுதி தலையங்கத்தைத் தீட்டினார்கள். அன்றைக்கு முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் முத்தையா முதலியார் அவர்கள். இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட அந்தக் காலத்திலே Non-Brahmins என்று அழைக்கப்பட்ட மக்களுடைய எழுச்சிக் குரல் ஒலித்தபோது அந்தக் குரலுக்கு மேலும் ஆக்கமும், ஊக்கமும் சேர்க்கின்ற வகையிலும் குறிப்பிட்ட சில சமுதாயங்கள் தான் முன்னேற வேண்டும், மற்ற சமுதாயங்கள் எல்லாம்

பின்னுக்குத் தள்ளப்பட்டே கிடக்கவண்டும் என்ற அந்தக் கொள்கையிலிருந்து மக்களையும் விடுவித்து, தாழ்த்தப் பட்டவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும், ஓரம் கட்டப்பட்டவர்களையும் விடுவித்த இயக்கம்தான் அன்றைக்கு நீதிக் கட்சியாக, சுயமரியாதை இயக்கமாக ஜஸ்டிஸ் கட்சி என்று ஆங்கிலப் பெயரால் அழைக்கப்பட்ட இயக்கமாக திராவிடர் கழகமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக, பொதுவில் திராவிட இயக்கமாக இன்றைக்குப் பரிணமித்துக் கொண்டிருக்கிறது. திராவிட இயக்கம் என்றால் என்ன, அதனுடைய கொள்கை என்ன என்று கேட்கும்போது, திராவிட இயக்கம் என்றால் என்ன என்று அடையாளம் காட்ட வேண்டுமேயானால், இன்றைக்கு சட்டசபையில் நடைபெற்ற வாதம் இருக்கிறதே இந்த விவாதம்தான் திராவிட இயக்கம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

1928-ஆம் ஆண்டு அரும்பிய இந்த மலர், இன்று மணம் வீசி ஒரு பெரிய வரலாற்றுப் புதுமையை தமிழ்நாட்டு சட்டப் பேரவையிலே தமிழக அரசிலே, தமிழ் நிலத்திலே உருவாக்கியிருக்கின்றது. இந்த இயக்கம்தான், இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கின்ற இந்த இயக்கம்தான் 1951 ஆம் ஆண்டு கம்யூனல் ஜி. ஓ. செல்லுபடியாகாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தபோது இந்த இயக்கத்தினுடைய தலைவர் தந்தை பெரியார் அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமான தளபதியாக விளங்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழிலே எழுதிய தலையங்கத்திலே இவ்வாறு குறிப்பிடு கின்றார். ''ஏமாந்த காலத்திலே ஏற்றம் கொண்டவரால் சமூக நீதி சாக்கடையிலே தள்ளப்பட்டுவிட்டது. சட்டம் என்ற கோல் கொண்டு சுப்ரீம் கோர்ட் இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி, வகுப்புரிமை செல்லுபடியாகாது என்ற தீர்ப்புத் தந்துவிட்டது. சட்டம் என்ற கூண்டு, உள்ளே சமூக நீதித் தேன் தேடி அலைவதை தேள் கொட்டியதைப் போல சமநீதி மூலம் தம் முடிந்துபோன வாழ்வைச் சீர்படுத்திக்கொள்ளத் தொடங்கிய மக்களின் முன்னேற்றப் பாதையிலே விழுந்த பேரிடியாகும் இந்தச்சம்பவம். திகைத்துத் திண்டாடும் திராவிடச் சமுதாயம், இரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி முரசு கொட்ட, எங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டதா? இருதயத்தையோ எத்தர்கள் எடுத்துவிட்டனர். எங்களுக்கா இந்தப் பேரிடி, என்று தமது ஒளியிழந்த கண்களிலே நீர் ததும்ப, ஒலியிழந்த குரல்களிலே

வேதனை தொனிக்க, தமது தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது இந்தச் சமுதாயம். சமூக நீதி சென்னை நீதிமன்றத்திலே, சட்டப் பிரச்சினை மூலம் சாய்க்கப்பட்டது. நாம் எல்லாம் குமுறினோம்; நாடெங்கும் மக்கள் கண்டனத்தைத் திரட்டிக் காட்டினோம். சமநீதி வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்து என்ற முழக்கங்களோடு'' என்று அன்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வழி வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1969ஆம் ஆண்டு முதன் முதலாக சட்டநாதன் தலைமையிலே பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஒன்றை அமைத்தோம்.

1954ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு 16 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றும், பொதுப் போட்டியினருக்கு 59 சதவிகிதம் என்றும் இருந்ததை, 1971ஆம் ஆண்டுவரை யாரும் மாற்றவில்லை; உயர்த்தவும் இல்லை.

1971-ல் கழக அரசுதான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிமக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப் பட்டோருக்கு 31 சதவிகிதம் என்றும், பொதுப் போட்டியினருக்கு 51 சதகிவிதம் என்றும் உயர்த்தியது. மிகப் பிற்படுத்தப் பட்டோருக்குத் தனி ஒதுக்கீடு வேண்டும் என்று பல ஆண்டுகளாக இருந்த கோரிக்கையை ஏற்று, மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப் பட்டோருக்கு 30 சதவிகிதம் என்றும் இட ஒதுக்கீடு செய்தது 1989-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசிலேதான். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவிகிதம் என்று இருந்த ஒதுக்கீட்டை ஆதிதிராவிடருக்கு மாத்திரம் 18 சதவிகிதம் என்றும் பழங்குடியினருக்குத் தனியாக ஒரு சதவிகிதம் என்றும் ஆக்கியதும் 1990-ல் தி.மு.க அரசிலேதான். பிற்படுத்தப் பட்டோருக்கு எனத் தனி இயக்ககம் ஒன்று உருவாக்கப்பட்டதும் 1969-ல் தி.மு.க. ஆட்சியிலேதான். பிற்படுத்தப்பட்டோர் நலனைக் கவனிக்க அதற்கென்று தனியாக தனி அமைச்சர் நியமிக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியிலேதான். மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு எனத் தனி இயக்கம் தோற்று விக்கப்பட்டதும் 1989-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். பழங்குடியினர் நல இயக்ககம் அறிவிக்கப் பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். 31-3-2000 அன்றுதான் இதற்கான அரசாணை வெளியிடப்

பட்டிருக்கின்றது. நேரடி நியமனத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாத காலியிடங் களை மற்ற வகுப்பினர்களைக் கொண்டு நிரப்பக்கூடாது என்ற தடை Ban on De-reservation அறிமுகப்படுத்தப்பட்டதும் 2-7-1989 இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான்.

நேரடி நியமனத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாத காலி இடங்களை மற்றவகுப்பினரைக் கொண்டு நிரப்பக்கூடாது என்று தடை அறிமுகப்படுத்தப்பட்டது. 21-8-1989-ல் தி.மு.க. ஆட்சியிலேதான்..

அரசுத் துறைகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாத பணி இடங்களை ஒரு காலவரையறைக்குள் நிரப்புவதற்குரிய வழிவகைகளைக் காண அந்தத் துறையின் அமைச்சர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது. 13-9-1997-ல் இந்த ஆட்சியிலேதான்.

அதைப்போலவே பிற்படுத்தப்பட்டோர். மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரப்பப் படாத பணி இடங்களை ஒரு கால வரையறைக்குள், நிரப்ப வழிமுறைகளைக் காண அந்தத் துறை அமைச்சர் தலைமையிலே குழு அமைக்கப்பட்டதும் 1-6-1998-ல் தி.மு.க. ஆட்சியிலே தான்.

இந்தக் குழுவின் அறிக்கைகள் அமைச்சரவை துணைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, அவர்கள் தந்த அறிக்கைகள் 11-5-1999 அன்று அமைச்சரவைக் கூட்டத்திலே வைக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

நேரடி நியமனங்களில் பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என்று இருந்ததை மாற்றி ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கும் இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்தலாம் என்று முடி வெடுக்கப்பட்டு 21-9-1999 இல் அரசாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோருக்கு உள்ள நிரப்பப்படாத பின்னடைவுப் பணி இடங்களை முன்கொணர்ந்து நிரப்பும் முறை விரிவுபடுத்தப்பட்டது. 2-5-2000 இல் இந்த ஆட்சியிலே தான்.

இதுவரை நடைமுறையில் இருந்த இனச்சுழற்சி முறையில் Roster, முதல் பத்து இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஓர் இடம் என்று இருந்ததைத் தற்போது ஆதிதிராவிடர்களுக்கு இருப்பதைப் போல, இரண்டு இடங்கள் என்று மாற்றி அமைத்துள்ளதும் இந்த ஆட்சியிலே தான் என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தத் தமிழக சட்டமன்ற சரித்திரத்தில் அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு சம்பந்தமாக வைக்கப்பட்டுள்ள முதலாவது வெள்ளை அறிக்கை இதுதான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியிடங்கள் A, B, C,D. என்று நான்கு, தொகுதிகளாக - Groups பிரிக்கப்பட்டுள்ளன. 'A' தொகுதி - Groups என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாயும் அதற்கு மேலும் பெறுகின்றவர்கள். உதாரணமாக D.R.O., கூடுதல் S.P. கண்காணிப்புப் பொறியாளர் Civil Surgeon பல்கலைக் கழக இணைப்பேராசிரியர், துணைச் செயலாளர் போன்ற பதவிகள் 'A' தொகுதியைச் சார்ந்தவை.

'B' தொகுதி என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 5000 ரூபாய்க்கு மேல் 10,000-க்குக் கீழ் பெறுபவர்கள் உதாரணமாக, Deputy Collector D.S.P. Assistant Civil Surgeon, Commercial Tax Officer போன்ற பதவிகள் 'B' தொகுதியைச் சார்ந்தவை.

'C' தொகுதி என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 2,610 ரூபாய்க்கு மேல் 5,500-க்குக் கீழே பெறுபவர்கள் 'C' தொகுதியைச் சேர்ந்தவர்கள். உதாரணமாக Junior assistant, typist, record clerk, assistant commercial tax officer, sub-inspector போன்றவை 'C' தொகுதியைச் சார்ந்தவை.

'D' தொகுதி என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 2,610 ரூபாய்க்குக் கீழ் பெறக்கூடியவர்கள். உதாரணமாக, அலுவலக உதவியாளர்கள், அதாவது ப்யூன்கள் Sanitary Workers, Watchman போன்றவை 'D' தொகுதியைச் சார்ந்தவை.

'A' தொகுதியிலே 1-1-1999 அன்றைய நிலவரப்படி 4,588 பேர் அரசுத்துறைகளிலும் 3,660 பேர் பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும் ஆக மொத்தம் 8,248 பேர் இருக்கிறார்கள்.

'A' தொகுதியிலே மொத்தம் உள்ள 8,248 பேரில், ஆதிதிராவிடர்கள் 591 பேர், பழங்குடியினர் 20 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 665 பேர், பிற்படுத்தப் பட்டோர் 4,744 பேர்.

'A' தொகுதியில் அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுக் காலிப் பணியிடங்கள்; ஆதிதிராவிடர்கள் 168 பேர், பழங்குடியினர் 5 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 97 பேர்.

'B' தொகுதியில் 1-1-1999 அன்றைய நிலவரப்படி 1,69,682 பேர் அரசுத் துறைகளிலும், 24,297 பேர் பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும் ஆக மொத்தம் 1,93,979 பேர் இருக்கிறார்கள். 'B' தொகுதியில் மொத்தம் உள்ள 1,93,979 பேரில், ஆதிதிராவிடர்கள், 24,910 பேர். பழங்குடியினர் 821 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 30,239 பேர், பிற்படுத்தப்பட்டோர், 1,07,686 பேர்.

'B' தொகுதியில் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப்பணியிடங்கள்; ஆதிதிராவிடர்கள் 1545 பேர். பழங்குடியினர் 130 பேர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 542 பேர்.

'C' தொகுதியில் 1-1-1999 நிலவரப்படி 4,24,131 பேர் அரசுத் துறைகளிலும் 2,14,302பேர் பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும், ஆக மொத்தம் 6,38,433 பேர் இருக்கின்றார்கள். 'C' தொகுதியில், மொத்தம் உள்ள 6,38,433 பேரில், ஆதிதிராவிடர்கள் 1,04,368 பேர், பழங்குடியினர் 4992 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 99,129 பேர், பிற்படுத்தப் பட்டோர் 3,20,537 பேர் 'C' தொகுதியில் அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள்

ஆதிதிராவிடர்கள் 2537 பேர், பழங்குடியினர் 825 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 2300 பேர்.

'D' தொகுதியில் 1-1-1999 அன்றைய நிலவரப்படி 1,53,138 பேர் அரசுத் துறைகளிலும், 76,496 பேர் பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும், ஆக மொத்தம் 2,29,654 பேர் இருக்கின்றார்கள். 'D' தொகுதியில் மொத்தம் உள்ள 2,29,654 பேரில், ஆதிதிராவிடர்கள் 68,897 பேர், பழங்குடியினர் 3430 பேர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 33,021 பேர், பிற்படுத்தப்பட்டோர் 82,875 பேர்.

'D' தொகுதியில் அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள்; ஆதிதிராவிடர்கள் 657 பேர், பழங்குடியினர் 134 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 2324 பேர்.

இதுவரை அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் பல்வேறு தொகுதிகளில் இடஒதுக்கீட்டுப் பிரிவினர் ஒவ்வொரு தொகுதியிலும் எவ்வளவு பேர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இந்த வெள்ளை அறிக்கையின் மூலமாகத்தான் இந்த விவரங்களை அறிய முடிந்துள்ளது.

உதாரணமாக மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் அடிப்படைச் சம்பளமாக உள்ள 'A' தொகுதியில் 591 ஆதி திராவிடர்களும், 20 பழங்குடியினரும். 665 மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினரும், 4744 பிற்படுத்தப்பட்டோரும் இன்றைய நிலையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 1-4-1989 முதல் இதுவரை அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில், A, B, C ஆகிய நான்கு தொகுதிகளிலும் ஏற்பட்டுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள் - ஆதிதிராவிடர்கள் 4907, பழங்குடியினர் 1094, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 5283 பேர். ஆக மொத்தம் 11,264 பின்னடைவு காலிப் பணியிடங்களையும் ஐந்தாண்டுகளுக்குள் நிரப்ப இந்த அரசு உறுதியளிக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் அழுத்தந்திருத்தமாக நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஐந்தாண்டுகளுக்கு உள்ளே என்றால் இந்த ஆண்டிலேயே இந்த முயற்சி ஆரம்பம் ஆகிவிடும் என்பதையும் அந்த முயற்சிக்கு எந்த அதிகாரி முட்டுக்கட்டையாக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்து, இந்த முயற்சியை நாம் முனைந்து மேற்கொள்கின்ற காரணத்தால் ஏற்கெனவே இருக்கின்ற இட ஒதுக்கீட்டிலே ஏதாவது ஊனம் ஏற்படும் என்று யாரும் கருதத் தேவையில்லை. அந்த இட ஒதுக்கீடு அப்படியே தொடரும். முன்னேறிய சமுதாயத் திற்குள்ள இடங்கள், பிற்படுத்தப்பட்டோருக்குள்ள இடங்கள், இவையெல்லாம் அப்படியே தொடரும். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இது போய் அதைப் பாதிக்காது என்பதை, முன்னேறிய சமுதாயத்தினருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக மொத்தம் 11,264 பின்னடைவு காலிப் பணியிடங்களையும் - மீண்டும் சொல்கிறேன் - ஐந்தாண்டு களுக்குள் நிரப்ப இந்த அரசு உறுதியளித்திருக்கிறது. ஓராண்டுக்குள் நிரப்பிவிட்டால் என்ன என்றெல்லாம் கேட்கப்பட்டது. இவையெல்லாம் ஆர்வத்தின் காரணமாகக் கேட்கப்படுகின்ற கேள்வியே அல்லாமல் வேறல்ல. ஓராண்டுக்குள் முடிந்தால் எங்களுக்கும் திருப்திதான். அந்த முயற்சியிலே நாங்கள் முனைந்து ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆண்டுகள் என்பது 4 ஆண்டுகளில்கூட ஆகலாம். ஏன் 5 ஆண்டுகள் என்று சொல்லிவிட்டு, 4 ஆண்டுகளுக்குள் நிரப்பி விட்டாய் என்று யாரும் கேட்கக்கூடாது. அதற்குள் நிரப்பினாலும் நிரப்பிவிடுவோம். கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு என்று சிறப்பு நியமன நடவடிக்கை Special Recruitment Drive மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உதாரணமாக, 1997ஆம் ஆண்டில் கல்லூரி ஆசிரியர் களுக்கான 100 பணியிடங்களை சிறப்பு நியமனத்தின் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் போதுமான தகுதி வாய்ந்தவர்கள் கிடைக்காததால், 100 பணியிடங்களில் 72

பணியிடங்களை மாத்திரம்தான் நிரப்ப முடிந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தகவலாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். போதுமான தகுதிவாய்ந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கிடைக்காத காரணத்தால் இடைநிலை ஆசிரியர் 450 பணியிடங்களும், சுருக்கெழுத்துத் தட்டச்சர் 450 பணியிடங்களும் நிரப்பப்படாமல் இன்னமும் காலியாகவே இருந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குத் தகுதி உள்ளவர்கள் கிடைக்கவில்லை. ஆட்கள் இருக்கிறார்கள். அதற்கான தகுதி உள்ளவர்களாக அவர்கள் இல்லை என்ற அந்தக் காரணத்தை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு, இங்கு ஓர் உறுப்பினர் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, நிஜாமுதீன் என்று நான் கருதுகிறேன். அவர் குறிப்பிட்டதைப்போல, அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படும். அந்த இடங்களை நிரப்ப முடியாமல் இருப்பதற்குக் காரணம், தகுதி இல்லை. அந்தத் தகுதியை உருவாக்குகிற அளவுக்கு தனிப் பயிற்சி (Special coaching) அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதே பழங்குடியினமக்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் (Special coaching) கழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல இப்போது கணக்கிட்டு, வெள்ளை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள 11,264 பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப எந்தெந்த தொகுதிகளில், (Groups), போதுமான தகுதி வாய்ந்த நபர்கள் கிடைக்கவில்லையோ அந்தப் பிரிவினருக்குத் தேவையான பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எல்லா உறுப்பினர் களும் இதைப் பாராட்டி வரவேற்று, சில அரிய யோசனைகளை எல்லாம் கூறியிருக்கிறார்கள். எல்லோரும் நல்ல யோசனை களைச் சொன்னார்கள். நம்முடைய அப்பாவு மாத்திரம், அமைச்சரவையிலே இடஒதுக்கீடு வேண்டும் என்று கேட்டார். அதை அடுத்த ஆண்டு பார்க்கலாம் என்று நான் அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்த முறை அப்பாவு ஆசை தீருகின்ற அளவுக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த இடஒதுக்கீடு நிரப்பப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்

ஏதோ நாங்கள் எல்லாம் பெரியார், அண்ணாவைத்தான் சொன்னோம், காமராஜருடைய பெயரைச் சொல்லவில்லை என்பதைப்போலக் கருதிக்கொண்டு எடுத்த எடுப்பிலேயே காமராஜர்தான் கொண்டுவந்தார் என்று சொன்னார். நாங்களும் அவரை மறக்க விரும்பவில்லை. 1954ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக நீதிப் போராட்டத்திலே தந்தை பெரியார் தலைமையில், பேரறிஞர் அண்ணா தலைமையில் முறையே திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் போர்க்களத்திலே நின்ற அந்தக் காலக்கட்டத்தில், பெருந்தலைவர் காமராஜர் களத்திலே இறங்கி போரிடா விட்டாலும்கூட, அந்தத் திராவிட இயக்கத்தினுடைய அந்தக் குரலுக்கு ஆதரவாக பண்டித நேருவிடத்திலே பரிந்துரை செய்தவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதை நன்றியுள்ள நாங்கள் மறந்துவிட மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. இதே மாமன்றத்திலே கே. டி. கோசல்ராம், அதைப்போல நம்முடைய ஆர். வி. சாமிநாதன் இருவரும் முழங்கிய முழக்கங்கள் எல்லாம் எங்களுடைய காதுகளிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சுப்ரீம் கோர்ட்டில் - நீதிமன்றத்திலே - இடஒதுக்கீடு, சமூக நீதிக்கு ஆபத்து ஏற்பட்டதும் அப்போது இருந்த காங்கிரஸ் அமைச்சர்களைப் பார்த்து ஓங்காரக் குரல் கொடுத்து, ஓங்கிக் குரல் கொடுத்தவர்கள் ஆர். வி. சாமிநாதன், கே. டி. கோசல்ராம் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தாலும்கூட, திராவிட இயக்கத்தினுடைய அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தந்தார்கள். அதேபோல என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்கள் பொருளாதார ரீதியிலே, 9000 ரூபாய் வரையிலே இருந்தால்தான் அவன் பிற்போக்கு, பிற்படுத்தப் பட்டவன், 9000 ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் சம்பாதித்தாலும் அவர்கள் முன்னேறிய சமுதாயம் என்ற ஒரு பொருளாதாரக் கொள்கையை, பொருந்தாத கொள்கையை அறிமுகப்படுத்திய போது நாங்கள் எடுத்துச் சொன்னோம், அவர் கேட்கவில்லை. அப்போதும் ஒரு போராட்டம் தேவைப்பட்டது. ஊருக்கு ஒரு பொதுக் கூட்டம் நடத்தினோம். அந்தப் பொதுக்

கூட்டத்திலே நான், பேராசிரியர், நம்முடைய நண்பர் வீரமணி மற்றும் ரமணிபாய், திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்கள் எல்லாம் அதிலே கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல. அந்தப் போராட்டங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர் தா. பாண்டியன் அவர்களும் எங்களோடு ஒரே மேடையிலே வந்து பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, கட்சி ரீதியாக கலந்து கொள்ளாவிட்டாலும், அதிலேயுள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அதில் கலந்துகொண்டு ஆதரித்திருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில், எந்தக் கட்சியில் இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிற நேரத்தில் எல்லாம் அவர்கள் திராவிட இயக்கத்தை நினைக்காமல் இருக்கமாட்டார்கள். யார் குரல் கொடுத்தாலும், இன்றைக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் இராமதாஸ் குரல் கொடுத்தாலும் எல்லாவற்றுக்கும் அடிபீடம் திராவிட இயக்கம்தான். தந்தை பெரியார்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிக்கட்சிதான். முத்தையா முதலியார்தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது என்பதை எடுத்துக் கூறி, இந்த நல்ல வெள்ளை அறிக்கையைப் பாராட்டி நல்ல யோசனைகளைச் சொல்லி, இந்த வெள்ளை அறிக்கை செயல்படுவதற்கு ஆக்கப்பூர்வமான யோசனைகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியையும் வணக்கத்தையும் கூறி இந்த அளவிற்கு என் உரையை நிறைவு செய்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு

உரை : 61 **நாள் : 17.05.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்க சட்டமுன்வடிவின் அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கின்றார்கள். இதிலே நிதி ஒதுக்க விவரங்களைப்பற்றிக் கூறுவதற்கு முன்பு இங்குச் சொல்லப்பட்ட அல்லது கேட்கப்பட்ட சில சந்தேகங்களுக்கு என்னுடைய விடைகளை அளிப்பது பொருத்தம் என்று கருதுகின்றேன்.

பதவி இழந்த முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது பற்றி நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் தொடக்கத்திலே கேட்டார். இந்த அரசுதான் 14-11-1980-ல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய ஆட்சியில் பதவி பறிக்கப்பட்ட முன்னாள் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு ஓய்வூதியமாவது தர வேண்டுமென்கிற ஒரு முடிவை எடுத்து, தர முன்வந்தது. அப்படி முன்வந்தபோது, 10 வருடங்கள் பணி முடித்திருப் பார்களேயானால், அவர்களுக்கு அந்த அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. ஆனால், அதிலே ஒரு பிரிவினர், 10 ஆண்டுகள் பணி முடிக்காமலேயே வயது மூப்பின் காரணமாக நாங்கள் ஓய்வு பெற்றிருக்கிறோம். எங்களுக்கு அந்தக் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டு, அதற்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றார்கள். நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இன்னும் வரவில்லை. இந்தச் சூழ்நிலையிலேகூட நாங்கள் கருதிக்கொண்டிருப்பது, இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்த நேரத்தில், இவர்களுக்கும் கூட அதே அளவு ஓய்வூதியம் தராவிட்டாலும், 10 ஆண்டு காலம் அவர்கள் பணிமுடிக்காத காரணத்தால், அவர்கள் மீது

கருணை கொண்டு அல்லது இரக்கம் கொண்டு அல்லது பரிவுகொண்டு, ஒரு குறைந்த அளவாவது ஓய்வூதியம் தரலாம் என்பதுபற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

இன்னொரு முக்கியமான கேள்வி ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். சந்தனக் கடத்தல் வீரப்பன் என்ன ஆனான் என்பதுபற்றிக் கேட்டார்கள். அதில் உள்ள சிரமங்கள் பலமுறை இந்த அவையிலே விளக்கப்பட்டிருக்கின்றன. இது ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினை அல்ல; இரண்டு மாநிலங் களினுடைய காவல் துறைகள் ஈடுபட்டு, இரண்டு மாநில அரசுகள் ஈடுபட்டு, நடைபெறவேண்டிய ஒன்று. இந்தப் பகுதி காட்டிலே இருந்தால், பிடிக்கப்போகும்போது அந்தப்பகுதி காட்டுக்கும், அந்தப் பகுதி காட்டிலே பிடிக்கப்போகும்போது இந்தப் பகுதி காட்டுக்கும் பயணம் செய்து இரு அரசுகளையும் கடந்த பல ஆண்டுகளாக வீரப்பன் கோஷ்டியினர் ஏமாற்றிக்கொண்டிருக் கிறார்கள். அதற்கு என்ன செலவு ஆயிற்று என்று திரு. ஞானசேரகன் அவர்கள் கேட்டார்கள். இதுவரையிலே தமிழக அரசைப் பொறுத்தவரையில் அந்தக் காலத்திலே இருந்து இந்தக் காலம்வரையில், இரண்டு மூன்று ஆட்சிகள் மாறிமாறி வந்தாலும்கூட, மொத்தமாக 4 கோடியே 54 இலட்சம் ரூபாய் அதற்குச் செலவாகியிருக்கிறது என்பதை மாத்திரம் சொல்ல விரும்புகின்றேன். இதைவிட அதிகமான செலவு கர்நாடக அரசுக்கு ஆகியிருக்கிறது என்கிற தகவல், அந்த விவரம் எனக்குத் தெரியாது. எனவே தமிழகத்தைப் பொறுத்தவரையிலே நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் 4 கோடியே 54 லட்சம் ரூபாய் இதுவரையிலே செலவு செய்திருக்கின்றது.

நம்முடைய அ.இ.அ.தி.மு.க.-வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. சுந்தரம் அவர்கள் இங்கே உரையாற்றும் பொழுது தன்னுடைய தொகுதிக்கு எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். இன்றல்ல, சென்ற ஆண்டே அவர் இதே குற்றச்சாட்டைச் சொல்லி, நான் ஒரு நீண்ட பட்டியலை இந்த அவையிலே அவருக்கு அளித்திருக்கின்றேன். இரண்டரை ஆண்டு காலத்தில், 52.41 கோடி ரூபாய் அளவிற்குப் பணிகள் சுந்தரம் அவர்களுடைய தொகுதியிலே நடைபெற்றிருக்கின்றன என்பதை நான் அப்பொழுதே ராசிபுரம் தொகுதியிலே நடைபெற்ற அந்தக் காரியங்களை எல்லாம் எடுத்துக்காட்டி

இருக்கின்றேன். இருந்தாலும்கூட, திரும்பத்திரும்பச் சொன்னால், அது தொகுதி மக்களிடத்திலே தன்மீது ஆர்வத்தை, ஒரு ஆவலை ஏற்படுத்தும் என்ற அந்த அளவிலே சொல்கிறார் என்றால், அதை நான் விட்டுவிடத் தயாராக இருக்கிறேன். ஆனால், எந்தத் தொகுதியும் புறக்கணிக்கப்படவில்லை. இரண்டரை அல்லது மூன்றாண்டு காலத்தில், சென்ற ஆண்டு நான் வைத்த கணக்கின்படி, வழங்கிய பட்டியலின்படி, 52.41 கோடி ரூபாய் அவருடைய ராசிபுரம் தொகுதியிலே பணிகள் நடைபெற்றிருக் கின்றன என்பதை நான் மீண்டும் ஒருமுறை இங்கே நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இராமநாத புரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில் ஆனைசேரி கிராமத்திலே ஏற்பட்ட திடீர் பள்ளங்களைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி செய்தி வந்தவுடன், விசாரித்த அளவில், களிமண் பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும் ஏற்கெனவே அங்கே சில ஆய்வுகள் நடைபெற்று. அதன் காரணமாகப் பல பகுதிகளிலே பள்ளங்கள் ஏற்பட்டு, அவை மீண்டும் மூடப்பட்டு அதன் காரணமாக திடீர் திடீரென்று இத்தகைய பள்ளங்கள் பூமியிலே ஏற்படுகின்றன. இந்தப் பள்ளம் ஏற்பட்ட பகுதியிலே, தேவையான மண் அள்ளுகின்ற இயந்திரங்களைக் கொண்டு 40 X 40 அடியளவில் பூமியைத் தோண்டி, தற்போது அமைந்துள்ள பள்ளத்தின் அளவினைக் கண்டறிந்து, அதனைச் சரளைக்கல் போன்ற இறுகும் தன்மை கொண்ட மண்ணால் முழுவதுமாக நிரப்பி இறுக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கலாம் என்று சொல்லப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

26,887 கோடி ரூபாய்க்கான அனுமதியை அவையிலே பெறுவதற்கான சட்டமுன்வடிவு இங்கே உங்கள் முன்னால் வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த 26,887 கோடியில் 21,494 கோடி ரூபாய் சட்டமன்றப் பேரவையில் வாக்களிக்கப்படும் voted தொகை ஆகும்; மீதமுள்ள 5,393 கோடி ரூபாய் - Charged - சாட்டப்பட்ட தொகை ஆகும். சாட்டப்பட்ட தொகை என்றால்,

Charged தொகை என்றால், பொதுக் கடன் திருப்பிச் செலுத்த 2,599 கோடி ரூபாய், கடனுக்கான வட்டி 2,749 கோடி ரூபாய், இந்த இரண்டுமே 5,348 கோடி ரூபாய் ஆகிறது. மேலும் நீதி நிர்வாகத்திற்காக 23 கோடி ரூபாய்; ஆளுநர், அமைச்சர்கள், தலைமையிட பணியாளர்கள் என்ற வகையிலே 16 கோடி ரூபாய் ஆக மொத்தம் எல்லாம் சேர்த்து இந்த Charged item 5393 கோடி ரூபாய் ஆகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். Voted item என்று பார்த்தால், அதாவது சட்டசபையிலே வாக்கெடுப்பு நடக்கின்ற Item என்று பார்க்கும்போது, பெரிய அளவிலான மானியங்கள் என்று சொல்லும்போது, கல்விக்கு 4,649 கோடி ரூபாய் கல்விக்கு அடுத்தபடியாக வருவது ஓய்வூதியம். அது 2,593 கோடி ரூபாய். நுகர்பொருள் வழங்கல் - Civil Supplies -1,868 கோடி ரூபாய், ஊரக வளர்ச்சி 1,320 கோடி ரூபாய் நகராட்சி 555 கோடி ரூபாய், மக்கள் நல்வாழ்வு 1763 கோடி ரூபாய் காவல் துறை 1,054 கோடி ரூபாய் இதுவன்னியில் வேறு சில தலைப்புகளிலும் ஓரளவு தொகை இடம்பெறும். சமூக நலத் துறை 624 கோடி ரூபாய், வேளாண்மைத்துறை 888 கோடி ரூபாய், சாலைகள், பாலங்கள் 803 கோடி ரூபாய், பாசனம் 687 கோடி ரூபாய் மாவட்ட நிருவாகம் 578 கோடி ரூபாய், குடிநீர் வழங்கல் 127 கோடி ரூபாய் மற்றும் பல இனங்கள் சேர்ந்து 21,494 கோடி ரூபாய் வாக்கெடுப்பிலே அடங்கும் என்பதை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்கூட்டியே Vote on Account எடுத்ததில் உள்ள 7,009 கோடியே 48 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாயும் இதிலே அடங்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்விக்கான ஒதுக்கீடுக்கு அடுத்து, ஓய்வூதியச் செலவினம் என்று நான் குறிப்பிட்டேன். அரசு செலவினங்களில் மிகவேகமாக அதிகரித்து வருகின்ற ஓர் இனம் அதுதான். 1995-96 ஆம் ஆண்டு 787 கோடி ரூபாயாக இருந்தது. 1996-97-ல் அந்த ஓய்வூதியம் 1,070 கோடி ரூபாயாக வளர்ந்தது. 1997-98-ல் ஓய்வூதியம் 1,287 கோடி ரூபாய், 1998-99-ல் 1,692 கோடி ரூபாய், 1999-2000-ல் திருத்திய மதிப்பீட்டின்படி 2,517 கோடி ரூபாய் ஓய்வூதியம், அதுவும் 1-1-1996 முதல் உயர்த்தி வழங்கப்பட்ட ஓய்வூதியத்தின்

நிலுவைத் தொகையில் மீதம் உள்ள 40 விழுக்காடு நடப்பு நிதி ஆண்டிலே வழங்கப்படும் என்றும் நாம் அறிவித்து இருக்கிறோம் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

நிதிநிலை அறிக்கையிலும் மற்றும் அமைச்சர்கள் இங்கே ஈடுபட்டு நடத்திய மானியக் கோரிக்கைகளினுடைய விவாதங்களிலும் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் வெறும் அறிவிப்புக்களாக இருந்துவிடாமல், செயல்படும் ஆணைகளாகத் தயாரிக்கப்பட்டு, அந்த ஆணைகள் எல்லாம் வெளியிடப்படும் நிலையிலே உள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி.) ஏனென்றால், இந்தத் தீர்மானம் நிறைவேறிய பிறகுதான், அவை நிறைவுற்ற பிறகுதான், அந்த ஆணைகள் வெளியிடப்படுவது மரபு, முறை, சட்டம், விதி. எனவேதான், ஆணைகள் எல்லாம் தயாராகிவிட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

24-3-2000 அன்று வரவு செலவுத் திட்டத்தை, ,நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே நான் வைத்தேன் என்றால், 27-3-2000-ல் எல்லாத் துறைகளினுடைய செயலாளர்களையும் கூட்டி அருகில் உள்ள நாமக்கல்லார் மாளிகையில் அவர்களை எல்லாம் அழைத்து, நிதிநிலை அறிக்கையைப்பற்றி அவர் களிடத்திலே ஒருமுறை விவாதித்து, இதிலே சொல்லப் பட்டிருக்கின்ற அறிவிப்புக்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று வழக்கம்போல், செயலாளர் களுக்கெல்லாம் கூறப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர்களுடைய கூட்டத்தை வருகிற 27, 28 தேதிகளிலே நடத்துகிறோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். செயல்வடிவம் பெற்று, நாம் வழங்கிய அறிவிப்புகளையெல்லாம் மக்களிடத்திலே கொண்டுபோய் செயல்படுத்திட இந்த முயற்சிகள் பெரும் துணையாக இருக்கும் என்பதையும் நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு என்று பார்த்தால் நாம் 1999-2000 ஆண்டிற்கு திட்ட ஒதுக்கீடாக நிர்ணயித்தது 5,250 கோடி ரூபாய். ஆண்டு இறுதியிலே எதிர்பார்க்கப்படக்கூடிய திட்டச் செலவு 5,415 கோடி ரூபாய். சில மாநிலங்களிலே

திட்டத்திற்காக நிர்ணயம் செய்து, பிறகு surrender செய்வது ஒரு முறை. ஆனால், இப்படி Surrender செய்யாமல், நிர்ணயிக்கப் பட்ட திட்ட ஒதுக்கீட்டுக்கும் அதிகமாக செலவு செய்துள்ள ஒருசில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையை வழங்கியபோது 2000-2001 ஆம் ஆண்டிற்கு 665 கோடி ரூபாய் இறுதிப் பற்றாக்குறையாக இருக்குமென்று அறிவித்தேன். அதன்பிறகு அந்தப் பற்றாக்குறையை மேலும் பெருக்குகின்ற அளவிற்குப் பல்வேறு அறிவிப்புகள், நேற்றையதினம், செய்யப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை விரிவாக்கியது ஆகிய இவையெல்லாம் உட்பட மேலும் அதிகமாக 200 கோடி ரூபாய் செலவு வந்திருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் கை மாத்திரம் தட்டுகிறோம் என்று கையைத்தட்டிவிட்டு, நேற்றைக்கு எங்களைச் சிக்க வைத்திருக்கிறீர்கள். ஆக, 665 plus 200 கோடி, இரண்டையும் சேர்த்தால், ஆக மொத்தம் 865 கோடி ரூபாய் பற்றாக்குறை அதிலே மாத்திரம் 200 கோடி ரூபாய் அல்ல-ஒவ்வொரு மானியத்திலும் அமைச்சர்கள் மாண்புமிகு உறுப்பினர்களுடைய வேண்டுகோள், முறையீடு, அவர்களுடைய கருத்துகளுக்கேற்ப வெளியிட்ட அந்த அறிவிப்புக்களை எல்லாம் சேர்த்துத்தான் சொல்கிறேன் - மேலும் 200 கோடி ரூபாய் பற்றாக்குறை ஆகமொத்தம் 865 கோடி ரூபாய் பற்றாக்குறையாக வருகிறது. இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட நான் நிதிநிலை அறிக்கையிலேயே சில வழி முறைகளைச் சொன்னேன்.

மத்திய அரசாங்கம் மொத்த வரி வருவாயில் 29 சதவீதத்தை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான அரசமைப்புச் சட்டத்திருத்தம், வரும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட உள்ளது. அத்திருத்தம் கொண்டு வரப்பட்ட பிறகு, அதன் காரணமாகவும் தமிழக அரசுக்குக் கூடுதல்நிதி வர வாய்ப்புள்ளது என்று பேசியிருக்கிறேன். அது நம்முடைய பற்றாக்குறையைச் சரிக்கட்ட ஓரளவிற்குப் பயன்படும்

என்று நான் அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறேன். அதைப் போலவே, இங்கே நம்முடைய நண்பர் ஆளுங்கட்சியின் சார்பில் பேசிய திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் குறிப்பிட்டதுபோல நேற்றையதினம் மாநிலங்களவை உட்பட, இந்த 29 சதவீதத்திற்கு ஒப்புதல் இரு அவைகளிலும் கிடைத்திருக்கிறது. இந்த 29 சதவீத நிதி மொத்த வரி வருவாயில், மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்கிற ஒரு திட்டம் ஐக்கிய முன்னணி ஆட்சியிலே நண்பர் சிதம்பரம் அவர்கள் நிதியமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்திலேயே யோசிக்கப் பட்டு, ஆனால் அந்த ஆட்சி உடனடியாகக் கவிழ்ந்து விட்ட காரணத்தால் அல்லது முடிவுற்றுவிட்ட காரணத்தால் அந்த ஆட்சியும், அடுத்து வந்த பா.ஜ.க. ஆட்சியும் சில நாட்கள்தான் இருந்து மறைந்துவிட்ட காரணத்தால், அதிலும் நிறைவேற்ற முடியாமல், இப்போதுதான் அதை நிறைவேற்ற முடிந்திருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தினுடைய 89-வது திருத்த மசோதா என்று அதற்குப் பெயர். இந்த 29 சதவீதத்தை, மத்தியிலே வர இருக்கின்ற மொத்த வரி வருவாயினுடைய அளவில் 29 சதவீதம் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது, இன்னொன்றையும் சொல்லி இருக்கின்றார்கள், 1996-97 முதல் 1999-2000 வரை வழங்கப்படலாம். இப்படி வழங்கப்பட்டால், முன்தேதியிட்டு வழங்கப்பட்டால், கணிசமான தொகை நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கும். அதையும் வைத்துக்கொண்டு மேலும் சிக்கன நடவடிக்கைகள் மேற்கொண்டு - இப்போதுகூட இரண்டுமுறை நம்முடைய தலைமைச் செயலாளருடைய தலைமையில், துறைகளுடைய செயலாளர்களுடைய கூட்டம் நடைபெற்றது - இன்னும் சிக்கனமாக எப்படி அரசு நிர்வாகம் நடத்தப்படவேண்டும் என்பது பற்றி கருத்துகள் ஆராயப்பட்டிருக்கின்றன. அந்த நடவடிக்கைகளையும் இணைத்து இந்தப் பற்றாக்குறையை நிச்சயமாகச் சரிக்கட்ட முடியும் என்று நான் கருதுகின்றேன். இந்த 29 சதவீதத்தின் மூலமாக வருகின்ற அதிகத் தொகை, பற்றாக் குறையைச் சரிக்கட்டுவது மாத்திரம் அல்ல, உங்களுக்கு நினைவு இருக்கும், திரு. இரத்தினவேல் பாண்டியன், உச்சநீதி

மன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் மற்றும் ஓய்வு பெற்ற திரு. சீதாராமதாஸ் I.A.S. மற்றும் திரு. ஏ. வெங்கட்ராமன் ஆகியோர்களைக்கொண்ட ஒரு குழு அமைத்து தமிழகத்திலே தென் மாவட்டங்களிலே தொழில் துறையை வளர்ப்பதற்கு, வேலைவாய்ப்புகளை ஈட்டுவதற்கு என்ன காரியங்களைச் செய்யலாம் என்ற திட்டத்தைத் தயாரித்துக்கொடுங்கள் என்று கேட்டதற்கிணங்க அவர்கள் கொடுத்த திட்டங்கள் அரசுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பற்றாக்குறையை மாத்திரம் அல்லாமல், தென் மாவட்டங்களிலே உள்ள மக்களுடைய நல்வாழ்வுக்காகவும், வேலைவாய்ப்புக்காகவும் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் அந்தத் தொகை பயன்படுத்தப்படும். அதற்கு இன்னும்கூட கொஞ்சம் தொகை மத்திய அரசாங்கத்திட மிருந்து பெறப்படும் என்ற நற்செய்தியை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே பேசிய உறுப்பினர்கள் யாவரும் ஒன்றைச் சுட்டிக் காட்டுவார்கள் என்று கருதினேன். ஒருவேளை நான் வெளியிலே சென்றிருக்கும்போது சொன்னார்களோ என்னவோ தெரியாது. பால் உற்பத்தியாளர்களுடைய சங்கடத்தைப்பற்றி யாரும் பேசவில்லை. ஏனென்றால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நிதி ஒதுக்கீடு மசோதாவைப் பொறுத்தவரையில் எல்லோரும் எண்ணிக்கொண்டிருக்கிறோம், அந்தப் பொருளாதாரத் தத்துவங்களை, பொருளாதாரக் கோட்பாடுகளை அரசினுடைய வருவாய் செலவு இவற்றைப்பற்றிப் பேசுவதோடு அல்லாமல் இது ஒரு பலசரக்கு மசோதாவாகவே எல்லா வற்றையும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக நாம் கருதிக் கொண்டிருக்கிறோம். அப்படி கருதிக்கொண்டிருக்கும் போது நிச்சயமாக இதிலே பாலும் வரும் என்று நான் எண்ணினேன். இல்லாவிட்டாலும்கூட சொல்லவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது.

பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலுக்கு உண்டான தொகையை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று பலரும் புகார் கூறி

வருகின்றார்கள். பலரும் அரசுக்கு முறையீடு செய்து வருகின்றார்கள். ஏப்ரல் 1998 ஆம் ஆண்டு பால் கொள்முதல் விலை 7 ரூபாய் 51 காசிலிருந்து 9 ரூபாயாக உயர்த்தப்பட்டது. உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் அதேநேரத்தில் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய்தான் உயர்த்தப் பட்டது. ரூ. 9½-லிருந்து ரூ. 10½ என்றுதான் உயர்த்தப்பட்டது. இதனை ஓரளவு ஈடுகட்டும் வகையில் அரசு உதவி வழங்கும் என்று அறிவிக்கப்பட்டு அரசின் சார்பில் அதை ஈடுகட்ட 23 கோடி ரூபாய் வழங்கப்பட்டது, பால் உற்பத்தியாளர்களுக்கு அந்தப் பணம் போய்ச்சேருவதற்காக. ஆனால் ஆண்டுதோறும் தொடருகின்ற இழப்பாக இருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டும் பால் உற்பத்தியாளர்களுக்குச் சேரவேண்டிய தொகையை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்த அவசியத்தை முன்னிட்டு அதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று எண்ணியபோது டில்லியிலே நடைபெறுகின்ற, நாளைக்கு நாங்கள் செல்ல வேண்டிய அந்தக் கூட்டத்திற்கான முன் ஏற்பாடுகளைக் கவனிக்கவும், அங்குள்ள அமைச்சர்களோடும், அங்குள்ள Planning Commission அதிகாரிகளோடும் கலந்து பேசவும் நம்முடைய நிதித்துறைச்செயலாளர் அங்கு சென்றிருக்கின்ற காரணத்தால், அவர் திரும்பி வந்தவுடன், அதற்கான நல்ல வழி ஒன்று கண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு உதவி நிச்சயமாகச் செய்யப்படும் என்ற நம்பிக்கையை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒரு முக்கியச் செய்தியை இந்த மாமன்றத்திலே சொல்ல விரும்புகின்றேன். வளரும் நாடுகளில் 80 விழுக்காடு மக்கள் தங்கள் உடல்நலம் பேணுவதற்காக பாரம்பரிய மருந்துகளான மூலிகைச் செடி மருந்துகளையே நாடுகின்றார்கள் என உலக மக்கள் நல்வாழ்வு அமைப்பு (World Health Organisation) மதிப்பிட்டுள்ளது. பக்க விளைவுகளை ஏற்படுத்தாததாலும், எளிதில் கிடைப்பதாலும், ஏழை மக்களுக்குரிய ஒரே வழியாக விளங்குவதாலும், மூலிகைச் செடிகளின் தேவை அதிகரித்து வருகிறது. சீனத்தில் (China) மூலிகைகளின் வாணிபம் சுமார் இருபதாயிரம் கோடி ரூபாய்; ஆனால் இந்திய மூலிகைகளின் வாணிபம் வருடத்திற்கு சுமார் 450 கோடி ரூபாய்தான்.

தமிழகத்திலே மானாவாரி நிலமாக உள்ள பரப்பில் அரிய மூலிகைகளை உற்பத்திசெய்ய வழிவகுத்தால் வருமானமும் அதிகரிக்கும், மூலிகைகளின் பயன்பாடும் பெருகும். அதற்கு ஏற்பாடுகளாக, அதிக அளவில் மூலிகைகள் உள்ள பகுதிகளான கொல்லிமலை, குற்றாலம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி போன்றவை மருத்துவ குணமுள்ள செடிகளைப் பேணும் பகுதிகளாக (Medicinal Plants Conservation Areas) அறிவிக்கப்படும்.

சிதைந்த வனப்பகுதிகளைக் கண்டறிந்து அங்குத் தீவிர மூலிகை சாகுபடி செய்து தரமான மூலிகைப் பொருட்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மருத்துவ குணமுள்ள செடிகள் மிகுந்துள்ள வனப் பகுதிகள் கண்டறியப்பட்டு அவற்றின் உபயோகத்திற்கான மேலாண்மைத்திட்டம் உருவாக்கப்படும்.

தமிழ்நாடு வன வளர்ப்புத் திட்டம் உள்ள இடங்களில் மூலிகைச் செடிகளை கிராம மக்களுடன் ஒருங்கிணைந்து பாதுகாப்பது மற்றும் பயிரிடுவது ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மருத்துவ குணமுள்ள செடிகள் இருக்குமிடம் மற்றும் அவைபற்றிய விழிப்புணர்வூட்டும் திட்டம் அரசு சாரா அமைப்புகள் மூலமாகத் தொடர்ந்து செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தோட்டக்கலைத்துறை, பழங்குடியினர் நலத்துறை மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் வனத்துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு அபூர்வ மூலிகைகளைச் சிறப்பாகப் பராமரிக்கவும், பேணவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இத்திட்ட செயல்பாடு முதலமைச்சர் செயலகம் மூலம் ஆரம்பக்கட்டத்திலிருந்தே தீவிரமாகக் கண்காணிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள கல்வி நிதியில் இருந்து அந்தந்த ஒன்றியப் பள்ளிகளைப் பழுதுபார்ப்பது (Maintenance) மட்டுமல்லாமல் மீதம் போதிய நிதி இருப்பின் தேவைக்கேற்ப பள்ளிக்கட்டடம் கட்டவும் ஊராட்சிகளுக்கு அனுமதி வழங்கப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதியிலே போதிய நிதி இருப்பின் அந்த நிதியிலிருந்து சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டுவதற்கும், பழுது பார்ப்பதற்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

வரிகளைப் பற்றி யாரும் பேசவில்லை. திரு. பெரியசாமி மாத்திரம்தான் பேசினார். தேங்காயைப்பற்றி திரு. சுந்தரம் பேசினார். ஆனால் நான் எல்லாம் சொல்லிவிட்டேன். நிதி வருவாய் எவ்வளவு இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். பற்றாக்குறை எவ்வளவு இருக்கிறது என்று சொல்லிவிட்டேன். எந்த அளவிற்குச் சிக்கனமாக இருக்கவேண்டி இருக்கிறது என்ற சூழ்நிலையையும் சொல்லிவிட்டேன். மத்திய சர்க்காருடைய பணத்தை எதிர்பார்த்துதான் இருக்கிறதைச் சரிசெய்து விட்டுப் போக முடியும். நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்பதையும் சொல்லிவிட்டேன். இதற்கிடையிலேயும்கூட, நாம் வரிச்சலுகை அளித்த அளவிற்கு இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் அளித்ததாகச் சொல்ல முடியாது. இந்த 4 ஆண்டு காலத்திலே அந்த அளவுக்கு வரிச்சலுகையை இந்த அரசு வழங்கியிருக்கின்றது? வணிகர்கள் நம்மை பாராட்டுகின்ற அளவுக்கு, வாழ்த்துகின்ற அளவுக்கு வரிச் சலுகை அளித்திருக்கிறது. சுலபமாக ஆக்கியிருக்கிறது. விற்பனை வரியை சுலபமாகவும், எளிதாகவும் ஆக்கி அவர்களை மகிழச் செய்திருக்கிற அரசும் இந்த அரசு என்பதை யாரும் மறந்திட இயலாது.

2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து சட்டமன்றப் பேரவையில் அளித்த பின்னர் விற்பனைவரிவிகிதங்களில் மேலும் சில பொருட் களுக்கு வரிக் குறைப்புச் செய்ய வேண்டுகோள்கள் சில வணிகச் சங்கங்களிலிருந்தும், வணிகவரித் துறையைச் சேர்ந்த மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது சில சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் வரப்பெற்றன. அந்த

வேண்டுகோள்களை நன்கு ஆய்வு செய்தபின்னர், பின்வரும் வரி மாற்றங்களை மற்றும் வரிவிதிப்பு நடைமுறைகளில் உள்ள மாற்றங்களை அறிவிக்கின்றேன்.

பருத்தி கழிவு (cotton waste) மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

P.V.C. குழாய் மற்றும் பொருத்திகள் மீதான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப் படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

மேற்கண்ட பொருட்களின் வரி விகிதங்கள் அண்டை மாநிலங்களைவிட அதிகமாக இருப்பதால் வணிகம் அண்டை மாநிலங்களுக்குச் செல்வதைத் தடுக்கும்பொருட்டு இந்த வரிக் குறைப்பு செய்யப்படுகிறது. இதனால் ஏற்படும் வருவாய் மாற்றங்கள் ஆறு மாத காலத்திற்குப்பின் ஆய்வு செய்யப்படும். மேற்கண்ட பொருட்களில் வரி இழப்பு ஏற்படுமானால் இவற்றில் தக்க மாற்றம் செய்யப்படும்.

அடுத்து - மிதி வண்டி இருக்கை உறைகள் (Cycle seat covers) மீதான வரி 4 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பாலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பைகள் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

வணிகச்சின்னத்துடன் உள்ள பால்கோவா மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி)

முகம் பார்க்கும் கண்ணாடிகள், பிரதிபலிக்கும் வண்ணக் கண்ணாடிகள், பிரதிபலிக்கும் உருவக்கண்ணாடிகள் மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், வாலாஜா, வாணியம்பாடி மற்றும் சேலம் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் கைத்தறித் தொழில் முறையில் தயாரிக்கப்படும் 'நிலக்கம்பளம்' பெருமளவில் ஜம்மு மற்றும் காஷ்மீர் பகுதிகளுக்கு ஏழை மக்கள் பயன்படுத்தும் வகையில் வெளிமாநில விற்பனை செய்யப் படுகிறது என்றும், அத்தகைய நிலக்கம்பளத்தின் மீதான விற்பனைக்கு முழு விற்பனை வரிவிலக்கு அளிக்கும்படி அரசுக்குப் பல கோரிக்கைகள் வந்துள்ளன.

நிலக்கம்பளம் உள்மாநிலத்தில் விற்கும்போது 20 விழுக்காடு வரிக்கு உள்ளாகிறது. இது இடைமாநில விற்பனையின்போது சி படிவம் தரப்பட்டால், நான்கு விழுக்காடு வரிக்கு உள்ளாகிறது. சி படிவம் தரப்படாத நேரத்தில் 20 விழுக்காடு மத்திய விற்பனை வரிக்கு உள்ளாகிறது. நிலக் கம்பளம் இடைமாநில விற்பனையின்போது சி படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நான்கு விழுக்காடு விற்பனை வரி விதிக்கலாம் என்று முடிவெடுக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

நீலக்கீல் என்னும் தார் பூசப்பட்ட கூரைத் தகடுகள் (Asphalt Roofing Sheets) மீதான விற்பனை வரி 12 விழுக்காட்டிலிருந்து 8 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. மேற்படி வரி விகிதக் குறைப்புகள் எல்லாம் 1-6-2000 முதல் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரிவிதிப்பு தொடரப்படும் முதல் மேல்முறையீட்டி லிருந்து தகராறுக்குட்பட்ட வரியில் 25 விழுக்காடு செலுத்தினால் மட்டுமே மேல்முறையீடு அனுமதிக்கப்படும் என்று தற்போது உள்ளது. அந்த விகிதம் 12.5 விழுக்காடாகக் குறைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சுயவரிவிதிப்பிற்கு உச்சவரம்பு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் ஒரு கோடியாக அதிகரிக்கப்பட்டு, அத்தொகை வரை, மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் அனைவரும் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர் (Chartered Accountant) தணிக்கைச் சான்றிதழ் பெற வேண்டும் என்று

அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரூபாய் 20 இலட்சம் வரை மொத்த விற்பனை செய்யும் வணிகர்கள் பதிவுபெற்ற பட்டயக் கணக்கர் தணிக்கைச் சான்றிதழ் தருவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், மூன்றாம் அட்டவணையில் பகுதி பி-யில் இனம் 81-ல் குறிப்பிட்டுள்ள பருப்பு வகைகள் மீதான வரி விலக்கு வரம்பு 100 கோடி ரூபாய் என்பது, ரூபாய் 300 கோடியாக 17-7-1996 முதல் முன்தேதியிட்டு உயர்த்தப்படுகிறது.

சமையல் எண்ணெய் மீதான தற்போதுள்ள வரி விலக்கு உச்சவரம்பு ரூபாய் 100 கோடியிலிருந்து ரூபாய் 300 கோடியாக 1-3-1999 முதல் முன்தேதியிட்டு உயர்த்தப்படுகிறது.

தற்போது பிரிவு 7(சி)-ன் கீழ், ஒப்பந்தக்காரர்கள் நிதியாண்டு அடிப்படையில் இணக்க வரி செலுத்தலாம். இதனை நிதியாண்டு அடிப்படையில் அல்லாது ஒப்பந்தப்பணிகள் வாரியாகவும் இணக்கவரி செலுத்த அனுமதிக்கப்படுவார்கள்.

ஒரு மகிழ்ச்சியான செய்தி, மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. ராம்ஜெத்மலானி அவர்களுக்கு 3-5-2000 அன்று ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் கம்பெனி சட்ட ஆணையத்தின் முதன்மை Bench (Principal Bench of Company Law Board) சென்னையிலே அமைக்கவேண்டுமென்ற தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையை வலியுறுத்தி கடிதம் எழுதியிருந்தேன், இது தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் சேர்த்து அமைய வேண்டிய முதன்மை Bench ஆகும். தொடர்ந்து மத்திய வர்த்தக, தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கும், மத்திய சட்ட அமைச்சரை இதுகுறித்து நேரில் சந்தித்து வலியுறுத்துமாறு அறிவுறுத்தியிருந்தேன். என்னுடைய கடிதத்திற்கு இணங்கவும், திரு. மாறன் வலியுறுத்தலுக்கு இணங்கவும், மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. ராம்ஜெத்மலானி அவர்கள் நமது வேண்டு கோளையேற்று கம்பெனி சட்ட ஆணைய முதன்மை Bench-ஐ

(Principal Bench of Company Law Board) சென்னையிலே நிறுவுவதற்கு ஒப்புக்கொண்டுவிட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகிழ்ச்சிகரமான செய்தி காலையிலேதான் கிடைத்தது. அதை தமிழகத்திற்கும், இந்த அவைக்கும் அறிவித்துக்கொள்கிறேன். மேலும் நமது வேண்டுகோளை ஏற்று இதனை சென்னையிலே அமைக்க முன்வந்த மத்திய அமைச்சர் ராம்ஜெத்மலானி அவர்களுக்கும் தமிழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இறுதியாக, தமிழகத்தினுடைய நிலவரம், வளம் குறித்து Associated Chambers of Commerce and Industry, Study on Yields என்ற ஒரு கருத்து Business Line என்கின்ற பிரபலமான ஆங்கில ஏட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது. அது அந்த ஏட்டின் கருத்தல்ல. Associated Chambers of Commerce and Industry Study-யினுடைய அந்தக் கருத்தே - அந்தக் கட்டுரையின் தலைப்பே, அந்தக் கருத்துரைக்குத் தலைப்பு -

TAMIL NADU TOPS IN OILSEEDS


While Punjab continues to lead in the yield rate of wheat, its pre-eminent position in the productivity of rice has been displaced by Tamil Nadu according to a study by the Associated Chambers of Commerce and Industry. The analysis reveals that Haryana too has slipped from its top position in oilseeds yield with Tamil Nadu emerging ahead of both Haryana and Orissa. Tamil Nadu in 1998-99 had a triple distinction - being the number one State in India in terms of yield rates of rice, sugarcane and oilseeds.

அதாவது, தமிழ்நாட்டிற்கு முதல் இடம் என்கிற தலைப்பு. பஞ்சாப் மாநிலம் கோதுமை உற்பத்தித் திறனில் தொடர்ந்து முன்னணியில் இருந்தாலும், அரிசி உற்பத்தியில் பஞ்சாப் மாநிலம் இதுவரை தக்கவைத்துக்கொண்டு இருந்த தனிச் சிறப்பை, அந்த நிலையை தமிழ்நாடு மாற்றி, முதல் இடத்திற்கு வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனை Associated

Chambers of Commerce and Industry நடத்தியுள்ள ஆய்வு வெளிப்படுத்துகிறது.

மேலும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா மாநிலம் இதுவரை முதலாவது இடத்தில் இருந்து வந்துள்ளது. ஆனால்,அந்த முதல் நிலை தற்போது அரியானா விடமிருந்து நழுவிவிட்டது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் அரியானா, ஒரிசா ஆகிய இரண்டு மாநிலங்களையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, தமிழ்நாடு முதல் இடத்திற்கு வந்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி).

1998-1999 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு என்று மூன்று தனிச்சிறப்புகள் சேர்ந்துள்ளன. இந்தியாவிலே தமிழ்நாடு அரிசி உற்பத்தித்திறனில் முதல் இடம்; கரும்பு உற்பத்தித் திறனில் முதல் இடம்; எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனில் முதல் இடம் பெற்றுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவை ஏற்று, ஒப்புதல் அளித்து, நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமைகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).



முதல் துணை மதிப்பீடு

உரை : 62 **நாள் : 13.11.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளில், கருத்துக்களை எடுத்துச்சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

561.52 கோடி ரூபாய்க்கான துணை மதிப்பீட்டில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக, மின் வாரியத்திற்குக் கூடுதல் மின் கட்டண இழப்பீட்டுத் தொகையாக 319.43 கோடி ரூபாயும், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ. 60 இலட்சத்திலிருந்து ரூ. 77 இலட்சமாக உயர்த்திய வகையில், 63.45 கோடி ரூபாயும், பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத்தொகை வழங்கிட 30 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்காக 20 கோடி ரூபாயும், 960 தொடக்கப்பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு மாநில அரசின் பங்குத் தொகையாக, மொத்த 29 கோடி ரூபாயில், 17.99 கோடி ரூபாயும், அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் நகராட்சிகளுக்கு மானியமாக 7 கோடி ரூபாயும், ஆக இந்தத் துணை மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நமக்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சங்கடம் என்று ஒன்று சொல்லவேண்டுமேயானால், அண்மையில் 11-ஆவது நிதிக்குழு அறிக்கை, ஜூலை 2000-லே தாக்கல் செய்யப்பட்டது. மாநிலங்களுக்கு மைய அரசின் அனைத்து நிகர வரி வருவாயில் 29.5 விழுக்காடுகள் பகிர்ந்து அளிக்கப்படும் என்ற நிலையில் தமிழ்நாட்டினுடைய பங்கு 5.385 விழுக்காடு என்று இருந்தது. இது பத்தாவது நிதிக் குழுவிலே 6.637 விழுக்காடாக இருந்தது என்பதை ஒப்பிட்டு நோக்கும்போது, தமிழகத்திற்கு இதனால் 2000-2001-லே இருந்து, ஐந்தாண்டுகளில் சுமார் 4,700 கோடி ரூபாய் இழப்பு

ஏற்படும் என்கின்ற கவலை நமக்கு ஏற்பட்டு, இதுகுறித்து பிரதமரிடத்திலும் மற்றும் மத்திய நிதியமைச்சரிடத்திலும் மற்ற அமைச்சர்களிடத்திலும் முறையிட்டு, வலியுறுத்தி எடுத்துக் கூறியதன்பேரில், வேறுவிதமாக இதைச் சமாளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

நேரம் அதிகம் இல்லை என்ற காரணத்தினால், சில முக்கியமான செய்திகளை மாத்திரம் இங்கே அறிவிக்க விரும்புகின்றேன். பல உறுப்பினர்களும் தந்துள்ள பல கருத்துக்களைப் பற்றி விரிவாகப் பின்னர் பேசலாம் என்பதையும் அவை அதிகாரிகளினுடைய கவனத்திற்கு நிச்சயமாக எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்கின்றேன்.

ஏதோ, மதுரையிலே பஸ்கள் எரிக்கப்பட்டன. குடும்பச் சண்டை என்று சொன்னார்கள். எல்லாக் கட்சிகளிலும் குடும்பச் சண்டை இருக்கிறது. இது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரியாததல்ல. குடும்பச் சண்டைகளின் காரணமாக, யார், யார் எங்கெங்கெல்லாம் இருந்து பிரிந்துபோய் விட்டார்கள் என்பதெல்லாம்கூட நமக்கு நன்றாகத் தெரியும். இதையெல்லாம் விவரித்து விவகாரமாக ஆக்கிக் கொள்ள நாம் விரும்பவில்லை. குடும்பச் சண்டை அல்ல; கட்சிச் சண்டைதான். கட்சியா. குடும்பமா என்று இருந்தால், நான் கட்சியைத்தான் பெரிதாக மதிப்பவன்; குடும்பத்தை அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கட்சியைப் பெரிதாக மதித்து, குடும்பத்தைப் பெரிதாக மதிக்காத காரணத்தால்தான் 8 பேர் இன்றைக்குத் தேசப் பாதுகாப்புச் சட்டத்தின்படி மதுரை சிறைச்சாலையிலே அடைக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையை நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சில செய்திகளை இங்கே அறிவிக்க விரும்புகிறேன். சென்னை மாநகரத்திலே உள்ள கூவம். அடையாறு பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி வடிகால், கேப்டன் காட்டன் கால்வாய் ஆகிய 5 நீர்வழிகளில் சேரும் திடக்கழிவு தடுப்பு, கழிவு நீர் அகற்றும்

மற்றும் சுத்திகரிப்பு ஆகிய பணிகளுக்காக மைய அரசு தேசிய நதி நீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 491 கோடி ரூபாய் மானியமாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) Accepted in principle. திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலேயிருந்து வெளியேறும் கழிவு நீரை சுத்திகரித்து, முறையே காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகள் மாசுபடுவதை தடுக்கும் எண்ணத்தோடு 335.38 கோடி ரூபாய் அளவில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளன. இந்தத் திட்டங்களுக்கும் மைய அரசின் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

விவசாயத் தொழிலாளர்களின் ஏழ்மை நிலையை மனதிலே கொண்டு, அவர்களுக்கென தனியாக ஒரு நல வாரியம் அமைக்கக் கோலப்பன் குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்காக விவசாயத் தொழிலாளர்களையும் Tamil Nadu Manual Workers (Regulation of Employment and Conditions of Work) Act 1982 என்ற சட்டத்தின்கீழ் இணைத்து, அதற்கான அறிக்கையும் தமிழ்நாடு அரசிதழில் 14-8-2000 அன்று பிரசுரம் ஆகியுள்ளது. அந்த அறிக்கையின் சட்டப்பூர்வமான மூன்று மாத கால அவகாசம் இன்றோடு முடிவடைகிறது. எனவே விரைவில் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்பெறும் என்ற மகிழ்ச்சி கரமான செய்தியை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதுவரையில் கழக அரசால் அமைக்கப்பட்ட வாரியங்கள், அமைப்புச் சாராத தொழிலாளர்கள் பாதுகாப்பு வாரியங்கள், தனித்தனியாக சில வாரியங்கள். ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம். தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நலவாரியம், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், இன்று அறிவித்துள்ள விவசாயத் தொழிலாளர் நல வாரியம், மண்பாண்டம் புனைவோருடைய நல வாரியம் தேவை என்றும் எனக்குக் கடிதங்கள் எழுதி உள்ளார்கள். அதுபற்றியும் விரைவிலே கவனித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நடப்பாண்டில் நபார்டு வங்கி அளிக்கும் ஊரகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து உதவி பெற்று 122.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1102 கிலோமீட்டர் நீளத்திற்கு 440 சாலைகளும், 81 சிறு பாலங்களும் அனைத்து மாவட்டங்களில் ஊரகப் பகுதியிலே அமைக்கப்படும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

மதுரை மாநகரில் வைகை நதியின் இரண்டு பக்கக் கரைகளில் வெள்ளத்தடுப்புச்சுவர் எழுப்புவதற்கும், கரை யோரங்களில், உள்ளாட்சிச் சாலைகளை மேம்படுத்துவதற்கும் 18 வாய்க்கால்களைத் தூர்வாரி முறைப்படுத்தி, கரையோரங்களில், தோட்டங்கள் மற்றும் பூச்செடிகள் அமைப்பதற்கும் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் அரசின் பங்காக, ரூ. 6 கோடி அனுமதிக்கும். இத்திட்டத்தில் பொதுமக்கள் இரண்டு கோடி ரூபாய் வழங்க முன்வந்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு இம் மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு காவல்துறை அலுவலர்கள்மீது சுமார் 2150 தண்டனைப் பட்டியல்கள் நிலுவையிலே உள்ளன. இவற்றில் ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் காவல்துறை நிலை ஆணை விதி 145-ன்கீழ் விசாரணை, அல்லது கிரிமினல் குற்றச்சாட்டு சம்பந்தப்பட்டவை சுமார் 600 ஆகும். மீதமுள்ள 1550 தண்டனைப் பட்டியல்கள். சிறு தவறுகளுக்காக ஏற்படுத்தப் பட்டவை. இதன் காரணமாக பல காவலர்கள் பதவி உயர்வு பெற இயலாத நிலை உள்ளது. இந்நிலையைப் போக்க சிறு தவறுகளுக்காக நிலுவையிலே உள்ள 1550 தண்டனைப் பட்டியல்களை, உயர் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று பரிசீலித்து, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இரண்டு மாத காலத்திற்குள் தண்டனைப் பட்டியல் மீதான மேல் நடவடிக்கை கைவிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குறைந்தது 10 ஆண்டு பணியிலிருந்து எந்த தண்டனையும் பெறாமல் பணியாற்றியிருக்கின்ற காவலர்கள். தலைமைக் காவலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சரின் காவல் துறை பதக்கம், அறிஞர் அண்ணா பிறந்த நாளையொட்டி வழங்கப்படுகிறது. சிறு தவறுகளுக்காக துறை நடவடிக்கையினால், தண்டனை பெற்ற சிலர், தண்டனைக்குப்

பிறகு 15, 20 ஆண்டுகள் அப்பழுக்கற்ற பணியாற்றினாலும், பதக்கம் பெற தங்களது பதவிக்காலம் முழுவதும் தண்டனை ஏதும் பெற்றிருக்கக்கூடாது என்ற விதியுள்ளதால் பதக்கம் பெற முடியாத நிலையிலே உள்ளார்கள். எனவே கடந்த 10 ஆண்டுகளில், எந்தவித தண்டனையும் இல்லாதவர்களுக்கு முதலமைச்சரின் காவல் துறை அண்ணா பதக்கம் வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

கீழ்பவானி பாசனத்திட்டத்திற்கு பயிர் கட்டுப்பாட்டின் காரணமாக, விதிக்கப்பட்டுவரும் தண்டத்தீர்வைக்குப் பதிலாக ஏக்கர் வாரியாக தீர்வை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து வருகிறது.

கீழ்பவானி பாசனத் திட்டத்தில் பருவ கால சுழற்சி முறை நீர்பாசனத் திட்டம் (Seasonal Sluice Turn System) அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று வரையிலே அது நடை முறையிலே இருந்துவருகிறது. இந்த சுழற்சிமுறை திட்டத்தின்படி ஆகஸ்ட் 15 ஆம் நாளிலிருந்து டிசம்பர் 15 ஆம் நாள் வரை முதல் போகம் என்றும், டிசம்பர் 15 ஆம் நாளிலிருந்து மார்ச் 15 ஆம் நாள் வரை இரண்டாம் போகம் என்றும் பிரிக்கப்பட்டு, முதல் போகத்திற்கு 4 மாதங்களுக்கு மொத்தம் 24 டி.எம்.சி. தண்ணீரும் இரண்டாம் போகத்திற்கு 3 மாதங்களுக்கு 15 டி.எம்.சி. தண்ணீரும் வழங்கப்படுகிறது. இந்த சுழற்சி முறை திட்டத்தின் மூலம் 75,000 ஏக்கர் ஆயக்கட்டு ஜனங்கள் பாசன வசதி பெறுகின்றனர். இரண்டாம் போகத்தில், அதாவது டிசம்பர் 15-லிருந்து மார்ச் 15 வரை தடை செய்யப்பட்டுள்ள நஞ்சைப் பயிர்களை பயிரிட்டால் தண்டத் தீர்வையாக முதன்முறை 5 மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தொடங்கி நான்காவது முறை மற்றும் அதற்குப் பிறகு 20 மடங்கு சாதாரண தண்ணீர்த் தீர்வை என்று தண்டத் தீர்வை வசூல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுவரும் பிரச்சினைகளை முழுமையாக ஆய்வு செய்து, தீர்வு காண்பதற்கு என்று சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தலைமையில் குழு ஒன்றை இந்த அரசு அமைத்தது. அந்தக் குழு அளித்துள்ள பரிந்துரைகளை பரிசீலனை செய்து கீழ்பவானி பாசன, ஆயக்கட்டு நிலங்களுக்குத் தண்ணீர்த் தீர்வை விதிப்பதற்கு பயிர் வகையை அடிப்படையாகக் கொள்ளாமல், இனி நிலத்தின் பரப்பளவு அதாவது ஏக்கர்

அடிப்படையில் ஒரே மாதிரியான (Flat Rate) தண்ணீர்த் தீர்வை விதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு மேற்கொண்டுள்ள இந்த முடிவின் காரணமாக, கீழ்பவானி ஆயக்கட்டுதாரர்கள் எதிர்கொண்டுவரும் நீண்டகாலப் பிரச்சினைக்கு நல்லத் தீர்வு காணப்பட்டுள்ளது.

11-5-2000 அன்று சட்டமன்றத்தில் ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டு, மொத்தப் பின்னடைவு பணியிடங்களாகிய 11,264-ஐ படிப்படியாக 5 ஆண்டுகளுக்குள் நிரப்பப்படும் என்று உறுதி அளித்தேன். அதன் அடிப்படையில் முதலாவது ஆண்டில் அதாவது 2000-2001ஆம் ஆண்டில் நிரப்பப்படுவதற்காக குறியீடு செய்யப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை 2,250 ஆகும். இந்தப் பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப தொடர்ந்து கண்காணித்து, ஆய்வு செய்ய தலைமைச் செயலாளர் தலைமையில், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறைச்செயலாளர், ஆதிதிராவிடர் நலத் துறைச் செயலாளர் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைச் செயலாளர் ஆகியோரைக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு ஆய்வு செய்து 31-10-2000 வரை நிரப்பப்பட்ட பணியிடங்கள் 828 ஆகும். இது தவிர, 61 பணியிடங்களுக்குத் தகுந்த நபர்களைத் தேர்ந்தெடுக்க நியமன நிறுவனங்களாகிய தேர்வு ஆணையம் மற்றும் வாரியங்கள் அறிவிப்பை செய்துள்ளன. இவ்வாண்டிற்கு நிரப்பப்பட வேண்டிய பணியிடங்களின் குறியீட்டில் இதுவரை நிரப்பப்பட்டுள்ள குறியீடு 39.5 விழுக்காடு ஆகும். டிசம்பர் 2000-த்திற்குள் இந்த வருடாந்திரக் குறியீடு 2250 காலிப் பணியிடங்கள் முழுவதுமாக நிரப்பப்பட தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. டிசம்பர் இறுதிக்குள் நிர்ணயிக்கப்பட்ட குறியீடு முழுவதும் நிரப்பப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிரப்பப்பட்ட பணியிடங்கள் வகுப்புவாரியாக பின்வருமாறு :

மொத்த நிரப்பப்பட்ட பணியிடங்கள் இதுவரையில் 828. அதிலே ஆதிதிராவிடர்கள் 387. பழங்குடியினர் 4. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 437 என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 025
894.8115
TAM
G00240S

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொழில் துறையிலே தொழில் முதலீட்டில் முதலிடத்திலே இருப்பதைப் பற்றி நான் சொன்னது தவறாகிவிட்டது என்று குறிப்பிட்டார்கள். மராட்டியத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் - நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஒரு முதலிடம், இரண்டாவது இடம் என்பதிலே எப்போதும் ஒரு அணு அளவு வித்தியாசம் இரண்டுக்கும் இடையிலே எப்போதும் இருப்பதுண்டு. அந்த வித்தியாசத்தைத்தான் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

சி.எம்.ஐ.இ. நிறுவனம் மாதந்தோறும் மாநிலங்களில் முதலீட்டு நிலைமைகளைப்பற்றி அறிக்கை வெளியிடுகிறது. அந்தந்த மாதத்தில் எடுக்கப்படும் முதலீடுகளைப் பற்றிய முடிவுகளைப்பற்றி மாநிலங்களின் ஒப்பீடு நிலையில் மாறுதல் ஏற்படும். ஆகஸ்ட் மாதத்தில் சி.எம்.ஐ.இ.-ன் அறிக்கைப்படி தமிழ்நாடு முதலிடத்தில் இருந்தது. சமீபத்திய அறிக்கைப்படி தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்பதை நான் இங்கே விளக்கமாக அறிவிப்பதோடு, இன்னொரு முக்கியமான அறிவிப்பை - இந்த அரசின் சார்பில் பல நல்ல தமிழ் அறிஞர்களுடைய நூல்களையெல்லாம் நாட்டுடமை ஆக்குகின்ற காரியத்தைத் தொடர்ந்து செய்துவருகின்றோம். அதிலே கடந்த வரவு-செலவுத் திட்ட உரையின்போது பலருடைய நூல்கள் அரசுடமை ஆக்கப்பட்டதை அறிவித்து அதற்குரிய நிதி அவர்களுடைய குடும்பத்தாருக்குப் பரிவுத்தொகை; அண்மையிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே விடுபட்டுப்போன ஒன்று அதை வருத்தத்தோடு தெரிவித்து, ஆனால் மகிழ்ச்சியோடு பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்களுடைய புத்தகங்கள் அரசுடமையாக ஆக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய பரிவுத்தொகையும் மற்றவர்களுக்கு வழங்கப் பட்டதைப்போல வழங்கப்படும் என்பதையும் தெரிவித்து இந்த அளவில் அமைகின்றேன் நன்றி.

